**28–4–2007**

## உள்ளடக்கம்

பக்கங்கள்


**1. வினாக்கள்-விடைகள்—**

உடுக்குறியிட்ட வினாக்கள் 373-404

**2. தகவல் கோரல்—**

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் 405-406

(ஆ) விடுதலைப் புலிகள் குமரி மாவட்ட மீனவர்களைச் சுட்டுக் கொன்றது மற்றும் சிறைப்பிடித்து வைத்திருத்தல் 407-418

திரு. சி. ஞானசேகரன் 407-411,417,418

*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி 411-418

(இ) காவல் துறை அதிகாரிகள் மற்றும் அரசு அலுவலர்களுக்கு எதிர்க்கட்சித் தலைவர் விடுத்துள்ள எச்சரிக்கை 418-452

*திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் 419,422-436

திரு. தி. வேல்முருகன் 436-440

திரு. வை. சிவபுண்ணியம் 440-442

செல்வி கே. பாலபாரதி 442-443

*திரு. து. ரவிக்குமார் 443

*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி 444-452

| | பக்கங்கள் |
|---|---|
| **3. தொழிற்கல்விக்கான நுழைவுத் தேர்வு இரத்து—உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பையடுத்து அரசுக்குப் பாராட்டு—** | 452-459 |
| திரு. டி. சுதர்சனம் | 452-454 |
| திரு. ஜி.கே. மணி | 454-457 |
| திரு. சி. கோவிந்தசாமி | 457-458 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 458-459 |
| *திரு. து. ரவிக்குமார் | 459 |
| **4. கவன ஈர்ப்பு—** | |
| வேலூர் மாவட்டம், கூட்டுறவு நில வள வங்கிக் கடன்கள்—ஜப்தி நடவடிக்கை | 459-462 |
| திரு. சி. ஞானசேகரன் | 460-461 |
| மாண்புமிகு திரு. எ.வ. வேலு | 460-462 |
| **5. அறிக்கைகள் அளித்தல்—** | |
| மனுக்கள் குழு | 462 |
| **6. மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி | |
| **(அ) கோரிக்கை எண் 38—பொதுத் துறை** | 462-567 |
| **(ஆ) கோரிக்கை எண் 46—தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)** | |
| **(இ) கோரிக்கை எண் 49—இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை** | |
| **(ஈ) கோரிக்கை எண் 15—சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை** | |





| | பக்கங்கள் |
|---|---|
| **6. மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி | |
| *மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் | 463,469,516,520 |
| *மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான் | 480,517,560-567 |
| மாண்புமிகு திரு. என். செல்வராஜ் | 499,517,522,523, 549,550,554,555 |
| திரு. ஆர். வைத்திலிங்கம் | 518-526 |
| *திரு. கு. ஹசன் அலி | 526-533 |
| செல்வி ஆ. அங்கையற்கண்ணி | 534-538 |
| திரு. தி.க. ராஜா | 539-545 |
| *திரு. என். நன்மாறன் | 544-548 |
| *திரு. எஸ். இராசசேகரன் | 548-552 |
| *திரு. இ. மகேந்திரன் | 552-558 |
| **7. அரசினர் தீர்மானங்கள்—** | |
| (அ) சுற்றுச்சூழல் துறை அமைச்சர் முதலில் பதிலுரை வழங்குதல் | 559 |
| (ஆ) விதி 32-ஐத் தளர்த்தல் | 568 |
| **8. அறிவிப்பு—** | |
| இரண்டு அமைச்சர்களின் பதிலுரைகளை 2–5–2007 ஆம் நாளுக்குத் தள்ளி வைத்தல் | 567-568 |
| **9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—** | 569-571 |

[2007 ஏப்ரல் 28

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உடுமலைப் பகுதியில் காற்றாலைகளின்மூலம் மின் உற்பத்தி ஏற்கெனவே தனியார் துறைமூலம் செய்யப்பட்டு வருகிறது. இவ்வாறு காற்றாலைகளில் இருந்து பெறப்படும் மின்சாரம் நிலையற்றதாகும். எனவே, இதனை நேரடியாக விவசாய மின் இணைப்புகளுக்கு வழங்குவதற்கான சாத்தியக்கூறு இல்லை. எனவே, மின் கட்டமைப்பில் இருந்தே விவசாய பம்பு செட்டுகளுக்கு மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோல, கோவை மாவட்டத்திலே உடுமலைப்பேட்டை தொகுதியிலே அதிகமான அளவிலே காற்றாலைமூலமாக மின்சாரம் எடுக்கப்பட்டு வருகிறது. அங்கு ஒரு கண்காணிப்பு அலுவலகம்கூட இருக்கிறது. அந்தப் பகுதியிலே காற்றாலைகள்மூலமாக மின்சாரம் தயாரிக்கப்பட்டு வருகிறது. அந்த மின்சாரத்தை நேரடியாகக் கொடுக்க முடியாது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதை நானும் ஒத்துக்கொள்கிறேன். இருந்தாலும்கூட காற்றாலைமூலம் உற்பத்தி ஆகக்கூடிய மின்சாரம் புதிதாக feeder போடாமல், ஏற்கெனவே இருக்கிற feeder-ல் கொடுத்து சில பகுதிகளிலே கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். தூங்காவி பகுதியிலே கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதுமாதிரி மற்ற இடத்திலேயும் இப்போது புதிதாக feeder போடாமல், இருக்கிற feeder-லேயே கொடுக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்படுத்திக் கொடுப்பாரா என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு, ஏற்கெனவே கடந்த காலத்திலே புதிதாக கட்டமைப்பு ஏற்படுத்துவதற்கு பொன்னாவரம் என்ற இடத்திலே—28 கோடி ரூபாய் செலவில் என்று நினைக்கிறேன்—பணி நடந்துகொண்டிருக்கிறது. அது முடிந்துவிட்டதா, எப்போது தொடங்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்**[illegible]ண்புமிகு அமைச்சர் அவர்கள்.



2007 ஏப்ரல் 28]

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல, உடுமலைப்பேட்டை பகுதியிலே தனியார் ஏராளமான காற்றாலைகளை அமைப்பதற்காக மின் வாரியத்தை அணுகி காற்றாலைகளை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கே உற்பத்தியாகின்ற அந்த மின்சாரத்தை grid-க்குக் கொண்டுச் செல்வதற்கான புதிய sub-station-கள் உருவாக்கப்பட வேண்டும். அதற்கான பணிகளிலே மின்சார வாரியம் ஈடுபட்டு, பணி இன்னும் ஓரிரு திங்களிலே முடிவடையக்கூடிய நிலையில் இருக்கிறது. காற்றாலைகளின்மூலம் கிடைக்கின்ற மின்சாரம் வருடத்திலே 10 மாதங்களுக்குத்தான் கிடைக்கும். மார்ச் மாதம் 15 ஆம் தேதியிலிருந்து, மே மாதம் 15 ஆம் தேதி வரையிலே அந்தக் காற்றாலைகளின்மூலமாக மின்சாரம் உற்பத்தியாகாது. அதனால், நேரடியாக விவசாயிகளுக்குக் கொடுப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. அதனால்தான், Power Grid மூலமாக விவசாயிகளுக்கு நாம் மின்சாரத்தை வழங்கிக்கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. சில நேரங்களிலே surplus ஆக இருக்கிறது என்று சொல்லி, தனியார் காற்றாலைமூலம் உற்பத்தி செய்யக்கூடிய அந்த மின்சாரத்தை அரசு கொள்முதல் செய்யாமல் இருக்கிறது. அது அவர்களைப் பாதிக்கிறது என்று சொல்கிறார்கள். அதை கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால், அந்த முதலாளிகள் நிறைய பணம் போட்டு உற்பத்தி செய்கிறார்கள்; அவர்களைப் பாதிக்கிறது என்று சொல்கிறார்கள். அந்தச் சூழ்நிலை ஏற்படாத ஒரு நிலைமையை அரசு ஏற்படுத்திக் கொடுக்குமா என்று கேட்டுக்கொள்கிறேன். அதேமாதிரி, Single Window System கேட்கிறார்கள். அதையும் செய்ய முடியுமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, power-ஐப் பொறுத்தவரையில் எல்லா பக்கமும் power cut என்பதுமாதிரி, எல்லாப் பக்கமும், 2 மணி நேரம், 3 மணி நேரம் என்று மின்சாரம் என்னுடைய தொகுதியிலே இல்லாமல் இருக்கிறது. எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் சொல்கிறார்கள். இந்திந்த

[2007 ஏப்ரல் 28

நேரத்திலே கொடுப்போம் என்று அறிவிக்க வேண்டும். பகலில் 4 மணி நேரம் விவசாயத்திற்குக் கொடுக்கிறோம்; இரவில் 8 மணி நேரம் கொடுக்கிறோம்; பகலில் ஒரு மணி நேரம் குறைவாகக் கொடுத்தாலும்கூட, இந்த நேரம் என்று விவசாயிகளுக்குத் தெரிந்துவிட்டால் அதற்குத் தகுந்தமாதிரி அவர்கள் வேலை செய்வார்கள். எந்த நேரம் என்று தெரியாமல் current வருகிறது, போகிறது; திரும்ப current வருகிறது, போகிறது. அந்தச் சூழ்நிலை இல்லாத ஒரு நிலையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் துறை அதிகாரிகளிடம் சொல்லி, load shedding செய்தாலும்கூட அதைக் கொஞ்சம் நேரப்படி செய்ய முன்வருவாரா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 9-35*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் கேட்ட மூலக் கேள்விக்கே பதில் சொன்னேன். நமக்கு இப்போது காற்றாலைகள்மூலமாக உற்பத்தியாகின்ற மின்சாரம் மார்ச் மாதத்திலிருந்து மே மாதம் 15 ஆம் தேதி வரையிலே, 3,200 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி ஆவதற்குப் பதிலாக இன்று காலையிலே வெறும் 170 மெகா வாட் மின்சாரம்தான் உற்பத்தியாகி இருக்கிறது. இதனால்தான் நாங்கள், ஏற்கெனவே விற்பனை செய்து கொண்டிருந்த மின்சாரத்தைக்கூட விற்கவேண்டாமென்று சொல்லி, தமிழ்நாட்டுக்கே அந்த மின்சாரத்தைப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல, ஒரு மணி நேரம், இரண்டு மணி நேரங்கள் எங்கேயும் மின்சாரத் தடை இல்லை. சில நேரங்களிலே 15 நிமிடங்கள், 20 நிமிடங்கள் தடை இருப்பதாகச் சில புகார்கள் வந்திருக்கின்றன. அதைக்கூட சரிசெய்வதற்கு மின்சார வாரியத்திற்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. பஞ்சாப் மாநிலத்திற்கு நாம் கொடுத்துக் கொண்டிருந்த மின்சாரத்தை, மறுபடியும் திருப்பிக் கொடுக்கின்றோம் என்று சொல்லி, 300 மெகா வாட் மின்சாரத்தை வாங்கி, இங்கு தடையில்லா மின்சாரத்தை விநியோகிப்பதற்காக மின்சார வாரியம் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.



2007 ஏப்ரல் 28]

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி கணவாயை அடுத்துள்ள பகுதிகள், காற்றின் அழுத்தம் கூடுதலாக உள்ள பகுதிகள். அங்கு காற்றாலைமூலம் மின்சாரம் தயாரிப்பதற்கான முயற்சி எடுக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நம்முடைய முதல்வர் அவர்கள் 1996-லிருந்து 2001 ஆம் ஆண்டு வரை ஆட்சியில் இருந்தபோது, தேனி பகுதியிலே காற்றாலைகள் அமைப்பதற்கான ஆய்வு ஒன்று நடைபெற்றிருக்கிறது. அந்த ஆய்வின்படி, மணிக்கு 15 கி.மீ. வேகத்திற்கு காற்று வீசினால்தான், காற்றாலைகள் அமைக்க முடியும். ஆனால், தேனி பகுதியிலே வீசுகின்ற காற்றின் வேகம் மணிக்கு 12 கி.மீ. என்ற அளவில்தான் இருக்கிறது. அதனால் அங்கே காற்றாலைகள் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி.

**டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்யூரிலே அனல் மின் நிலையம் வருமா? அப்படி வருவதாக இருந்தால், அதற்கான பணிகள் எப்போது தொடங்கும் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி, காற்றாலைகள் சம்பந்தப்பட்டது.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, National Thermal Power Corporation-ன் தேசிய அனல் மின் திட்டத்தின்கீழ், 2000 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்காக, ஏற்கெனவே திரு. ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்கள் அமைச்சராக இருந்தபோது, 2 ஆயிரம் ஏக்கர் நிலத்தை அங்கே வாங்கி வைத்திருந்தார்கள். இப்பொழுது இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு, மத்தியிலே இப்போது அமைச்சராக இருக்கின்ற Power Minister திரு. ஷிண்டே அவர்கள்கூட அந்த 2000 மெகா வாட் மின்சாரத்தை அங்கே உற்பத்தி செய்யவேண்டுமென்று கட்டளை பிறப்பித்திருக்கின்றார்கள். அந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் வந்து

[2007 ஏப்ரல் 28

ஆய்வு செய்துவிட்டுப் போய் இருக்கின்றார்கள். இந்த ஆட்சியில் அவர்களுக்குத் தேவையான எல்லா ஒத்துழைப்புகளையும் தருவதாக நாங்களும் உறுதி அளித்திருக்கின்றோம். எனவே, அந்தப் பணி விரைவிலே அந்தப் பகுதியிலே தொடங்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் சில பகுதிகளிலே காற்று வேகமாக அடிக்கின்ற காரணத்தினால், அந்தப் பகுதிகளிலே காற்றாலைகள் அமைக்கின்ற பணி நடைபெறுகின்றது. அவ்வாறு காற்று அதிகமாக வீசுகின்ற பகுதிகளிலுள்ள உள்ளாட்சி அமைப்புகளில், பஞ்சாயத்து சார்பாகவோ, பேரூராட்சி சார்பாகவோ, நகரமன்றத்தின் சார்பாகவோ காற்றாலைகளை அமைத்துக் கொடுத்தால், அவர்கள் மின் கட்டணம் செலுத்துவதற்குப் பதிலாக, அந்தக் காற்றாலை மின்சாரத்தையே பயன்படுத்திக்கொள்ளலாம். எனவே, அந்த வாய்ப்பை உள்ளாட்சித் துறைக்கு ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா என்று தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி அமைப்புகள் காற்றாலைகள் மூலமாக மின்சாரத்தைத் தயார் செய்வதிலே, உற்பத்தி செய்வதிலே இந்த அரசுக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை. ஆனால், இன்றையதினம் காற்றாலைமூலம் மின் உற்பத்தி செய்கின்றவர்கள், மற்ற மாநிலங்களில் ஒரு யூனிட்டுக்கு 3 ரூபாய் 50 காசு கொடுப்பதைப்போல, அதே தொகையை எங்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால், நமது Regulatory Commission 2 ரூபாய் 90 காசுக்கு மேலே வழங்கக்கூடாது என்று ஆணை பிறப்பித்திருக்கின்றது. இந்தச் சூழ்நிலையில்தான், நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களோடு கலந்து பேசி, அனல் மின் நிலையமே வைத்து 250 மெகா வாட் மின்சாரத்தை உள்ளாட்சித் துறைக்காக உற்பத்தி செய்வதற்கு ஏற்பாடு செய்ய முடியுமா என்று நாங்கள் ஆய்வு நடத்திக்கொண்டிருக்கின்றோம். அதுகுறித்து முதலமைச்சரோடும் கலந்து பேசி, விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.



2007 ஏப்ரல் 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 152 பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

வினா எண் 153, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**153—**

## தொழில்நுட்பக் கல்லூரி

***8731—திரு. இரா. மாணிக்கம்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை தொகுதியில் தொழில்நுட்பக் கல்லூரி தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது அரசுத் தரப்பில் குளித்தலை தொகுதியில் புதியதாக அரசு தொழில்நுட்பக் கல்லூரி தொடங்குவதற்கான செயற்குறிப்பு எதுவும் அரசின் ஆய்வில் இல்லை.

(ஆ) எழவில்லை.

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம்.

**திரு. இரா. மாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை தொகுதி முழுக்க முழுக்க விவசாயத்தையே நம்பியிருக்கின்ற தொகுதி. அந்தத் தொகுதியிலே எந்தவித வளர்ச்சியும் இல்லாமல் மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கிறது. தொகுதியில் சுமார் 20 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. இந்தப் பள்ளிகள் அனைத்துமே கிராமப் பகுதியிலே அமைந்திருக்கின்றன. பள்ளிகளிலே பயில்கின்ற மாணவர்கள் பெரும்பாலும் விவசாயக் கூலித் தொழிலாளர்களுடைய

பிள்ளைகளாக இருக்கின்றார்கள். இவர்கள் பொருளாதாரத்திலே மிகவும் பின்தங்கியவர்களாக இருக்கின்றார்கள். குளித்தலை தொகுதியிலே எந்தத் தொழில்நுட்பக் கல்லூரியோ அரசு கலைக் கல்லூரியோ இல்லாத காரணத்தினாலே அவர்கள் வெளியூருக்குச் சென்று மேல் படிப்பைத் தொடருகின்ற அளவிற்கு பொருளாதாரம் இல்லாத காரணத்தினாலே அப்படியே மேல் படிப்பைத் தொடராமல் விட்டுவிடுகிறார்கள். ஆகவே, குளித்தலை தொகுதியிலே ஒரு தொழில்நுட்பக் கல்லூரி அமைத்தால் ஏழை மாணவ, மாணவியர்கள், பயில்வதற்கு ஏதுவாக இருக்கும். ஆகவே, குளித்தலையில் ஒரு தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களை தங்கள்மூலம் வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருமே கிராமப் பகுதிகளிலே இருக்கின்ற மாணவர்கள் பயிலவேண்டும் என்பதற்காக கலைக் கல்லூரிகளும், அதேபோல தொழில்நுட்பக் கல்லூரிகளும் வேண்டுமென்று கோரிக்கை வைத்துள்ளார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதுகுறித்து ஆலோசித்து அதுபோன்ற பகுதிகளிலே Community Colleges என்று சொல்லப்படுகின்ற வகையில் அந்தப் பகுதியின் தேவைக்கு ஏற்ப அங்கே தொழில்நுட்பப் பயிற்சிகளை துவக்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கான கருத்துருவினை கல்வியாளர்களோடு ஆலோசித்துக் கொண்டிருக்கிறோம். மானியக் கோரிக்கை விவாதத்தின்போது அதுகுறித்து அறிவிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம்.

**திரு. இரா. மாணிக்கம்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முத்தமிழறிஞர் முதல்வர் அவர்கள் வாழ்கின்ற காலத்திலே நாமெல்லாம் வாழ்கின்றோம் என்ற பெருமை நம் அனைவருக்குமே உண்டு. அவர் சுவாசிக்கின்ற காற்றை நாமும் சுவாசித்து வாழ்கின்றோம் என்ற பெருமை அனைவருக்கும் உரியது. அப்படிப்பட்ட அந்தச் சரித்திர நாயகருக்கு சட்டமன்றப் பொன் விழா நடைபெற இருக்கின்றது. அந்தப் பொன் விழா காண்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய முதல் தொகுதி குளித்தலை என்பது அனைவரும் அறிந்தது. முதல்வர் அவர்களின் தொடர் வெற்றிகளுக்குத் தொடக்க வெற்றியாக இருந்த குளித்தலை தொகுதிக்கு முன்னுரிமை கொடுத்து ஓர் அரசுக் கலைக் கல்லூரியோ அல்லது தொழில்நுட்பக் கல்லூரியோ அமைத்தால் அந்தத் தொகுதி மக்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைவார்கள் என்பதைத் தங்கள்மூலம் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் எல்லாத் தொகுதிகளுக்குமே கொடுக்கவேண்டுமென்று அறிவுறுத்தியிருக்கிறார்கள். நிச்சயமாக மானியக் கோரிக்கை அறிவிப்பில் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை இடம் பெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே Deemed Universities என்று சொல்லப்படுகின்ற நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் தங்களுக்கென்று ஒரு சாம்ராஜ்யத்தை நிறுவிக்கொண்டு அவர்கள் ஆண்டு வருகிறார்கள். புதிய பாடத் திட்டங்களை தங்களுடைய விருப்பத்திற்கு ஏற்றவாறு புகுத்துகிறார்கள் என்றெல்லாம் எழுதப்படுகிறது, சொல்லப்படுகிறது. மக்கள் அப்படி எண்ணுகிறார்கள். அரசாங்கம் இந்த நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களுக்கு கட்டுப்பாடு விதிப்பதற்கு ஏதேனும் விதிமுறைகள் வைத்திருக்கிறதா? நம்முடைய மாநில அரசாங்கம் அவர்களை எந்த வகையிலே கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர எத்தனித்திருக்கிறது என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் நடைபெற்ற மாநில கல்வி அமைச்சர்கள் கூட்டத்தில்கூட இதுபற்றி விவாதித்திருக்கிறார்கள். மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இதுகுறித்து கொண்டுசெல்லப்பட்டிருக்கிறது. Deemed Universities போன்ற இவையெல்லாம் மாநிலத்தினுடைய control-லே கிடையாது. எல்லோரும் U.G.C.-யிடம் போய் அனுமதி வாங்கி வந்துவிடுகிறார்கள். No objection certificate கூட வாங்கவேண்டாமென்று கோர்ட்டிலேயே

சொல்லிவிடுகிறார்கள். அதனாலே பெரும்பாலான சுய நிதிக் கல்லூரிகளும், Deemed University-களும், மாநில அரசாங்கத்தினுடைய கட்டுப்பாட்டிற்குள்ளேயே வராமல் தன்னிச்சையாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பது உண்மைதான். ஆனாலும்கூட, இப்போது மாநில அரசு, தான் கொண்டுவந்திருக்கிற சட்டங்களின்படி அங்கே மாணவர்களைச் சேர்க்கிறபோது சேர்க்கை விதிகளை உருவாக்கி அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று அவர்களோடு பேசியே ஒரு ஒப்பந்தம் செய்திருக்கிறது. ஆகவே, வருங்காலங்களிலே சுய நிதிக் கல்லூரிகளாக இருந்தாலும் அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும், மாநிலத்திற்கே இந்த அதிகாரம் வேண்டுமென்றுகூட முதல்வர் அவர்கள் மத்திய அரசாங்கத்திற்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். வருங்காலங்களிலே அது சாத்தியமானால் இதுபோன்ற சுய நிதிக் கல்லூரிகளைக் கட்டுப்படுத்துகிற அதிகாரம் மாநில அரசாங்கங்களுக்கு வரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *154*, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**154—**

## மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியல்

***966—திரு. அ. ராஜன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி கிறிஸ்துவ பரதர் இன மீனவர்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கன்னியாகுமரி மாவட்ட கிறிஸ்துவ பரதர் இன மீனவர்கள் ஆதி திராவிடர் வகுப்பிலிருந்து கிறிஸ்துவ மதத்திற்கு மாறியவர்கள் என்ற அடிப்படையில் தற்போது பிற்படுத்தப்பட்ட வகுப்பினராக அங்கீகரிக்கப்பட்டுள்ளனர். மண்டல் குழு வழக்குகளில் இந்திய உச்ச நீதிமன்றத்தின் கட்டளைப்படி, தமிழ்நாட்டில் ஏற்படுத்தப்பட்டு



செயல்பட்டுவரும் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையிலேயே எந்தவொரு வகுப்பினையும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க முடியும். ஆதி திராவிட வகுப்பிலிருந்து கிறிஸ்துவ மதத்திற்கு மாறியவர்கள் அனைவரையும் மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பாக அறிவிக்கக் கோரும் கோரிக்கை தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் ஆய்வில் இருந்து வருகிறது.

*முற்பகல் 9-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன்.

**திரு. அ. ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்ட கிறிஸ்துவ பரதர் இன மீனவ மக்கள் மட்டும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்படவில்லை. அவர்களையும் அந்தப் பட்டியலில் இணைக்க வேண்டும். பொதுவாக, தமிழகத்தில் மீனவர்களைப் பொறுத்தவரையில் பர்வத ராஜகுலம், செம்படவர், பட்டினவர், மீனவர், முக்குவர், பரதர் என 6 உட்பிரிவுகளாக இருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இருக்கிறார்கள். ஆனால், குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் எனது நாகர்கோவில் தொகுதிக்குட்பட்ட பெரியக்காடு, இராஜாக்கமங்கலம், கேசவன்புத்தன்துறை, புத்தன்துறை, பொழிக்கரை, குமரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கோவளம், கன்னியாகுமரி, சின்னமுட்டம் மற்றும் நாகர்கோவில் நகரப் பகுதியிலுள்ள உள்நாட்டு மீனவர்கள் சுமார் *75* ஆயிரம் பேர்கள் வசிக்கிறார்கள். இவர்கள் அனைவரும் கடல் தொழில் செய்கிறார்கள், மீன்களையும் வாங்கி விற்கிறார்கள்.

ஒட்டுமொத்தமாகத் தமிழகத்தில் மீனவர்கள் இந்துக்களாக இருந்தாலும், கிறிஸ்துவர்களாக இருந்தாலும் M.B.C. பட்டியலில் இருக்கும்போது குமரி மாவட்டத்திலும், நெல்லை மாவட்டத்திலும் செங்கோட்டைத் தாலுகாவிலும் உள்ள கிறிஸ்துவ பரதர் இன மக்கள் மட்டும் B.C.-ல் இருப்பதால் கல்வி நிறுவனங்களிலும், வேலைவாய்ப்புகள் அரசுப் பணிகளில் பெறுவதற்கும் இவர்களுக்கு வாய்ப்புகள் குறைவாக இருக்கிறது. எனவே, இதைக் கருத்தில் கொண்டு குமரி மாவட்ட கிறிஸ்துவ பரதர் இன மக்களை M.B.C. பட்டியலில் இணைத்திட அரசு விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

[2007 ஏப்ரல் 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பரதர் வகுப்பு தாழ்த்தப்பட்ட வகுப்பாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எனவே, அம்மாவட்டத்திலுள்ள கிறிஸ்துவ பரதர் ஆதி திராவிட வகுப்பிலிருந்து, கிறிஸ்துவ மதத்திற்கு மாறியவர்கள் என்ற அடிப்படையில் பிற்படுத்தப்பட்ட வகுப்பாகக் கருதப்படுகின்றனர்.

அனைத்து ஆதி திராவிடர் வகுப்புகளிலிருந்தும் கிறிஸ்துவ மதத்திற்கு மாறியவர்களை மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பாக அறிவிக்கக்கோரும் கோரிக்கை தற்போது தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் ஆய்வில் இருந்து வருகிறது. அனைத்து ஆதி திராவிட வகுப்புகளிலிருந்தும் கிறிஸ்துவ மதத்திற்கு மாறியவர்கள் என்பதில் கன்னியாகுமரி மாவட்ட கிறிஸ்துவ பரதர் வகுப்பும் அடங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன்.

**திரு. அ. ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட கருத்துகளுக்கு நன்றி. இருந்தாலும், அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, இந்துக்களாக இருந்து அவர்கள் கிறிஸ்துவ மதத்திற்கு மாறியவர்கள் அல்ல. இரண்டாவது, நான் குறிப்பிட விரும்புவது நம்முடைய ஒப்பற்ற தலைவர், தானைத் தலைவர், முதல்வர் கலைஞர் அவர்களுடைய சட்டமன்றப் பொன்விழா ஆண்டில் பல்வேறு சாதனைகளை இன்றைக்கு அவர்கள் செய்து கொண்டிருக்கின்றார்கள். எனவே, நிச்சயமாக என்னுடைய மாவட்டத்தின் தனித் தன்மையைக் கருதி, குமரி மாவட்டத்தில் வசிக்கின்ற இந்த பரதர் இன மக்களை M.B.C. பட்டியலில் இணைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளும் அதேநேரத்தில் கிறிஸ்துவ வண்ணார் சமுதாய மக்கள், குமரி மாவட்டத்தில் வசிக்கும் காட்டுநாயக்கர் சமுதாய மக்கள் இவர்களுக்கும் இதுபோன்ற பிரச்சினைகள் இருக்கின்றன. எனவே, இவர்களையும் ஆதி திராவிடர் பட்டியலில் இணைத்திட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதைத் தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.



2007 ஏப்ரல் 28]

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை தற்போது தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் ஆய்வில் இருந்து வருகிறது. ஆணையத்தினுடைய அறிக்கை வந்தவுடன் அதை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *155*, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி, மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**155—**

## தனி வட்டம்

***11968—திரு. கே. பொன்னுசாமி:**

மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதி, கொல்லி மலை பகுதியைத் தனி வட்டமாக அறிவிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி.

**திரு. கே. பொன்னுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதிக்குட்பட்ட கொல்லி மலைப் பகுதி ஒன்றியத்தில் 14 ஊராட்சிகள் உள்ளன. அதில் 7 ஊராட்சிகள் நாமக்கல் தாலுகாவிலும், 7 ஊராட்சிகள் இராசிபுரம் தாலுகாவிலும் உள்ளன. அங்கு பெருமளவு மலைவாழ் மக்கள்தான் வசித்து வருகின்றார்கள். அவர்கள் சாதிச் சான்று, குடும்ப அட்டை, வருமானச் சான்று, பத்திரப் பதிவு செய்தல் போன்ற அனைத்து ஆவணங்களையும் பெற வேண்டுமென்றால் 150 கிலோ மீட்டர் பயணம் செய்து நாமக்கல்லுக்கோ அல்லது இராசிபுரத்திற்கோ செல்ல வேண்டிய ஒரு நிலை உள்ளது.

[2007 ஏப்ரல் 28

இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், விபத்திலே மரணம் ஏற்பட்டாலோ அல்லது தற்கொலை செய்து கொண்டாலோ, பிரேதப் பரிசோதனை செய்ய சேந்தமங்கலம் கொண்டு செல்கிற நிலை இருந்து வருகிறது. அதற்கு வாடகையாக 3 ஆயிரம் ரூபாய், 4 ஆயிரம் ரூபாய் செலுத்திச் செல்கிற நிலையும் இருக்கிறது. ஆகவே, இந்த நிலையைப் போக்க, கொல்லி மலையைத் தனி வட்டமாக அறிவிக்க மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களையும் நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். அறிவிப்பார்களா என அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொல்லி மலையைத் தனி வட்டமாக அறிவிக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். கொல்லி மலை நாமக்கல்லிலிருந்தும், இராசிபுரம் வட்டத்திலிருந்தும் இருக்கும் தூரமே சுமார் 50 கிலோ மீட்டர்தான். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 150 கிலோ மீட்டர் போக வேண்டும் என்று இங்கே தெரிவிக்கின்றார்கள். ஆனால், கொல்லி மலையைப் பொறுத்தளவில் அங்கே இருக்கின்ற மக்கள்தொகை குறைவாகத்தான் இருக்கின்றது. 36 ஆயிரம் மக்கள்தொகைதான் இருக்கிறது. 14 வருவாய் கிராமங்கள்தான் இருக்கின்றன. மலைப் பகுதியாக இருப்பதால் எதிர்காலத்திலே சிறப்பு நேர்வாகக் கருதி அங்கே ஒரு வட்டம் அமைப்பதுகுறித்து அரசு நிச்சயமாக ஆய்வு செய்யும்.

*முற்பகல் 9-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி.

**திரு. கே. பொன்னுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொல்லி மலை ஒன்றியத்திற்குட்பட்டவை 14 ஊராட்சிகள். அதில் ஏழு ஊராட்சிகள் இராசிபுரத்திலும், ஏழு ஊராட்சிகள் நாமக்கல்லிலும் உள்ளன. ஓர் ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து இரண்டு தாலுகாக்களின்கீழ் வருகிற ஒரு நிலை இருக்கிறது. ஆகவே, நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், 1974 ஆம் ஆண்டு கொல்லி மலைக்கு வருகை தந்து, அங்கு ஆண்டுகொண்டிருந்த கடையேழு வள்ளல்களில் வல்வில் ஓரி



2007 ஏப்ரல் 28]

சிலையையும் திறந்து வைத்து அந்தச் சிறப்புகளையெல்லாம், புகழையெல்லாம் சேர்த்துக்கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, அந்த வகையிலே, எங்கள் மலைவாழ் மக்களுக்கு முன்னுரிமை கொடுத்து, இந்தக் கொல்லி மலையைத் தனி வட்டமாக அறிவிக்க அமைச்சர் ஆவன செய்வாரா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொல்லி மலைப் பகுதி, இரண்டு வட்டங்களிலே இருக்கின்றது என்பது உண்மை. தலா ஏழு வருவாய்க் கிராமங்கள் இராசிபுரத்திலும், நாமக்கல்லிலும் இருப்பதை மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டினார்கள். முதலிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கொல்லி மலைப் பகுதியை ஓர் ஊராட்சி ஒன்றியமாக உருவாக்குவதற்குரிய முயற்சி எடுத்தால், பின்னர் வட்டம் அமைப்பது பற்றி அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. மலரவன்.

**திரு. தா. மலரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையில் தற்போது இரண்டு வட்டங்கள் மட்டுமே உள்ளன. ஆனால், கோவையினுடைய மக்கள்தொகை 15 இலட்சத்திற்கு மேல் இருக்கிறது. இரண்டரை இலட்சம் மக்கள்தொகைக்கு ஒரு வட்டம் அமைக்க வேண்டுமென்று இருந்தும், 15 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் அங்கே வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். தெற்கு வட்டம், வடக்கு வட்டம் என்று இரண்டு வட்டங்கள் மட்டுமே இருக்கின்றன. இரண்டு வட்டங்களே இருப்பதால், அந்த மக்கள், இப்போது வட்டாட்சியர் அலுவலகத்திற்குச் சென்றால், அங்கே கூட்டம் நிரம்பி வழிந்துகொண்டிருக்கிறது. அதையெல்லாம் சரி செய்வதற்கு, கிழக்கு வட்டம், மேற்கு வட்டம் என்று மேலும் இரண்டு வட்டங்களை அமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்வதோடு, அப்படி அமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதையும் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

[2007 ஏப்ரல் 28

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டியதைப் போல, மாநகராட்சிப் பகுதிகளிலே மக்கள்தொகை நெருக்கமாக இருக்கின்ற நிலை இருக்கின்ற காரணத்தால், புறநகர்ப் பகுதிக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய மக்கள்தொகை, சுற்றளவு இவற்றைக் கணக்கெடுத்துக்கொள்ள முடியாது. சென்னை மாநகராட்சியிலே குறைந்த அளவுதான் வட்டங்கள் இருக்கின்றன. ஆகவே, நெருக்கமாக மக்கள் வசிக்கின்ற பகுதிக்கு, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல, அதிக வட்டங்களைப் பிரிப்பது என்பது சாத்தியமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 156, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**156—**

### நியாயவிலைக் கடை

***409—திரு. சி. கோவிந்தசாமி:**

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*800 குடும்ப அட்டைகளுக்கு ஒரு நியாயவிலைக் கடை திறக்கவும், அனைத்து அட்டைகளுக்கும் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கிடவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசாணை நிலை எண் 63, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மூலமாக நகர்ப்புறத்தில் உள்ள நியாயவிலைக் கடைகளுக்கு அதிகபட்சம் 1,000 குடும்ப அட்டைகளும், குறைந்தபட்சம் 500 குடும்ப அட்டைகளும், கிராமப்புறத்திலே இருக்கிற நியாயவிலைக் கடைகளுக்கு அதிகபட்சம் அட்டை எண்ணூறும், குறைந்தபட்சம் ஐநூறும், இடைப்பட்ட தூரம் இரண்டு கிலோமீட்டரும் இருக்க வேண்டும் என்று ஏற்கெனவே அரசாணை இருக்கிறது. அந்த வகையில் அங்கு கடைகள் அமைக்கப்பட்டு அத்தியாவசியப் பொருட்கள் எல்லாம் சீராக வழங்கப்பட்டு வருகின்றன.



2007 ஏப்ரல் 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எற்கெனவே நம்முடைய மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் இதை அறிவித்திருக்கிறார்கள். ஆகவே, அதை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்றுதான் நான் கருதுகிறேன். செயல்பட்டு வருகிறதென்று சொன்னாலும், என் பகுதியில், நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன், அது இன்னும் அமலாகவில்லை. ஆகவே, நீங்கள் நடவடிக்கை எடுப்பீர்கள் என்று நம்புகிறேன். நான் மாண்புமிகு அமைச்சரிடத்திலே கேட்க விரும்புவது—ஏற்கெனவே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், பருப்பு, ரவை, எண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருள்கள் ரேஷன் கடையின்மூலமாக வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். நல்ல திட்டம் அது. ஆகவே, அதில் எந்த அளவுக்கு ஒவ்வொரு மாதமும் பொருள் வழங்கப்படும்? இப்போது அரிசி 20 கிலோ வழங்கப்படுவதைப் போல, சர்க்கரை என்றால் 2 கிலோ வழங்கப்படுவதைப் போல, இந்தப் பருப்பு, இதர எண்ணெய் வகைகள் எவ்வளவு வழங்கப்படும் என்பது ஒன்று.

இரண்டாவதாக, மண்ணெண்ணெய், சாதாரணமாக புதிய ரேஷன் கார்டுகளுக்கு வழங்கப்படாத நிலை இன்றைக்கும் தொடர்கிறது. கடந்த ஓராண்டு காலமாக, மத்திய அரசிடத்திலே கேட்டிருக்கிறோம், இன்னும் அது நமக்கு வந்து சேரவில்லை. வந்தவுடன் வழங்கப்படும் என்கிற ஒரு செய்திதான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக தொடர்ந்து பதிலாக வந்துகொண்டிருக்கிறது. ஆகவே, நான் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களுடைய, முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவது, இப்படி மிக அத்தியாவசியமான ஒரு தேவையைப் பொறுத்து மத்திய அரசு, ஓராண்டு காலமாகக் காலம் கடத்தி வருவது எந்த வகையிலும் ஏற்புடையதல்ல. இன்று காலையிலேகூட மதுரை நாடாளுமன்ற உறுப்பினர், உங்களுடைய தொலைபேசி எண்ணைக் கேட்டு, இந்த விவரங்களை அறிந்து நாடாளுமன்றத்திலே இப்பிரச்சினையை எழுப்புவதாகக்கூடத் தெரிவித்தார். ஆகவே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழகத்தைச் சேர்ந்த 40 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அழைத்து, இந்தப் பிரச்சினைக்கு மத்திய அரசை வலியுறுத்தி, நமக்குரிய தேவையைப் பெறுவதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

[2007 ஏப்ரல் 28

*முற்பகல் 9-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே விலைவாசியைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு, புதியதாக நியாய விலைக் கடைகளிலே கூடுதலாக அரிசி, சர்க்கரை வழங்குவதைப்போல, கூடுதலாக உளுத்தம் பருப்பு, துவரம் பருப்பு, ரவை, மைதா போன்றவையெல்லாம் வழங்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் துறைக்கு ஆணையிட்டார்கள். ஒரு ரேஷன் கார்டுக்கு ஒரு மாதத்திற்கு ஒரு கிலோ உளுத்தம் பருப்பு, ஒரு கிலோ துவரம் பருப்பு, ஒரு கிலோ ரவை, ஒரு கிலோ மைதா என்கிற அடிப்படையிலே வழங்க இப்போது அரசு உத்தரவிட்டிருக்கிறது. ஏப்ரல் 14 ஆம் தேதி முதல் சென்னையிலும், மே மாதம் 1 ஆம் தேதியிலிருந்து தமிழ்நாடு முழுவதும் வழங்குவதற்குத் துறையின் சார்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எனவே, அது முறையாக வழங்கப்படும்.

மண்ணெண்ணெய்யைப் பொறுத்த அளவுக்கு, நான் ஏற்கெனவேகூட மானியக் கோரிக்கை விவாதத்திலே குறிப்பிட்டேன். தொடர்ந்து மத்திய அரசாங்கத்திற்குக் கடிதம் எழுதி இருக்கின்றோம். இரண்டு முறை நானே நேரடியாகச் சென்று சம்பந்தப்பட்ட அமைச்சர், மாண்புமிகு திரு. முரளி தியோரா அவர்களைச் சந்தித்துச் சொல்லி இருக்கின்றேன். நேற்றைய முன்தினம்கூட மத்திய அமைச்சர் மாண்புமிகு திரு. ராஜா அவர்களைத் தொலைபேசிமூலம் தொடர்பு கொண்டு கொஞ்சம் வலியுறுத்திக் கூடுதலாக 17,000 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் தேவைப்படுகிறது, எங்களுக்கு வாங்கிக் கொடுங்கள் என்று நினைவூட்டிப் பேசினேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி அவர்கள் குறிப்பிட்டதைப்போல இன்றைக்கு காலையில் 7-00 மணியளவிலே மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. மோகன் அவர்கள் என்னிடத்திலே தொலைபேசிமூலம் தொடர்பு கொண்டு, "இன்றைக்கு என்னுடைய ஒரு கேள்வி வருகிறது. எனவே, தமிழ்நாட்டிற்கு எவ்வளவு வேண்டும் என்ற குறிப்பு தாருங்கள் என்னிடத்திலே" என்று கேட்டார்கள். தோழமை உணர்வோடு நாடாளுமன்ற உறுப்பினர் கேட்கிறார் என்கிற காரணத்தினால், ஏற்கெனவே நாங்கள் தொடர்ந்து திரு. முரளி தியோரா அவர்களை வலியுறுத்தி இருக்கிறோம் என்கிற செய்தியைச் சொல்லி, தமிழ்நாட்டுக்கு சுமார் 17,000 கிலோ லிட்டர்



2007 ஏப்ரல் 28]

மண்ணெண்ணெய் தேவைப்படுகிறது என்ற செய்தியை அவர்களிடத்திலே சொல்லி இருக்கிறேன். இன்றைக்குக் கேட்பதாகச் சொன்னார்கள். எனவே, மத்திய அமைச்சர் மாண்புமிகு ராஜா அவர்கள் இரண்டு முறை சம்பந்தப்பட்ட அமைச்சரிடத்திலே சொல்லி இருக்கிறார்.

இதிலே இருக்கிற சிக்கல் என்னவென்று சொன்னால், அங்கே, மத்திய அமைச்சர் எதைச் சொல்கிறார் என்று சொன்னால், தொடர்ந்து தமிழகத்திலே தவறான கார்டுகள் உலாவிக் கொண்டிருக்கின்றன. இதைக் கண்டுபிடித்துக் குறையுங்கள் என்று சொன்னார். மானியங்கள் எங்களுக்குக் கூடுகின்றன. எனவே போலிக் கார்டுகளைக் குறையுங்கள் என்று சொன்னார்கள். அந்த முயற்சி தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. நேற்றைய முன்தினம்கூட கூட்டுறவு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை, J.R.-ஐ எல்லாம் அழைத்து அவர்களை வலியுறுத்தி, புதியதாகப் பொறுப்பேற்றுள்ள நீங்கள் எல்லாம் இதற்கு ஒரு முக்கியத்துவம் கொடுத்து இந்தத் தவறான கார்டுகளை இன்னும் 3 மாத காலத்திலே கண்டுபிடிக்க வேண்டும் என்று சொல்லி இருக்கிறோம். அது ஒரு தொடர் நடவடிக்கையாக நடந்து கொண்டிருக்கிறது. எனவே, மீண்டும் மத்திய அரசாங்கத்தை வலியுறுத்தி, தமிழ்நாட்டிற்கு வேண்டிய மண்ணெண்ணெய்யை வாங்குவதற்கு இந்த அரசு முனைப்போடு செயல்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துறையோடு இணைந்த ஒரு செய்தியை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஏற்கெனவே, இந்த சிவில் சப்ளைஸ் துறையில் பணியாற்றுகிற சுமைப் பணித் தொழிலாளர்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களை நேரிலே வந்து சந்தித்து, கூலி உயர்வு வேண்டும் என்ற அவர்களுடைய கோரிக்கைகளையெல்லாம் வலியுறுத்தி இருக்கிறார்கள் அமைச்சர் அவர்கள் சில அறிவிப்புகளை வெளியிட்டிருக்கிறார்கள், அதிலே குறிப்பாக, காவிரி டெல்டா பகுதியிலே நெல் கொள்முதல் பணியில் ஈடுபடுகிற, லோடை ஏற்றி இறக்கக்கூடிய சுமைப் பணியாளர்களுக்கு மட்டும் அந்தக் கூலி உயர்வு அறிவிக்கப்பட்டிருட்பதாகத் தெரிவிக்கிறார்கள். ஆனால், நிரந்தரமாகக் காலம் முழுவதும் அந்தக்

[2007 ஏப்ரல் 28

கோடவுன்களிலே சரக்குகளை ஏற்றி இறக்கக்கூடிய அந்த ஊழியர்களுக்கு, அந்த ஊதிய உயர்வு வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், சம்பந்தப்பட்ட துறையில் பணியாற்றுகிற தொழிற்சங்கத் தலைவர்களை அழைத்துப் பேசித் தீர்வு காணவேண்டும்.

மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அரிய திட்டமான இலவசமாக வழங்கப்படுகிற அந்த gas அடுப்புத் திட்டத்திற்காக லோடை ஏற்றி இறக்குவதற்காக சுமைப் பணித் தொழிலாளர்கள்தான் பயன்படுத்தப்படுகிறார்கள். அவர்களுக்கு இதுவரையிலே அதற்கென தனியாகக் கூலி இல்லை. இப்போது ஓர் அறிவிப்பு வந்திருக்கிறது. ஓர் அடுப்பு ஏற்றி இறக்குவதற்கு வெறும் 10 பைசா என்ற அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்கள். இன்றைய நாணய மதிப்பு மிக மிக வீழ்ச்சியடைந்திருக்கிற காலத்தில் 10 பைசா என்பது உண்மையிலே மிக மிகக் குறைவானது. ஆகவே, இந்த இரண்டு கோரிக்கைகளையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் துறையில் பணியாற்றுகிற தொழிற்சங்கத் தலைவர்களை அழைத்துப் பேசி சுமுகமான ஒரு தீர்வு காணவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, அந்த ஊர்வலத்திலே கலந்துகொண்டவர்களுக்கு வெள்ளிக்கிழமை விடுமுறை நாள் என்றுதான் அவர்கள் ஊர்வலமாக வந்தார்கள். அந்த அலுவலகத்தில் பணியாற்றுகிற சில பேர் லீவ் எடுத்து வந்திருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் வேலை நிறுத்தக் காலத்தையே வேலை செய்த நாட்களாக அறிவித்திருக்கிறபோது, அவர்கள் முறையாக விடுப்பு கேட்டதைக்கூட அங்கீகரிக்காமல் துறையின்மூலமாக நோட்டீஸ் எல்லாம் அனுப்பி இருப்பதாகச் சொல்கிறார்கள். இவற்றுக்கெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல தீர்வைத் தெரிவிக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு கிட்டத்தட்ட 1,600 கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டன. இந்தக் கொள்முதல் நிலையங்களில் பணியாற்றுகின்ற பட்டியல் எழுத்தர்கள், அவர்களுக்கு உதவியாக இருப்பவர்கள், காவலர்கள் அங்கே பணியாற்றிக் கொண்டிருக்கிற இந்த மூட்டைகளை எடுத்துப்போடுகிற தொழிலாளிகள் இவர்கள் எல்லாம் 10 ஆண்டு



2007 ஏப்ரல் 28]

காலமாகக் கேட்பாரற்ற நிலையில் இருந்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்த உடனே, அதை உடனே முன்னிலைப்படுத்திச் செய்ய வேண்டுமென்று நினைத்துச் செயல்பட்டார்கள். உடனே, சம்பந்தப்பட்ட அந்த தொழிற்சங்கத் தலைவர்களை எல்லாம் அழைத்துப் பேசித்தான் இந்த நேரடிக் கொள்முதலிலே பணியாற்றுபவர்களுக்கெல்லாம் இப்போது கூலி உயர்வு கொடுக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவதாக, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது என்னவென்று சொன்னால், நிரந்தரமாக இருக்கின்ற, கிடங்குகளிலே வேலை செய்பவர்களுக்கு இன்னும் சம்பளம் உயர்த்தவில்லையே என்று சொன்னார்கள். அந்தத் தொழிற்சங்கத் தலைவர்கள் மானியக் கோரிக்கை விவாதம் நடைபெறுவதற்கு இரண்டொரு நாளைக்கு முன்னால்தான் என்னிடத்திலே கடிதம் கொடுத்தார்கள். அந்தக் குறுகிய காலத்திலே அவர்களையெல்லாம் அழைத்து, அதிகாரிகளை வைத்துப் பேசி செயல்பட முடியவில்லை. எனவே, அரசினுடைய ஆய்விலே அது இருக்கிறது. அந்தத் தொழிற்சங்கத் தலைவர்களை எல்லாம் அழைத்துப் பேசி முறையாக இந்த அரசாங்கம் அந்தத் தொழிலாளர்களுக்கு வேண்டிய உதவிகளை செய்யும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டத்தில், எனது காவேரிப்பட்டினம் தொகுதியில் பகுதிநேர நியாயவிலைக் கடைகள் பல இன்னும் திறக்கப்படாமல் நிலுவையில் இருந்து வருகின்றன. மாவட்ட அதிகாரிகளிடம் தொடர்புகொண்டு கேட்டபோது இன்று, நாளை என காலந்தாழ்த்தி வருகின்றனர். எனவே, விரைவில் அந்த நியாயவிலைக் கடைகளை திறக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுதிநேரக் கடைகளைப் பொறுத்த அளவுக்கு, தலைவர் கலைஞர் ஆட்சி வந்ததற்குப் பின்னால் கிட்டத்தட்ட தமிழ்நாட்டில் 318 பகுதிநேரக் கடைகள் இப்போது திறக்கப்பட்டிருக்கின்றன. பல சட்டமன்ற உறுப்பினர்கள், மக்கள்

[2007 ஏப்ரல் 28

பிரதிநிதிகள் ஆங்காங்கே மனுக்களைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். பகுதிநேரக் கடைகளைப் பொறுத்த அளவுக்கு ஏற்கெனவே நாங்கள் சொன்னதைப்போல 150 கார்டுகள், 1½ கிலோ மீட்டர் தூரம் இடைவெளி இருந்தால் போதும் அந்தந்த பகுதிகளிலே மாவட்ட ஆட்சித் தலைவரே கொடுக்க வேண்டுமென்று நாங்கள் அறிவுறுத்தி இருக்கிறோம். அது கொடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இப்பொழுது சட்டமன்ற உறுப்பினர் என்னுடைய கவனத்திற்கு இதைக் கொண்டு வந்திருக்கிறார். தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் தொடர்பு கொண்டு அதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மொத்த குடும்ப அட்டைகள் எவ்வளவு உள்ளன? இரண்டாவதாக உணவுத் துறையையும் கூட்டுறவுத் துறையையும் எதிர்காலத்தில் இணைத்து ஒரே துறையாக ஆக்கி இந்தப் பொதுவிநியோக முறையைப் பலப்படுத்துவதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்த அளவுக்கு, அரிசி வழங்குகின்ற அட்டைகள் 1 கோடியே 78 இலட்சத்து 69 ஆயிரத்து 509, சர்க்கரை வாங்குபவர்கள் அட்டை எண்ணிக்கை 10 இலட்சத்து 31 ஆயிரத்து 523, காவலர்களுக்காக வழங்கப்பட்டிருக்கிற அட்டைகள் 40 ஆயிரத்து 246. கௌரவ அட்டைகள் 51,928. ஆக, மொத்தம் 1 கோடியே 89 இலட்சத்து 93 ஆயிரத்து 206 அட்டைகள் இன்றைக்கு பயன்பாட்டில் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த இரண்டு துறைகளையும் ஒன்றாக ஆக்கமுடியுமா என்று இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். இது கொள்கை முடிவு. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் இதிலே முடிவு செய்ய வேண்டும். தனித்தனித் துறைகளாக இருக்கிற காரணத்தினால் அந்தந்தத் துறையின்



2007 ஏப்ரல் 28]

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மிக வேகமாக விரைந்து செயல்படுகிறார்கள். மாவட்டங்களிலேகூட, பெரிய பெரிய மாவட்டங்களை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று அரசு நினைக்கின்றது. இரண்டு துறைகளாகச் செயல்படுகிறபொழுதுதான் இன்னும் வேகமாகச் செயல்பட்டு நாட்டு மக்களுக்கு உதவிட முடியும். இருந்தாலும் இது கொள்கை முடிவு என்கிற காரணத்தினால் முதலமைச்சர்தான் இதற்கு வேண்டிய நிலைகளைப் பரிசீலனை செய்ய முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 157, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**157—**

**சுற்றுச் சுவர்**

***7181—திரு. தி. வேல்முருகன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரில் இரயில்வே கேட் அருகில் உள்ள அருள்மிகு அங்காளம்மன் கோயிலுக்கு மதில் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி நகர் இரயில்வே கேட் அருகில் உள்ள அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயில் இத்துறையினுடைய கட்டுப்பாட்டில் இல்லாத திருக்கோயில் ஆகும். ஆகவே, இத்திருக்கோயிலுக்கு மதில் சுவர் கட்டிட பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் ஒத்துழைப்பு அளித்து இத்துறை ஆளுகையின்கீழ் ஒப்படைக்கச் சம்மதித்தால் திருக்கோயிலுக்கு மதில் சுவர் கட்டுவதற்கு பொதுமக்கள் பங்களிப்புடன் அரசு நிதி உதவி ஒரு பகுதி அளித்து, நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[2007 ஏப்ரல் 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான முயற்சிகளைப் பற்றி நம்முடைய இந்து சமய அறநிலையத் துறையினுடைய உதவி ஆணையர், இணை ஆணையர்கள் தனிப்பட்ட முறையில் இருக்கின்ற அந்தக் கோயில் நிர்வாகத்தினரோடு பேசி உள்ளனர். அங்கு இரயில்வே கேட் அருகில் இருக்கின்ற காரணத்தினால் அடிக்கடி விபத்துகள் ஏற்படுகின்றன. கோயில் அருகிலேயே ஒரு சிறு சாலையும் செல்கின்றது. ஆதலால், அந்த நிர்வாகத்தைக் கையிலே வைத்திருப்பவர்களை அழைத்துப் பேசி நம்முடைய இந்து சமய அறநிலையத் துறை மூலம் இதற்கு ஒரு பாதுகாப்பான மதில் சுவர் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, அது துறையினுடைய கட்டுப்பாட்டில் இல்லாத திருக்கோயில். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அதிலே தனிக் கவனம் எடுத்து உரிய ஏற்பாடுகளைச் செய்தால் துறையினுடைய அதிகாரிகளும் அதில் ஒத்துழைத்து, தக்க முடிவு எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் கோயிலாக இருந்தாலும் அல்லது அரசுக் கோயிலாக இருந்தாலும், சமீபகாலமாக அங்காளம்மனை சந்திக்கச் சென்றவர்கள் எல்லாம் இப்போது அகால மரணம் அடைந்து கொண்டிருக்கிறார்கள். சமீபத்தில்கூட காஞ்சிபுரம் மாவட்டத்தில் அங்காளம்மனை சந்திக்கச் சென்ற கிராம அதிகாரிகளுக்கெல்லாம் விபத்து ஏற்பட்டிருக்கிறது. ஆக, தமிழகத்தில் இருக்கிற மக்களுடைய மனநிலை, கடவுள் நம்பிக்கையின் காரணமாக பாதுகாப்பு இருக்கிறதா, நாம் செல்கின்ற இடங்களில் விபத்து ஏற்படுகின்றதா என்பதைப் பார்ப்பதில்லை. அது தனியார் கோயிலா, அரசுக் கோயிலா என்றும் பார்ப்பதில்லை. பாதுகாப்பற்ற நிலையில் அந்தத் திருக்கோயில் தற்போது இருந்து வருகின்ற காரணத்தினால், தனியார் கோயிலாக



2007 ஏப்ரல் 28]

இருந்தாலும்கூட, 10 அடி தூரத்தில் அந்த Railway track செல்கிறது. இரயில் வருகிறதா, இல்லையா என்றுகூடப் பார்க்காமல் மக்கள் கோயிலுக்கு வருகின்ற ஆர்வத்தின் அடிப்படையிலே அங்கு விபத்து ஏற்படுவதற்கு வாய்ப்பிருக்கிற காரணத்தினால், உள்ளாட்சித் துறை அமைச்சரையாவது வலியுறுத்தி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனியார் கோயிலாக இருந்தாலும் மதில் சுவர் கட்டித் தருவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையினுடைய கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய திருக்கோயில்களுக்குக்கூட பொதுமக்களுடைய பங்களிப்போடுதான் திருப்பணிகள் போன்ற காரியங்கள் நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. ஆக, துறையினுடைய கட்டுப்பாட்டில் இல்லாமல் ஏறத்தாழ 100 ஆண்டு காலமாக அந்தக் கோயில் இரயில்வே கேட்டின் அருகே இருப்பதாக அறிய வருகிறேன். ஆகவே, அந்த மக்கள் சம்மதித்தால் தவிர, இதிலே துறை தலையிடுவது சற்று சிக்கலாக இருக்கும். இந்தப் பிரச்சினையை நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் முன்னின்று செய்து தர, மீண்டும் அவரை வலியுறுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 158, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வீ. ராமநாதன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**158—**

**கட்டட வசதி**

***13248—திரு. கே.வீ. ராமநாதன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி தொகுதி, பூனாச்சி ஊராட்சி, புதுவளவு காலனியில் அங்கன்வாடி மையக் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[2007 ஏப்ரல் 28

(அ) மற்றும் (ஆ) பூனாச்சி ஊராட்சி மன்றத்தில் குழந்தைகள் மையத்திற்குக் கட்டடம் கட்டுவதற்கு நிலம் ஒதுக்குவதற்காக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. துறையின் பேரில் நிலம் பதிவு செய்த பின்னர் சொந்தக் கட்டடம் கட்ட உள்ளாட்சித் துறை வாயிலாக உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வீ. ராமநாதனுக்குப் பதிலாக மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பவானி தொகுதி, பூனாச்சி ஊராட்சி, புதுவளவு காலனியில் அங்கன்வாடி மையக் கட்டடம் கட்டித்தர அமைச்சர் அவர்கள் ஆவன செய்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அதேபோன்று, எனது முகையூர் தொகுதியில், எனது சொந்த கிராமமான வீரசோழபுரம் கிராமத்தில் அங்கன்வாடி மையக் கட்டடம் இல்லை. அதைக் கட்டித் தருவதற்கு அரசு ஆவன செய்யுமா என தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** குழந்தைகள் மையங்களின் கட்டட வசதி குறித்து ஒரு சில கருத்துகளை நான் கூற விரும்புகிறேன். புதிய குழந்தைகள் மையங்கள் கட்டுதல், மையங்களைப் பராமரித்தல், பழுது நீக்குதல் ஆகிய பணிகள் உள்ளாட்சித் துறை வாயிலாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. குழந்தைகள் மையங்களுக்குக் கழிப்பறை வசதி ஏற்பாடு செய்திட, முழு சுகாதாரத் திட்டத்தின் வாயிலாகவும், குடிநீர் வசதி ஏற்பாடு செய்திட, ஊரகக் குடிநீர் வழங்கல் திட்டத்தின் வாயிலாகவும் ஊரக வளர்ச்சித் துறை நடவடிக்கை எடுத்து வருகிறது. குழந்தைகள் மையங்கள் கட்டுவதற்கு சட்டமன்ற உறுப்பினர் நிதி, நாடாளுமன்ற உறுப்பினர் நிதி மற்றும் மாவட்ட ஆட்சியர் சிறப்பு நிதியையும் பயன்படுத்திக்கொள்ளலாம். குழந்தைகள் மையங்களுக்கு நிலம் அல்லது நிலத்தோடுகூடிய கட்டடம் கட்டித் தரவும், அல்லது தத்தெடுத்து நடத்தவும், அல்லது நன்கொடை வழங்கவும், பொது மக்களோ, அரசு சார்பற்ற தன்னார்வத் தொண்டு நிறுவனங்களோ, அறக்கட்டளைகளோ தாமாகவே முன்வந்தால் அதனையும் ஏற்கலாம் என்றும் மேலும், நன்கொடை வழங்கியவர்களின் பெயர்களைக் குழந்தைகள் மையக் கட்டடத்தில் பதித்துக்கொள்ளலாம் என்றும் அரசு ஆணையிட்டுள்ளது. அனைத்துக் குழந்தைகள் மையங்களை



2007 ஏப்ரல் 28]

மேம்படுத்த, சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு மற்றும் தண்ணீர், மின் இணைப்பு, கழிப்பறை வசதி போன்ற அடிப்படை வசதிகளைப் பெற்றுத் தருவதற்கு ஊரக வளர்ச்சி மேம்பாட்டு நிதியின்கீழ் செயல்படுத்திட நபார்டு வங்கியிடம் நிதி உதவியும் கோரப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (குறுக்கீடு)

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, சொல்லியாகிவிட்டது. வினா எண் 159, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**159—**

**கால்நடை மருத்துவமனை**

***20896—திருமதி ரா. லீமா றோஸ்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவட்டாறு தொகுதி, பொன்மனைப் பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை கோட்டம், திருவட்டாறு ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பொன்மனை கிராமத்தில் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த அரசுத் தரப்பில் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புற வளர்ச்சிக்கு கால்நடைப் பராமரிப்பு என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. பொன்மனை பகுதியில்

[2007 ஏப்ரல் 28

ஏற்கெனவே ஒரு கிளை நிலையம் இருந்து வருகின்றது. ஆனால், மலைப் பகுதிகளை உள்ளடக்கிய பொன்மனை பேரூராட்சி, சுருள்கோடு, பாலமோர், பேச்சிப்பாறை போன்ற பகுதிகளில், மலைவாழ் மக்கள் அதிகமாக வசித்து வருகின்ற காரணத்தால், கால்நடைகள் அதிகமாக இருக்கின்றன. அதிக தூரம் கால்நடைகளைக் கொண்டு சென்று பராமரிப்பதற்கேற்ற சூழ்நிலை என்பது அங்கே இல்லை. எனவே, அங்கே கால்நடை மருத்துவமனையை, சிறப்புக் கவனம் செலுத்தி அமைக்க, அரசால் ஆவன செய்யப்படுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொன்மனை பேரூராட்சியில் ஏற்கெனவே கால்நடைக் கிளை நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. அதுமட்டுமல்ல, பொன்மனை பேரூராட்சியும் மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலுள்ள கால்நடைகளின் எண்ணிக்கை சுமார் 2,300 ஆகும். ஏற்கெனவே கால்நடைக் கிளை நிலையம் செயல்பட்டு வருவதனால், தற்சமயம் அதைத் தரம் உயர்த்த வாய்ப்பில்லை என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைகளின் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும், மலைப் பகுதிகள் என்கின்ற காரணத்தால், அந்த விதியைத் தளர்த்தி அரசு நடவடிக்கை எடுக்குமா? அதேபோன்று, ஏற்கெனவே நடமாடும் கால்நடை மருந்தகம் வேண்டுமெனக் கடந்த 10 ஆண்டுகளாக இதே மாமன்றத்திலே எங்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்த மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்டு வருகிறோம். அதைப்போன்று உள்ளாட்சி மன்றத்திலே நான் இருக்கின்றபொழுதும் தொடர்ந்து மாண்புமிகு அமைச்சர்களிடம் வலியுறுத்தி வந்திருக்கின்றேன். மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் எங்களுடைய மாவட்டத்திற்கு வருகை தந்தபோது நடமாடும் கால்நடை மருந்தகம் அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தேன். உறுப்பினர்களுடைய சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து வாகனம்



2007 ஏப்ரல் 28]

வாங்குவதற்காக நிதியை ஒதுக்கித் தந்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர்கள் சொன்னார்கள். அந்த அடிப்படையிலே விளவங்கோடு, திருவட்டாறு, கிள்ளியூர், பத்மநாபபுரம் ஆகிய 4 தொகுதிகளின் சட்டமன்ற உறுப்பினர்களும் ரூபாய் 6 இலட்சம் ஒதுக்கி, வாகனம் வாங்குவதற்கான நிர்வாக அனுமதி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமிருந்து பெறப்பட்டிருக்கின்றது. ஆனால், அரசு எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளாத காரணத்தால் வாகனம் வாங்க முடியாமல் இருக்கின்றது. மலைவாழ் மக்களுடைய அவசியம் கருதி, மலைக் கிராமங்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** அரசு கவனம் செலுத்தி, நடமாடும் கால்நடை மருந்தகம் அமைப்பதற்கு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் கேட்டறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் இவ்வரசு 10,000 கால்நடைகளின் எண்ணிக்கைக்குத்தான் ஒரு கால்நடை மருந்தகம் அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ் அவர்கள் கூறியுள்ளதைப்போல, உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ் அவர்கள் கூறியுள்ளதைப்போல, உறுப்பினர்களும் சேர்ந்து அந்த வாகனத்தை நான்கு சட்டமன்ற உறுப்பினர்களும் சேர்ந்து அந்த வாகனத்தை வாங்கித்தர அனுமதி அளித்துள்ளார்கள். இத்துறை அதில் நடவடிக்கை எடுத்து வருகிறது. கூடியவிரைவில் நடமாடும் கால்நடைப் பிரிவிற்கு அனுமதி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை மருத்துவமனை வேண்டுமென்று பல பேர் கேட்டிருந்தாலும், என் தொகுதியைப் பொறுத்தவரை 5 கால்நடை மருத்துவமனைகள் இருக்கின்றன. மருத்துவரோ அல்லது உதவியாளரோ யாரும் கிடையாது. 5 மருந்தகங்கள் இருக்கின்றன.

[2007 ஏப்ரல் 28

அவற்றிலும் யாரும் கிடையாது. இப்படி தெள்ளார், தேசூர், நெடுங்குணம், பெரியகொழப்பலூர், பெரணமல்லூர், பொன்னூர், கோட்டுப்பாக்கம், எறும்பூர், பள்ளம், மேலத்தாங்கல் என்று சொல்லக்கூடிய 10 இடங்களிலேயும் ஒரு டாக்டரோ, ஒரு உதவியாளரோகூட இல்லை. எனவே, எல்லா மருத்துவமனைகளிலும் மருத்துவர்கள் இல்லாமல், உதவியாளர்களும் இல்லாமல் கால்நடைகள் பாதிக்கப்படுவதை இந்த அரசு அறிந்து, அதற்குரிய நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினத்தில் நான் இதற்கு விளக்கம் அளித்துள்ளேன். நம்முடைய அரசுப் பணியாளர் தேர்வாணையம் 250 மருத்துவர்களுக்கான பட்டியலைத் தேர்ந்தெடுத்து இத்துறைக்கு அனுப்பியுள்ளது. அவர்களைப் பற்றிய Police verification, அதாவது தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களின் விவரங்கள் சரிபார்த்தல் நடந்து முடிந்தவுடன் 250 கால்நடை மருத்துவர்கள் பணியமர்த்தப்படுவார்கள்.

அதேபோல, கால்நடை ஆய்வாளர்கள் காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டதற்குப் பிறகு இத்துறையில் 425 கால்நடை ஆய்வாளர்களுக்கான பயிற்சியும் ஆரம்பிக்கப்படவுள்ளது. அதனால் விரைவில் நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரின் கோரிக்கை நிறைவேற்றப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. குருசாமி.

**திரு. செ. குருசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் சட்டமன்றத் தொகுதியில், அந்தியூரிலிருந்து அந்தியூர் காலனி 15 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. அங்கே கால்நடை மருந்தகம் தேவை என்று நான் பலமுறை வலியுறுத்தி இருக்கிறேன். அதேபோல அம்மாப்பேட்டை ஒன்றியத்தில் குருவடியிலிருந்து பாலமலை, சித்திதேஸ்வரன்மலை என்ற பகுதி இருக்கிறது. அங்கேயும் ஒரு கால்நடை மருந்தகம் அமைத்துக்கொடுக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.



2007 ஏப்ரல் 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அந்தியூர் தொகுதி உறுப்பினருடைய கோரிக்கையை, உரிய விதிமுறைகளுக்குட்பட்டு இருப்பின் இவ்வரசு பரிசீலனை செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 160, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. பெரியசாமி, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**160—**

### வீட்டு வசதி

***4868—திரு. மு.க. பெரியசாமி:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, காவேரிப்பூம்பட்டினம் ஊராட்சி, பூம்புகார் மீனவர் பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நிரந்தர வீடு கட்டும் பணியை விரைந்து முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் சட்டப் பேரவைத் தொகுதி, சீர்காழி ஊராட்சி ஒன்றியம், காவேரிப்பூம்பட்டினம் ஊராட்சியிலுள்ள பூம்புகார் மீனவர் கிராமப் பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு தொண்டு நிறுவனம் மூலமாக 500 வீடுகள் கட்டப்பட்டு அவற்றில் 324 வீடுகளை இன்று, 28-4-2007 மாலை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் திறந்து வைத்து பயனாளிகளிடம் ஒப்படைக்க உள்ளார்கள். மீதம் உள்ள 176 வீடுகள் பயனாளிகள் குடியிருந்த இடத்திலேயே கட்டப்பட்டு வருகின்றன. அவற்றையும் விரைவில் பயனாளிகளிடம் ஒப்படைப்பதற்குத் தீவிரமான முயற்சிகளை அரசு எடுத்துவருகிறது.

[2007 ஏப்ரல் 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. பெரியசாமி. இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதியில் இருக்கின்ற மீனவர்களுக்கு விரைந்து நடவடிக்கை எடுத்துவரும் மீன்வளத் துறைக்கு பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட கொல்லங்கோடு, தூத்தூர் ஊராட்சிப் பகுதிகளில் ஏராளமான மீனவக் குடும்பங்கள் உள்ளன. சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னால் அவர்களுக்குக் கட்டிக்கொடுக்கப்பட்ட காலனி வீடுகள் மிகப் பழமையடைந்து, பழுதடைந்துள்ளன. கூரைகளில் வெடிப்பு ஏற்பட்டு leakage ஆகிறது. ஜன்னல் கதவுகள் பாதிக்கப்பட்டுள்ளன. இப்படிப்பட்ட வீடுகளைப் புதுப்பிப்பதற்கோ அல்லது மாற்று வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கோ அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன்வளத் துறையின்மூலமாக வீடுகளை அரசு கட்டி வழங்கிவருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல அந்தப் பகுதி வீடுகள் எவ்வாண்டில் மீனவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டன, அந்த வீடுகளுடைய நிலைமை எப்படி உள்ளது என்பதனை ஆய்வு செய்து, மிகப் பழமையான வீடுகளாக இருக்குமேயானால் துறையின்மூலமாக அந்த வீடுகளை இடித்துவிட்டு அந்தப் பகுதியில் வாழ்கின்ற மீனவர்களுக்குப் புதியதாக வீடுகளைக் கட்டித்தர அரசு ஆவன செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (கூச்சல்) (குறுக்கீடுகள்)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



2007 ஏப்ரல் 28]

## 2. தகவல் கோரல்

### (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், என்ன? ஒவ்வொன்றாகக் கேளுங்கள். (குறுக்கீடுகள்). ஒவ்வொன்றாகக் கேளுங்கள். முதலில் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்).

**திரு. விடியல் எஸ். சேகர்:** பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குப் பத்திரிகையிலே வைகோ அவர்கள்... (குறுக்கீடுகள்)

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில் எல்லோரும் உட்காருங்கள். நான் எடுக்கும் சப்ஜெக்ட்டைச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) அதற்கப்புறம் ஒவ்வொருவராக எழுந்திருங்கள். உட்காருங்கள். எல்லாரும் உட்காருங்கள். முதலிலே, நுழைவுத் தேர்வு சம்பந்தமாக அரசுக்கு நன்றி தெரிவிக்கின்ற வகையிலே அந்தத் தீர்மானத்தை எடுத்துக்கொள்கிறேன். இரண்டாவது, காவல் துறை அதிகாரிகள்பற்றி முன்னாள் முதலமைச்சர் அவதூறாகப் பேசியது சம்பந்தமாக ஒருசிலர் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதை எடுத்துக்கொள்கிறேன். அடுத்தது, விடுதலைப் புலிகள் சம்பந்தப்பட்ட பிரச்சினை இந்த மூன்றையும் எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) இந்த மூன்றையும் எடுத்துக்கொள்கிறேன். திரு. ஞானசேகரன், சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். நான் எடுக்கிறேன். திரு. ஞானசேகரன், (குறுக்கீடுகள்) உட்காருங்கள் சார். ஒவ்வொன்றாக எடுக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன் இல்லையா? (குறுக்கீடுகள்) நீங்கள் எல்லோரும், நான் எடுக்கிறேன் என்று சொன்னதற்குப் பிறகும் எழுந்து நிற்பது முறையல்ல. (குறுக்கீடுகள்)

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய அரசாங்கத்திற்கு ஒரு தனி நபர் . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான்தான் எடுக்கிறேன் என்று சொல்கிறேனே! (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், (குறுக்கீடுகள்) திரு. ஞானசேகரன், கவன ஈர்ப்பு ஒன்றைக் கொடுத்திருக்கிறார். அதை எடுக்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். அதை எடுக்கிறேன் என்றுதான் சொல்கிறேனே? (குறுக்கீடுகள்) இந்த 3 சப்ஜெக்டுகளை எடுப்பேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

[2007 ஏப்ரல் 28

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, யாராவது ஒருவரைப் பேசச் சொல்லுங்கள். என்ன, உங்களுடைய கோரிக்கை என்ன? என்ன கேட்கிறீர்கள் என்பதை ஒருவர் சொல்லுங்களேன். (குறுக்கீடுகள்) ஒருவர் சொல்லுங்களேன்.

***திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 26-4-2007 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்மீது ஓர் உரிமை மீறல் பிரச்சினை கொடுத்திருந்தேன். அதை முதலில் எடுக்க வேண்டும் என்று நான் வலியுறுத்திக் கூறுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது ஆய்வில் இருக்கிறது. உட்காருங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** என்னங்க, முதலிலே கொடுத்ததை எடுக்காமல், பிறகு கொடுத்ததை எல்லாம் எடுக்கிறீர்கள்? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது ஆய்வில் இருக்கிறது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நீங்கள் கொடுத்ததை எல்லாம் அனுமதிக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. (குறுக்கீடுகள்) உட்காருங்கள் முதலிலே. விதிகளுக்குக்குட்பட்டிருந்தால்தான் எடுக்க முடியும். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) விதிகளுக்குக்குட்பட்டிருந்தால்தான் எடுக்க முடியும். (குறுக்கீடுகள்) நீங்கள் கொடுத்ததை எல்லாம் எடுக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ஆய்வில் இருக்கிறது. உட்காருங்கள். அது ஆய்விலே இருக்கிறது. நான் முடிவு எடுத்துத்தான் செய்ய முடியும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் முதலிலே.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 29-3-2007.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசிக் கொண்டிருக்கிறார் இல்லையா? உட்காருங்கள்.

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்)*

*(மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும் அவையிலிருந்து வெளியேறினர்)*



2007 ஏப்ரல் 28]

### (ஆ) விடுதலைப் புலிகள் குமரி மாவட்ட மீனவர்களைச் சுட்டுக் கொன்றது மற்றும் சிறைப்பிடித்து வைத்திருத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விடுதலைப் புலிகள் 5 மீனவர்களைச் சுட்டுக் கொன்றது மற்றும் 12 மீனவர்களைச் சிறைப்பிடித்து வைத்திருப்பது குறித்து அ.இ.அ.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. டி. ஜெயக்குமார் ஆகியோரும், இந்திய தேசியக் காங்கிரசின் சார்பாக திரு. டி. சுதர்சனம், திரு. சி. ஞானசேகரன், திரு. கோவை தங்கம், திரு. கரி. இராமசாமி, திரு. து. அமரமூர்த்தி, திரு. என்.ஆர். ரங்கராஜன், திரு. பெ.சு. விஜயகுமார், திரு. எம்.ஆர். சுந்தரம், திரு. எஸ். ஜாண் ஜேக்கப், திரு. விடியல் எஸ். சேகர், திரு. எச். வசந்தகுமார், திரு. கு. ஹசன் அலி, திரு. அருள் அன்பரசு, திரு. போளூர் ம. வரதன் ஆகியோரும் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். இதைத் தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். திரு. சி. ஞானசேகரன், சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 29-3-2007 ஆம் தேதி, கன்னியாகுமரி மாவட்டத்தில் நித்திரைவிளை பகுதியிலிருந்து, சின்னத்துறை என்கிற கிராமத்திலிருந்து மீன் பிடிக்கச்சென்ற தமிழக மீனவர்கள் சத்தீஷ், ஜஸ்டின், மரிய ஜான், லீன்ஸ், ஜீசஸ்தாஸ் என்கிற 5 பேர்களைச் சுட்டுக் கொன்றவர்கள் இன்று கடல் புலிகள் என்கின்ற விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் என்று நம்முடைய D.G.P. அவர்கள் நேற்று ஒரு அறிக்கையில் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தக் கருத்தை நாங்கள் இந்த அவையிலே ஏற்கெனவே பதிவு செய்தோம். அப்போது விசைப் படகிலே வந்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சுருக்கமாகச் சொல்லுங்கள். (குறுக்கீடு) கவனத்தை ஈர்க்கிறேன் என்று சொல்லிவிட்டு, சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** முக்கியமான ஒரு விஷயம் இது. முக்கியமான ஒரு சப்ஜெக்ட்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செய்தி எல்லாம் எல்லோருக்கும் தெரியும். அதனால் கவனத்தை ஈர்க்கிறேன் என்று மட்டும் சொல்லுங்கள் முதல்வர் பதில் சொல்வார்கள்.

[2007 ஏப்ரல் 28

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை, விடுதலைப் புலிகள் என்பவர்கள் இன்று எந்த அளவிற்கு வந்து கொண்டிருக்கிறார்கள், எவ்வளவு பேர் அதற்கு ஆதரவு தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற விஷயங்களை எல்லாம் கொஞ்சம் சொல்வதற்கு நீங்கள் நேரத்தை ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 5 மீனவர்களை அன்று சுட்டுக் கொன்றவர்கள், மேலே சட்டை இல்லாமல், பனியன் இல்லாமல், மரியா என்கிற ஒரு விசைப் படகிலே வந்துதான் சுட்டார்கள் என்று நாங்கள் இந்த அவையிலே பதிவு செய்தோம். அப்பொழுது அதை அவைக் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டும் என்று சில பேர் இந்த மன்றத்திலேயே தகராறு செய்து, அதை அவைக் குறிப்பிலிருந்து எடுத்து விட்டிருக்கிறீர்கள். ஆனால், நாங்கள் சொன்னது உண்மை என்பதை நேற்று நம்முடைய காவல் துறை Q Branch கண்டுபிடித்து, இந்த நாட்டு மக்களுக்கு உண்மை என்ன என்பதைத் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். அதிலேகூட, அன்று இன்னும் 3 பேர்—அருளானந்த தாஸ், ஜெரேன், மரிய ஜான் லூயிஸ் என்ற 3 பேர் காயம் அடைந்து, அவர்கள் பாவம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார்கள். . இப்படித் தமிழர்களையே சுட்டுக் கொன்றவர்கள் கடல் புலிகள் என்கிற விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் என்று நாங்கள் மிகத் தெளிவாகச் சொன்னோம். இப்படி நம்முடைய தமிழர்களையே சுட்டுக் கொன்றவர்களை, இலங்கை கடற்படைதான் சுட்டது என்று ஒரு பொய்ப் பிரச்சாரத்தை தமிழ் மண்ணிலே பரவ விட்டு அதிலே குளிர் காய நினைத்து, இன்று விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக, வெளிப்படையாகப் பேசி வருகிற இயக்கங்கள் இப்படி ஒரு தவறான பிரச்சாரத்தை நாட்டில் உலவ விட்டு அதிலே vote bank-ஐப் பெறலாம் என்று எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறவர்கள், இன்று விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தெரிவிப்பதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

*முற்பகல் 10-25*

அதோடுமட்டுமல்ல 12 பேர், இன்று கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்து இருக்கிற 12 மீனவர்கள்—நம்முடைய குமரி மாவட்டத்தைச் சார்ந்தவர்கள் 10 பேர்; தூத்துக்குடி மாவட்டத்தைச் சார்ந்தவர் ஒருவர்; கேரளாவைச் சேர்ந்த மீனவர் ஒருவர். 12 மீனவர்களில் 11 பேர் பச்சைத் தமிழர்கள். நம்முடைய குமரி மாவட்டம் மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தைச் சார்ந்தவர்கள். இவர்களை எல்லாம் கொண்டுபோய் சிறைப்பிடித்து வைத்துக்கொண்டு, இன்று விடுதலைப் புலிகள்



2007 ஏப்ரல் 28] [திரு. சி. ஞானசேகரன்]

முகாமிலே அடைத்து வைத்துக்கொண்டு இருக்கிறவர்களுக்கு சில பேர் ஆதரவு தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படித் தமிழர்களையே கொன்று குவித்தவர்கள், தமிழர்களையே சிறைப்பிடித்து வைத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு நாங்கள் ஆதரவு தெரிவிக்கிறோம் என்று ஒரு கட்சியினுடைய தலைவர் வெளிப்படையாக, ம.தி.மு.க.-வினுடைய பொதுச் செயலாளர் திரு. வைகோ நெஞ்சை நிமிர்த்தி, தலை உயர்த்திச் சொல்லுவதாக இன்று அறிக்கை விட்டிருக்கிறார்.

நாங்கள் ஏற்கெனவே இந்த அவையிலே மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு ஒரு கோரிக்கை வைத்தோம். திருப்பத்தூரிலே ஒரு பேரணி, அதேபோல சென்னையிலே ஒரு பொதுக் கூட்டம். இப்படிப் பொதுக் கூட்டங்களில் எல்லாம் விடுதலைப் புலிகளை என்றும் நாங்கள் ஆதரிப்போம் என்று சொன்ன திரு. வைகோ-வை அன்றே கைது செய்யுங்கள் என்று சொன்னோம். சட்டம் தன்னுடைய கடமையைச் செய்யும் என்று இந்த அவையிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் வாக்குறுதி அளித்தார்கள். ஆனால், அந்த வாக்குறுதி இன்னும் நிறைவேற்றப்படாத காரணத்தினாலேதான் இன்று மீண்டும் ஓர் அறிக்கை வருகிறது. அதுவும் என்னவென்று? இங்கே நடந்து கொண்டிருப்பது ஒரு பாசிச ஆட்சி என்று. உண்மையிலேயே பாசிச ஆட்சி, எது? 19 மாதம் தன்னை பொடா சட்டத்திலே உள்ளே வைத்தார்களே, அவர்களோடு கூட்டு சேர்ந்துக் கொண்டு இருக்கிற திரு. வைகோ இன்று இந்த ஆட்சியைப் பார்த்து இது ஒரு பாசிச ஆட்சி என்கிறார். ஏனென்றால், சீமா பஷீரைக் கைது செய்துவிட்டீர்கள் என்று ஒரு குற்றச்சாட்டைச் சொல்லி சொல்லுகிறார்கள். இது வெறும் குற்றச்சாட்டு அல்ல. ஏற்கெனவே இந்த 'Q' Branch Police மிகத் தெளிவாக இதிலே விசாரணை செய்துதான், இன்று விடுதலைப் புலிகளுக்கு யாரெல்லாம் ஆதரவாக இருக்கிறார்கள் என்பதைக் கண்டுபிடித்துத்தான், ம.தி.மு.க.-வினுடைய பொறுப்பில் இருக்கக்கூடிய சீமா பஷீர் என்பவர் விடுதலைப் புலிகளுக்குத் துணை போனார், அவர்களுக்கு ஆதரவாக இருந்தார் என்பதைக் கண்டறிந்துள்ளனர். அதோடுமட்டுமல்ல, உங்களுடைய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த பர்கத் என்பவரைக்கூட கைது செய்து சிறையில் அடைத்த ஆட்சிதான் உங்களுடைய ஆட்சி என்பதை நான் இந்த இடத்திலே நெஞ்சாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அளவிற்கு விடுதலைப் புலிகளுடைய செயல்பாடுகள் உள்ளன. ஏனென்றால், அன்று திரு. பத்மநாபா, திரு. அமிர்தலிங்கம்

போன்ற தலைவர்களை எல்லாம் கொன்று குவித்தார்கள். இன்று நம்முடைய தமிழ் மண்ணில், நம்முடைய சொந்தங்கள் 5 பேரைக் கொன்று குவித்தார்கள். 12 பேரை இன்று சிறைப்பிடித்து வைத்திருக்கிறார்கள். இப்படிச் சிறைப்பிடித்து வைத்துக் கொண்டிருக்கிற நிலையைத் தெரிந்துகூட தலைகுனிய வேண்டிய, வெட்கப்பட வேண்டிய ஒரு நிகழ்ச்சிக்கு, இன்று 'நான் தலை நிமிர்த்து, நெஞ்சை நிமிர்த்தி ஆதரிப்பேன்' என்று வெளிப்படையாகவே அறிக்கை விடுகிற அப்படிப்பட்ட இயக்கங்களை, அரசியல் கட்சித் தலைவர்களை, இந்த அரசு என்ன செய்யப் போகிறது? உடனடியாக நீங்கள் அவர்களைக் கைது செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே 19 மாதம் வரை அவரைச் சிறையிலே அடைத்தவர்கள், இன்று அவரோடு கூட்டணி வைத்துக் கொண்டிருக்கிற பிரதானக் கட்சியான அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர், இதிலே வாய் மூடி மௌனியாக இருந்து கொண்டிருப்பது ஏன் என்பது எனக்கு இன்னும் புரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இன்று அவர்களுக்கு ஒரு தர்மசங்கடமான நிலை. ஏனென்று சொன்னால், விடுதலைப் புலிகள் என்று சொன்னால், நான் மட்டுமேதான் அதைப் பேசினேன், அடக்கினேன் என்று சொல்லி, எப்பொழுதுமே வீர வசனம் பேசிக் கொண்டு இருந்த நம்முடைய முன்னாள் முதலமைச்சரின் ஆட்சியில் தமிழர்களையே கொன்று குவித்த, தமிழர்களையே சிறைப்பிடித்து வைத்துக் கொண்டிருக்கக்கூடிய அந்த விடுதலைப் புலிகளைப்பற்றி ஒரு வார்த்தைகூட பேசாமல், நைசாக இங்கே அண்ணா திராவிட முன்னேற்றக் கழக, எதிர்க்கட்சியைச் சார்ந்திருக்கிற உறுப்பினர்கள் இன்று வெளிநடப்புச் செய்து கொண்டிருக்கிறார்கள். அதுதான் பிரதான எதிர்க்கட்சி இந்த அவையிலே. அவர்கள் இதுபற்றி ஒன்றும் கூறாமல், இங்கே இந்தப் பிரச்சினையை நாங்கள் கிளப்புகிறோம் என்பது தெரிந்தவுடன், ஓர் உரிமை மீறல் பிரச்சினை என்பதை மட்டும் கோடிட்டுக் காட்டிவிட்டு வெளியே போயிருக்கிறார்கள்.

நான் அவர்களையும் வெளியே இருக்கக்கூடிய முன்னாள் முதல்வரையும் கேட்கிறேன். அதேபோல இங்கே நம்முடைய எதிர்க்கட்சியைச் சார்ந்திருக்கக்கூடிய உறுப்பினர்களையும் கேட்கிறேன். இன்று தமிழர்களையே இந்த அளவிற்குப் பதம் பார்த்து இருக்கக்கூடிய ஓர் இயக்கத்திற்கு வெளிப்படையாகவே ஆதரவு தெரிவித்துக் கொண்டிருக்கக்கூடிய திரு. வைகோ-வுடன் நீங்கள் கை கோர்த்துக் கொண்டு, இன்று இந்தப் பிரச்சினையில் வாய்மூடிக் கொண்டு





இருக்கிறீர்களே, இது என்ன நியாயம் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். சட்டம், ஒழுங்கைப் பற்றி நீங்களா பேசுவது என்பதையும் நான் இந்த இடத்திலே கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்களை நான் கேட்டுக்கொள்வதெல்லாம்—ஏற்கெனவே கடலோரக் காவல் படை போன்ற அமைப்புகளால் 61 பேர் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். இங்கே விடுதலைப் புலிகள், இலங்கைத் தமிழர்களைக் கைது செய்து, இங்கே இருக்கக்கூடிய சில தமிழர்களையும் கைது செய்தார்கள். அதில் 17 பேர் இலங்கைத் தமிழர்கள். அந்த இலங்கைத் தமிழர்கள் கடல் புலிகள் என்கிற விடுதலைப் புலி அமைப்பினைச் சேர்ந்தவர்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள்.

*முற்பகல் 10-30*

அதற்குத்தான் மத்திய அரசுகூட நேற்று நம்முடைய தமிழக அரசுக்கு Red alert கொடுத்திருக்கிறது என்கிற ஒரு செய்தியும் வந்திருக்கிறது. ஆகவே, நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம், தமிழர்கள் 5 பேர்களை, 5 மீனவர்களைக் கொன்றவர்களை, இன்னும் 11 தமிழர்களைப் பிடித்து வைத்திருக்கிற, ஏற்கெனவே தடை செய்யப்பட்ட இயக்கத்திற்கு ஆதரவு தரக்கூடிய இயக்கங்களை, அரசியல் கட்சிகளை முதலிலே தடை செய்து, அவர்களையெல்லாம் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) நெஞ்சை நிமிர்த்தி, தலையை உயர்த்திச் சொல்லிக்கொண்டிருக்கிறவர்களை உடனடியாக நீங்கள் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படிப்பட்ட கட்சிகளைத் தடை செய்ய வேண்டுமென்று நான் கோருகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதில் 11 பேர் நம்முடைய தமிழர்கள், ஒருவர் கேரள மீனவர்; அவர்களை மீட்பதற்கு தமிழக அரசு உடனடியாக மத்திய அரசோடு பேசி நடவடிக்கை எடுக்க வேண்டும்; அவர்களை வீட்டிற்குக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற காங்கிரஸ் கட்சியின் சார்பாக வேண்டுகோளை வைத்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று அவை, நேற்றைய நிகழ்வுகளுக்குப் பிறகு அமைதி வடிவம் காணும் என்ற எதிர்பார்ப்போடு நிகழ்ச்சியிலே கலந்துகொள்ள வந்தேன். ஆனால், நேற்றைய உறுதிமொழிகள்

காற்றிலே பறக்க விடப்பட்டு, 'நாங்கள் எப்போதும் இப்படித்தான் இருப்போம்' என்பதை எடுத்துக்காட்டுகின்ற வகையில் எதிர்க்கட்சியினரும், அவர்களுக்கு உடந்தையாக இருக்கின்ற உப கட்சியினரும் நடந்துகொண்ட நிலைமை மிக, மிக வேதனை தரக்கூடிய ஒன்றாகும். இந்த அவையில் நடைபெறுகின்ற நிகழ்வுகளை இங்கே இருக்கின்ற உறுப்பினர்கள் மாத்திரமல்ல, தொலைக்காட்சியின்மூலமாக வெளியிலே இருக்கின்ற மக்களும் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். பத்திரிகையாளர்களும் துரதிருஷ்டிக்கண்ணாடி போல பிரதிபலித்து இவற்றைத் தங்கள் ஏடுகளிலே வெளியிட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அப்படியிருந்தும்கூட, அதைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல் தங்கள் போக்கிலேயே செயல்படுவோம் என்ற வகையிலே எதிர்க்கட்சியினர் செயல்படுவது, இன்னும் அதை மாற்றிக்கொள்ள மனம் வராமல் அவர்கள் இருப்பது மிக, மிக வருத்தத்தை எனக்கு அளிக்கின்றது. நேற்றைக்கு நம்முடைய தோழமைக் கட்சியினுடைய தலைவர்கள் எல்லாம் இங்கே சொன்னார்கள். நடந்தவற்றை மறந்துவிட்டு, பெருந்தன்மையோடு இந்த மாமன்றம், ஏற்கெனவே இங்கு தவறாக நடந்துகொண்ட எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களை உள்ளே அனுமதிக்க வேண்டும்; அதற்கு ஆளுங்கட்சியும், அவைத் தலைவரும் இணங்க வேண்டும் என்று தங்களுடைய கருத்தை அழுத்தம் திருத்தமாக உரிமையோடு வலியுறுத்தினார்கள். அதை நான் ஏற்றுக்கொண்ட ஒரே குற்றத்திற்காக என்மீது இன்று உரிமைப் பிரச்சினை, எதிர்க்கட்சியினரால் கொண்டு வரப்படுவதாக நான் அறிகிறேன்.

*முற்பகல் 10-35*

நாம், உரிமைகளுக்காக வாதாடுகின்றவர்கள், உரிமைகளுக்காகப் போராடியவர்கள், போராடிக் கொண்டிருப்பவர்கள். உரிமைகளுக்காகப் போராடித்தான் இந்தத் கோட்டையிலே பறந்துகொண்டிருக்கிற தேசியக் கொடியைக்கூட முதலமைச்சர்தான் ஏற்றி வைக்க வேண்டுமென்ற உரிமையை (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே முதன் முதலாகப் பெற்ற மாநிலம் தமிழ் நாடுதான் என்ற அளவிலே, அந்தப் பெருமைபெற்ற நாம், உரிமைப் பிரச்சினைக்காக அஞ்சி நடுங்கப் போவதில்லை; வருந்தப் போவதில்லை. ஆனால், எதையோ ஒன்றை நினைத்துக்கொண்டு, எதையோ ஒன்றைக் கெடுத்துவிட வேண்டுமென்று எண்ணுகின்ற போக்கு நல்லதல்ல. யாரோ சொன்னார் என்பதற்காக இந்த



அவையிலே தெளிவுபெற்ற உறுப்பினர்கள், எதிர்க்கட்சி உறுப்பினர்கள், இங்கே பொறுப்புள்ள பதவிகளிலே அமர்ந்திருந்தவர்கள் எல்லாம்கூட, ஒரு கட்டளை எங்கிருந்து வந்தாலும், வந்த கட்டளை சரியான கட்டளைதானா, அல்லவா என்பதைப்பற்றிக்கூடச் சீர்தூக்கிப் பார்க்காமல், எந்தக் கட்டளையானாலும் நாங்கள் ஏற்றுக்கொண்டு, இங்கே நடத்த வேண்டிய அசம்பாவிதத்தை நடத்துகிறோம் என்று வருவது ஜனநாயகத்திற்கு ஆரோக்கியமானதல்ல.

எல்லாவற்றையும் ஒன்றுபோலக் கருதக் கூடாது. தெனாலி இராமன் கதையிலே ஒன்று சொல்வார்கள். தெனாலி இராமன், இராஜா சென்ற குதிரைக்குப் பின்னால் சென்றுகொண்டிருந்தான். அப்போது இராஜா, தன்னுடைய நகை நட்டுகளோ, குதிரை பாய்ந்து போகின்ற வேகத்தில் கிரீடத்தில் இருக்கிற முத்துக்களோ, கழுத்தில் இருக்கிற மணி ஆரங்களோ, மணி ஆரங்களிலே பதிக்கப்பட்டிருக்கிற நவரத்தினங்களோ சிந்தக்கூடும் என்ற நினைப்பில், தெனாலி இராமனைப் பார்த்து, "குதிரைக்குப் பின்னால் ஓடி வருகிறாய்; விழுவதையெல்லாம் பொறுக்கிக்கொண்டு வா" என்று சொல்லிவிட்டு, பயணத்தை ஆரம்பித்தார். தெனாலி இராமன் பின்னாலே வந்தான். இராஜா போய்ச் சேர வேண்டிய இடத்திற்குப் போய்ச் சேர்ந்தார். "என்ன, கீழே விழுந்ததை எல்லாம் பொறுக்கிக்கொண்டு வந்தாயா?" என்றார். மூட்டை ஒன்றை அவிழ்த்துக் காட்டினான். பார்த்தால் அத்தனையும் குதிரை லத்தியாக இருந்தது. (சிரிப்பு) "என்னப்பா இதையா பொறுக்கிக்கொண்டு வந்தாய்?" என்று கேட்டார். "நீங்கள்தானே கீழே விழுவதையெல்லாம் பொறுக்கிக்கொண்டு வரச் சொன்னீர்கள்? ஆகவே, நான் இதைப் பொறுக்கிக்கொண்டு வந்தேன்" என்று சொன்னான். "இதையா பொறுக்கிக்கொண்டு வந்தாய்?" என்று கேட்டார். அப்படி ஒரு கதை இங்கே நடக்கக் கூடாது என்கிற எண்ணத்திலேதான் நான் இந்தக் கதையைக் கோடிட்டுக் காட்டினேன்.

அதுபோல, எதைச் சொன்னாலும் அதைப்பற்றி ஆராயாமல், சிந்திக்காமல்—நம்மை உருவாக்கிய தந்தை பெரியார் அவர்களே, "அவர் சொன்னார், இவர் சொன்னார் என்று அறிவிழந்து தடுமாற்றம் அடைய வேண்டாம். எவர் சொன்ன சொல்லானாலும், அதை உன் பகுத்தறிவால் எண்ணிப் பார்ப்பாய்" என்று சொன்னார்—இயல்பான பகுத்தறிவால் எண்ணிப் பார்க்கக்கூட நேரமில்லாமல், அந்தப் பகுத்தறிவால் எண்ணிப் பார்க்கக்கூட நேரமில்லாமல், எப்படியோ இன்றைக்கு இன்னின்ன நினைப்பு இல்லாமல் எப்படியோ இன்றைக்கு இன்னின்ன தீர்மானங்கள் வருகின்றன, அவற்றையெல்லாம் ஒரேயடியாக ஒரே வெட்டிலே சாய்த்துவிடவேண்டும் என்பதற்காக முறையற்ற

வகையில், ஒரு தீர்மானத்தைக் கொடுத்து, நேற்றைக்கு அறிவிக்கப்படாமல், இன்றைக்குத் திடீரென்று அறிவிக்கப்பட்டு, முதலமைச்சர்மீது உரிமைப் பிரச்சினை கொடுத்திருக்கிறோம்—ஏன், எதற்காக என்றெல்லாம் கிடையாது—எடுத்துக்கொள்கிறீர்களா, இல்லையா என்று கேட்டு, நாளைக்கு எடுத்துக்கொள்கிறேன் என்று சபாநாயகர் சொல்கிறார். அப்போதுகூட முடியாது என்று அவரும் சொல்லவில்லை. ஆளும் தரப்பிலிருந்து யாரும் சொல்லவில்லை. அப்படி இருந்தும்கூட, "நீங்கள் முடியாது என்று சொல்லாவிட்டாலும்கூட, அப்படிச் சொன்னதாக நாங்கள் கருதிக்கொண்டு வெளியேறுகிறோம்" என்று வெளியேறியதற்குக் காரணம், வரப் போகின்ற சங்கடமான பல பிரச்சினைகளைச் சந்திக்க முடியாமல் அவர்கள் தங்களை இங்கிருந்து ஒதுக்கிக்கொண்டிருக்கிறார்கள், இன்றைய இந்த சட்டமன்றத்திலிருந்து என்பதைத் தவிர வேறு இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

என்னென்ன தலைப்பிலே இன்றைக்குப் பிரச்சினைகள் வருகின்றன என்று அவர்களுக்குத் தெரியும். தெரிந்தபிறகு, அதிலே தங்கள் நிலை என்ன என்பதை எடுத்துச் சொல்ல பயம். இன்றைக்கு 'விடுதலைப் புலிகளை ஆதரித்துத்தான் தீருவோம், எது வேண்டுமானாலும் எங்களைச் செய்யுங்கள்; பார்க்கலாம் ஒரு கை' என்கின்ற அறைகூவல் பத்திரிகையிலே வந்திருக்கிறது. அந்தப் பத்திரிகை சாதாரண பத்திரிகை அல்ல. தினத்தந்தியிலே வந்திருக்கிறது; 'விடுதலைப் புலிகளை நாங்கள் என்றும் ஆதரிப்போம்; இலங்கையிலே இறுதிப் போர் நெருங்கி வருகிறது; என்றும் ஆதரிப்போம்' என்று இருக்கிறது. அதிலே திரு. ஞானசேகரன் குறிப்பிட்டதைப்போல, அவர்களுடைய கட்சியைச் சேர்ந்த சீமா பஷீரை வேண்டுமென்றே பழிவாங்குவதற்காகக் கைது செய்திருக்கிறோம் என்றெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது. சீமா பஷீர் கைது செய்யப்படுவதற்கு முதல் நாளே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் வட சென்னை மாவட்டக் கழகத்தினுடைய பிரதிநிதி இதயதுல்லா என்கின்ற நண்பர் இதே குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டிருக்கிறார் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். எவ்வளவு நடுநிலையோடு சட்டம்-ஒழுங்கு, அமைதியைக் காப்பாற்றுவதற்காக இந்த அரசு பணியாற்றுகிறது என்பதற்கு அதைவிட வேறு சான்று இருக்கமுடியாது. எனவேதான், நான் இங்கே குறிப்பிட விரும்புவது, நம்முடைய எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள், பேரவை விதி 56-ன்கீழ் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தை இந்த அவைக்கு அளித்து, அதைப்பற்றிப் பேசாமலேயே அவையிலிருந்து வெளிநடப்புச் செய்துவிட்டார்கள்.



*முற்பகல் 10-40*

*(அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும் அவைக்குள் வந்தனர்.)*

ஒருவேளை மீண்டும் வந்திருப்பது அதைப்பற்றிப் பேசுவதற்காக இருக்கலாமென்று நான் எதிர்பார்க்கிறேன்; பேசாமலே போய்விட்டார்கள். அதிலே என்ன குறிப்பிடுகிறார் என்றால், அவர்கள் குறிப்பிட்டிருப்பதும் மற்றும் பல உறுப்பினர்கள் குறிப்பிட்டிருப்பதும் ஒரே வாசகம் என்ற காரணத்தால், நான் அதைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

"4-3-2007 அன்று 'கிருஷ்ணா' என்ற விசைப் படகில் மீன் பிடிக்கச் சென்று, காணாமல் போன கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த தமிழக மீனவர்கள் மொத்தம் 12 பேர் இலங்கையில் உள்ளதாகத் தெரிகிறது. தமிழக மீனவ மக்களின் பதற்றத்தைத் தவிர்க்கும்பொருட்டு, உடனடியாக இலங்கையிலே உள்ள தமிழக மீனவர்களை மீட்டு, தமிழகம் கொண்டுவர வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க" என்று குறிப்பிட்டுக் கொடுத்திருக்கின்றார்கள். இதே கருத்தில் அமைந்த ஒத்திவைப்புத் தீர்மானங்களை, அவசரத் தீர்மானங்களை, கவன ஈர்ப்புத் தீர்மானங்களைத் தோழமைக் கட்சியினுடைய தலைவர்களும் இங்கே வழங்கியிருக்கின்றார்கள். நான் அவர்களுக்கெல்லாம் தருகின்ற விளக்கக் குறிப்பு இது.

கடந்த 4-3-2007 அன்று, கன்னியாகுமரியைச் சார்ந்த 10 மீனவர்கள், தூத்துக்குடியைச் சேர்ந்த ஒருவர் மற்றும் கேரள மாநிலத்தைச் சேர்ந்த ஒருவர் ஆகிய 12 மீனவர்கள், கடலில் மீன் பிடிக்கச் சென்று, இன்றுவரை திரும்பவில்லை என்ற தகவல் ஏற்கெனவே நமக்கு வந்து, காணாமல் சென்ற மீனவர்களின் குடும்பத்திற்கு, அரசு மாதாந்திர உதவியைச் செய்யவேண்டுமென்று சட்டப் பேரவை உறுப்பினர்கள் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் போன்றவர்கள், திரு. கி. ஆறுமுகம் போன்றவர்கள் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில், உள் துறை மானியத்தின்மீதான விவாதத்திற்கு நான் பதிலளிக்கும்போது, அவர்களுடைய குடும்பத்திற்கு மாதந்தோறும் தலா 1,500/- ரூபாய் அரசின் சார்பாக வழங்கப்படும் என்று அறிவித்து, அவர்களைக் கண்டுபிடிக்கும் பணி தொடரும் என்றும் குறிப்பிட்டிருந்தேன்.

[கலைஞர் மு. கருணாநிதி] [2007 ஏப்ரல் 28

தற்போது வந்துள்ள முதற்கட்ட விசாரணையின் தகவல் அடிப்படையில், காணாமல் போன இந்த 12 மீனவர்களும், இலங்கைக் கடல் புலிகளின் ஒரு குழுவினரால் சிறைப்பிடிக்கப்பட்டு, விடுதலைப் புலிகளின் ஒரு முகாமில், பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார்கள் என்று தெரிய வருகிறது. அன்றைக்கு நண்பர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள் பேசும்போது, நான் அதற்கு பதிலளிக்கும்விதமாக, இங்கே எடுத்துச்சொன்ன கருத்து, 'திரு. ஞானசேகரன், மானியக் கோரிக்கையினுடைய 4 பக்கங்களைப் படித்துவிட்டு, அதிலே உள்ள தீவிரவாதிகளையெல்லாம், புலிகள் என்று சொல்லிவிட்டார்' என்று குறிப்பிட்டேன்.

அந்த நேரம் வரையில் எனக்குக் கிடைத்த தகவலின்படி, என்னால் அதைத்தான் சொல்ல முடிந்தது. ஓர் அரசின் சார்பாக, பொறுப்புள்ள ஓர் இடத்திலேயிருக்கிற நான் சொல்லும்போது, அதிலே அவசரப்பட்டுச் சொல்லக்கூடாது என்பதற்காகத்தான், அன்றைக்கு நான் அதை அந்தளவிலே மறுத்தேன். ஆனால், இப்பொழுது வந்திருக்கின்ற தகவல், ஊர்ஜிதப்படுத்தப்பட்ட தகவல்; 12 மீனவர்களும் இலங்கைக் கடல் புலிகளால், புலிகளின் ஒரு குழுவினரால் சிறைப்பிடிக்கப்பட்டு, விடுதலைப் புலிகளின் ஒரு முகாமிலே, பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார்கள் என்று தெரியவருகிறது. மேலும், 29-3-2007 அன்று, கன்னியாகுமரியைச் சேர்ந்த 5 மீனவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்திற்கும், இந்தக் கடல் புலிகளின் குழுதான் பொறுப்பு என்று முதற்கட்ட விசாரணையில் தெரியவருகிறது.

இந்தியக் கடலோரப் பாதுகாப்புப் படையினரால், கடந்த 11-4-2007 அன்று பிடிக்கப்பட்ட பழுதடைந்த 'மரியா' என்ற படகிலிருந்த இலங்கையைச் சேர்ந்த 6 நபர்களை விசாரணை செய்ததன் அடிப்படையில், மேற்கண்ட தகவல்கள் தற்போது கிடைத்துள்ளன. விசாரணை தொடர்ந்து, 'Q' பிரிவினரால் நடத்தப்பட்டு வருகிறது. கடல் புலிகளால் சிறைப்பிடிக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் 12 மீனவர்களை விடுவிக்க, தமிழக அரசு மத்திய அரசின்மூலமாக அனைத்து முயற்சிகளையும் உடனடியாக மேற்கொள்ளும். இதற்குமுன்பு நமக்குக் கிடைத்த தகவலின்படி நடைபெற்ற இச்சம்பவம் இலங்கைக் கடற்படையினரால் நடத்தப்பட்டதாகக் கருதிக்கொண்டு, அந்தத் தகவலை மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு சென்றோம். மேலும், பிரதமருக்கு நான் முன்பு எழுதிய கடிதத்தில், இந்தச் சம்பவம் குறித்த விசாரணை



2007 ஏப்ரல் 28] [கலைஞர் மு. கருணாநிதி]

முடுக்கிவிடப்பட்டு நமது மீனவர்களைத் தாக்கியவர்களின் அடையாளம் கண்டுபிடிக்கப்பட வேண்டுமென்றும், நமது மாநிலத்தின் கடலோரப் பகுதிகளில் நமது கடலோரப் பாதுகாப்புப் படைகள் மூலமாகவும், கடற்படை மூலமாகவும், கடல்சார்ந்த மற்றும் வான்வழியிலான கண்காணிப்புப் பணிகள் தீவிரப்படுத்தப்பட வேண்டுமென்றும், மாநிலத்தின் மொத்த கடற்பரப்புப் பகுதி ஒரே நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட வேண்டுமென்றும் வலியுறுத்தியிருந்தேன்.

*முற்பகல் 10-45*

இதைத் தொடர்ந்து 3-4-2007 அன்று மாண்புமிகு பிரதம அமைச்சருக்கு நான் எழுதிய கடிதத்தில், தூத்துக்குடியில் கடலோரக் கண்காணிப்புக் கப்பல்—Off-shore Patrol Vessel-ல் Helicopter வைக்கப்பட வேண்டுமென்றும், தூத்துக்குடி விமான நிலையத்தில் எரிபொருள் நிரப்ப வசதி அமைத்து கடலோரக் காவல் படை அதனைப் பயன்படுத்துவதற்கும், கன்னியாகுமரியிலே கடலோரக் காவல் படை நிலையம் ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்றும், 55 கோடி ரூபாயில் மாநில மீன் வளத் துறைக்கு Seamless Communication Project-க்கு ஒப்புதல் அளிக்க வேண்டுமென்றும் வலியுறுத்தியிருக்கிறோம்.

தமிழகத்திலேயுள்ள அனைத்துக் கட்சிகளுமே, இதுவரை இந்தச் சம்பவத்திற்கு இலங்கைக் கடற்படையினர்தான் காரணம் என்று கருதியதற்கு மாறாக, நாம் அனைவரும் அதிர்ச்சியடையத்தக்கவகையில் இதிலே விடுதலைப் புலிகளுக்குச் சம்பந்தம் உண்டு என்ற இந்தச் செய்தி கிடைத்துள்ளது என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விதி 56-ன்கீழ், காவல் துறை அதிகாரிகளும் மற்றும் அரசுப் பொறுப்பிலுள்ள அதிகாரிகளும் கடும் விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என... (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** ஓர் அறிக்கை விட்டு... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்றவர்கள் உட்காருங்கள். Sir, உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) One minute, உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

[2007 ஏப்ரல் 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், நான் உங்களைப் பார்த்தேன்; ஏதாவது கேட்கிறீர்களா என்று பார்த்தேன். நீங்கள் உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள். பிறகுதான் அடுத்த சப்ஜெட்டுக்குப் போனேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடுதலைப் புலிகளை என்றும் தொடர்ந்து நாங்கள் ஆதரிப்போம் என்று சொல்லுகிற ம.தி.மு.க.வினுடைய பொதுச் செயலாளர் திரு. வைகோ அவர்களைக் கைது செய்ய வேண்டும் என்கிற ஒரு கோரிக்கையை நான் இந்த அவையிலே வைத்தேன். அதற்குப் பதில் இல்லை. தொடர்ந்து இப்படி விடுதலைப் புலிகளை ஆதரிக்கக்கூடிய இயக்கங்கள் இன்று இருக்கிற காரணத்தினாலேதான் இப்போது *5* அப்பாவி குமரி மாவட்ட மீனவர்கள் விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்டிருக்கிறார்கள். *11* தமிழ் மீனவர்கள் இன்று சிறைப்படுத்தி, விடுதலைப் புலிகளாலே முகாமிலே வைக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தெரிவித்துக் கொண்டிருக்கக்கூடிய இதுபோன்ற இயக்கங்களைத் தடை செய்து தலைவர்களைக் கைது செய்வதற்கு தமிழக அரசு எடுக்கப் போகிற நடவடிக்கை என்ன என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** இந்தச் செய்திகள் பற்றியும், இதுபற்றி இன்று அவையிலே எழுப்பப்பட்டுள்ள பிரச்சினை குறித்தும், மாண்புமிகு உறுப்பினர்கள் வழங்கியுள்ள கருத்துகள் குறித்தும், இவற்றையெல்லாம் தொகுத்து மத்திய அரசிடத்திலே கருத்துகள் பற்றியும், நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

### (இ) காவல் துறை அதிகாரிகள் மற்றும் அரசு அலுவலர்களுக்கு எதிர்க்கட்சித் தலைவர் விடுத்துள்ள எச்சரிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காவல் துறை அதிகாரிகளும் மற்றும் அரசுப் பொறுப்பிலுள்ள அதிகாரிகளும் கடும் விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என முன்னாள் முதலமைச்சர் அவர்கள் அறிக்கை வெளியிட்டிருப்பது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள்



2007 ஏப்ரல் 28] [பேரவைத் தலைவர்]

திரு. டி. சுதர்சனம், திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், திரு. சி. ஞானசேகரன், திரு. கோவை தங்கம் ஆகியோர் இந்திய தேசிய காங்கிரசின் சார்பாகவும், மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜி.கே. மணி, திரு. தி. வேல்முருகன் ஆகியோர் பாட்டாளி மக்கள் கட்சி சார்பாகவும், திரு. வை. சிவபுண்ணியம் கம்யூனிஸ்ட் கட்சி சார்பாகவும் விதி *56*-ன்கீழ் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். இதனைத் தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்துக் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாகப் பேசலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம். (குறுக்கீடுகள்) திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) முன்னாள் முதலமைச்சர் (கூச்சல்-குழப்பம்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதலமைச்சரும், (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள், எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் துணைத் தலைவர், அவரா? இல்லை, வேறு யாருமா? அவர் மாத்திரம் எழுந்து நிற்கவேண்டும். *60* பேரும் எழுந்து நின்றால், அதையெல்லாம் allow பண்ண முடியாது. எதிர்க்கட்சித் துணைத் தலைவர், சொல்லுங்கள், என்னவென்று சொல்லுங்கள்.

***திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மாவினுடைய கடந்த ஆட்சிக் காலத்தில், எதிர்க்கட்சியினுடைய தலைவரோ, துணைத் தலைவரோ எழுந்து நின்றால், சபாநாயகர் வாய்ப்புக் கொடுக்க முடியாது என்றோ, அடுத்தவரைக் கூப்பிட்டார் என்றோ வரலாறே இதுவரை இல்லை.

*முற்பகல் 10-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அறுபது பேரும் எழுந்து நின்றால் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) அனுமதிக்க முடியாது. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா ஆட்சியில் எதிர்க்கட்சித் தலைவரே எழுந்து நின்றபோது, உங்களை அனுமதிக்க முடியாது என்று அன்றைய சபாநாயகர் காளிமுத்து அவர்கள் சொன்னது மட்டுமல்ல,

[பேராசிரியர் க. அன்பழகன்] [2007 ஏப்ரல் 28

அம்மா சொல்வதைத்தான் நான் இங்கே சபாநாயகர் என்ற முறையில் செய்வேனேதவிர, மற்றவர்கள் சொல்வதைப்பற்றி நீதி வழங்க என்னால் இயலாது என்று தன்னுடைய இயலாமையையும் காளிமுத்து அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அப்போது அம்மாவேதான் சபாநாயகர், முதலமைச்சர் மட்டுமல்ல. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மாவினுடைய கடந்த ஆட்சிக் காலத்தில் சட்டமன்றக் கூட்டங்களில் எதிர்க்கட்சியினுடைய தலைவரோ, துணைத் தலைவரோ எழுந்து நின்று பேசினால், என்ன பேசினார் என்று கேட்டு, அந்தப் பேச்சிற்குப் பிறகுதான் சபாநாயகர் தீர்ப்புக் கூறியிருக்கின்றாரேயொழிய, எழுந்துநின்று பேசுவதற்கே வாய்ப்பு கொடுக்காதவாறு மற்றவர்களைக் கூப்பிட்டதாகச் சரித்திரமில்லை என்றுதான் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு சரித்திர நிகழ்ச்சியை மட்டும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் அப்போது இருந்த உறுப்பினர் டாக்டர் குமாரதாஸ் என்பவர் 'கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை' என்று சொன்னார். உடனடியாக சபாநாயகர் அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து எடுக்கிறேன், கழுதை என்பது தேவையில்லாத வார்த்தை என்று சொன்னார். அப்படிச் சொல்லி அவைக்குறிப்பிலிருந்து எடுக்கப்பட்டுவிட்டது. உடனே முதலமைச்சர் எழுந்திருந்து 'கழுதை என்பது உழைப்பின் சின்னம்; அந்தப் பெயர் அதிலே இருக்கலாம்' என்று சொன்னதற்குப் பிறகு சபாநாயகர் உடனே மாற்றிக்கொண்டு கழுதை என்ற வார்த்தை சபைக் குறிப்பிலே இருக்கலாம் என்று சொன்னதெல்லாம் வரலாற்றிலே உண்டு. ஆகவே, முதலமைச்சரே சபாநாயகராகச் செயல்பட்டதுதான் வரலாறு. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர், உங்களை நான் இரண்டு தடவை பேசச் சொல்லியாகிவிட்டது. உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நான் ஒரு கருத்தைச் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வந்த



2007 ஏப்ரல் 28] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

கருத்தும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்தும் வேறுவேறானவை. நான் மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்கின்றேன். அதாவது, வெளியில் எந்தக் கட்சித் தலைவராவது அறிக்கை கொடுத்தால் அதைச் சட்டமன்றத்திலே கொண்டுவந்து பேசுவதற்கு நீங்கள் அனைவருக்கும் இடம் கொடுக்கிறீர்களா என்பதைத்தான் கேட்கின்றேன். இதற்கு முன்னால் அந்தமாதிரி நடைமுறை இருந்திருக்கிறதா? (குறுக்கீடுகள்) வெளியில் கொடுத்த அறிக்கை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளியிலேயும், நாட்டிலேயும், உலகத்திலேயும் யார் எந்த அறிக்கை கொடுத்தாலும் அந்த அறிக்கையைப் பற்றிய கருத்தைச் சொல்ல சட்டமன்றத்திற்கு உரிமையுண்டு. சட்டமன்றத்திலே வெளியிலே உள்ளவர்கள் பேசுவதையும் இங்கே எடுத்துக்கொள்ளலாம். இந்த அவையில் பதில் கூற முடியாதவர்களைக் குற்றஞ்சாட்டிப் பேசுவதற்குமட்டும்தான் இந்த அவையிலே இடமில்லை. ஆனால், சட்டமன்றத்திலே எதிர்க்கட்சித் தலைவராக இருப்பவருடைய அறிக்கையைப்பற்றி, சட்டமன்றத்திலே பேசலாமா கூடாதா என்பதும், சட்டமன்றத்திலே எதிர்க் கட்சியினுடைய தலைவராக உள்ளவர் வெளியிலே அறிக்கைக் கொடுத்தால்கூட கொடுத்த அறிக்கையைப்பற்றி சட்டமன்றத்திலே பேசலாமா என்று கேட்பதும் ஆச்சரியமானது. அதிலேயும் அரசாங்கத்திலே உள்ள அதிகாரிகளைப்பற்றி யார் என்ன சொன்னாலும் இந்த அவையில் எடுத்துக்கொண்டு விவாதிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால ஆட்சியிலேயே அப்போது அவர்களுக்கு ஆதரவாக இருந்த சந்தானம் என்ற உறுப்பினர், இன்றைய முதல்வர் அவர்கள் முரசொலியிலே எழுதிய கட்டுரையையே எடுத்து படித்துக் காண்பித்து—இங்கே இருக்கிற எதிர்க்கட்சித் தலைவர்கள் அனைவருக்கும் தெரியும்—அதையே விமர்சனம் செய்தது, இந்தச் சட்டசபையிலே அனுமதிக்கப்பட்டது. பத்திரிகையிலே இருந்தவர், ஒரு பொறுப்புள்ள எதிர்க்கட்சித் தலைவர் பேசலாமா என்றுகூடக் கேட்டு

[டாக்டர் க. பொன்முடி] [2007 ஏப்ரல் 28

எல்லா விவாதமும் நடந்ததை இவ்வளவு எளிதாக, சீக்கிரமாக உங்கள் வசதிக்கு ஏற்ப மறந்துவிடக்கூடாது. History repeats itself. வரலாறு திரும்ப நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இருந்தாலும் தலைவர் கலைஞர் அவர்கள் அந்த வரலாறுகள் திரும்பிவிடக் கூடாது என்று மிகுந்த நேர்மையோடு ஆட்சி நடத்திக்கொண்டிருப்பதை இப்போது இருக்கிற நடுநிலையாளர்கள் நிச்சயமாகப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பீட்டர் அல்போன்ஸ். (குறுக்கீடுகள்) திரு. செங்கோட்டையன், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேசிவிட்டார். திரும்பத் திரும்ப அவையினுடைய நேரத்தை விணாக்க நான் விரும்பவில்லை. உட்காருங்கள். திரு. பீட்டர் அல்போன்ஸ், நீங்கள் பேசுங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான செய்தி குறித்து உங்கள்மூலமாக இந்த அவையினுடைய கவனத்தை நான் கோர விரும்புகிறேன். நேற்றையதினம் முன்னாள் முதலமைச்சரும் இன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பத்திரிகைகளுக்கு ஓர் அறிக்கையினைத் தந்திருக்கிறார்கள். முதலமைச்சர் பெயரைச் சொல்லி அவர்களுக்கு ஆதரவாகச் செயல்படும் அரசு அலுவலர்களையும், காவல் துறையையும் எச்சரித்திருக்கிறார்கள். நாடாளுமன்ற ஜனநாயகத்தில் நம்பிக்கை உள்ளவர்கள் வெட்கப்படுகின்ற வகையில், சொல்லவே வாய் கூசும் வார்த்தைகளைப் பயன்படுத்தி, மத்திய அரசைப் பற்றி, மேதகு ஆளுநர் அவர்களைப் பற்றி, காவல் துறைத் தலைவரைப் பற்றி சொல்லக்கூடாத கருத்துகளையெல்லாம் சொல்லியுள்ளார்கள். அதிலே சில பகுதிகளை இந்த அவையினுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

*முற்பகல் 10-55*

நான் முதலமைச்சர் அவர்களுடைய பெயரைச் சொல்ல மாட்டேன்; மரியாதை நிமித்தமாக. அவர்களுடைய தகுதி, அவர்களுடைய வயது, அவர்கள் தமிழகத்திற்கு ஆற்றியிருக்கின்ற பணியினுடைய தன்மை காரணமாக, நான் எதிர்க்கட்சியாக இருந்தபோதுகூட அந்தப் பெயரை நான் சொன்னதில்லை. இன்று இந்த அவையினுடைய தேவைக்காக நான் அதை வாசித்துக் காண்பிக்க ஆசைப்படுகிறேன்.



2007 ஏப்ரல் 28] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

"கருணாநிதிக்கு வாய்த்த அதிர்ஷ்டம் என்னவென்றால், இவரது அமைச்சரவையைப் போன்றே செயலிழந்த ஒரு கொள்ளைக்கார அமைச்சரவை மத்தியிலும் இருக்கிறது. இவர் குறிப்பறிந்து, பயந்து நடுங்கிச் செயல்படும் நபர் தமிழகத்தின் ஆளுநராக இருக்கிறார். இதனால், எதைப் பற்றியும் கவலைப்படாமல், கருணாநிதியினுடைய அவல ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது. இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டு ஒரு நடமாடும் பொம்மையாக காவல் துறைத் தலைமை இயக்குநர் இருந்துகொண்டிருக்கிறார். இப்படி ஒரு பாசிச, ஜனநாயக விரோதக் கொலைக் கும்பல் ஆட்சிக்கு, நாம் ஏன் துணை நிற்க வேண்டுமென்று காவல் துறையினர் என்றைக்கு நினைக்கிறார்களோ, அன்றைக்குத்தான் தமிழக மக்களுக்குப் பாதுகாப்பு ஏற்படும். கருணாநிதிதான் கதி என்று இனியும் இருந்தால், கருணாநிதி சொல்வதுதான் மந்திரம் என்று நினைத்து, மக்கள் விரோதப் பாணியில் செயல்பட்டால், அதற்கான கடும் விளைவுகளை அடுத்து அ.தி.மு.க. வரும் ஆட்சியில் கண்டிப்பாகச் சந்திக்க வேண்டியதிருக்கும். இதே எச்சரிக்கையைத்தான் மற்ற அரசுப் பொறுப்பில் உள்ள அதிகாரிகளுக்கும், அலுவலர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். வெகுவிரைவில் வர இருக்கின்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு, இந்த அவல நிலையைச் சீர்படுத்துவதற்கே பல மாதங்கள் ஆகும்" என்று இந்த அறிக்கையிலே தெரிவித்திருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசியல் சாசனச் சட்டம், முதலமைச்சருக்கு ஒரு தனி அந்தஸ்தினைத் தந்திருக்கிறது. முதலமைச்சருக்கு ஒரு அதிகார முத்திரையைத் தந்திருக்கிறது. இது, ஜனநாயகத்தில் எல்லா அதிகாரமும் மக்களுக்கே என்பதன் அடிப்படையிலே, மக்கள் தந்த வாக்குகளின் அடிப்படையில், மக்கள் தந்த அதிகாரத்தைச் செலுத்துகின்ற அல்லது அந்த அதிகாரத்தைப் பரிபாலிக்கின்ற அதிகார முத்திரையாக முதலமைச்சர் செயல்படுகிறார். அத்தகைய முதலமைச்சருக்கு ஆதரவாகச் செயல்படுவதும், அவர் ஆணையை ஏற்றுக்கொண்டு நடப்பதும், அவர் நினைப்பதைச் செயல்படுத்துவதும் உண்மையான அரசு அதிகாரிகளுடைய, காவல் துறையினருடைய கடமை. (மேசையைத் தட்டும் ஒலி) அதில் யாரும், எந்த அரசு அதிகாரியும், எந்த அலுவலரும், எந்தக் காவல் துறையைச் சார்ந்த அதிகாரிகளும் முதலமைச்சருடைய ஆணையைக் கேட்டு நடந்ததற்காக வெட்கப்படவும் அவசியமில்லை; வேதனைப்படவும் சட்டப்படி அவசியமில்லை. அதுதான் சட்டம். அதுதான் ஆணை.

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [2007 ஏப்ரல் 28

தமிழகத்திலே வேலை பார்க்கின்ற அரசு அதிகாரிகளோ அல்லது காவல் துறையைச் சார்ந்தவர்களோ, ஆந்திர மாநில முதலமைச்சர் இராஜசேகர ரெட்டி அவர்களுடைய ஆணையைக் கேட்டு நடந்தால், அது தவறு. கேரள மாநில முதலமைச்சர் மரியாதைக்குரிய அச்சுதானந்தன் அவர்களுடைய ஆணையைக் கேட்டு நடந்தால், அது தவறு. கர்நாடக மாநிலத்தினுடைய முதலமைச்சர் குமாரசாமி அவர்களுடைய ஆணையைக் கேட்டு நடந்தால், அது தவறு. தமிழகத்தினுடைய ஆறரை கோடி மக்களுடைய வாக்குகளைப் பெற்று, இந்திய நாட்டின் அரசியல் சாசனச் சட்டத்தின் அங்கீகாரம் பெற்று, தமிழக சட்டசபையினுடைய மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை அனுபவித்துக் கொண்டிருக்கின்ற சட்டபூர்வமான ஒரு முதலமைச்சருடைய ஆணையை ஏற்று நடப்பது தவறு என்று சொல்வது, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் சாசனச் சட்டத்திற்கு விரோதமான குற்றம். இந்த நாட்டில் வாக்களித்த மக்களைக் கொச்சைப்படுத்துகின்ற குற்றம்.

நான் இன்னும் ஒரு படி அதிகமாகச் சொல்வேன். நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வேன். ஓர் அரசு அதிகாரியை வேலை செய்ய விடாமல் தடுத்தாலோ அல்லது அவர்களை மிரட்டினாலோ அது இந்தியத் தண்டனைச் சட்டம் 353-ன்படி குற்றம். அத்தகைய குற்றம் இழைக்கப்பட்டிருக்கிறதா என்பதை இந்த அரசு ஆராய வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசுக்கு, அரசியல் சாசனச் சட்டப்படி பதவியேற்றிருக்கிற அரசுக்கு விரோதமாக, நிர்வாகத்தைத் தூண்டிவிடுவது, treason அதாவது, தேச துரோகக் குற்றம், இராஜ துரோகக் குற்றம். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி எதற்காகச் செய்கிறார்கள்? இந்த அரசைச் செயல்படவிடாமல் முடக்க வேண்டுமென்று நினைக்கிறார்கள். அரசு நலப் பணிகள் நடக்கக்கூடாது என்று எண்ணுகிறார்கள். கடந்த 9, 10 மாதங்களாக நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். இதை அரசியல் ரீதியாக முடக்க நினைத்தார்கள். இந்த அரசை சிறுபான்மை அரசு என்று சொல்லி, தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மத்தியிலே, பெரும்பான்மை இல்லாத அரசு என்று சொல்லி,... (குறுக்கீடுகள்)

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பீட்டர் அல்போன்ஸ், சப்ஜெக்ட்டைப் பற்றி மட்டும் பேசுங்கள். (குறுக்கீடுகள்)



2007 ஏப்ரல் 28]

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் சப்ஜெக்ட்டைப் பற்றித்தான் பேசுகிறேன். (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், மற்றவர்கள் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. பீட்டர் அல்போன்ஸ், சுருக்கமாகச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் ரீதியாக (குறுக்கீடுகள்) இந்த அரசை முடக்க நினைத்தவர்கள்...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர் மற்றும் கொறடா, நீங்கள் இரண்டு பேரும் என்ன பேசுகிறீர்கள் என்று எனக்கு எப்படித் தெரியும்? (குறுக்கீடுகள்) திரு. பீட்டர் அல்போன்ஸ், சப்ஜெக்ட்டை மட்டும் பேசி, சுருக்கமாக முடியுங்கள். (குறுக்கீடுகள்) சுருக்கமாகச் சொல்லுங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்) அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவரால் அனுமதிக்கப்பட்டு, ஒரு பிரச்சினையை எழுப்பிய உறுப்பினர் ஓர் அறிக்கையைப் படித்துக்காட்டி, அந்த அறிக்கையினுடைய விளைவுகளைப்பற்றி இந்த அரசாங்கத்திற்கு மட்டுமல்ல, அரசியல் சட்டத்திற்கே மாறாக இருக்கிறது என்பதை அவர் விளக்குகிறார் என்றால், அதை விளக்குவதற்கு உரிமை இருக்கிறது. விளக்குகிறபோதுகூட ஏற்கெனவே (குறுக்கீடுகள்) தாராளமாக உரிமை இருக்கிறது. முறை தவறான வார்த்தை சொன்னால்தான், unparliamentary word. முறைதவறாக யாரையாவதுபற்றி அவர் இந்தப் பேச்சிலே கூறினால், அதைத்தான் பேரவை தடுக்கலாமே தவிர, முறையோடு கருத்துகளைச் சொல்கிறபோது பேரவையிலே அதை அனுமதிக்க வேண்டுமே தவிர, தடுக்க நியாயம் இல்லை. (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று குறுக்கிட்டனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) சொல்கிறேன் கேளுங்கள். (குறுக்கீடுகள்) அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடுகள்) அதற்குப் பிறகு நீங்கள் சொல்லுங்கள்.

(குறுக்கீடுகள்) திரு. பீட்டர் அல்போன்ஸ், சுருக்கமாகச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசைப் பார்த்து (குறுக்கீடுகள்) ஒரு கொள்ளைக்கார அரசு என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த நாட்டிலே நடைபெறக்கூடிய மத்திய அரசைப்பற்றி உலகத்தில் இருக்கின்ற....(குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தங்களால் அனுமதிக்கப்பட்டு ஓர் உறுப்பினர் பேசுகிறபோது, எல்லோருமாக எழுந்து நின்று அவருடைய பேச்சைத் தடுக்க முனைவது தவறு. அவர் பேசி முடித்ததற்குப் பின்னர்தான் துணைத் தலைவராக இருந்தாலும், ஒரு அமைச்சராக இருந்தாலும்கூட, இன்னொரு பிரச்சினையை எழுப்பலாம். அவர் பேசிக்கொண்டிருக்கிற பிரச்சினையைப் பேசி முடித்த பிறகு மற்றவர்கள் பதில் சொல்லலாம். (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பிறகு பேசுங்கள். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) திரு. அப்பாவு, நீங்கள் அமைதியாக இருங்கள். மற்றவர்கள் எல்லோரும் அமைதியாக உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள், எதிர்க்கட்சித் தலைவர் விடுத்திருக்கின்ற ஓர் அறிக்கையைப்பற்றி, அதில் இருக்கின்ற உண்மைகளைப்பற்றி, இந்த ஆட்சியை மிரட்டுவதற்குப் பயன்படுத்தியிருக்கின்ற வார்த்தைகளைப்பற்றி விளக்கமாக எடுத்துச் சொல்கிறார். குறிப்பாக D.G.P. பற்றியும், ஆளுநரைப்பற்றியும், மத்திய அரசாங்கத்தைப்பற்றியும் எவ்வளவு இழிவாகச் சொல்ல முடியுமோ, அவ்வளவு கருத்துகளையும் அறிக்கையில் சொல்லியிருக்கிறார்.

அது குறித்து, இந்த மன்றத்திலே ஓர் உறுப்பினர் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, இதற்கு ஒரு முடிவு ஏற்பட வேண்டும் என்பதற்காகப் பேசுகின்ற நேரத்தில், சம்பந்தப்பட்டவர்கள் பதில்





சொல்ல வேண்டுமென்று சொன்னால், அவர் பேசி முடித்ததற்குப் பிறகுச் சொல்லலாம். ஆனால், அதை விடுத்து, 60 பேர் இருக்கிறோம் என்று சொல்லி, எல்லோரும் ஒன்றாக எழுந்து நின்றால் எப்படி இந்த அவையை நடத்துவது? நீங்கள்தான் அதற்கு ஒரு முடிவு செய்யவேண்டும். (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அவர் பேசிக்கொண்டிருக்கும்போது குறுக்கிட்டுப் பேசாதீர்கள். ஏதாவது பேசிக்கொண்டிருக்கும்போது குறுக்கிட்டுப் பேசாதீர்கள். ஏதாவது சொல்ல வேண்டும் என்றால் பிறகு சொல்லுங்கள். அவர் பேசி முடித்ததற்குப் பிறகு சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திரு. பீட்டர் அல்போன்ஸ், பேசுங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) அதுதான் மரபு. உங்களுக்குத் தெரியாதது அல்ல. நீங்கள் அமைச்சராக இருந்தவர்கள். ஓர் உறுப்பினர் பேசும்பொழுது குறுக்கிட்டு, அவை மரபை மீறிப் பேசாதீர்கள். (குறுக்கீடுகள்) முதலில் உட்காருங்கள். திரு. பீட்டர் அல்போன்ஸ், அந்த அறிக்கையில் இருக்கிற விஷயத்தை மட்டும் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) சுருக்கமாகச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மற்றவர்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடுகள்) திரு. பீட்டர் அல்போன்ஸ், பேசி முடியுங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிக்கையில் இருப்பதைத்தான் சொல்கிறேன். நான் சொன்ன கருத்து என்னவென்றால், இந்த ஆட்சியை, இந்த ஆட்சி அமைப்பை அரசியல் ரீதியாக முடக்க நினைத்தவர்கள், அதில் தோற்றுப் போய், இப்பொழுது நிர்வாக ரீதியாக அதை முடக்க முயற்சிக்கிறார்கள். (குறுக்கீடுகள்) நான் சொன்னதில் என்ன தவறு? (குறுக்கீடுகள்) இதில் என்ன தவறு? இந்த ஆட்சி ஏதோ நடக்க இயலாத ஆட்சியைப்போல, (குறுக்கீடுகள்) நாளையே போய் விடுகிற ஆட்சியைப்போல, அடுத்த நாளே இன்னொரு ஆட்சி வருவதைப்போல, (குறுக்கீடுகள்) மாயத் தோற்றத்தை உண்டுபண்ணி, அந்த மாயத் தோற்றத்தின் காரணமாக மக்கள் மத்தியிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ.ம. வேலுசாமி, திரு. சு.ப. வேலுமணி, திரு. ஜெயக்குமார், உங்களை எச்சரிக்கிறேன். ரொம்ப சத்தம் போடுகிறீர்கள், உட்காருங்கள்.

[2007 ஏப்ரல் 28

*முற்பகல் 11-05*

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மற்றவர்கள் மத்தியிலே ஒரு நிலையற்றத் தன்மையை உண்டு செய்ய நினைத்தவர்கள் கடந்த... *(குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். *(குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)* எல்லோரும் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)* உட்காருங்கள், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)*

**திரு. டி. ஜெயக்குமார்:** தலைவர் அவர்களே,... *(குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நானும் பார்க்கிறேன். *(குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)* பார்க்கிறேன். *(குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)* பார்க்கிறேன். *(குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)* பார்ப்போம்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே...

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** நான் பேசியபிறகு நீங்கள் பேசுங்கள். *(குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன், உட்காருங்கள். *(குறுக்கீடு)* உட்காருங்கள். *(குறுக்கீடு)* திரு. செங்கோட்டையன், உட்காருங்கள். *(குறுக்கீடு)* முடியாது. நீங்கள் பேசுங்கள். *(குறுக்கீடு)* உங்களுக்கு உள்ள ஒரு தர்மசங்கடமான நிலைமை எங்களுக்குத் தெரிகிறது. *(குறுக்கீடு)* திரு. பீட்டர் அல்போன்ஸ், *(குறுக்கீடு)* நீங்கள் பேசுங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசைப் பார்த்து கொள்ளைக்கார அரசு என்று சொல்லியிருக்கிறார்கள். *(குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்த அவைக்கு மட்டுமல்ல, தமிழகத்து மக்களுக்கே இந்த அவையின்மூலம் ஒரு கேள்வியைக் கேட்க ஆசைப்படுகிறேன். சுதந்திர இந்தியாவினுடைய வரலாற்றிலே முதல்முறையாக ஒரே ஆண்டில் தமிழகத்திற்கு 35 ஆயிரம் கோடி ரூபாயை அள்ளிக் கொடுத்த மத்திய அரசை, கொள்ளைக்கார அரசு என்று இவர்கள் சொன்னால் தமிழகத்து மக்கள் இவர்களை மன்னிப்பார்களா என்று மட்டும்தான் நான் கேட்க ஆசைப்படுகிறேன்.



2007 ஏப்ரல் 28] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த ஆளுநர் உரையின்மீது நடந்த விவாதமாக இருந்தாலும்சரி, பட்ஜெட்மீது நடந்த பொது விவாதமாக இருந்தாலும்சரி, ஒரு கருத்தை அழுத்தமாகச் சொன்னார்கள். மத்திய அரசோடு இணக்கமாகச் செயல்படுகிற மாநில அரசு இது. அதனால் பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய்களை நலத் திட்ட உதவிகளாகவும், கடன் உதவியாகவும், மானிய உதவியாகவும் பெறுகின்ற தமிழகத்திலே மகத்தான பொற்காலத்திலே வாழ்ந்துகொண்டிருக்கின்றோம் என்று தமிழக மக்கள் நினைத்துக்கொண்டிருக்கின்றார்கள். இந்தியாவில் இருக்கின்றவர்கள் மட்டுமல்ல, உலகத்திலே இருக்கின்ற ஜனநாயகத்தில் பற்றுகொண்ட அரசியல் தலைவர்கள், பிரதமர்கள், ஜனாதிபதிகள் யாரைக்கேட்டாலும், இந்தத் தேசத்திலே ஒரு நேர்மையான பிரதமர் இருக்கிறார் என்று சொன்னால், டாக்டர் மன்மோகன் சிங் என்பதை உலகமே ஒத்துக்கொண்டிருக்கின்றது. *(மேசையைத் தட்டும் ஒலி)* அவர் இன்று தூய்மையான அரசியல் வாழ்க்கைக்கு வழிகாட்டிக் கொண்டிருக்கின்றார். அவர்மீது அளவிற்கு அதிகமாக வருமானம் சேர்த்ததாக வழக்கு இருக்கிறதா, வருமான வரி கட்டவில்லையென்று வழக்கு இருக்கிறதா, *(குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)* தமிழ்நாட்டில் மட்டுமல்ல, *(குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)* தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியாவில் எங்கெல்லாம் குற்றவியல் நீதிமன்றங்கள் இருக்கின்றனவோ, அத்தனை நீதிமன்றங்களிலும் வழக்கு... *(குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சொல்கிறேன், கேளுங்கள். *(குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)* அது உங்களைப் பற்றிய குற்றச்சாட்டு இல்லை. *(குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)* உங்களைப் பற்றிய குற்றச்சாட்டு இல்லை. *(குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)* உட்காருங்கள். திரு. பீட்டர் அல்போன்ஸ், நீங்கள் சுருக்கமாகச் சொல்லுங்கள். *(குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)* எல்லோரும் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)* எல்லோரும் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)* உட்காருங்கள்.

*(குண்டூசி டப்பா ஒன்றினை அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர் திருமதி எஸ். தேன்மொழி முன்பக்கமாகத் தூக்கியெறிந்தார்)*

எதிர்க்கட்சித் துணைத் தலைவர், *(குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)* எதிர்க்கட்சித் துணைத் தலைவர், அந்தப் பொருள் உங்கள் பின்பக்க பகுதியிலிருந்துதான் போயிற்று. *(குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)* தூக்கி வீசப்பட்டதை நான் பார்த்தேன். *(குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)* தெரிகிறதா?

[2007 ஏப்ரல் 28

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** விசாரியுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விசாரியுங்கள் என்பதல்ல, நான்தான் பார்த்தேனே எங்கேயிருந்து அது போகிறது என்று. (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில், எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) முதலில் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) உங்களுடைய உறுப்பினர்களை முதலில் உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) சொல்கிறேன், சொல்கிறேன். நான் பார்த்துவிட்டேன் அந்தப் பக்கத்திலிருந்துதான் போடப்பட்டது. அது குறித்துப் பார்ப்போம். (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) நான் பார்த்துவிட்டுச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) ஆர். சின்னசாமி, சத்தம் போடக்கூடாது. (குறுக்கீடுகள்) நடவடிக்கை எடுப்பேன்.

*முற்பகல் 11-10*

எல்லோரும் உட்காருங்கள், எல்லோரும் உட்காருங்கள். உட்காருங்கள். (கூச்சல்-குழப்பம்) மாண்புமிகு உறுப்பினர் திருமதி தேன்மொழி, உங்கள் கையில் அது இருந்தது. (குறுக்கீடுகள்) உங்கள் கையில் இருந்ததை யாரிடம் கொடுத்தீர்கள் அல்லது நீங்கள் வீசினீர்களா? உங்கள் கையிலே இருந்ததை நான் பார்த்தேன். முதலில் அவர்கள் சொல்லட்டும். (கூச்சல்-குழப்பம்) உட்காருங்கள், திருமதி தேன்மொழி, உங்கள் கையில் அது இருந்தது. சொல்லுங்கள்.

**திருமதி எஸ். தேன்மொழி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் அங்கிருந்து இங்கு வந்து விழுந்தது. எல்லோரும் பார்த்தார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கலைராஜன், நீங்கள் உட்காருங்கள்.

**திருமதி எஸ். தேன்மொழி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு வந்து அது விழுந்ததனால்தான் நான் தூக்கிப் போட்டேன்.



2007 ஏப்ரல் 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்றவர்கள் எல்லோரும் உட்காருங்கள்.

**திருமதி எஸ். தேன்மொழி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லோரும் பார்த்தார்கள். இங்கு வந்து விழுந்ததனால்தான் நான் தூக்கிப்போட்டேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வீசியது நீங்களா, அல்லது யார்?

**திருமதி எஸ். தேன்மொழி:** எங்கிருந்து வந்ததோ, தெரியவில்லை. அந்தப் பக்கம் இருந்துதான் வந்தது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் கையில்தான் இருந்தது. அதை நான் பார்த்தேன். நான் பார்த்தேன். (குறுக்கீடுகள்) நான் பார்த்தேன், கேளுங்கள்...

**திருமதி எஸ். தேன்மொழி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர்களிடமே கேளுங்கள், இருந்ததா இல்லையா என்று. (குறுக்கீடுகள்) மற்றவர்கள் எல்லோரும் உட்காருங்கள். எல்லோரும் முதலில் உட்காருங்கள். (கூச்சல்-குழப்பம்) மாண்புமிகு உறுப்பினர்கள் அவ்வளவு பேரும் உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இருக்கட்டும், உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. சி. கோவிந்தசாமி, சொல்லுங்கள்.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சம்பவம் எதிர்பாராமல் நடந்த ஒரு சம்பவம். இதை ஒரு பிரச்சினை ஆக்க வேண்டாம் என்று நான் கருதுகிறேன். (கூச்சல்-குழப்பம்) அந்த குண்டூசி பாக்கெட் நம்முடைய உறுப்பினர் திரு. அருள் அன்பரசினுடைய மேசைமீது இருந்தது. அவருக்கே தெரியாமல் அவர் bag-ஐ எடுக்கிறபோது அந்த அட்டை பின்னாலே இருக்கிற உறுப்பினர் மேலே விழுந்து விட்டது. (குறுக்கீடுகள்) நான் சொல்லி முடிக்கிறேன். (குறுக்கீடுகள்) ஆகவே, தவறுதலாக அங்கே விழுந்ததனாலே, இங்கே இருந்து வீசினார்கள் என்று எண்ணி அவர்கள் திரும்ப இங்கு வீசி இருக்கிறார்கள். ஆகவே, அது எதேச்சையாக நடந்த சம்பவம்தான் என்பதை நான் பேரவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். நடந்த சம்பவம் அதுதான். (குறுக்கீடுகள்)

[2007 ஏப்ரல் 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படி என்றால், (கூச்சல் குழப்பம்) சொல்கிறேன் கேளுங்கள். எதிர்க்கட்சி துணைத் தலைவர், கொஞ்சம் கேளுங்கள். (கூச்சல்-குழப்பம்) அதாவது, அருள் அன்பரசு டேபிளிலே இருந்தது. அவர் எடுக்கும்போது, தவறுதலாக தேன்மொழி முன்னாலே. (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) எல்லோரும் கத்தினால் என்ன அர்த்தம்? நான் பேசுகிறேன் இல்லையா? உட்காருங்கள். தேன்மொழி முன்னாலே விழுந்திருக்கிறது. அதை எடுத்து அவர்கள் ரிப்போர்ட் பண்ணி இருக்கவேண்டும். அதை விட்டு விட்டு அவர்கள் ஏன் தூக்கி வீசுகிறார்கள்? (குறுக்கீடுகள்) ஏன் தூக்கி வீசுகிறார்கள்? (கூச்சல்-குழப்பம்) திரு. பீட்டர் அல்போன்ஸ், பேசுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திருமதி தேன்மொழி, இந்த மாதிரி நடவடிக்கைகள் இனி இருக்கக் கூடாது. ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) சரிதான். உட்காருங்கள். சரிதான், உட்காருங்கள். ஐயா. எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சரி, உட்காருங்கள், உட்காருங்கள். தெரியும், உட்காருங்கள். எல்லாம் தெரியும், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. துரைராஜ், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மத்திய அரசின்மீது இவர்களுக்கு ஏன் கோபம் வருகிறது என்று சொன்னால், மாநில அரசு கேட்கின்ற அத்தனை திட்டங்களையும், அத்தனை உதவிகளையும், இவர்கள் எழுதிய மையினுடைய ஈரம் காய்வதற்கு முன்னாலே மத்திய அரசு அனுப்பி வைக்கிறது என்கிற அந்த உணர்வின் காரணமாக மத்திய அரசின்மீது கோபம் வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இன்று மத்திய அரசை வழிகாட்டிக்கொண்டிருக்கின்ற—இன்று நீங்கள் பதவிக்காக கன்னியாகுமரியிலிருந்து டெல்லி வரை காவடி எடுக்கிறீர்கள். அலகாபாத்திலே போய் இந்தியிலே பேசுகிறீர்கள். (கூச்சல்-குழப்பம்) ஆனால், இந்த தேசத்தினுடைய பிரதமர் பதவி கொடுக்கப்பட்டபோதும்கூட, அந்தப் பதவி எனக்கு வேண்டாம் என்று சொல்கின்ற அன்னை சோனியா காந்தியினுடைய ஆன்ம தைரியத்தில் நடக்கிற ஆட்சி எங்கள் ஆட்சி.

*முற்பகல் 11-15*

எந்தப் பதவிக்காகவும் அல்ல, எந்த அதிகாரத்திற்காகவும் அல்ல, மக்களுக்கு சேவை செய்வதற்காகவே என்னுடைய அரசியல் வாழ்க்கையை அர்ப்பணிக்கிறேன் என்று சொன்ன அன்னை



2007 ஏப்ரல் 28] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

சோனியா காந்தியின் தலைமையிலே, வழிகாட்டுதலில் நடக்கிற ஓர் ஆட்சியைப் பார்த்து, (குறுக்கீடுகள்) கொள்ளைக்கார ஆட்சி என்று சொல்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில பதவிகள் விமர்சனத்திற்கு அப்பாற்பட்ட பதவிகள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பீட்டர் அல்போன்ஸ், சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** உதாரணத்திற்கு இந்த நாட்டிலே இருக்கின்ற குடியரசுத் தலைவரையோ, இந்த நாட்டிலே இருக்கின்ற ஆளுநரையோ நாம் யாரும் விமர்சிப்பது இல்லை. ஏனென்று சொன்னால், அவர்களுக்கு அரசியல் சாசனச் சட்டம் சில விசேஷ உரிமைகளைத் தந்திருக்கிறது. அவர்களை விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவர்கள் என்று அரசியல் சாசனச் சட்டமே அடையாளம் காண்பித்திருக்கிறது. அத்தகைய ஆளுநரைப் பார்த்து தரக் குறைவான வார்த்தைகள். . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடிக்கட்டும். (குறுக்கீடுகள்) திரு. பீட்டர் அல்போன்ஸ், உரையை முடியுங்கள். No point of order. திரு. பீட்டர் அல்போன்ஸ், உரையை (குறுக்கீடுகள்) No point of order. திரு. பீட்டர் அல்போன்ஸ், உரையை முடியுங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாநில ஆளுநரைப் பார்த்து, அமைச்சரவையின் குறிப்பறிந்து, பயந்து நடுங்கி செயல்படும் நபர் தமிழகத்தின் ஆளுநராக இருக்கிறார் என்று சொல்லியிருப்பது எனக்குக் கடந்த காலங்களை ஞாபகமூட்டுகிறது. நான் இந்த அவையிலே உறுப்பினராக இருந்தேன். மாண்புமிகு ஆளுநர் சென்னா ரெட்டி அவர்கள் இருந்தார்கள். சென்னா ரெட்டியை முதலமைச்சராக சந்திக்கச் சென்றவர், 85 வயது முதியவரைப் பார்த்து என்னிடம் தவறாக நடந்து கொண்டவர் (குறுக்கீடுகள்) என்று சொன்ன அந்த நாட்களை நான் நினைத்துப் பார்க்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையினுடைய தலைவர் இன்றையதினம் தமிழகத்திலே இருக்கின்ற சட்டம்-ஒழுங்கைப் பாதுகாக்கக்கூடிய பொறுப்பிலே இருக்கின்றவர். (மணியடிக்கப்பெற்றது) நம்முடைய காவல் துறைத் தலைவரைப் பொறுத்தவரை... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். பேச அனுமதிப்பதும், அனுமதிக்காததும் என் உரிமை. மற்றவர்களெல்லாம் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) என்னுடைய உரிமை, உட்காருங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** காவல் துறைத் தலைவரைப் பற்றி . . . (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு செய்தியை இந்த அவையிலே பதிய வைக்க ஆசைப்படுகிறேன். காவல் துறையைப் பற்றியும், காவல் துறை எவ்வாறு நடத்தப்படுகிறது என்பதைப்பற்றியும் என்னால் சில உதாரணங்களைச் சொல்ல முடியும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No point of order. உட்காருங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தப் புதிய அரசு பொறுப்பேற்ற பிறகும், காவல் துறையைச் சார்ந்த முக்கியமான அதிகாரிகளை மாற்றியமைப்பது இயல்பு. காவல் துறையைச் சேர்ந்த முக்கியமான அதிகாரிகளை, அரசு நிர்வாகத்தில் இருக்கின்ற பெரிய அதிகாரிகளை ஒரு புதிய அரசு பொறுப்பேற்றவுடனே மாற்றியமைப்பது இயல்பு. ஆனால், இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, சென்னை மாநகரத்தினுடைய ஆணையாளராக கடந்த ஆட்சியில் நியமிக்கப்பட்டவரை இந்த ஆட்சி அப்படியே ஏற்றுக்கொண்டு செயல்பட அனுமதித்தது. (மேசையைத் தட்டும் ஒலி) என்ன காரணம்? இந்த நாட்டிலே, இந்த மன்றத்திலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அரசியல் கட்சிகள் உண்டு, இங்கே இருக்கின்ற முதலமைச்சருக்கு அரசியல் உண்டு. இங்கிருக்கின்ற அமைச்சர் பெருமக்களுக்கு அரசியல் கட்சி உண்டு. ஆனால், அரசாங்கத்திலே பணி செய்கின்ற அதிகாரிகளுக்கு அரசியல் என்கிற சாயம் இல்லை. (குறுக்கீடுகள்)

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)*

*(மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தமிழகத்தினுடைய காவல் துறைத் தலைவராக பொறுப்பேற்றிருக்கின்ற அதிகாரி, காவல் துறையில் ஒரு நீண்ட நெடிய சரித்திரத்திற்குச் சொந்தக்காரர். தமிழக அரசு மட்டுமல்ல, மத்திய அரசினுடைய பல்வேறு பணிகளிலே, இந்த நாட்டினுடைய சிறப்புமிக்க புலனாய்வுப் பிரிவிலேகூட இயக்குநர் அளவிலே பணிபுரிந்து மிகப் பெரிய அனுபவத்தைப் பெற்றவர். அப்படிப்பட்ட ஒரு நல்ல, திறமையான அதிகாரியினுடைய கையில்தான் தமிழகக் காவல் துறை இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகக் காவல் துறை உங்களைப்போல, தான் எடுத்ததைத்தான், தான் சொன்னதைத்தான், தன்னால் ஒருமுறை





சொன்னது, அது உண்மைக்கு மாறானதாக இருந்தால்கூட, அதை மறுக்க வேண்டிய நிலையிலே இந்த ஆட்சி அதிகாரம் இல்லை. இங்கு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 15 நாட்களுக்கு முன்னால் இலங்கையிலே கடல் புலிகளாலே நடந்த சம்பவத்தைப் பற்றி நாங்கள் சொன்னோம். இன்றையதினம் முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், என்னிடம் அப்போது அந்தத் தகவல் இருந்தது என்று. இந்த அரசு நினைத்திருந்தால் இந்தச் சம்பவத்தைக்கூட மறைத்திருக்கலாம். காவல் துறை நினைத்திருந்தால் இந்தச் சம்பவத்தைக்கூட மறைத்து, இதை வெளிச்சத்திற்கே வராமல் செய்திருக்க முடியும். ஆனால், நேர்மையாகச் செயல்படுகின்ற காவல் துறை தன்னுடைய விசாரணையிலே தெரிய வருகிற தகவல்களை அந்தரங்க மனசுத்தியோடு, அதை வெளிக்கொண்டு வருகிற அந்த ஆத்மசுத்தி இருக்கிறதே அதை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11-20*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனநாயகத்திலே இருக்கின்ற மிகப் பெரிய ஆபத்தைப்பற்றி, ஜனநாயகத்தினுடைய ஆராய்ச்சியாளர்கள் வரிசைப்படுத்தியிருக்கின்றார்கள். ஜனநாயகத்திலே இருக்கின்ற மிகப் பெரிய ஆபத்து என்னவென்றால், ஜனநாயகத்தின் கட்சிகளிலே இருக்கின்ற தலைவர்களுக்கு எல்லா அதிகாரங்களும் மக்களிடமிருந்து வருகின்றன என்ற அந்த அற்புதமான தத்துவத்தை மறந்துவிடுவதுதான். ஜனநாயகத்திலே இருக்கின்ற அரசியல் தலைவர்களுக்கு வருகின்ற இந்த மனநிலையை ஆங்கிலத்திலே King Baby Syndrome என்று சொல்கின்றார்கள். அரசியல் தலைவர்கள் சில வெற்றிகளைப் பெற்றவுடனே, சில முறை பதவிகளை வகித்தவுடனே என்ன நினைத்துவிடுகின்றார்கள் என்று சொன்னால், 'தங்களுக்கு இது வந்து சேரவேண்டிய பதவி; தங்களுக்கு இது வந்து சேரவேண்டிய அதிகாரம்; தன்னைத் தவிர வேறு யார் கையிலும் அதிகாரம் போய்விடக் கூடாது; ஆட்சியும், அதிகாரமும் நிரந்தரமாக எனக்குத்தான்; நான்தான் நிரந்தர முதலமைச்சர்; நான்தான் நிரந்தரப் பிரதமர்' என்று எந்த அரசியல்வாதி நினைக்கிறாரோ, அவருக்கு மட்டுமல்ல ஆபத்து, அது இந்த தேசத்தின் ஜனநாயகத்திற்கே ஆபத்து. அதைத்தான் இன்று அவர்கள் நினைக்கின்றார்கள். வேறொருவருடைய கையிலே அதிகாரம் இருப்பதை அவர்களால் தாங்க முடியவில்லை. வேறொருவருடைய கையிலே ஆட்சி இருப்பதை அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [2007 ஏப்ரல் 28

அதுமட்டுமல்ல, நாளை இந்த அதிகாரம் போனால்கூட, இது தனக்கு மட்டும்தான் வரவேண்டுமென்று எண்ணுகின்றார். இது ஜனநாயகத்தில் அனுமதிக்க முடியாது. ஜனநாயகத்தில் இந்த நாட்டு மக்கள் யாருக்கு வாக்கு அளிக்கின்றார்களோ, யாருக்கு அதிகாரம் தருகின்றார்களோ, யாரை நம்பி மக்கள் அதிகார முத்திரையைக் குத்துகின்றார்களோ, அவர்கள்தான் ஆட்சியும், அதிகாரமும் பெறமுடியுமே தவிர, அறிக்கை விட்டோ, கோஷம் போட்டோ, அல்லது வன்முறையைத் தூண்டிவிட்டோ, இல்லை, மக்கள் மத்தியிலே அவநம்பிக்கையை விதைத்தோ, அதிகாரிகளைத் தூண்டிவிட்டோ, மத்திய அரசை ஏசியோ, மாநில அரசைக் கொச்சைப்படுத்தியோ, இந்த நாட்டு நிருவாகத்தைத் திசை திருப்பியோ, யாராவது அதிகாரத்தைக் கைப்பற்றுவோம் என்று நினைத்தால், அவர்களுக்கு நான் விவிலியத்தினுடைய வார்த்தையிலே சொல்வேன், "அவர்களுக்கு ஐயோ கேடு" என்பதைத் தவிர வேறு வார்த்தை இல்லை. *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, நான் ஒன்றைச் சொல்வேன், இன்று காலையிலே சிறிய துணுக்கு ஒன்றைப் படித்தேன். இந்த அறிக்கையையும் படித்தேன். எனக்கு அப்பொழுதுதான் ஞாபகத்திற்கு வந்தது. சிங்கம்கூட சில நேரங்களில் ஈக்களோடு போராடித்தான் வாழ்க்கையை நடத்தவேண்டி இருக்கிறது. அந்த நிலை உங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது என்று எண்ணுகின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்த தேசத்தை நடத்துகின்ற அந்தப் பணியில், மத்திய அரசும், மாநில அரசும் இணக்கமாகச் செயல்படுகின்ற இந்தச் சூழ்நிலையில், எந்தச் சதி வந்தாலும் நாம் அதை நிச்சயமாக முறியடிப்போம். மத்திய அரசு, டாக்டர் மன்மோகன் சிங் தலைமையிலே ஐந்தாண்டுகள் ஆட்சி செய்து, மீண்டும் ஆட்சிக்கு வரும். உங்கள் தலைமையில் நடக்கின்ற ஆட்சியும் ஐந்தாண்டுகள் நடந்து, மீண்டும் ஆட்சிக்கு வருவோம். இந்தச் சதியை முறியடித்து, இந்த அணியில் இருக்கின்றவர்கள் உங்களை ஆதரித்து இதை நிறைவேற்றித் தருவோம் என்று சொல்லி, இந்த அளவில் முடிக்கின்றேன், நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன். நீங்கள் சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதலமைச்சர் தமிழக அரசைப் பற்றியும், காவல் துறையைப் பற்றியும், மத்திய அரசைப் பற்றியும், ஆளுநர் அவர்களைப்



2007 ஏப்ரல் 28] [திரு. தி. வேல்முருகன்]

பற்றியும், பத்திரிகையில் தந்திருக்கின்ற செய்திகள் உண்மையிலேயே கண்டிக்கப்பட வேண்டியது. இந்திய நாட்டின் மக்களாட்சித் தத்துவத்தில், மக்களாட்சித் தத்துவத்தை நடைமுறைப்படுத்துகின்ற ஆட்சி, அதிகாரங்கள் தரப்பில் நாட்டின் ஏழை எளிய மக்களுக்குப் பாதுகாப்பு அரணாகத் திகழ்கின்ற காவல் துறையின் தலைமை இயக்குநரைப் பார்த்து, அவர் ஒரு பொம்மையாக இருக்கின்றார்; அவர் வாய் பேசமுடியாதவராக இருக்கின்றார் என்ற இழிவான, கடுஞ்சொற்களைப் பயன்படுத்தியிருக்கின்ற செயல் ஏற்புடையதாக இல்லை. இப்போது காவல் துறை தலைமை இயக்குநராகப் பொறுப்பேற்றிருக்கின்ற திரு. முகர்ஜி, ஐ.பி.எஸ். அவர்கள், இந்திய நாட்டினுடைய புலனாய்வுப் பிரிவிலே சிறப்பாகப் பணியாற்றி, அந்தப் பணியிலே மிகச் சிறந்த முறையில் வல்லுநராகத் திகழ்ந்த காரணத்தால்தான், தமிழக முதல்வர், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களே, இந்தியா முழுவதும் ஆட்சிப் பணி செய்த ஒருவரை தமிழகத்தின் தலைமை இயக்குநராக நியமனம் செய்து, தமிழ்நாட்டில் சட்டம்-ஒழுங்கைச் சிறப்பாகப் பாதுகாக்க வழிவகுத்துத் தந்தார்கள். இவர்கள் காவல் துறை இன்று செயலிழந்துவிட்டது என்று சொல்லியிருக்கிறார்கள். கடந்த அண்ணா தி.மு.க. ஆட்சிக் காலத்தில், எவர் தமிழ்நாட்டின் ஒட்டுமொத்தச் சட்டம்-ஒழுங்கை நிர்மாணிக்கும் பொறுப்பில் இருந்தாரோ, அதே கே.வி.எஸ். மூர்த்திதான் தமிழ்நாட்டின் சட்டம்-ஒழுங்குப் பொறுப்பை நிருவகித்து வருகின்றார். இது எதைக் காட்டுகின்றது? இவருடைய கூற்றை எடுத்துக்கொண்டால்கூட, இவர்களுடைய ஆட்சிக்காலத்தில் நியமிக்கப்பட்டவர்தான் இன்று பல்வேறு மாவட்டங்களிலும், காவல் துறையின் இயக்குநர் அலுவலகத்திலும் மிக உயர்ந்த பொறுப்புகளை வகித்து வருகின்றார்கள்.

அதோடுமட்டுமல்ல, ஆளுநர் அவர்களைப் பற்றி குறிப்பிடுகின்றபோது சொல்கின்றார்கள், குறிப்பறிந்து, நடுங்கி, பயந்திருக்கக்கூடிய ஆளுநர் என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். இந்த ஆளுநர் அவர்களைப் பற்றி ஒரே ஒரு செய்தியை நான் சொல்லவேண்டும். பஞ்சாப் மாநிலத்தின் சிங்கமாக இந்தத் தமிழ் மண்ணில் உலாவிக் கொண்டிருக்கின்ற மேதகு சுர்ஜித் சிங் பர்னாலா அவர்கள், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை முன்பு ஒரு காலத்தில் கலைக்கவேண்டுமென்று மத்திய அரசு நிர்ப்பந்தித்தபோது, 'இந்த கவர்னர் பதவி எனக்கு தூசு, ஒரு நேர்மையான ஆட்சியைக் கலைப்பதற்கு நான் ஒருபோதும் அறிக்கை தரமாட்டேன்' என்று

சொன்னவர் ஒரு மாவீரனுடைய வம்ச வழியிலே வந்தவர்தான், இப்போது தமிழகத்தின் கவர்னராகப் பொறுப்பேற்றிருக்கின்றார்.

*முற்பகல் 11-25*

இதையெல்லாம் இன்றைக்கு முன்னாள் முதலமைச்சர் மறந்து, வேண்டுமென்றே அரசியல் காரணங்களுக்காக, ஏதாவது பேசவேண்டுமென்பதற்காக, ஏதாவது அறிக்கைவிட வேண்டுமென்பதற்காக, அவர்கள் அறிக்கை விடுகிறார்கள். அவருடைய கடந்த கால ஆட்சியில்தான் போலீஸ் மானியக் கோரிக்கையின்மீது பேசுகின்றபோது நான் குறிப்பிட்டேன். 39 I.A.S., I.P.S., I.F.S. அதிகாரிகளை காத்திருப்போர் பட்டியலில் வைத்துப் பழிவாங்கிய அரசு கடந்த கால அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு.

இன்னும் ஒன்றை அறிக்கையில் சொல்கிறார். மத்திய அரசைப் பற்றிச் சொல்கிறார். செயலிழந்த, கொள்ளைக்கார ஆட்சி என்று சொல்கிறார். முன்னாள் முதலமைச்சர் அவர்களுக்கு இந்த மன்றத்தின் வாயிலாகச் சொல்ல விரும்புகிறேன். எது கொள்ளைக்கார ஆட்சி என்று நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். இந்தியாவினுடைய வரலாற்றில், உலகத்திலே கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே மூத்த குடியாக இருக்கின்ற தமிழர்களின் மொழிக்கு இந்தச் செம்மொழி அங்கீகாரம் தந்த மத்திய அரசு கொள்ளைக்கார அரசா?

இப்போது ஒரு ரூபாயில் இந்திய நாட்டிலே இருக்கின்ற 120 கோடி மக்களும் ஒருவருக்கொருவர் தொடர்புகொள்ளலாம் என்று மறுமலர்ச்சி கொண்டுவந்தாரே மாண்புமிகு அமைச்சர் தயாநிதி மாறன், அவர் இருக்கின்ற அரசு கொள்ளைக்கார அரசா? (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது கிராமப்புற மக்களுக்குச் சுகாதாரம் என்கின்ற திட்டத்தின்மூலமாக இந்திய நாட்டில், குறிப்பாகத் தமிழ்நாட்டில் எந்த மாவட்டத்திற்கும் மருத்துவக் கல்லூரி கேட்டாலும் அனுமதி தருகிறேன் என்று சொல்கிறாரே எங்களுடைய மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் மாண்புமிகு அன்புமணி அவர்கள், அவர் இருக்கின்ற அரசு கொள்ளைக்கார அரசா? (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழனுடைய மிகப் பெரிய கனவுத் திட்டமாக இருக்கின்ற சேது சமுத்திரத் திட்டத்தை கொண்டுவந்தாரே, தமிழகத்தினுடைய முத்தமிழறிஞர் கலைஞர், அவர்களுடைய வழி காட்டுதலோடு





செயல்படுகின்ற நம்முடைய மாண்புமிகு திரு. டி.ஆர். பாலு அவர்கள் அங்கம் வகிக்கின்ற அரசு கொள்ளைக்கார அரசா? இன்றைக்குத் தேசிய நெடுஞ்சாலைகளில் நான்கு வழிப் பாதைகளை அமைத்து, எங்கேயோ ஒரு இடத்தில் இந்தி எழுத்து எழுதிவிட்டார்கள் என்பதற்காக, அதை உடனடியாக மாற்ற வேண்டுமென்று திருத்தி அமைக்க வேண்டுமென்ற எங்கள் அய்யா அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, மாற்றி அமைத்த அரசு இது. இன்னும் சொல்லப்போனால், திட்டக் குழு ஒதுக்கீட்டில் இந்த 58 ஆண்டுகாலம் சுதந்திர இந்தியாவில் இல்லாத அளவிற்கு 1,004 கோடி ரூபாய் அதிகமாக இந்த மக்களுக்கு அள்ளித் தந்தது மத்திய அரசு.

இப்படி எந்தப் பட்டியலிட்டாலும், இன்றைக்குத் தன்னுடைய செயல்பாடுகளால் இந்திய அளவிலே இருக்கின்ற எல்லா மாநிலங்களுக்கும் ஒரு முன்னோடியாகத் திகழ்கின்ற ஓர் அரசைக் குற்றம் சொல்ல வேண்டும், குறை காணவேண்டும், இட்டுக்கட்டிப் பேச வேண்டுமென்ற அடிப்படையிலேதான் எதிர்க்கட்சித் தலைவருடைய அறிக்கை அமைந்திருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், காவல் துறையினுடைய கமிஷனரைப் பற்றி நம்முடைய அண்ணன் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் குறிப்பிட்டார்கள். இன்னும் இருக்கின்ற இணை ஆணையர்கள், மாவட்ட Superintendent of Police, மாவட்ட ஆட்சித் தலைவர்கள், யாரிடத்தில் எங்கு திறமை இருந்தாலும், யார் எங்கு சிறப்பாகச் செயல்பட்டாலும், அவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்குரிய பதவிகளைத் தந்து, அவர்களுடைய திறமையை வெளிக்கொண்டுவருகிற ஆற்றல் படைத்த ஓர் அரசுதான் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞருடைய அரசு என்பதை நான் இங்கே பதிவு செய்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

காவல் துறை அதிகாரிகளை மிரட்டுவது மட்டுமல்ல, அரசு ஊழியர்களைப் பார்த்துச் சொல்கிறார், நான் ஆட்சிக்கு வந்தால் உங்களையெல்லாம் கவனித்துக்கொள்வேன் என்கிறார். என்ன கவனித்துக்கொள்ள முடியும்? ஒரு நாட்டினுடைய அரசாங்கத்தின்கீழ் இருக்கக்கூடிய அரசு ஊழியர்களைப் பார்த்து, ஆட்சியினுடைய அதிகாரக் கட்டிலிலே இருக்கின்றவர்கள், இந்த நாட்டு மக்களுக்குத் தீட்டுகின்ற திட்டங்களை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிற அந்த மக்களைப் பார்த்து, மிரட்டல் தொனியில் பேசுவதும், காவல் துறை அதிகாரிகளை மிரட்டல் தொனியிலே பேசுவதும், மத்திய அரசையே மிரட்டுவதும், மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் உறவுப் பாலமாக

இருக்கின்ற கவர்னர் அவர்களைக் கொச்சைப்படுத்துவது என்பதெல்லாம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. இது கண்டனத்திற்கு உரியது என்பதைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகிறேன். வாய்ப்பிற்கு நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதலமைச்சர் வெளியிட்டிருக்கிற அறிக்கையினை ஓர் அரசியல் கட்சித் தலைவர் என்ற முறையிலும், ஆட்சி நடத்தியவர் என்ற முறையிலும், அதற்கான பொறுப்புணர்வோடு தன்னுடைய அந்தஸ்தின் அடிப்படையிலே, வெளியிட்ட அறிக்கையாக ஏற்றுக்கொள்ள முடியாது. ஒரு சாதாரண தொண்டனைப் போன்று உணர்வுகளை வெளிப்படுத்துகிற விதத்திலே முன்னாள் முதலமைச்சர் அவர்கள் அந்த அறிக்கையை வெளியிட்டிருக்கிறார். அதிலும் குறிப்பாக இங்கே இதைப்பற்றி விவாதிக்கக் கூடாது என்று அ.தி.மு.க. நண்பர்கள் குறிப்பிட்டார்கள்.

அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிற சாராம்சமான செய்தி என்பது காவல் துறை மானியக் கோரிக்கை என்பதே தேவையில்லாத ஒன்று என்ற அர்த்தத்திலேதான் அறிக்கையிலே வெளிப்படுத்தியிருக்கிறார். இரண்டு நாட்கள் அந்த விவாதம் நடைபெற்றதே waste என்கிறார். அறிக்கையிலே குறிப்பிட்டுச் சொல்கிறபோது, கவர்னர் அவர்களை குறிப்பிட்டுச் சொல்கிறார்; காவல் துறை இயக்குநரைக் குறிப்பிட்டுச் சொல்கிறார். சரி, இவற்றையெல்லாம் குறிப்பிட்டுச் சொல்கிறபோது, சட்டம்—ஒழுங்குப் பிரச்சினையைப் பற்றி கருத்துச் சொல்வதற்கு அரசியல் கட்சித் தலைவருக்கு உரிமையிருக்கிறது என்று சொன்னாலும்கூட, அவருடைய உணர்வும், அவருடைய கோபமும் எங்கோ ஒரு புறத்திலே இருக்கிறது என்பதுதான் தெரிகிறது.

*முற்பகல் 11-30*

முதல்வர் கலைஞர் அவர்களுடைய குடும்பத்தை இழுத்துப் பேசுவதிலேதான் அவருக்கு தனி சுகமே இருக்கிறது. அந்த அறிக்கையிலே சொல்கிறார். அவருடைய மகள் வீட்டு வேலைக்காரிகூட காவலரை இழுத்து பளார், பளார் என்று



அறைந்தாலும் அறைவார் என்று அந்தக் கருத்தின் அடிப்படையிலே சொல்கிறார். காவல் துறையினுடைய செயல்பாட்டுக்கும் குடும்பத்தை இழுத்து அதிலே விமர்சனம் செய்வதற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது? அப்படியானால், இது ஏப்ரல் மாதம் என்ற காரணத்தினாலோ என்னவோ தெரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) என்னென்னமோ வந்து கொண்டிருக்கிறது. நிதானமாக, பொறுப்பாக அறிக்கை விடுவதற்குப் பதிலாக இப்படிச் சொன்னால் என்ன செய்வது? நான் அப்படித்தான் எடுத்துக்கொள்கிறேன். ரொம்ப வெயில் காலம். சிக்கலாக இருக்கிறது, ஆகவே அவரை ஏதாவது ஒரு நல்ல மருத்துவமனையிலே அனுமதித்தால் ஒழிய (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கெல்லாம் தீர்வு காண முடியாது. ஆனால், தெரியாத்தனமாக அ.தி.மு.க. நண்பர்கள் அதைப் புரிந்துகொள்ளாமல்....

(அவையிலிருந்து வெளியேறிய உறுப்பினர்கள் லாபியிலிருந்து குரலெழுப்பினர்.)

பார்த்தீர்களா, நரி ஊளையிடுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இப்படித்தான் அவர்கள் வெளியிலிருந்தும் சத்தம் போடுவார்கள். உள்ளேயிருந்தும் சத்தம் போடுவார்கள். உண்மையாகவே அவர்கள் ஜனநாயகபூர்வமாகச் சொந்தக் கருத்தைச் சொல்ல இயலாதவர்களாகத்தான் அவர்களுடைய சட்டமன்ற உறுப்பினர்களும் இருக்கிறார்கள்; தலைமைப் பொறுப்பிலே இருப்பவர்களும் இருக்கிறார்கள். ஆகவே, இந்தத் தமிழ்நாட்டிற்கே இது ஒரு கேடாக இருக்கிறது.

ஜனநாயகம் என்பது தழைக்க வேண்டுமானால் சுதந்திரமாகக் கருத்து சொல்லவேண்டும். ஆனால், கருத்து சொல்கிறபோது இப்படிப்பட்ட மோசமான வார்த்தைகளைப் பயன்படுத்தி கருத்துகளைச் சொல்வதால் ஒரு முன்னாள் முதலமைச்சர் என்பவர் அவருடைய பொறுப்புக்கும், அவருடைய அந்தஸ்துக்கும், அவருடைய தகுதிக்குமான விஷயங்களை இழந்த நிலையிலே அவர் பேசுகிறார். ஏதோ பிதற்றிக் கொண்டிருக்கிறார் என்று எண்ணுவதைத் தவிர வேறு வழியில்லை. அவர் தொடர்ந்து சொல்கிறார். வாரம் ஒரு முறை ஆட்சிக்கு வர வேண்டும் என்று சொல்கிறார். தேர்தலே 5 ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் நடக்க முடியும் (மேசையைத் தட்டும் ஒலி) எப்படி நடக்கப் போகிறது என்று நமக்குத் தெரியவில்லை. அவர் குழப்பத்திலே இருக்கிறார். குழப்பத்திலே இருக்கிறவரை சரி

[திரு. வை. சிவபுண்ணியம்] [2007 ஏப்ரல் 28

செய்யவேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது. ஆகவே, இந்தக் கூட்டணி என்பது வலுவான கூட்டணி என்பதை நாம் சொல்லிக் கொண்டே இருக்கிறோம். ஆனால், அவர்களுக்கு ஏதோ குழப்பம் இருக்கிறது. இடையிலே வந்துவிடலாமா என்று நினைக்கிறார். இப்படியான கருத்துகளைக் கொண்டு வருவதற்குத் திசை திருப்புகிற முயற்சியை எடுக்கிறார். அதன் விளைவுதான் இந்த அறிக்கை என்று கூறி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். அதற்குரிய தீர்வுகளைக் காண்பதற்கு அரசியல் ரீதியான தீர்வினை நமது கூட்டணி எடுக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அ.தி.மு.க. ஆட்சியில் இருந்த காவல் துறையைப்போன்று திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலும் இருக்கக் கூடாது என்பதுதான் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கருத்தாக ஏற்கெனவே காவல் துறை மானியக் கோரிக்கையின்பொழுது எங்களது மாண்புமிகு உறுப்பினர் தோழர் திரு. சி. கோவிந்தசாமி அவர்கள் பதிவு செய்திருக்கிறார்கள்.

காவல் துறையைப் பொறுத்தவரைக்கும் என்னுடைய பார்வையில் அதற்கு அரசியல் என்பது இருக்கிறது. கடந்த காலத்தில் அத்தகைய அரசியல் நோக்கத்தோடுதான் காவல் துறை பயன்படுத்தப்பட்டது. 'மாமியார் உடைத்தால் மண் குடம், மருமகள் உடைத்தால் பொன் குடம்' என்ற பழமொழிக்கேற்ப தாங்கள் ஆட்சியில் இருந்தால் காவல் துறை நல்ல காவல் துறை, வேறு கட்சி ஆட்சிக்கு வந்தால் காவல் துறை மோசமான காவல் துறை என்று சொல்லக்கூடிய அரசியல் பார்வையோடுதான் முன்னாள் முதலமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அதில் எங்களுக்கு கருத்து உடன்பாடு இல்லை. திராவிட முன்னேற்றக் கழக அரசில் காவல் துறை இந்த அரசினுடைய கொள்கையைப் பின்பற்றுவதாக இருக்க வேண்டும். தொழிலாளர்கள், விவசாயிகளுக்கு ஆதரவான நடவடிக்கைகளைப் பின்பற்றுவதாக இருக்க வேண்டும். அதை பலப்படுத்தக்கூடிய வகையில்தான் காவல் துறையினுடைய மானியக் கோரிக்கை என்பதும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கருத்து என்பதும் அமைந்திருந்தது. ஆகவே, இந்தக் கோரிக்கைக்கு உள்ளே



2007 ஏப்ரல் 28] [செல்வி கே. பாலபாரதி]

வந்து கருத்துச் சொல்லாமல் முன்னாள் முதலமைச்சர் அவர்கள் வெளியிலிருந்து கருத்துச் சொல்வது என்பது காவல் துறையினுடைய நடவடிக்கைக்கு உறுதுணையாக இருக்காது. அது தமிழகத்து மக்களுக்கும் சாதகமாக இருக்காது என்பதைத்தான் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கருத்தாக இங்கே பதிவு செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார்.

***திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சுட்டிக்காட்டிய இந்தப் பிரச்சினை என்பது மிகவும் கவலைக்குரிய ஒரு பிரச்சினை என்பதை விடுதலைச் சிறுத்தைகள் சார்பிலே நாங்களும் ஏற்கின்றோம்.

இன்றைக்கு காவல் துறையாக இருந்தாலும் சரி, பிற துறைகளைச் சார்ந்த அதிகாரிகளாக இருந்தாலும் சரி, அவர்கள் பணிகள் எந்த விதத்திலே இருக்கின்றது என்பது பற்றிய விமர்சனங்களைப் பொறுப்போடு ஓர் எதிர்க்கட்சித் தலைவர் என்கிற முறையிலே வெளிப்படுத்துவதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கலாம். ஆனால், மிரட்டுகின்ற வகையிலே, நாங்கள் பொறுப்புக்கு வந்தால் உங்களையெல்லாம் பார்த்துக்கொள்கிறோம் என்று மிரட்டுகின்ற வகையிலே பேசுவதென்பது அவர்களுடைய பணியிலே குறுக்கிடுவதாகத்தான் அமையும் என்று உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சுட்டிக்காட்டியது சரியான ஒரு விஷயமாகும்.

*முற்பகல் 11-35*

அப்படிச் சொல்வது என்பது அரசையே ஸ்தம்பிக்க வைக்கிற ஒரு முயற்சியாகத்தான் பார்க்கப்படும். இன்றைக்கு அரசினுடைய திட்டங்களை, குறிப்பாக, நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் விரும்புகிற நல்ல இணக்கமான, சமத்துவமான நிலை ஏற்படுவதற்கு ஏற்றபடி நம்முடைய அதிகாரிகள் செயல்பட வேண்டும். அதற்கு அவர்கள் எல்லாம் ஒத்துழைக்க வேண்டும் என்பதுதான் எங்களைப் போன்ற கட்சிகளுடைய விருப்பமாக இருக்கிறது. அந்த முறையிலே என்னுடைய கருத்தைப் பதிவு செய்து அமைகிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

[2007 ஏப்ரல் 28

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தோழமைக் கட்சிகளுடைய தலைவர்கள், தங்களுடைய கருத்துகளையெல்லாம் இங்கே வெளியிட்டிருக்கின்றார்கள். நான் புதிதாக எந்தக் கருத்தையும் சொல்ல விரும்பவில்லை, தேவையும் இல்லை. ஏனென்றால், அவர்களுடைய கருத்துகளுடன் இணைந்ததுதான் என்னுடைய கருத்துமாகும்.

நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகப் பேசிய பாலபாரதி அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். மார்க்சிஸ்ட் கட்சி போலீஸ்காரர்களைப் பற்றிச் சொல்லும்போது அ.தி.மு.க. ஆட்சியிலே இருந்ததைப் போல, போலீஸ், தி.மு.க. ஆட்சியில் இருக்கக் கூடாது என்பதே எங்களுடைய வேண்டுகோள் என்று குறிப்பிட்டார்கள். என்னைப் பொறுத்தவரையில், எங்களுடைய ஆட்சியைப் பொறுத்தவரையில், காவல் துறையை எவ்வாறு நோக்குகிறது, காவல் துறை பற்றி இந்த ஆட்சியினுடைய அணுகுமுறை என்ன என்பதை, நேற்று முன்தினம் காவல் துறை மானியத்திலே நான் பதிலுரைத்தபோது, இன்றல்ல, நேற்றல்ல, 1962 ஆம் ஆண்டிலேயே எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவராக இருந்து சொன்ன கருத்துகளை இங்கே படித்துக் காட்டியிருக்கின்றேன். காவல் துறையிலே உள்ளவர்கள் எல்லோரும் தீயவர்கள் அல்ல. அதைப்போல, எல்லோரும் நல்லவர்களும் அல்ல. காவல் துறையிலேயும் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தவறு செய்பவர்கள் இருப்பார்கள். காவல் துறையிலேயே கயவர்கள் இருப்பார்கள். காவல் துறையிலேயே கள்வர்கள் இருப்பார்கள். காவல் துறையிலேயே கண்காணிகள் இருப்பார்கள். காவல் துறையிலேயே துரோகம் செய்பவர்கள் இருப்பார்கள். இவற்றையெல்லாம் சரித்திரச் சான்றுகளோடு மெய்ப்பிக்க முடியும். ஆனால், அதற்காக, அந்தத் துறையே தேவையில்லையென்ற முடிவுக்கு யாரும் வரமுடியாது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆளுகின்ற மேற்கு வங்கத்திலேகூட காவல் துறை எவ்வளவு முக்கியமானது என்பதை அந்த அரசு உணர்ந்துதான் அந்தத் துறையைப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறது என்பதை நானும் அறிவேன், நம்முடைய நண்பர் கோவிந்தசாமி அவர்களும் அறிவார்கள். நமக்கு ஏன் வம்பு என்று பிரச்சினையை பாலபாரதியிடத்திலே அவர்கள் விட்டுவிட்டார்கள் என்பதும் எனக்கு நன்றாகத் தெரியும். (சிரிப்பு) ஆனால், எந்தத் துறையாக இருந்தாலும், அது காவல் துறையாக இருந்தாலும் சரி அல்லது நெடுஞ்சாலைத்





துறையாக இருந்தாலும் சரி அல்லது கல்வித் துறையாக இருந்தாலும் சரி, எந்தத் துறையாக இருந்தாலும், ஆட்சி செம்மையாக நடைபெறுகின்ற ஆட்சியாக இருந்தால்தான், எல்லாத் துறைகளும் சீராக அமைய முடியும். இல்லாவிட்டால் அமைவது கஷ்டம். அமையவே முடியாது. நாட்டு மக்கள் வேதனைக்கு உட்படுவார்கள். திராவிட முன்னேற்றக் கழக அரசைப் பொறுத்தவரையில் நாங்கள் தன்னிச்சையாக எதுவும் செய்ய வேண்டும் என்றில்லாமல், ஒன்றிரண்டு அன்றாட நிர்வாக நடவடிக்கைகள் வேண்டுமானால், அரசின் சார்பிலே எங்களுடைய கேபினட் கூடி, அமைச்சரவையிலே எடுக்கின்ற முடிவுகளாக இருக்குமேயல்லாமல், பெரிய விஷயங்களில் எல்லாக் கட்சிகளையும் கலந்துகொண்டு, அவரவர்களையும் தனிப்பட்ட முறையிலேயாவது கலந்து பேசி—ஒவ்வொரு முறையும் சர்வ கட்சிக் கூட்டம் கூட்டி முடிவு எடுக்க முடியாவிட்டாலும்— அதனால் ஏற்படுகின்ற பல இடையூறுகளையும் எண்ணிப் பார்த்து, தேவையற்ற தர்ம சங்கடங்கள் வர வேண்டாம் என்பதற்காகவாவது, தனித் தனியாக அனைத்துக் கட்சித் தலைவர்களையும் தொடர்பு கொண்டு பேசி, அவர்களுடைய விருப்பங்களையும் அறிந்துதான் இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதைப்போல, அவர்கள் இந்தத் துறையைப் பற்றி சொல்கின்ற நல்லவை, கெட்டவை இவையெல்லாம் ஆராய்ந்து, அதற்கேற்ப நாங்கள் இந்த அரசை நடத்திக் கொண்டிருக்கின்றோம்.

*முற்பகல் 11-40*

இன்றைக்கு எழுந்துள்ள பிரச்சினை, அடுத்த வீட்டிலே ஒரு மகிழ்ச்சிகரமான நிகழ்ச்சி நடந்தால், அதைப் பொறுத்துக்கொள்ள முடியாத எரிச்சல், வீட்டிலே இருந்து கிளம்புகின்ற புகைச்சல். அந்தப் புகைச்சலுக்கு இன்றைக்கு நம்முடைய பொழுதை வீணாக்கியிருக்கின்றோம் என்பதுதான் என்னுடைய கருத்து. காலையிலேயிருந்து எவ்வளவு பொன்னான நேரத்தை கேள்வி பதில்கள் முடிந்த பிறகு எவ்வளவு அருமையான நேரத்தை நாம் இன்றைக்கு வீணாக்கி இருக்கிறோம் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். நான் அதற்குத்தான் சொன்னேன், நம்முடைய காங்கிரஸ் கட்சி நண்பர்கள், பாட்டாளி மக்கள் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சிகள், திராவிட முன்னேற்றக் கழகத்திலே உள்ள நண்பர்கள் எல்லோரும், நம்முடைய பேராசிரியர், இவர்கள் எல்லாம் என்னை அணுகி, இந்தப் பொன் விழா நடத்துகிறோம் என்று சொன்னபோதுகூட, வேண்டாம் வீணாக வேண்டாம், இதைப் பொறுத்துக்கொள்ள ஒரு புகைச்சலை ஏற்படுத்த வேண்டாம், இதைப் பொறுத்துக்கொள்ள

சில பேர் தயாராக இல்லை. நீங்கள் எல்லோரையும் நம்மைப்போல கருதிக்கொண்டு இதையெல்லாம் செய்யாதீர்கள், வேண்டாம் என்று சொன்னேன். அவர்கள் மறுக்க முடியாது. ஆனால், அவர்கள் தங்கள் பிடிவாதத்தைக் காட்டி என்னை இறுதியாகச் சம்மதிக்க வைத்துவிட்டார்கள். நான் இந்தப் பொன் விழா வேண்டாம் என்று சொன்னதற்குக் காரணமே, இந்த அவையிலே இதுவரை எந்த விழாவும் நடந்தது இல்லை என்று யாராவது சான்று காட்டி, அதை ஒத்துக்கொண்டு அல்ல. சில பேர் இந்த அவையிலே இருந்தவர்கள் சான்றுகள் காட்டி இருக்கிறார்கள். என்றைக்காவது இந்த *50* ஆண்டு காலத்திலே, எந்த விழாவாவது இந்த அவையிலே நடந்தது உண்டா என்றெல்லாம் அறிக்கை விட்டிருக்கிறார்கள். நான் தம்பி என்று கருதிக் கொண்டிருந்தவர்கள் எல்லாம்கூட அறிக்கை விட்டிருக்கிறார்கள். ஏனென்றால், அவர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அதைப் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. ஆனால், மக்களை இருட்டுக்குள் வைத்துவிடக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன்.

இதே அவையில், பெருந்தலைவர் காமராஜருடைய படத்தை, என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, குடியரசுத் தலைவர் சஞ்சீவ ரெட்டி அவர்களை அழைத்து இந்த அவையிலே திறந்து வைத்தபோது, சஞ்சீவ ரெட்டியாருடைய பேச்சைக் கிடைத்தால் நீங்கள் மறுபடியும் படித்துப் பாருங்கள். அவர், காமராஜரைப் பற்றி பேசி, படத்தைத் திறந்துவைத்த அந்த நிகழ்ச்சியில், தன்னை விழாவிற்கு அழைத்த முதலமைச்சர் எம்.ஜி.ஆரைப் பற்றிக்கூட பேசாமல், நெருக்கடி காலத்திலே அவரோடு நான் நண்பனாக எந்த அளவுக்கு இருந்தேன் என்பதையும், பெருந்தலைவர் காமராஜரை எப்படி மதித்தேன், அவர் மறைந்த பிறகு எந்த அளவிற்கு அவருடைய நினைவைப் போற்றினேன் என்பதையும், சஞ்சீவ ரெட்டி அவர்கள் இதே அவையிலே பேசினார்கள்.

அதற்குப் பிறகு பல நிகழ்ச்சிகளை நானே முன் நின்று நடத்தி இருக்கிறேன். மாணிக்கவேலு நாயக்கர் மேலவைத் தலைவராக இருந்தார். இங்கே அமைச்சராக இருந்தார். அவருடைய நீண்ட நாள் அனுபவத்தைப் பாராட்டுவதற்காக இங்கே நிகழ்ச்சி நடத்தி, அவருக்குப் பரிசளித்து, அவருக்குப் பொன்னாடை இவையெல்லாம் இந்த இடத்திலேயே அவருக்கு அணிவித்திருக்கிறேன்.

சிலம்புச் செல்வர் ம.பொ.சி., ஜோதி அம்மாள், இப்படி நீண்ட காலம், *10* ஆண்டுகளுக்கு மேலே, *15* ஆண்டுகளுக்கு மேல், இந்த அவையிலே பணியாற்றியவர்களையெல்லாம், மூத்தவர்களையெல்லாம் இந்த அவைக்கு வரவழைத்து அவர்களையெல்லாம் சிறப்பித்திருக்கிறேன். ஏன் எம்.ஜி.ஆர் அவர்களுடைய படம் இங்கே திறக்கப்பட்டது. நானில்லை அப்போது, வரவில்லை, அழைப்பில்லை. எம்.ஜி.ஆர். அவர்களுடைய படம் திறக்கப்பட்டபோது, முதலமைச்சராக அம்மா அவர்கள், செல்வி ஜெயலலிதா அவர்கள் இருந்தார்கள். அந்தப் படத் திறப்பு நிகழ்ச்சியின் அந்தப் படங்கள் எல்லாம் இன்னமும் இருக்கின்றன. அந்தப் படத்திறப்பு நிகழ்ச்சி நடந்தபோது, இன்றைக்கு நம்முடைய சபாநாயகர் திரு. ஆவுடையப்பன் அமர்ந்திருக்கும் அதே இடத்தில் செல்வி ஜெயலலிதா அமர்ந்து கொண்டு, நாங்கள் அமர்ந்திருக்கும் இந்த இடத்தில் சசிகலா அமர்ந்து கொண்டு நிகழ்ச்சி நடைபெற்றது. ஆகவே, இந்த அவையிலே வேறு எந்த நிகழ்ச்சியும் நடைபெறவில்லை என்று யாரும் சொல்ல முடியாது. தர்பார் போல அப்போது நடந்தது.





முற்பகல் *11-45*

அப்படி நிகழ்ச்சிகளை நடத்திவிட்டு இப்படி ஒரு நிகழ்ச்சி— நீங்கள் எல்லாம் பார்த்து ஏதோ ஒரு *50* ஆண்டு காலம் இருந்தானே, எங்கேயோ பிறந்தவன், சிறிய கிராமத்தில் பிறந்தவன், சாதாரண குடும்பத்திலே பிறந்தவன், இந்த அளவுக்கு உயர்ந்து வந்திருக்கிறானே என்று என்னையும் சிறப்பிக்க வேண்டுமென்று நீங்கள் கருதியதைத் தாங்கிக்கொள்ள முடியாதவர்கள்தான் இன்றைக்கு இதையெல்லாம் செய்கிறார்கள். ஆனால், அதற்கு கவர்னரா பாவம் செய்தார்? அதற்கு போலீஸ் டி.ஜி.பி.-யா பாவம் செய்தார்? அதற்கு அமைச்சரவையில் இருக்கிற அமைச்சர்களா அல்லது நீங்களா அல்லது மத்திய சர்க்காரா பாவம் செய்தது? இல்லை. என்னென்ன பேசியிருக்கிறார்கள்! அவர்களால், ஏன் இங்கே பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பேசும்பொழுது இருக்க முடியவில்லை என்றால் உண்மைகளை ஒருவர் பேசும்போது, அது அவர்கள் காதுகளை அடைத்தால் தாங்கிக் கொள்ள முடியாது சில பேருக்கு. அதனால்தான் இங்கே இருந்து இந்தத் துன்பத்தை அனுபவிப்பதைவிட வெளியே சென்று விடலாம் என்றே சென்று விட்டார்கள்.

'நடமாடும் பொம்மையாக காவல் துறைத் தலைமைத் இயக்குநர் இருக்கிறார்'—இந்த அம்மையாருடைய அறிக்கையிலே ஒரு வாசகம் இது. 'உலக மகா பொய்யர் கருணாநிதி'—இது அந்த அம்மையாருடைய வாசகம். நான் அதைப்பற்றி கவலைப்படவில்லை. 'காவல் துறை உருக்குலைந்துபோன, செயல் திறன் இழந்துவிட்ட,

சீரழிந்து போய் சர்வநாசம் ஆகிவிட்ட அமைப்பு'. இப்படி யாராலும் திட்ட முடியாது. பெரிய துர்வாச முனிவரால்கூட இப்படித் திட்ட முடியாது. 'செயல் இழந்த ஒரு கொள்ளைக்கார அமைச்சரவை மத்தியிலும் இருக்கிறது' என்கிறார்கள். அந்த அமைச்சரவையை அங்கே அமைப்பதற்கு யார், யார் முயற்சி எடுத்தார்கள்; எப்படியெல்லாம் தியாகம் செய்தார்கள்; எப்படியெல்லாம் தலைவர்களை ஒன்று சேர்த்தார்கள்; எப்படி முற்போக்குக் கட்சிகளை எல்லாம் இணைத்தார்கள்! அந்த அம்மையார், சோனியா காந்தி அவர்களைப் பற்றிப் பேசாத பேச்சா? அதையெல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இது ஒன்றும் எனக்குப் பெரிதாகத் தெரியவில்லை. பீட்டர் அவ்வளவு வருத்தப்பட்டிருக்க வேண்டாம். அவற்றையெல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இது எல்லாம் குறைவு தான்.

'பயந்து நடுங்கிச் செயல்படும் நபர் தமிழகத்தின் ஆளுநர்'. 'நபர்' என்கிறார். ஓர் ஆளுநரைப் பார்த்து 'நபர்' என்று சொல்லுகிறார் என்றால் நாம் இதற்கு பதிலுக்குப் பதில் பெண்களைப் பற்றி இழித்துப் பேசிவிடக் கூடாது. ஆனால், பெண்கள் இப்படிப் பேசக்கூடாது. நாம் பெண்களைப் பற்றிப் பேசக்கூடாது. ஆனால், பெண்கள் இப்படிப் பேசக்கூடாது. நாம் எந்தப் பெண்களுக்காக, பெண் உரிமைக்காக, பெண்களுடைய நல்வாழ்வுக்காகப் பாடுபடுகிறோமோ அந்தப் பெண்கள், நாங்கள் இப்படியும் பேசுவோம் என்று பேசுவது நல்லதல்ல. புராணங்களை நான் நம்புவது இல்லை. கட்டுக் கதைகளை நம்புவது இல்லை. ஆனால், இவற்றையெல்லாம் பார்க்கும்போது அந்தக் காலத்திலே அல்லி இராணி எல்லாம் இருந்தார்கள் என்பதை நம்பித்தான் தீர வேண்டியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

முன்னாள் பிரதமர் திரு. நரசிம்ம ராவைப் பற்றிப் பேசாத பேச்சா? 'செயல்படாத பிரதமர்' என்று சொன்னார்கள். வாஜ்பாயைப் பற்றி என்ன சொன்னார்கள்? 'தமிழ்நாட்டு மக்களுக்கு இவர் யார் என்றே தெரியாது. நான்தான் அவரைப் பட்டிதொட்டி எல்லாம் அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தினேன்' என்று சொன்னார்கள். அத்வானிக்கு 'செலக்டிவ் அம்னீஷியா' என்று சொன்னார்கள். 'இரவு 10 மணிக்கு இராஜிவ் காந்திக்கு போன் செய்தேன். தூங்கிவிட்டார் என்று சொன்னார்கள். ஒரு நாட்டின் பிரதமர் இவ்வளவு சீக்கிரம் தூங்கினால் நாடு உருப்படுமா?' என்று கேட்டார்கள். 'ஆளுநர் சென்னா ரெட்டியைச் சந்திக்கின்றபோது என்னிடம் தவறாக நடந்து கொண்டார்' என்று சொன்னார்கள். ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபு நாயுடுவை 'மோசடிப் பேர்வழி' என்று சொன்னார்கள். இப்போது உத்திரப்பிரதேசத்திலே போய் கையைக் கோர்த்துக்கொண்டு





நிற்கிறார்கள். அது வேறு விஷயம். (சிரிப்பு) 'மத்திய அமைச்சர் ஜார்ஜ் பெர்னாண்டஸ் ஒரு பொய்யர்' என்று சொன்னார்கள். அரசியல் காரணங்களுக்காக ஒருவரை ஒருவர் தாக்கிப் பேசுவது வேறு நாமேகூடத் தாக்கிப் பேசிக்கொள்கிறோம். ஆனால், அப்படித் தாக்கிப் பேசும்போது மறுபடியும் அவர்களை நாம் சந்திக்க வேண்டும் என்கின்ற அந்த ஒரு நாகரிகத்தை நாம் மறந்து விடக்கூடாது.

முற்பகல் 11-50

இவர்கள் அந்த நாகரிகத்தைக் கற்றவர்கள் அல்ல, அதைப் பேணிப் போற்றுபவர்கள் அல்ல. நான் சொன்னால் அது சொந்த விஷயமாக ஆகிவிடும், அதற்காக அதை மறைக்க விரும்பவில்லை. இருந்தாலும் சொல்கின்றேன். எம்.ஜி.ஆர். அவர்கள் தி.மு.கழகத்தை விட்டுப் பிரிந்து சென்றார். நான் அதைப்பற்றி விரிவாகப் பேச விரும்பவில்லை. சென்ற பிறகு, அவருக்கும், எனக்கும் இருந்த நட்பு ஒன்றும் பட்டுப் போய்விடவில்லை. அவருடைய காரிலே ஒரு நண்பர் சென்றிருக்கிறார்—இப்போது ஒரு பெரிய புள்ளியாக அவர் வளர்ந்திருக்கிறார் சென்னை மாநகரத்தில்—அந்தக் காரிலே அவரும் அந்த நண்பரும் சென்றபோது, தனக்கு அவரை ஒரு டிரைவர் என்ற அளவுக்குக்கூட பாவிக்கக்கூடிய நண்பர் அந்த காலத்தில். அண்ணா சாலையில் அந்தக் கார் போகும்போது அவர் ஏதோ ஒரு பேச்சுக்கு வாய்தவறி கருணாநிதி என்று சொல்லிவிட்டார். உடனே காரை நிறுத்தச் சொல்லிய எம்.ஜி.ஆர்., 'கீழே இறங்கு' என்று சொல்லி, 'நீ நடந்தே வீட்டுக்கு வா' என்றார் 'ஏன், ஏன்' என்று கேட்க 'அவர் பெயரை நான்கூடச் சொன்னதில்லை, நீ சொல்கிறாயா? அதற்குத் தண்டனை, நீ நடந்தே வீட்டுக்கு வா' என்று சொல்லிச் சென்றார் (மேசையைத் தட்டும் ஒலி) என்பது அந்த நண்பரே என்னிடத்திலே சொல்லிக் கண் கலங்கிய விஷயம். அப்படி ஒரு கட்சி பிரிந்தபிறகும்கூட அந்த உணர்வுகள் இருந்தன.

நான் காமராஜரைப் பற்றிப் பேசாத பேச்சா? காமராஜர் என்னைப் பற்றியோ அல்லது கழகத்தைப் பற்றியோ பேசாத பேச்சா? பக்தவத்சலம் பக்தவத்சலம் அவர்களைப் பற்றி நான் பேசாத பேச்சா? ஆனால், என்னுடைய அவர்கள் என்னைப் பற்றிப் பேசாத பேச்சா? ஆனால், என்னுடைய தாயின் பெயரால் தாய் சேய் நல விடுதி ஒன்றைத் திருக்குவளையில் திறக்க வேண்டுமென்று கேட்டபோது அவர் உடனடியாக ஒத்துக்கொண்டார். தஞ்சை மாவட்டத்தில் உள்ள சில காங்கிரஸ் நண்பர்கள்கூட, 'என்ன கருணாநிதி அழைத்தால் திருக்குவளைக்குப் போகிறீர்களே' என்று கேட்டதற்கு, 'அவர் அழைத்தாலும்,

[கலைஞர் மு. கருணாநிதி] [2007 ஏப்ரல் 28

அழைக்காவிட்டாலும் அவருடைய தாயார் பெயரால் அந்த தாய் சேய் நல விடுதியைத் திறக்கிறார்; கூப்பிட்டார், உடனே ஒத்துக்கொண்டேன். எனக்கும் அவர் பிறந்த ஊரைப் பார்க்க வேண்டும் என்று ஆசை, அதற்காக நான் வருகிறேன்' என்று பக்தவத்சலம் அப்போது சொன்னார். அவருக்கு நான் மணி மண்டபம் அமைத்தபோது சிலர், வேறு கட்சி நண்பர்கள் சிலபேர், தமிழிலே ஆர்வம் படைத்தவர்கள் கறுப்புக் கொடி காட்டினார்கள் எனக்கு, ஏனென்று கேட்டேன். 'இந்தியைக் கொண்டு வந்தார், உங்களை எல்லாம் பாளையங்கோட்டையிலே போட்டார், அவருக்கு நீங்கள் மணி மண்டபம் அமைப்பது நியாயமா?' என்று கேட்டார்கள். நான் சொன்னேன், 'அது வேறு, இது வேறு, இது மனித நாகரிகம், இதைத் தடுக்காதீர்கள்' என்று நான் சொன்னேன். பெருந்தலைவர் காமராஜர் எந்த அளவுக்கு என்னால் விமர்சிக்கப்பட்டிருப்பார்? பேரறிஞர் அண்ணா அவர்களால் எந்த அளவுக்கு விமர்சிக்கப்பட்டிருப்பார், எங்களால் எந்த அளவுக்கு விமர்சிக்கப்பட்டிருப்பார்? என்னுடைய தாயார் ஸ்டான்லி மருத்துவமனையிலே இறந்தார். நான் மருத்துவமனையிலிருந்து வீட்டுக்கு வந்து கொண்டிருக்கிறேன். சவத்திற்குப் பின்னால், வீட்டு வாசலிலே காமராஜர் இருக்கிறார், என் தாயாருக்கு மாலை மரியாதை செய்துவிட்டு உட்கார்ந்திருக்கிறார் என்றால் அது நாகரிகம், அது அரசியல் பண்பாடு (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது அந்த அரசியல் எல்லாம் கிடையாது.

என்னுடைய ஆசை மருமகன், அருமைக் கண்மணி, முரசொலி மாறன் இறந்து கிடக்கிறான்; கோபாலபுரத்தில் சவம் வைக்கப்பட்டிருக்கிறது, எல்லோரும் வந்து பார்த்துவிட்டுச் செல்கிறார்கள். அன்றைக்குத்தான் அவர்களுடைய வழக்கு ஏதோ சுப்ரீம் கோர்ட்டிலே வெற்றி பெற்றுவிட்டது என்பதற்காகப் பட்டாசு வெடித்தார்கள்; எங்கள் வீட்டைச் சுற்றி பட்டாசு வெடித்தார்கள். பிணம் கிடக்கிறது, வீட்டைச் சுற்றி பட்டாசு வெடித்தார்கள். அது மாத்திரமல்ல, அவர் உயிருக்கு ஆபத்து, இனி பிழைக்க முடியாது, நீங்கள் ஊருக்கு அழைத்துச் சென்றுவிடுங்கள் என்று அமெரிக்காவிலிருந்து அனுப்பிவிட்டார்கள். அனுப்பிய மாறனை விமானத்திலே ஏற்றி வந்துகொண்டிருக்கிறார்கள். நானும் துரைமுருகனும், வீராசாமியும் திருப்பூரிலே இருந்து சேலத்துக்கு வந்து கொண்டிருக்கிறோம் ஒரு நிகழ்ச்சிக்காகச் செல்ல. அப்போது வழியிலே எனக்கு டெலிபோன் வருகிறது. என்ன என்று கேட்டால், 'நீங்கள் எந்த மருத்துவமனையிலே மாறனை அட்மிட் செய்வதாகச்



2007 ஏப்ரல் 28] [கலைஞர் மு. கருணாநிதி]

சொல்லியிருந்தீர்களோ அது காலையிலே பத்திரிகையிலே வந்துவிட்டது அங்கே அட்மிட் செய்வதாக, எம்.ஜி.ஆர். மருத்துவமனை, இராமச்சந்திரா மருத்துவமனை என்று வந்துவிட்டது, இப்போது காலை 10 மணிக்கு எங்களைக் கூப்பிட்டு இடம் கிடையாது என்று சொல்லிவிட்டார்கள், விமானம் வந்து கொண்டிருக்கிறது, என்ன செய்வது?' என்று கேட்டார்கள். நான் உடனே அங்கிருந்தபடியே மருத்துவமனைக்கு போன் செய்து கேட்டால், எல்லோரும் off செய்துவிட்டார்கள் போனை. வேறு வழியே தெரியவில்லை. எங்கே இறக்குவது? அங்கிருந்து வருகிற அந்த நோயாளியை, உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிற நோயாளியை எங்கே இறக்குவது என்று தெரியவில்லை. வேறு வழியில்லாமல் மறுபடியும் அப்போலோவிற்கே கொண்டு வந்து இறக்கினோம். 10 நாட்கள் கழித்து அந்த மருத்துவமனையிலே விசாரித்தால், ஏன் ஐயா இப்படித் திடீரென்று செய்துவிட்டீர்கள் என்று கேட்டால், காலையிலே பத்திரிகையிலே போட்டுவிட்டதால் கூப்பிட்டு மிரட்டினார்கள் என்று சொன்னார்கள். இப்படிப்பட்ட மனிதாபிமானம் நிறைந்தவர்கள் எதிர்க்கட்சியிலே இருக்கின்றார்கள்.

*முற்பகல் 11-55*

அவர்கள் இதுவும் பேசுவார்கள், இன்னமும் பேசுவார்கள். இதையெல்லாம் பொறுத்துக்கொள்ள முடியாது அவர்களுக்கு. அதனால்தான் நாம் கொஞ்சம் அடக்கமாகவே செல்ல வேண்டுமென்று சொன்னேன். அவர்கள் கேட்கவில்லை. இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்துவிட்ட காரணத்தினால்தான், இவ்வளவும் நடக்கிறது. பாவம், திரு. ஆவுடையப்பன் அவர்கள்மீது என்ன கோபம் அவர்களுக்கு? அவர்மேலே எதற்காக நம்பிக்கையில்லை என்று N.C. Motion—நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருகிறார்கள்? அவர்கள்மீது நம்பிக்கையில்லாமலா போய்விட்டது? நம்பிக்கையெல்லாம் இருக்கிறது. எப்படியும், இந்த நிகழ்ச்சியிலே ஒரு கலகத்தை உண்டாக்க வேண்டும். அதற்கு யார் கிடைத்தார்கள், யார் மேலே நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரலாம் என்று பார்த்தார்கள். பாவம் அவர் கிடைத்தார். அவர்மேல் நம்பிக்கையில்லாத் தீர்மானம் வருகிறது. அதுவும் தேதி எப்படியாவது 13 ஆம் தேதி, 12 ஆம் தேதிக்கு வரும் என்று எதிர்பார்த்தார்கள். நேற்றைய அலுவல் ஆய்வுக் குழுவிலே அது மாறிவிட்டது. இப்படிப்பட்ட ஒரு சுபாவம் உள்ளவர்கள், மனித இருதயத்திற்குக் கொஞ்சமும் தொடர்பில்லாத சூழ்நிலையிலேதான் அரசியல் நடத்த வேண்டுமென்று கருதுகின்றவர்கள், எதிர்க்கட்சியாக இருக்கின்ற

காரணத்தால், இவற்றையெல்லாம் நாம் தாங்கித்தான் தீர வேண்டும், இவற்றையெல்லாம் பொறுத்துக் கொண்டுதான் தீர வேண்டும். இவற்றைப்பற்றிக் கவலைப்படக்கூடாது. நாம் இன்றையதினம் சந்திக்கின்ற, இப்படிப்பட்ட ஒரு நாகரிகமற்ற, பண்பாடற்ற அரசியலிலே, வாழக்கூடிய நிலைமை வந்துவிட்டதே என்றுதான் வருத்தப்பட வேண்டும். நான்கூடச் சொல்வதுண்டு, பேராசிரியர் அவர்களிடத்திலே சொல்வேன், வீராசாமி அவர்களிடத்திலேயும் சொல்வேன், நண்பர்களிடத்திலேயெல்லாம் சொல்வேன், '84 வயது, 84 வயது என்று சந்தோஷப்படுகிறீர்களே, நான் கவலைப்படுகிறேன் அப்பா! இவ்வளவு நாட்கள் இருந்ததால் அல்லவா? தமிழ்நாட்டிலே காமராஜரைப் போன்று, பெரியாரைப் போன்று, பக்தவத்சலத்தைப் போன்று, அண்ணாவைப் போன்று இவ்வளவு பெரிய மனிதர்களிடமெல்லாம் பழகிவிட்டு, இன்றைக்கு யார் யாரிடமோவெல்லாம் அரசியல் நடத்த வேண்டிய நிலைமை வந்து விட்டது. இப்படியெல்லாம் 84 வயது வாழ வேண்டுமா' என்றுகூட நான் சொல்லியிருக்கின்றேன். ஆகவேதான், இதற்குமேல் நான் பேச விரும்பவில்லை. ஊருக்கு இன்றைக்கு நான் சொல்லாமலே, ஊர் அறிந்திருக்கிறது உண்மைகளை. அந்த உண்மைகள் நாட்டை ஆளட்டும். இனி, யார் யார் ஊரை ஏமாற்றுகின்றார்கள், யார் யார் எத்திப் பிழைக்கின்றார்கள் என்பதை நாடு உணரட்டும், இன்றைய நிகழ்ச்சிகளின் மூலமாக அவர்கள் தெளிவுபெறட்டும் என்பதை மாத்திரம் நான் கூறிவிட்டு, இன்றைக்கு எனக்காக இங்கே பேசிய உங்கள் அத்தனை பேருக்கும், என்னுடைய ஆட்சியைப் பற்றிச் சிறப்பித்துக் கூறிய உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த வணக்கங்களை உங்கள் பாதங்களிலே சமர்ப்பிக்கின்றேன். இந்த அளவில் இதற்கான விளக்கத்தை, நான் போதும் என்று கருதி நிறுத்துகின்றேன். வணக்கம்.

## 3. தொழிற்கல்விக்கான நுழைவுத் தேர்வு இரத்து—உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பையடுத்து அரசுக்குப் பாராட்டு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு திரு. டி. சுதர்சனம் அவர்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் பகல் 2-30 மணியளவிலே தமிழகத்தினுடைய வரலாற்றிலே ஒரு முக்கியச் செய்தியாக, கிராமப்புற மாணவர்களுக்குப்



பயன்படுகின்ற வகையிலே பொறியியல், மருத்துவக் கல்லூரிகளிலே சேர நுழைவுத் தேர்வு இல்லை என்ற அறிவிப்பினை உயர் நீதிமன்றத்தினுடைய இரண்டு நீதிபதிகள் அறிவித்திருக்கிறார்கள்.

பிளஸ்-2 படித்த பிறகு மருத்துவம், பொறியியல், சட்டப் படிப்பு போன்ற தொழில் படிப்புகளில் சேர நுழைவுத் தேர்வு என்னும் முறை பல ஆண்டுகாலமாக இருந்தது. கிராமப்புற ஏழை மாணவர்கள் இந்தத் தேர்வை எழுத சிரமப்படுவதாக அறிந்து, தமிழக அரசு சிறந்த கல்வியாளரான திரு. அனந்தகிருஷ்ணன் அவர்களுடைய தலைமையிலே ஒரு குழுவை ஏற்படுத்தி, அந்தக் குழுவினுடைய பரிந்துரைகளை ஏற்று, நுழைவுத் தேர்வு இரத்து என்கிற ஒரு சட்டத்தை இந்த அரசு இயற்றி, அதைக் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி, சிறந்த கல்வியாளரான குடியரசுத் தலைவர் அவர்களும் அதற்கு ஒப்புதல் அளித்து, அதற்குப் பின்னாலே நீதிமன்றத்திற்குச் சில பேர் சென்று அந்த வழக்கிலே சில குறைகள் இருக்கின்றன என்று சொல்லி அதை விசாரித்த நீதிபதிகள் திரு. மிஸ்ரா அவர்களும் திரு. சம்பத்குமார் அவர்களும் ஒரு நல்ல தீர்ப்பினை வழங்கியிருக்கின்றார்கள்.

'தொழிற் கல்லூரிகளிலே மாணவர்களைச் சேர்க்கும் முன்பு நுழைவுத் தேர்வின் அடிப்படையிலே அவர்கள் சேர்க்கப்படுகின்றார்கள். இத்தேர்வானது மாணவர்களிடையே ஒரு குறிப்பிட்ட தகுதியை உருவாக்குவதற்கு நடத்தப்படுவதல்ல. சி.பி.எஸ்.இ. கல்வித் திட்டத்திலும், மாநிலக் கல்வித் திட்டத்திலும் பிளஸ்-2 படித்தவர்களிடையே சமன்பாட்டை ஏற்படுத்துவதற்காகவே நுழைவுத் தேர்வு நடத்தப்படுகிறது. பிளஸ்-2 மதிப்பெண்களை மட்டும் அடிப்படையாக வைத்து மருத்துவப் படிப்பில் சேர்க்கலாம்' என்று இந்திய மருத்துவக் கவுன்சிலும் கூறியிருக்கிறது. இரண்டு வெவ்வேறு பாடத் திட்டங்களிலே பிளஸ்-2 படித்த மாணவர்களைச் சமன்படுத்த தமிழக அரசு புதிய முறையை அறிமுகப்படுத்தியிருக்கிறது. இவ்வாறு சமன்பாடு ஏற்பட்டால் அதை ஆட்சேபிக்க முடியாது. மிகச் சரியான சமன்பாடு என்பது மாயை. நுழைவுத் தேர்விலேகூட அனைத்து வினாக்களையும் நன்கு புரிந்துகொண்டு அதற்கான சரியான விடையை மாணவர்கள் எழுதுகிறார்கள் என்று சொல்லமுடியாது. அவர்கள், கேள்விகளுக்கு சில சமயம் யூகத்தின் அடிப்படையிலே வினாக்களை டிக் செய்கிறார்கள்.

கல்வித் துறை தொடர்புடைய நுழைவுத் தேர்வை இரத்து செய்தல் சட்டத்தை இயற்ற தமிழக சட்டப்பேரவைக்கு அதிகாரம் உள்ளது. எனவே, இதில் நீதிமன்றம் தலையிடமுடியாது' என்றும், 'கட்டடக்

கலை படிப்பிற்கு (B.Arch.) நுழைவுத் தேர்வில் aptitude test என்ற ஒரு தேர்வு நடத்தப்படுகிறது. இந்த aptitude test தொடருமா என்று தமிழக அரசு சட்டம் எதுவும் குறிப்பிடவில்லை. B.Arch., படிப்பில் மாணவர்களுக்கு aptitude test நடத்த வேண்டும்' என்றும் நீதிபதிகள் தீர்ப்பிலே கூறியிருக்கிறார்கள்.

*நண்பகல் 12-00*

இப்படி வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தத் தீர்ப்பினால் தமிழகத்திலே இருக்கின்ற, கிராமப்புறத்திலே இருக்கின்ற மாணவர்கள் மிகவும் பயன்படுவார்கள். ஒரே ஒரு உதாரணத்தை மட்டும் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு மாணவன் சென்ற ஆண்டு என்னிடத்திலே வந்தான். பொறியியல் கல்லூரியிலே சேரவேண்டும் என்று விரும்பினான். உன்னுடைய மதிப்பெண் என்னவென்று கேட்டேன். கணிதத்திலே 200-க்கு 198 மார்க் என்று சொன்னான். அதுபோன்று எல்லாப் பாடங்களையும் சேர்த்து 1,200-க்கு 1,100 மதிப்பெண்கள் பெற்றிருந்தான். ஆனால், நுழைவுத் தேர்வு எழுதுகின்றபோது மார்க் குறைந்துபோய்விட்டது. ஏனென்று சொன்னால், அவன் கிராமப்புறத்திலே இருப்பவன். கிராமத்திலே இருக்கின்ற மாணவனுக்கு சென்னையிலே வாழ்கின்ற மாணவர்களுக்குள்ள அந்த General Knowledge என்று சொல்லப்படுகின்ற விஷயங்கள் தெரிவதில்லை. படிக்கின்ற படிப்புக்கும் இந்த நுழைவுத் தேர்வுக்கும் சம்பந்தம் இல்லாமல் கேள்வி கேட்கிறார்கள். அதிலே மார்க் குறைந்துவிட்டது என்று அழுதான். அதற்குப் பின்னாலே அவன் நல்ல மதிப்பெண் பெற்றிருக்கிறான். பரவாயில்லை என்று சொல்லி Management quota-வில் சேர்ப்பதற்கு ஏற்பாடு செய்தேன். அப்படிப்பட்ட கிராமப்புற மாணவனின் வாழ்க்கையிலே இன்றைக்குத் தமிழக அரசு, குறிப்பாக தமிழகத்தின் முதலமைச்சர் அவர்கள் விளக்கேற்றி வைத்திருக்கிறார்கள். இந்தத் தமிழகத்திலே இருக்கிற கிராமப்புற மாணவர்கள் இந்த அரசை காலம் காலமாக வாழ்த்துவார்கள் என்று சொல்லி வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப்பேரவையிலே நிறைவேற்றப்பட்டிருக்கிற நுழைவுத் தேர்வு இரத்து என்ற தமிழக அரசினுடைய சட்டம், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களாலே கொண்டுவரப்பட்ட சட்டம்.



சென்னை உயர் நீதிமன்றத்தாலே அந்தச் சட்டம் செல்லும் என்று நேற்று செய்யப்பட்டுள்ள அறிவிப்பு ஒரு மகத்தான அறிவிப்பு ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களுக்கு, குறிப்பாக பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஆதி திராவிட, பழங்குடியின சிறுபான்மையின மக்களுக்குக் கிடைத்த மாபெரும் பயனுள்ள சட்டமாக இதை நான் கருதுகிறேன். அதிலும் குறிப்பாக தமிழ்நாடு சட்டப்பேரவையில் தமிழ்நாட்டு மக்களுக்கு சில ஆண்டுகளிலே அற்புதங்கள் எப்போது நிகழ்கின்றன என்றால், ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வுரிமைக்காக தந்தை பெரியார் பிறந்த மண்ணில் சமூக நீதி எப்போது காக்கப்படுகிறது என்றால், கலைஞர் முதலமைச்சராக வருகின்ற நேரத்திலே எல்லாம் சமூக நீதி காக்கப்படுகிறது, நிலைநாட்டப்படுகிறது என்பதை தமிழ்நாடு நிரூபித்துக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு இந்தியாவிற்கு வழிகாட்டிக்கொண்டிருக்கிறது என்பதை நான் பெருமையோடு சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

சமூக நீதியில் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக வருகின்ற நேரத்தில் எந்தெந்த வகையிலே சாதனை படைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பட்டியலிட்டுச் சொல்லமுடியும். இதுவரை இல்லாத அளவிற்கு ஆதி திராவிட மக்களுக்கு இட ஒதுக்கீட்டை கூடுதலாக வழங்கியது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில். பழங்குடியின மக்களுக்கெனத் தனியாக இட ஒதுக்கீடு வழங்கிய பெருமைக்குரியவர் நம்முடைய கலைஞர் அவர்கள். இன்னும் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களின் நீண்டநாள் கோரிக்கைளை ஏற்று இட ஒதுக்கீட்டை வழங்கிய பெருமைக்குரிய மகத்தான தலைவர் டாக்டர் கலைஞர் என்பதை நான் மீண்டும் ஒருமுறை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இப்படிப் பட்டியலிட்டுக்கொண்டே போகலாம். சிறுபான்மையின மக்களுக்கு இட ஒதுக்கீடு இல்லை. அது இந்தியாவில் நீண்டநாள் கேள்விக் குறியாக இருந்தது. இப்போது சிறுபான்மை மக்களுக்கும், இஸ்லாமிய பெருமக்களுக்கும், கிறிஸ்துவப் பெருமக்களுக்கும் இட ஒதுக்கீடு விரைவில் வரும் என்ற ஓர் அறிவிப்பை கலைஞர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். இப்படி அடுக்கிக்கொண்டே போகலாம்.

*பிற்பகல் 12-05*

அந்த வரிசையிலேதான், கிராமப்புறத்திலே இருக்கிற மக்கள், ஏழையெளிய நடுத்தர குடும்பத்தைச் சார்ந்தவர்கள், அதேபோல, பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட, ஆதி திராவிட, சிறுபான்மை மக்களின் குழந்தைகள் எல்லாம் உயர் கல்வி படிக்க (ட டியாது.

இவர்களுக்கு உயர் கல்வி எட்டாக் கனியாக இருந்த காலம் அன்று. அதுமட்டுமல்ல, ஏழையெளியவர்களின் குழந்தைகள் உயர் கல்வியிலே நுழைவதற்கு, நுழையா தேர்வு என்று இந்த நுழைவுத் தேர்வை சொல்லிய காலம் உண்டு. அதைத்தான் மனதிலே வைத்துக் கொண்டு எங்களுடைய நிறுவனத் தலைவர் மருத்துவர் அய்யா அவர்கள் தொடர்ந்து போராடினார்கள். கடந்த ஆட்சிக் காலத்திலே போராடினார்கள். அவர்களே ஒவ்வொரு கல்லூரிதோறும் சென்று துண்டுப் பிரசுரங்களைக் கொடுத்து, மக்கள் மத்தியிலே, மாணவர்கள் மத்தியிலே விழிப்புணர்வை உண்டாக்கினார்கள்.

அந்த ஆட்சிக் காலத்திலே இந்த நுழைவுத் தேர்வு இரத்து என்ற ஓர் அறிவிப்பைச் செய்துவிட்டு, நீதிமன்றத்திலே அதை வாதாடி, நிலைபெறுவதற்கு ஒரு வாய்ப்பில்லாத நிலையை உருவாக்கிவிட்டார்கள்; காலத்தைக் கடத்திக் கொண்டிருந்தார்கள். அப்படிப்பட்ட காலத்திலேதான் மீண்டும் நுழைவுத் தேர்வு இரத்து என்ற சட்டத்தை கலைஞர் அவர்கள் கொண்டு வந்து, அதற்குரிய வகையிலே நீதிமன்றத்திலே வற்புறுத்தி, வாதாடி, இந்தச் சட்டம் செல்லும் என்ற நிலையைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று சொன்னால், இது சமூக நீதியினுடைய வெற்றிப் படிகள், வரலாற்றின் வெற்றிப் படிகள் என்பதை மீண்டும் ஒருமுறை இங்கே நான் (மேசையைத் தட்டும் ஒலி) பெருமையோடு சொல்லிக்கொண்டு, இந்த நுழைவுத் தேர்வு இரத்து என்ற சட்டத்தை நிலைநாட்டிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களின் சார்பிலே மனமார்ந்த பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதலமைச்சர் அவர்களுக்கு உறுதுணையாக இருந்த உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும், அவர்களுக்கு உறுதுணையாக இருந்த அதிகாரி பெருமக்களுக்கும், தமிழக அரசிற்கும் மீண்டும் ஒரு முறை நான் இங்கே நன்றி சொல்ல விரும்புகிறேன். நன்றி சொல்வது மட்டுமல்ல, நான் பாராட்டினேன். பாராட்டியது நான் மட்டுமல்ல, இரண்டு நீதிபதிகள் இதிலே சொல்லியிருக்கிறார்கள். அதிலேயும் ஒரு நீதிபதி அவர் தீர்ப்புக்குப் பிறகு சொல்கிறார்—திரு. மிஸ்ரா அவர்களும், மாண்புமிகு திரு. சம்பத்குமார் அவர்களும் தீர்ப்பு சொன்னபிறகு, மாண்புமிகு நீதியரசர் சம்பத்குமார் சொல்கிறார்—இந்த வழக்கின் வரலாறு அடுத்தடுத்த அரசாங்கங்களின் உயர்ந்த எண்ணத்தைப் பிரதிபலிக்கிறது. அதாவது, நுழைவுத் தேர்வை ஒழிக்க வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தைப் பிரதிபலிக்கின்றது. இந்த உயர்ந்த எண்ணம் என்பது இந்த அரசாங்கத்தினுடைய எண்ணம்.



இந்த அரசாங்கத்தினுடைய எண்ணம் என்பது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் எண்ணம். அந்த எண்ணத்தை வழக்கு பிரதிபலிக்கின்றது என்று உயர்ந்த நோக்கத்தோடு பாராட்டிச் சொல்லியிருக்கிறார்கள்.

நுழையாத் தேர்வாக இருந்த நுழைவுத் தேர்வை இரத்து செய்து ஒடுக்கப்பட்ட மக்களுக்கு மருத்துவம், பொறியியல், கால்நடை மருத்துவம், பல் மருத்துவம், வேளாண்மை போன்ற உயர் கல்வி வழங்க வித்திட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அரசை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலேயும், இதற்காகத் தொடர்ந்து போராடி வந்த சமூக நீதிக் காவலர் மருத்துவர் அய்யா அவர்களின் சார்பிலேயும் (மேசையைத் தட்டும் ஒலி) வாழ்க, வாழ்க என்று வாழ்த்தி இந்த ஆட்சி நிலைபெற வேண்டும், உங்களுக்கு உறுதுணையாக இருப்போம், சமூக நீதிக்கு வித்திட்ட அரசு, சமூக நீதியினுடைய வெற்றிப் படிகளைத் தொடர்ந்து நிலைநிறுத்த வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவம் மற்றும் பொறியியல் கல்லூரிகளுக்கு நடைபெற்று வந்த நுழைவுத் தேர்வை இரத்து செய்து, தமிழக அரசாலே நிறைவேற்றப்பட்ட சட்டம் செல்லாது என்ற வகையிலே, ஒரு மாணவன் உயர் நீதிமன்றத்திலே தொடுத்த வழக்கையொட்டி, அந்தச் சட்டம் கொண்டு வந்ததனுடைய அவசியத்தையும், தேவைகளையும் தமிழக அரசின் சார்பிலே எடுத்துச்சொல்லி, வாதாடி, அந்தச் சட்டம் செல்லும் என்று நேற்றையதினம் உயர் நீதிமன்றம் அளித்திருக்கக் கூடிய தீர்ப்பு உண்மையிலேயே வரவேற்கத்தக்க ஒரு நல்ல செய்தி என்ற முறையில் அதை வரவேற்கிறோம்.

வசதி படைத்தவர்கள், இன்றைக்கு இந்த பிளஸ்-2 தேர்வு எழுதிவிட்டு, அதற்கான ரிசல்ட் வருவதற்கு முன்னால், நுழைவுத் தேர்வு பயிற்சி மையங்களுக்குச் சென்று, கூடுதலாகச் செலவு செய்து, உரிய பயிற்சிகளைப் பெற்று, அதற்காகத் தயாராகிக் கொள்கிறார்கள். சாதாரணமாக சமூகத்திலே பின்தங்கிய, பொருளாதாரத்தில் பின்தங்கி இருக்கக்கூடிய அந்த ஏழை மாணவர்கள், அந்தத் நுழைவுத் தேர்வுக்கு வசதியான மாணவர்களோடு போட்டியிட முடியாத ஒரு

நிலை நிலவி வந்தது. அதற்கு முற்றுப்புள்ளி வைக்கின்ற வகையிலே இந்த நுழைவுத் தேர்வை இரத்து செய்து, தமிழக அரசு சட்டம் இயற்றி, கொண்டு வந்தது உண்மையிலேயே பாராட்டிற்குரியது.

இப்போது நீதிமன்றத்திலே தொடுக்கப்பட்ட அந்த வழக்கையும் தள்ளுபடி செய்ய அரசின் இந்தச் சட்டம் செல்லும் என்ற வகையில் வாதாடி, அதில் வெற்றி பெற்றிருக்கிற தமிழக அரசிற்கும், சமூக நீதிக்காகத் தொடர்ந்து போராடுவதிலே முன் வரிசையிலே நிற்கிற நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே மனப்பூர்வமான வாழ்த்துகளை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறோம்.

*பிற்பகல் 12-10*

காலையிலே நம்முடைய உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, இந்த உயர் கல்வி நிலையங்களில், தனியார் சுய நிதிக் கல்லூரிகள் எல்லையில்லாமல் வசூலிக்கிற கல்விக் கட்டணத்தை முறைப்படுத்தி அந்த ஏழை மாணவர்கள் அதற்குள்ளே எளிதாக நுழைவதற்கு வாய்ப்புக் கிடைப்பதன்மூலம், இந்தச் சட்டம் நூற்றுக்கு நூறு முழுமையாக அந்த ஏழை மக்களுக்குப் பயன்படுகிற ஒரு நல்ல வாய்ப்பு உருவாகும். அதையும் இந்த அரசு மேற்கொள்ள வேண்டும் என்று அன்போடு கேட்டு இந்த அரசினுடைய நடவடிக்கைகளுக்கு மீண்டும் ஒரு முறை மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே மனப்பூர்வமான எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் கல்வியில் மாணவர்களுக்கான நுழைவுத் தேர்வை இரத்து செய்வதற்கான சட்டத்தை நமது மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்கள் நிறைவேற்றி சிக்கலுக்கு உள்ளாகாமல் நீதிமன்றம் சென்று, அது நடைமுறைப்படுத்தப்படும் என்று நீதி வழங்கப்பட்டு இருப்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இதன்மூலமாக சமூக நீதி காக்கப்பட்டிருக்கிறது. அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அந்த வாய்ப்பைப் பெற்றிருக்கிறோம். ஆகவே, இப்படி தொலைநோக்குப் பார்வையோடுகூடிய ஒரு சட்டத்தை நிறைவேற்றி,



அந்தச் சட்டம் திரும்பவும் நீதிமன்றத்திற்குச் சென்று, அதன்மூலமாகவும் உரிய தீர்ப்பு கிடைத்து, அதன்மூலமாக நமது கிராமப்புறத்து ஏழையெளிய மாணவர்கள் பயன்பெறப் போகிறார்கள் என்ற அந்த மகிழ்ச்சியான செய்தி வந்திருப்பது உண்மையிலேயே பாராட்டத்தக்கது. அதற்குரிய அனைத்துப் பெருமைகளும் டாக்டர் கலைஞர் அவர்களையே சாரும் என்பதைத் தெரிவித்து, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே அதற்கான வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார், சுருக்கமாகச் சொல்லுங்கள்.

***திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக கிராமப்புற மாணவர்கள், ஏழையெளிய மாணவர்கள் இப்படி ஒரு நிலை ஏற்படாதா என்று மிகவும் வேதனையோடு ஏங்கித் தவித்ததற்கு ஒரு விடிவு காலம் இப்போது நமக்கெல்லாம் வந்திருக்கிறது. அதற்காகச் சரியான முறையிலே சட்டம் இயற்றி, இதை வேறு யாரும் தட்டிப் பறித்துவிட முடியாத அளவுக்கு கிராமப்புற மாணவர்கள் வாழ்விலே ஓர் ஒளியேற்றி வைத்திருக்கின்ற இந்த அரசின் நடவடிக்கையை நான் மனமாரப் பாராட்டுகின்றேன். உயர் கல்வித் துறையிலே எடுக்கப்பட்டிருக்கின்ற நடவடிக்கையை பள்ளிக் கல்வித் துறையிலே எடுக்கப்படுகிற சீர்திருத்தங்கள்மூலம்தான் பாதுகாக்கப்பட முடியும். அதனாலே அந்தப் பள்ளிக் கல்வித் துறையிலே கிராமப்புற மாணவர்கள் சரியாக இந்தப் பலனை அனுபவிக்கிற அளவுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொண்டு அமைகிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தத் தீர்ப்பு அரசுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் கிடைத்த வெற்றி. பேரவைத் தலைவர் என்ற முறையில் எனது பாராட்டையும் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 4. கவன ஈர்ப்பு

### வேலூர் மாவட்டம், கூட்டுறவு நில வள வங்கிக் கடன்கள்-ஜப்தி நடவடிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்

[பேரவைத் தலைவர்] [2007 ஏப்ரல் 28

திரு. சி. ஞானசேகரன் அவர்கள் கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டத்தில் கூட்டுறவு நிலவள வங்கிகளால் வழங்கப்பட்ட பண்ணைசாராக் கடன்களை வசூலிக்க ஜப்தி நடவடிக்கைகள் எடுக்கப்படுவதால் ஏற்பட்டுள்ள நிலை" குறித்து மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது:

**அறிக்கை**

வேலூர் மண்டலத்தில் 9 தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளில் (நில வள வங்கிகள்) 1,074 உறுப்பினர்களுக்கு பண்ணைசாராக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றின் மொத்தக் கடன் நிலுவைத் தொகை ரூ.1,230.14 இலட்சங்களாகும்.

தற்போது தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ள வட்டிக் குறைப்பு மற்றும் அபராத வட்டித் தள்ளுபடித் திட்டத்தின்கீழ் இதுவரை 40 கடன்தாரர்கள் ரூ.39.87 இலட்சங்கள் மட்டுமே செலுத்தி பயன்பெற்றுள்ளனர். அபராத வட்டி சலுகை இதுவரை ரூ.3.20 இலட்சங்கள் அளிக்கப்பட்டுள்ளது. வட்டிக் குறைப்புத் திட்டத்தின் காலத்தை அரசு நீட்டிப்புச் செய்து தற்போது ஆணை பிறப்பித்துள்ளது. அதன்படி கடன்தாரர்கள், கடன் தொகையை 30-6-2007-க்குள் 25 சதவிகிதம் செலுத்தி மீதமுள்ள 75 சதவிகிதத்தை 31-12-2007-க்குள் செலுத்திப் பயன்பெறலாம்.

எந்த ஒரு கடன்தாரர் மீதும் ஜப்தி நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன்.



2007 ஏப்ரல் 28]

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையை படித்துப் பார்த்தேன். இதிலே நம்முடைய வேலூர் மாவட்டத்தில் பண்ணைசாராக் கடன்களைப் பெற்றவர்கள் 1,074 பேர், அது 9 வங்கிகளிலே பெற்று இருக்கிறார்கள். 12 கோடி ரூபாய்க்கு மேல் அவர்கள் கடனாகப் பெற்று இருக்கிறார்கள். நம்முடைய தமிழகத்தில் இருக்கக்கூடிய மாவட்டங்களில் மொத்தமாக எடுத்துக் கொண்டாலும்கூட இந்தப் பண்ணைசாராக் கடன்— முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே இருக்கிற காரணத்தினாலே இன்னொரு கோரிக்கையை இதோடு சேர்த்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்—வீட்டு வசதித் துறைமூலமாகப் வீடு கட்டுவதற்காகவும் சில பேர் கடன்களை வாங்கியுள்ளார்கள். இங்கே கூட்டுறவுத் துறையின்மூலமாக பண்ணைசாராக் கடன், அதேபோல வீடு கட்டுவதற்காக வாங்கிய அந்தக் கடன்களில் இருக்கக்கூடிய வட்டியையாவது தள்ள வேண்டும் என்று கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்வது, இப்பொழுது நீங்கள் வட்டி, அபராத வட்டியைத் தள்ளுபடி செய்வதற்கு ஏற்பாடு செய்து, ஓரளவிற்கு அதற்குக் காலக் கெடுவும் கொடுத்திருக்கிறீர்கள். 700 கோடி ரூபாய்தான் வரும் என்கிறார்கள். ஆகவே, வீட்டு வசதிக் கடனையும், இந்தப் பண்ணைசாராக் கடனையும் இந்த அரசு தள்ளுபடி செய்வதற்கு முன்வருமா என்று மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு அமைச்சரையும் தங்கள் வாயிலாக கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களே குறிப்பிட்டுவிட்டார்கள். பண்ணைசார்ந்த கடன் 7,000 கோடி ரூபாய் ஏற்கெனவே தள்ளுபடி செய்யப்பட்டு, இந்த அரசுக்குப் பல்வேறு வகையிலே பாராட்டுகள் வந்து கொண்டிருக்கின்றன. அது ஒன்று. இந்தப் பண்ணைசாராக் கடனைப் பொறுத்த அளவிற்கு, மனுக்களே எப்படி வந்தன என்று சொன்னால், வட்டியைக் குறைக்க வேண்டுமென்றுதான் மனு கொடுத்தார்கள். எனவே, 18 சதவிகித வட்டியைக் குறைத்து, 12 சதவிகிதம் என்று மூன்றாவது மாதம் வரை கெடு வைத்திருந்தோம். மீண்டும் அவர்கள் தொடர வேண்டுமென்று

[திரு. எ.வ. வேலு] [2007 ஏப்ரல் 28

சொன்னார்கள். இப்பொழுது 30-6-2007 வரை அது தொடர்ந்து கொண்டிருக்கிறது. 25 சதவிகிதத்தைக் கட்டிவிடலாம். மீதித் தொகையை பன்னிரண்டாவது மாதத்திற்குள் கட்டலாம் எனச் சலுகை கொடுத்து, கிட்டத்தட்ட 3,272 விவசாயிகள் கட்டிக் கொண்டிருக்கின்றார்கள். அதன்மூலமாக அரசுக்கு 22.11 கோடி ரூபாய் இப்போது வந்திருக்கிறது. எனவே, தொடர்ந்து வந்துகொண்டுதான் இருக்கிறது. அதற்கு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒத்துழைப்பு நல்குவதன்மூலமாகத்தான் நம்முடைய வங்கிகளை வளமாக ஆக்க முடியும். அதற்கு ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

## 5. அறிக்கைகள் அளித்தல்

### மனுக்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல், திரு. அர. சக்கரபாணி, மனுக்கள் குழுவின் தலைவர்.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2006-2007 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் பதின்மூன்றாவது முதல் பதினெட்டாவது வரையிலான ஆறு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

## 6. மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 38—பொதுத் துறை**

**(ஆ) கோரிக்கை எண் 48—தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)**

**(இ) கோரிக்கை எண் 49—இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை**

**(ஈ) கோரிக்கை எண் 15—சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை**

---



2007 ஏப்ரல் 28]

### (அ) கோரிக்கை எண் 38—பொதுத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007-2008 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 38-பொதுத் துறை, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.134,41,07,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.5,00,00,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 321, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.134,41,07,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5359, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.134,41,07,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7304, திரு. என்.ஆர். ரங்கராஜன், இருக்கையில் இல்லை.

**வெட்டுத் தீர்மானம் எண் 8901, திரு. விடியல் எஸ். சேகர், இருக்கையில் இல்லை.**

**வெட்டுத் தீர்மானம் எண் 11163, திரு. து. அமரமூர்த்தி, இருக்கையில் இல்லை.**

வெட்டுத் தீர்மானம் எண் 11396, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5255, திரு. கு. பாண்டுரங்கன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6492, திரு. சி. சண்முகவேலு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7749, திரு. டி. ஜெயக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7277, திரு. வே. மாரிமுத்து, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8563, திரு. கே.எல். இளவழகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8614, திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8744, திரு. தி. வேல்முருகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8955, திரு. கே.வீ. ராமநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9553, திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.134,41,07,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10117, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 10452, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.134,41,07,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11196, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.134,41,07,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11617, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.134,41,07,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11866, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.134,41,07,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5342, திரு. ஆர்.டி. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6131, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தலைமைச் செயலகத்திற்கு வரும் ஆண், பெண் பார்வையாளர்களுக்குத் தனித்தனியாகக் கழிப்பறைகள் (சுகாதார வளாகம்) கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.134,41,07,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6582, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புகைப்படத்துடன்கூடிய வாக்காளர் பட்டியல் தயாரிக்கும்போது போலி வாக்காளர்களைத் தடுக்க வீடுகள்தோறும் அதிகாரிகள் நேரில் சென்று பட்டியலைத் தயாரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.134,41,07,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவைக்குள் வந்து அமர்ந்தனர்)*



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6592, திரு. செ. தாமோதரன்.

**திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொதுத் துறைக்குச் சொந்தமான தங்கும் விடுதியில் சட்டமன்ற உறுப்பினர் குடும்பத்தோடு தங்கும்போது கட்டணமின்றி இலவசமாகக் கொடுத்து உதவ வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.134,41,07,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6628, திருமதி பெ. கமலாம்பாள், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7394, திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஓய்வூதியம் பெறாத சுதந்திரப் போராட்ட வீரர்கள் மதுரை மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் கொடுத்த மனுக்கள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.134,41,07,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,00,00,000/ ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8368, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதியில் உள்ள அகதிகள் முகாமில் அடிப்படை வசதிகள் செய்து தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.134,41,07,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9002, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், பேரூர் தொகுதியில் விடுபட்ட வாக்காளர்களுக்குப் புகைப்படம் எடுத்து வாக்காளர் அட்டை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.134,41,07,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9623, முனைவர் கு. ஜெயக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9852, திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் தமிழக அரசுக்கு எவ்வளவு நிதிச் செலவு ஆகியுள்ளது என்பதைத் தெரிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.134,41,07,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9904, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாய், தந்தையை இழந்த பள்ளிக் குழந்தைகளைக் கண்டறிந்து அவர்களுக்கு முதல்வர் நிதி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.134,41,07,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10291, திரு. மு.க. பெரியசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 10765, திரு. கோ. எதிரொலி மணியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 10805, திரு. ம. குணசேகரன், இருக்கையில் இல்லை.

## (ஆ) கோரிக்கை எண் 46—தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 46—தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை), மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.24,58,37,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

பிற்பகல் 12-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 315, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,58,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5356, திரு. சு. சிவராஜ்.

**திரு. க. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,58,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8696, திரு. விடியல் எஸ். சேகர், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 11399, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,58,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5258, திரு. கு. பாண்டுரங்கன்.

**திரு. கு. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,58,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6473, திரு. சி. சண்முகவேலு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8538, திரு. கே.எல். இளவழகன்.



**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,58,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8595, திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8729, திரு. தி. வேல்முருகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8960, திரு. கே.வீ. ராமநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 10079, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,58,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10284, திரு. மு.க. பெரியசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 10443, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,58,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11197, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,58,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11872, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,58,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4578, திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உயர் கல்வி பயில விண்ணப்பிப்பவர்களில் தமிழ்வழி கற்ற மாணவ, மாணவியருக்கு அரசு முன்னுரிமை தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,58,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5289, திரு. என். நன்மாறன்.



**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "1500 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ் இலக்கண, இலக்கிய நூல்களைப் பிற நாட்டவரும் பிற மொழியினரும் அறிய மொழி பெயர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,58,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5514, செல்வி. கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருமணம் செய்த, செய்யாத ஆண், பெண் இருபாலருக்கும் பெயரின் முன்னால் திருமிகு என்ற சொல்லை அதிகாரபூர்வமாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,58,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5853, திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்தணி நகரத்தில் தமிழ் வளர்ச்சிக்கென்று ஓர் அரசு அலுவலகம் உருவாக்கி அப்பகுதி மாணவ, மாணவிகள் பயன்பெற நடவடிக்கை எடுக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,58,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6002, திரு. க. இராஜேந்திரன்.

**திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஜெயங்கொண்டம் தொகுதியில் உள்ள அனைத்து நூலகங்களையும் உரிய முறையில் பராமரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,58,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6049, திரு. ந. கணபதி.

**திரு. ந. கணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பிறமொழிகளில் உள்ள அரிய நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட நடவடிக்கை எடுக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,58,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6126, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூரில் இசைப் பள்ளி, இசைக் கல்லூரி தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,58,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6593, திரு. செ. தாமோதரன்.



**திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசின் அனைத்துத் துறைகளிலும் தமிழ் மொழியை முதன்மையாகவும், முழுமையாகவும் பயன்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,58,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6621, திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீதிமன்றம் உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் தமிழை ஆட்சி மொழியாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,58,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7395, திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி வட்டத்தில் உள்ள நலிவுற்ற கலைஞர்கள் இராஜா இராணி ஆட்டம் ஆடுவோர், தவில் வித்துவான் போன்றவர்களுக்கு உதவித் தொகை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,58,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7481, திரு. ஆர். வைத்திலிங்கம்.

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்மொழி வாயிலாகப் பயிலும் மாணவர்களுக்கு வழங்கும் ஊக்கத் தொகையை அதிகரித்து வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,58,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7692, திரு. வீர. இளவரசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7748, திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சையில் உள்ள தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு அதிக நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,58,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8235, டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ் மொழியில் ஆரம்பப் பள்ளியிலிருந்து பிளஸ்-2 வரை படிக்கும் மாணவர்களுக்கு உயர் கல்வியில் முன்னுரிமை கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,58,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9017, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், பேரூர் தொகுதி, ஆறாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்புவரை பயிலும் மாணவர்களுக்குத் தமிழ் மன்றம் ஏற்படுத்தி கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,58,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9130, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பிற மொழிகளில் உள்ள அரிய நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,58,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9346, திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அனைத்துப் பள்ளிகளிலும் தமிழ் மொழியைக் கட்டாயமாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,58,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9560, திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழில் படித்துள்ள மாணவர்களுக்கு அனைத்துத் துறைகளிலும் முன்னுரிமை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,58,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9601, திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு ஒன்றியத்தில், தமிழ் இடைநிலை ஆசிரியர் பணியிடத்தில் விதிகளுக்குப் புறம்பாக தெலுங்கு ஆசிரியை 2007 ஆம் ஆண்டில் பணி மாறுதலில் அமர்த்தப்பட்டுள்ளதை இரத்து செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,58,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9677, திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபடும் மொழிப் புலவர்கள் மற்றும் கவிஞர்களுக்குச் சிறப்புச் சலுகைகள் அளிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,58,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10391, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் தமிழ் மொழி வாயிலாகப் பயிலும் மாணவர்களுக்கு வழங்கும் ஊக்கத் தொகையை அதிகரித்து வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,58,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10762, திரு. கோ. எதிரொலி மணியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 10791, திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இளம் தமிழ் எழுத்தாளர்களுக்கு அரசு உதவ வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,58,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11666, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தனியார் நிறுவனங்களில் தமிழில் பெயர்ப் பலகை வைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,58,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

## (இ) கோரிக்கை எண் 49-இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 49-இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.45,09,49,000/-, மூலதனக் கணக்கில் ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.2,50,00,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 347, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,09,49,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5353, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்



ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,09,49,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7985, திரு. விடியல் எஸ். சேகர், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 11402, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,09,49,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5130, திரு. சி. சண்முகவேலு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5261, திரு. கு. பாண்டுரங்கன்.

**திரு. கு. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,09,49,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7734, திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,09,49,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கபடெறுகின்ற ரூ.2,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6861, திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,09,49,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7910, திரு. மு.க. பெரியசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8015, திரு. கே.வீ. ராமநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8586, திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8750, திரு. தி. வேல்முருகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 10094, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,09,49,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11110, திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,09,49,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7276, திரு. வே. மாரிமுத்து, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 11882, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,09,49,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8276, திரு. கே.ஏ. செங்கோட்டையன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1375, திரு. அ. தமிழரசு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1490, திரு. கு. ஹசன் அலி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1643, திரு. செ. சின்னச்சாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2698, திரு. பெ.சு. விஜயகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4476, திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதியில் விளையாட்டு அரங்கம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,09,49,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4581, திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இராஜபாளையம் தொகுதியில் தாலுகா அளவில் ஒரு விளையாட்டு அரங்கம் புதியதாக அரசு கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,09,49,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5198, திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகங்கை தலைநகரில் அனைத்து விளையாட்டுகளுக்கான விளையாட்டு மைதானங்கள் உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,09,49,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5273, திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், அரக்கோணம் வட்டம், காவேரிப்பாக்கத்தில் விளையாட்டு மையம் ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,09,49,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5276, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேற்கு வங்கத்தில் உள்ளதுபோல் தமிழகத்திலும் இளைஞர் நலக் குழு அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,09,49,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5343, திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தேனி மாவட்ட விளையாட்டரங்கத்தில் நீச்சல் குளம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,09,49,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5388, டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5562, செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டுக்கல் நகராட்சிக்குச் சொந்தமான இடங்களிலும், என்.ஜி.ஓ. காலனி போன்ற கிராமப்புறப் பகுதிகளிலும் விளையாட்டு அரங்கம் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,09,49,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5656, திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்தணி நகரில் இளைஞர்கள் பயன்பெறும் வகையில் ஒரு விளையாட்டு அரங்கம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,09,49,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5918, திரு. எல். ரவிச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6003, திரு. க. இராஜேந்திரன்.

**திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஜெயங்கொண்டம் தொகுதியில் உள்ள விளையாட்டு அரங்கங்களில் தேவையான உடற்பயிற்சி உபகரணங்கள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,09,49,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6053, திரு. ந. கணபதி.

**திரு. ந. கணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வானூர் தொகுதியில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு விளையாட்டு மைதானம் மற்றும் உபகரணங்கள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,09,49,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6081, திரு. ஆர். சாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6122, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி நகரத்தில் உள்ள Science Park-ல் நீச்சல் குளம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,09,49,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6277, திரு. சொ. கருப்பசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6418, திரு. ல. ராதாகிருஷ்ணன்.

**திரு. ல. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவில்பட்டி நகரப் பகுதியில் இராமசாமிதாஸ் நினைவுப் பூங்காவின் உள் பகுதியில் கைப்பந்து மற்றும் கபடி விளையாட்டிற்கான விளையாட்டு மைதானம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,09,49,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6564, திரு. செ. தாமோதரன்.

**திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிணத்துக்கடவு தொகுதிக்குட்பட்ட கிராமப்புற இளைஞர்களின் விளையாட்டு ஆர்வத்தை மேம்படுத்தவும், அவர்களின் திறமையை வெளிக்கொணரவும் இரண்டு ஒன்றியங்களிலும் அனைத்து வசதிகளும் கொண்ட அதிநவீன விளையாட்டு மையம் தலா இரண்டு வீதம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,09,49,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6685, திரு. பி. தங்கமணி.

**திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்செங்கோடு சட்டமன்றத் தொகுதி, பள்ளிப்பாளையத்தில் ஒரு விளையாட்டு மையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்



ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,09,49,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6797, திரு. பெ. மோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7001, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செங்கல்பட்டு தொகுதியில் ஒரு விளையாட்டு பயிற்சி மையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,09,49,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7150, திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிராமப்புற பள்ளி மாணவர்களுக்கு ஆரம்பப் பள்ளி முதலே விளையாட்டின் அவசியத்தை ஊக்குவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,09,49,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7247, திரு. என்.ஆர். ரங்கராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7393, திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டியில் விளையாட்டு மையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,09,49,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7406, திரு. ஆர்.கே. பாரதி மோகன்.

**திரு. ஆர்.கே. பாரதி மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதி, ஆடுதுறையில் விளையாட்டு அரங்கம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,09,49,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

*பிற்பகல் 12-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7409, திரு. செ. பொன்னுதுரை.

**திரு. செ. பொன்னுதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதியில் உள்ள பெருந்துறை மனமகிழ் மன்றத்தில் விளையாட்டு அரங்கம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,09,49,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7686, திரு. போ. சின்னப்பன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7712, திரு. ஓ.கே. சின்னராஜ்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிராமங்களிலுள்ள இளைஞர்களின் விளையாட்டுத் திறனை ஊக்குவிக்க கிராமங்கள்தோறும் அமைந்திருக்கும் இளைஞர் மன்றங்களுக்கு அரசு விளையாட்டு உபகரணங்கள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,09,49,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7854, திருமதி ரா. லீமா றோஸ்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதியில் இளைஞர்களின் நலனுக்காக விளையாட்டு அரங்கம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,09,49,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8081, திரு. எஸ். ஜாண் ஜேக்கப்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிள்ளியூர் தொகுதியில் நவீன வசதிகளுடன்கூடிய விளையாட்டு மைதானம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,09,49,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8216, டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒவ்வொரு ஊராட்சியிலும், ஒவ்வொரு கிராமத்திலும் அங்குள்ள வாய்ப்பினைப் பொறுத்து, விளையாட்டுத் திடல் அமைத்துத்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,09,49,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8307, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கலசப்பாக்கம் தொகுதியில் தமிழர்களின் வீர விளையாட்டான சிலம்பாட்டம், ஜல்லிக்கட்டு போன்ற பாரம்பரிய விளையாட்டுகள் காலத்தால் மறைந்து போகாமல் இருக்க, அவற்றை ஊக்குவித்து இளைஞர் நலன் காக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,09,49,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8425, திரு. செ.ம. வேலுசாமி.



**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவையில் வ.உ. சிதம்பரம் பார்க்கில் கைப்பந்து உள் அரங்கம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,09,49,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8978, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், பேரூர் தொகுதியில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் மற்றும் அனைத்து ஊராட்சிப் பள்ளிகளிலும் விளையாட்டு வீரர்கள் இருந்தும், அவர்களுக்குப் போதிய பயிற்சிக் கருவிகள் இல்லை. போதிய விளையாட்டுப் பயிற்சிக் கருவிகள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,09,49,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9274, திரு. ஞா. செந்தமிழன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9300, திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொன்னேரி தொகுதியில் சோழவரம், மீஞ்சூர், பொன்னேரி மற்றும் ஆரணி போன்ற இடங்களில் விளையாட்டு அரங்கங்கள் அமைக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. பி. பலராமன்] [2007 ஏப்ரல் 28

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,09,49,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9340, திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விளையாட்டு வீரர்களுக்குக் கூடுதல் வேலைவாய்ப்பு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,09,49,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9447, திருமதி ஆர். பிரேமா.

**திருமதி ஆர். பிரேமா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிராமப்புறங்களில் உள்ள படித்த, படிக்காத இளைஞர்களிடையே உள்ள விளையாட்டுத் திறமைகளை வெளிக்கொணர ஒன்றியங்கள்தோறும், ஆண்டுக்கொருமுறை கிராமிய விளையாட்டுப் போட்டிகள் வைத்துச் சிறப்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,09,49,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9509, திருமதி செல்வி ராமஜெயம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9557, திரு. டி. மூர்த்தி.



2007 ஏப்ரல் 28]

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்போரூர் தொகுதியில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் இளைஞர்கள் விளையாட்டில் சிறந்து விளங்க ஒவ்வொரு ஊராட்சியிலும் விளையாட்டுத் திடல் அமைத்து, விளையாட்டு உபகரணங்கள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,09,49,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9596, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இளைஞர்கள் நலன் கருதி, கிராமப்புறங்களிலுள்ள இளைஞர்கள் எந்தெந்த விளையாட்டுத் துறையில் நாட்டம் கொண்டுள்ளார்களோ, அந்தந்த இளைஞர்களின் விருப்பத்திற்கேற்ப, விளையாட்டு உபகரணங்களை அரசு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,09,49,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9618, திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டத்தில், பளு தூக்கும் வீரர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளித்திடவும், ஆண்டுதோறும் போட்டிகள் நடத்திடவும், நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திருமதி ஜி. லதா] [2007 ஏப்ரல் 28

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,09,49,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9741, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டம், அரூரில் இளைஞர் விளையாட்டு மையங்கள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,09,49,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9824, முனைவர் கு. ஜெயக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9850, திரு. எஸ். ஜெயபால், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9887, திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதியில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் யோகா பயிற்சி அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,09,49,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



2007 ஏப்ரல் 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10026, திரு. மா. தண்டபாணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 10698, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, சோலையார்பேட்டை விளையாட்டு அரங்கத்தை விரைவில் திறக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,09,49,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10734, திரு. கோ. எதிரொலி மணியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 10776, திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மானாமதுரை தொகுதி, திருப்புவனத்தில் ஓர் உடற்பயிற்சி மையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,09,49,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11174, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஊராட்சிக்கு இரண்டு இடங்களில் விளையாட்டு மைதானம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,09,49,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11625, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அனைத்து மாவட்டங்களிலும் தேசிய மாணவர் படை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,09,49,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8456, திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொள்ளாச்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் உள்ள விளையாட்டு மைதானத்தை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.45,09,49,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**(ஈ) கோரிக்கை எண் 15—சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 15-சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை. மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.183,25,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.143,48,84,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 343, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.183,25,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.143,48,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5375, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.183,25,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.143,48,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11147, திரு. து. அமரமூர்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2681, திரு. கு. பாண்டுரங்கன்.

**திரு. கு. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.183,25,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.143,48,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6163, திரு. ஆர். சின்னசாமி.

**திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.183,25,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.143,48,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11421, திரு. சி. சண்முகவேலு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6971, திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.183,25,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.143,48,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8013, திரு. கே.வீ. ராமநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8743, திரு. தி. வேல்முருகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 10156, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

V2ll,3:P07 107.33.2



"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.183,25,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.143,48,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10242, திரு. மு.க. பெரியசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 10485, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.183,25,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.143,48,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11725, திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.183,25,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.143,48,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11195, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.183,25,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.143,48,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

227663

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1101, திரு. ஆர். ஞானதாஸ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1194, திரு. இரா. துரைக்கண்ணு.

**திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் தாலுகா, திருமண்டங்குடி கிராமத்தில் அமைந்துள்ள திருஆரூரான் சர்க்கரை ஆலையிலிருந்து லாரிகள்மூலம் பாதுகாப்பின்றி வெளியே எடுத்துச் செல்லும் கழிவுநீரை குடமுருட்டி, காவேரி, கொள்ளிடம் ஆற்றுப் படுகைகளில் கொட்டிவிடுவதால், சுற்றுப்புறச் சுகாதாரம் கெட்டுப் போவதைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.183,25,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.143,48,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1370, திரு. அ. தமிழரசு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3162, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வைகை உற்பத்தியாகும் வருசநாடு பகுதியில் நீர் ஆதாரத்தை அதிகப்படுத்த மழை தரும் மரங்களை நட்டு, பாதுகாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.183,25,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.143,48,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3849, திரு. பெ. மோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4055, திரு. பெ.சு. விஜயகுமார், இருக்கையில் இல்லை.



வெட்டுத் தீர்மானம் எண் 4480, திரு. ஞா. ஜாண் ஜோசப், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5197, திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் வனங்களின் சதவிகிதத்தை அதிகரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.183,25,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.143,48,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5335, திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தேனி நகர் வால்காடு பகுதியில் 9-ஏ புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு வனத் துறை அனுமதி அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.183,25,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.143,48,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5403, டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5453, செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டுக்கல் தொகுதி, சிறுமலைப் பகுதியில் விவசாயிகளின் விளை நிலங்களுக்குள் வனத் துறையினர் அனுமதி மீறித் தலையிடுவதைத் தவிர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.183,25,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.143,48,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5598, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள காவலூர், மந்தாரக்குட்டை, மலைரெட்டியூர் பகுதிகளில் 16 யானைகள் கூட்டமாக வந்து பயிர்களை அழிப்பதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.183,25,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.143,48,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5623, திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்தணி நகரத்தில் நகராட்சியில் அள்ளப்படும் குப்பைகளைத் தனியாக ஓர் இடத்தில் கொட்டி சுற்றுச்சூழல் பாதிக்காதவண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.183,25,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.143,48,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5668, திரு. வை. சிவபுண்ணியம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5707, திரு. பி. தங்கமணி.



**திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்செங்கோடு சட்டமன்றத் தொகுதி, குமாரபாளையம் நகராட்சியினால் செயல்படுத்தப்பட்டுள்ள கழிவுநீர் அகற்றும் திட்டத்தில் (NRAR) ஏற்பட்டுள்ள குறைபாடுகளைக் களைய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.183,25,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.143,48,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5906, திரு. எல். ரவிச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6004, திரு. க. இராஜேந்திரன்.

**திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஜெயங்கொண்டம் தொகுதியில் வனத் துறை அமைத்துள்ள புது சாவடி போன்ற இடங்களில் மரம் நடவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.183,25,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.143,48,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6052, திரு. ந. கணபதி.

**திரு. ந. கணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வானூர் தொகுதி, மரக்காணத்திலுள்ள தைல மரங்களைச் சட்டத்திற்குப் புறம்பாக வெட்டுபவர்களின்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.183,25,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.143,48,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6079, திரு. ஆர். சாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6229, திரு. தி. இராமசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6255, திரு. வை. காவேரி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6276, திரு. சொ. கருப்பசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6386, திரு. பெ. கண்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6552, திரு. செ. தாமோதரன்.

**திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கேரள மாநிலத்திலிருந்து மருத்துவக் கழிவுகளை இரவு நேரங்களில் கொண்டு வந்து தமிழக எல்லையில் அமைந்துள்ள கிணத்துக்கடவு தொகுதிக்குட்பட்ட கிராமங்களில் சாலை ஓரங்களில் கொட்டி விட்டுச் சென்றுவிடுகிறார்கள். இதனால் அப்பகுதிகளில் சுற்றுப்புறச்சூழல் மாசுபட்டு அப்பகுதியில் மக்கள் மிகுந்த சிரமப்பட்டு வருகிறார்கள். எனவே, இதனைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.183,25,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.143,48,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6790, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7111, திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நகராட்சிகளின் கழிவுகள், சாயக் கழிவுகள், தோல் கழிவுகள் காளிங்கராயன் வாய்க்காலில் கலப்பதை முற்றிலும் தடுத்து நிறுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.183,25,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.143,48,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7239, திரு. என்.ஆர். ரங்கராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7275, திரு. வே. மாரிமுத்து, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7392, திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, உத்தப்ப நாயக்கனூர் ஊராட்சி, உ. வாழப்பட்டியில் வசித்துவரும் ஆடு, மாடு வளர்ப்போர் அருகிலுள்ள மலைகளில் மேய்ச்சல் செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதைத் தளர்த்தி, மேய்ச்சலுக்கு அனுமதிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.183,25,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.143,48,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7420, திரு. செ. பொன்னுதுரை.

**திரு. செ. பொன்னுதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதியில் உள்ள சிப்காட் வளாகத்தில் சாயப் பட்டறை மற்றும் தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் இரசாயனக் கழிவு நீரைக் கடலில் கலப்பதற்கான திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.183,25,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.143,48,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7475, திரு. ஆர். வைத்திலிங்கம்.

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வனத் துறையில் வனவர், வனப் பாதுகாவலர் போன்ற பதவிகளுக்கு நேரடித் தேர்வு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.183,25,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.143,48,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7534, திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வனத் துறையில் பணிபுரிபவர்களின் பிள்ளைகளுக்கு கல்லூரிகள், பள்ளிகளில் சேர்ப்பதற்கு முன்னுரிமை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.183,25,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.143,48,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7639, திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், வாலாஜா வட்டம், சோளிங்கர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சோளிங்கரில் பெரும் தொழிற்சாலைகளால் சுற்றுச்சூழல் மாசுபடுவதைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.183,25,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.143,48,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7731, திரு. ஓ.கே. சின்னராஜ்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேட்டுப்பாளையம் தொகுதியின் எல்லை பெரும்பகுதி மேற்குத் தொடர்ச்சி மலையையொட்டி அமைந்துள்ளது. அதனால் காட்டு யானைகள் விவசாயிகளின் பயிர்களை அழித்து சேதம் செய்வதால், வனப் பகுதியோரம் இருக்கும் விவசாயிகள் அனைவருக்கும் யானைகளை விரட்ட, search light-கள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.183,25,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.143,48,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7742, திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இராயபுரம் தொகுதியில் வட்டம் எண் 22-ல் சுண்ணாம்புக் கல் மற்றும் இரசாயனக் கலவைகளை இராயபுரம் இரயில் நிலையத்தில் திறந்தவெளியில் கையாளுவதால், கடுமையான மாசு ஏற்பட்டு மக்கள் பாதிப்படைவதால், மாசு வராமல் தடுக்க, மக்கள் நிறைந்த பகுதியில் இதனைக் கையாளுவதற்குத் தடை விதிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.183,25,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.143,48,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7851, திருமதி ரா. லீமா ரோஸ்.

**திருமதி ரா. லீமா ரோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு இரப்பர் கழகத் தொழிலாளர்களின் போக்குவரத்துக்குப் பயன்பட்ட படகுப் போக்குவரத்தை நிறுத்தம் செய்துள்ளதை மாற்றி,

மீண்டும் படகுப் போக்குவரத்து வசதி செய்துதர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.183,25,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.143,48,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7886, திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்போரூர் தொகுதியில் அடங்கிய மறைமலைநகர் நகராட்சிப் பகுதியில் உள்ள பல தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகும் புகை மற்றும் தொழிற்சாலை மாசினால், அங்கு வசிக்கும் பொதுமக்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். எனவே, மாசினால் ஏற்படும் பாதிப்பைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.183,25,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.143,48,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8080, திரு. எஸ். ஜாண் ஜேக்கப்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், 51 கடற்கரைக் கிராமங்களிலுள்ள மக்கள், மணல் கதிர்வீச்சு காரணமாகப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.183,25,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.143,48,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8198, டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தனியார் தொண்டு நிறுவனங்களை மரம் வளர்த்தலில் ஈடுபடுத்தும்பொருட்டு, அவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.183,25,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.143,48,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8834, திரு. விடியல் எஸ். சேகர், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8939, திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்ட வனப் பகுதியில் அனுபோக நிலங்களில் விவசாயம் செய்துவரும் விவசாயிகளை அப்பகுதியிலிருந்து வெளியேற்றுவதைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.183,25,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.143,48,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9097, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதி, ஜமுனாமரத்தூரில் வனத் துறையின் சார்பில் செயல்பட்டுவரும் அரசினர் மேல்நிலைப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர், கூடுதல் கட்டடங்கள், கூடுதல் மாணவ, மாணவியர் விடுதிகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.183,25,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.143,48,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9292, திரு. மா. தண்டபாணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9294, திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொன்னேரி தொகுதியில் உள்ள பல தொழிற்சாலைகளில் இருந்துவரும் மாசினால் பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள். இத்தொழிற்சாலைகளில் சுற்றுச்சூழல் ஆய்வு மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.183,25,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.143,48,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9359, திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில், பள்ளி மாணவர்களுக்கு வாரம் ஒருமுறை சுற்றுச்சூழல் குறித்து வகுப்பு நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.183,25,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.143,48,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9428, திருமதி மு. சந்திரா.



**திருமதி மு. சந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இராஜபாளையம் தொகுதி, அய்யனார்கோவில் பகுதியில் வனத் துறை சார்பாக உயிரியல் பூங்கா அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.183,25,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.143,48,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9597, திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குடியாத்தம் தொகுதியில் வனத் துறையின் 362 ஏக்கர் நிலத்தில் பூசாரிவலசு மக்களுக்கு நிலப் பட்டா, வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.183,25,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.143,48,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9805, திரு. ராம. சுப்புராம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9825, முனைவர் கு. ஜெயக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9939, திரு. கே.எஸ். விஜயகுமார்.

பிற்பகல் 12-30

**திரு. கே.எஸ். விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கும்மிடிப்பூண்டி தொகுதியில் எருக்குவாய் ஊராட்சிக்கு செல்லும் பாதை வனத் துறைக்குச் சொந்தமானது. இதில் சாலை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.183,25,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.143,48,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10561, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் வன அலுவலகத்தில் சந்தன மரத்தில் பட்டை செதுக்கி சுத்தம் செய்யும் சுமார் 128 பேர் கடந்த 34 வருடங்களாக தினக் கூலிப் பணியாளர்களாக உள்ளனர். அவர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.183,25,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.143,48,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10703, திரு. கோ. எதிரொலி மணியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 10887, திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மானாமதுரை பகுதியில் உள்ள அரசு தரிசு நிலங்களில் சமூக நல வனங்கள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.183,25,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.143,48,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11488, திரு. சு.ப. வேலுமணி.



**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், பேரூர் தொகுதியில் பல இடங்களில் வனத் துறை நிலங்கள் சரியாகப் பராமரிக்கப்படுவதில்லை. சரியான முறையில் பராமரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.183,25,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.143,48,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11641, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சுற்றுச்சூழலைப் பாதுகாக்க மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.183,25,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.143,48,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11832, திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சாயத் தொழில் அதிபர்கள் நீதிமன்றத்தில் கட்டும் அபராதத் தொகை ஒழுங்கான முறையில் விவசாயிகளுக்குச் செல்ல வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.183,25,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.143,48,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

[2007 ஏப்ரல் 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8457, திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொள்ளாச்சி வட்டம், சேத்துமடை மற்றும் மாரப்பகவுண்டன்புதூர், ஒடையகுளம் பகுதியிலுள்ள விவசாய நிலங்களில் காட்டு யானைகள் வந்து பயிர்களைச் சேதம் செய்கின்றன. இதைத் தடுக்க வனத் துறைமூலம் மின் வேலி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.183,25,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.143,48,84,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு நிதி அமைச்சர் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுத் துறை, தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) ஆகிய இரு துறைகள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

---

@ 573 முதல் 627 வரையிலான பக்கங்களில் இணைப்புகள்-I, II மற்றும் III ஆக அச்சிடப்பட்டுள்ளன.



2007 ஏப்ரல் 28]

*மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பினை@@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று சட்டமன்றப் பேரவைப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பினை@@@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று சட்டமன்றப் பேரவைப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளின்மீது விவாதம். இன்று 4 மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் 4 மானியக் கோரிக்கைகள்மீதும் சேர்த்தே பேசலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். வைத்திலிங்கம், 10 நிமிடங்கள் எடுத்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) அவ்வளவுதான். நேரம் இல்லை, அதனால்தான்.

---

@@ 629 முதல் 689 வரையிலான பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

@@@ 690 முதல் 742 வரையிலான பக்கங்களில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[2007 ஏப்ரல் 28

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு முறை என்னைச் சட்டமன்ற உறுப்பினராக ஆக்கி, இந்த மாமன்றத்தில் முகவரி தெரியாத எனக்கு முகவரி கொடுத்து, அமைச்சராக்கி, இன்றைக்குச் சுற்றுச்சூழல் மற்றும் வனம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, பொதுத் துறை மற்றும் தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) ஆகிய துறைகளின் மானியக் கோரிக்கைகளில் பேசுவதற்கு வாய்ப்பளித்த எங்கள் இதய தெய்வம், சிங்க நிகர் தலைவி, எங்கள் காவிரித் தாய் (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி இருக்கின்ற திசை நோக்கி வணங்கி, எனக்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு எனது நன்றியைக் கூறி எனது உரையைத் தொடங்குகிறேன்.

முதலில் தமிழ் வளர்ச்சி. தமிழுக்காக வேண்டி தமிழ் வளர்வதற்காக வெளிநாட்டில் பிறந்தவர்களும், தமிழ் வளர்ச்சிக்கு உதவியிருக்கிறார்கள். முதன்முதலில் 1967 ஆம் ஆண்டு, அண்ணா ஆட்சிக் கட்டிலுக்கு வந்தபிறகு இம்மாநிலத்திற்கு 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டினார். 1968-ல் இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டை சென்னையில் நடத்தி தமிழுக்கும், தமிழர்களுக்கும் பெருமை சேர்த்தார்.

*பிற்பகல் 12-35*

அவருடைய இதயக் கனியாம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் 1980 ஆம் ஆண்டு மதுரையிலே ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டை நடத்தி உலகத்தில் மொழிக்கென்று யாருமே பல்கலைக்கழகம் கொண்டுவராத நிலையில், உங்களால், இன்றைக்கு ஆளுங்கட்சியாக இருக்கிறவர்களால், மலையாளி என்று சொல்லப்பட்ட புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.தான், தமிழுக்கு என்று ஒரு பல்கலைக்கழகத்தை தஞ்சையிலே உலகம் வியக்கின்றவகையில் ஏற்படுத்தினார். அவருடைய வாரிசு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டைத் தஞ்சையில் நடத்தி, இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழோடு, அறிவியல் தமிழ் என்ற ஒரு தமிழை அறிவித்தார்கள்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. தி. வேல்முருகன் தலைமை)

இன்றைய முதல்வர் ஆயுட்கால உறுப்பினராக இருக்கின்ற கரந்தை தமிழ்ச் சங்கத்திற்கு 75 இலட்சம் ரூபாயை ஒதுக்கிக் கொடுத்து அந்தத் தமிழ்ச் சங்கம் தமிழை வளர்ப்பதற்கு உதவி செய்தவர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை வைப்பதற்கு 50 இலட்சம் ரூபாய் நிதியை ஒதுக்கி தமிழ் இருக்கை அமைத்தவர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.



உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் இருக்கிறது. அதிலே தமிழுக்குத் தொண்டு செய்தவர்களுடைய அறக்கட்டளைகள் பல இருக்கின்றன. ஆனால், அண்ணாவுக்கு என்று அறக்கட்டளை இல்லை. அண்ணாவின் தம்பிகள் நிறைவேற்றாதபோதும், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஐந்து இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கி அண்ணாவினுடைய அறக்கட்டளையை உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் நிறுவினார். அதேபோல், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் இராஜராஜ சோழன் விருது வழங்கியது; ஜெயகாந்தன், கோ.வி. மணிசேகரன் போன்றவர்கள் அதனைப் பெற்றார்கள். இன்றைய முதல்வரும் 1989-ல் முதலமைச்சராக இருந்தபொழுது இராஜராஜன். . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தி. வேல்முருகன்):** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அண்ணாவுக்கு என்று ஒரு Chair சென்னைப் பல்கலைக்கழகத்திலே இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** இன்றைய முதல்வர், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் உருவாக்கிய இராஜராஜ சோழன் விருதைப் பெற்றிருக்கின்றார். அந்த விருது இப்பொழுது கொடுக்கப்படாமல் நிறுத்தப்பட்டுள்ளது. புரட்சித் தலைவரால் ஏற்படுத்தப்பட்ட, இன்றைய முதல்வர் பெற்றுக்கொண்ட, இராஜராஜ சோழன் விருதை மீண்டும் கொடுக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ் வளர்ச்சிக் கொள்கை விளக்கக் குறிப்பில் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்ட இயக்ககம் 1974 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 12 மடலங்களில் 31 பகுதிகளாகத் தொகுத்து வெளியிட வேண்டும். இன்றைக்கு இந்த இயக்ககம் தொடங்கி கிட்டத்தட்ட 33 வருடங்கள் ஆகின்றன. 31 பகுதிகள் வெளியிட

வேண்டும். 18 பகுதிகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. அம்மா ஆட்சியில்தான் அந்த 18 பகுதிகளும் வெளியிடப்பட்டிருக்கின்றனவே தவிர, உங்களது ஆட்சியில் இல்லை. 1996-லிருந்து 2001 வரைக்கும் ஆட்சி செய்தீர்கள், 1989-லிருந்து 1991 வரைக்கும் ஆட்சி செய்தீர்கள், 1974-லிருந்து 1976 வரைக்கும் ஆட்சி செய்தீர்கள், எத்தனைப் பகுதிகள் வெளியிட்டிருக்கிறீர்கள் என்பதை மாண்புமிகு நிதி அமைச்சர் விளக்குவாரா என்பதைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தி. வேல்முருகன்):** மாண்புமிகு அவை முன்னவர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தற்காலிகத் தலைவர் அவர்களே, அகர முதலித் திட்டம் என்பது தொடர் முயற்சி. அவர்கள் தொடர்ந்து எழுதிக் கொண்டிருக்கிறார்கள். பல பேர் சேர்ந்து பணியாற்றுகிறார்கள். தொடர்ந்து அச்சாகிறது, அதிலே வெளியிட்ட தேதி ஒருவேளை அம்மாவினுடைய ஆட்சிக்காலமாக இருக்கலாம். தேதிதான் இருக்குமே தவிர, மிச்சம் அச்சிடுகிற வேலைகள் எல்லாம், எழுதுகிற வேலை, அது ஒப்பு நோக்குகிற வேலை, அச்சேற்றுகிற வேலை அத்தனையும் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து நடக்கிறது. அதிலே எதுவும் ஒரு குறிப்பிட்ட காலத்திலேயே நடைபெற வாய்ப்பில்லை.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தி. வேல்முருகன்):** மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்.

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஒரு பத்து நிமிடங்கள் அதிகமாகக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் ஒரு பதிலைச் சொன்னார்கள். அன்றைய இயக்குநராக தேவநேயப் பாவாணர் அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். அவருக்குச் சரியான ஒத்துழைப்புக் கொடுக்காத காரணத்தினால் வெளிவரவில்லை என்று தமிழறிஞர்கள் என்னிடம் சொன்னார்கள். அதனால் சொன்னேன்.

பிற்பகல் 12-40

நான் அடுத்த கருத்துக்குச் சென்றுவிடுகிறேன். இன்றைக்குத் தமிழைச் செம்மொழி என்று அறிவித்திருக்கிறது மத்திய அரசு. இரண்டு வருடங்கள் ஆகின்றன. இந்த வருடங்களில் இந்தச் செம்மொழிக்கு



எவ்வளவு நிதி ஒதுக்கியிருக்கிறார்கள்? சமஸ்கிருதத்திற்கு 150 கோடி ரூபாய், 200 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது? இப்போது நீங்கள் மத்தியிலும் ஆளுங்கட்சியாக இருக்கிறீர்கள். மாநிலத்திலும் ஆளுங்கட்சியாக இருக்கிறீர்கள். உங்கள் ink காயும் முன்பே அவர்கள் நிதியொதுக்குகிறார்கள் என்று திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சொன்னார்கள். இதற்கும் உங்கள் ink காயும் முன்பே நிதியை வாங்கினால் என்ன? செம்மொழிக்கு நிதி கொண்டுவந்தால் என்ன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திருக்குறளைத் தேசிய நூலாக்க வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர் திரு. ஜி.கே. மணி அவர்கள், 2005-ல் இங்கே பேசினார்கள். அப்போது எங்கள் அம்மா அவர்கள், "மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறேன்" என்று சொன்னார்கள். இன்றைக்கு நீங்கள் மத்தியிலே மூன்று வருடங்களாக ஆளுங்கட்சியாக இருக்கிறீர்கள். ஒரு வருடமாக இங்கே ஆளுங்கட்சியாக இருக்கிறீர்கள். எனவே, திருக்குறளைத் தேசிய நூலாக அறிவிக்க நீங்கள் முயற்சி செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல், தமிழ் மொழியை ஆட்சி மொழியாக்குவது. ஏனென்றால், மத்தியிலும், மாநிலத்திலும் நீங்கள் ஆட்சி செய்துகொண்டிருக்கிறீர்கள். எனவே, அதையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்தபடியாக, வனத் துறை. 1981 ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் அவர்கள், சுவீடன் நாட்டு வங்கி நிதியுதவியுடன், ஏரி, குளக் கரைகளில் தோட்டங்கள் அமைக்கின்ற திட்டத்தைக்கொண்டு வந்து, வெற்றிகரமாக நடத்திக் கொண்டிருந்தார்கள். 1996-ல் தி.மு.க ஆட்சிக்கு வந்தது. அப்போது இத்திட்டம் நிறுத்தப்பட்டது. சென்ற மானியக் கோரிக்கையின்போது, அந்தத் திட்டத்தை நீங்கள் கொண்டுவந்திருப்பதாகச் சொன்னீர்கள். எங்கள் அம்மா அவர்கள், 2005 ஆம் ஆண்டில் அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதற்குக்கூட நன்றி சொன்னேன். ஆனால், அந்தத் திட்டத்தைக் கடந்த வருடம் நீங்கள் நிறைவேற்றவில்லை. கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லியிருந்தீர்கள். ஆனால், அதை நிறைவேற்றவில்லை. இந்த வருடம் அந்தத் திட்டத்தையே எடுத்துவிட்டீர்களே, அது ஏன் என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தி. வேல்முருகன்):** 7 நிமிடங்கள் ஆகியிருக்கின்றன. இன்னும் இரண்டு நிமிடங்கள்தான் உள்ளன.

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** அதேபோல், வனப் பரப்பளவில் 25 சதவிகிதம் சரணாலயம் இருக்க வேண்டுமென்று சென்ற முறை சொன்னபோது, "நாங்கள் நடவடிக்கை எடுப்போம்" என்று சொல்லப்பட்டது. தோகைமலை சரணாலயம், கொடைக்கானல் சரணாலயம், நெல்லை சரணாலயம், சத்தியமங்கலம் சரணாலயம் ஆகியவற்றை அமைப்பதற்கு, மத்திய அரசுக்கு 2003 ஆம் ஆண்டு, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, அனுமதி கேட்டு கருத்துரு அனுப்பியது. நீங்களும் சென்ற ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பில் சொல்லியிருந்தீர்கள், வனப் பரப்பில் 25 சதவிகிதம் உயிரின சரணாலயம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்போம் என்று.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தி. வேல்முருகன்):** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பிலே அப்படிக் குறிப்பிடப்பட்டிருந்தது உண்மைதான். ஆனால், வனப் பகுதிகளிலே சரணாலயங்களை அதிகமாக அமைத்துவிட்டால், அதன் பின்னாலே அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதிலே பல்வேறு இன்னல்கள் இருக்கின்றன. மத்திய வன உயிரின வாரியத்தினுடைய ஆணையைப் பெற வேண்டும். அதன் பின்னாலே, உச்ச நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட, மத்திய அதிகாரிகளுடைய பரிந்துரையைப் பெற்று, உச்ச நீதிமன்றத்தினுடைய அனுமதியைப் பெற்றுத்தான் அந்த வனமற்ற பிற பணிகளுக்கு அந்த இடத்தை ஒதுக்க முடியும்; எடுத்துக்கொள்ள முடியும். எனவே, இப்படிப்பட்ட சங்கடங்களை எதிர்கொள்கின்ற நேரத்திலே, அடிப்படைப் பணிகளைச் செய்ய முடியாமல் போய்விடுகின்ற காரணத்தினாலே, இந்த அரசு அதை வலியுறுத்த விரும்பவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தி. வேல்முருகன்):** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பத்து நிமிடங்கள் முடிந்துவிட்டன. (குறுக்கீடு) சுருக்கமாகப் பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, எனக்கு எப்போதாவதுதான் பேசுவதற்கு வாய்ப்பு கிடைக்கிறது. என் வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொள்ள வேண்டாம், நீங்கள். (சிரிப்பு)



**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தி. வேல்முருகன்):** நீங்கள் 12-33 மணிக்குப் பேசத் தொடங்கியிருக்கிறீர்கள். இப்போது மணி 12-43 ஆகிறது. விரைவாகப் பேசி முடியுங்கள்.

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கொஞ்சம் கருணை காட்டுங்கள். உங்களை நண்பர் என்ற முறையில் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஜப்பான் நாட்டிலே இன்றைக்கு 65 சதவிகிதம் வனம் இருக்கிறது. அதனாலே, வருடத்திற்குப் பத்து தடவை சுனாமி வந்தாலும், அங்கே மக்கள் அதிகமாகப் பாதிக்கப்படுவதில்லை. நம்முடைய கடமை, வனத்தைப் பெருக்க வேண்டும். இன்றைக்கு நாம் வன உயிரின சரணாலயங்களைக் கொண்டுவந்தால்தான், எந்தவிதமான தவறுகளும் நடக்காமல், சட்ட திட்டங்கள் கடுமையாக இருப்பதால், வனத்தைப் பாதுகாக்கலாம்; சுற்றுச்சூழலைப் பாதுகாக்கலாம். இன்றைக்கு சுற்றுச்சூழல் மாசு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அதனால், 25 சதவிகிதத்தில் சரணாலயங்களை அமைப்பதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையென்றால், இதில் ஏதோ உள்நோக்கம் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அடுத்தபடியாக, 33.33 சதவிகிதம் வனப் பரப்பு இருக்க வேண்டும். ஆனால், நம்மிடம் இருப்பது 17.5 சதவிகிதம். இன்றைக்கு வனத்திற்கு வெளியே மரங்கள் அடர்ந்த வனப் பரப்பு 3.66 சதவிகிதம் கூடியிருக்கிறது. அதனால்தான் இன்றைக்கு 21.25 சதவிகிதம் இருக்கிறது. 2012 ஆம் ஆண்டிலே நம்முடைய இலக்கை எட்டுவதற்கு, 33.33 சதவிகித இலக்கை எட்டுவதற்கு நீங்கள் தொலைநோக்குச் சிந்தனையுடன் செயல்பட வேண்டும். காடு வளர்ப்புக்கான இரண்டு திட்டங்களைக் கொண்டு வந்தது எங்கள் அம்மா அவர்கள். அதனால்தான் இன்றைக்கு 3.66 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தி. வேல்முருகன்):** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12-45

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடு)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தி. வேல்முருகன்):** இல்லை, அமைச்சர் பேசட்டும். (குறுக்கீடு) அமைச்சர் பதில் சொல்லட்டும்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** 2012-லே 33 விழுக்காடு அடைய வேண்டும் என்பதுதான் இந்த அரசினுடைய நோக்கம். அதற்காகச் சென்ற ஆண்டு 5 கோடியே 74 இலட்சத்து 14 ஆயிரம் கன்றுகள் நடப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டும் 6 கோடி புதிய மரக் கன்றுகள் நடுவதற்கு, அந்த மரப் பரப்பை அதிகப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தி. வேல்முருகன்):** மாண்புமிகு உறுப்பினர், சீக்கிரம் முடித்துவிடுங்கள். ஒரு நிமிடத்தில் முடித்துவிடுங்கள் (குறுக்கீடு) இல்லை, உங்களுக்குப் பிறகு இன்னும் ஐந்து பேர் பேச வேண்டும்.

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 2005-2006-ல் பகுதி-II திட்டத்தில் எங்கள் அம்மா வனத் துறைக்கு ஒதுக்கிய நிதி, ரூ.13 கோடியே 13 இலட்சம். ஆனால், கடந்த வருடம் நீங்கள் ரூ.8.86 கோடிதான் ஒதுக்கியிருக்கிறீர்கள். இந்த வருடம் ரூ.6.98 கோடிதான் ஒதுக்கியிருக்கிறீர்கள். பகுதி-II திட்டத்தில் வனத் துறைக்கு வருடா வருடம் நிதியைக் குறைத்திருக்கிறீர்களே, என்ன காரணம் என்பதை நான் அறிய விரும்புகின்றேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு மேட்டூர் வனப் பகுதியிலே, பொள்ளாச்சி டிவிஷனிலே, 60 டன் சந்தன மரங்கள் திருட்டுத்தனமாக வெட்டியெடுக்கப்பட்டிருக்கின்றன. அதனுடைய மதிப்பு 21 கோடி ரூபாய். அதிலே நான்கு வனத் துறை ஊழியர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டார்கள். அவர்கள், உயர் நீதிமன்றத்திற்குச் சென்று தடை உத்தரவு பெற்று இன்றைக்கு அங்கே பணியாற்றுகின்றார்கள். 21 கோடி ரூபாய் மதிப்புள்ள 61 டன் சந்தன மரங்கள் திருட்டுப் போனதற்கு உடந்தையாக இருந்த அரசு ஊழியர்கள் பணி நீக்கத் தடை ஆணையை இதுவரைக்கும் நீங்கள் கோர்ட்டுக்குச் சென்று இரத்து செய்யாமல், அவர்களுக்குத் தண்டனை வாங்கிக் கொடுக்காமல் இருக்கிறீர்களே, ** என்பதைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தி. வேல்முருகன்):** ** என்கிற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**திரு. ஆர். வைத்திலிங்கம்:** Sorry, sorry. தவறுக்குத் துணை போகிறதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகின்றேன். தவறு செய்தவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள் என்பதைக் கேட்க விரும்புகின்றேன்.

மாற்றுத் தலைவர் அவர்களே, அதேபோல, இரண்டு நாட்களுக்கு முன்னால், சேலத்திலே உயிரியல் பூங்காவில் காவலர்களைக் கட்டிப் போட்டுவிட்டு, நான்கு சந்தன மரங்களை வெட்டிச் சென்றிருக்கிறார்கள். அவர்கள்மீதும் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. இதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மேட்டூர் - பாலாற்றில் அதிரடிப் படையினர் தங்கியிருந்த கூடாரத்தை நோக்கி நெற்றியிலே டார்ச் லைட்டுடன், கைத் துப்பாக்கியுடன் ஐந்து பேர் சென்றிருக்கிறார்கள். குட்டி வீரப்பன் கும்பல் என்றும், அந்தக் கும்பலினுடைய தலைவன் சரவணன் என்றும் சொல்கிறார்கள். அதிரடிப் படையை நோக்கிச் சுட்டிருக்கிறார்கள். அதிரடிப் படையும் திருப்பிச் சுட்டிருக்கிறது. ஐந்து பேரைக் கைது செய்திருக்கிறார்கள். இனிமேலாவது, இப்படி குட்டி வீரப்பன் தோன்றுவதைத் தடுப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சுற்றுச்சூழலைப்பற்றி ஒரு மூன்று நிமிடம் . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தி. வேல்முருகன்):** ஒரு நிமிடம், ஒரு நிமிடத்தில் முடித்துவிடுங்கள்.

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** மூன்று நிமிடங்கள் கொடுங்கள். 1972 ஆம் ஆண்டுதான் சுற்றுச்சூழலினுடைய தாக்கம் உலக அளவில் இருந்தது. சுவிட்சர்லாந்து நாட்டினுடைய தலைநகரம் Stockholm-ல் உலக அளவில் பிரதம அமைச்சர்கள் கலந்து கொண்டார்கள். அதில் இரண்டே பிரதம அமைச்சர்கள்தான் கலந்துகொண்டார்கள். ஒருவர் இந்திய நாட்டினுடைய பிரதம அமைச்சராக இருந்த இந்திராகாந்தி அம்மையார், இன்னொருவர் சுவிட்சர்லாந்து நாட்டினுடைய பிரதம அமைச்சர். இன்றைக்கு சுற்றுச்சூழல் என்பது எல்லா நாட்டிலும், குறிப்பாக உலக அளவில் பெரிதாக நினைத்து, அந்தச் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டியது . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தி. வேல்முருகன்):** போதும். தண்ணீர் குடித்துவிட்டு உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. ஹசன் அலி அவர்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. உங்கள் கொறடாவும், துணைத் தலைவரும்தான் நேற்றைக்கே சொல்லியிருக்கிறார்கள், இரண்டு மணிக்குள் எல்லோரையும் அனுப்பிவிட வேண்டும் என்று. அதனால் தயவுசெய்து, நன்றி சொல்லி அமர்ந்து விடுங்கள். (குறுக்கீடு)

*பிற்பகல் 12-50*

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தொழிற்சாலை பெருக்கம், குறிப்பாக சலவை, சாயத் தொழிற்சாலை, தோல் தொழிற்சாலையினால் சுற்றுச்சூழல் பெரிதும் பாதிப்பு அடைகிறது. பாலாறு, நொய்யலாறு, அமராவதி ஆறு, ஏன் எங்களுக்கு வாழ்வு கொடுத்துக்கொண்டிருக்கின்ற காவிரி ஆறுகூட இன்றைக்கு இந்தச் சுற்றுச்சூழல் மாசினால் பாதிக்கப்படுகின்ற நிலைமை ஏற்படுகிறது. இதற்கு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியின்போது R.O. (Reverse Osmosis) Plant என்ற புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டார்கள். ஆனால், அப்படி பயன்படுத்தினாலும் 20 சதவிகிதம் கழிவு நீரில், உப்பும் வருகிறது. இதற்கு ஒரு மாஸ்டர் பிளான் - ஒரு பெரிய திட்டத்தைக் கொண்டுவந்து இவற்றைக் கடலில்கொண்டு கலந்தால்தான் ஆறுகள் தப்பிக்கும். இதற்கு எத்தனை ஆயிரம் கோடி ரூபாய் செலவானாலும், இன்றைக்கு உங்களுக்கு மத்திய அரசு ஆயிரக்கணக்கான கோடி ரூபாயை அள்ளிக் கொடுத்திடக் காத்திருக்கிறது. ஒரு ஐந்தாயிரம் கோடி ரூபாயை வாங்கி, தொழிலையும் காப்பாற்றுங்கள், தொழிலாளர்களையும் காப்பாற்றுங்கள், சுற்றுச்சூழலையும் காப்பாற்றுங்கள் என்று கூறி தந்த வாய்ப்பிற்கு நன்றி சொல்லி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தி. வேல்முருகன்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. ஹசன் அலி அவர்கள். இப்போது மணி 12-50. உங்களுக்கு 7 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. கொஞ்சம் விரைவாகப் பேசி முடித்துவிடுங்கள்.

***திரு. கு. ஹசன் அலி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கு இருக்கும் எல்லோருக்கும் சாந்தியும், சமாதானமும் உண்டாவதாக. இன்றைக்கு அதிகமாக வேண்டியது அதுதான்.



"தென்னவளே, பாரில் சிறந்தவளே, என்னவளே, என் தமிழ்ப் பெண்ணவளே" என்ற அந்த தமிழின் வளர்ச்சி குறித்த மானியக் கோரிக்கையிலே பேச அனுமதியளித்த உங்களுக்கும், பொன் போன்ற மேனியும், அதற்கேற்ற சட்டையும், இதையெல்லாம் மிஞ்சும் பொன்னான நெஞ்சமும் கொண்ட எங்களுடைய தலைவர் நைனா அவர்களுக்கும், என்னுடைய நன்றியையும், வாழ்த்தையும் தெரிவித்து என்னுடைய இந்தப் பேச்சைத் தொடங்குகின்றேன்.

தமிழ் வளர்ச்சியைப் பற்றி பேசும்போது, இந்த மாமன்றத்திலே எத்தனைமுறை தமிழ் வளர்ச்சியைப் பற்றி பேசினாலும், இந்தத் தமிழ் வளர்ச்சிக்காக தங்களை ஈந்துகொண்டவர்கள், தங்களைத் தியாகம் செய்துகொண்டவர்கள், தங்களுடைய வாழ்நாட்களை விட்டவர்களையெல்லாம் நாம் நினைவில் கொள்ளாமல் இருக்க முடியாது. நான் காங்கிரஸ் பேரியக்கத்தினைச் சேர்ந்தவன். எங்களுடைய காங்கிரஸ் பேரியக்கம்தான் சுதந்திரத்திற்கு முன்னாலே—1946 ஆம் ஆண்டு நாங்கள் தமிழ் வளர்ச்சிக் கழகம் ஒன்றை உருவாக்கி, டி.எஸ். அவினாசிலிங்கம் செட்டியார் அவர்களை அதற்குத் தலைவராக்கினோம். டி.எஸ். அவினாசிலிங்கம் செட்டியார் அவர்கள்தான் பின்னால் அமைந்த முதல் காங்கிரஸ் மந்திரி சபையிலே, கல்வி அமைச்சராக இருந்தவர் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அந்தக் காலகட்டத்திலே 14 இலட்சம் ரூபாய், இன்றைக்கு அது சாதாரணமாகத் தெரிந்தாலும், 14 இலட்சம் ரூபாய், தமிழ் வளர்ச்சிக்கு என்று ஒதுக்கி 9 கலைக் களஞ்சியங்களுக்கு மறுபதிப்பும், குழந்தைகள் கலைக் களஞ்சியத்தின் ஒரு பதிப்பும் வெளியிட்டு மகிழ்ந்தவர்கள் அவர்கள். (குறுக்கீடுகள்) நான் பேசுவதற்கு மிகவும் இடைஞ்சலாக இருக்கிறது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தி. வேல்முருகன்):** மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதி காக்கவும். நீங்கள் பேசுங்கள். ஒலிப்பெருக்கியின் அருகில் வந்து பேசுங்கள்.

**திரு. கு. ஹசன் அலி:** ஒலிப்பெருக்கி என்னைவிட குட்டையாக இருக்கிறது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தி. வேல்முருகன்):** அதனை உயர்த்தச் சொல்லுகிறேன்.

**திரு. கு. ஹசன் அலி:** மாற்றுத் தலைவர் அவர்களே, அன்றைக்கு விவசாயப் புரட்சி, கல்விப் புரட்சி, தொழில் புரட்சி செய்த கறுப்புத்

தங்கம், கறுப்பு காந்தி, எங்களுடைய கர்ம வீரர் அவர்கள்தான் முதன்முதலிலே, ஆட்சி மொழிச் சட்டம் தமிழிலே கொண்டுவந்தவர்கள். அவர்களுடைய ஆட்சியிலே இருந்த அறிவுச்சுடர் திரு. சி. சுப்பிரமணியும் அவர்கள்தான் முதன்முதலிலே, 1957-58 ஆம் ஆண்டு, நிதிநிலை அறிக்கையினையே தமிழிலே இந்த மன்றத்திலே சமர்ப்பித்து புரட்சி செய்த ஒரு வீரர்.

அதுமட்டுமல்ல, அந்தச் சமயத்தில், எங்களுடைய கர்ம வீரர் அவர்கள், தமிழால் முடியும் என்று தமிழைப் பயிற்று மொழியாகக் கல்லூரியில் கொண்டு வந்தபோது கூக்குரலிட்டவர்கள் எத்தனை பேர், ஏளனம் செய்தவர்கள் எத்தனை பேர். கல்லூரியில் தமிழா என்று கேட்டபோது இந்த அறிவுச்சுடர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள்தான், தமிழால் முடியும் என்று ஒரு நூல் எழுதி ஆணித்தரமான வாதங்களினாலே, அவர்களுடைய வாயை அடைத்தார்கள். அவர்களை மட்டும் நான் நினைக்கவில்லை. இந்தியாவிற்கு, எந்த மொழி ஆட்சி மொழியாக வேண்டும், எந்த மொழி இணைப்பு மொழியாக இருக்க வேண்டும் என்பதற்கு முதன் முதலிலே குரல் கொடுத்த கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் இஸ்மாயில் சாகிப் அவர்களை நான் நினைத்துப் பார்க்கிறேன்.

*பிற்பகல் 12-55*

அதுமட்டுமல்ல, இந்த மாமன்றத்திலே கட்சி பேதங்களை மறந்து, அத்தனை பேரும் எழுந்து நின்று, எந்தவிதமான மாச்சரியத்திற்கும் இடம் கொடுக்காமல், என்னுடைய நாட்டிற்குத் தமிழ்நாடு என்று பெயர் வைத்தபோது, வாழ்க தமிழ், வாழ்க தமிழ்நாடு என்று அனைவரையும் குரல் கொடுக்க வைத்த, இந்நாட்டு இங்கர்சால், தென்னாட்டு பெர்னார்ட்ஷா, அறிஞர் அண்ணாவை இன்று நான் நினைத்துப் பார்க்கின்றேன். இப்படி பார்போற்றும் பைந்தமிழ் வளர்ச்சியை நான் பேசும்பொழுது, இவர்களையெல்லாம் நான் நன்றியுடன் நினைக்கும்பொழுது, இன்று அவர்கள் நம்மிடையே இல்லை, மறைந்துவிட்டார்கள். 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்' என்பார்கள். அந்தக் காற்று அடிக்கும்பொழுது, என்ன தூற்றுதல் செய்தோம்? நாம் செய்ததெல்லாம் ஒன்றுமில்லை. ஆகவேதான், தமிழன் செய்த நல்வினையா, இல்லை, தமிழுக்குக் கிடைத்த பெருமையா என்று சொல்லும் அளவிற்கு, 1953 ஆம் ஆண்டிலே தன்னுடைய தலையைத் தமிழுக்காகத் தண்டவாளத்திலே வைத்துப் படுத்த இந்த நல்ல தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி அவர்கள்



நம்மோடு இன்று இருக்கிறார்கள். அப்படிப்பட்ட இவர்களைப் பற்றி மு.வ. சொல்கிறார், "நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி எப்படி அரசனாகவும், புலவராகவும் இருந்தாரோ, அதற்குப் பிறகு தமிழகத்திலே தோன்றிய அரசனாகவும், புலவனாகவும் தோன்றியவர் இந்தக் கலைஞர்" என்று மு.வ. அவர்கள் சொல்லிக்காட்டுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு 8 கோடி தமிழர்கள் இங்கே உள்ளனர். இந்த 8 கோடி தமிழர்களும் ஒட்டுமொத்தமாக ஒருவரை இவர்தான் எங்கள் தலைவர் என்று காட்ட வேண்டுமென்றால், வேறு யாரைக் காட்டமுடியும்? ஒரு சிலருக்கு ஏதாவது சூழ்நிலை காரணமாகக் காட்ட முடியாமல் இருக்கலாம். உள்ளத்தைக் கேட்டுப்பார்த்தால், கலைஞரைத் தவிர நம்முடைய தலைவராக யாரையும் காட்ட முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) எனக்கு வேறு சப்ஜெக்ட் இல்லை.

தொல்காப்பிய கனிவளமும், குறளோவிய தனி வளமும் காட்டிய கலைஞர்; நம்முடைய தமிழுக்குச் செம்மொழி அந்தஸ்து வாங்கித் தந்த கலைஞர்; உயர் நீதிமன்றத்திலே நம்முடைய மொழி ஒலிக்கச் செய்த கலைஞர் அவர்களைப் பற்றி நான் இங்கே சொல்லாமல் வேறு எதைப் பற்றிப் பேச முடியும்?

ஐயா, இந்த திராவிடக் கட்சிக்காரர்களைப் பொறுத்தவரைக்கும், ஒரு மூன்று எழுத்துக்குக் கட்டுப்படுவார்கள். அண்ணா என்ற வார்த்தையைச் சொல்லிவிட்டால், இவர்களிடம் பேதம் மறைந்துவிடும். இவர்களுக்குக் கட்டுப்பட்டவர்கள். ஆனால், ஒரு கவிஞன் சொன்னதை நான் இங்கே சொல்லிக்காட்டுகிறேன்.

> **"அண்ணா அங்கே கொடியில் பறக்கிறார்**
> **கலைஞரிடம் கொடிகட்டிப் பறக்கிறார்"**

என்றார்கள். ஆகவே, அந்தக் கலைஞரைப் பற்றிதான் நான் பேசுகிறேன். உங்கள் அண்ணா சொன்னார். கலைஞருக்கு 44-வது பிறந்த நாள். அங்கே, கலைவாணர் அரங்கத்திலே கூட்டம். கதாநாயகனைக் காணோம், ஓடி ஒளிந்துவிட்டார். அங்கே அண்ணா பேசினார். "என்னுடைய தம்பி தண்டவாளத்திலே தலை வைத்து படு என்றாலும், இதோ அமைச்சர் பதவி என்றாலும், ஒரே உணர்வோடு பெற்றுக்கொள்பவன்தான் என் தம்பி கருணாநிதி" என்று சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அண்ணாவைப்பற்றிதான் நான் இப்பொழுது சொல்லிக்காட்டுகிறேன். அந்தப் பேரறிஞர் சொன்னார், "தமிழ் உங்களுக்குப் பேசும் கருவி

மட்டுமல்ல, தமிழனுக்கு வழிகாட்டியாக, ஆசானாக, துணைவனாக இருப்பதுதான் அந்தத் தமிழ்மொழி" என்று (குறுக்கீடு) நான் தமிழ் வளர்ச்சியைப் பற்றி மட்டும்தான் பேசப் போகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தி. வேல்முருகன்):** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 7 மணித் துளிகள் முடிவாகிவிட்டன. விரைவாக முடிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கு. ஹசன் அலி:** எனக்கு எங்கள் பொருளாளர் அவர்கள் தந்த நேரம் 15 நிமிடங்கள்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தி. வேல்முருகன்):** பேரவையினுடைய மாற்றுத் தலைவராக இருக்கிறவருடைய பேச்சுக்குக் கட்டுப்பட வேண்டும் என்பது விதி. பேசுங்கள், பேசுங்கள்.

**திரு. கு. ஹசன் அலி:** மறைமலை அடிகள் இந்தத் தமிழ் வளர்ச்சியைப் பற்றி பேசும்போது அன்றைக்குக் குறிப்பிட்டார்கள், "தமிழ் எதனால் கெடுகிறது என்றால், பிற மொழிக் கலப்பால் கெடுகிறது" என்று. தமிழனுடைய முகத்திலே பிற மொழிக் கலப்பால் அழகு குறைந்திருக்கிறது. தமிழன்னையின் முகத்திலே கறை படிந்திருக்கிறது.

அதேபோல, அன்றைக்கு திரு.வி.க. சொன்னார், "இன்றைய உலகத்திலே, இந்தத் தரணியிலே தமிழ் மொழிபோல் சிறந்தது எதுவும் இல்லை. ஆனால், தமிழனைப்போல் மொழிக் கொலையில் சிறந்தவர்களும் யாரும் இல்லை". பாரதிதாசன் சொன்னார், "சென்ற இடமெல்லாம் நம்முடைய மொழிதான் உயர்வு, உயர்வு என்று பேசுகின்றோம். ஆனால், தலைமுறை பல கழிந்தோம்; குறை களைந்தோம் இல்லை" என்றார்கள். இந்தக் கருத்துகளை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். இதைச் சொன்னவர் யார் என்றால்,

"எங்கள் வாழ்வும், எங்கள் வளமும்
மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு"

என்று அவர்தான் சொல்லிக்காட்டினார்.

**"ஆரியம் போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!"**

என்று மனோன்மணீயம் சுந்தரனார் பாடியுள்ளார்.



இன்று ஆங்கில மோகத்தில் தமிழ் வளர்ச்சி இருக்கிறதா என்று நான் கேட்க விரும்புகின்றேன். 35 ஆயிரம் மழலையர் ஆங்கிலப் பள்ளிகள் தமிழகத்திலே. 25 ஆயிரம் தகுதி செய் பள்ளிகள் தமிழகத்திலே. 42 ஆங்கிலோ இந்தியர் பள்ளிகள், 2,500 C.B.S.E. பள்ளிகள், 30 கேந்திரிய வித்யாலயா; இதுதான் தமிழ் வளர்ச்சியைக் காட்டுகிறதா?

*பிற்பகல் 1-00*

தமிழகத்திலே பிறந்த ஒரு தமிழ் மாணவன் தமிழிலே, 'அ', 'ஆ' கூட கற்றுவிடாமல், பெரிய பெரிய படிப்புகளையெல்லாம் படித்துவிட முடியும் என்று இருக்கிறதே, இதனுடைய நோக்கம் என்ன? ஐயா, இன்றைக்கு நான் வந்துகொண்டிருந்தேன். என்னுடைய வீட்டின் அருகிலே இருக்கக்கூடிய ஒரு வங்கியிலே, அவர்கள் வைத்திருந்த பலகையைப் பார்த்தேன். Dutch Bank என்று அவர்களுடைய மொழியிலே Dutch மொழியிலே எழுதியிருக்கிறார்கள். ஆங்கிலம்கூட அங்கே இல்லை. போட்ட சட்டம் என்ன ஆயிற்று? 50 விழுக்காடு தமிழிலே இருக்க வேண்டுமென்று சொன்ன சட்டம் எங்கே? ஆகவே, நான் இதையெல்லாம் சொல்லும்போது, என்னை ஆங்கிலத்திற்கு எதிரி என்று மட்டும் யாரும் கருதி விட வேண்டாம். நான் ஆங்கிலத்தை வெறுப்பவன் அல்ல. எல்லா மொழிகளையும் கற்று, அதில் உள்ள நன்மைகளையெல்லாம் தமிழகத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்று நினைப்பவன். ஆங்கிலமும், பிற மொழியும் நமக்கு எப்படி இருக்க வேண்டுமென்றால், ஒரு கண்ணாடியைப்போல இருக்க வேண்டும். கண்ணாடி பலவற்றைப் பார்ப்பதற்கு உதவும். ஆனால், அந்தக் கண்ணாடியைக் கண்களாக நினைத்துவிடக்கூடாது. தமிழ் நம்முடைய கண், பிற மொழிகள் நம்முடைய கண்ணாடி. அதை நாம் நம்முடைய பிள்ளைகளுக்கு மறுக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. ஆனால், இன்றைக்கு ஆங்கில மோகம் உங்களுடைய வீடுகளிலே எப்படி இருக்கிறது? "காலையிலே எழுந்து, brush பண்ணிவிட்டு, tiffin பண்ணிவிட்டு, ஓடி ஓடி bus stand-க்குப் போய்,, 3D bus-ஐப் பிடித்து, அங்கே இருந்த signal-ல் இறங்கி, jump பண்ணி, ஒரே jump-லே road-ஐ cross பண்ணி, நான் school கிட்ட போகும்போது, peon, gate-ஐச் சாத்துகிறான்; first period மணி அடித்துவிட்டது, அதையும்தாண்டி உள்ளே போனால், வாத்தியார், 'ஏண்டா late? Bench மேலே ஏறு, இல்லாவிட்டால் உனக்கு fine போடுவேன்' என்றார்." (மணியடிக்கப்பெற்றது) கொஞ்சம் இருங்கள் சார்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தி. வேல்முருகன்):** 11 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. கு. ஹசன் அலி:** பரவாயில்லை.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தி. வேல்முருகன்):** தாய்மொழி தமிழுக்காக ஒரு நிமிடம் அதிகமாகத் தருகிறோம்.

**திரு. கு. ஹசன் அலி:** இல்லை சார். 1956-லே தமிழ் ஆட்சி மொழி, 1977-லே தமிழ் பெயர்ப் பலகை குறித்த சட்டம். 1968-லே அண்ணாவின் கருவிலே உருவாகி, 1970-லே கலைஞர் உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகம் ஆரம்பித்தாரே! ஆந்திராவிற்கு 50 இலட்சம் ரூபாய் அள்ளிக் கொடுத்தோம். நேற்று வரை திட்டங்களைத் தீட்டினோம். நேற்றுகூட, நேற்று என்றால் சில நாட்களுக்கு முன்கூட, இந்த நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு அள்ளிக் கொடுத்தோமே, அவையெல்லாம் என்ன ஆயிற்று? (குறுக்கீடு) சார், இதில் முக்கியமாக உங்களுக்கு நான் சொல்ல விரும்புவது, கடைசியாக ஒரு குறிப்பைச் சொல்ல விரும்புகிறேன். கொஞ்சம் இருங்கள், ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.

தங்கத்தையும், பொன்னையும் டெல்லிக்கு அனுப்பி வைத்தார் நம்முடைய தலைவர். மாண்புமிகு தங்கத்தையும், மாண்புமிகு பொன்னையும் நான் சொல்கிறேன், இவர்கள் இருவரையும் தலைநகருக்கு அனுப்பி வைத்தார்கள். அவர்கள் சர்வ சிக்ஷ அபியான் என்ற மனித வள மேம்பாட்டு ஆய்வுக் கழகத்திற்குப் போய் இருக்கும்போது அங்கிருந்து திரும்பி வந்தார்கள், 125 கோடி ரூபாய் தமிழ்ப் பெண்களுக்கு வேண்டுமென்று கேட்டு. ஆனால், பேரிடியாக வந்த செய்தி என்ன தெரியுமா? தென்னக மாநிலங்களிலே, நான்கு மாநிலங்களிலே தமிழகம்தான் பெண் அறிவிலே, கல்வி அறிவிலே பிந்தி இருக்கிறது. வெறும் 62 சதவிகிதம்தான் பெண்கள் கல்வி அறிவு பெற்றவர்கள் இந்தத் தமிழகத்திலே. 84 சதவிகித ஆண்கள்தான் கல்வியறிவு பெற்றவர்கள் இந்தத் தமிழகத்திலே. இதைக் கேரளாவோடு ஒப்பிட்டுப் பாருங்கள். அங்கே 90 சதவிகிதம் பேர் கல்வியறிவு பெற்றவர்கள் என்னும்போது, நம்முடைய தங்கை கேரளாவைப் பார்த்து நாம் வியக்கத்தான் வேண்டி இருக்கிறது. தருமபுரி, கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, பெரம்பலூர் மாவட்டங்களில், 55 சதவிகிதத்திற்கும் குறைவாக பெண்களுடைய கல்வியறிவு இருக்கிறது என்றால், நம்முடைய திட்டத்திலே ஏதாவது குறை இருக்கிறதா என்று நாம் பார்க்க வேண்டும். சிங்கம் போகின்ற





பாதையைத் திரும்பிப் பார்க்க வேண்டும் என்றீர்களே, சிறிது திரும்பிப் பாருங்கள். எத்தனை திட்டங்கள் கொண்டு வந்தாலும், இதற்குக் காரணம் என்னவென்று கேட்டால் (குறுக்கீடு) ஒன்றே ஒன்றைச் சொல்கிறேன். உங்களைப் பற்றித்தான் பேசப் போகிறேன். (குறுக்கீடு) உங்களைப் பற்றித்தான் பேசப் போகிறேன். ஒன்றே ஒன்று சொல்கிறேன். இதற்குக் காரணம் என்னவென்று பார்க்கும்போது, அந்தக் காலகட்டத்திலே ஊடகங்களானாலும், சின்னத் திரையானாலும், திரையரங்குகளானாலும், நமக்கு தமிழைத் தாங்கிப் பிடிக்கும் ஒரு கருவியாக அவை இருந்தன. நந்தனார் நாடகம்-சமூக விழிப்பு, அவ்வையார் சுட்ட பழம் வேண்டுமா, சுடாத பழம் வேண்டுமா என்று கேட்டது, (மணியடிக்கப்பெற்றது) அதையெல்லாம்விட, ஒரு வார்த்தையை வைத்து சித்து விளையாட்டாக, 'மனோகரா, உன்னை ஏன் அழைத்து வரச் சொன்னேன் தெரியுமா? திருத்திக்கொள்ளும் உமது பேச்சை, அழைத்து வரவில்லை, இழுத்து வரச் செய்தீர்கள்' என்று இன்றைக்கும் மறக்காமல் சொல்கின்ற பேச்செல்லாம் அன்றைக்கு நாம் கேட்டது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தி. வேல்முருகன்):** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் செல்வி அங்கையற்கண்ணி. (குறுக்கீடு) உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லி முடியுங்கள்.

**திரு. கு. ஹசன் அலி:** இப்போது ரொம்ப முக்கியமான விஷயத்தை நான் சொல்லப் போகிறேன். சார், தயவுசெய்து கேளுங்கள். இன்றைக்கு, இந்தத் தமிழ் சினிமாவாலே நிறைய சீரழிவுகள் நடந்துகொண்டிருக்கின்றன. அது என்னவென்று சொல்லிவிடுகிறேன். ஊனமுற்றவர்களைக் கேலி செய்யும் படம் இப்போது வந்து கொண்டிருக்கின்றது. சமீபத்திலே நான் பார்த்த ஒரு நகைச்சுவை காட்சி. இருவர் ஒரு பெண்ணை மணம் முடிக்க ஆசைப்படுகின்றனர். அதிலே ஒருவர் வெற்றி பெற்று அந்தப் பெண்ணை மணம் முடிக்கின்றார். முடித்துவிட்டுப் பார்க்கும்போது, அந்தப் பெண் கருப்பாம். உடனே, தோற்றவர், அவளை மணம் முடிக்க முடியாதவர், ஆஹா, ஆஹா என்று கைதட்டி சிரிக்கவும், வெற்றி பெற்றவர், ஐயோ, மோசம் போனேனே என்று அழுவதும், இது நகைச்சுவையா? இல்லை, இங்குள்ள பெண்களைக் கொச்சைப்படுத்துவதா?

பிற்பகல் 1-05

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தி. வேல்முருகன்):** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு உறுப்பினர் ஹசன் அலி அவர்கள், அவர் பார்த்த படத்தை மற்றவர்களும் பார்ப்பதற்கு வாய்ப்பு கொடுப்பார். இன்னும் நிறைய பேர் பேச வேண்டும். மூன்று அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும். இன்னொரு நாளைக்கு உங்களை அரை மணி நேரம் பேச விட்டுவிடுகின்றோம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தி. வேல்முருகன்):** மாண்புமிகு உறுப்பினர் செல்வி ஆ. அங்கையற்கண்ணி. (குறுக்கீடு) திரு. ஹசன் அலி, உட்காருங்கள்.

**செல்வி ஆ. அங்கையற்கண்ணி:** மாண்புமிகு சட்டப்பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, பெண் வர்க்கம் என் வர்க்கம் என்றவரெல்லாம் பெண்ணைப் பேயாக நினைத்தாரன்றி பெருமைபடுத்தவில்லை. கற்புக்கரசியாம் கண்ணகியின் சிலையையும் காட்சியகத்தில் போட்டு களங்கப்படுத்தினார்கள்.

*"தன்துயர் காணா தகைசால் பூங்கொடி*
*இன்துணை மகளிர்க்கு இன்றியமையா*
*கற்புக்கடம் பூண்ட இத்தெய்வமல்லது*
*பொற்புடைத் தெய்வம் யாம் கண்டிலமால்!*
*வானம் பொய்க்காது வளம் பிழைப்பு அறியாது*
*நீனில வேந்தர் கொற்றம் சிதையாது*
*பத்தினிப் பெண்டிர் இருந்த நாடு"*

என்று சிலம்பு பாடிய இளங்கோவிற்குத் தெரிந்த கற்பின் சிறப்பு, சமணப் பெண் துறவி கவுந்தியடிகள் மாதரியிடம் கண்ணகியை அடைக்கலப்படுத்தும்போது சொன்ன கற்பின் சிறப்பு, நாட்டில் ஒருவருக்கு மட்டும் இங்கு தெரியாமல் போனது. கடற்கரையில் கண்ணகி சிலையும் காணாமல் போனது. தலைவர் கலைஞரே! நீங்கள் ஆட்சிக்கு வந்தீர், கடற்கரையில் கண்ணகியின் சிலை மீண்டும் காட்சிக்கு வந்தது. நன்றிப் பெருக்கோடு நாடே உங்களை வணங்குகின்றது.

தமிழக சட்டமன்ற வரலாற்றில், 50 ஆம் ஆண்டுப் பொன் விழா காணும், எங்கள் தலைவர் கலைஞர் அவர்களை வணங்குகின்றேன். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களையும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அண்ணன் தளபதி அவர்களையும், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களையும் வணங்கி, பொதுத்



துறை, தமிழ் வளர்ச்சி, விளையாட்டுத் துறை, சுற்றச்சூழல் மற்றும் வனத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளில் பேசுவதற்கு வாய்ப்பளித்த மாற்றுத் தலைவர் அவர்களுக்கும் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மனித இனம் வாழ்வதற்கும், தேசத்தின் பல்வேறு அபிவிருத்திக்கும் வன வளம் உதவுகிறது. இன்றைய உலகத்தில் சுற்றுப்புறம் மாசுபடுதலைத் தடுக்க வன வளத்தைப் பராமரித்தல் மிகவும் இன்றியமையாததாகும். வன வளம் சிறந்து இருந்தால்தான் பொழுதுபோக்கவும், விலங்கினங்களை வாழ வைக்கவும், அது சுற்றுலா இடமாகக் காட்சியளிக்கவும் முடியும். அதன்மூலம் பொருளாதாரத்தைச் சீராக்கவும், காட்டு வளம் உதவுகிறது. வன வளத்தால் மண் பாதுகாக்கப்படுகின்றது. நீர் சேமிப்பு அதிகரிக்கிறது. அதனால் கிராம மக்களின் வாழ்க்கை சிறந்து விளங்குகின்றது.

வனப் பகுதிகளுக்கு அருகிலுள்ள விவசாய நிலங்களிலுள்ள பயிர்களை வன விலங்குகள் சேதப்படுத்துவதைத் தவிர்க்கும்பொருட்டு, 180 கிலோ மீட்டர் நீளத்திற்கு சூரிய மின் வேலி அமைக்க ரூபாய் 290 இலட்சம் நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை வரவேற்கின்றேன். மரங்களை நாம் வளர்த்தால் மரம் நம்மை வளர்க்கும் என்பதைக் கருத்தில்கொண்டு, மரங்கள் நடும் பணியை தொண்டு நிறுவனங்களின் பங்கேற்புடன் ஒரு பெரும் மக்கள் இயக்கமாக நடத்த இந்த அரசு ஆக்கமும், ஊக்கமும் அளிக்கும் என நிதிநிலை அறிக்கையிலேயே கூறப்பட்டுள்ளதை வரவேற்கின்றேன்.

எங்கள் இயக்கத்தின் தலைவர், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் பிறந்தநாள் விழா என்றால், 83 வயது என்று சொன்னால், 83 மரக் கன்றுகளை கழகத் தோழர்களின் இல்லங்களிலும், பொது இடங்களிலும் நடச் சொல்லி, இயற்கை வளத்தை பெருக்குவதற்கு மரம் நடும் விழா நடத்துவோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், சில தலைவர்களின் பிறந்தநாள் விழா என்று சொன்னால், மண் சோறு சாப்பிடுவதும், வேப்பிலையைக் கட்டிக்கொண்டு அங்கப் பிரதட்சணமும் செய்கிறார்கள்.

நடந்து முடிந்த நெடுஞ்சாலைத் துறை மானியக் கோரிக்கையில் மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் ஓர் அறிவிப்புச் செய்தார்கள். தமிழக முதல்வரின் ஐம்பதாவது ஆண்டு சட்டமன்றப் பொன் விழாவை முன்னிட்டு, நெடுஞ்சாலைத் துறை மூலமாக இரண்டு இலட்சம் மரக் கன்றுகள் நடும் விழா நடைபெறும்

என்று அறிவித்தார்கள். எங்கள் கழக ஆட்சி இயற்கை வளத்தைப் பெருக்கும் என்பதற்கு இதுவே சிறந்த எடுத்துக்காட்டாகும்.

என் தொகுதியிலுள்ள கல்வராயன் மலையின் மொத்தப் பரப்பளவு 57,343.59 ஹெக்டேர். அதாவது 600 சதுர கி.மீ. ஆகும். இதில் வசிக்கும் மக்கள் தொகை 39,000-க்கும் மேற்பட்டவர்கள், 161 கிராமங்களில் வசித்து வருகின்றனர். இவர்கள் அனைவரும் முழுக்க முழுக்க பழங்குடியினத்தைச் சார்ந்தவர்களாவார்கள். இவர்கள் காலங்காலமாக மேட்டுப் பயிர்களையே நம்பி வாழ்க்கை நடத்துகின்றார்கள். இவர்கள் விவசாயம் செய்யும் பயிர்கள் தினை, சாமை, வரகு, மானாவாரி நெற்பயிர். தண்ணீர் ஊற்று எங்கிருக்கின்றதோ அங்கே மட்டும் சிறிதளவு நெற்பயிர்கள் விவசாயம் செய்கின்றார்கள். 1977 ஆம் ஆண்டுதான் பாளையக்காரர்களிடமிருந்து சடையக் கவுண்டர், குறும்பக் கவுண்டர், அரியக் கவுண்டர் என்கின்ற அந்த பாளையக்காரர்களிடமிருந்து அரசாங்கம் நிலத்தைக் கையகப்படுத்தியது.

பிற்பகல் 1-10

பாளையக்காரர்கள் காலத்தில் 161 கிராமங்களில் வசித்துவரும் மலைவாழ் பழங்குடியின மக்கள், கல்வராயன்மலைப் பகுதியில் தேவையான இடங்களில் மானாவாரிப் பயிர் விவசாயம் செய்து வந்தனர். இவர்கள் விவசாயம் செய்த நிலங்களுக்கெல்லாம், பாளையக்காரர்களிடமே வரி கொடுக்கப்பட்டது. விவசாய வரி, கொடுவாள் வரி, நாட்டான், மூப்பன், கவுண்டன், கங்காணி, கார்பாரி, நம்பியான் இவர்கள்மூலமாக மேற்கண்ட வரிகள் பாளையக்காரருக்குச் சென்றது.

மலைப் பகுதிகளில் மரங்களையும், செடி கொடிகளையும், வெட்டி காய்ந்த பின்னர், தீ வைத்து கொளுத்துவார்கள். இதற்கு புனல்காடு என்று பெயர்.

மூன்று வருடங்கள் இப்படி வெட்டிய காடுகளில் களை கொத்தியின்மூலமாக, வரகு, சாமை, தினை போன்ற பயிர் வகைகளை பயிர் செய்வார்கள். மூன்று வருடங்களுக்குப் பிறகு இந்த பயிர் செய்த இடத்தை விட்டுவிட்டு, வேறு பகுதியில் உள்ள மரம், செடி, கொடிகளை வெட்டி தீ வைத்து கொளுத்தி இந்தச் சாம்பலை எருவாக்கி மீண்டும் பயிர் செய்வார்கள்.



ஒருமுறை மரம் செடி கொடிகளை வெட்டி தீயிட்டு கொளுத்தி பயிர் செய்யப்படுகிறதே, ஏன் மீண்டும் மீண்டும் மரம், செடி, கொடிகளை வெட்டி, விவசாயம் செய்கிறீர்கள் என விவசாயம் செய்யும் பழங்குடியின மக்களை கேட்கும்போது, மூன்று வருடங்கள் வரைதான் தினை, சாமை, வரகு போன்ற பயிர்களை பயிர் செய்ய முடியும். இந்த உணவுப் பொருட்களை சாப்பிட முடியும். மூன்று வருடங்களுக்கு மேல் இந்தப் புனல் காட்டில் தினை, சாமை, வரகு பயிரிட்டு சாப்பிட்டால் மயக்கம் வந்து விடும் என்று சொல்கிறார்கள். அதனால்தான் இடத்தை மாற்றிப் பயிரிடுவதாக சொல்கிறார்கள்.

இந்தக் காடுகளை வெட்டி பயிர் செய்வதனால் 1977-க்குப் பிறகு அரசு இந்த மலையை எடுத்துக்கொண்டதனால், புனல்காடுகளில் பயிர் செய்ய முனையும்போது வனத்துறையினர் தடுத்து நிறுத்துகின்றனர்.

1977 ஆம் ஆண்டு அரசாங்கம் பாளையக்காரர்களிடமிருந்து மலைப்பகுதியை கையகப்படுத்திய பின்னர் மலைப்பகுதியை சர்வே செய்ய அதிகாரி பெருமக்கள், வருகை தந்து மலைவாழ் பழங்குடி மக்களிடம் இது என்ன நிலங்கள் என்று கேட்கின்றபோது,

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தி. வேல்முருகன்):** ஒரு நிமிடம்தான் உள்ளது.

**செல்வி ஆ. அங்கையற்கண்ணி:** மலைவாழ் பழங்குடியின மக்கள் பழக்க வழக்கப்படி, உழவுக்காடு என்றும், புனல்காடு என்றும், வப்பூர் காடு என்றும், தேக்குமரத்துக்காடு என்றும், இந்தப் பயிர் செய்யும் நிலங்களை, காடு காடு, என்று சொன்னதால், அதை ஆங்கிலத்தில் forest என்று நினைத்து, இந்த இடங்களை வனத் துறைக்கு சொந்தமானது என முடிவு செய்து, இவர்கள் பயிர் செய்து வந்த நிலங்களுக்குப் பட்டா கொடுக்காமல் நிறுத்திவிட்டனர். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களே, நீங்கள் கலந்து பேசி மலைவாழ் பழங்குடியின மக்கள், காலம் காலமாக பயிர் செய்து வரும் சமவெளியில் உள்ள நிலங்களுக்கு அவர்கள் பெயரில் பட்டா வழங்க வேண்டுமென பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பட்டா வழங்கப்படவில்லையென்றால் இவர்கள் பயிர் செய்யும் நிலங்களில் வனத் துறையின்மூலமாக மூங்கில்கள், பழவகை மரங்கள், காடு வளர்ப்புத் திட்டத்தில் பயிர் செய்ய முயற்சிக்கின்றனர். இதனால் வனத் துறைக்கும், பழங்குடியின மக்களுக்கும், கருத்து வேறுபாடுகள் உருவாகின்றன. ஆகவே, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களே, மீண்டும் நிலங்களை அளந்து மலைவாழ் பழங்குடியினர் பயிர் செய்யும் நிலங்களுக்கு அவர்கள் பெயரில் பட்டா வழங்க வருவாய்த் துறைக்கு பரிந்துரை செய்ய வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

கல்வராயன் மலைப் பகுதிகளில் கடுக்காய் அதிகமாக விளைகிறது. இந்தக் கடுக்காய் சாயம் தயாரிக்கவும், மருந்து தயாரிக்கவும் பயன்படுகிறது. இந்தக் கடுக்காயைப் பயன்படுத்தி, கல்வராயன் மலையிலேயே, கடுக்காய் தொழிற்சாலை உருவாக்கினால் அந்த மக்கள் பொருளாதாரத்தை ஈட்டுவதற்கும், அங்குள்ளவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதற்கும் ஏதுவாக அமையும்.

இன்னும் இந்த மக்கள் வசிக்கும் 161 கிராமங்களில், மூன்றில் இரண்டு பங்கு சாலை வசதியும் இல்லை, மின்சார விளக்கு வசதியும் இல்லை. மின்சார வசதியும், சாலை வசதியும் அளிக்க ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாகவோ, மின்சாரத் துறையின் மூலமாகவோ...

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தி. வேல்முருகன்):** மாண்புமிகு உறுப்பினர் கோரிக்கையை எழுதிக் கொடுத்துவிடுங்கள். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா அவர்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லி முடித்துவிடுங்கள். பேசுங்கள். மாண்புமிகு உறுப்பினர் செல்வி ஆ. அங்கையற்கண்ணி, முடியுங்கள். நன்றி சொல்லி முடியுங்கள்.

**செல்வி ஆ. அங்கையற்கண்ணி:** மின்சார வசதியை அளிக்க வனத் துறையில் தடைச்சட்டம் இருக்கிறது என தடை செய்து விடுகிறார்கள். ஆகவே, சாலை வசதி, மின்சார வசதி பெறுவதற்கு இந்தத் தடைச் சட்டத்தை நீக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

25 ஆண்டு காலம் பணியாற்றியவர்களுக்கு விதியை தளர்த்தி, இவர்களுக்கு வேலை வழங்க வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். மாற்றுத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.



**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. தி. வேல்முருகன்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா அவர்கள்.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வனம் மற்றும் சுற்றுச்சூழல், பொதுத் துறை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை போன்ற மானியங்களிலே எனக்குப் பேச வாய்ப்பளித்த சமூக நீதிக் காவலர் மருத்துவர் அய்யா அவர்களுக்கும், பசுமை நாயகர் சின்ன அய்யா அவர்களுக்கும், அண்ணன் திரு. கோ.க. மணி அவர்களுக்கும், என் முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*"மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்*
*காடும் உடைய தரண்"*

என்று வள்ளுவர் பெருமகன் சொன்னார். மணிபோல தெளிந்த நீரும், வெட்ட வெளியான நிலமும், மலையும், அழகிய நிழல் உடைய காடும் ஆகிய இவை நான்கும்தான் ஒரு நாட்டிற்கு அரண் என்று சொன்னார். அதேபோல, "நீர் இன்றி அமையாது உலகு" என்று சொன்னார்கள். எப்படிப்பட்டவர்களுக்கும் நீரில்லை என்று சொன்னால், உலக வாழ்க்கை நடைபெறாது. மழை இல்லையென்றுச் சொன்னால் ஒழுக்கம்கூட நிலைபெறாது என்று வள்ளுவர் பெருமகனார் சொன்னார்கள். ஆனால், இன்றைய நிலைமை மூன்றில் ஒரு பகுதியாக இருக்க வேண்டிய காடு, 33 விழுக்காடு இப்போது இல்லை. நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே 17.59 விழுக்காடுதான் இருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 1-15

மூன்றாம் உலகப் போர் வரும் என்று சொன்னால் அது தண்ணீருக்காகத்தான் வரும் என்று விஞ்ஞானிகள் எச்சரிக்கை செய்திருக்கிறார்கள். எனவே, இதை கவனத்திலேகொள்ள வேண்டும். இப்போது நம்மைச் சுற்றியேகூட அது நடந்து கொண்டிருக்கிறது. கர்நாடகா நமக்குத் தண்ணீர் தர மறுக்கிறது, கேரளா மறுக்கிறது, ஆந்திரா மறுக்கிறது. முல்லைப் பெரியாறு மட்டும் இல்லை. இப்படி அண்டை மாநிலங்கள் மறுக்கின்றன. ஏன், பக்கத்திலே இருக்கின்ற பஞ்சாயத்து தண்ணீர் தர மறுக்கிறது. பக்கத்திலே இருக்கின்ற தெருவிலே தண்ணீர் கொடுக்க மறுக்கின்றார்கள். இந்த நிலைமை நீடித்தால் நிச்சயமாக எதிர்காலத்திலே மூன்றாம் உலகப் போர் வரும் என்பதிலே ஐயமில்லை. எனவே, காடுகளை வளர்க்க வேண்டிய

கட்டாயம் நமக்கு இருக்கிறது. அதிலே நம் அரசு கவனம் செலுத்த வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நம் முன்னோர்கள் நாம் வாழ்வதற்காக 39 ஆயிரம் ஏரி, குளங்களை எல்லாம் வெட்டி வைத்துவிட்டுச் சென்றார்கள். ஆனால், இப்போது சுயநலத்திற்காக ஏரிகளை ஆக்கிரமிப்பு செய்து, பட்டா போட்டு, விற்பனை செய்து, அந்த நீர்நிலைகள் எல்லாம் மறைந்துவிட்ட காரணத்தினாலே தண்ணீருக்காக நாம் கஷ்டப்படக்கூடிய சூழ்நிலை வருகிறது. எனவே, அந்த ஏரி வரத்து வாய்க்கால்களை எல்லாம், குளங்களை எல்லாம் பாதுகாக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆண்டு 100 கோடி மரங்களை வளர்க்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை இயக்கம் ஒன்றைத் தொடங்கி இருக்கிறார்கள். அந்த இயக்கத்திலே எங்களுடைய பசுமைத் தாயகம்கூட இணைந்திருக்கிறது. இருபத்து இரண்டு இலட்சம் மரக் கன்றுகளை இலவசமாக வளர்த்து கிராமப்புற விவசாயிகளுக்கு வழங்குவதாக இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லியிருக்கிறார்கள். அதற்காக இந்த அரசாங்கத்தை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாற்றுத் தலைவர் அவர்களே, உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா? இன்றைக்கு இருக்கிற அறத்திலேயே மிகச் சிறந்த அறம் எது என்றால் மரம் நடும் அறமே மாபெரும் அறம் என்று எங்களுடைய ஆசான் மருத்துவர் அய்யா அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். எங்களுடைய சின்ன அய்யா அவர்கள் ஒரே ஆண்டிலே 1 இலட்சத்து 60 ஆயிரம் மரக் கன்றுகளை நட்டு இப்போது சாதனை செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது ஜப்பான் நாட்டு நிதியுதவியோடு TAP என்ற திட்டத்தின்மூலமாக காடு வளர்க்க நிதி ஒதுக்கப்படுகிறது. 50 ஆயிரம் குழிகளை வெட்டுகிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால், மரங்களை எவ்வளவு நட்டார்கள், அதிலே எவ்வளவு மரங்கள் காப்பாற்றப்பட்டிருக்கின்றன என்பது கேள்விக்குறியாக இருக்கிறது.

என்னுடைய தொகுதியிலே ஜவ்வாது மலை, ஏலகிரி மலைப் பகுதியிலே ஜப்பான் காடு வளர்ப்புத் திட்டத்திலே குறிப்பிட்ட அளவுக்கு அந்த மரங்களை அவர்கள் நட்டு வளர்த்தார்களா என்று சொன்னால் நிச்சயமாக இல்லை. வனத் துறை அமைச்சர் அவர்கள்



இதை கவனத்திலே கொள்ள வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, இப்போது சென்னை நகரிலே மலைபோலக் குவிந்திருக்கின்ற கழிவுப் பொருட்களிலிருந்து மின்சாரமும், உரமும் தயாரிக்கப்படுகின்ற நவீன யுக்திகள் எல்லாம் வந்துவிட்டன. அதைக் கையாள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, குப்பையில்லா நகரமாக, Zero Waste என்று சொல்லக்கூடிய அளவிலே நகரத்தை உருவாக்க வேண்டும். தெருவோரமெல்லாம் பசுமை மரங்களை நட்டுக் காப்பாற்ற வேண்டும்.

மாசுக் கட்டுப்பாடு. இந்த ஒலி மாசுக் கட்டுப்பாட்டை நாம் கடைப்பிடிக்க வேண்டும். இந்த ஒலி மாசு காரணத்தினாலே மன அழுத்தம், எரிச்சல், உணர்ச்சிவசப்படுதல் போன்ற மன நல பாதிப்புகள் எல்லாம் ஏற்படுகின்றன. அதுமட்டுமல்ல தலைவலி, கேட்கும் திறன் இழப்பு மற்றும் அருகிலுள்ள பள்ளிக் குழந்தைகளுக்குக் கற்கும் திறன் எல்லாம் போய்விடுகிறது. எனவே, மேலைநாடுகளில் எல்லாம் மிக நெருக்கடியாக இருக்கின்ற பகுதியிலேகூட எந்த ஒரு வாகனத்திலும் ஒலிப்பானை ஒலிக்கச் செய்வதில்லை. நான் சமீபத்திலேகூட சிங்கப்பூருக்குச் சென்றிருந்தேன். ஒரு வாகனத்திலேகூட ஒலி எழுப்பவேயில்லை என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். எனவே, ஒலி மாசுபடுவதைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகம் எங்கும் தொழிற்சாலைகளால் மாசு ஏற்படுகிறது. இதனால் நிலம், நீர், காற்று சீரழிந்து உடல் நல பாதிப்பு எல்லாம் ஏற்படுகிறது. தொழிற்சாலைகள் அவசியம்தான். ஆனால், இப்போது கடலூரிலே இருக்கிற சிப்காட், வேலூரிலே இருக்கிற தொழிற்சாலைகள், மேட்டூரிலே இருக்கின்ற கெம்ப்ளாஸ்ட், மால்கோ மற்றும் சாயப் பட்டறைகள், பெட்ரோல் தொழிற்சாலைகள் இவற்றால் சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டு அங்கே வாழுகிற மக்களுக்கு பல்வேறு நோய்கள் வரக்கூடிய அபாய நிலைகள் எல்லாம் இருக்கின்றன. எனவே, இதைக் கண்காணிக்க ஒரு குழு அமைத்து இந்த மாசைக் குறைக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சுற்றுச்சூழல் பாதிக்கப்படுகிறது. மரபின மாற்று விதைகளால் மாசு ஏற்படுகிறது. அதேபோல மனித குலத்திற்கு கேடு விளைகிறது. இரசாயன தொழிற்சாலைக் கழிவுகள் எல்லாம் நிலத்தடி நீரையும் பாதிக்கிறது. இதையெல்லாம் கட்டுப்படுத்த வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-20*

அதுமட்டுமல்ல, சென்னை போன்ற பெருநகரங்களிலே வாகனப் புகையைக் கட்டுப்படுத்த வேண்டும். தனியார் வாகனங்களின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும். அங்கே, புதுடெல்லியிலே C.N.G. என்று சொல்லக்கூடிய இயற்கை எரிவாயுவைப் பயன்படுத்தி முழுமையாக மாசுக் கட்டுப்பாட்டை உருவாக்கியிருக்கிறார்கள். அதேபோல, சென்னையிலும் C.N.G. என்று சொல்லக்கூடிய எரிவாயு முறையைக் கொண்டுவர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதேபோல, தமிழிலே நெகிழி என்றும், ஆங்கிலத்திலே பிளாஸ்டிக் என்றும் சொல்லக்கூடிய அந்த நெகிழியைக் கட்டுப்படுத்த வேண்டும். இந்த நெகிழியால் இன்றைக்கு மிகப் பெரிய அபாயங்கள் இருக்கின்றன. எளிதிலே மக்க முடியாத, மிகப் பெரிய சவாலாக இந்த பிளாஸ்டிக் இருந்துகொண்டிருக்கிறது. எனவே, இதைத் தடை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தது, விளையாட்டு நலன். (மணியடிக்கப்பெற்றது) பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நாட்டிலே மிகப் பெரிய, அளவிட முடியாத சக்தி எதுவென்று சொன்னால், அது இளைஞர் சக்திதான். நாம் இளைஞர் சக்தியை நாடு முழுவதும் பயன்படுத்திக்கொள்வதில்லை. இளைஞர் சக்தியை முழுமையாக பயன்படுத்துகின்ற மாநிலம் விரைவாக முன்னேறும் என்று சொல்கிறார்கள். எனவே, படித்துவிட்டு வேலையில்லாத இளைஞர்கள் எல்லாம் இப்போது தீவிரவாதத்தை நோக்கி, வன்முறையை நோக்கி, தீய செயல்களில் இறங்கிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களை நெறிமுறைப்படுத்துவதற்காக, ஒவ்வொரு ஒன்றியத்திலும், படித்துவிட்டு வேலையில்லாத இளைஞர்களுக்கு, தன் நாடு, தன் மக்கள்,



தன்னுடைய குடும்பம் என்ற உணர்வு வரக்கூடிய அளவிலே அவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொடுத்த நேரம் முடிந்துவிட்டது. உரையை முடியுங்கள்.

**திரு. தி.க. ராஜா:** பேரவைத் தலைவர் அவர்களே, ரோஜாவின் இராஜா என்று சொல்லக்கூடிய நம்முடைய ஜவஹர்லால் நேரு அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். 11 முட்டாள்கள் விளையாடுகிற விளையாட்டை, 11 ஆயிரம் முட்டாள்கள் பார்க்கிறார்கள் என்று சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எதை என்று சொன்னால், கிரிக்கெட் என்று சொல்லக்கூடிய மட்டைப் பந்தைத்தான் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அபாண்டமாக நேருமீது இந்தப் பழியைச் சுமத்தக் கூடாது. அப்படிச் சொன்னவர் பண்டித நேரு அல்ல. பெர்னார்ட் ஷா.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜா, ஏழு நிமிடங்கள் என்று சொல்லி ஒன்பது நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரையை முடித்துவிடுகிறேன். நான்கு மானியக் கோரிக்கைள்மீது விவாதம்.

இந்த மட்டைப் பந்தைத் தடை செய்ய வேண்டும். பழந்தமிழர்க்கு விளையாட்டு ஒரு கலை. கலை மட்டுமல்லாமல், பழந்தமிழ் விளையாட்டு தமிழ்நாட்டில் தமிழர்களிடம் இப்போது காணாமல் போய்விட்டது. மறைந்து வருகிறது, மருவி வருகிறது. இது கவலை அளிக்கக்கூடியது. பழைய காலத்திலே மஞ்சு விரட்டு, காளை அடக்குவது, சிலம்புக் கலை, பொம்மலாட்டம், பொய்க்கால் குதிரை சிலம்பாட்டம். போன்ற ஆட்டங்கள் எல்லாம் தமிழர்களுடைய வீர விளையாட்டாக இருந்தன. நமது தலைவர் கலைஞர் அவர்கள்கூடச் சொன்னார்கள், அந்தக் காலத்திலே காளையை அடக்குபவனுக்குத்தான் பெண் கொடுப்பார்கள் என்று.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழர்களுடைய விளையாட்டு புறக்கணிக்கக்கூடியதல்ல. ஆனால், தமிழர்கள் விளையாட்டையே விளையாடிக்கொண்டிருந்தால், 17 ஆம்

நூற்றாண்டில்தான் நாம் இருக்க வேண்டும். ஆக, உலகம் எவ்வளவு வேகமாக வளர்ந்து வருகிறது என்பதையும் பார்த்து, அதற்குத்தக்கபடி நாம் போக வேண்டும், அதே நேரத்திலே, பழமையையும் மறக்காமல் இருக்க வேண்டும். ஆனால், அதற்காக கிரிக்கெட்டை நாம் தடை செய்ய வேண்டும் என்று பேசுவது சரியானதல்ல.

**திரு. தி.க. ராஜா:** பேரவைத் தலைவர் அவர்களே, பழமை மாறக் கூடாது, பழமையைப் பாதுகாக்க வேண்டுமென்ற நோக்கத்திற்காகத்தான் நான் இதைச் சொன்னேனேயொழிய நான் புதுமையை எதிர்ப்பதற்காகச் சொல்லவில்லை. எனவே, எங்கும் தமிழ் எதிலும் தமிழ், எல்லா நிலைகளிலும் தமிழ் என்ற நிலைமையை நம்முடைய முத்தமிழறிஞர், தமிழாய்ந்த தலைமகன், ஒரு தமிழர் ஆட்சி நடத்துகின்ற இந்த நேரத்திலே, உருவாக்க வேண்டும். ஒரே ஒரு விஷயம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு விஷயத்தைச் சொல்லி முடியுங்கள்.

**திரு. தி.க. ராஜா:** சொல்லி முடித்துவிடுகிறேன். முடித்துவிடுகிறேன். இன்றைக்குத் திரைப்படங்களிலே பெண்களை மிகக் கேவலமாகச் சித்தரிக்கிறார்கள். அவர்கள் விளம்பரப் பொருளாகச் சித்தரிக்கப்படுகிறார்கள். தமிழர்களுடைய கலாசாரம், பண்பாடுகள் எல்லாம் சீரழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதை நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, வனத் துறையிலே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன். (குறுக்கீடு) ஒரே ஒரு விஷயம் சொல்ல வேண்டுமென்றீர்கள். சொல்லிவிட்டீர்கள், உட்காருங்கள்.

***திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுச்சூழல் குறித்து தமிழக மக்களுக்கு இந்தக் கருத்தை நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். கழிவுகளை எரிப்பது என்கிற முறையில். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரம் ஆகிவிட்டது. (குறுக்கீடு) திரு. நன்மாறன், கொஞ்சம் பொறுங்கள். திரு. ராஜா, பேசி முடியுங்கள் சார். நிறைய பேர் பேச வேண்டியிருக்கிறது.



**திரு. தி.க. ராஜா:** முடித்துவிடுகிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறை ஊழியர்களாக இருக்கிற வனவர்களுடைய ஊதியத்தை ரூபாய் 5,000/-லிருந்து 5,500 ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டும். வனக் காப்பாளர்களுக்கு 2,250 ரூபாய் அடிப்படைச் சம்பளத்தை ரூபாய் 4,000 ஆக உயர்த்திக் கொடுக்க வேண்டும். அதே போல, வனக் காவலர்களுக்கு 2,610 ரூபாயிலிருந்து 3,200 ரூபாயாக அவர்களுக்கு உயர்த்திக் கொடுக்க வேண்டும்.

*பிற்பகல் 1-25*

வனச் சரகர்கள் எல்லாம் ஆய்வாளர்களுக்கு இணையானவர்கள். காக்கி உடை போட்டவர்கள் எல்லோரையும் சமமாக மதிக்க வேண்டும். ஊதியம் காவல் துறையினருக்கு அதிகமாகவும், வனத் துறையினருக்குக் குறைவாகவும் இருக்கிறது. 27 வருடங்களாக வனத் துறையினருக்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும், மற்றவற்றை எழுதிக் கொடுங்கள். எழுதிக் கொடுங்கள். திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரப் பகுதிகளில் (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேண்டாம். நன்றி, உட்காருங்கள்.

**திரு. என். நன்மாறன்:** கழிவுகளை எரிக்கும்போது, சுற்றுப்பகுதி மக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். இதனை ஒழுங்குபடுத்தி நவீன வழியைக் காண வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கழிவுகளைத் தரம் பிரிப்பது பற்றிய விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்த வேண்டும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். கழிவு நீரைச் சுத்திகரிப்பது என்கிற முயற்சி மாநகராட்சி, நகராட்சிப் பகுதிகளில் மட்டுமின்றி, பேரூராட்சி, ஊராட்சிப் பகுதிகளிலேயும் விரிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திருப்பூர் பனியன் தொழிலில் ஏற்படக்கூடிய சாயக் கழிவு கடலில் கலக்கக்கூடிய ஒரு திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்து இருந்தார்கள். கொள்கை விளக்கக் குறிப்பில் அது குறிப்பிடப்படவில்லை. ஆகவே, முதல்வர் அவர்களுடைய அறிவிப்பு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதையும், அமைச்சர் அவர்கள் தமது பதிலுரையில் தெரிவிக்க வேண்டும் என்பதையும் கேட்டுக்கொள்கிறேன்.

வனத் துறையைப் பொறுத்தவரையில், புதிய மரக் கன்றுகள் நடுவதற்கான முயற்சி இத்துறையில் ஏற்படுத்தப்படுவதாக கொள்கை விளக்கக் குறிப்பில் இருக்கிறது. இந்தப் பணி, மக்கள் பங்கேற்போடு நடத்தப்பட வேண்டும். வனத் துறை ஊழியர்கள் மட்டுமின்றி உள்ளாட்சிப் பகுதிகளிலே இருக்கக்கூடிய பிரதிநிதிகளுடைய பங்கேற்போடும், கல்லூரி, பள்ளி மாணவர்கள் இதில் ஈடுபடக்கூடிய வகையிலும் இந்தப் பணியை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பழங்குடி மக்கள் வனப் பகுதிகளில் பாதுகாக்கப்பட வேண்டும். அவர்களைப் பாதுகாப்பதும் வனங்களைப் பாதுகாப்பதும் ஒன்றாக இருக்கிறது. மத்திய அரசு நிறைவேற்றி இருக்கக்கூடிய பழங்குடி மக்கள் பாதுகாப்புச் சட்டம் தமிழகத்திலும் நிறைவேற்றப்பட வேண்டும். அவர்களை வன நிலங்களை விட்டு வெளியேற்றக்கூடாது என்பதையும் கேட்டுக்கொள்கிறேன்.

வேலூர் மாவட்டம், குடியாத்தம் தொகுதியில் பூசாரிப்பள்ளி பகுதியிலே 362 ஏக்கர் பரப்பில் உள்ள கிராம மக்கள் வெளியேற்றப்படுகிற அபாயத்தில் இருக்கிறார்கள், இவர்களை பாதுகாக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். திண்டுக்கல் சிறுமலையிலும் வெளியேற்றம் நடத்தக்கூடிய முயற்சி இருக்கிறது, அதனைத் தடுத்து நிறுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வனச் சரணாலயம் தேவை. அதேசமயம், இதைக் காரணமாக வைத்து மலைப் பகுதியில் குடியிருக்கும் மக்களுடைய உரிமையைப் பறிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தேயிலை, இரப்பர் தோட்டங்களில், நீலகிரி மற்றும் குமரி மாவட்டத்தில் பணியாற்றக்கூடிய தொழிலாளர்களுக்கு தோழர் ஹேமச்சந்திரன் தலைமையில் இருக்கக்கூடிய தொழிற் சங்கம், கடந்த பல்லாண்டுகளாக நீதி கேட்டு வருகிறது. அந்தச் சங்கத்தினுடைய கோரிக்கைகள் நிறைவேற்றப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வன ஊழியர்கள் பாதுகாக்கப்பட வேண்டும். காவல் துறையினருக்கு போலீஸ் கமிஷன் அமைத்து இருப்பதுபோல, வன அலுவலர்களுக்கும் கமிஷன் அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, தினக் கூலித் தொழிலாளர்கள் நிரந்தரப்படுத்தப்பட வேண்டும். புதிதாக நிரப்பப்படவுள்ள காலிப் பணியிடங்களை நிரப்புகிறபோது ஏற்கெனவே பணியில் இருக்கிற



ஓட்டுநர்கள், மற்ற பிரிவினர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். வனத் துறையிலிருந்து ஊரகத் துறைக்கு மாற்றப்பட்டுள்ள ஊழியர்களுக்கு உரிய பணியிடம் வழங்கப்பட வேண்டும். நவீனமயத்தின் பெயரால் ஊழியர் குறைப்பு இருக்கக் கூடாது.

தேனி மாவட்டம், வருச நாடு மலைப் பகுதியில், மலை மாடு வளர்ப்பவர்களுக்கு உரிய நீதி கிடைக்க வேண்டும். ஏற்கெனவே வன அலுவலர், மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுக்கப்பட்டிருக்கிறது, அதை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டம், பெரியகுளம் பகுதியில் ஆடு வளர்ப்போர் சங்கத்தினர் வைத்திருக்கக்கூடிய கோரிக்கையையும் அவர்களை அழைத்துப் பேசி நிறைவேற்றவேண்டும். விருதுநகர் மாவட்டம், வத்திராயிருப்பு, கூமாப்பட்டி பகுதியிலிருந்து தேனி செல்ல, மலைச் சாலை அமைத்துத்தர வேண்டும்.

முதலமைச்சர் தனிப் பிரிவில் அளிக்கக்கூடிய மனுவிற்கு உரிய பதில் கிடைக்கிறது. மற்ற அமைச்சர்களுடைய அலுவலகத்தில் அளிக்கிற மனுவிற்கும் அதுபோல பதில் கிடைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கு மத்திய அரசு தரும் தொகையைப் போல மாநில அரசும் தர வேண்டும். இளைஞர்களுக்கு Youth Welfare Board என்கிற இளைஞர் நலக் குழு அமைக்க வேண்டும். அனைத்து நகராட்சிகளிலும் விளையாட்டு அரங்கம் தேவை. திருப்பூர் நகரில் அரசு இடம் தந்தால், மேற்கட்டுமானப் பணியை அங்குள்ள பொது நல அமைப்புகள் ஏற்றுக்கொள்வதாகக் கூறுகிறார்கள். இதனை அரசு ஏற்று இடம் தர வேண்டும். மலைவாழ் மக்கள், பழங்குடி மக்கள், மீனவ இளைஞர்களுக்கு, உரிய விளையாட்டுப் பயிற்சி அளித்து ஒலிம்பிக்கில் நாம் வெற்றி பெற வழி காணவேண்டும்.

கடந்த காலத்தில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் உருவாக்கப்பட்ட குறள் பீடம், தமிழ் சங்கப் பலகை ஆகியவை மீண்டும் உருவாக்கப்பட வேண்டும். தகுதியான எழுத்தாளர்களுடைய அமைப்புகளின் பங்கேற்போடு இவற்றை இயக்க வேண்டும். மத்திய அரசு, தமிழுக்கு தனி சாகித்ய அகாடமி உருவாக்க வேண்டும். எழுத்தாளர்களுடைய படைப்புகளுக்கு பரிசு வழங்கும்போது ஒரே பரிசு என்பதனை அதிகரித்து 3 பரிசுகளாக மாற்ற வேண்டும். தொகையையும் உயர்த்த வேண்டும். குழந்தை இலக்கிய வளர்ச்சிக்காகத் தனிக் குழு அமைக்க வேண்டும்.

இத்துறையில் கூடுதல் பங்களிப்பு செய்யும் பாரதி புத்தகாலயம், பாவைப் பதிப்பகம், காலம் வெளியீடு,.....

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. என். நன்மாறன்:** காலம் வெளியீடு போன்ற அமைப்புகளினுடைய படைப்புகளுக்கும் உரிய ஊக்கம் அளிக்க வேண்டும். 1,500 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ் இலக்கிய, இலக்கண நூல்கள் இந்திய மொழிகளில், உலகிலுள்ள முக்கிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட வேண்டும். இதன்மூலம் தமிழ் செம்மொழி என்பது நிறுவப்பட வேண்டும். தமிழ் பயிற்று மொழி குறித்து கடந்த காலத்தில் தி.மு.க. அரசு வெளியிட்ட அரசாணையை எதிர்த்து டெல்லி உச்ச நீதிமன்றத்தில் நடைபெறுகின்ற வழக்கில் உரிய முறையில் வாதாடி வெற்றி காண வேண்டும். தமிழ்த் தாத்தா உ.வே. சாமிநாத ஐயர் அவர்களுடைய இல்லம், உத்தமதானபுரம் பகுதியில் உள்ள இல்லம் நினைவு இல்லமாக்கப்பட வேண்டும். அந்தப் பணி விரைவில் நிறைவு பெற வேண்டும். வல்லிக்கண்ணன் அவர்களுடைய நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட வேண்டும். ஏற்கெனவே நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்களை அரசே மலிவுப் பதிப்பில் வெளியிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*"சாகும்போதும் தமிழ்படித்துச் சாகவேண்டும்—என்*
*சாம்பலுமே தமிழ்மண்ணில் வேகவேண்டும்"*

என்கிற பாவேந்தருடைய வரிகள் நிலை நிறுத்தப்பட, தமிழ் வளர்ச்சித் துறையும் பணியாற்ற வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசசேகரன். திரு. இராசசேகரன், 5 நிமிடங்கள்.

***திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுத் துறை, தமிழ் வளர்ச்சி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு, வனத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது பேசுகின்ற வாய்ப்பை அளித்த உங்களுக்கு நன்றி தெரிவித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சில கருத்துகளை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



குறிப்பாக, வனத் துறையைப் பற்றி சில கருத்துகளைச் சொல்ல விரும்புகின்றேன். நிலப் பகுதியில் மூன்றில் ஒரு பங்கு காடுகள் இருக்க வேண்டுமென்பது இயற்கையான நியதி. இப்பொழுது பருவ மழையும் தவறாது பெய்கின்ற வாய்ப்பும் அறவே அற்று விட்டது. சுற்றுச்சூழலும் பாதுகாக்கப்படவில்லை. தமிழ்நாட்டில் 17 சதவிகிதம்தான் இன்றைக்கு காடுகள் இருக்கின்றன என்று இங்கே கொள்கை விளக்கக் குறிப்பிலே அறிவித்திருக்கின்றார்கள். ஒவ்வொரு ஆட்சியிலும் காடுகள் வளர்ப்பதற்காக திட்டமிடப்படுகிறது, செலவும் செய்யப்படுகிறது. ஆனால், காடுகள் குறைந்து வருகின்றன. இந்த நிலையை மாற்றி ஒதுக்கீடுகள் செய்கின்ற பணத்தை முறையாகச் செலவு செய்து காடுகள் வளர்க்கப்பட்டு, பாதுகாக்கப்பட வேண்டும். அனைத்து மரங்களையும் அழித்துவிட்டு ஒரே இன மரமாக வளர்க்கக் கூடாது. உதாரணமாக புதுக்கோட்டை மாவட்டத்தில் பல்லுயிரினப்பரவல் காடுகளை அழித்துவிட்டு இலாப நோக்கத்தோடு தைல மரங்கள் பயிரிடப்பட்டு வருகின்றன. அதனால் சுற்றுச்சூழல் கெட்டு வருகிறது. நிலத்தடி நீர் 500 அடிக்குக் கீழே சென்று விட்டது. இரத்தத்தை எப்படி பயன்படுத்துகிறோமோ அதேமாதிரி தண்ணீரைப் பயன்படுத்துகின்ற நிலை உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் புதுக்கோட்டை பகுதியிலே இருக்கின்ற மரங்களை அழித்து விட்டு தைல மரங்கள் மட்டும் நடுவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தின் பொறுப்பிலே அந்தப் பகுதி இருக்கிறது. அந்தப் பகுதியிலே தைல மரங்கள் மட்டுமல்ல, முந்திரித் தோப்புகளும் சவுக்கு மரங்களும், அந்த மண்ணுக்கு ஏற்ற மரங்களும் பயிரிடப்படுகின்றன என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** நன்றி. குறிப்பாக தைல மரங்கள் அதிக அளவிலே பயிரிடப்பட்டு வருகின்றன. இலாப நோக்கத்தோடு பயிரிடப்பட்டு வருகின்றன. முந்திரி மரங்களும் இருக்கின்றன என்பதை நான் ஒத்துக்கொள்கின்றேன். வேறு பல மரங்கள் இருப்பதாகச் சொல்வது அவ்வளவு சாத்தியமாகத் தெரியவில்லை

என்பதை மீண்டும் கவனத்திற்கு கொண்டு வருகின்றேன். தைல மரங்கள் இருப்பதனால் அங்கே நிலத்தடி நீர் கீழே சென்றுவிட்டது. ஆகவே, தைல மரங்களைப் பயிரிடுவதை இந்த அரசு தடை செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தைல மரங்களின் வேர்கள் பூமியின் அடியிலே ஆழமாகச் சென்று தண்ணீர் பற்றாக்குறை ஏற்படுகின்றது என்ற தவறான கருத்தை மக்கள் கொண்டிருக்கிறார்கள். 40 சென்டி மீட்டருக்கு கீழே அந்த வேர்கள் செல்வது இல்லை. பக்க வாட்டிலேதான் அந்த வேர்கள் செல்கின்றன. என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வதோடு தைல மரங்களை நாம் உருவாக்க வேண்டிய கட்டத்தில் இருக்கின்றோம். ஏனென்றால், தமிழ்நாடு காகித உற்பத்தி நிறுவனத்திற்கு கூழ் தயாரிப்புக்கான மரங்களை கொடுப்பதற்கான பொறுப்பை தமிழ்நாடு வனத் துறை எடுத்துக் கொண்டிருக்கிற காரணத்தினாலே தைல மரங்கள் அதிக அளவிலே பயிரிடப்பட வேண்டியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்.

*பிற்பகல் 1-35*

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தைல மரங்கள் பயிரிடுவதைப் பற்றி இரண்டு விதமான கருத்துகள் இருக்கின்றன. ஒன்று அதை ஆராய்ச்சி செய்பவர்கள் தைல மரங்களால் பாதிப்பு இல்லை என்று சொல்கிறார்கள். இன்னொரு பகுதியினர் அதனால் பாதிப்பு இருக்கிறது என்று சொல்கிறார்கள். எதை நம்புவது என்று தெரியவில்லை. குறிப்பாக, அந்தத் தைல மரங்கள் வியாபார நோக்கத்தோடு, காகித ஆலைக்கு வேண்டுமென்ற முறையிலே பயிரிடப்படுகின்றன என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன். அதைப்பற்றி நன்றாக ஆராய்ச்சி செய்து மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அதற்குப் பதிலாக வேம்பு, புங்கன் போன்ற மரங்களை வளர்க்கவும் ஊக்கம் அளித்து பொருளாதாரத்தைப் பெருக்க வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கின்றேன்.



ஒவ்வொரு வீட்டிலும் இரண்டு மரங்கள் கட்டாயமாக நட வேண்டும். மரக் கன்றுகள் குறித்து மக்களிடத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். வீட்டில் நடக்கின்ற விசேஷ காரியங்களுக்கு, அதாவது திருமண நாள் என்று சொன்னால் அல்லது திருமணம் என்று சொன்னால் அல்லது குழந்தை பிறந்தது என்று சொன்னால், இப்படிப்பட்ட நல்ல காரியங்கள் நடக்கக்கூடிய ஒவ்வொரு நாளுக்கும் ஒவ்வொரு மரக் கன்று நடுவதற்கான ஏற்பாடுகளை நாம் செய்ய வேண்டும்.

எனது தொகுதியில், தோப்புக்கொல்லையில் உள்ள வனவியல் விரிவாக்க ஆராய்ச்சி மையத்தை விரிவுபடுத்தி, பலப்படுத்தி அதன் மூலமாக நல்ல மரக் கன்றுகளைக் கொண்டு வந்து உற்பத்தி செய்து, விவசாயிகளுக்குத் தரமான மரக் கன்றுகளை வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலையில் மயில்கள் அதிக அளவில் முன்பு இருந்து அவற்றுக்குத் தேவையான உணவு கிடைக்காமல் இப்போது மாவட்டம் முழுவதும் பரவி பல இடங்களில் மயில்கள் இருக்கின்றன. அதனால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படும் நிலை வந்திருக்கின்றது. ஆகவே, புதுக்கோட்டை மாவட்டத்தில் ஏதாவது ஓர் இடத்தில் மயில்கள் சரணாலயம் அமைக்கப்பட வேண்டும் என்பதை இங்கே நான் அமைச்சர் அவர்களிடத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

தனியார் நிலங்களில் வளர்க்கக்கூடிய சந்தனம், தேக்கு, ஈட்டி, செஞ்சந்தனம் ஆகிய மரங்களை வெட்டி விற்பதற்கு வனத் துறையிடம் அனுமதி பெறுவதற்கு பதிலாக V.A.O. சான்றிதழ் மட்டும் போதுமானது என்று அறிவிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*(மணியடிக்கப்பெற்றது)*

செடி, கொடி, மரங்கள் வளர்ப்பது பற்றி தொடக்கப் பள்ளிகளிலேயே அந்தக் கல்வியை கற்பிக்க வேண்டும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

சுற்றுச்சூழலைப் பொறுத்தவரையில் எனக்கு முன்னால் பேசிய தோழர் நன்மாறன் அவர்கள் சொல்லியதைப்போல, திருப்பூர் நகரத்தில் இருக்கக்கூடிய சாயக் கழிவுகள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராசசேகரன், நேரம் ஆகிறது. போதும் உட்காருங்கள். நேரமாகிவிட்டது. (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

**திரு. எஸ். இராசசேகரன்:** இப்போது 3 நிமிடங்கள்தான் பேசியிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூன்று நிமிடங்கள்தானா!

**திரு. எஸ். இராசசேகரன்:** 3 நிமிடங்கள்தான் பேசியிருக்கிறேன். இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை பற்றி ஒரு செய்தியை நான் இங்கே சொல்ல விரும்புகின்றேன். ஆசிய விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற சாந்தி அவர்கள் என்னுடைய தொகுதியைச் சார்ந்தவர். அந்த விளையாட்டுப் போட்டியிலே இரண்டாவது இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கம் பெற்ற அவருக்கு இந்த அரசின் மூலம் டாக்டர் கலைஞர் அவர்கள் 15 இலட்சம் ரூபாய் கொடுத்து விளையாட்டுத் திறனை அதிகப்படுத்தியிருக்கின்றார்கள்.

கடைசியாக ஒன்றை நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். நீலகிரி தோட்டத் தொழிலாளர்களுக்கு 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஊதிய ஒப்பந்தம் என்று இருப்பதை மாற்றி 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஊதிய ஒப்பந்தம் உருவாக்கப்பட வேண்டும். அதைப்போல, வனக் காவலர், வனக் காப்பாளர், வனவர், வனச் சரகர், இவர்களுக்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. மகேந்திரன், உங்களுக்கு 7 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

***திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 நிமிடங்கள் தேவை. மலை குலைந்தாலும் நிலை குலையாத மாதரசியாய், பொன்னகை மறுத்த புன்னகையாய், ஆலயங்கள், தேவாலயங்கள், மசூதிதோறும் அன்னதானத் திட்டம் தந்த ஆன்மீகத் தாயாய், (மேசையைத் தட்டும் ஒலி) காலம் காலமாய் கருவைச் சுமப்பவளே கள்ளிப் பாலை ஊற்றி பெண் சிசுக்களைக் கொன்ற கொடூரத்திற்கு முடிவுகட்டி, தொட்டில் குழந்தைகள் திட்டம் தந்து பெண்ணினத்தின் பேரரசியாய், தன்னுடைய ஆட்சிக் காலத்தில் பாறைக்குள் மறைந்திருக்கும் தேரைக்கும் உணவு தந்து நல்லாட்சி தந்த நற்றமிழ் நாயகியாய், எங்கள் ஊனாய், உயிராய் இருந்து, கடைக்கோடித் தொண்டனான என்னை மதுரை புறநகர் மாவட்ட (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா பேரவையின் மாவட்டத் துணைச்



செயலாளராக நியமனம் செய்து, உசிலம்பட்டி நகர மன்றத் துணைத் தலைவராக்கி, உசிலம்பட்டி தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராக்கிய எங்கள் இதய தெய்வம், கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) உசிலம்பட்டி தொகுதியிலே அம்மா அவர்களுக்காக வாக்களித்து என்னை வெற்றிபெறச் செய்த உசிலம்பட்டி தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், வெற்றிக்காக உழைத்திட்ட கழக முன்னோடிகள் மற்றும் தொண்டர்களுக்கும், கூட்டணிக் கட்சி நண்பர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-40

சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, பொதுத் துறை மற்றும் தமிழ் வளர்ச்சித் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுப்புறச் சூழலைப் பொறுத்தவரையில் 1972 ஆம் ஆண்டில்தான் சுவீடன் நாட்டில் ஏற்பட்ட தாக்கத்தின் விளைவாக அங்கு ஒரு மாநாடு நடத்தப்பட்டது. சுற்றுப்புறச் சூழலைக் காக்கும்பொருட்டு முதன்முதலில் மாசுக் கட்டுப்பாடு வாரியம் என்ற அமைப்பை 1982 ஆம் ஆண்டில் புரட்சித் தலைவர் அமரர் எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழகத்திலே துவக்கினார்கள் என்பதைப் பெருமையோடு இந்த அவையிலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா ஆட்சிக் காலத்தில் மாசுக் கட்டுப்பாடு வாரியம் மூலமாக எதிர்மறைச் சவ்வூடு பரவல் என்கிற தொழில்நுட்பத்தை தொழிற்சாலைகள் அனைத்திலும் பயன்படுத்த வேண்டுமென்று ஆணை பிறப்பித்தார்கள். இதில் நல்ல பயன் கிடைத்தது. தமிழகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற எல்லா சாய மற்றும் தோல் தொழிற்சாலைகளிலும் இத்திட்டத்தைப் புகுத்தினால் தமிழகத்தில் உள்ள நீர், நிலம், காற்று மாசுபடுவது தவிர்க்கப்படும். எனவே, எல்லா தொழிற்சாலைகளிலும் இந்தத் திட்டத்தைப் புகுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பரப்பளவை அதிகப்படுத்துவதற்காகவும், வனத்தை அழிவிலிருந்து காப்பாற்றுவதற்காகவும், காடு வளர்ப்பு என்ற ஒரு மகத்தான திட்டத்தை அம்மா அவர்கள் கொண்டு வந்தார்கள். கொண்டுவந்து செயல்படுத்தியதன் மூலமாக இப்போது வனத்தினுடைய பரப்பளவு அதிகரித்திருக்கிறது என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

சமூகக் காடுகள் திட்டத்தின் மூலமாக 1981 ஆம் ஆண்டு முதல் சுவீடன் நாட்டு உதவியுடன் அமரர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இந்தத் திட்டத்தை குளக் கரைகளில் கருவேல மரங்களை நடவு செய்யும் திட்டத்தைத் தமிழகத்திலே அறிமுகப்படுத்தினார்கள் என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று, காவிரிப் படுகையில் தேக்கு மரங்களை நடுவதற்கும் அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் 2003 ஆம் ஆண்டு முதல் 5 ஆண்டு காலத்திற்கு சுமார் 16,000 ஹெக்டேர் நிலத்தில் தேக்கு மரத் திட்டம் ஏற்படுத்துவதற்காக 20 கோடி ரூபாய் திட்டத்தையும் ஏற்படுத்திக் கொடுத்தார்கள். அந்தத் திட்டம் இந்த ஆட்சியிலும் தொடர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 1984 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இலாபகரமாகச் செயல்பட்டு வந்த இரப்பர் கழகம் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நிர்வாகச் சீர்கேட்டின் காரணமாக நட்டம் அடைந்தது. அங்கே பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு 1-1-1998 முதல் மூன்றரை ஆண்டுகாலம் சம்பளம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 5 ஆண்டு காலமாக (குறுக்கீடுகள்) இல்லை, அவர் குற்றச்சாட்டு சொல்கிறார் இல்லையா? (குறுக்கீடுகள்) சரி. அக்கழகம் 5 ஆண்டு காலமாக உங்களுடைய பொறுப்பிலே இருந்திருக்கிறது. வனத் துறைப் பொறுப்பிலேயிருந்த முன்னாள் அமைச்சர் இங்கே இருக்கிறார். அவருக்கு நன்றாகத் தெரியும். அந்த நேரத்திலே உலக அளவிலேகூட இரப்பருக்கு விலை இல்லாத காரணத்தால், அது குறைவாக விற்ற காரணத்தினால் அந்தத் துறை நட்டத்திலே இருந்தது. சென்ற ஆண்டு நாங்கள் உற்பத்தியையும் அதிகப்படுத்தியிருக்கிறோம். 2,115 டன் உற்பத்தி செய்து 21 கோடியே 81 இலட்சத்திற்கு விற்று, 3 கோடியே 82 இலட்சத்து 54,000 ரூபாய்



இலாபம் பெற்றிருக்கிறோம் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வைத்திலிங்கம், உட்காருங்கள்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி சீர்கெட்டிருந்த அந்த இரப்பர் கழகத்தில் 2001-லே மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில்தான் (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் தொழிலாளர்களுக்கு நடப்புச் சம்பளத்தையும், தி.மு.க. அரசால் மூன்றரை ஆண்டு காலம் வழங்கப்படாமலிருந்த சம்பளப் பாக்கியையும் கொடுத்து தொழிலாளர்களுக்கு நலனைத் தேடிக் கொடுத்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைச் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று, ஒரு எக்டேருக்கு ரூபாய் 6,000 குத்தகை என்பதை 3,000 ரூபாயாகக் குறைத்து இரப்பர் கழகம் புனரமைப்பு செய்யப்பட்டு இலாபத்திலே இயங்கி வந்தது. தொடர்ச்சியாக இலாபத்தில் இயங்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதி மிகவும் வறட்சியான பகுதி என்பதால், எங்கள் பகுதியிலே விவசாயத்தை மட்டுமே நம்பி இருக்கின்ற மக்கள்தான் அதிகம் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். உசிலம்பட்டி பகுதியிலே 58 கிராமக் கால்வாய்த் திட்டம் 1996-ல் ஆரம்பிக்கப்பட்டபோது ரூ.33.81 கோடி நிதி ஒதுக்கப்பட்டு அந்தத் திட்டமானது இன்னும் சரியாக நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. 1-3-2006-ல் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் திருத்திய மதிப்பீடாக ரூ.74.60 கோடி என ஒதுக்கப்பட்டு 58 கிராமக் கால்வாய்த் திட்டப் பணிகள் இன்னும் முடிவடையாமல் இருக்கிறது. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் 2006-2007-க்குள் இந்தப் பணி முடிவடையும் என்று இந்த அவையிலே தெரிவித்திருந்தார்கள். அந்தப் பணியை மிகவும் துரிதப்படுத்தி வேகமாகச் செய்ய வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, உசிலம்பட்டியிலே அசுவமா நதித் திட்டம் என்கிற ஓர் அற்புதமான திட்டம். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலே இதற்கு நான்கு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து அந்தத் திட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. ஏறக்குறைய 60 சதவிகிதப் பணிகள் முடிவடைந்து இருக்கின்றன. கடந்த எட்டு மாதகாலமாக அந்தப் பணி நடைபெறாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பணி துரிதமாக நடைபெற நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் பின்தங்கிய உசிலம்பட்டி தொகுதியின் குடிநீர்ப் பஞ்சத்தைத் தீர்க்கவேண்டும் என்று செல்லம்பட்டி ஒன்றியப் பகுதிகளுக்கு மன்னாடிமங்கலம் ஆற்றுப் பகுதியிலிருந்து ரூ.575 இலட்சம் செலவில் நீர் கொண்டு வந்து 99 குடியிருப்புகளுக்கு வழங்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தையும், உசிலம்பட்டி பகுதிக்கு அணைப்பட்டி ஆற்றுப் பகுதியிலிருந்து ரூ.371 இலட்சம் செலவில் 85 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கும் திட்டத்தையும் விரைவில் முடித்து பொதுமக்களுடைய பயன்பாட்டுக்குக் கொண்டுவர இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உசிலம்பட்டி பின்தங்கிய பகுதி என்பதால் அங்கு ஒரு தொழிற்சாலையை அவசியம் இந்த அரசு அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உசிலம்பட்டி பகுதியிலே ஒரு சப்-கோர்ட் அமைத்துத்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பகுதியில் உசிலம்பட்டி, பேரையூர் உட்பட்ட இரண்டு தாலுகாக்களையும் சேர்த்து உசிலம்பட்டியிலே நீதிமன்றம் இருக்கிறது. அந்தப் பகுதியிலேயிருந்து சுமார் ஆயிரக்கணக்கான வழக்குகள் மேல்முறையீட்டிற்காக மதுரைக்கு செல்ல வேண்டியிருக்கிறது. பேரையூரிலிருந்து மதுரை செல்கின்ற நபர்கள் கிட்டத்தட்ட 70 கிலோ மீட்டர் தூரம் சென்று அந்த வழக்குகளைத் தாக்கல் செய்ய வேண்டியிருக்கிறது. அங்கு நூறு வழக்கறிஞர்களுக்கு மேல் பணிபுரிகின்றார்கள். மதுரையில் 5 சப்-கோர்ட்டுகள் இருக்கின்றன. அவற்றில் ஏதாவது ஒன்றை உசிலம்பட்டிக்கு மாற்றித்தர வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். புதியதாக ஒரு கோர்ட் அமைப்பது என்பது சற்று சிரமமாக இருப்பதால் மதுரையில் இருக்கின்ற



5 கோர்ட்டுகளில் ஒன்றை மாறுதல் செய்து உசிலம்பட்டிக்குத் தரவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

உசிலம்பட்டி பகுதிக்கு மகளிர் கலைக் கல்லூரி ஒன்று அமைத்துத்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டியிலுள்ள வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கடந்த 1968 ஆம் ஆண்டிற்கு முன்பு கட்டப்பட்டது. பழமைவாய்ந்த கட்டடம். பொதுமக்கள் சென்றுவருவதற்கு நெரிசலாக உள்ளது. எனவே, அவசியம் கருதி இந்த நிதியாண்டில் நிதி ஒதுக்கி, புதிய கட்டடத்தைக் கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விளையாட்டுத் துறையை பொறுத்த அளவில் அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில்தான் விளையாட்டை தமிழகத்தில் மேம்படுத்த விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் அமைக்கப்பட்டது. மிகவும் பிரம்மாண்டமான முறையில் சர்வதேசத் தரத்திற்கேற்ப நேரு விளையாட்டு அரங்கம் உருவாக்கியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். விளையாட்டுக்கு என்று தனியாக ஒரு பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது.

அதேபோன்று, விளையாட்டுக்கு என்று ஒரு தனி அமைச்சரை அவர்கள் நியமித்தார்கள். கிராம அளவிலே விளையாட்டுப் போட்டிகள் நடத்தி அதில் பொதுமக்கள், மாணவ, மாணவிகள் பங்குபெறச் செய்து அவர்களுக்குப் பரிசுகள் அளித்து விளையாட்டு ஆர்வத்தை உருவாக்கியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, தென் தமிழகத்தினுடைய இரசிகர்களின் கோரிக்கையை ஏற்று மதுரையில் சர்வதேச அளவில் ஒரு கிரிக்கெட் மைதானம் அமைத்துத்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, உசிலம்பட்டி பகுதியிலே (மணியடிக்கப்பெற்றது) 1927-ல் ஆரம்பிக்கப்பட்ட ஒரு மேல்நிலைப் பள்ளி இருக்கிறது. அது பிரிட்டிஷ்காரர்கள் காலத்திலே ஏற்படுத்தப்பட்டது. ஐந்து ஏக்கர் நிலப்பரப்பு கொண்ட அந்த விளையாட்டு மைதானத்தில் ஒரு கால்பந்து விளையாட்டு தள மற்றும் கூடைப் பந்து விளையாட்டு தளம் மற்றும் சுற்றுச் சுவர் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் வளர்ச்சி நூல்களை நாட்டுடைமையாகப் பதிவு செய்ததில், அவர்களுடைய பரிவுத் தொகையாக....

பிற்பகல் 1-50.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 12 நிமிடங்கள் ஆகிவிட்டன. உட்காருங்கள். (குறுக்கீடு) முடியுங்கள், முடியுங்கள் சீக்கிரம்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டுடைமையாக்கி, 21 நபர்களுக்கு பரிவுத் தொகையை இந்த அரசு வழங்கியிருக்கிறது. சிங்காரவேலர், கிருபானந்த வாரியார், தென்னரசு, சி.பி. சிற்றரசு, சாவி போன்றவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலே ஏ.வி.பி. ஆசைத்தம்பி என்பவருக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏ.வி.பி. ஆசைத்தம்பி அவர்கள் தனியரசு பத்திரிகையை நடத்திக்கொண்டிருந்தபொழுது, எல்லோராலும் போற்றப்படுகின்ற அண்ணா அவர்களை, அந்தத் தனியரசு பத்திரிகையிலே தலைகீழாகப் பிரசுரம் செய்து, அண்ணா அவர்களை கேவலப்படுத்திய அந்த ஏ.வி.பி. ஆசைத்தம்பி அவர்களுக்கு இந்த அரசாங்கம் பரிவுத் தொகை கொடுக்கிறது என்று சொன்னால், அண்ணா அவர்களை அசிங்கப்படுத்தியதை, இந்த அரசு ஒருமனதாகக் ஏற்றுக்கொள்கிறதா என்பதை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோன்று, பத்மா சுப்பிரமணியம் அவர்கள் உலகம் முழுவதும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மறப்போம், மன்னிப்போம் என்பதும் அண்ணா கற்றுத் தந்த பாடம்தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மகேந்திரன் முடியுங்கள். (குறுக்கீடு) முடித்தாகிவிட்டது, உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்மா சுப்பிரமணியம் அவர்கள், உலகம் முழுவதும் பரத நாட்டியத்தைப் பரப்பி, இந்தியாவிற்கும், தமிழகத்திற்கும் பெருமை சேர்த்தவர். அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் அந்த பரத முனிவருக்கு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் திரு. மகேந்திரன், நேரமாகிவிட்டது.



## 7. அரசினர் தீர்மானங்கள்

### (அ) சுற்றுச்சூழல் துறை அமைச்சர் முதலில் பதிலுரை வழங்குதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று மூன்று அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும். அவர்களில் பொதுத் துறை, தமிழ் வளர்ச்சித் துறை, வனத் துறை ஆகியவை குறித்து அத்துறைகளுக்குப் பொறுப்பான அமைச்சர்கள் பதிலளிக்க ஏதுவாக 2-5-2007 அன்று ஒரு மணி நேரம் கேள்வி நேரத்தை ஒத்திவைக்கவேண்டும் என்ற தீர்மானத்தை, பின்னர் முன்மொழிய இருக்கின்றோம்.

"முதலில் இன்றைய தினம் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான் அவர்கள் பதிலளிக்க இந்த அவை அனுமதிக்க வேண்டும்"

எனக் கோருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

## 6. மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 38—பொதுத் துறை**

**(ஆ) கோரிக்கை எண் 46—தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)**

**(இ) கோரிக்கை எண் 49—இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை**

**(ஈ) கோரிக்கை எண் 15—சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை**

—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.*

***மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னுடைய 14-வது வயதில் கையில் ஏந்திய கயல், வில், புலி பொறித்த கொடியுடன், அன்னைத் தமிழ் காக்க களம் புகுந்த, இந்த 83 வயதிலும் அந்தத் தமிழ்த் தாய் செம்மொழியை அரியணையில் அமர வைத்து அழகு பார்க்கும், முத்தமிழ் வித்தகர், ஐந்தாம் முறையும் அன்னைத் தமிழ்நாட்டின் முதல்வராய் மக்களால் அரியணையில் அமர்த்தப்பட்டு, சரித்திர சாதனை படைத்துக் கொண்டிருக்கும் வாழும் வள்ளுவரான மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) 50 ஆண்டு காலம் சட்டமன்றப் பணி நிறைவு பொன் விழா நாயகராக, 1957 முதல் நடைபெற்ற அனைத்துத் தேர்தல் களங்களிலும் வெற்றி வாகை சூடி புகழ்மிகு உலக சாதனை புரிந்தும், விரைவில் பொது வாழ்வில் பவள விழா காணவிருக்கும் தன்னிகரற்ற தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு எனது பணிவான நன்றியினைக் காணிக்கையாக்கிக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தலைவர் கலைஞரின் உற்ற தோழராக, தமிழ்த் தென்றலாக, சொல் ஏர் உழவராக உள்ள மாண்புமிகு அவை முன்னவர், எங்களின் பண்பார்ந்த இனமான பேராசிரியர் அவர்களுக்கும், அண்ணல் காந்தியடிகள் குறிப்பிட்டதுபோல, இந்தியாவின் உயிர்நாடி கிராமங்கள்; அந்தக் கிராமங்களின் உயிர்நாடி இளைஞர்கள் என்பதற்கிணங்க, அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்



போன்று நல்ல பல திட்டங்கள்மூலம், உள்ளாட்சிமூலம் நல்லாட்சி வழங்கியும், அந்தக் கிராமங்களின் இளைஞர்களின் உயிர்நாடியாகத் திகழும் கொள்கைக் காவியம், எங்கள் பாசறையை வழிநடத்தும் உள்ளாட்சித் துறை அமைச்சர் பாசமிகு தளபதி அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னோடிகளாக இந்த அமைச்சரவையிலே முன் வரிசையில் இருக்கின்ற மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் ஆற்காட்டார் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-55*

இந்த மானியக் கோரிக்கையைத் தாக்கல் செய்வதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆகிய தங்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இன்றைக்கு இங்கே மூச்சுக்கு மூச்சு மைனாரிட்டி அரசு என்று எதிர்க்கட்சியால் சொல்லப்படும் மைனாரிட்டி மக்களுடைய பாதுகாப்புக் கவசமாகத் அளவுக்கு மைனாரிட்டி என்றாலே உங்களுக்குப் பிடிக்காதே— திகழ்ந்து—மைனாரிட்டி என்றாலே உங்களுக்குப் பிடிக்காது என்று தெரியும், மைனாரிட்டி என்றாலே உங்களுக்குப் பிடிக்காது என்று தெரியும், மைனாரிட்டி என்றாலே உங்களுக்குப் பிடிக்காது என்று தெரியும், இருந்தாலும் நான் கருத்தைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். மூச்சுக்கு மூச்சு மைனாரிட்டி அரசு என்று.... (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** எதிர்க்கட்சியால் சொல்லப்படும் அளவுக்கு, மைனாரிட்டி மக்களின் பாதுகாப்புக் கவசமாகத் திகழ்ந்து, சிறுபான்மைச் சமுதாயத்திற்கு தமிழகத்தில் நாடு சுதந்திரம் அடைந்த பின்பு எந்த ஆட்சியிலும் வழங்கப்படாத வகையில் இஸ்லாமிய சமுதாயத்தின் 2 பிரதிநிதிகளை இந்த அமைச்சரவையிலே இடம்பெறச் செய்து (மேசையைத் தட்டும் ஒலி) சிறுபான்மை நல இயக்குநரகத்தை முதன்முதலாக உருவாக்கி மாண்புமிகு நீதியரசர் இராசேந்திர சச்சார் குழு பரிந்துரைகள் செயல்வடிவம் பெறுவதில் உறுதி காட்டி, இட ஒதுக்கீட்டையும் ஏற்படுத்தித் தருவேன் என்ற ஓர் உறுதி எடுத்திருக்கின்ற, மத நல்லிணக்கத்திற்கே எடுத்துக்காட்டாக, மத நல்லிணக்கத்தைக் கட்டிக் காத்து வருகிற தலைவர் கலைஞர் அவர்களுக்குச் சிறுபான்மைச் சமுதாயத்தின் சார்பாக மீண்டும் ஒரு முறை எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எனக்கு முன்னாலே பேசியவர் இளைஞர்கள் நலன் மற்றும் விளையாட்டுக்கு முக்கியத்துவம் அளித்து, விளையாட்டுத் துறைக்கு அம்மாதான் தனியாக ஓர் அமைச்சரை நியமித்தார் என்று சொன்னார். அந்த அமைச்சரை நியமிப்பதற்கு முன்னர் 2000 ஆம் ஆண்டில் தனியாக ஒரு துறையை ஏற்படுத்தியதே கலைஞர் அவர்கள்தான் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நாட்டிற்கு எஃகிலான நரம்புகளும், இரும்பிலான தசைகளும், எதற்கும் வளைந்து கொடுக்காத மனம் கொண்ட இளைஞர்கள்தான் தேவை என்று விவேகானந்தர் கூறியிருக்கிறார். அந்த இளைஞர்களை உருவாக்கித் தருவது விளையாட்டு மைதானத்தில் விதைக்கப்பட்ட விதைகளே. விளையாட்டை விளையாட்டாகக் கருதக்கூடாது. ஏனெனில், வாளும், வேலும், வில்லும் தாங்கி பகைவென்று வீரத்தை நிலைநாட்டிய பெருமைகளையே புறநானூறாகவும், கலிங்கத்துப்பரணியாகவும், தரணி மெச்சும் வகையில் தமிழ் இலக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன. 21 ஆம் நூற்றாண்டில் வீரம் என்பது ஒரு நாட்டின் உயர்வு என்பதும், விளையாட்டுத் திடலில் வென்றிடும் பதக்கங்கள்தான் அதன் சான்று என்பதை நாம் எல்லோரும் அறிவோம். எனவே, தமிழகத்தில் எழுச்சிமிக்க இளைஞர்களையும், உறுதி வாய்ந்த விளையாட்டு வீரர்களையும் உருவாக்குவதே இந்த அரசின் முக்கிய நோக்கமாகும்.

அதோடுமட்டுமல்லாமல், அவர்கள் உலகத் தரம் வாய்ந்தவர்களாகவும், சர்வதேச அளவிலான பயிற்சி பெற்றவர்களாகவும் இருக்க வேண்டும் என்பதும் முக்கியம் ஆகும். இவ்வரசு எடுக்கும் முயற்சிகள் விளையாட்டு வீரர்களுக்குச் சிறந்த அடித்தளமாக அமைந்து, அவர்கள் இந்நாட்டிற்கு வெற்றிக் கனியைப் பறித்துத் தரும் நாட்கள் வெகு தூரத்தில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வகையில் பன்னாட்டுப் போட்டிகளில் ஆசிய விளையாட்டுப் போட்டிகள், காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் மற்றும் தேசிய விளையாட்டுப் போட்டிகள், இதன்மூலம் பதக்கம் வென்ற, தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்த்த அந்த வீரர்களுக்கு இந்த அரசு ரூபாய் 2.01 கோடி ஊக்கத் தொகையாக வழங்கி இருக்கிறது என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



இங்கே தேசிய அளவிலே வெற்றி பெற்ற வீரர்களுக்கும், பயிற்றுநர்களுக்கும் ஊக்கத் தொகைகள் வழங்கப்பட இருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மேலும், தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒரு வல்லுநர்கள் குழு மணிப்பூர் மற்றும் கேரளா போன்ற மாநிலங்களில் விளையாட்டு மேம்பாட்டிற்காகப் பயன்படுத்தப்படும் யுக்திகளைப் பற்றி அறிந்துவர அனுப்பப்பட உள்ளது. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் விளையாட்டுப் பள்ளி மற்றும் விடுதிகளில் அறிவியல் ரீதியாக பயிற்சி பெறும் அனைத்து விளையாட்டு வீரர்களில் திறமை வாய்ந்தவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்கள் மலேசிய நாட்டிற்குச் சென்று, மேல் பயிற்சி பெற்று போட்டிகளில் பங்கு பெற்று வந்துள்ளனர். ஒலிம்பிக் போட்டிகளுக்கு முன்னர் அதற்கான தகுதிச் சுற்று கால்பந்துப் போட்டிகள் சென்னை, ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கிலே சிறப்பாக நடைபெற்றது. இதில் இந்திய பெண்கள் அணி கொரிய கால் பந்து அணியுடனும், இந்திய ஆண்கள் அணி தாய்லாந்து, கொரிய கால்பந்து அணிகளுடனும் மோதின. இதனைத் தொடர்ந்து ஈராக் அணியுடன் போட்டி மே மாதம் 16 ஆம் தேதி நடக்க இருக்கிறது.

சென்ற நவம்பர் மாதத்தில் சென்னையில் தேசிய அளவிலான மகளிர் விளையாட்டுப் போட்டிகளில் ஜிம்னாஸ்டிக்ஸ், கூடைப் பந்து, மற்றும் நீச்சல் ஆகிய விளையாட்டுகள் சிறப்பாக நடைபெற்றன. இந்திய நாட்டின் அனைத்து மாநிலங்களிலிருந்தும் 600 மகளிர் பங்கு பெற்றிருக்கிறார்கள். அகில இந்திய அரசுப் பணியாளர்களுக்கென டென்னிஸ் மற்றும் நீச்சல் விளையாட்டுப் போட்டிகள் சென்னையிலே பன்னாட்டுத் தரத்திலான டென்னிஸ் விளையாட்டு அரங்கம் மற்றும் வேளச்சேரி நீச்சல் குள வளாகத்திலே சிறப்பாக நடைபெற்றது.

கிராமங்களில் மண்டிக் கிடக்கும் விளையாட்டு வீரர்களைக் கண்டறிந்து அவர்களை மேம்படுத்துவதே இவ்வரசின் நோக்கம் ஆகும். இதனைச் செயல்படுத்தும் வகையில் கடந்த 2006-2007, அதாவது இந்த ஆட்சிப் பொறுப்பேற்றது முதல், ஒவ்வொரு வருடமும் ரூபாய் 80 இலட்சம் செலவில் தமிழ்நாட்டில் உள்ள 385 ஊராட்சி ஒன்றியங்களிலும் ஆண்கள், பெண்களுக்கான விளையாட்டுப் போட்டிகளில் பள்ளி மாணவர்கள் அல்லாதவர்களையும் சேர்த்து ஊரக விளையாட்டுப் போட்டிகளை நடத்தி கிராம மக்களை இந்த அரசு விளையாட்டில் ஈடுபடுத்தியுள்ளது. இவ்விளையாட்டுப் போட்டிகளில் கிராம அளவில் வெற்றி பெற்றோர், மாவட்டம்

மற்றும் மாநில அளவில் போட்டிகளில் பங்குபெற்றோர் ஆகியோருக்குப் பரிசுகள் வழங்கி, அவர்களுடைய திறன்களைக் கண்டறிந்து அவர்களை மேலும் ஊக்குவிக்கிறது.

பிற்பகல் 2-00

சுற்றுச்சூழல் துறைமூலமாக கொடைக்கானலில் உள்ள ஏரியை மேம்படுத்த ரூ.10.42 கோடியும் அதேபோல ஏற்காட்டிலுள்ள ஏரியைப் புனரமைக்க ரூ.4.38 கோடியும், பல்லாவரத்திலுள்ள பால்கேணி ஏரியைப் புனரமைக்க 10 இலட்சம் ரூபாயும், நெல்லை, திருக்குற்றாலத்திற்கு சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்டத்தின்கீழ் 10 இலட்சம் ரூபாயும் ஒதுக்கி, அந்தப் பணிகளெல்லாம் நடக்க இருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாசுக் கட்டுப்பாட்டைப் பொறுத்தவரையிலும் ஒரேயொரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். ஆறுகள் மற்றும் நீர்நிலைகள் மாசுபடுவதைத் தடுக்க இந்த ஆண்டு முதல் உயர் கல்வி அதாவது பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சித் துறையில் உள்ள அந்த இளைஞர்களைப் பயன்படுத்தி, அவர்களோடு இணைந்து கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்வோம் என்கிற உத்தரவாதத்தை இங்கே தர விரும்புகிறேன்.

பல உறுப்பினர்கள் பல்வேறு கருத்துகளை இங்கே சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திரு. வைத்திலிங்கம் அவர்கள் 5,000 கோடி ரூபாய்வரை மத்திய சர்க்காரிடமிருந்து வாங்கி, மாசுக் கட்டுப்பாட்டை Zero Discharge என்கிற அளவுக்குச் செய்யுங்கள் என்று புத்திமதி சொன்னார். அவர் புத்திமதிக்கு நன்றி. ஆனால், 5 ஆண்டு காலம் என்ன செய்து கொண்டிருந்தார் என்று நான் கேட்க விரும்பவில்லை.

இன்றைக்கு திரு. ஹசன் அலி அவர்கள் பேசும்போது இந்தத் துறையைப் பற்றிப் பேசாவிட்டாலும்கூட, தமிழைப் பற்றி மிக அருமையாகப் பேசியிருக்கிறார்.

பா.ம.க.-வைச் சார்ந்த மாண்புமிகு திரு. ராஜா அவர்கள் மாசுக் கட்டுப்பாட்டைப் பற்றி மிக விளக்கமாகச் சொல்லியிருக்கிறார். அவர் சொன்னவற்றையெல்லாம் கருத்தில்கொண்டுள்ளோம். எந்தெந்த தவறுகளை எப்படி நீக்க வேண்டுமென்று நாங்கள் மிகக் கண்காணிப்போடு பார்த்துக்கொண்டுதான் இருக்கிறோம்.



அவர் விளையாட்டைப் பற்றிப் பேசும்போது பழங்கால விளையாட்டுகளையெல்லாம் மறந்துவிடக்கூடாது என்கிற அடிப்படையிலே சொன்னார். அவர் சொன்னாலும், சொல்லாவிட்டாலும் இந்தத் துறை அவற்றை மறந்துவிடாது. கழைக்கூத்தாடிகள் மற்றும் மீனவர்களிடம் எல்லாம் திறமை புதைந்து கிடக்கிறது. அந்தத் திறமைகளைப் பயன்படுத்தி, இந்தத் தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல, இந்தியத் திருநாட்டிற்கே ஒரு சாதனை படைப்பதற்கான முயற்சிகளில் இந்தத் துறை ஈடுபடும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இங்கே பழங்கால விளையாட்டுகளைப் பற்றிச் சொல்கின்ற நேரத்தில் கிராம விளையாட்டுகள் பற்றிச் சொன்னார். இந்த அரசு கிராமங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. நான் நேற்றைக்குக்கூடச் சொல்லியிருக்கிறேன். உள்ளாட்சித் துறைமூலமாகவும், விளையாட்டுத் துறைமூலமாகவும் கிராமங்களில் புதைந்து கிடக்கிற அந்த விளையாட்டுத் திறமையை முறையாகப் பயன்படுத்துவதற்கு இந்த அரசு எல்லாவிதமான யுக்தியையும் கையாளும் என்றும், பழமைவாய்ந்த விளையாட்டுகளை மறந்துவிடாமல் செயல்படுத்துவோம் என்றும் சொல்லிக்கொள்கிறேன்.

இங்கே பேசிய அ.தி.மு.க. உறுப்பினர் திரு. மகேந்திரன் அவர்கள், அவர்களுடைய அம்மா ஆட்சியில்தான் கிராமங்களில் விளையாட்டுப் போட்டிகள் முறையாக நடந்ததாகச் சொன்னார். தேர்தலையொட்டி, அதுவும் பிரச்சாரத்திற்காக, அதில் முன்னாள் முதலமைச்சருடைய படத்தைப்போட்டு, அவசர, அவசரமாகக் கொடுத்து, அந்தப் போட்டிகளே சரியாக நடைபெறாமல் இன்றைக்கு அத்தனையும், அந்தப் படத்தோடு இருந்த விளையாட்டு உபகரணங்களிலெல்லாம் எங்களுடைய முதல்வருடைய படத்தைப் போடாமல் விளையாட்டுச் சின்னத்தையே அதிலே மேலும் பதித்து, இன்றைக்கு விளையாடுபவர்களுக்கு மட்டுமல்ல, அந்தப் பரிசுப் பொருட்களை எல்லாம், தமிழ்நாட்டிலுள்ள ஊனமுற்றவர்கள், அனாதை ஆசிரமங்கள், ஆதி திராவிட நலத் துறையினுடைய அந்த விடுதிகள் இதுபோன்றவற்றுக்கு இன்றைக்குக் கொடுத்து முடித்துக் கொண்டிருக்கிறோம் என்பதை நான் அவருக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் இங்கே நன்மாறன் அவர்களும், மரியாதைக்குரிய நம்முடைய இராசசேகரன் அவர்களும் பேசும்போது அவர்களுடைய குரலுக்குப் பதிலாக, அவர்கள் பக்கத்திலே இருக்கிற மாண்புமிகு நம்முடைய மார்க்சிஸ்ட் கட்சியினுடைய சட்டமன்ற

உறுப்பினர் தலைவர் திரு. கோவிந்தசாமியினுடைய குரல்தான் எனக்குக் கேட்டது. ஏனென்றால், திருப்பூர் என்றாலே திரு. கோவிந்தசாமிதான் எழுந்திருப்பார். இன்று அவர் பேச முடியாவிட்டாலும், கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினரை வைத்து, அவர்மூலம் திரும்பவும் திருப்பூரைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருந்தார். அவருக்கு நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். திருப்பூரை நாங்கள் கவனிப்பதில் எந்த மாற்றமும் கிடையாது. இந்த அரசைப் பொறுத்த அளவில், இந்த அவையிலேயே தலைவர் கலைஞர் அவர்கள் உங்களுக்கு அறிவித்திருக்கிறார்கள். ஏற்கெனவே நீதிமன்றத்திலே அதுசம்பந்தமாக வழக்கு இருக்கின்ற காரணத்தால் நீதிமன்றத்தினுடைய நடவடிக்கைக்குக் குந்தகம் வராத வகையில் அனைத்து உதவிகளையும் செய்வோம் என்ற உறுதிமொழியை கலைஞர் அவர்களே உங்களுக்கு அளித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, இன்றைக்கு இந்த மாசுக் கட்டுப்பாடு விஷயத்திலே நீங்கள் சொல்கின்ற அத்தனை யோசனைகளையும் நாங்களும் கேட்டுக்கொள்கிறோம். நீங்கள் சொல்கிற அதே யோசனைகள்தான், அதாவது தொழிலும் பாதிக்கக்கூடாது, தொழிலாளியும் பாதிக்கக் கூடாது, விவசாயியும் பாதிக்கக்கூடாது என்கின்ற நிலைமையிலே நாம் நல்ல முடிவை எடுப்போம் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-05

திருப்பூரிலே விளையாட்டு மைதானம் வேண்டும் என்று சொன்னீர்கள். திருப்பூரில் விளையாட்டு மைதானம் அமைப்பதைப்பற்றி நாம் நேரிலே பேசியிருக்கிறோம். அது சம்பந்தமாக சுழற் கழகங்கள் மூலமாகச் செய்யும்போது, இந்தத் துறையும் தன்னை ஓரளவிற்கு ஈடுபடுத்திக்கொள்வதற்கான வாய்ப்பு இருக்கிறது என்பதையும் இந்த அவையிலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக, யாராக இருந்தாலும், இதுபோன்ற விளையாட்டுத் துறைகளிலே அரசு மட்டும் நினைத்தால் சாதித்துவிட முடியாது. ஆங்காங்கே இருக்கிற, நிறைய விளையாட்டு அரங்கங்களிலே பார்த்தால், பல அரங்கங்கள் சரியாக உபயோகப்படுத்தப்படாமலே இருக்கின்றன. இன்றைக்குச் சட்டமன்ற உறுப்பினர்கள் எப்போது கேள்வி கொடுத்தாலும் எங்கள் ஊருக்கு விளையாட்டு மைதானங்கள் அமைத்துத் தரப்படுமா, எங்கள் கிராமத்திற்கு அமைத்துத் தரப்படுமா என்று கொடுக்கிற கேள்விகள்தான் அதிகமாக இருக்கின்றன.



விளையாட்டு மைதானங்கள் அமைப்பது மட்டும் விளையாட்டில் முக்கியம் இல்லை. இருக்கிற மைதானத்தையும் உபயோகப்படுத்தி, அந்த இளைஞர்களை அதிலே ஈடுபடுத்தி அதிலே வெற்றி வாகை சூடி, இந்த நாட்டுக்குப் பெருமை சேர்ப்பது என்பதுதான் இந்தத் துறைக்கும் பெருமை, இந்த அரசுக்கும் பெருமை, இந்த நாட்டுக்கும் பெருமை என்று சொல்லிக்கொண்டு, இங்கே பேசிய உறுப்பினர்கள் எல்லாம் 5 நிமிடங்கள், 10 நிமிடங்கள் என்று பேசினார்கள். ஆனால், இப்போது இருக்கிற நிலைமையைப் பார்த்தால், இன்றைக்கு ஜனநாயகம் எந்த அளவிற்கு இருக்கிறது என்று பார்த்தால், இன்றைக்குப் பேசியதிலே ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொரு உறுப்பினர்தான் பேசினார். மூன்று தடவை வெளிநடப்புச் செய்த அ.தி.மு.க.வில் இரண்டு உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். அந்த அளவிற்கு இந்த அரசு ஜனநாயகத்தைக் காப்பாற்றுகிறது என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன். விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் குறித்த புதிய அறிவிப்புகள் உறுப்பினர்களுக்கு அச்சிட்டு வழங்கப்பட்டுள்ளன. அவற்றை@ நான் இந்த மன்றத்தில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறையிலே 198 வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் தீர்மானங்களை எல்லாம் திரும்பப் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் ஏற்கெனவே சொன்ன பதில் முழுவதும் அதற்குச் சரியாக இருக்கும் என்று கருதுகிற காரணத்தால், இந்த மானியத்தை நீங்கள் நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. மணி என்ன ஆகிறது?

## 8. அறிவிப்பு

### இரண்டு அமைச்சர்களின் பதிலுரைகளை 2-5-2007 ஆம் நாளுக்குத் தள்ளிவைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2-5-2007, புதன்கிழமை அன்று மாண்புமிகு வனத் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு நிதியமைச்சர் ஆகியோர் பதிலுரை அளிப்பார்கள். பின்னர், பொதுத் துறை, தமிழ்

@ 743 முதல் 746 வரையிலான பக்கங்களில் இணைப்பு- VI ஆக அச்சிடப்பட்டுள்ளது.

வளர்ச்சி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை ஆகியவை குறித்த மானியக் கோரிக்கைகள் வாக்கெடுப்புக்கு விடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 7. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

### (ஆ) விதி 32-ஐத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2-5-2007 அன்று வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்தத் தீர்மானம். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ, 2-5-2007 புதன்கிழமை அன்று தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

2-5-2007 அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பத்திரிகை நண்பர்கள் மற்றும் அனைவருக்கும் மே தின வாழ்த்துகள்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 2-5-2007 (புதன்கிழமை) அன்று காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-08 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.



## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

65. 2005-2006 ஆம் ஆண்டிற்கான ஈரோடு மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

66. 2005-2006 ஆம் ஆண்டிற்கான சிவகங்கை மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

67. 2005-2006 ஆம் ஆண்டிற்கான வேலூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

68. 2005-2006 ஆம் ஆண்டிற்கான விழுப்புரம் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

69. 2005-2006 ஆம் ஆண்டிற்கான நீலகிரி மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

70. 2005-2006 ஆம் ஆண்டிற்கான புதுக்கோட்டை மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

71. 2005-2006 ஆம் ஆண்டிற்கான திருநெல்வேலி மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

[2007 ஏப்ரல் 28

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*159.* மானியக் கோரிக்கை எண் 38-பொதுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, *2007-2008.* (தமிழ், ஆங்கிலம்)

*160.* மானியக் கோரிக்கை எண் 38-தேர்தல்கள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, *2007-2008.* (தமிழ், ஆங்கிலம்)

*161.* மானியக் கோரிக்கை எண் 46-தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, *2007-2008.* (தமிழ், ஆங்கிலம்)

*162.* மானியக் கோரிக்கை எண் 49-இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, *2007-2008.* (தமிழ், ஆங்கிலம்)

*163.* இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய "மக்கள் சாசனம், *2007*". (தமிழ், ஆங்கிலம்)

*164.* மானியக் கோரிக்கை எண் 15-சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, *2007-2008.* (தமிழ், ஆங்கிலம்)

*165.* சுற்றுச்சூழல் துறை பற்றிய செயலாக்க வரவு-செலவுத் திட்டம், *2007-2008.* (தமிழ், ஆங்கிலம்)

*166.* வனத் துறை பற்றிய செயலாக்க வரவு-செலவுத் திட்டம், *2007-2008.* (தமிழ், ஆங்கிலம்)

*167.* கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், *2007-2008.* (தமிழ்)

*168.* மீன்வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகள், *2007-2008.* (தமிழ்)



2007 ஏப்ரல் 28]

*169.* பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகள், *2007-2008.* (தமிழ்)

*170.* மனுக்கள் குழுவின் பதின்மூன்றாவது அறிக்கை. *(2006-2007)*

*171.* மனுக்கள் குழுவின் பதினான்காவது அறிக்கை. *(2006-2007)*

*172.* மனுக்கள் குழுவின் பதினைந்தாவது அறிக்கை. *(2006-2007)*

*173.* மனுக்கள் குழுவின் பதினாறாவது அறிக்கை. *(2006-2007)*

*174.* மனுக்கள் குழுவின் பதினேழாவது அறிக்கை. *(2006-2007)*

*175.* மனுக்கள் குழுவின் பதினெட்டாவது அறிக்கை. *(2006-2007)*

## இணைப்பு–I

*(516 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## மானியக் கோரிக்கை எண் 38—பொதுத் துறை கொள்கை விளக்கக் குறிப்பு, 2007–2008

பொதுத் துறை மாநிலத்தின் பொது நிர்வாகம் சம்பந்தப்பட்ட அனைத்துப் பணிகளையும் கவனித்து வருகின்றது. இத்துறை தலைமைச் செயலரின் நேரடி நிர்வாகக் கட்டுப்பாட்டில் செயல்படுகிறது. இத்துறையில் கவனிக்கப்பட்டு வரும் சில முக்கியப் பணிகள் பின்வருமாறு:—

1. தேசிய ஒருமைப்பாட்டுக் குழு மற்றும் பன்மாநிலக் குழு உட்பட மைய அரசு மற்றும் மாநில அரசுகளுக்கு இடையிலான பொதுவான விவரங்கள் குறித்து கவனித்தல் மற்றும் மைய அரசின் வெளியுறவு அமைச்சகத்துடன் தொடர்பு கொள்ளல் மற்றும் அயல்நாட்டு தூதரக குழுக்களுடனான தொடர்புப் பணி இத்துறையின் கடமைகளுள் ஒரு பகுதியாகும்.

2. முன்னாள் படைவீரர்களின் நலன் மற்றும் முன்னாள் படைவீரர்கள் கழகத்தின் நிர்வாகம், இந்திய தேசிய இராணுவ வீரர்கள் மற்றும் சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கான ஓய்வூதியம் மற்றும் நலப் பணிகள்.

3. தகைசால் பெருமக்கள் மற்றும் அயல்நாட்டு தூதர்களின் வருகையின்போது மரபுசால் வசதிகளை வழங்கும் பணிகள். அரசு விருந்தினர் இல்லங்கள் மற்றும் புதுடெல்லியிலுள்ள தமிழ்நாடு இல்லம் ஆகியவற்றை நிர்வகித்தல்.

4. இலங்கை அகதிகள் உட்பட அகதிகளின் நலன், மறுவாழ்வு மற்றும் அவர்களை தாயகத்திற்கு மீள அனுப்புதல் குறித்த பணிகள்.

5. மேதகு ஆளுநர் மற்றும் அமைச்சர்கள் சம்பந்தப்பட்ட பணிகள், இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களின் நிர்வாகம் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர்களின் நிர்வாகம், விசாரணைக் குழு, மனித உரிமைக் குழு ஆணையம் மற்றும் முதலமைச்சரின் தனிப் பிரிவு ஆகிய இனங்கள்.

[2007 ஏப்ரல் 28

6. மாநிலத்தில் சட்டம் ஒழுங்கைப் பராமரித்தல் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் தேர்தல் தவிர, ஏனைய தேர்தல்களை நடத்துதல்.

சில முக்கியப் பணிகளின் விவரங்கள் பின்வருமாறு:—

## 1. அகதிகள் மறுவாழ்வு

1983 ஆம் ஆண்டில் இலங்கையில் ஏற்பட்ட இனக் கலவரத்தின் காரணமாக, இலங்கைத் தமிழர்கள் பெருமளவு வெளியேறி புகலிடம் தேடி இந்தியாவிற்கு வரத் துவங்கினர். 1987-1991 மற்றும் 1992-1995 ஆம் ஆண்டுகளில் திரும்ப இலங்கைக்கு அனுப்பப்பட்ட பின்னரும் அவர்களின் வருகை தொடர்ந்தது. 2003 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் முதல் அகதிகள் வருகை இல்லை என்றபோதிலும், இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள அமைதியின்மை காரணமாக மீண்டும் 12-1-2006 முதல் இலங்கைத் தமிழர்கள் இந்தியாவிற்கு வரத் துவங்கியுள்ளனர். 31-3-2007 அன்றைய நிலவரப்படி இரண்டு சிறப்பு முகாம்கள் உட்பட தமிழ்நாடு முழுவதிலும் 25 மாவட்டங்களில் உள்ள 120 அரசு முகாம்களில் 19,235 குடும்பங்களைச் சார்ந்த 72,784 நபர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு மைய அரசு நிர்ணயித்த அளவில் நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அகதிகளின் நிவாரணத்திற்கான பல்வேறு செலவினங்கள் மாநில அரசால் மேற்கொள்ளப்பட்டு, பின்னர் மைய அரசினால் ஈடு செய்யப்படுகிறது.

### அகதிகளுக்கு வழங்கப்படும் நிவாரணம் மற்றும் மறுவாழ்வு உதவிகள்

**1. பணக் கொடை**

தமிழகத்திலுள்ள அகதி முகாம்களில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்களுக்கு ஒவ்வொரு மாதமும் வழங்கப்பட்டு வரும் பணக் கொடை 1-8-2006 முதல், அதற்கு முன்னர் வழங்கியதைப்போல் இருமடங்காக்கப்பட்டு, பின்வரும் விகிதங்களில் அனுமதிக்கப்பட்டு வழங்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | தனி நபர் குடும்பம் / குடும்பத் தலைவர் | ரூ.400 |
| 2. | 12 வயதும் மற்றும் அதற்கு மேலுமுள்ள ஒவ்வொரு கூடுதல் நபருக்கும் | ரூ.288 |
| 3. | 12 வயதுக்குக் குறைவான முதல் குழந்தைக்கு | ரூ.180 |
| 4. | அதற்குப் பின்னர் பிறந்த ஒவ்வொரு குழந்தைக்கும் | ரூ.90 |



2007 ஏப்ரல் 28]

இச்செலவிற்கென 2007-2008 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.17.70 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2. மானிய விலையில் அரிசி**

அகதி முகாம்களில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்களுக்கு மைய அரசினால் நிர்ணயிக்கப்பட்டவாறு மானிய விலை அரிசி கிலோ ஒன்றுக்கு ரூ.0.57 வீதம் பின்வரும் அளவுகளில் வழங்கப்பட்டு வருகிறது:—

| | (நாளொன்றிற்கு) |
|---|---|
| (அ) பெரியவர்கள் (8 வயதும் அதற்கு மேலும்) | 400 கிராம் |
| (ஆ) குழந்தைகள் (8 வயதிற்கு உட்பட்டவர்கள்) | 200 கிராம் |

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், பொது விநியோகத் திட்டத்திற்காக அமைக்கப்பட்டுள்ள கடைகள் மூலமாக இலங்கைத் தமிழர்களுக்கு மானிய விலையில் அரிசியினை விநியோகித்து, விலை வித்தியாசத் தொகையினை அரசிடம் பெற்றுக்கொள்கிறது. இதற்காக 2007-2008 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.11.40 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3. துணிமணிகள் மற்றும் பாத்திரங்கள்**

முகாம்களில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்களுக்கு துணிமணிகள், பாய் ஆகியவை மைய அரசால் நிர்ணயிக்கப்பட்ட அளவுகளின்படி ஆண்டுதோறும் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை முகாம்களில் தங்கியுள்ள 12 வயதிற்கு மேற்பட்ட அகதிகளுக்கு தலா ஒரு போர்வை வழங்கப்படுகிறது. மேலும், முகாம்களில் அனுமதிக்கப்பட்டுள்ள அனைத்து இலங்கைத் தமிழர் குடும்பம் ஒவ்வொன்றிற்கும், ஐந்து வகைப்பட்ட பாத்திரங்கள் எட்டு, ஈராண்டுகளுக்கு ஒருமுறை இலவசமாக வழங்கப்படுகின்றது. இச்செலவினங்களுக்கென 2007-2008 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.3.13 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4. மருத்துவ உதவி**

முகாம்களில் தங்கியுள்ள இலங்கை அகதிகளுக்கு அருகில் உள்ள அரசினர் மருத்துவமனை மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்கள்

[2007 ஏப்ரல் 28

மூலம் மருத்துவ வசதி அளிக்கப்படுகிறது. பெரிய அளவிலான சிகிச்சைகளுக்கு அவர்களின் கோரிக்கையின் அடிப்படையில் இலங்கைத் தமிழர் சிறப்பு துயர்துடைப்பு நிதியிலிருந்து நிதியுதவி வழங்கப்படுகிறது.

**5. கல்வி வசதிகள்**

இலங்கை அகதிகளின் குழந்தைகளுக்கு தமிழ்நாடு அரசு இலவசமாக கல்வி கற்கும் வாய்ப்பினை நல்கி வருகிறது. இக்குழந்தைகள் இலங்கையில் படித்தமைக்கான பள்ளி மாற்றுச் சான்றிதழ் இல்லாமலேயே தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளப்படுவதுடன், கல்லூரி வரை அவர்களது கல்வி தொடரவும் அனுமதிக்கப்பட்டுள்ளது. பள்ளி செல்லும் குழந்தைகளுக்குச் சீருடைகள், மதிய உணவு, பயணச் சீட்டு, பாடப் புத்தகங்கள் மற்றும் நோட்டுப் புத்தகங்கள், பிளஸ்-1 மாணவர்களுக்கு மிதிவண்டிகள் ஆகியவை இலவசமாக வழங்கப்படுகின்றன. பணக் கொடை மற்றும் இதர நிவாரண உதவிகளுடன் இக்குழந்தைகள் முகாமிற்கு வெளியேயும் மற்றும் தமிழ்நாட்டிற்குள் எந்த இடத்திலும் படிப்பினைத் தொடர அனுமதி அளிக்கப்படுகிறது.

**6. முகாம்களில் அடிப்படை வசதிகளுக்கான பணிகள்**

அகதிகள் முகாம்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் திட்டத்தின்கீழ் 2006-2007 ஆம் நிதியாண்டில் மைய அரசின் இசைவுடன் ரூ.5.88 கோடி செலவு செய்ய அரசு நிதி ஒதுக்கியுள்ளது. இதன் மூலம் முகாம்களில் 1997-2000 ஆண்டுகளில் கட்டப்பட்ட குடிசைகளைப் பழுதுபார்த்தல், தெரு விளக்கு, குடிநீர், கழிப்பிடம், சாலை மற்றும் மின்சார வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் கூடுதல் குடிசைகளைக் கட்டித் தருதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**7. அகதிகளை அவர்களின் தாயகத்திற்கு மீள அனுப்புதல்**

தத்தம் விருப்பத்தின் பேரிலும் சொந்தச் செலவிலும் தங்களது தாய்நாட்டிற்கு அல்லது வேறு வெளிநாடுகளுக்குச் செல்ல விரும்பும் அகதிகள், இந்தியாவை விட்டு வெளிச் செல்ல அனுமதிச் சீட்டுகள் வழங்கப்படுகின்றன. 2006-2007 ஆம் ஆண்டில் மார்ச் 31 வரை இலங்கை அகதிகளுக்கு 106 அனுமதிச் சீட்டுகள் மாவட்ட ஆட்சியர்கள்மூலம் வழங்கப்பட்டுள்ளன.



2007 ஏப்ரல் 28]

**8. நிதிப் பயன்பாடு**

2006-2007 ஆம் ஆண்டில் ரூ.39.07 கோடி இலங்கை அகதிகளின் நலப் பணிகளுக்காக செலவிடப்பட்டுள்ளது. 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.42.14 கோடி இச்செலவினத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2. முன்னாள் படைவீரர் நலத் துறை**

முன்னாள் படைவீரர் நல இயக்ககம் போர் முனையில் உயிர்த் தியாகம் செய்த தமிழ்நாட்டைச் சேர்ந்த படைவீரர்களின் குடும்பத்தார்கள், முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோரின் மறுவாழ்வு மற்றும் நலன்களைப் பேணிக் காக்க செயல்பட்டு வருகிறது. 25 மாவட்டங்களிலுள்ள முன்னாள் படைவீரர் நல அலுவலகங்கள் மூலமாக இந்நலப் பணிகள் அனைத்தும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. முன்னாள் படைவீரர் நலத் துறையின் மொத்த நிர்வாகச் செலவில் 50 விழுக்காடு மாநில அரசாலும், 50 விழுக்காடு மத்திய அரசாலும் ஈடு செய்யப்பட்டுச் செலவிடப்பட்டு வருகிறது. 2006-2007 ஆம் நிதியாண்டில், 1,66,850 முன்னாள் படைவீரர்கள் மற்றும் விதவையர், மாவட்ட அலுவலகங்களில் பதிவு செய்து அடையாள அட்டை பெற்றுள்ளனர். முன்னாள் படைவீரர்கள் / விதவையர் மற்றும் அவர்களைச் சார்ந்தோர் அரசிடம் வேலைவாய்ப்பு மற்றும் நல உதவிகள் கோரி பதிவு செய்துள்ளனர்.

**மறுவாழ்வு மற்றும் இதர நலத் திட்டங்கள்**

**1. மறுவேலைவாய்ப்பு அளித்தல்**

மாநில அரசுப் பணிகளில் குரூப் 'சி' பிரிவில் 5 விழுக்காடும், அடிப்படைப் பணிகளில் 10 விழுக்காடும், வனத் துறையில் காவலர் மற்றும் பாதுகாவலர் பணிக்கு 15 விழுக்காடும், முன்னாள் படை வீரர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாநில அரசு சார்ந்த நிறுவனங்களில், அடிப்படைப் பணிகளில் 10 விழுக்காடு இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2006-2007 ஆம் ஆண்டில் 86 முன்னாள் படைவீரர்கள் பல்வேறு நிறுவனங்களில் மறுவேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.

**2. சுயவேலைவாய்ப்புத் திட்டங்கள்**

சுயதொழில் துவங்கும் முன்னாள் படைவீரர்களுக்கு சுயவேலை வாய்ப்பு திட்டத்தின்கீழ் வங்கிகளின் வாயிலாக கடன் பெற வழிவகை

[2007 ஏப்ரல் 28

செய்வதுடன், வங்கியில் ரூ.2.50 இலட்சம் வரை கடனாகப் பெறுவோர்களுக்கு அவர்கள் செலுத்தும் வட்டியில் 50 விழுக்காடு தொகுப்பு நிதியிலிருந்து மானியமாக வழங்கப்படுகிறது. 2006-2007 ஆம் நிதியாண்டில் 726 முன்னாள் படைவீரர் / விதவையர்களுக்கு வட்டி மானியத் தொகை ரூ.14.22 இலட்சம் அளிக்கப்பட்டது. முன்னாள் படைவீரர்கள் சுய உதவிக் குழு / விதவைகள் சுய உதவிக் குழு ஆகியோரைக் கொண்டு அமைக்கப்பட்ட சுய உதவிக் குழுக்கள் சுய வேலை வாய்ப்புகள் பெறும்வண்ணம் அவர்கள் வாங்கும் வங்கிக் கடன் ரூ.7.50 இலட்சம் வரையிலான தொகைக்குச் செலுத்த வேண்டிய வட்டி முழுவதுமாக சுய உதவிக் குழுக்கள் கடன் பெற்றுள்ள வங்கிகளுக்கு தொகுப்பு நிதியிலிருந்து மானியமாக வழங்கப்படுகிறது.

**3. புனரமைப்புப் பயிற்சிகள்**

முன்னாள் படைவீரர்கள் விரைவில் வேலைவாய்ப்பு பெறுவதற்கு ஏதுவாக கணினிப் பயிற்சி, இருசக்கர வாகனம் பழுதுபார்த்தல், வானொலி மற்றும் தொலைக்காட்சிப் பெட்டி பழுதுபார்த்தல் போன்ற இனங்களில் பயிற்சியளிக்கப்படுகிறது. 2006-2007 ஆம் ஆண்டில், இத்தகைய புனரமைப்புப் பயிற்சி 130 முன்னாள் படைவீரர்களுக்கு அளிக்கப்பட்டது. முன்னாள் படைவீரர்களுள் முன்னதாக உடற்பயிற்சிக் கல்வித் தகுதி பெற்றவர்கள் அரசுப் பள்ளிகளில் உடற்பயிற்சி ஆசிரியர் நியமனம் பெற்றிடும் வகையில், காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தின்மூலமாக அவர்களுக்கு 4 மாத கால சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது. 2006-2007 ஆம் ஆண்டில் சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்ட 37 முன்னாள் படைவீரர்களில் 7 நபர்கள் அரசு உயர்நிலைப் பள்ளிகளில் உடற்பயிற்சி ஆசிரியர்களாகப் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

**4. சேமநல நிதி மற்றும் தொகுப்பு நிதியிலிருந்து வழங்கப்படும் உதவிகள்**

2006-2007 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ், 14,654 முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோருக்கு தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து ரூ.7.90 கோடி மதிப்பிலான உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இதே காலத்தில், தொகுப்பு நிதியிலிருந்து 2,040 முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோருக்கு ரூ.52.03 இலட்சம் மதிப்பிலான நிதியுதவிகள் வழங்கப்பட்டுள்ளன.



2007 ஏப்ரல் 28]

**5. வீரச் செயல்கள் / சிறப்பாகப் பணிபுரிந்தமை ஆகியவற்றிற்காக விருது மற்றும் பதக்கம் பெறுவோருக்கு பண முடிப்பு மற்றும் படைப் பணிக்கு மகன் / மகளை அனுப்பும் பெற்றோருக்கு ஊக்க மானியம்**

வீரதீரச் செயல்களுக்கான வீரப் பதக்கங்கள் மற்றும் பாராட்டத்தக்க பணி புரிந்தமைக்கான பதக்கங்கள் பெறுவோருக்கு பண முடிப்பு வழங்கப்படுகிறது. சக்ரா வீர விருது பெற்ற இராணுவ வீரர்களுக்கு நிலத்திற்குப் பதிலாக ரொக்கத் தொகை வழங்கப்படுகிறது. வீரதீரச் செயல் புரிந்தமைக்கு விருது பெற்ற மூன்று பேருக்கு, நிலத்திற்குப் பதிலாக, ரூ.1.30 இலட்சம் பணமுடிப்பு வழங்கப்பட்டுள்ளது. வீர விருது பெற்ற/போற்றத்தக்க சேவைபுரிந்த 27 பேருக்கு ரூ.1.61 இலட்சம் பணமுடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஒரு மகன்/மகளை படைப் பணிக்கு அனுப்பும் பெற்றோர்களை ஊக்குவிக்கும் வகையில், போர்ப் பணி ஊக்க மானியம் ஆண்டுதோறும் தமிழக அரசால் வழங்கப்படுகிறது. 2006-2007 ஆம் நிதியாண்டில் தங்களுடைய ஒரு மகன்/மகளை இராணுவத்திற்கு அனுப்பிய 425 பெற்றோர்களுக்கு ரூ.3.19 இலட்சம் (ரூ.750 x 425) போர்ப் பணி ஊக்க மானியமும் வழங்கப்பட்டுள்ளது. 2006-2007 ஆம் நிதியாண்டில் தங்களுடைய ஒன்றுக்கும் மேற்பட்ட மகன்/மகளை இராணுவப் பணிக்கு அனுப்பிய 487 பெற்றோர்களுக்கு, ரூ.4.87 இலட்சம் (ரூ.1,000 x 487) போர்ப் பணி ஊக்க மானியமும் வழங்கப்பட்டுள்ளது.

நாட்டின் எல்லைப்புறத்தில் இன்னுயிரை ஈந்த இராணுவ வீரர்/ எல்லைப் பாதுகாப்பு படைவீரர்களின் தியாகத்தை அங்கீகரிக்கும் வகையில், வீர மரணம் அடைந்தவர்களுக்கு உரிய அரசு மரியாதை அளிக்கப்படுகிறது. வீர மரணம் அடைந்த போர் வீரரின் இறுதிச் சடங்கில் ஓர் அமைச்சர்/மாவட்ட ஆட்சியர்/காவல் கண்காணிப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டு அரசு மரியாதை செலுத்தும் நடைமுறை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**6. கார்கில் போராட்ட வீரர் நிவாரண நிதி**

இந்த நிவாரண நிதி அரசின் பொதுத் (இராணுவ) துறையால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இந்நிதியிலிருந்து தமிழ்நாட்டைச் சார்ந்த இராணுவ வீரர்கள்/எல்லைப் பாதுகாப்பு படைவீரர்கள், பகைவருக்கு

[2007 ஏப்ரல் 28

எதிரான நடவடிக்கையில் ஈடுப்பட்டுள்ளபோது உயிரிழந்தால், அவரது குடும்பத்தினருக்கும், ஊனமுற்ற படைவீரருக்கும் பின்வருமாறு நிவாரணம் வழங்கப்படுகிறது:—

| | | |
|---|---|---|
| 1. உயிரிழந்தவர்கள் குடும்பத்துக்கு | : | ரூ.5 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம்) |
| 2. ஊனமடைந்தவர்கள்:— | | |
| (i) முழுவதுமாக ஊனமடைந்தவர்கள்/ இரு கால்கள், கைகள் அல்லது இரு கண்களையும் இழந்தவர்கள். | : | ரூ.3 இலட்சம் (ரூபாய் மூன்று இலட்சம்) |
| (ii) ஒரு கால், கை அல்லது ஒரு கண்ணை இழந்தவர்கள். | : | ரூ.1 இலட்சம் (ரூபாய் ஒரு இலட்சம்) |

2006-2007 ஆம் நிதியாண்டில் நாட்டின் பாதுகாப்புப் பணியில் தீவிரவாதிகளின் ஊடுருவலுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டு 7 படைவீரர்கள் உயிர்த் தியாகம் செய்துள்ளனர். அவர்தம் குடும்பத்தாருக்கு கார்கில் இராணுவ வீரர்கள் நிவாரண நிதியிலிருந்து ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா ரூ.5.00 இலட்சம் வீதம் ரூ.35.00 இலட்சம் அரசால் வழங்கப்பட்டுள்ளது.

**7. குடிமுறை நிர்வாகத்திற்கு உதவுதல்—மாநில அரசின் கருணைத் தொகை**

மேலும் குடிமுறை நிர்வாகத்திற்கு உதவிடும் நடவடிக்கைகளின்போது, உயிரிழந்த படைவீரரின் குடும்பம்/எல்லைப் பாதுகாப்புப் படையினர் குடும்பத்திற்கும் ரூ.1 இலட்சமும், ஊனமுற்ற படைவீரருக்கு ஊனத்தின் தன்மைக்கேற்ப ரூ.10,000/- முதல் ரூ.40,000/- வரையும், கருணைத் தொகையாக வழங்கப்படுகிறது. இவ்வகையில், 2006-2007 ஆம் நிதியாண்டில், ஜம்மு-காஷ்மீர் பகுதியில் தீவிரவாதிகளுக்கெதிரான நடவடிக்கைகளில் குடிமுறை நிர்வாகத்திற்கு உதவிடும்போது வீர மரணம் எய்திய 17 படைவீரர்களின் குடும்பத்தினருக்கு ரூ.17.00 இலட்சம் அரசு நிதியிலிருந்து கருணைத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.



2007 ஏப்ரல் 28]

**8. இராணுவப் பணியில் சேருவதற்கான தேர்வுக்கு முன் பயிற்சி**

தமிழ்நாட்டைச் சேர்ந்த இளைஞர்களை இராணுவத்தில் அதிக அளவில் சேர ஊக்குவிக்கும் பொருட்டு அதற்கான ஆயத்தப் பயிற்சி அளித்திட 2006-2007 ஆம் நிதியாண்டில் ரூ.28.04 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இத்திட்டத்தின்கீழ் 299 இளைஞர்களுக்கு இராணுவத்தில் சேருவதற்கான தேர்வு எழுத முன் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**9. துறையைக் கணினிமயமாக்குதல்**

முன்னாள் படைவீரர் நல இயக்ககம் மற்றும் மாவட்ட அலுவலகங்கள் ஏற்கெனவே கணினிமயமாக்கப்பட்டுள்ளன. மாவட்ட அலுவலகங்களை, தலைமை அலுவலகமான முன்னாள் படைவீரர் நல இயக்ககத்துடன், கணினி மூலம் இணைத்து, மாவட்ட அலுவலகங்களின் நடவடிக்கைகளை இயக்ககம் கண்காணிக்க ஏதுவாக, ஒரு சர்வர் மற்றும் கணினியின் உபபொருட்கள் வாங்கிட இந்த நிதியாண்டு 2007-2008-ல் பகுதி-II திட்டத்தின்கீழ் ரூ.2.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**10. கல்வி நிலையங்களில் இட ஒதுக்கீடு**

தமிழ்நாட்டிலுள்ள பல்வகைப்பட்ட கல்வி நிறுவனங்களில் முன்னாள் இராணுவத்தினரின் சிறார்களுக்குக் குறிப்பிட்ட எண்ணிக்கையில் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பொறியியல் பட்டப் படிப்புக்கு அண்ணா பல்கலைக்கழகத்தில் 6 இடங்களும், இதர பொறியியல் கல்லூரிகளில் 75 இடங்களும், மருத்துவப் பட்டப் படிப்புக்கு 2 இடங்களும், பல் மருத்துவ படிப்புக்கு 1 இடமும், செவிலியர் பயிற்சிப் படிப்புக்கு 60 இடங்களும், பல்தொழில்நுட்பப் பயிலகங்களில் பட்டயப் படிப்பிற்கு 80 இடங்களும், ஒவ்வொரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பட்டப் படிப்புக்கு 6 இடங்களும், ஆசிரியர் பயிற்சிப் படிப்பில் 132 இடங்களும், சட்டப் படிப்புப் பிரிவில் ஒரு விழுக்காடு இடமும் இவற்றில் அடங்கும். இதுமட்டுமன்றி, தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ஒரத்தநாடு அரசு கல்வியியல் கல்லூரியில் தமிழாசிரியர் பயிற்சிப் படிப்பில் 1 இடமும், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முதுகலைப் பட்டப் படிப்பில் இரண்டு பாடப் பிரிவுகள் வரையுள்ள கல்லூரிகளில், ஒவ்வொரு பிரிவிலும் இரண்டு இடங்களும், இரண்டுக்கு மேல் பாடப் பிரிவுகள் உள்ள கல்லூரிகளில், ஒவ்வொரு பாடப் பிரிவிலும்

[2007 ஏப்ரல் 28

3 இடங்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மேலும், 2006-2007 ஆம் கல்வியாண்டிலிருந்து முன்னாள் படைவீரர் குழந்தைகளுக்கு மருத்துவக் கல்வி நிலையங்களில் பாரா மெடிக்கல் பட்டப் படிப்புகளான பி.பார்மஸி, பி.எஸ்சி. (நர்ஸிங்) மற்றும் பி.பி.டி. படிப்பில் ஒரு இடம் வீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**11. படைவீரர் மாளிகை**

முன்னாள் படைவீரர்களின் சேம நல நிதியிலிருந்து, பல்பொருள் அங்காடி மற்றும் அலுவலகக் கட்டடங்கள் மாவட்டங்களில் கட்டப்பட்டுள்ளன. பல்பொருள் அங்காடி மற்றும் அலுவலகக் கட்டடங்களிலிருந்து ஈட்டப்படும் வருவாய், முன்னாள் படைவீரர் நல நிதியில் சேர்க்கப்படுகிறது.

**12. கோயில் பாதுகாப்புப் படை**

தமிழக கோயில்களிலுள்ள சிலைகள் மற்றும் விலையுயர்ந்த பொருட்களைப் பாதுகாப்பதற்காக முன்னாள் படைவீரர்களைக் கொண்ட கோயில் பாதுகாப்புப் படை நிறுவப்பட்டுள்ளது. இப்படையில் பணியாற்றும் முன்னாள் படைவீரர்களுக்குத் தொகுப்பூதியமாக மாதம் ரூ.1,500/- வழங்கப்பட்டு வருகிறது. தற்போது 2,330 முன்னாள் படைவீரர்கள் இப்பணியில் ஈடுபட்டுள்ளனர்.

**13. கொடி நாள் நிதி**

கொடி நாள் நிதி வசூலில் தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு முதல் முன்னிலை வகித்து வருகிறது. நடப்பு கொடி நாள் ஆண்டிற்கு (07-12-2006 முதல் 06-12-2007 வரை) இலக்கு ரூ.6.93 கோடியாகும். இதில் 31-3-2007 வரை ரூ.1.57 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது. இந்த இலக்கை 06-12-2007-க்கு முன்பாகவே அடைய முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**14. அலுவலர் மற்றும் பணியாளர் நியமனம்**

நேரடி நியமனத்திற்கு விதிக்கப்பட்டிருந்த தடையாணை விலக்கிக் கொள்ளப்பட்ட பிறகு 31-12-2006 நிலவரப்படி, முன்னாள் படைவீரர் நலத் துறையில் உதவி இயக்குநர் பணியிடங்கள்-14, நல அமைப்பாளர் பணியிடங்கள்-14, இளநிலை உதவியாளர் பணியிடங்கள்-23, தட்டச்சர் பணியிடம்-1, பதிவுறு எழுத்தர் பணியிடங்கள்-2 அலுவலக உதவியாளர் பணியிடம்-1 மற்றும் துப்புரவாளர் பணியிடம்-1 ஆகியவை நிரப்பப்பட்டன.



2007 ஏப்ரல் 28]

**3. தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகம் (டெக்ஸ்கோ)**

தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் (டெக்ஸ்கோ), நிறுவனங்கள் (கம்பெனிகள்) சட்டம் 1956-ன்படி 28-01-1986 அன்று பதிவு செய்யப்பட்டு நிறுவப்பட்டது. இது நிதியளவில் சுய ஆதரவுள்ள ஒரு நல நிறுவனமாகும். இதன் உரிமை பெற்ற மற்றும் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் முறையே ரூபாய் 50 இலட்சம் மற்றும் ரூ.22.91 இலட்சம் ஆகும். இக்கழகத்தின் முக்கியச் செயல்பாடுகள் பின்வருமாறு:-

1. தமிழ்நாட்டைச் சேர்ந்த முன்னாள் படைவீரர்களின் பொருளாதார மேம்பாடு மற்றும் நலத்திற்கு வழிவகுக்கும் பல திட்டங்களைத் திட்டமிடுதல், உருவாக்குதல், அவற்றைச் செயல்படுத்துதல்.
2. வணிக நடவடிக்கைகளில் ஈடுபடுவது.

பதிவு பெற்ற முன்னாள் படைவீரர்கள், பெரும்பாலும் மைய மற்றும் மாநில அரசு நிறுவனங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் பாதுகாப்பாளர்கள், எழுத்தர்கள், ஓட்டுநர்கள், செவிலியர்கள், தீ அணைக்கும் பணியாளர்கள் மற்றும் தொலை செய்திப் பணியாளர்கள் ஆகிய பணிகளில் இக்கழகத்தால் அமர்த்தப்படுகின்றனர். இப்பணிகளுக்கென 12 விழுக்காடு சேவைக் கட்டணமாக கேட்புத் துறையிடமிருந்து (user department) டெக்ஸ்கோ பெற்று வருகிறது. டெக்ஸ்கோ தொடங்கப்பட்ட 28-1-1986 முதல் 31-3-2007 வரை 9,136 முன்னாள் படைவீரர்களை ஒப்பந்த அடிப்படையில் பணி நியமனம் செய்திட கேட்புத் துறைகளுக்கு (user department) டெக்ஸ்கோ வழங்கியுள்ளது. இவர்களில் 977 நபர்கள் 2006-2007 ஆம் நிதி ஆண்டில் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

சென்னை மாநகருக்கு உட்பட்ட வரையறுக்கப்பட்ட இடங்களில் வாகனங்களை நிறுத்துவதற்குக் கட்டணம் வசூலிக்கும் பொறுப்பினை இக்கழகத்திற்கு சென்னை மாநகராட்சி ஒப்பந்த அடிப்படையில் அளித்துள்ளது. இப்பணி தொடர்பான அனைத்துச் செலவினங்களையும் ஈடுசெய்தபின் ஈட்டப்படும் நிகர வருவாயில் 30 விழுக்காட்டினை டெக்ஸ்கோ எடுத்துக் கொண்டு, எஞ்சிய 70 விழுக்காடு தொகையை சென்னை மாநகராட்சிக்கு உரிமக் கட்டணமாக வழங்கி வருகிறது.

தமிழக அரசுக்குச் சொந்தமான பெல் 412 இ.பி. ஹெலிகாப்டர் மற்றும் செஸ்னா விமானத்தைப் பராமரித்து நிர்வகிக்கும் பணி டெக்ஸ்கோ நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இவற்றைப் பராமரித்து நிர்வகித்து வரும் செலவை இக்கழகம் ஆரம்ப கட்டத்தில் ஏற்று, பின்னர் இத்தொகையை 2 விழுக்காடு சேவைக் கட்டணத்துடன் சேர்த்து தமிழக அரசிடமிருந்து திரும்பப் பெற்றுக் கொள்கிறது. இந்த பணியின்மூலம் சராசரியாக ரூ.3.80 இலட்சம் ஈட்டப்பட்டு வருகிறது.

## 4. முதலமைச்சரின் தனிப் பிரிவு

முதலமைச்சரின் தனிப் பிரிவு, பொது மக்களின் குறைகளுக்கு உரிய தீர்வு காண்பதிலும், அவர்களின் இடர்பாடுகளைக் களைவதிலும் முக்கியப் பங்கு வகிக்கின்றது. இப்பிரிவு, தனி அலுவலரின் தலைமையின்கீழ் இயங்கி வருகின்றது. பொது மக்களின் குறைகளை உடனடியாகக் களைவதற்கு அரசின் அனைத்து நிலையிலுள்ள அலுவலர்களிடமும் நேரடியாகத் தொடர்பு கொண்டு நடவடிக்கை மேற்கொள்ள அவருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

2. சுற்றுப்பயணத்தின்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பெறப்படும் மனுக்கள், மாவட்டம் மற்றும் துறை வாரியாகப் பிரிக்கப்பட்டு, உடனடி நடவடிக்கை எடுப்பதற்காக சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அனுப்பப்படுகின்றன. மனுக்களில் கண்டுள்ள அனைத்து விவரங்களும் தொடர் நடவடிக்கைக்காகக் கணினியில் பதிவு செய்யப்படுகின்றன. தனி அலுவலர் அனைத்து வேலை நாட்களிலும் பொதுமக்களிடமிருந்து மனுக்களைப் பெறுகிறார். மேலும் மின்னஞ்சல், நிகரி மற்றும் அஞ்சல் மூலமாகவும் தனிப் பிரிவில் மனுக்கள் பெறப்படுகின்றன. தனிப் பிரிவில் பெறப்படும் மனுக்களின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து ஆய்வு செய்ய, மாவட்டங்களில் உள்ள தனித் துணை ஆட்சியர்களுடனும் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) தலைமைச் செயலகத் துறைகள் மற்றும் துறைத் தலைமையகங்களில் உள்ள முதலமைச்சரின் தனிப் பிரிவு மனுக்களுக்கான ஒருங்கிணைப்பு அதிகாரிகளுடனும் தனி அலுவலர் சென்னையில் காலமுறை ஆய்வுக் கூட்டங்களை மேற்கொள்கிறார்.

3. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைகளின் பேரில், முதலமைச்சர் தனிப் பிரிவு மூலமாக, வறிய குடும்பங்களில் உள்ள சிறுவர்களின் கல்விக்காகவும், உயிர் காக்கும் அறுவை சிகிச்சைக்காகவும் மற்றும் பல்வேறு தேவைகளுக்காகவும் நிதியுதவி அளிக்கப்படுகிறது.



## 01–04–2006 முதல் 31–03–2007 வரை வழங்கப்பட்ட மருத்துவ நிதியுதவி

01-04-2006-லிருந்து 31-03-2007 வரை தமிழ்நாடு மாநில நோயாளர் நிதியுதவி அமைப்பிலிருந்து 2,200 நபர்களுக்கு ரூ.5,41,20,000/- (ரூபாய் ஐந்து கோடியே நாற்பத்தியொரு இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) அனுமதிக்கப்பட்டுள்ளது. (1,971 இருதய அறுவை சிகிச்சைகள், 181 சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைகள், 23 புற்றுநோய் அறுவை சிகிச்சைகள், 7 முதுகுத் தண்டு வட அறுவை சிகிச்சைகள், 7 நரம்பு மண்டல அறுவை சிகிச்சைகள், 3 சிறுநீர் பாதை நோய் அறுவை சிகிச்சைகள், 3 பிளாஸ்டிக் அறுவை சிகிச்சைகள், 1 கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை, 3 இடுப்பு மூட்டை மாற்றி அமைத்தல் அறுவை சிகிச்சைகள் மற்றும் 1 முழங்கால் மூட்டு மாற்று அறுவை சிகிச்சை.)

## 01–04–2006 முதல் 31–03–2007 வரை வழங்கப்பட்ட கல்வி நிதியுதவி

2006-2007 ஆம் ஆண்டில் பொறியியல் மற்றும் மருத்துவக் கல்வி பயிலும் 105 ஏழை எளிய மாணவர்களுக்கு (90 பொறியியல் மற்றும் 15 மருத்துவக் கல்வி பயிலும் மாணவர்கள்) ரூ.26,25,000/- (ரூபாய் இருபத்தாறு இலட்சத்து, இருபத்தைந்தாயிரம் மட்டும்) முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து கல்வி உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளன.

## 4. நிர்வாக அமைப்பு

முதலமைச்சரின் தனிப் பிரிவின் நடைமுறைகளை நெறிமுறைப்படுத்தி நடத்திச் செல்லும் பொருட்டு இரண்டு மாவட்ட வருவாய் அலுவலர்கள் முறையே (1) தனி அலுவலர், முதலமைச்சரின் செயலகம் மற்றும் (2) தனி அலுவலர், முதலமைச்சரின் தனிப் பிரிவு, ஆகியோர் 29-05-2006 முதல் நியமிக்கப்பட்டுள்ளார்கள். முதலமைச்சரின் செயலக தனி அலுவலர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய முகாம் அலுவலகத்தில் வரப்பெறும் கோரிக்கை மனுக்களைக் கவனிப்பதோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சுற்றுப்பயணங்களிலும் கலந்து கொண்டு பொதுமக்களின் மனுக்களைப் பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்ள ஏற்பாடு செய்கிறார். முதலமைச்சரின் தனிப் பிரிவின் தனி அலுவலர் அவர்கள் தலைமைச் செயலகத்தில் உள்ள முதலமைச்சரின் தனிப் பிரிவில் அனைத்து அலுவல்களையும் கவனிப்பார்.

[2007 ஏப்ரல் 28

**5. புதிய முயற்சி—இணைய தள அடிப்படையிலான கணினித் தொடர்பு**

முதலமைச்சரின் தனிப் பிரிவு மற்றும் தலைமைச் செயலகத்தின் அனைத்துத் துறைகள், துறைத் தலைமை அலுவலகங்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்கள் ஆகியவற்றிற்கிடையே சரியான மற்றும் ஒருங்கிணைந்த தகவல் தொடர்பு, நவம்பர், 2006 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளது. மேற்கூறிய அலுவலகங்கள் முதலமைச்சரின் தனிப் பிரிவுடன் இணையதள வசதி மூலமாக இணைக்கப்பட்டு அதன் மூலமாக முதலமைச்சரின் தனிப் பிரிவின் மனுக்களுக்கான பதில்கள் அனுப்பப்படுகின்றன. 31-3-2007 வரை இவ்வசதி மூலம் 84,140 மனுக்களுக்கான பதில்கள் பெறப்பட்டுள்ளன.

**6. கணினி வசதியினை மேம்படுத்துதல்**

கணினி செயல்பாட்டில் அதிகரித்துள்ள வேலைப் பளுவினை எதிர்கொள்ளும் பொருட்டு மேம்படுத்தப்பட்ட திறன் கொண்ட இரு சர்வர்கள் (Servers) எல்காட் நிறுவனம் மூலம் ரூ.2,99,416/- செலவில் பெறப்பட்டு நிறுவப்பட்டுள்ளன.

**7. பொது**

முதலமைச்சரின் தனிப் பிரிவிற்கு வரும் பொதுமக்களின் வசதிக்காக மனுக்கள் பெறப்படும் இடம் மற்றும் அவர்கள் காத்திருக்கும் இடம் ஆகியவை போதிய இருக்கைகளுடனும், மேலும் மற்ற வசதிகளுடனும் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. இவ்வலுவலகத்தில் 1-4-2006 முதல் 31-3-2007 வரை 3,77,712 மனுக்கள் பெறப்பட்டு, நடவடிக்கை எடுக்கும்பொருட்டு உரிய அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இதே காலகட்டத்தில் மொத்தம் 2,45,543 பதிலறிக்கைகள் வரப்பெற்று மனுக்கள் முற்றாக்கப்பட்டுள்ளன. மேலும், 13-5-2006 முதல் 31-3-2007 வரை மாண்புமிகு அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோரிடமிருந்து 5,874 மனுக்கள் வரப்பெற்று, நடவடிக்கை எடுக்கும் பொருட்டு உரிய அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டு அவற்றில் 3,543 பதிலறிக்கைகள் வரப்பெற்று மனுக்கள் முற்றாக்கப்பட்டுள்ளன.



2007 ஏப்ரல் 28]

**5. 2007–2008 ஆம் ஆண்டிற்கான பகுதி II புதிய திட்டங்கள்**

1. அமைச்சர் அலுவலகங்களின் பயன்பாட்டிற்காக 33 கணினிகள், உதிரிப்பாகங்கள் மற்றும் பிரிண்டர்களும், இதைப்போன்று பொதுத் (மைய ஆவண பிரிவு) துறைக்கும் சேர்த்து ரூ.25.97 இலட்சம் செலவில் வாங்குதல்.

2. முன்னாள் படைவீரர் நல இயக்ககம் மற்றும் வேலூர் மாவட்ட அலுவலகத்தின் பயன்பாட்டிற்கென இரண்டு சர்வர்கள் மற்றும் பெரிஃபரல்கள் (Server with Peripherals) ரூ.2.50 இலட்சம் மதிப்பீட்டில் வழங்குதல்.

3. முன்னாள் படைவீரர் நல இயக்ககத்தின் பயன்பாட்டிற்காக ரூ.59,000/- மதிப்பில் ஒளி நகலி (Photo Copier) வாங்குதல்.

4. உதகமண்டலத்திலுள்ள 'தமிழகம்' விருந்தினர் இல்லம் மற்றும் பணியாளர் குடியிருப்புகளின் கட்டடம் மற்றும் மின் இணைப்புகளை (ரூ.54.41 + ரூ.2.76) ரூ.57.17 இலட்சத்தில் பழுது நீக்கி, புதுப்பித்தல்.

5. சென்னையிலுள்ள அரசு விருந்தினர் இல்லத்தின் பயன்பாட்டிற்காக மூன்று கணினிகள் மற்றும் அதன் தொடர்புடைய உபகரணங்கள் ஆகியவற்றை ரூ.1.01 இலட்சத்தில் வாங்குதல்.

6. சென்னையிலுள்ள அரசு விருந்தினர் இல்லத்தின் பயன்பாட்டிற்காக ஒரு டொயோட்டா கொராலா மற்றும் ஃபோர்டு ஐகான் அல்லது அதற்கு ஈடான சீருந்துகளை ரூ.17.00 இலட்சம் செலவில் வாங்குதல்.

7. சென்னையிலுள்ள அரசு விருந்தினர் இல்லத்தில் குளிர் சாதனப் பெட்டி, குளிர் நீர்ப் பெட்டி மற்றும் சமையலறை சாதனங்களை ரூ.60 ஆயிரம் செலவில் வாங்குதல்.

8. சென்னையிலுள்ள அரசு விருந்தினர் இல்லத்தின் பயன்பாட்டிற்காக ரூ.60 ஆயிரம் செலவில் 2 புதிய 1.5 டன் எடையுள்ள குளிர் சாதன இயந்திரங்கள் வாங்குதல்.

[2007 ஏப்ரல் 28

## 6. நிதி ஒதுக்கீட்டின் விவரங்கள்

மானியக் கோரிக்கை எண் 38-ன்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள விவரங்கள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

### இணைப்பு

### கோரிக்கை எண் 38-ன்கீழ் 2007-2008 ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கீட்டின் விவரங்கள்

| கணக்குத் தலைப்புகள் | (ரூபாய் ஆயிரத்தில்) | | | |
|---|---|---|---|---|
| | 2005-2006 | 2006-2007 | 2006-2007 | 2007-2008 |
| | கணக்குகள் | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | திருத்த மதிப்பீடு | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
| 2014 நீதி நிருவாகம் | 2,50 | 5,00 | 5,00 | 5,00 |
| 2015 தேர்தல்கள் | 38,92,13 | 95,56,58 | 106,24,60 | 38,83,96 |
| 2052 தலைமைச் செயலகம்– பொதுவான பணிகள் | 14,69,70 | 18,34,62 | 19,47,88 | 21,46,79 |
| 2059 பொதுப் பணிகள் | 2,45,13 | 3,85,41 | 4,85,41 | 3,56,41 |
| 2070 ஏனைய நிருவாகப் பணிகள் | 33,87,34 | 16,50,50 | 18,61,83 | 18,52,49 |
| 2075 பல்வகைப் பொதுவான பணிகள் | 4,10,31 | 4,11,14 | 4,49,44 | 2,95,84 |
| 2216 வீட்டு வசதி | 2,20 | 3,00 | 3,00 | 3,00 |
| 2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் | 22,67,54 | 48,41,63 | 56,96,55 | 48,81,74 |
| 2251 தலைமைச் செயலகம் – சமூகப் பணிகள் | 31,56 | 4,24 | 32,02 | 23,03 |
| 4070 ஏனைய நிருவாகப் பணிகள் குறித்த மூலதனச் செலவு | – | 1 | – | – |
| 4216 வீட்டு வசதி குறித்த மூலதனச் செலவு | – | – | 2,00,00 | 5,00,00 |



2007 ஏப்ரல் 28]

[2007 ஏப்ரல் 28

## இணைப்பு–II

(516 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 38–பொதுத் துறை (தேர்தல்கள்)

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2007–2008

தேர்தல்களுக்கான நிதி ஒதுக்கீடு 2015 என்ற தலைப்பின்கீழ் மானியக் கோரிக்கை எண் 38-ல் இடம் பெற்றுள்ளது. 1-1-2007 மற்றும் 1-1-2008 ஐத் தகுதி ஏற்படுத்தும் நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியல் திருத்தம் மேற்கொள்வதற்கும், தகுதி பெற்ற எஞ்சிய வாக்காளர்களுக்கு வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்குவதற்கும், புகைப்பட வாக்காளர் பட்டியல் தயாரிப்பதற்கும் மற்றும் தேர்தல் நிர்வாக அலுவலர் மற்றும் பணியாளர்களின் ஊதியம், பயணப்படிகள் போன்ற பிற செலவினங்களுக்கும் இம்மானியக் கோரிக்கையின்கீழ் 2007-2008 ஆம் நிதியாண்டின் செலவுகளுக்காக ரூ.38,83,96,000/- நிதி தேவைப்படுகிறது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கான 13-வது பொதுத் தேர்தல் 8-5-2006 அன்று நடைபெற்றது. தற்போது சட்டமன்றப் பேரவையில் 142. மதுரை மேற்கு சட்டமன்றத் தொகுதியில் காலியிடம் ஏற்பட்டுள்ளது. இடைத் தேர்தல் நடத்துவது குறித்து இந்தியத் தேர்தல் ஆணையம் முடிவெடுத்து உரிய நேரத்தில் அறிவிக்கும்.

தேர்தல்கள் என்பதன்கீழ் மானியக் கோரிக்கை எண் 38-ல் 2007-2008 ஆம் ஆண்டிற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள இனங்களுக்குச் செலவிடத் தேவைப்படும் தொகை ரூ.38,83,96,000/- (அனுமதிக்கப்பட வேண்டியது) ஆகும்.

### 2015. தேர்தல்கள் (ஐ. திட்டத்தில் சேராதது)

**102. தேர்தல் அதிகாரிகள்**

எஎ. சட்டப் பேரவை மற்றும் நாடாளுமன்றத் தொகுதிகள் — ரூ. 7,27,60,000/-



2007 ஏப்ரல் 28]

**103. வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து அச்சிடுதல்**

எஎ. சட்டப் பேரவைத் தொகுதிகள் — ரூ. 20,13,99,000/-

எடி. புகைப்பட வாக்காளர் பட்டியல் தயாரித்தல் — ரூ.5,00,00,000/-

**104. மக்களவைக்கும் மாநில சட்டப் பேரவைக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்**

எஎ. மக்களவைக்கும் மாநில சட்டப் பேரவைக்கும் ஒரே நேரத்தில் நடைபெறும் தேர்தல்கள் — ரூ. 29,13,000/-

**105. நாடாளுமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்**

எஎ. இடைத் தேர்தல்கள் — ரூ. 19,000/- (அடையாள ஒதுக்கீடு)

எபி. மக்களவைக்குத் தேர்தல் — ரூ. 25,000/- (அடையாள ஒதுக்கீடு)

**106. மாநில சட்டமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்**

எஎ. மாநில சட்டப் பேரவை — ரூ. 53,38,000/-

**108. வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகள் வழங்குதல்**

எஎ. வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகள் வழங்கும் திட்டம் — ரூ. 5,59,42,000/-

**மொத்தம் .. ரூ. 38,83,96,000**

மேற்சொன்ன இனங்களுக்கான மதிப்பீடுகள், கீழே விவரமாகக் கூறப்பட்டுள்ள பல்வேறு இனங்களுக்கான செலவு மேற்கொள்வதற்காகத் தேவைப்படுகின்றது:

[2007 ஏப்ரல் 28

## 102. தேர்தல் அதிகாரிகள்

**ஏஏ. சட்டப் பேரவை மற்றும் நாடாளுமன்றத் தொகுதிகள் மதிப்பீடு — ரூ.7,27,60,000/-**

*1950* ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் பிரிவு 13ஏ-ன்கீழ் ஒவ்வொரு மாநிலத்திலும் தலைமைத் தேர்தல் அதிகாரி பதவியில் ஒருவர் அம்மாநிலத்தின் அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் வாக்காளர் பட்டியல் தயாரித்தல்/இன்றைய நிலைக்கேற்ப இருத்தலைச் சரிபார்த்தல் மற்றும் நாடாளுமன்ற, சட்டமன்றத் தேர்தல்கள் நடத்துவது மற்றும் அதற்கான முன்னேற்பாடுகள் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொறுப்புகளைக் கவனிப்பார். மாநிலத் தலைமையகத்தில் தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு அலுவல் பணியில் உதவிபுரிய ஒரு இணைத் தலைமைத் தேர்தல் அதிகாரி (கணினிமயமாக்கல்) இணைச் செயலாளர் அந்தஸ்திலும், இரண்டு துணைத் தலைமைத் தேர்தல் அதிகாரிகள் துணைச் செயலர் அந்தஸ்திலும் உள்ளனர். சார்புச் செயலர் அந்தஸ்தில் ஒரு உதவித் தலைமைத் தேர்தல் அதிகாரியும் உள்ளார். பொது (தேர்தல்கள்) துறையில் ஆறு நிரந்தரப் பிரிவுகள் உள்ளன.

தேர்தல் நிர்வாகப் பணிகளில் தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு உதவி புரிய 1950 ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் பிரிவு 13ஏஏ-ன்படி அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் (சென்னையைத் தவிர) மாவட்டத் தேர்தல் அதிகாரிகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர். சென்னை மாவட்டத்திற்கு மாநகராட்சி ஆணையர் மாவட்டத் தேர்தல் அதிகாரியாக அறிவிக்கப்பட்டுள்ளார். ஊரகத் தொகுதிகளுக்கு வருவாய்க் கோட்ட அதிகாரிகள் தகுதியில் வாக்குப் பதிவு அதிகாரிகள் உள்ளனர். கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாநகராட்சித் தொகுதிகளுக்கு மாநகராட்சி ஆணையர்கள் வாக்குப்பதிவு அலுவலர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர். வட்டாட்சியர்கள் மற்றும் நகராட்சி ஆணையர்கள் உதவி வாக்குப் பதிவு அலுவலர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர். சென்னை நகரைப் பொறுத்தவரை, சென்னை மாநகராட்சியில் உள்ள பத்து மண்டல அதிகாரிகளும் அந்தந்த மண்டலங்களுக்கு வாக்குப் பதிவு அதிகாரிகளாகவும், உதவி வருவாய் அதிகாரிகள் உதவி வாக்குப் பதிவு அதிகாரிகளாகவும் அறிவிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவர்,



2007 ஏப்ரல் 28]

வருவாய்க் கோட்ட அலுவலர் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு ஒரு நிரந்தர உதவியாளர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. தேர்தல் பணிகளைக் கவனிக்க, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாநகராட்சி ஆணையர்களின் அலுவலகங்களில் ஒரு நிரந்தர உதவியாளர் பணியிடமும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சென்னை மாநகரைப் பொறுத்தமட்டில், சென்னை மாநகர ஆணையர் அலுவலகத்தில் மாவட்ட தேர்தல் அதிகாரிக்கு (சென்னை மாநகராட்சி ஆணையர்) உதவும் பொருட்டு ஒரு மாவட்ட வருவாய் அதிகாரி (தேர்தல்கள்) என்ற பதவி தற்காலிகப் பணியிடமாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. ஒரு வட்டாட்சியர், மூன்று உதவியாளர்கள், ஒரு இளநிலை உதவியாளர்-தட்டச்சர், ஒரு பதிவேடு எழுத்தர் மற்றும் ஒரு அலுவலக உதவியாளர் ஆகிய நிரந்தரப் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு, சென்னை மாநகர ஆணையர் அலுவலகத்தில் தேர்தல் சம்பந்தப்பட்ட பணிகளைக் கவனித்து வருகின்றனர்.

தேர்தல் பணிக்காகத் தோற்றுவிக்கப்பட்டுள்ள அதிகாரிகள் மற்றும் அலுவலர்களின் ஊதியச் செலவுகள், பயணச் செலவுகள், அலுவலகச் செலவினம், இதர செலவினம், தொலைபேசிக் கட்டணங்கள், இத்துணைக் கணக்குத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படுகிறது. இச்செலவினங்களில், *50* விழுக்காட்டினை மத்திய அரசு ஏற்றுக் கொள்கின்றது.

## 103. வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து அச்சிடுதல்

**ஏஏ. சட்டப் பேரவைத் தொகுதிகள் மதிப்பீடு — ரூ.20,13,99,000/-**

இம்மாநிலத்திலுள்ள அனைத்து சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து அச்சிடுவதற்கான எல்லாவிதமான செலவினங்களும் இத்துணைத் தலைப்பின்கீழ் கணக்கிடப்படும். இப்பணிக்காக, தற்காலிகமாக நியமிக்கப்படும் பணியாளர்களின் சம்பளம் மற்றும் படித் தொகைகள், எழுதுபொருள், அச்சிடும் செலவுகள் போன்றவையும் இத்துணைத் தலைப்பின்கீழ் அடங்கும். சென்னை ஆவணக் காப்பகத்தில் வாக்காளர் பட்டியல்களைப் பராமரிப்பதற்காக உள்ள நிரந்தர பணியிடங்களான ஒரு உதவியாளர், ஒரு பதிவேடு எழுத்தர் ஆகியோரின் செலவினங்களுக்கும் இத்துணைத் தலைப்பின்கீழ் நிதி ஒதுக்கீடு தேவைப்படுகிறது.

[2007 ஏப்ரல் 28

1950 ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 21-வது பிரிவின்படி, அனைத்து சட்டமன்றத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்கள் பொதுவாக ஒவ்வொரு வருடமும் ஜனவரி 1 ஆம் தேதியைத் தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதல் மற்றும் அறிவுரையின்படி திருத்தி அமைக்கப்படும்.

வாக்காளர் பட்டியல்கள் வாக்காளர் பதிவு அதிகாரிகளால் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உதவி வாக்காளர் பதிவு அதிகாரிகளின் உதவியுடன் தயாரிக்கப்பட்டு அவற்றில் திருத்தங்கள் செய்யப்படுகிறது. இந்திய தேர்தல் ஆணையத்தின் மேற்பார்வை, வழிகாட்டுதல் மற்றும் கட்டுப்பாட்டிற்குட்பட்டு தலைமைத் தேர்தல் அதிகாரியின் நேரடி மேற்பார்வையின்கீழ் மாவட்ட ஆட்சித் தலைவர்களும், சென்னை மாநகரைப் பொறுத்தமட்டில் சென்னை மாநகராட்சி ஆணையரும் வாக்காளர் பட்டியல் தயாரித்தல் மற்றும் திருத்துதல் பணிகளைக் கண்காணித்து வருகின்றனர்.

இந்தியத் தேர்தல் ஆணையம், தேர்தல்கள் நியாயமாகவும், நேர்மையாகவும் நடைபெறுவதை உறுதி செய்வதற்காக வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்யும் பொறுப்புகளை மேம்படுத்த பெருமுயற்சி எடுத்து வருகிறது. அதன்படி, வாக்காளர் பட்டியல்கள் கணினிமயமாக்கலைத் தொடர்ந்து, வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டு, அந்நடவடிக்கையின் தொடர்ச்சியாக இந்தியத் தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி புகைப்பட வாக்காளர் பட்டியல்கள் தயாரிக்கப்படவுள்ளன. இந்திய தேர்தல் ஆணையம் 2009 ஆம் ஆண்டு நடைபெறவிருக்கின்ற நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் புகைப்பட வாக்காளர் பட்டியல்தான் பயன்படுத்த வேண்டும் என்று ஆணையிட்டுள்ளது.

இந்திய தேர்தல் ஆணையம் வாக்காளர் பட்டியல் திருத்தத்திற்கு 1-1-2007-ஐ தகுதியேற்படுத்தும் நாளாக அறிவித்துள்ளது. 2007 ஆம் ஆண்டிற்கான சுருக்கத் திருத்தத்தின்படி வெளியிடப்படும் வரைவுப் பட்டியல்கள் புகைப்பட வாக்காளர் பட்டியலாக இருக்கும். எனவே, வாக்காளர் பட்டியல் தயாரிப்பதற்காக நியமனம் செய்யப்பட்ட சிறப்புப் பணியாளர்களை 31-5-2007-க்குப் பிறகும் நீட்டிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. 2007 ஆம் ஆண்டிற்கான சுருக்கமுறை திருத்தத்தின் அட்டவணை பின்வருமாறு:—



2007 ஏப்ரல் 28]

142. மதுரை மேற்கு சட்டமன்றத் தொகுதியில் காலியிடம் ஏற்பட்டுள்ளது. இத்தொகுதிக்கான வரைவு புகைப்பட வாக்காளர் பட்டியல் 26-3-2007 அன்று வெளியிடப்பட்டது. இதற்கான இறுதி புகைப்பட வாக்காளர் பட்டியல் 30-4-2007 அன்று வெளியிடப்படும்.

ஏனைய 233 சட்டமன்றப் பேரவை தொகுதிகளுக்கான வரைவு புகைப்பட வாக்காளர் பட்டியல் 10-5-2007 அன்றும், இறுதி புகைப்பட வாக்காளர் பட்டியல் 25-6-2007 அன்றும் வெளியிடப்படும்.

மேற்கூறிய வாக்காளர் பட்டியல் சுருக்கத் திருத்தம், 2007-க்காக இத்துணைக் கணக்குத் தலைப்பின்கீழ் புகைப்பட வாக்காளர் வரைவு பட்டியல் மற்றும் இறுதி பட்டியல் அச்சிடுதல், கணினியில் விவரங்களைப் பதிவு செய்தல், பணியாளர் ஊதியம், பயணப் படிகள் முதலியவற்றிற்கான செலவினங்களை மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு தேவைப்படுகின்றது. இந்தச் செலவினத்தில் 50 விழுக்காட்டினை இந்திய அரசு பகிர்ந்துகொள்ளும்.

**கணினி கட்டமைப்பு**

கடந்த சில வருடங்களாக இந்தியத் தேர்தல் ஆணையம் தேர்தல் நிர்வாகம் மற்றும் மேலாண்மைக்காக தகவல் தொழில்நுட்பக் கணினியில் உள் மற்றும் வெளிப்பயன்பாடு மற்றும் இது தொடர்பான தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி வருகிறது. தேவையான கணினி கட்டமைப்புகளான 5 கணினி மற்றும் 1 சர்வர் வீதம் 30 மாவட்ட தேர்தல் அதிகாரிகளின் அலுவலகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. தலைமைத் தேர்தல் அலுவலரது அலுவலகத்திற்கு 1 செர்வர் மற்றும் 14 கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. "சி.எம்.சி. லிமிடெட்" எனும் நிறுவனம், மாநில அளவிலான முகவராக தேர்தல் நிர்வாகம் மற்றும் மேலாண்மையில் கணினி தொழில்நுட்பப் பணிகளை மேற்கொள்ளவும், மாநில தேர்தல் இயந்திரத்தை வழிநடத்தவும் நியமனம் செய்யப்பட்டுள்ளது. அனைத்து மாவட்டங்களிலும் கணினி தொடர்பான பணிகளை மேற்கொள்ளத் தேவையான தொழில் நுட்பப் பணியாளர்களை இந்நிறுவனம் அமர்த்தியுள்ளது.

மேற்சொன்ன மாநில முகவரான சி.எம்.சி கணினி தொழில் நுட்பப் பணியாளர்களுக்கான சம்பளம் மற்றும் தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகம், 30 மாவட்ட தேர்தல் அதிகாரிகளின் அலுவலகத்தின் கணினி பராமரிப்பு, கணினி உதிரி பாகங்களுக்கான செலவுகள், கணினி வன்பொருள்/மென்பொருள், வருடாந்திரப் பராமரிப்புச்

[2007 ஏப்ரல் 28

செலவினம் ஆகியவை இத்துணைத் தலைப்பின்கீழ் செலவிடப்படும். 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.5.58 கோடி செலவில் தலைமைத் தேர்தல் அதிகாரி/மாவட்ட தேர்தல் அதிகாரிகளின் அலுவலகங்களில் கணினி முனையங்கள் மேம்படுத்துதல் மற்றும் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் நிரந்தர புகைப்பட மையம் நிறுவுதல் ஆகியவை மேற்கொள்ளப்படும். இதில் 50 விழுக்காடு செலவினம் இந்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

**103. ஏடி. புகைப்பட வாக்காளர் பட்டியல் தயாரித்தல்**

**மதிப்பீடு — ரூ. 5,00,00,000/–**

மேற்சொன்னபடி, புகைப்பட வாக்காளர் பட்டியல் இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுரைகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளின்படி தயாரிக்கப்பட்டு வருகிறது.

புகைப்பட வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் வழிமுறை யாதெனில் ஏற்கெனவே கணினியில் உள்ள புகைப்படத்தையும் புகைப்படம் எடுக்காமல் விடுபட்ட வாக்காளர்களின் புகைப்படத்தையும் கணினியிலுள்ள வாக்காளர்களின் விவரப் பதிவுகளோடு ஒன்றிணைத்து, புகைப்பட வாக்காளர் சரிபார்ப்புப் பட்டியல்கள் தயாரித்து கள ஆய்வு மேற்கொள்ளுதல் ஆகும். புகைப்பட வாக்காளர் சரிபார்ப்புப் பட்டியல் மற்றும் லேசர் அச்சு மூலம் மூலப் பிரதி எடுத்தலுக்கான செலவினம் ஆகியவற்றிற்கு நிதி ஒதுக்கீடு தேவைப்படுகிறது. டிஜிட்டல் புகைப்படக் கருவி மூலம் புகைப்படம் எடுத்தலுக்கான செலவினம் புகைப்பட வாக்காளர் அடையாள அட்டை தயாரிப்பிற்கான செலவினத்தில் கணக்கில் கொள்ளப்படும்.

**104. மக்களவைக்கும் மாநில சட்டப் பேரவைக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்**

**எஎ. மக்களவைக்கும் மாநில சட்டப் பேரவைக்கும், ஒரே நேரத்தில் நடைபெறும் தேர்தல்கள்**

**மதிப்பீடு — ரூ.29,13,000/–**

மக்களவைக்கும் மாநில சட்டப் பேரவைக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடைபெறும்போது ஏற்படும் செலவினங்கள் அனைத்தும் இந்தத் துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படுகிறது. தொடர் செலவினமான தேர்தல் பொருட்கள் மற்றும் மின்னணு வாக்குப்



2007 ஏப்ரல் 28]

பதிவு இயந்திரங்களை வைப்பதற்கான கட்டடங்களின் வாடகை, வாக்குப் பெட்டிகளைப் பராமரிக்கும் செலவுகள், வாகன எரிபொருள் செலவினங்கள் மற்றும் பொது (தேர்தல்கள்) துறையின் வாகனங்களின் பராமரிப்புச் செலவுகள் ஆகியவையும் இந்தத் துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும்.

மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள், வாக்குப் பெட்டிகள் மற்றும் வாக்குப் பதிவுக்குரிய உபகரணங்கள் ஆகியவை வேலூர், கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களிலுள்ள தனியார் கிடங்குகளிலும், விருத்தாசலம், விழுப்புரம், மதுராந்தகம் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய இடங்களிலுள்ள தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு கழகக் கிடங்குகளிலும் வைக்கப்பட்டுள்ளன. தனியார் கிடங்குகள் மற்றும் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு கழக நிறுவனத்திற்கு வாடகைக் கட்டணம் வழங்குதல் மற்றும் தேர்தல் பொருட்கள் வாங்குதல் ஆகியவை மேற்கண்ட துணைத் தலைப்பின்கீழ் செலவிடப்படும். இச்செலவினங்களில் 50 விழுக்காட்டினை மைய அரசு ஏற்றுக்கொள்கிறது.

**105. நாடாளுமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்**

**எஎ. இடைத் தேர்தல்கள் — ரூ.19,000/–**
**(அடையாள ஒதுக்கீடு)**

மக்களவைத் தொகுதிகளில் இடைத் தேர்தல்கள் நடைபெற்றால் அதற்காகும் அனைத்துச் செலவினங்களும் இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். நாடாளுமன்றத்தில் தமிழகத்திள்ள தொகுதிகளில் காலியிடம் ஏதுமில்லாததால் இத்தலைப்பின்கீழ் வெறும் அடையாள நிதி ஒதுக்கீடு மட்டுமே செய்யப்பட்டுள்ளது. இச்செலவினங்கள் அனைத்தையும் மைய அரசே ஏற்றுக் கொள்கிறது.

**எபி. மக்களவைக்குத் தேர்தல் — ரூ.25,000/–**
**(அடையாள ஒதுக்கீடு)**

மக்களவைக்கு மட்டும் பொதுத் தேர்தல்கள் நடைபெறும்போது அதற்கான செலவினங்கள் எல்லாம் முதலில் இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்பட்டு பின்னர் மைய அரசிடமிருந்து முழுமையாகப் பெறப்படும். 14-வது மக்களவைக்குப் பொதுத் தேர்தல்கள் 10-5-2004 அன்று நடைபெற்றது. மக்களவைக்கான அடுத்த பொதுத் தேர்தலுக்கு மே மாதம் 2009 வரை கால அவகாசம்

உள்ளதால், வெறும் அடையாள நிதி ஒதுக்கீடு மட்டுமே இந்தத் துணைத் தலைப்பின்கீழ் செய்யப்பட்டுள்ளது.

இச்செலவினங்கள் அனைத்தையும் மைய அரசே ஏற்றுக்கொள்கிறது.

**106. மாநில சட்டமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்**

**஌஌. மாநில சட்டப் பேரவை**

**மதிப்பீடு — ரூ.53,38,000/–**

மாநில சட்டமன்றப் பேரவைக்கு பொதுத் தேர்தலோ அல்லது இடைத் தேர்தலோ நடைபெற்றால் அதன் தொடர்பான செலவினங்கள் இந்தத் துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும்.

தற்பொழுது 142-மதுரை மேற்கு சட்டமன்றத் தொகுதியில் காலியிடம் ஏற்பட்டுள்ளது. இடைத் தேர்தல் நடத்துவது குறித்து இந்திய தேர்தல் ஆணையம் உரிய நேரத்தில் முடிவெடுக்கும்.

**நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தொகுதிகளின் எல்லை மறுவரையறை**

2001 ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 84-வது திருத்தத்தின்படி (21-2-2002-ல் அறிவிக்கப்பட்டது). அரசியலைப்புச் சட்டத்தின் 81, 82, 17, 330 மற்றும் 332-வது ஷரத்துக்களின் திருத்தங்களுக்கேற்ப, எல்லை மறுவரையறை சட்டம், 2002, நாடாளுமன்றத்தில், நிறைவேற்றப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் 3-வது பிரிவிற்கேற்ப எல்லை மறுவரையறை ஆணையம் அமைக்கப்பட்டு 4-7-2002 முதல் எல்லை மறுவரையறை ஆணையம் செயல்பட்டு வருகிறது. ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி ஜஸ்டிஸ் திரு. குல்தீப் சிங் அவர்கள் இவ்வாணையத்தின் தலைவராகவும், இந்திய தேர்தல் ஆணையத்தின் முதன்மை தேர்தல் ஆணையர் மற்றும் அந்தந்த மாநில தேர்தல் ஆணையர்கள் அலுவல் சாரா உறுப்பினர்களாவும் உள்ளனர். ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 5 மக்களவை உறுப்பினர்களும் அம்மாநில சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 5 சட்டமன்ற உறுப்பினர்களும் ஒருங்கிணைப்பு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த ஒருங்கிணைப்பு உறுப்பினர்களுக்கு வாக்களிக்கும் உரிமையில்லை. ஆயினும், மறுவரையறை குறித்து இவர்களிடம் மறுவரையறை ஆணையம் கலந்தாலோசிக்கும்.



எல்லை மறுவரையறை சட்டம், 2002 பிரிவு 9-ன்கீழ் உள்ள காப்புரைகளின்படி மாநிலத்திலுள்ள மொத்த மக்கள்தொகையுடன் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் மக்கள்தொகை விழுக்காட்டை ஒப்பிடுகையில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினரின் விழுக்காடு அதிகமாக உள்ள தொகுதிகள் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும்.

2001 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில், மாவட்ட தேர்தல் அதிகாரிகளிடமிருந்து வரப்பெற்ற மக்கள்தொகை விவரம் மற்றும் மாநில, மாவட்ட வரைபடங்கள் ஆகியவை எல்லை மறுவரையறை ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன. எல்லை மறுவரையறை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள மக்களவை மற்றும் சட்டமன்றத் தொகுதிகளுக்கான எல்லைகளையும், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட வேண்டிய தொகுதிகளையும் நிர்ணயம் செய்வதை விளக்கும் கருத்துரு ஒன்றை எல்லை மறுவரையறை ஆணையம் தயாரித்தது. இதுகுறித்து ஒருங்கிணைப்பு உறுப்பினர்களுடன் பல கூட்டங்கள் நடத்தி விவாதித்துள்ளது. எல்லை மறுவரையறை ஆணையத்தால் தயாரிக்கப்பட்ட வரைவு கருத்துரு 5-4-2007 அன்று இந்திய அரசின் சிறப்பரசிதழிலும், தமிழ்நாடு மாநில சிறப்பரசிதழிலும் வெளியிடப்பட்டது. வரைவு கருத்துருக்களின்மீது பொது மக்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் மறுப்புரை மற்றும் கருத்துகள் 18-4-2007 வரை வரவேற்கப்பட்டது. எல்லை மறுவரையறை ஆணையத்தால் வெளியிடப்பட்ட வரைவு கருத்துருக்களின்படி, தமிழ்நாட்டுக்கு ஒதுக்கப்பட்டுள்ள 39 நாடாளுமன்றத் தொகுதிகளும், 234 சட்டமன்றத் தொகுதிகளும் மொத்த எண்ணிக்கையில் மாறாமல் இருக்கிறது. தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கான சட்டமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கை 42-லிருந்து 44 ஆக உயர்ந்துள்ளது. அதே சமயம், பழங்குடியினருக்கான தொகுதிகளின் எண்ணிக்கை 3-லிருந்து 2 ஆகக் குறைந்துள்ளது. தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு ஒதுக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கை 7 ஆகும்.

வரைவு கருத்துருக்களின்மீது பொது மக்கள் மற்றும் அரசியல் கட்சிகளிடமிருந்து வரப்பெற்ற ஆட்சேபனைகள்/ஆலோசனைகளை ஆய்வு செய்வதற்காக எல்லை மறுவரையறை ஆணையம் கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் சென்னை ஆகிய நான்கு இடங்களில் 17-5-2007 முதல் 22-5-2007 வரை பொது மக்களுடன் கலந்தாய்வு மேற்கொள்ள முடிவெடுத்துள்ளது.

இக்கலந்தாய்வில் எழுத்து மூலமாகவும் வாய்மொழி மூலமாகவும் பெறப்படும் அனைத்து ஆலோசனைகளையும் ஆய்வு செய்து வரைவு கருத்துருக்களில் மாற்றம் செய்து இறுதி ஆணை தயாரிப்பதற்காக எல்லை மறுவரையறை ஆணையம் ஒருங்கிணைப்பு உறுப்பினர்களுடன் ஒரு கூட்டம் நடத்தும். எல்லை மறுவரையறை ஆணையத்தின் இறுதி ஆணை இந்திய அரசிதழ் மற்றும் மாநில அரசிதழில் அறிவிக்கை செய்யப்படும். பிறகு இந்த ஆணையை எந்தநாள் முதல் அமல் செய்யலாம் என்பது குறித்து அறிவிக்கை செய்ய இந்திய குடியரசுத் தலைவர் கேட்டுக்கொள்ளப்படுவார்.

எல்லை மறுவரையறை தொடர்புடைய பணிகளுக்கான எழுதுபொருள், அதிகாரிகள் மற்றும் அலுவலர்களுக்கான போக்குவரத்துச் செலவு, மாவட்ட/வட்டாட்சி வரைபடங்கள் தயாரிப்பிற்கான செலவு, கூட்டங்களுக்கான விளம்பர வெளியீட்டுச் செலவு முதலிய செலவினங்கள் அனைத்தையும் இந்தக் கணக்குத் தலைப்பின்கீழ் மாநில அரசு மேற்கொள்ளும்.

**108. வாக்காளர்களுக்கு புகைப்பட அடையாள அட்டை வழங்குதல்**

**எஎ. வாக்காளர் புகைப்பட அடையாளஅட்டை வழங்கும் திட்டம்**

**மதிப்பீடு — ரூ.5,59,42,000/-**

நாடாளுமன்றப் பொதுத் தேர்தல்கள்/சட்டமன்றப் பேரவைக்கான பொதுத் தேர்தல்கள் மற்றும் இடைத் தேர்தல்களில் வாக்களிப்பதற்கு புகைப்பட வாக்காளர் அடையாள அட்டை அவசியம் என இந்திய தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது. வாக்காளர்களுக்கு புகைப்பட அடையாள அட்டை வழங்கும் திட்டத்தை அமல்படுத்த இந்தியத் தேர்தல் ஆணையம் விரிவான வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது. தமிழ்நாட்டில் புகைப்பட வாக்காளர் அடையாள அட்டை வழங்கும் திட்டம் 4 கட்டங்களாக செயல்படுத்தப் பட்டுள்ளது. முதல் கட்டமாக 1996-1998 ஆம் ஆண்டும், இரண்டாம் கட்டமாக 2000-2001 ஆம் ஆண்டு சட்டமன்றப் பேரவைத் தேர்தலுக்கு முன்னதாகவும், மூன்றாம் கட்டமாக 2002-2003 ஆம் ஆண்டிலும், நான்காம் கட்டமாக பிப்ரவரி 2006 அதாவது தமிழக சட்டமன்றப் பேரவை தேர்தலுக்கு முன்னதாகவும் மேற்கொள்ளப்பட்டது.

இம்மாநிலத்தில், நான்கு கட்டப் பணிகளுக்குப் பிறகு தற்போது 3.50 கோடி வாக்காளர்களுக்கு புகைப்பட அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. ஜூலை 2006 முதல் புகைப்பட வாக்காளர்





பட்டியல் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மீதமுள்ள வாக்காளர்களின் புகைப்படம் எடுத்து வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை தயாரிக்க வேண்டும். வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையில் தவறுகளை சரி செய்யவும், இடம் பெயர்ந்து செல்பவர்களுக்கு முகவரி மாற்றம் செய்து, புகைப்பட அடையாள அட்டை வழங்கவும் நீண்ட கால ஏற்பாடாக ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் ஒரு வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை எடுக்கும் மையம் நிரந்தரமாக நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கணக்குத் தலைப்பின்கீழ் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை தயாரிப்பு மற்றும் முந்தைய தயாரிப்புகளுக்கான நிலுவைத் தொகை ஆகிய செலவினங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இச்செலவினத்தில் 50 சதவிகிதத்தை இந்திய அரசே ஏற்றுக்கொள்ளும்.

[2007 ஏப்ரல் 28

## இணைப்பு—III

*(516 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

### மானியக் கோரிக்கை எண் 46—தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)

### கொள்கை விளக்கக் குறிப்பு, 2007—2008

*திங்களொடும் செழும்பரிதி தன்னோடும்*
*விண்ணோடும் உடுக்க ளோடும்*
*மங்குல் கடல் இவற்றோடும் பிறந்த*
*தமிழுடன் பிறந்தோம் நாங்கள்*

என்றார் பாவேந்தர் பாரதிதாசன்.

*தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா*

என்றார் நாமக்கல் கவிஞர்.

கிரேக்கம், இலத்தீன், எபிரேயம், சீனம், அரேபியம் எனும் உலகச் செம்மொழிகளுக்கு இணையாகத் தொன்மையும் இன்றுவரை பயன்பாட்டு நிலையில் தொடர்ச்சியை உடைய சிறப்பும் பெற்றிருக்கும் மொழி தமிழ். பல்வேறு செம்மொழிகள் வழக்கொழிந்த நிலையில், வாழும் மொழிகளில் ஒன்றாகத் தமிழ்மொழி திகழ்வது பெருமைக்குரியது. பரிதிமாற் கலைஞர் தொடங்கிவைத்துத் தொடர்ந்து வந்த செம்மொழித் தமிழுக்கான கோரிக்கை, இப்போது நமது பெருமுயற்சியால் நிறைவேறியுள்ளது. இந்திய மொழிகளிலேயே செம்மொழித் தகுதியுடைய முதல் மொழியாக இந்திய அரசின் ஏற்பினை தமிழ் மொழி பெற்றுள்ளது பெருமைக்குரியது.

மக்களிடம் அறிவுச் சுடர் பரவவும், மனதில் பண்பாட்டுச் சுடர் விரியவும், தமிழ்மொழி காத்தல், தமிழ்க் கல்வியைப் பரப்புதல், தமிழறிஞர்களைப் போற்றுதல், ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளுதல், கருத்தரங்குகள்—ஆய்வரங்குகள்—மாநாடுகள் நடத்துதல், நூல்கள் வெளியிடுதல், பரிசும் பாராட்டும் வழங்கி ஊக்கப்படுத்துதல், தமிழறிஞர்களின் இலக்கிய நூல்களை நாட்டுடைமையாக்கல், வாழ்வியல் ஆதாரமின்றி வாழும் தமிழ்ச்



2007 ஏப்ரல் 28]

சான்றோர்களுக்கு நிதியுதவி அளித்தல் போன்ற வகையில் தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சிப் பணிகளைச் செவ்வனே ஆற்றி வருகிறது.

## தமிழ் வளர்ச்சி இயக்ககம்

தமிழ் வளர்ச்சி இயக்ககம் இரு பெரும் பணிகளை ஆற்றி வருகிறது. அவை 1. ஆட்சிமொழிச் செயலாக்கம். 2. தமிழ் வளர்ச்சி.

### ஆட்சிமொழிச் செயலாக்கம்

#### ஆய்வுப் பணி

பொது மக்கள் நலனுக்காகவே நடைபெறும் அரசு நிருவாகம் மக்களுக்குரிய மொழியில் நடைபெறவேண்டித் தமிழ்நாடு சட்ட மன்றத்தில் 1956 ஆம் ஆண்டில் ஆட்சிமொழிச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் ஆட்சிமொழி தமிழ் எனும் இச்சட்டத்தைச் செயற்படுத்தும்வகையில் அரசு பல்வேறு அரசாணைகளை வெளியிட்டுள்ளது. இவற்றிற்கிணங்க அரசு அலுவலகங்களில் ஆட்சிமொழியாகத் தமிழ் பயன்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளைத் தமிழ் வளர்ச்சித் துறை மேற்கொண்டு வருகிறது. இவற்றுள் மிகவும் குறிப்பிடத்தக்கது ஆட்சிமொழிச் செயலாக்க ஆய்வுப் பணியாகும். இதன் தொடர்பில் தலைமைச் செயலகத் துறைகள், துறைச் செயலாளராலும், இயக்குநராலும் ஆய்வு செய்யப்படுகின்றன. துறைத் தலைமை அலுவலகங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், தமிழ் வளர்ச்சி இயக்குநராலும் மண்டல/மாவட்டச் சார்நிலை அலுவலகங்கள், தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர்கள் மற்றும் உதவி இயக்குநர்களாலும் ஆய்வு செய்யப்படுகின்றன.

#### பயிற்சி வகுப்புகள்

அரசு நிருவாகத்தில் ஆட்சிமொழியாகத் தமிழ் சிறப்பாகப் பயன்படுத்தப்பட வேண்டியதைக் கருத்தில் கொண்டு, ஒவ்வொரு துறையிலிருந்தும் பணியாளர்களை அழைத்து அவர்களுக்குத் தமிழ் வளர்ச்சி இயக்ககத்தில் ஆட்சிமொழிச் செயலாக்கம் பற்றிய பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு அணியினருக்கும் இவ்வகையில் இரண்டு நாள் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும் பவானிசாகரில் அரசு அலுவலர்களுக்கு அளிக்கப்படும் நிருவாக நடைமுறைப் பயிற்சியின்போதும், பல்வேறு துறைகள் தம்

[2007 ஏப்ரல் 28

பணியாளர்களுக்கு அளிக்கும் புத்தாக்கப் பயிற்சியின்போதும் இத்துறை அலுவலர்கள் சென்று ஆட்சிமொழித் திட்டப் பயிற்சி அளிக்கின்றனர்.

தமிழ் வளர்ச்சி இயக்ககத்தில் ஆட்சி மொழிச் செயலாக்கப் பயிற்சி பெற வரும் பணியாளர்களின் நலன் கருதி 2006-2007 ஆம் ஆண்டில் ரூ.1.64 இலட்சம் செலவில் தளவாடங்கள் வாங்கப்பட்டுள்ளன.

**ஆட்சிமொழிக் கருத்தரங்குகள்**

ஆண்டுதோறும் மாவட்டங்களில் சுழற்சி முறையில் ஆட்சிமொழிக் கருத்தரங்குகள் நடத்தப்பெறுகின்றன. திருச்சிராப்பள்ளி, காஞ்சிபுரம், புதுக்கோட்டை, சிவகங்கை, கோயம்புத்தூர், தருமபுரி, திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் ஆட்சிமொழிக் கருத்தரங்குகள் 2006-2007 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டுள்ளன. ஆட்சிமொழித் திட்டம் தொடர்பான கருத்துக்கள் இக்கருத்தரங்குகளில் எடுத்துரைக்கப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. கருத்தரங்குடன் பணியாளர்களுக்கு ஆட்சிமொழிப் பயிலரங்கமும் நடத்தப்படுகிறது. அந்தந்த மாவட்டத்திலுள்ள அரசுப் பணியாளர்கள் இப்பயிலரங்கில் கலந்து கொண்டு பயிற்சி பெறுகின்றனர்.

**ஆட்சிச் சொல்லகராதி**

அரசு அலுவலகங்களில் தமிழ் பயன்படுத்தப்படுவதற்கு ஆட்சிச் சொல்லகராதி நூல்கள் மிகவும் இன்றியமையாதவை. எனவே, ஆங்கிலத்தில் உள்ள ஆட்சிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களைக் கொண்ட ஆட்சிச் சொல்லகராதி நூல்கள் அரசு அலுவலகங்களுக்கு இத்துறையால் வழங்கப்படுகின்றன.

**மொழிபெயர்ப்பு**

ஆட்சிமொழிச் செயலாக்கத்தில் மொழிபெயர்ப்புப் பணி பெரும் பங்கு வகிக்கிறது. இவ்வகையில் அலுவலர்கள்/பணியாளர்கள் ஆகியோருக்கு உதவும் வகையில் விதிகள், விதித் தொகுப்புகள் நடைமுறை நூல்கள், படிவங்கள், பதிவேடுகள் முதலியன இத்துறையால் தமிழில் மொழிபெயர்ப்பு செய்து அளிக்கப்படுகின்றன.



2007 ஏப்ரல் 28]

**சொல் வங்கி**

தமிழ்மொழிப் பயன்பாட்டில் இருந்து வரும் பிற மொழிச் சொற்களுக்கும், வளர்ந்து வரும் தேவைக்கேற்ப அவ்வப்போது புழக்கத்திற்கு வரும் பிற மொழிச் சொற்களுக்கும் இணையான தமிழ்ச் சொற்களைக் கண்டறியவும் உருவாக்கவும் தமிழ் வளர்ச்சி இயக்ககத்தில் திங்கள்தோறும் சொல்வங்கிக் கூட்டம் நடைபெறுகிறது. தமிழறிஞர்கள், அலுவலர்கள், ஊடகத்தார் முதலியோர் கூடிப் புதிய தமிழ்ச் சொற்களை உருவாக்குகின்றனர். இச்சொற்கள் அரசு அலுவலகங்கள்/பொதுமக்கள்/ஊடகங்கள் பயன்பாட்டிற்கு அளிக்கப்படுகின்றன.

**கேடயம், பரிசு**

தமிழைச் சிறப்பாகப் பயன்படுத்தும் அலுவலகங்களை ஊக்குவிக்கும் நோக்கில் ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கத்தில் சிறந்து விளங்கும் துறைத் தலைமை அலுவலகம் ஒன்றிற்கும், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் ஒன்றிற்கும், தன்னாட்சி நிறுவனத் தலைமை அலுவலகம் ஒன்றிற்கும், ஒவ்வொரு மாவட்டத்திலுள்ள மாவட்ட நிலை அலுவலகம் ஒன்றிற்கும் கேடயங்கள் வழங்கப்பெறுகின்றன. தமிழில் சிறந்த குறிப்புகளையும் வரைவுகளையும் எழுதும் பணியாளர்களை ஆண்டுதோறும் தெரிவு செய்து அவர்களுக்குப் பணப் பரிசும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பெறுகின்றன. மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் பின்வரும் ஏழு பிரிவிலான அலுவலகங்களின் பணியாளர்களில் ஒவ்வொரு பிரிவுப் பணியாளர்களுக்கும் மூன்று பரிசுகள் வழங்கப்படுகின்றன. முதற்பரிசு ரூ.500/-, இரண்டாம் பரிசு ரூ.300/- மூன்றாம் பரிசு ரூ.200/- ஆக வழங்கப்பெறுகிறது.

**மாநில அளவில்**

1. தலைமைச் செயலகத் துறைகள்
2. துறைத் தலைமை அலுவலகங்கள்
3. தன்னாட்சி நிறுவனத் தலைமை அலுவலகங்கள்

**மாவட்ட அளவில்**

1. மாவட்ட நிலை அலுவலகங்கள்
2. சார்நிலை அலுவலகங்கள்
3. உள்ளாட்சித் துறையின் சார்நிலை அலுவலகங்கள்
4. தன்னாட்சி நிறுவனச் சார்நிலை அலுவலகங்கள்

**தமிழ் வளர்ச்சி**

சமுதாயத்தின் தேவைகள் பெருகப் பெருக அவற்றிற்கு ஈடுகொடுக்கும் வகையில் பயன்பாட்டு அடிப்படையில் மொழியும் வளர்ந்தாக வேண்டும். அப்போதுதான் மக்கள் மொழியால் பயன்பெறமுடியும். எனவே, ஆட்சிமொழிச் செயலாக்கப் பணியுடன் தமிழ் வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டும் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இன்றியமையாப் பணிகள் சில:

**நூல் வெளியிட நிதியுதவி**

ஒரு மொழியில் நூல்கள் எந்த அளவு வெளிவருகின்றனவோ அந்த அளவு மொழி வளம் பெறுகிறது எனலாம். எனவே, தமிழ் மொழியை வளப்படுத்தும் நோக்கில் நூல்கள் வெளிவருவதற்கு நிதியுதவிகள் வழங்கப்படுகின்றன. இவ்வகையில் ஒவ்வொரு நூலிற்கும் அச்சுச் செலவினடிப்படையில் ரூ.25,000/- வரை நிதியுதவி அளிக்கப்படுகிறது.

2006-2007 ஆம் ஆண்டிற்கு ரூ.5.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 29 நூல்களை வெளியிட நிதியுதவியாக ரூ.4,70,000/- ஒப்பளிப்பு செய்து வழங்கப்பட்டுள்ளது.

**நட்சத்திர உணவு விடுதிகளில் திருக்குறள் நூல்**

அரசு விருந்தினர் இல்லங்கள் மற்றும் தனியார் நட்சத்திர உணவு விடுதிகளின் அறைகளில் ஆங்கில மொழியாக்கத்துடன் கூடிய திருக்குறள் நூல் இடம் பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கென்று ஒரு இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு பெறப்பட்டு நூல் அச்சுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**சிறந்த நூல்களுக்குப் பரிசு**

நூல்களின் இன்றியமையாமையைக் கருத்திற்கொண்டும், அவை பெருமளவில்வெளிவருவதை ஊக்கப்படுத்தும் நோக்கிலும் சிறந்த



நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம் செயற்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஆண்டும் 31 வகைப்பாடுகளில் வெளிவரும் நூல்களில் ஒவ்வொரு வகைப்பாட்டிலும் ஒரு சிறந்த நூல் தேர்ந்தெடுக்கப்பட்டு அதனை எழுதிய நூலாசிரியர்க்கு ரூ.10,000/- பரிசும் அந்நூலைப் பதிப்பித்த பதிப்பகத்தாருக்கு ரூ.2,000/- பரிசும் வழங்கப்படுகின்றன. பரிசுடன் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படுகிறது. 2006-2007-ல் போட்டிக்கு வரப்பெற்ற நூல்களுள் சிறந்த நூல்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு நூலாசிரியர்களுக்கும் அவற்றைப் பதிப்பித்த பதிப்பகத்தாருக்கும் ரூ.3,42,000/- பரிசுத் தொகை வழங்கப்பட்டது.

**அகவை முதிர்ந்த தமிழறிஞர் நிதியுதவி**

தமிழுக்குப் பணியாற்றும் சான்றோர்கள் வயதான நிலையில் வசதியின்றி வாழும் நிலை மாற்றப்படுவதற்குரியதாகும். எனவே, 58 வயது நிறைந்தும் ஆண்டு வருமானம் ரூ.12,000/-க்கு மேற்படாமலும் உள்ள தமிழறிஞர்களுக்கு அவர்கள் வாழ்நாள் முழுவதும் நிதியுதவி வழங்கப்படுகிறது. திங்கள்தோறும் ரூ.500/- என வழங்கப்பட்டு வந்த இந்நிதியுதவி 1-09-2006 முதல் ரூ.1,000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 2006-2007 ஆம் ஆண்டில் 16 பேருக்கு நிதியுதவி வழங்க ஆணை வழங்கப்பட்டுள்ளது.

**மொழி / எல்லைக் காவலர்களுக்கு நிதியுதவி**

தமிழ் மொழி-பண்பாடு காத்திடவும், தமிழக எல்லையை மீட்டிடவும் சீரிய பணியும் தியாகமும் புரிந்தோருக்கு உதவும் நோக்கில் நிதியுதவி வழங்கப்படுகிறது. இவ்வகையில் மொழிக் காவலர் எனில் திங்கள்தோறும் ரூ3,000/- மற்றும் மருத்துவப்படி ரூ15/-; மரபுரிமையர் எனில் திங்கள்தோறும் ரூ.1,500/- மற்றும் மருத்துவப்படி ரூ.15/- வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், திங்கள்தோறும் எல்லைக் காவலர்களுக்கு வழங்கப்பட்ட நிதியுதவி ரூ.3,000/-த்திலிருந்து ரூ.4,000/- ஆகவும் அவர்களின் மரபுரிமையாளர்களுக்கு வழங்கப்பட்ட நிதியுதவி ரூ.1,500/-லிருந்து ரூ.2,000/- ஆகவும் 1-11-2006 முதல் உயர்த்தப்பட்டுள்ளது. நிதியுதவியுடன் மருத்துவப்படி ரூ.15/-ம் வழங்கப்படுகிறது. 2006-2007 ஆம் ஆண்டில் 52 எல்லைக் காவலர்களுக்கும், 7 மரபுரிமையருக்கும் நிதியுதவி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

மேலும் மொழி / எல்லைக் காவலரும் அவர்களின் மரபுரிமையரும் தமிழகம் முழுவதும் அரசுப் பேருந்தில் பயணம் செய்திட இலவச அனுமதியும் வழங்கப்படுகிறது.

### விருதுகள்

தமிழுக்கு வளம் சேர்க்கும் அறிஞர் பெருமக்கள் பாராட்டிப் போற்றப்பட வேண்டியவர்களாவர். எனவே, இத்தகைய அறிஞர்கள் ஆண்டுதோறும் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்குத் திருவள்ளுவர், திரு.வி.க., பாரதியார், பாரதிதாசன், கி.ஆ.பெ. விசுவநாதம் விருதுகள் வழங்கப்படுகின்றன. விருது ஒவ்வொன்றும் ஒரு இலட்சம் ரூபாய், தங்கப் பதக்கம் மற்றும் தகுதியுரை கொண்டதாகும்.

2006 ஆம் ஆண்டிற்கான திரு.வி.க. விருது திரு. க. திருநாவுக்கரசு அவர்களுக்கும், பாரதியார் விருது திரு. மு. தமிழருவி மணியன் அவர்களுக்கும், பாரதிதாசன் விருது முனைவர் கா. செல்லப்பன் அவர்களுக்கும், 2007 ஆம் ஆண்டிற்கான திருவள்ளுவர் விருது முனைவர் க.ப. அறவாணன் அவர்களுக்கும் 8-01-2007 அன்று வழங்கப்பட்டுச் சிறப்பு செய்யப்பட்டுள்ளது.

### தமிழறிஞரின் மரபுரிமையருக்கு உதவிகள்

தனித் தமிழியக்கத் தந்தை மறைமலையடிகளாரின் பெயர்த்தி திருமதி சுந்தரத்தம்மை அவர்கள் வசதியின்மையால் இன்னலுற்ற நிலையைப் போக்கும் வகையில் சிறப்பு நேர்வாக அவரிடம் இருந்த அரிய நூல்களைப் பெற்றுக்கொண்டு, அவருக்கு நிதியுதவியாகவும், மருத்துவச் செலவிற்காகவும் ரூ.1.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் திருமதி சுந்தரத்தம்மை அவர்களின் மகள் செல்வி சொ. கலைச்செல்வி அவர்களுக்குச் சிறப்பு நேர்வாக தமிழ் வளர்ச்சி இயக்ககத்தில் முதுநிலை ஒப்பச்சர் பணி நியமனமும் வழங்கப்பட்டுள்ளது.

மதுரை சாத்தமங்கலத்தில், தமிழறிஞர் மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் ரூ.39.60 இலட்சம் செலவில் மணி மண்டபம் அரசால் உருவாக்கப்பட்டுள்ளது. அம்மணிமண்டபப் பராமரிப்புப் பணிக்காக, அன்னாரின் மரபுரிமையரான திருமதி பரிபூரணம் அவர்களுக்கு, சிறப்பு நிகழ்வாக அலுவலக உதவியாளர் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

### நினைவில்லம்

தமிழ் மொழி செம்மொழியாக்கப்பட நூறாண்டுகளுக்கு முன்பே முதற்குரல் கொடுத்தவரும், சூரியநாராயண சாஸ்திரி என்ற தம் பெயரைத் தூய தமிழில் மாற்றிக் கொண்டவருமாகிய



பரிதிமாற்கலைஞர் அவர்களின் மதுரை விளாச்சேரியில் உள்ள இல்லம் அரசு நினைவில்லமாக்கப்பட்டு, இல்ல உரிமையாளருக்கு ரூ.3.84 இலட்சம் பரிவுத் தொகை வழங்கப்பட்டுள்ளது. இல்லத்தைச் சீரமைப்பது தொடர்பான தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ்த் தாத்தா உ.வே.சா. அவர்கள் வாழ்ந்த உத்தமதானபுரம் இல்லம், நினைவில்லமாக்கப்பட்டுக் கட்டுமானப் பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளன.

### கல்வி நிறுவனங்களுக்கு நிதியுதவி

தமிழ்ப் பல்கலைக்கழகம் மற்றும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றின் ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களின் ஊதியத்திற்கென இத்துறைவாயிலாக ஆண்டுதோறும் நல்கை வழங்கப்பட்டு வருகிறது. அன்றியும் அந்நிறுவனங்களின் பிற திட்ட பணிகளுக்கெனவும் அவ்வப்போது நல்கை வழங்கப்பட்டு வருகிறது.

ஆசியவியல் நிறுவனத்திற்கு கடந்த 5 ஆண்டுகளாக நல்கை வழங்கப்படாத நிலை இருந்தது. தமிழ்ப் பணிகளைக் கருத்திற்கொண்டு 2001-2002 முதல் 2005-2006 ஆண்டுகளுக்கான அரசு நல்கையாக ஒட்டுமொத்தத் தொகை ரூ.26.90 இலட்சமும், 2006-2007 ஆம் ஆண்டுக்கு ரூ.22.50 இலட்சமும், ஆக மொத்தம் ரூ.49.40 இலட்சம் ஆசியவியல் நிறுவனத்திற்கு ஒப்பளிப்பு செய்து வழங்கப்பட்டுள்ளது.

### பிற மாநிலங்களில் தமிழ்ப் பணிகளுக்கு நிதியுதவி

பிற மாநிலங்களில் தமிழ்க் கல்வி, ஆராய்ச்சியை ஊக்கப்படுத்தும் நோக்கிலும், தமிழ் மொழி, இலக்கியம், பண்பாடு ஆகியவற்றைப் பரப்பும் நோக்கிலும் நிதியுதவி வழங்கப்பெறுகிறது. இவ்வகையில் திருவனந்தபுரம் பன்னாட்டுத் திராவிட மொழியியல் பள்ளிக்கு 2005-2006-ல் ரூ.5.00 இலட்சம் வழங்கப்பட்டது. 2006-2007-ல் ரூ.10.00 இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

வாரணாசி இந்துப் பல்கலைக்கழகத்தில் தமிழ் முனைவர் பட்ட ஆய்வு மற்றும் முதுநிலை முனைவர் பட்ட ஆய்வு மேற்கொள்ளும் பிற மொழி மாணவர்களுக்கு நிதியுதவி வழங்கிட 2006-2007 ஆம் ஆண்டில் ரூ.2.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

பிற மாநிலங்களில் தமிழை ஒரு பாட மொழியாகப் பயிலும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் 10 மற்றும் 12 ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் தமிழில் அதிக மதிப்பெண் பெறுபவர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம் 2006-2007-ல் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கென 2006-2007-ல் ரூ.2.16 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**விழாக்கள்**

மனித சமுதாயம் வாழ்வாங்கு வாழ்ந்திடத் திருக்குறளை வழங்கித் தமிழ் மொழியின் தனிச் சிறப்பினை உலகம் உணர்ந்திட வழிகோலிய திருவள்ளுவப் பெருந்தகையைப் போற்றும் வகையில் ஆண்டுதோறும் தைத் திங்கள் இரண்டாம் நாளன்று திருவள்ளுவர் விழா கொண்டாடப்படுகிறது. அவ்வப்போது தமிழறிஞர்களின் நூற்றாண்டு விழாக்களும் கொண்டாடப்படுகின்றன. தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே.சா. அவர்களின் திருவுருவச் சிலைக்கு அவரின் பிறந்த நாளான பிப்ரவரி 19 ஆம் நாளன்றும் ஔவைப் பெருமாட்டியின் திருவுருவச் சிலைக்கு உலக மகளிர் தினமான மார்ச் 8 ஆம் நாளன்றும் மலர் வழிபாடு செய்யப்படுகிறது.

தமிழ் மாநிலம் அமைந்த பொன்விழா 1-11-2006 அன்று கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் எல்லைக் காவலர்கள் சிறப்பிக்கப்பட்டனர்.

**நூல்கள் நாட்டுடைமை**

சிறந்த நூல்கள் எல்லோரையும் சென்றடைய வேண்டியது இன்றியமையாததாகும். எனவே, சிறந்த தமிழறிஞர்களின் படைப்புகள் அவ்வப்போது நாட்டுடைமையாக்கப்படுகின்றன. இவ்வகையில் புலவர் குழந்தை, பரிதிமாற் கலைஞர், சிலம்புச் செல்வர் ம.பொ.சி. ஆகியோரின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்களின் மரபுரிமையர்களுக்கு முறையே ரூ.10.00 இலட்சம், ரூ.15.00 இலட்சம், ரூ.20.00 இலட்சம் பரிவுத் தொகை வழங்கப்பட்டுள்ளது. மேலும் மாயூரம் வேதநாயகம் பிள்ளை, சக்தி வை. கோவிந்தன், தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், த.நா. குமாரசாமி, கா.சு. பிள்ளை, புலவர் குலாம் காதிறு நாவலர், தி.வை. சதாசிவப் பண்டாரத்தார், முனைவர் சி. இலக்குவனார், மகாவித்வான் தண்டபாணி தேசிகர், தி.ஜ. ரங்கநாதன் (தி.ஜ.ர.) நாரண துரைக் கண்ணன், முனைவர் மா. இராசமாணிக்கனார், முனைவர் வ.சு.ப. மாணிக்கம்,



புலவர் கா. கோவிந்தன் ஆகிய 14 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன. அவர்களின் மரபுரிமையாளர்களுக்குப் பரிவுத் தொகையாக 2006-2007-ல் மொத்தம் ரூ.84.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. அடுத்து, சிங்காரவேலர், கிருபானந்த வாரியார், குன்றக்குடி அடிகளார், கி.ஆ.பெ. விசுவநாதம், கி.வா. ஜகன்னாதன், அவ்வை துரைசாமிப் பிள்ளை, அ.ச. ஞானசம்பந்தனார், திருக்குறளார் முனுசாமி, உவமைக் கவிஞர் சுரதா, சாவி, மாவெண்கோ என்ற வ.கோ. சண்முகம், தீபம் நா. பார்த்தசாரதி, எஸ்.எஸ். தென்னரசு, சி.பி. சிற்றரசு, ஏ.வி.பி. ஆசைத்தம்பி, டி.கே. சீனிவாசன், இராம. அரங்கண்ணல், கவிஞர் வாணிதாசன், கவிஞர் கருணானந்தம், ஜலகண்டபுரம் ப. கண்ணன் ஆகியோரது நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு, அவரவர்கள் எழுதிய நூல்களின் எண்ணிக்கை, சிறப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, அவர்தம் மரபுரிமையாளர்களுக்குப் பரிவுத் தொகை வழங்கப்படுவதுடன், தமிழ்ச் சான்றோர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கும் திட்டம் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும். மறைந்த தமிழ்ச் சான்றோர் அன்னியில், வசதி குறைந்த நிலையில் வாழ்ந்து வரும் தமிழ் எழுத்தாளர்களுக்கும், தமிழ் ஆர்வலர்களுக்கும் பரிவுத் தொகை வழங்கும் புதிய திட்டம் ஒன்றும் நடைமுறைப்படுத்தப்படும்.

**நூலாக்கம்**

நூல்கள் வெளியிட நிதியுதவி, சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்குவதோடு மட்டுமன்றி, தமிழ் வளர்ச்சி கருதி இன்றியமையாத நூல்களைத் தயாரித்து வெளியிடும் பணியும் மேற்கொள்ளப்படுகிறது. இவ்வகையில் தமிழ்மொழி வரலாறு, ஆட்சித் தமிழ், குறளமுதம் முதலிய நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. உலகத் தமிழ் இலக்கிய வரலாறு, கலைச் சொற் களஞ்சியம், இலக்கியச் சொல்லடைவு முதலிய நூல்கள் இயற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**தமிழ்நாட்டு வரலாறு**

தமிழ்நாட்டு வரலாற்று வரைவுத் திட்ட வல்லுநர் குழு மாற்றியமைக்கப்பட்டு ஆணையிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டு வரலாற்று நூல் வரிசையில் வெளிவர வேண்டிய எஞ்சிய தொகுதிகளான விசயநகர நாயக்கர் காலம், மராட்டியர் காலம், ஆங்கிலேயர் காலம், விடுதலைக்குப் பின்னர் உள்ள காலம் ஆகிய நூற்றொகுதிகளையும், அத்துடன் தமிழ்நாட்டு வரலாறு

[2007 ஏப்ரல் 28

(ஒரே தொகுதி) நூலையும் விரைந்து வெளிக் கொணரத் திட்டமிடப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**மாணவர் போட்டிகள்**

பள்ளி, கல்லூரி மாணவ மாணவியரிடையே தமிழ்ப் பற்றையும் படைப்புத் திறனையும் வளர்க்கும் நோக்கில் ஆண்டுதோறும் மாவட்ட அளவிலும் மாநில அளவிலும் கவிதை, கட்டுரை, பேச்சுப்போட்டிகள் நடத்தப்பட்டுப் பரிசுகளும் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன.

**"தமிழகம் ஊரும் சீரும்" குறுந்தகடுகள் வெளியிடுதல்**

சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஊர்களைப் பற்றிய சிறப்புச் செய்திகள், தற்போதைய நிலை முதலியவற்றைத் தொகுத்துக் குறுந்தகடுகள் வெளியிடுதல் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**கணினி யுகத்திற்கேற்பத் தமிழ் வளர்ச்சிப் பணிகள்**

ஆட்சிமொழிச் செயலாக்கத்திற்கும், தமிழ் வளர்ச்சிக்கும் பயன்தரத்தக்க தமிழ் மென்பொருளைத் தெரிந்தெடுத்து அரசு அலுவலகங்கள் பயன்கொள்ளச் செய்தல், நிருவாகத்தில் தமிழைப் பயன்படுத்திட உதவும் வகையில் மின் அகராதி தயாரித்தல், எழுத்துப் பிழைகளைக் களைந்து குறிப்புகளையும் வரைவுகளையும் செம்மையாய் அமைத்திடத் துணை புரியும் வகையில் தமிழ் மொழியில் கிளவியாக்கம் (Spell Checker) தயாரித்தல், சந்திப் பிழை, தொடர் அமைப்புப் பிழை போன்றவற்றையும் கணினிவாயிலாகத் திருத்திக் கொள்ளக்கூடிய தமிழ் மொழித் திறம் (Grammer Checker) தயாரித்தல் தொடர்பான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**சங்க இலக்கிய மொழிபெயர்ப்பு**

தமிழ் மொழி செம்மொழி என அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை ஆகிய சங்க இலக்கியங்களை இந்தியில் மொழி பெயர்க்கும் பணிகள் முடிவடைந்துள்ளன. நூல் அச்சிடும் பணி தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



2007 ஏப்ரல் 28]

**நூல்கள் இயற்றல்**

1. தமிழ் இலக்கணக் களஞ்சியம்
2. தமிழ் இலக்கியக் களஞ்சியம்
3. தமிழ்ப் படைப்பாளிகள் யார்? எவர்?

இப்பணிகள் தொடர்பான வல்லுநர் குழுச் செயற்பாட்டிற்காக ரூ.6.00 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தம் படைப்புத் திறத்தால் தமிழுக்கு வளம் சேர்த்துவரும் எழுத்தாளர்களின் நலன் காக்கும் வகையில் எழுத்தாளர் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 2006-2007-ல் தொடங்கப்பட்டுள்ளது. தெரிந்தெடுக்கப்படும் எழுத்தாளர் ஒவ்வொருவரும் ரூ.1.00 இலட்சம் வரை மருத்துவ வசதி பெறும் வகையில் இத்திட்டம் செயற்படுத்தப்பட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**எழுத்தாளர்கள், தமிழறிஞர்கள் பற்றிய ஆவண விளக்கப் படம் தயாரித்தல்**

அளப்பரிய பணிகளால் தமிழுக்குப் பெருமை சேர்த்துள்ள எழுத்தாளர்கள், தமிழறிஞர்கள் ஆகியோரைப் பற்றி வருங்காலத் தலைமுறையினரும் அறிந்துகொள்ள வாய்ப்பாக அவர்களைப் பற்றிய ஆவண விளக்கப் படம் தயாரிக்கப்படவுள்ளது. இத்திட்டம் தொடர்பில் வல்லுநர் குழு அமைக்கப்பட்டுத் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**சார்நிலை அலுவலகங்களுக்கு வசதிகள்**

தமிழ் வளர்ச்சித் துறையின் அனைத்து மண்டல/மாவட்ட நிலை அலுவலகங்களுக்கும் 2006-2007 ஆம் நிதியாண்டில் ரூ.0.58 இலட்சம் செலவில் தொலைபேசி வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

2006-2007 ஆம் நிதியாண்டில் 15 அலுவலகங்களுக்குக் கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ள கிருட்டிணகிரி மாவட்டத்திற்கு எனத் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் அலுவலகம் தோற்றுவிக்கப்பட்டு அலுவலர், பணியாளர் பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்டு அலுவலகம் செயற்பட்டு வருகிறது.

[2007 ஏப்ரல் 28

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

ஒல்லும் வகையெல்லாம் தமிழ் வளர்ச்சியைப் போற்றி வளர்ப்பது; உலகின் பல்வேறு பகுதிகளில் வாழும் தமிழறிஞர்களின் ஒத்துழைப்புடன் பல்வேறு துறைகளுடன் இணைந்த ஆராய்ச்சியைப் போற்றி வளர்ப்பது; தமிழ், தமிழறிஞர்களின் மேம்பாட்டைப் பேணுவது என்பவற்றை நோக்கமாகக் கொண்டு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தமிழக அரசால் சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் 1970 ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பெற்றது. தமிழ்நாடு அரசின் முழு நிதியுதவியுடன் செயற்பட்டு வரும் இந்நிறுவனத்திற்கு 2006-2007 ஆம் ஆண்டில் நல்கைத் தொகையாக ரூ.65.95 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தில் தற்போது இலக்கியம், சுவடிப் புலம், தமிழ் மொழி மற்றும் மொழியியல் புலம், சமூகவியல், கலை மற்றும் பண்பாட்டுப் புலம் மற்றும் அயல்நாட்டுத் தமிழர் புலம் ஆகிய நான்கு புலங்கள் உள்ளன.

சென்னைப் பல்கலைக்கழக இணைவுடன் முனைவர் பட்ட ஆய்வுக்கு வழிகாட்டல், தமிழ்ப் பல்கலைக்கழக இணைவுடன் ஆய்வியல் நிறைஞர் மற்றும் தமிழ் முதுகலைப் பட்ட வகுப்புகள் நடத்துதல், பல்கலைக்கழக நல்கைக் குழுவின் நிதியுதவியுடன் ஆய்வுத் திட்டங்கள் மேற்கொள்ளுதல், நூல்கள் வெளியிடுதல், வெளிநாட்டவர் உள்ளிட்ட தமிழரல்லாதார்க்குத் தமிழ் மொழி பயிற்றுவித்தல், கருத்தரங்குகள், பயிலரங்குகள் நடத்துதல், தமிழியல் ஆய்விதழ் வெளியிடுதல் போன்ற பணிகள் இந்நிறுவனத்தில் நடைபெற்று வருகின்றன.

(1) தமிழ் இலக்கியக் குறியீட்டு அகராதி, (2) தமிழர் பண்பாட்டுக் கலைச் சொற்கோவை, (3) கம்பன் களஞ்சியம், (4) தமிழில் சிறுவர் இலக்கியம், (5) பேச்சுத் தமிழுக்கான பல்லூடகப் பயிற்றுப் பேழை போன்ற ஐந்து பெருந்திட்டங்கள் பல்கலைக்கழக நல்கைக் குழுவின் நிதியுதவியுடன் முற்றாக முடிக்கப் பெற்றுள்ளன.

தமிழியல் தொடர்பான பல திட்டப் பணிகளை உயர் ஆய்வு நிலையில் இந்நிறுவனக் கல்விசார் அலுவலர்கள் செய்து வருகின்றனர். இவை இலக்கியம், இல்க்கணம், மொழியியல், மொழி கற்பித்தல், வரலாறு, சமூகவியல் பண்பாடு, நாட்டுப்புறவியல், மொழிபெயர்ப்பு தொடர்பானவை என அமைகின்றன.



2007 ஏப்ரல் 28]

இந்நிறுவனம் இதுவரையிலும் 567 நூல்களை வெளியிட்டுள்ளது. இந்நிறுவனம் இதுவரையிலும் 567 நூல்களை வெளியிட்டுள்ளது. இவை இங்குள்ள கல்விசார் அலுவலர்களின் திட்டப் பணிகள், அறக்கட்டளைச் சொற்பொழிவுகள், சுவடிப் பதிப்புகள், அரிய நூல் மறுபதிப்புகள், பிற தமிழறிஞர்களின் படைப்புகள் ஆகியவற்றைக் கொண்ட வெளியீடுகளாக அமைகின்றன. தமிழ் வளர்ச்சித் துறையின் அரிய நூல்கள்/சிறந்த மொழிபெயர்ப்பு நூல்களை வெளியிடும் திட்டத்தின்கீழ் நிதி பெற்றும் இந்நிறுவனம், பல நூல்களை வெளியிட்டுள்ளது. 2006-2007 ஆம் ஆண்டில் மட்டும் 8 நூல்களை இந்நிறுவனம் வெளியிட்டுள்ளது. அகர முதலி இயக்ககத்திற்காக 'ம' மற்றும் 'ய' வரிசையில் ஆறு பகுதிகள் அச்சிட்டு வழங்கும் பணியினைத் தொடங்கியுள்ளது.

'இலக்கிய மேடை' இந்நிறுவனத்தில் தொடங்கப்பட்டு, தொடர்ந்து நடத்தப் பெற்று வருகிறது. தமிழ் ஆய்வியல் நிறைஞர், முதுகலைப் பட்ட மாணவர்களின் திறமைகளை வெளிக்கொணர வகுப்புப் :ருவத்தில் ஒவ்வொரு புதன்கிழமையும் தொடர்ந்து நடத்தப்பெற்று வருகிறது.

"செம்மொழி" என்ற பொதுத் தலைப்பில் 2006-2007 ஆம் ஆண்டில் 4 வெள்ளிக்கிழமைக் கருத்தரங்குகளும், பிற தலைப்புகளில் 28 கருத்தரங்குகளும் நடத்தப் பெற்றுள்ளன. உலகத் தமிழாராய்ச்சி நிறுவன ஆய்வாளர்களுக்கும், மாணவர்களுக்கும் ஊக்கமூட்டும் வகையிலும் ஆய்வை மேம்படுத்தும் வகையிலும், இக்கட்டுரைகள் நூலாக்கம் பெறவுள்ளன.

புகழ்மிக்க தமிழறிஞர்கள், அரசியலாளர்கள், புரவலர்கள் பெயரில் தற்போது 31 அறக்கட்டளைகள் இந்நிறுவனத்திலுள்ளன. இவ்வறக்கட்டளைப் பொறுப்புகள் கல்விசார் அலுவலர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டு, அறக்கட்டளைப் பொழிவுகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு அறக்கட்டளைப் பொழிவு நிகழும்போதும், பொழிவுகள் நூல்களாக வெளியிடப்படுகின்றன. 2006-2007 ஆம் ஆண்டில், 9 அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் நடைபெற்றுள்ளன.

இந்நிறுவனத்தில் உள்ள நூலகத்தில், தற்போது 85,033 நூல்கள் உள்ளன. 'தமிழியல்' என்னும் இருமொழி ஆய்விதழை 1. 1 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து நிறுவனம் வெளியிட்டு வருகிறது. ஓ துவரை 69 இதழ்கள் வெளியிடப்பெற்றுள்ளன.

[2007 ஏப்ரல் 28

இந்நிறுவனத்தில் 2004 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசு அனுமதியுடன் பின்வரும் வகுப்புகள் தொடங்கப் பெற்றுள்ளன:

(1) தமிழ் ஆய்வியல் நிறைஞர்

(2) தமிழ் முதுகலை (இலக்கியம்)

(3) தமிழ் முதுகலை (பயன்பாட்டுத் தமிழ்)

2006-2007 ஆம் ஆண்டில் ஆய்வியல் நிறைஞர் வகுப்பில் 90 மாணவர்களும், முதுகலைப் பட்ட வகுப்புகளில் 52 மாணவர்களும் சேர்ந்து பயனடைந்து வருகின்றனர்.

கொரிய நாட்டவர் ஒருவரும், நெதர்லாந்து நாட்டவர் இருவரும், ஜெர்மன் நாட்டவர் ஒருவரும், மலேசிய நாட்டவர் ஒருவரும், தாய்லாந்து நாட்டவர் ஒருவரும், வட இந்தியர் ஒருவரும் 2005-2007 ஆம் ஆண்டுகளில் தமிழ் கற்றுச் சென்றுள்ளனர்.

இந்நிறுவனத்தில் பல்கலைக்கழக நல்கைக் குழுவின் நிதியுதவியுடன் ஓர் இணைப்பு மையம் நிறுவப்பட்டுள்ளது.

அரசு ஊழியர்களுக்கு வழங்கப் பெறுவது போன்ற ஓய்வூதிய வசதி உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் பணியாளர்களுக்கு 36 ஆண்டுகளாக இல்லாதிருந்தது. இவ்வசதி வழங்கப்பெறும் என்ற அறிவிப்பு வெளியிடப்பெற்றுச் செயன்மைப்படுத்தப்பெற்றுள்ளது. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் முற்றிலும் தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் தொகுப்பூதியத்தில் பணியிலிருந்த ஏழு பணியாளர்களை நிரந்தரப்படுத்தி அரசால் ஆணையிடப்பெற்று அது செயன்மைப்படுத்தப் பெற்றுள்ளது.

இந்திய மொழிகள் நடுவண் நிறுவனத்தில் இப்போது அமைந்துள்ள செம்மொழித் தமிழ் உயராய்வு மையமும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும் இணைந்து, ஒரு மாத காலச் "செம்மொழித் தமிழாய்வுத் பயிலரங்கு மற்றும் பயிற்சிப் பட்டறையை" உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் நடத்தியுள்ளது. 106 தமிழ் ஆய்வு மாணவர்கள் பயன்பாட்டைத் துய்க்கின்றனர்.

பல்கலைக்கழக நல்கைக் குழு நிதியுதவியுடன் "இணைய இணைப்பு மையம்" நிறுவப்பெற்றுள்ளது. 2007-2008 ஆம் ஆண்டில் 25 அறக்கட்டளைப் பொழிவுகளை நிகழ்த்திடவும் 50 நூல்களை



2007 ஏப்ரல் 28]

வெளியிடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழறிஞர் வரிசை மூன்றாம் சுற்றுக் கருத்தரங்கத் தொடர் நடத்தப்பெறவுள்ளது. உலகத் தமிழாராய்ச்சி நிறுவன நூலகத்தைக் கணினிமயப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

**நோக்கம்**

தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகையில் செய்தல் வேண்டும் எனும் உயரிய நோக்கத்துடன் தமிழ்ப் பல்கலைக்கழகம் 1981 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. தமிழ்நாடு அரசின் முழு நிதி உதவியுடன் செயல்பட்டு வரும் இப்பல்கலைக்கழகத்திற்கு 2006-2007 ஆம் ஆண்டில் நல்கைத் தொகையாக ரூ.38.19 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

உயர் தனிச் செம்மொழியாம் தமிழ் மொழிக்கென அமைக்கப்பெற்ற இப்பல்கலைக்கழகம் கடந்த ஆண்டு வெள்ளி விழா நிகழ்வுகளைச் சீருடனும் சிறப்புடனும் கொண்டாடித் தனது 26 ஆவது ஆண்டில் தமிழ் மொழி, தமிழ் இனம், தமிழ்ப் பண்பாடு, தமிழ்க் கலைகள் வளர்ச்சி எனப் பன்முகப் பொலிவோடு வளர்ந்து வருகின்றது.

தமிழ்ப் பல்கலைக்கழகம் கலைப் புலம், சுவடிப் புலம், வளர்தமிழ்ப் புலம், மொழிப் புலம், அறிவியல் புலம் என 5 புலங்களாக 24 துறைகளை உள்ளடக்கித் தமிழ் வளர்ச்சிப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டுள்ளது. இவற்றுடன் அச்சகம், பதிப்புத் துறை, நூலகம், அருங்காட்சியகம், கலைக் களஞ்சியப் பிரிவு பெருஞ்சொல்லகராதிப் பிரிவு போன்றவற்றை இப்பல்கலைக்கழகம் தன்னகத்தே கொண்டுள்ளது.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் 2006-2007 ஆம் ஆண்டு ஆற்றப்பட்ட பணிகளும் மற்றும் 2007-2008 ஆம் ஆண்டில் ஆற்றப்பட வேண்டிய பணிகளும் ஈண்டுத் தொகுத்தளிக்கப்படுகின்றன.

**கல்விப்பணி**

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் 25-வது துறையாக—கல்வியியல் மற்றும் மேலாண்மையியல் எனும் புதிய துறை 2007-2008 ஆம் கல்வி ஆண்டு முதல் சுயநிதியினைக் கொண்டு செயல்பட ஆட்சிக் குழு ஒப்புதல்

[2007 ஏப்ரல் 28

அளித்துள்ளது. தேவையான அனுமதி பெற்று இத்துறை செயல்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. "கணிப்பொறி அறிவியல், சுற்றுச்சூழல் மற்றும் மூலிகை அறிவியல்" ஆகிய இரு முது அறிவியல் பட்டப் படிப்புகள் 2005-2006 ஆம் கல்வியாண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் ஆய்வியல் நிறைஞர் பட்டம், முதுகலை மற்றும் முதுநிலை அறிவியல் பட்டம், யோகா, நடிப்புக் கலை மற்றும் இசை தொடர்பான பெருஞ்சான்றிதழ் மற்றும் சான்றிதழ் வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

2006-2007 ஆம் கல்வியாண்டு முதல் தொலை நிலைக்கல்விமூலம் வரலாறு, தமிழ், வணிகவியல் போன்ற படிப்புகளில் இளங்கலை, முதுகலைப் பட்டப் படிப்புகளும், 17 துறைகளில் ஆய்வியல் நிறைஞர் பட்டப் படிப்பும் நடைபெற்று வருகின்றன. தமிழ்ப் பல்கலைக்கழகத் தொலைநிலைக் கல்வி இயக்ககத்தின்கீழ், தமிழகத்தின் பல்வேறு நகரங்களில் மையங்கள் செயல்படுகின்றன.

2006-2007 முதுகலை வகுப்பில் 142 மாணவர்களும், முது அறிவியல் வகுப்பில் 8 மாணவர்களும், ஆய்வியல் நிறைஞர் வகுப்பில் 221 மாணவர்களும் முனைவர் பட்ட வகுப்பில் 138 மாணவர்களும் பயின்று வருகின்றனர். 41 முனைவர் பட்ட ஆய்வாளர்களுக்கு இக்கல்வி ஆண்டில் பொது வாய்மொழித் தேர்வு நடத்தப்பெற்று முனைவர் பட்டத் தகுதி வழங்கப் பெற்றுள்ளது. 3-3-2006 அன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் 261 மாணவர்களுக்கு முனைவர், ஆய்வியல் நிறைஞர் மற்றும் முதுகலைப் பட்டங்கள் வழங்கப்பட்டன.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் முழு நேரம் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் பாரதியார் மற்றும் ஏ.டி. பன்னீர்செல்வம் அறக்கட்டளை நிதியிலிருந்து கல்வி உதவித் தொகை ரூ.2,73,750/- வழங்கப்பட்டுள்ளது. தமிழக அரசின் ஆதி திராவிடர் நலக் கல்வி உதவித் தொகை, சிறப்பு உதவித் தொகை, பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்வி உதவித் தொகை, கல்விக் கடன் உதவித் தொகை ஆகிய தலைப்புகளின்கீழ் ரூ.23,47,754/- வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 529 மாணவர்கள் பயன்பெற்றுள்ளனர்.



2007 ஏப்ரல் 28]

**ஆய்வுப் பணிகள்**

கலைச்சொற் களஞ்சியத் திட்டத்திற்காக ரூ.70.00 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. களஞ்சியத் திட்டம் தொடர்பாக வல்லுநர் குழுக் கூட்டங்கள் நடத்தப்பெற்று வருகின்றன. 2006-2007-ல் 4 துறைகளில் பல்கலைக்கழக நல்கைக் குழு நிதியுதவியுடன் பல்கலைக்கழகக் கல்லூரி ஆசிரியர்களுக்கான புத்தொளிப் பயிற்சி அளிக்கப்பெற்றது. 16 அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. இவை தவிர, பிற நிதி வழங்கும் முகமையுடன் இணைந்து கல்விசார் அலுவலர்கள் மற்றும் ஆய்வாளர்கள், பயிலரங்குகள் மற்றும் கருத்தரங்குகள் ஆகியவற்றைத் தொடர்ந்து நடத்தி வருகின்றனர்.

**விரிவாக்கப் பணிகள்**

தகுதிகாண் பருவ இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள், இந்தியக் காவல் பணி அலுவலர்கள் மற்றும் இந்திய வனப் பணி அலுவலர்களுக்கான தமிழ் மொழி கற்பித்தல் போன்ற பயிற்சி வ்குப்புகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. 10 ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ், தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்குப் பல்கலைக்கழக நல்கைக் குழு அனுமதித்துள்ள ரூ.225 இலட்சத்தில் ரூ.125 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. மேலும், சிறப்பு நல்கையாக ரூ.33.75 இலட்சம் வரப்பெற்றுள்ளது. 'வரப்பெற்ற நல்கைகள் உரிய முறையில் செலவிட முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பல்கலைக்கழக நல்கைக் குழுவின் பெண்கள் நல மேம்பாடு சிறப்பு நல்கை பெறப்பட்டு, மகளிர் விடுதி இரண்டாம் தளம் கட்டி நிறைவு பெற்றுள்ளது. தாழ்த்தப்பட்ட பழங்குடியினருக்கான சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. கல்வியில் பின்தங்கியுள்ள மாணவர்களுக்குரிய கல்வித் தரத்தை மேம்படுத்திட சிறப்புப் பயிற்சி வழங்கப்படுகிறது.

தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்குத் தேசியத் தர மதிப்பீட்டுக் குழுமத்தின் மதிப்பேறு பெறுவதற்கான நீண்டகாலச் செயல் திட்டங்கள் உருவாக்கப்பட்டு, அறிக்கை வடிவங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் தொலைநிலைக் கல்வி இயக்ககம் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள நிலையில், 2006-2007 முதல், இளங்கலை, முதுகலை, இளம் அறிவியல், முது அறிவியல் மற்றும் கல்வியியல்

துறைகளின் படிப்புகள் தொடங்கப்பட்டுள்ளன. ஆய்வியல் நிறைஞர் பட்டப் படிப்பும் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

தமிழப் பல்கலைக்கழகம் சிறந்த உயராய்வு நிறுவனமாகவும் தலைமைமிக்க மக்கள் பல்கலைக்கழகமாகவும் விளங்கத்தக்க வகையில் பல உயரிய திட்டங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. இப்பல்கலைக்கழக நூலகம் மக்கள் நூலகமாக வாரத்தின் அனைத்து நாட்களும் செயல்படுகிறது. பொது மக்களுக்கெனப் புரவலர் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மாணவர் குறைதீர்ப்புக் குழு, முன்னாள் மாணவர் சங்கம், வேலைவாய்ப்பு மையம் போன்றவை சிறப்புடன் செயல்பட்டு வருகின்றன. இவையன்றி நூலகக் குழு, பதிப்புக் குழு, தொழில் முனைவோர் வளர்ச்சிப் பிரிவு, பொருள் வாங்கி வழங்கும் குழு போன்ற பல்வேறு குழுக்கள் பல்கலைக்கழகச் செயலாண்மையில் அடங்கும். ஆசிரியர், அலுவலர், மாணவர் நலனுக்கெனப் பல்வேறு நற்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வளாகத்திற்குள் அரசுப் போக்குவரத்து நகரப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. வளாகம் மட்டுமின்றி, அதைச் சுற்றியுள்ள ஊர்ப்புறங்கள் பொதுமக்கள் நலன் கருதியும் பல விரிவாக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வெள்ளி விழா ஆண்டினை முன்னிட்டு இவ்வாண்டில் 25 நூல்கள் பதிப்புத் துறையால் வெளியிடப்பட்டுள்ளன. மாபெரும் வெள்ளி விழா நூல் கண்காட்சியும், கல்விக் கண்காட்சியும் பதிப்புத் துறையினரால் மிகச் சிறப்பாக நடத்தப்பெற்றது. இக்கண்காட்சியின்போது ரூ.25.00 இலட்சம் மதிப்புள்ள நூல்கள் விற்பனையாகியுள்ளன. பதிப்புத் துறை நூல்களின் மொத்த விற்பனை மதிப்பு 2006 ஆம் ஆண்டில் ரூ.43,52,493/- ஆகும். கடந்த ஆண்டை விட ரூ.7,71,141/- கூடுதலாக விற்பனையாகியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். பல்கலைகழக நல்கைக் குழுவின் நிதியிலிருந்து ரூ. 7,70,000/- மதிப்புள்ள ஆட்டோ பிரிண்ட் அச்சுப்பொறி பதிப்புத் துறை அச்சகத்திற்குப் புதிதாக வாங்கப்பெற்று அச்சுப் பணிகள் சிறப்புடன் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இப்பல்கலைக்கழகத்தில் உள்ள கல்வி சார்ந்த மற்றும் கல்விசாராப் பணியாளர்கள் ஆற்றும் வளர்ச்சிப் பணிகள் குறிப்பிடத்தக்கவை.

இந்திய நடுவண் அரசு, தமிழக அரசு மற்றும் பிற நல்கை நிறுவனங்களின் பேருதவியுடன் சிறப்பாக இப்பல்கலைக்கழகம் இயங்கி வருகிறது.





## செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

ஒரு மொழியின் தொன்மையும், மேன்மையும் பொதுவாக அம்மொழியில் வெளிவந்துள்ள அகரமுதலிகளின் எண்ணிக்கையைக் கொண்டே அளவிடப்படுகிறது. தமிழில் சொற்பிறப்பியல் பேரகரமுதலியை 12 மடலங்களில் 31 பகுதிகளாகத் தொகுத்து வெளியிடும் நோக்கில், "செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்" என்னும் இத்துறை, 1974 ஆம் ஆண்டில் அரசால் உருவாக்கப்பட்டது.

இருமொழிப் பேரகரமுதலியான இந்நூல், பொதுவகைப் பயன்பாட்டு அகராதியாக மட்டுமல்லாது, மொழியியல் மற்றும் திராவிட மொழிகள் ஆராய்ச்சியாளருக்குப் பெரிதும் பயன் நல்கும் ஒரு சிறந்த கருவி நூலாகத் திகழ்வது தனிச் சிறப்புக்குரியதாகும். தவிரவும், இந்திய மொழிகளில் இதுவரை வெளிவந்துள்ள சொற்பிறப்பு அகரமுதலிகளில், இதுவே மிகவும் விரிவானதும், செறிவானதும் ஆகும். இவ்வகரமுதலியில் அனைத்துச் சொற்களுக்கும் எழுத்துப் பெயர்ப்பு கொடுக்கப்பட்டிருப்பதோடு, இலக்கணக் குறிப்பு, தமிழ் மற்றும் ஆங்கிலப் பொருள்கள், காலந்தோறும் மாறிவந்த பொருள்கள், திராவிட மொழிகளில் சென்றுள்ள ஒலி வடிவங்கள், வேர்ச்சொற்களிலிருந்து வந்த வகை, சொற்களின் வரலாறு, சிறப்புப் பொருள் விளக்கம், வெவ்வேறு மொழிகளில் தமிழ்ச் சொற்கள் சென்ற குறிப்புகள் மற்றும் அங்கு வழங்கும் வடிவங்கள், பழமொழிகள், பல்வேறு சொல் வழக்குகள் மற்றும் தேவையான இடங்களில் பட விளக்கங்கள் ஆகியனவும் கொடுக்கப்பட்டு, ஒரு முழுமையான சொற்பிறப்பியல் பேரகரமுதலியாக விளங்குகிறது.

திட்டமிடப்பெற்ற மொத்தம் 31 பகுதிகளில், இதுவரை 18 பகுதிகள் தொகுத்து வெளியிடப்பட்டுள்ளன. 7 பகுதிகள் அச்சில் உள்ளன. எஞ்சிய 6 பகுதிகளை விரைந்து முடித்து வெளியிடத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பெறும்.

### அறிவியல் தமிழ் மன்றம்

அறிவியல் தமிழை வளமுடன் வளர்த்திடும் வகையில் அறிவியல் தமிழ் மன்றம் எனும் அமைப்பு 14-9-2006-ல் அரசால் உருவாக்கப்பட்டது.

[2007 ஏப்ரல் 28

இயல், இசை, நாடகம் என வளர்ந்து வளம் பெற்ற தமிழ், இன்றைய அறிவியல் வளர்ச்சிப் போக்கையும் தேவையையும் கருதி, அறிவியல் தமிழாகவும் மணம் வீசத் தொடங்கியுள்ளது. அறிவியல் துறையிலும், தொழில்நுட்பத் துறையிலும் உறுதியாகக் கால் பதித்தால்தான், வளர்ந்து வரும் எதிர்காலத் தேவைகளை நிறைவு செய்திட முடியும். அறிவியல் தமிழை வளர்த்திடும் முயற்சிகள் பலரால் பல நிலைகளில் மேற்கொள்ளப்பட்டு வருவதை ஒருங்கிணைக்கக் கருதியும் திட்டமிட்ட வளர்ச்சிக்கு வழிகாண வேண்டும் என்ற அடிப்படையிலும் "அறிவியல் தமிழ் மன்றம்" உருவாக்கப்பட்டுள்ளது.

இம்மன்றத்தின் வாயிலாகப் பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்பட வகை செய்யப்பட்டுள்ளது:

1. அறிவியல் தமிழ்ப் பணிகள் ஒருங்கிணைப்பு
2. கலைச் சொல்லாக்கப் பணி
3. துறைவாரியான கலைச் சொல் தொகுதி வெளியீடு
4. அறிவியல் மொழி பெயர்ப்பு—ஆய்வும் பயிற்சியும்
5. அறிவியல் புனைக் கதை முயற்சி
6. தமிழிலக்கியங்களில் அறிவியல் ஆய்வு
7. சிறுவர் அறிவியல் கலைக் களஞ்சிய வெளியீடு
8. தமிழில் அறிவியல் வரலாறு மற்றும் கண்டுபிடிப்புகள் வரலாறு வெளியீடு
9. அறிவியல் கண்காட்சிகள் நடத்துதல்
10. சிறந்த அறிவியல் தமிழ் நூலுக்குப் பரிசளித்தல்
11. அறிவியல் தமிழ் மாத இதழ் வெளியீடு



2007 ஏப்ரல் 28]

## மொழிபெயர்ப்புப் பிரிவு

தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறையின் பல பிரிவுகளில் ஒன்றான மொழிபெயர்ப்புப் பிரிவு, அரசின் ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கத்தில் அரும்பணியாற்றி வருகிறது.

இப்பிரிவில், வழக்கமாக, தமிழ்நாடு அரசிதழ்களிலும் அனைத்து மாவட்ட அரசிதழ்களிலும் வெளியிடப்படும் அரசு அறிவிக்கைகள், சுற்றோட்டக் குறிப்புகள், சட்டமன்றப் பேரவையில் வைக்கப்படும் துறைவாரியான கொள்கை விளக்கக் குறிப்புகள், அரசுப் பொது நிறுவனங்கள் மற்றும் பொதுக் கணக்குக் குழுக்களின் அறிக்கைகள், காவல் துறை மற்றும் சிறைத் துறையின் சிறப்புப் பதக்கங்களுக்கான தகுதியுரைகள், விழிப்புப் பணி ஆணையத்தின் ஆண்டறிக்கை, "காபிபோசா சட்டத்தின்" கீழ், பிறப்பிக்கப்படும் தடுப்புக் காவல் ஆணைகள், அமைச்சரவைக் குறிப்புகள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களின் உரைகள், பத்திரிகைச் செய்திகள் முதலியவற்றுக்குத் தமிழாக்கம் அளிக்கப்படுகிறது. மேற்சொன்ன வாலாயமான பணிகளோடு, இந்த ஆண்டில் பொதுத் (தேர்தல்) துறை வெளியிட்ட கையேடுகள், மின்னனு எந்திரம் மூலமான வாக்குப் பதிவு குறித்த வழிகாட்டி நூல், மகளிருக்கான உரிமைகளை விளக்கும் கையேடு, குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு அறிக்கைகள், நதிநீர் இணைப்பு குறித்த சிற்றேடு, மனித உரிமைகள் ஆணைய அறிக்கைகள் ஆகியவை மொழி பெயர்க்கப்பட்டன.

மேலும், மத்திய அரசிடமிருந்து இந்தி மொழியில் வரப்பெறுகின்ற கடிதங்கள் முதலானவற்றிற்கும் மொழி பெயர்ப்புப் பிரிவானது (இந்தி) ஆங்கில மொழியாக்கம் அளிக்கிறது.

இவை தவிர, ஒவ்வோராண்டும் நிதித் துறைக்கு உதவி இயக்குநர் ஒருவர் தலைமையில் மொழி பெயர்ப்புக் குழு ஒன்று அனுப்பப்படுகிறது. இக்குழு ஆளுநர் உரை, வரவு-செலவுத் திட்ட உரை, வரவு-செலவுத் திட்டம் தொடர்பான ஆவணங்கள் மற்றும் துணை மானியக் கோரிக்கைகள் ஆகியவற்றின் மொழிபெயர்ப்புப் பணியை மேற்கொள்கிறது. தவிரவும், ஒவ்வொரு சட்டமன்றக் கூட்டத் தொடரின் போதும் உதவிப் பிரிவு அலுவலர் ஒருவர் சட்டமன்றப் பேரவைச் செயலகத்திற்கு அனுப்பப்பட்டு, அவர் சட்டமன்றக் கூட்டம் தொடர்பான மொழியாக்கப் பணிகளை மேற்கொள்கிறார். அதுபோலவே, மாவட்ட ஆட்சியர், காவல் துறை அதிகாரிகளின்

மாநாடு நடைபெறும்போது, அது தொடர்பான மொழியாக்கப் பணிகளை மேற்கொள்வதற்காக இப்பிரிவில் இருந்து ஒரு குழு பொதுத் (மரபு) துறைக்கு அனுப்பப்படுகிறது.

இந்த ஆண்டில் பள்ளிக் கல்வித் துறை அனுப்பிய கும்பகோணம் பள்ளித் தீ விபத்து பற்றிய நீதியரசர் திரு. கே. சம்பத் விசாரணை ஆணையத்தின் அறிக்கை (இரு தொகுதிகள், 212 பக்கங்கள்) தமிழாக்கம் செய்யப்பட்டது. இதைப்போன்று, பொதுத் துறையிலிருந்து எம்.ஜி.ஆர். நகர் சம்பவம் தொடர்பாக நியமிக்கப்பட்ட நீதியரசர் திரு. எ. ராமன் விசாரணை ஆணையத்தின் அறிக்கை (213 பக்கங்கள்) தமிழாக்கம் செய்யப்பட்டது. இத்துடன் மாண்புமிகு வேளாண்மை மற்றும் உணவுத் துறை அமைச்சர் அலுவலகங்களிலிருந்து வரப்பெற்ற பல நிபுணர் குழு அறிக்கைகளும் குறுகிய காலத்தில் தமிழாக்கம் செய்யப்பட்டன.

இவ்வாறு ஆட்சி மொழிக்கான மொழிபெயர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் அறிவியலில் தமிழ், ஆலய வழிபாட்டில் தமிழ், பள்ளிக் கூடங்களில் தமிழ், திரைப்படங்களில் தமிழ், கணினியில் தமிழ், நீதிமன்றங்களில் தமிழ் என்று தமிழ் வளர்ச்சிக்குப் பல்வேறு வாயில்களும் திறக்கப்பட்டுள்ளன.

தமிழ்மொழி மேலும் வளம் பெறவும், பெற்றிருக்கும் பெரும் வளம் மற்றவர்கள் அறியவுமான பணிகள் தமிழ் வளர்ச்சி இயக்ககம், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம், அறிவியல் தமிழ் மன்றம், மொழிபெயர்ப்புப் பிரிவு ஆகியன வாயிலாக முனைப்புடன் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.





## இணைப்பு-1

## 2007-2008 ஆம் ஆண்டுக்கான திட்ட மதிப்பீடு

### தமிழ் வளர்ச்சி

(நிகரச் செலவு ரூபாய் ஆயிரத்தில்)

| | 2006-07 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு | 2006-07 திருத்த மதிப்பீடு | 2007-08 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|
| 2059 பொதுப் பணிகள் | 1,17,95 | 1,17,85 | 9,35 |
| 2202 பொதுக் கல்வி | 15,81,27 | 17,86,60 | 19,90,89 |
| 2205 கலையும் பண்பாடும் | 23,87,97 | 25,98,42 | .. |
| 2251 தலைமைச் செயலகம்—சமூகப் பணிகள் | 2,67,04 | 2,47,72 | 4,58,19 |
| 4202 கல்வி, போட்டி விளையாட்டு, கலை—பண்பாடு குறித்த மூலதனச் செலவு | 1,50,04 | 1,47,49 | .. |
| 4220 செய்தி—விளம்பரம் குறித்த மூலதனச் செலவு | .. | 3,85 | .. |
| மொத்தம் | | | 24,58,43 |

(இலட்சத்தில்)

| வ. எண் | | 2007–2008–ல் செலவு | | | |
|---|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
| (1) | | (6) | (7) | (8) | (9) |
| | தலைவ | | | | |
| 1 | 4 டாட் | 0.70 | | | 0.70 |
| | தமிழ் எ | | | | |
| 2 | தமிழ் எ | 0.72 | | | 0.72 |
| 3 | தமிழ் எ | 1.80 | | | 1.80 |
| 4 | தமிழ் எ | 5.00 | | | 5.00 |
| 5 | தமிழ் எ | 1.50 | | | 1.50 |
| [illegible] | தமிழ் எ | 0.10 | | | 0.10 |
| 7 | தமிழ்ப் | 0.01 | | | 0.01 |
| 8 | தமிழ்ப் | 25.00 | | | 25.00 |
| 9 | உலகத் | 1.35 | | | 1.35 |
| 10 | நகலெ( | 1.50 | | | 1.50 |
| 11 | உலகத் | 2.50 | | | 2.50 |
| 12 | உலகச் | 4.75 | | | 4.75 |
| 13 | தமிழ் ஆ | 30.00 | | | 30.00 |
| 14 | கன்னிய பற்றிய | 20.00 | | | 20.00 |
| | செந்தமி | | | | |
| 15 | தமிழ்ச் | 4.00 | | | 4.00 |
| 16 | பிரிண்ட | 1.50 | | | 1.50 |
| | | 100.43 | | | 100.43 |

# இணைப்பு–IV

(517 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 49—இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2007–2008

## அத்தியாயம்–1

**முன்னுரை:**

1.1 மனிதவள ஆதாரங்களுடைய மேம்பாட்டின் முக்கிய அங்கமாகத் திகழும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு, இளைஞர்களிடையே சுகாதாரம், தோழமை, நட்புடன் கூடிய போட்டி மனப்பான்மை ஆகியவற்றை வளர்த்து, அவர்களது ஆளுமைத் திறனை மேம்படுத்தி தெளிவான தாக்கத்தை உண்டாக்கும். அனைத்துத் தரப்பு இளைஞர்களிடையே நல்ல குடிமகனாக விளங்குவதற்கான தகுதிகள், சமுதாயப் பணிக்காகத் தங்களை அர்ப்பணித்தல் போன்ற பண்புகளை வளர்ப்பதே, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் குறிக்கோளாகும். தனிநபர் பண்புகளை வளர்த்தல் மற்றும் வளர்ச்சித் திட்டங்களின் குறிக்கோளுக்காக பொறுப்பேற்கும் எண்ணத்தை உருவாக்குதல் ஆகியவற்றிற்காக இளைஞர்களிடையே தொண்டு செய்யும் மனப்பான்மையை நிலைநிறுத்துவதை மற்றும் வலுவூட்டுவதை இத்துறை வலியுறுத்துகிறது. விளையாட்டு மற்றும் போட்டிகள், தேசிய மாணவர் படை மற்றும் நாட்டு நலப் பணித் திட்டம் ஆகியவற்றின் செயல்பாடுகள் இளைஞர்களிடையே அடிப்படைப் பண்புகளை வளர்த்து, அவர்களைப் பொறுப்புமிக்க குடிமகன்களாக மலரச் செய்கின்றன. விளையாட்டுகள் மற்றும் சமூக சேவைகளில் உயர்ந்து விளங்குதல், சாதனை படைக்கும் உணர்வினையும் தேசப் பெருமையையும் தேச பக்தியினையும் அதிகப்படுத்துகிறது. மேலும் விளையாட்டுகள் மற்றும் இளைஞர் அமைப்புகள், இளைஞர்களிடையே சமூக நல்லிணக்கம் மற்றும் ஒழுக்கத்தினை வளர்க்கின்றன. நமது மாநிலம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு நடவடிக்கைகளில் பெற்றிருக்கும் பெரும் உறுதியான உள்ளாற்றல் மற்றும் போட்டி மனப்பான்மைகளைக் கண்டறிந்து, தீவிரமாக வளர்க்க முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

[2007 ஏப்ரல் 28

கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளிலுள்ள இளைஞர்களின் திறமைகளைக் கண்டறிய முயற்சித்து, அதன்மூலம் அவர்களின் திறமையை மேம்படுத்தச் சந்தர்ப்பம் அளிப்பதற்கும், போட்டியில் சிறந்து விளங்கும் நாட்டத்தினை மேம்படுத்துவதற்கும் தொடர்ந்து கவனம் செலுத்தப்படும்.

**2007–2008 ஆம் ஆண்டின்**
**இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கான நிதி ஒதுக்கீடு**

*2007-2008*-ம் ஆண்டின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கான மானியக் கோரிக்கை எண் *49*-ன்கீழ் நிதி ஒதுக்கீடு ரூ.*42.71* கோடி ஆகும். இதில் ரூ.*10.03* கோடி திட்டப் பணிகளுக்கானதாகும்.

## அத்தியாயம்–2

### 2.1 தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்

இளைஞர்களின் விளையாட்டு ஆர்வத்தினை ஒருமுகப்படுத்தும் நோக்கத்துடன் தமிழக அரசு அரசாணை எண் *641*, கல்வி (ஒய்1) துறை நாள் *18-7-1992*-ல் அதற்கு முன்பு இயங்கி வந்த இளைஞர் மற்றும் விளையாட்டுப் பயிற்சித் துறை மற்றும் தமிழ்நாடு மாநில விளையாட்டு வளர்ச்சி வாரியம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து “தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்” என்ற அமைப்பினை உருவாக்கியது. இவ்வமைப்பு இந்திய விளையாட்டுக் குழும அமைப்பிற்கு ஒப்பானதாகும். மாண்புமிகு தமிழக முதல்வர் இவ்வாணையத்தின் தலைவர் ஆவார். தலைமை அமைப்பான தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், தமிழக அரசின் விளையாட்டு மற்றும் இளைஞர் நலப் பணிகள் குறித்த கொள்கை முடிவுகள் அனைத்தையும் செயல்படுத்தி வருகிறது.

### 2.2 குறிக்கோள்களும், இலக்குகளும்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் முக்கியக் குறிக்கோள்கள் பின்வருமாறு:

*1.* மாவட்டத் தலைநகரங்களிலும், பள்ளி மற்றும் கல்லூரிகளிலும் விளையாட்டிற்கான விளையாட்டு அரங்க மற்றும் ஆடுகள வசதிகளை உருவாக்குதல்.



2007 ஏப்ரல் 28]

*2.* திறமை மிக்க விளையாட்டு வீரர்களைக் கண்டறிந்து, அவர்களுக்குத் தக்க பயிற்சி மற்றும் நிதியுதவி அளித்து அவர்கள் தேசிய மற்றும் பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி வாகை பெறச் செய்தல்.

*3.* தலைசிறந்த விளையாட்டு வீரர்களை ஊக்குவிப்பதுடன், அவர்கள் உயர்ந்த அளவில் சாதனைகள் புரிந்திடும் வகையில் விருதுகளும், பல்வேறு ஊக்க உதவிச் சலுகைகளும் வழங்குதல்.

*4.* மாணவர் மற்றும் மாணவரல்லாத இளைஞர்களிடையே சாகசச் செயல்கள் செய்யும் ஆர்வத்தையும், உடற்பயிற்சி செய்யும் ஆவலையும் ஊக்குவித்தல்.

*5.* மாணவர் மற்றும் மாணவரல்லாத சமுதாயத்தினரிடையே அறிவியல் முனைப்பு, சமுதாய நல்லிணக்கம் மற்றும் சேவை மனப்பான்மை ஆகியவற்றை வளர்த்திடல்.

*6.* விளையாட்டு மற்றும் இளைஞர்கள் நலன் வளர்ச்சியின் நோக்கத்தில் மைய மற்றும் மாநில அரசுகளின் திட்டங்களைச் செயல்படுத்துதல்.

*7.* பல்வேறு விளையாட்டுப் போட்டிகள், இளைஞர் விழாக்கள் மற்றும் கண்காட்சிகள் நடத்தி இளைஞர்களிடம் எழுச்சியையும், உத்வேகத்தையும் மலரச் செய்தல்.

**2.3** தமிழ்நாடு, கடந்த ஆண்டுகளில் தேசிய மற்றும் பன்னாட்டு அளவில் தனித் திறன் மற்றும் குழுப் போட்டிகளிலும், முன்னிலை வகித்து வருகிறது. இது தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்ட விளையாட்டுக் கட்டமைப்பு, பயிற்சி வசதிகள், விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல் மற்றும் விளையாட்டு வீரர்களுக்கு அளிக்கப்படுகின்ற ஊக்க உதவித் தொகை ஆகியவற்றால் ஏற்பட்டது.

### 2.4 விளையாட்டில் தமிழ்நாடு உன்னத நிலையை அடைவதற்கான புதிய உத்திகள்:

உலகத்தில் உள்ள வளரும் மற்றும் வளர்ச்சி பெற்ற நாடுகளில் விளையாட்டுத் துறையில் தொலைநோக்கு உத்தியினை மிகச் சரியாக கடைப் பிடிப்பதன்மூலம் வெற்றியினை வெளிக்கொணர்கிறார்கள். பிரமிடு முறையிலான அடித்தளத்தைக் கொண்டு கீழ்நிலையிலிருந்து

[2007 ஏப்ரல் 28

உயர்ந்த நிலையை அடையும் வண்ணம் உத்தியைப் பலரும் கடைப்பிடித்து வருகிறார்கள். ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொள்ளும் பல நாடுகள் சிறியதாக இருப்பினும் வெற்றிகளைப் பெற்று அவர்களின் மாநிலத்திற்கும், நாட்டிற்கும் பெருமை தேடித் தருவதற்கு இந்தத் தொலைநோக்கு உத்தியினைக் கடைப்பிடிப்பதே காரணமாகும். இவ்வாறான தொலைநோக்கு உத்தியினைத் தமிழ்நாட்டில் செயல்படுத்துவதன்மூலம் ஏனைய மாநிலங்களுக்கு முன்மாதிரியாகத் திகழலாம். தமிழ்நாட்டில் 5 பல்வேறு நிலையினைக் கொண்ட பிரமிடு முறையிலான தர வரிசையினை விளையாட்டுத் துறையில் செயல்படுத்துவது இக்கொள்கைக் குறிப்பில் விளக்கப்படுகிறது. இவ்வாறான பிரமிடு வரிசையில் நிலை-1 அடித்தளத் திறன் கொண்ட அளவிலும் நிலை-5 அதிகபட்சத் திறன்கொண்ட அளவிலுமாக உள்ளது. இதனை விளக்கும் பொருட்டு பிரமிடு முறையிலான வரைபடம் கீழே விவரிக்கப்பட்டுள்ளது:




விளையாட்டுகளில் வெற்றியினை அடைய கீழ்வரும் காரணக்கூறுகள் முக்கியமானதாக உள்ளன:

(அ) விளையாட்டுப் போட்டிகளின் தர வரிசை

(ஆ) விளையாட்டில் திறன் கண்டறிதல் மற்றும் வளர்ச்சிகளின் தர வரிசை

(இ) ஒவ்வொரு நிலையிலும் தேவையான விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகள்



2007 ஏப்ரல் 28]

(ஈ) பயிற்சி முறைகள் மற்றும் தேவைகளின் தர வரிசை

(உ) ஒவ்வொரு நிலையிலும் நேர்த்தி பெற்ற வல்லுநர்கள்

(ஊ) விளையாட்டுப் போட்டிகள் மற்றும் திறமையாளர்களைப் பல்வேறு நிலைகளில் ஊக்குவிப்பதற்கான விளையாட்டு ஆர்வலர்கள்.

மேற்கண்ட வரைபடத்தின்மூலம் ஒவ்வொரு நிலையிலும் மேற்காணும் காரணக்கூறுகள் ஒன்றுடன் ஒன்று தொடர்பில் உள்ளன.

இவ்வாறு அறிமுகப்படுத்தப்படும் புதிய உத்திகளின் ஒவ்வொரு நிலையினைப் பற்றியும் விரிவாக அறிந்து கொள்ள கீழ்க்காணும் வகையில் விரிவாக விளக்கப்படுகிறது.

**நிலை–1**

**2.5. அதிக அளவிலான பங்கேற்பு**

உடற் தகுதியினை பரவலாக்குவதே இந்த நிலையின் பிரதான குறிக்கோளாகும். சிறப்பான நிலையினை அடையக்கூடிய திறமைகளைக் கண்டறிதல் மற்றும் இளைஞர்களிடையே உள்ள உடற்தகுதி திறன்களை மேம்படுத்தக் கூடியவை இதனுள் அடங்கும். குறைந்தபட்சத் திறன் வளர்ச்சியுடன் விளையாட்டினை மிகச் சரியான முறையில் அறிந்து கொள்வதன்மூலம் ஒரு விளையாட்டு/ விளையாட்டுப் பிரிவில் சரியான இடத்தினை அடைய இயலும். இத்தகைய அடிப்படைத் திறன்களை மேம்படுத்தக்கூடிய விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகளும் அதற்கான பயிற்சிகளும் இந்நிலையில் அடங்கும். போட்டிகளில் அதிக அளவிலான பங்கேற்பு, சமுதாயப் பங்கேற்பு மற்றும் உள்ளூர் அளவில் விளையாட்டில் ஆர்வத்தினை வளர்த்தல் இந்நிலையில் அடங்கும். அடிப்படையில் தேவையான பயிற்சிகளே இந்நிலையில் வழங்கப்படுவதால், உடற்கல்வி ஆசிரியர் அல்லது நிலை-1 பயிற்றுநர்களைக் கொண்டே வழங்க இயலும். இந்த நிலையில் விளையாட்டு ஆர்வலர்களைக் கண்டறிந்து அவர்களை விளையாட்டுத் திட்டங்களில் ஈடுபடச் செய்வதன்மூலம் ஊக்குவிக்க இயலும். மருத்துவர்கள் மற்றும் முடநீக்கியியல் நிபுணர்களிடையே விளையாட்டு மருத்துவத்தினை பிரபலப்படுத்துவதன்மூலம் அடிப்படை விளையாட்டுக் காயங்களுக்கு சிகிச்சை அளிக்க ஏதுவாக அமையும். நிலை-1, பிரமிடு முறையில் அடித்தளமாக அமைகிறது.

**நிலை—2**

### 2.6 மாவட்ட அளவிலான திட்டங்கள்

மாவட்டங்களில் உள்ள தலைசிறந்த விளையாட்டுத் திறன்களை ஒருங்கிணைப்பதே இந்த நிலையின் குறிக்கோளாகும். தேசிய விளையாட்டு ஆணையத்தில் பயிற்சி பெற்ற பயிற்றுநர்களைக் கொண்டு மாவட்ட விளையாட்டு வளாகங்களிலும், மாவட்டங்களின் இதர பகுதிகளிலும் கண்டறியப்படும் விளையாட்டுத் திறன்மிக்கவர்களுக்குப் பயிற்சி அளிக்க இந்நிலை வழிவகுக்கும். நிலை-1-ல் அளிக்கப்பட்ட நுணுக்கங்களைவிட இந்நிலையில் அதிநவீன நுணுக்கங்களைப் பயிற்றுவிப்பது குறிக்கோளாகும்.

இரண்டாம் நிலையில் விளையாட்டுப் போட்டிகள் நடத்த உதவும் விளையாட்டுக் கட்டமைப்புகள் உள்ளடங்கும். மாவட்ட அளவில் விளையாட்டை ஊக்குவிக்க விரும்பும் விளையாட்டு ஆர்வலர்களும், இந்நிலையில் கண்டறியப்பட்டு ஊக்குவிக்கப்படுவர். அனைத்து மாவட்ட விளையாட்டு அலுவலர்களும் மாவட்டத்தில் பிரபலமான விளையாட்டுகளைக் கண்டறிந்து அதனை முன்னேற்றத் தகுந்த விளையாட்டு வரைபடம் தயாரிக்கும் பணியில் தொடர்ந்து ஈடுபடுத்தப்படுவர். மேலும் மாவட்டத்தில் பிரபலமான விளையாட்டுகளுக்கான ஒரு வரையறுக்கப்பட்ட திட்டத்தினை மேம்படுத்தும் பணியிலும் ஈடுபடுத்தப்படுவர்.

**நிலை—3**

### 2.7 மாநில அளவில் விளையாட்டில் சிறந்து விளங்குதல்

இப்பிரமிடின் அடுத்த நிலையாவது மாநில அளவில் விளையாட்டில் சிறந்து விளங்குதல் ஆகும். இந்த நிலையில் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கு தகுதிவாய்ந்த விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகளைக் கண்டறிந்து அவற்றினை ஒருங்கிணைத்து, அதற்குத் தகுந்த விளம்பரம் அளிக்கப்படும். மாநில அளவில் சேம்பியன்களாகத் திகழ்வதற்குத் தகுதி படைத்த மாணவ, மாணவிகளின் திறனை மேம்படுத்த தனிக் கவனம் செலுத்தப்படும். சிறப்பு வாய்ந்த அகாடமிகள், விளையாட்டுப் பள்ளிகள், விளையாட்டு விடுதிகள் மற்றும் பிற விளையாட்டுத் திறன் வளர்க்கும் திட்டங்கள் மாநிலம் முழுவதும் ஊக்குவிக்கப்படும். இங்கு பயிற்சி அளிப்பதில் முன்னுரிமை வழங்கப்பட்டு, திறமை வாய்ந்த



பயிற்றுநர்கள் எங்கு செயல்பட்டு வந்தாலும் அவர்களது சேவையைப் பயன்படுத்தி மாநில அளவில் தனிச் சிறப்பு வாய்ந்த வீரர்களை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும். விளையாட்டு மருத்துவ வல்லுநர்கள், ஊட்ட உணவு வல்லுநர்கள், மனோதத்துவ நிபுணர்கள், உடல் தகுதித் திறன் நிபுணர்கள், முடநீக்கியல் நிபுணர்கள் கண்டறியப்படுவர். மாநில அளவிலான விளையாட்டுகளுக்கு உதவி புரியும் விளையாட்டு ஆர்வலர்கள் ஒருங்கிணைக்கப்பட்டு ஊக்குவிக்கப்படுவார்கள். மேலும், மாநில அளவில் திறமையுள்ள வீரர்கள் மற்றும் வீராங்கனைகளை ஊக்குவித்து அவர்களைப் பணியில் அமர்த்துபவர்களைக் கண்டறிவதன்மூலம், சேம்பியன் விளையாட்டு வீரர்களுக்கு பணிவாய்ப்பு கிடைக்கச் செய்ய இயலும்.

**நிலை—4**

### 2.8 தேசிய அளவிலான செயல்பாடுகள்

இந்நிலையில் தேசிய அளவிலான செயல்பாடுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும். தேசிய அளவிலான வீரர்களைப் பயிற்றுவிக்கவும், மேம்படுத்துவதற்குமான ஒருங்கிணைந்த முயற்சிகள் ஊக்குவிக்கப்படும். தேசியத் திட்டத்தில் பயிற்சி அளிக்கும் வண்ணம் பயிற்றுநர்களது பயிற்சி நுணுக்கங்கள் அவ்வப்போது நவீனப்படுத்தப்படும். தேசிய அளவில் நடத்தப்படும் போட்டிகளுக்கான விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகள் கண்டறியப்பட்டு, மேம்படுத்தப்படும். விளையாட்டு வீரர்கள் மற்றும் விளையாட்டுப் பிரியர்களிடையே உந்துதலையும், போட்டி மனப்பான்மையும் ஏற்படுத்த தேசிய அளவிலான போட்டிகளைத் தமிழ்நாட்டில் நடத்திட ஊக்குவிக்கப்படும். இந்நிலையில், விளையாட்டு வீரர்களிடையே உள்ள திறமைகளை மேம்படுத்த விளையாட்டில் ஏற்படும் காயங்கள், விளையாட்டு மருத்துவம், மனோதத்துவ சேவை ஆகிய வல்லுநர்களின் சேவைகள் மிகவும் தேவையாக உள்ளது. முடிந்த அளவில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், அயல்நாட்டு வல்லுநர்களின் சேவையைப் பயன்படுத்தி இங்குள்ள பயிற்றுநர்களின் தரத்தினை உயர்த்துவது நீண்ட நாட்களுக்குப் பலன் அளித்திடும். நிலை-4-ன்கீழ் தெளிவாகக் கண்டறியப்பட்ட அமலாக்கத்தில் உள்ள திட்டங்கள் தேசிய அளவில் சாதனை புரிபவர்களைத் தேர்வு செய்வதில் கவனம் செலுத்திடும். பலன் அளிக்கக் கூடிய செலவினமாக இருப்பதே இதன் நோக்கமாகும். மேலும், இத்திட்டத்தின் இடையில் மறுமதிப்பீடு

செய்யப்பட்டு எங்கெங்கு தேவையோ அங்கங்கு திருத்தங்கள் கொண்டு வரப்படும். தேசிய அளவிலான போட்டிகளில் ஆர்வமுள்ள விளையாட்டு ஆர்வலர்கள் கண்டறியப்பட்டு, ஊக்குவிக்கப்படுவர். நிகழ்ச்சிகளைப் பொறுப்பேற்று நடத்தும் நிறுவனங்கள், விளம்பர வல்லுநர்கள், விளையாட்டை ஊக்குவிக்கும் இதர நிறுவனங்களுக்கு தேசிய அளவிலான போட்டிகளை நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் அறிவிக்கப்படும்.

**நிலை–5**

**2.9 சர்வதேச அளவிலான சாதனைகள்**

பிரமிடின் மிக முக்கிய இந்நிலை, கீழ் உள்ள நிலைகளின் சரியான ஒருங்கிணைப்பால் பலப்படுத்தப்படுகிறது. இந்நிலையில், சர்வதேச அளவில் வெற்றிகள் பெறுவது மற்ற நான்கு நிலைகளிலிருந்தும் இயற்கையாக வெளிப்பட்டுவரும் இறுதி முடிவாகும். இருப்பினும், இந்நிலையில் தேவைகள் மிக அதிக அளவில் இருப்பதால் மற்ற நிலைகளிலுள்ள முயற்சிகளைவிட சிறப்பு முயற்சிகள் தேவைப்படும். விளையாட்டுக் கட்டமைப்புகள் சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடத்திட பன்னாட்டு அளவிலான இணையங்கள் வகுத்துள்ள பல்வேறு நிபந்தனைகளின்படி அமைய வேண்டும். இந்நிலையில் சர்வதேசத் தரப்போட்டிகளை தமிழ்நாட்டில் நடத்த ஊக்குவிக்கப்படும். மேலும், சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் ஆர்வமுள்ள விளையாட்டு வீரர்கள் ஒருங்கிணைக்கப்படுவர். இந்நிலையில், திறமையை மேம்படுத்துவதற்கு அதிநவீனப் பயிற்சி மற்றும் வெளிநாடுகளில் விளையாட்டில் பங்கேற்பது முக்கியமானதாக இருக்கும். உலக அளவில் பயிற்சிக்கான ஆராய்ச்சி வசதிகளைக் கொண்டுள்ள சிறப்பு வாய்ந்த நிறுவனங்கள் தொடர்பு கொள்ளப்படும்.

2.10 தமிழ்நாட்டைச் சார்ந்த விளையாட்டு வீரர்கள் சர்வதேசப் போட்டிகளான ஒலிம்பிக் போட்டிகள், காமன்வெல்த் மற்றும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் பெறும் உலகத் தரம் வாய்ந்த வீரர்களாகத் திகழ தகுதி படைத்த விளையாட்டு வீரர்களுக்கும், பயிற்றுநர்களுக்கும் வெளிநாடுகளில் பயிற்சியும், பங்கேற்பும் அளிக்கப்பட வேண்டும். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் இதனைக் கருத்தில்கொண்டு, சில குறிப்பிட்ட ஒலிம்பிக் விளையாட்டுகளில் அயல்நாடுகளில் விளையாடவும், பயிற்சியாளர்கள் அயல்நாட்டில் உள்ள பயிற்சி நிறுவனங்களில்



பயிற்சி பெறவும் நிதியுதவி வழங்கும். இந்நிலையில் தொழில்முறை அணுகுமுறை முக்கியப் பங்கு வகிக்கிறது. இத்தொழில் முறை அணுகுமுறையை அடைவதற்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் உரிய முயற்சிகளை மேற்கொள்ளும்.

2.11 குறிப்பாக, விளையாட்டில் உன்னத நிலையை அடைய அனைத்து சமூக விளையாட்டு முயற்சிகளையும் ஒருங்கிணைத்துச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. தகுந்த அடிப்படைப் பயிற்சியின்றி இப்பிரமிடின் உச்ச நிலையை அடைய இயலாது என்பது சொல்லித் தெரிவதில்லை. எனவே, அடிப்படை மிகவும் முக்கியமானதாகும். கீழ்நிலையின் பலமே மேல்நிலையைப் பலப்படுத்தும். கீழ்நிலையில் சிறந்த ஒருங்கிணைந்த முயற்சி இருப்பின் மேல்நிலைகளில் சிறந்த முன்னேற்றம் காணலாம். திடமான அடித்தளம் மற்றும் ஒருங்கிணைந்த தலைமையும் கொண்ட இப்பிரமிடு மாதிரி, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கொள்கைகள் மற்றும் திட்டங்களை உறுதிசெய்யும். இவ்வாறு செய்தால் மட்டுமே ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கங்களை வெல்ல இயலும். விளையாட்டுக் கட்டமைப்புகள், போட்டிகள், விளையாட்டுத் திறன் கண்டறிதல், விளையாட்டுத் திறன் முன்னேற்றம், பயிற்சி, சிறப்பு வல்லுநர்கள் உதவி எதுவாயினும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், மேலே குறிப்பிட்ட நிலைகளின்படி, தனது செயல்பாட்டினை ஒருங்கிணைத்துச் செயல்பட்டு நாட்டில் நமது மாநிலம் விளையாட்டில் சிறந்த மாநிலமாகத் திகழச் செய்வதே ஒரே குறிக்கோளாகும்.

2.12 தனது செயல்பாட்டிடுத்தத் திறன் பற்றிய உத்திகளை வெளியிட்டு அதற்கேற்ப செயல்திட்டங்களை நடத்தும் எந்த ஒரு நிறுவனமும் தனது குறிக்கோளினை அடைய முடியும். நமது செயல்பாடுகளும் அவ்வாறே பலன்தரும் வகையில் அறுதியிடப்பட்டு, அச்செயல்பாடுகள் மேலே குறிப்பிட்ட வெற்றிக் கனியை சர்வதேச அளவில் அடைய தமிழ்நாடு, விளையாட்டில் முதன்மையாகத் திகழும் வண்ணம் தமிழ்நாட்டு விளையாட்டுத் திட்டமும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

[2007 ஏப்ரல் 28

## அத்தியாயம்—3

### விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

ஒரு நாட்டில் விளையாட்டுகளில் பங்கேற்கும் மனப்பான்மையினை ஊக்குவிப்பதில் விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

முன் அத்தியாயத்தில் தெரிவித்துள்ள நிலைகளுடன் இணைக்கும் வகையில் தொலைதூர நோக்குடன் ஏற்படுத்தப்பட்ட உத்திகளைக் கருத்தில்கொண்டு, தமிழ்நாட்டில் அமைந்துள்ள விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகளின் விவரங்கள் வருமாறு:

**நிலை—5**

**3.1 பன்னாட்டுத் தரத்திலான—வசதிகள்**

***1. ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், பெரியமேடு, சென்னை:*** இவ்விளையாட்டரங்கம் சுமார் 40,000 இருக்கை வசதியைக் கொண்டு பன்னாட்டுத் தரத்தில் கட்டப்பட்டது. மேலும் கால்பந்து ஆடுகளம் (புல்வெளியுடன்), தடகள ஓடுகளத்துடன் (400 மீ. 8 ஓடுகளப் பாதையுடன் செயற்கை இழை ஓடுகளம்), மின்னொளி அமைப்பு மற்றும் மின்னணு கணக்கியல் கருவி ஆகிய வசதிகளையும் கொண்டது. மேலும், இவ்விளையாட்டரங்கில் ஒரு சதுரங்கக் கூடம், ஒரு பளுதூக்கும் கூடம் மற்றும் மேசைப் பந்து விளையாட்டிற்கான ஒரு கூடம் மற்றும் உடற்பயிற்சிக் கூடமும் அமைந்துள்ளன.

***2. பல்நோக்கு உள் விளையாட்டு அரங்கம், பெரியமேடு, சென்னை:*** 8,000 இருக்கை வசதியைக் கொண்ட இவ்விளையாட்டரங்கம் கையுந்துபந்து, கூடைப்பந்து, மேசைப்பந்து, சிறகுப்பந்து, குத்துச்சண்டை, மல்யுத்தம், பளுதூக்குதல் போன்ற விளையாட்டுக்களுக்கான வசதிகளுடன் குளிர்சாதன வசதியுடன் கூடியது. தற்போது இந்த வளாகத்தில் ஸ்கேட்டிங் ரிங்க் மற்றும் ரோலர் ஹாக்கி ஸ்கேட்டிங் ரிங்க் போன்ற வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.



2007 ஏப்ரல் 28]

***3. வளைகோல்பந்து விளையாட்டரங்கம், எழும்பூர், சென்னை:*** இவ்விளையாட்டரங்கம் 4,000 இருக்கை வசதியைக் கொண்டது. வளைகோல்பந்து ஆடுகளம் புதிய "மெகா டர்ப் செயற்கை புல்வெளி" வளைகோல்பந்து ஆடுகளம் பயிற்சி வளைகோல்பந்து ஆடுகள வசதியுடன் 30 x 15 மீ. அளவில் பயிற்சி வளைகோல்பந்து ஆடுகளத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த வளைகோல்பந்து ஆடுகளத்தில் செயற்கை மின்னொளி வசதி அமைக்கப்பட்டுள்ளது. உடற்பயிற்சி மையமும் அமைக்கப்பட்டுள்ளது.

***4. நீச்சல் குள வளாகம், வேளச்சேரி, சென்னை:*** இவ்விளையாட்டரங்கம் 4,000 இருக்கை வசதியுடன் ஒரு போட்டிக் குளம் - (50 x 25 மீ.), ஒரு பாய்ச்சல், குளம் - (18 x 25 மீ.) மற்றும் ஒரு பயிற்சி குளம் - (20 x 25 மீ.) ஆகிய வசதிகளைக் கொண்டது. ஜிம்னாசிய விளையாட்டிற்கான கூடமும் இவ்வளாகத்தில் உள்ளது.

***5. டென்னிஸ் விளையாட்டரங்கம், நுங்கம்பாக்கம் சென்னை:*** இவ்விளையாட்டரங்கத்தில் மத்திய ஆடுகளத்தில் 5,000 இருக்கை வசதியும், 6 பயிற்சி ஆடுகளங்களில் 2,000 இருக்கை வசதியும் உள்ளன. இந்தச் செயற்கை இழை . ஆடுகளங்கள் சர்வதேச அளவிலுள்ள ஆடுகளங்களுக்கு இணையாகவும், மின்னொளி அமைப்புடன் கூடியதாகவும் உள்ளன.

***6. ஸ்குவாஷ் (சுவர்பந்து) ஆடுகளம், மாநில விளையாட்டு வளாகம்: நேரு பூங்கா, சென்னை:*** தனியார் கூட்டாண்மையுடன் எட்டு சர்வதேசத் தரத்திலான ஸ்குவாஷ் ஆடுகளங்கள் மாநில விளையாட்டு வளாகம், சென்னை நேரு பூங்காவில் தமிழ்நாடு மாநில ஸ்குவாஷ் ராக்கெட் கழகத்துடன் இணைந்து அமைக்கப்பட்டுள்ளன.

***7. மதுரை மற்றும் கோவையில் செயற்கை இழை ஓடுகளப் பாதை:*** - மதுரை ரேஸ் கோர்ஸ் விளையாட்டரங்கில் செயற்கை இழை ஓடுதளப் பாதை மேம்படுத்தப்பட்டுள்ளது. மேலும், ஒரு செயற்கை இழை ஓடுதளப் பாதை கோவை நேரு விளையாட்டரங்கில் மேம்படுத்தப்பட உள்ளது.

8. பாளையங்கோட்டையில் உள்ள அண்ணா விளையாட்டரங்கத்தில் செயற்கை இழை வளைகோல்பந்து ஆடுகளம் மேம்படுத்தப்பட்டுள்ளது.

9. ஒரு பகுதி கூட்டுக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டமாக சென்னை ஒய்.எம்.சி.ஏ. உடற்பயிற்சிக் கல்லூரியில் செயற்கை இழை வளைகோல்பந்து ஆடுகளம் மேம்படுத்தப்பட்டுள்ளது.

### 3.2 சென்னை நேரு விளையாட்டரங்கில் செயற்கை இழை ஓடுதளத்தைப் புதுப்பித்தல்

சென்னை நேரு விளையாட்டரங்கில் செயற்கை இழை ஓடுதளம் 1993-ல் நிறுவப்பட்டது. இது தற்போது தனது நிலையை இழந்துள்ளது. பொதுவாக செயற்கை இழை ஆடுதளங்களின் செயல்பாட்டுக் காலம் ஏழு ஆண்டுகளாகும். இந்த நேரு விளையாட்டரங்கில் உள்ள செயற்கை இழை ஓடுதளத்தில் இதுவரை பல்வேறு பன்னாட்டு மற்றும் தேசிய அளவிலான போட்டிகள் நடத்தப்பட்டுள்ளன. எனவே, இந்தச் செயற்கை இழை ஆடுதளத்தின் நிலை குறைந்துள்ளது. இந்நிலையில், எதிர்வரும் ஆண்டுகளில் மேலும் பல்வேறு பன்னாட்டு அளவு, தேசிய அளவு மற்றும் இதரப் போட்டிகளை நடத்துவதற்கு ஏதுவாக இந்தச் செயற்கை இழை ஓடுதளம் ரூ.250.00 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்டு வருகிறது.

### 3.3 செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளங்கள் திருநெல்வேலி மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்களில் நிறுவுதல்

தமிழ்நாட்டின் சிறப்புமிக்க விளையாட்டுகளில் டென்னிஸ் விளையாட்டும் ஒன்றாகும். இவ்விளையாட்டில், தமிழ்நாடு பல்வேறு பன்னாட்டுப் போட்டியாளர்களை உருவாக்கியுள்ளது. இந்த விளையாட்டு பொதுவாக மண்தரை தளம், புல்தரை தளம், செயற்கை இழை தளம் ஆகியவற்றில் ஆடப்படுகின்றது. தற்போது தமிழ்நாட்டில் டென்னிஸ் விளையாட்டு, பள்ளிகளுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகளில் சேர்க்கப்பட்டுள்ளது. டென்னிஸ் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் பள்ளிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்நிலையில் டென்னிஸ் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்போர் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதும், இவ்விளையாட்டில் பன்னாட்டு அளவில் சாதனை புரியும் வழக்கத்தை மேம்படுத்துவதும் மிகவும் அவசியமாகிறது. இதனைக் கருத்திற்கொண்டு திருநெல்வேலி மற்றும் சேலம் மாவட்டங்களில் ரூ.14.00 இலட்சம் செலவில் செயற்கை இழை டென்னிஸ் ஆடுதளங்கள் அமைக்கப்படுகின்றன.

### 3.4 கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நீச்சல் குளம் அமைத்தல்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கிருஷ்ணகிரி மாவட்டப் பிரிவு அலுவலகம் அண்மையில் அமைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து கிருஷ்ணகிரியில் மாவட்ட விளையாட்டு



வளாகம், ஓர் உள் விளையாட்டரங்கத்துடனும், ஒரு திறந்தவெளி விளையாட்டரங்கம், 400 மீ. ஓடுதளம், கால்பந்து ஆடுகளம், கூடைப்பந்து ஆடுகளம், கபாடி, கோ-கோ ஆடுகளம் மற்றும் விளையாட்டுக் கருவிகள் வைக்கும் அறை, குளியலறை கழிப்பிட வசதிகளுடன் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளன. தற்போது கிருஷ்ணகிரியில் 25 மீ. x 13 மீ. என்ற அளவிலான ஒரு நீச்சல் குளம் ரூ.60.00 இலட்சம் செலவில் கட்டப்பட்டு வருகிறது.

### 3.5 காஞ்சிபுரம் மற்றும் சென்னை தெற்காசிய விளையாட்டுக் கிராமம் மற்றும் அரசினர் தோட்டம் ஆகியவற்றில் இறகுப்பந்து உள்ளரங்கம் கட்டுதல்

உள்ளரங்க விளையாட்டான இறகுப்பந்து விளையாட்டினை மேம்படுத்துவதற்கு "இறகுப்பந்து உள் விளையாட்டரங்கம்" மிகவும் அவசியமாகிறது. எனவே காஞ்சிபுரம் மாவட்டம், சென்னையில் உள்ள தெற்காசிய விளையாட்டுக் கிராமம் மற்றும் அரசினர் தோட்டம் ஆகிய மூன்று இடங்களில் இறகுப்பந்து உள் விளையாட்டரங்கங்கள் ரூ.55.00 இலட்சம் செலவில் கட்டப்பட்டு வருகின்றன.

### 3.6 மாவட்டத் தலைநகரங்களில் உள்ள விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகள்

| வ. எண் | மாவட்டம் | நிலை 4 தேசிய அளவில் | நிலை 3 மாநில அளவில் | நிலை 2 மாவட்ட அளவில் | நிலை 1 அடிப்படை வசதிகள் | பிற வசதிகள்/ குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1 | சென்னை | அண்ணா நீச்சல் குளம் 50x21 மீ. மற்றும் 25x13 மீ. நீச்சல் குளம் | — | ஷெனாய் நகர் நீச்சல் குளம் 36x13 மீ. | ஒரு கால்பந்து ஆடுகளம் நான்கு கிரிக்கெட் பயிற்சி பெறும் திடல்கள் அரசு மேல்நிலைப் பள்ளி, புதூர் (ஒருமித்த உடன் படிக்கையுடன்) | 5-ம் நிலை ஆக பன்னாட்டுத் தரம் வாய்ந்த விளையாட்டு வசதிகள் சென்னையில் மட்டும் கொடுக்கப் பட்டுள்ளது |

| வ. எண் | மாவட்டம் | நிலை 4 தேசிய அளவில் | நிலை 3 மாநில அளவில் | நிலை 2 மாவட்ட அளவில் | நிலை 1 அடிப்படை வசதிகள் | பிற வசதிகள்/ குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1 | மாநில விளை யாட்டு வளாகம், சென்னை | 2 செயற்கை இழை டென்னிஸ் ஆடு களங்கள் | 400 மீ. தடகள ஓடுதளம் ஒரு கால்பந்து ஆடுகளம் 2 கூடைப்பந்து ஆடுகளம் 2 கைப்பந்து ஆடுகளம் | ஒரு கபாடி ஆடுகளம் | — | ஒரு ஹாக்கி பயிற்சி ஆடுகளம் |
| 2 | திருவள்ளூர் | முகப்பேரில் இரண்டு செயற்கை இழை டென்னிஸ் ஆடு களங்கள் | 400 மீ. தடகள ஓடுதளம் ஒரு கால்பந்து ஆடுகளம் 2 கூடைப்பந்து ஆடுகளம் 2 கையுந்துப் பந்து ஆடுகளம் (பணி நடைபெற்று வருகிறது) | முகப்பேரில் ஒருமித்த உடன்–படிக்கை யுடன் 25 x 13 மீ. நீச்சல் குளம் உள்ளது. ஒரு சிறகுப்பந்து உள் விளையாட்டு அரங்கம் கட்ட திட்டமிடப்–பட்டுள்ளது. | — | — |
| 3 | காஞ்சிபுரம் | இரண்டு செயற்கை இழை டென்னிஸ் ஆடு களங்கள் | 400 மீ. தடகள ஓடுதளம் ஒரு கால்பந்து ஆடுகளம் 1 வளைகோல் பந்து ஆடுகளம் 1 கூடைப்பந்து மைதானம் 2 கையுந்துப்பந்து மைதானம் ஸ்குவாஷ் கோர்ட் | 1 கபாடி மைதானம் குத்துச் சண்டை மைதானம் | 1 பூப்பந்து மைதானம் | — |





| வ. எண் | மாவட்டம் | நிலை 4 தேசிய அளவில் | நிலை 3 மாநில அளவில் | நிலை 2 மாவட்ட அளவில் | நிலை 1 அடிப்படை வசதிகள் | பிற வசதி கள்/குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 4 | வேலூர் | — | — | ஒரு கால்பந்து ஆடுகளம் மினி விளையாட்டு அரங்கம், ஜோலார்–பேட்டை | நேதாஜி அரங்கத்தில் 400 மீ. தடகள ஓடுதளம் | — |
| 5 | கடலூர் | இரண்டு செயற்கை இழை டென்னிஸ் ஆடு களங்கள் | 400 மீ. தடகள ஓடுதளம் ஒரு கால்பந்து ஆடுகளம் 1 வளைகோல் பந்து ஆடுகளம் 1 கூடைப்பந்து மைதானம் 1 கையுந்துப் பந்து மைதானம் ஸ்குவாஷ் கோர்ட் | 25 மீ. நீச்சல் குளம் மினி விளையாட்டு அரங்கம், விருத்தா –சலம் | மல்டி ஜிம் ஹால் சிறகுப்பந்து உள் விளையாட்டு அரங்கம் குத்துச் சண்டை மைதானம் | — |
| 6 | விழுப்புரம் | — | 400 மீ. தடகள ஓடுதளம் ஒரு கால்பந்து ஆடுகளம் 1 கையுந்துப் பந்து மைதானம் | — | மல்டி ஜிம் ஹால் | — |
| 7 | நாகப்–பட்டினம் | | 400 மீ. தடகள ஓடுதளம் ஒரு கால்பந்து ஆடுகளம் ஸ்குவாஷ் கோர்ட் | 25 மீ. நீச்சல் குளம் மினி விளையாட்டு அரங்கம், தரங்கம்பாடி | மல்டி ஜிம் ஹால் குத்துச் சண்டை மைதானம் திறந்த வெளி விளையாட்டு அரங்கம், இராஜன் தோட்டம் | — |

| வ. எண் | மாவட்டம் | நிலை 4 தேசிய அளவில் | நிலை 3 மாநில அளவில் | நிலை 2 மாவட்ட அளவில் | நிலை 1 அடிப்படை வசதிகள் | பிற வசதிகள்/ குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 8 | தஞ்சாவூர் | — | 400 மீ. தடகள ஓடுதளம்<br>ஒரு கால்பந்து ஆடுகளம்<br>1 வளைகோல் பந்து ஆடுகளம்<br>1 கூடைப் பந்து மைதானம்<br>1 கையுந்துப் பந்து மைதானம்<br>ஸ்குவாஷ் கோர்ட் | 25 மீ. நீச்சல் குளம் | மல்டி ஜிம் ஹால்<br>குத்துச் சண்டை மைதானம் | — |
| 9 | திருச்சி | உள் விளையாட்டு அரங்கப் பணி நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது | 400 மீ. தடகள ஓடுதளம்<br>ஒரு கால்பந்து ஆடுகளம்<br>1 வளைகோல் பந்து ஆடுகளம்<br>1 கூடைப் பந்து மைதானம்<br>1 கையுந்துப் பந்து மைதானம்<br>டென்னிஸ் கோர்ட் | 25 மீ. நீச்சல் குளம் | மல்டி ஜிம் ஹால்<br>செயற்கை ஹாக்கி பயிற்சி ஆடுகளம் 25X30 மீ.<br>குத்துச் சண்டை மைதானம் | விளையாட்டு விடுதி மாணவர் களுக்கான புதிய விளையாட்டு விடுதி |
| 10 | புதுக்-கோட்டை | — | 400 மீ. தடகள ஓடுதளம்<br>ஒரு கால்பந்து ஆடுகளம்<br>1 கூடைப்பந்து மைதானம்<br>1 கையுந்துப் பந்து மைதானம் | 25 மீ. நீச்சல் குளம் | மல்டி ஜிம் ஹால் | — |



| வ. எண் | மாவட்டம் | நிலை 4 தேசிய அளவில் | நிலை 3 மாநில அளவில் | நிலை 2 மாவட்ட அளவில் | நிலை 1 அடிப்படை வசதிகள் | பிற வசதி கள்/குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 11 | பெரம்பலூர் (இ) அரியலூர் | — | 400 மீ. தடகள ஓடுதளம்<br>ஒரு கால்பந்து ஆடுகளம்<br>1 கூடைப் பந்து மைதானம்<br>1 கையுந்துப் பந்து மைதானம் | மினி விளையாட்டு அரங்கம், பெரம்பலூர் | மல்டி ஜிம் ஹால்<br>செயற்கை ஹாக்கிப் பயிற்சி ஆடுகளம் 25x30 மீ. | — |
| 12 | திண்டுக்கல் | ஒரு கால்பந்து ஆடுகளம் (புல்தரை-யுடன்) | 400 மீ. தடகள ஓடுதளம்<br>1 கூடைப் பந்து மைதானம்<br>1 கையுந்துப் பந்து மைதானம் | 25 மீ. நீச்சல் குளம் (பணி நடைபெற்று வருகிறது) | மல்டி ஜிம் ஹால் | — |
| 13 | மதுரை | இரண்டு செயற்கை இழை டென்னிஸ் ஆடு களங்கள் | ஒரு கால்பந்து ஆடுகளம்<br>2 வளைகோல் பந்து ஆடுகளம்<br>1 கூடைப் பந்து மைதானம்<br>1 கையுந்துப் பந்து மைதானம் | 25 மீ. நீச்சல் குளம் | சிறகுப்பந்து உள் விளையாட்டு அரங்கம்<br>மல்டி ஜிம் ஹால்<br>செயற்கை ஹாக்கிப் பயிற்சி ஆடுகளம் 25x30 மீ. மதுரை & வாடிப்பட்டி | விளையாட்டு விடுதி மாணவர் களுக்கான புதிய விளையாட்டு விடுதி |

[2007 ஏப்ரல் 28

| வ. எண் | மாவட்டம் | நிலை 4 தேசிய அளவில் | நிலை 3 மாநில அளவில் | நிலை 2 மாவட்ட அளவில் | நிலை 1 அடிப்படை வசதிகள் | பிற வசதி கள்/குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 14 | விருதுநகர் | — | 400 மீ. தடகள ஓடுதளம் ஒரு கால்பந்து ஆடுகளம் 1 வளைகோல் பந்து ஆடுகளம் 1 கூடைப் பந்து மைதானம் 1 கையுந்துப் பந்து மைதானம் ஸ்குவாஷ் கோர்ட் | மினி விளையாட்டு அரங்கம், சிவகாசி | மல்டி ஜிம் ஹால் செயற்கை ஹாக்கிப் பயிற்சி ஆடுகளம் 25 x30 மீ. குத்துச் சண்டை மைதானம் | — |
| 15 | தூத்துக்குடி | — | 400 மீ. தடகள ஓடுதளம் ஒரு கால்பந்து ஆடுகளம் 1 வளைகோல் பந்து ஆடுகளம் 1 கூடைப் பந்து மைதானம் 1 கையுந்துப் பந்து மைதானம் ஸ்குவாஷ் கோர்ட் | 25 மீ நீச்சல் குளம் | மல்டி ஜிம் ஹால் செயற்கை ஹாக்கிப் பயிற்சி ஆடுகளம் 25x30 மீ. குத்துச் சண்டை மைதானம் | — |



2007 ஏப்ரல் 28]

| வ. எண் | மாவட்டம் | நிலை 4 தேசிய அளவில் | நிலை 3 மாநில அளவில் | நிலை 2 மாவட்ட அளவில் | நிலை 1 அடிப்படை வசதிகள் | பிற வசதி கள்/குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 16 | திருநெல்–வேலி | — | 2 கூடைப் பந்து மைதானம் 2 கையுந்து பந்து மைதானம் 400 மீ. தடகள ஓடுதளம் ஒரு கால்பந்து ஆடுகளம் (புல்தரை –யுடன்) | மினி விளையாட்டு அரங்கம், ஆலங்குளம் மற்றும் கல்லிடைக் குறிச்சி | சிறகுப்பந்து உள் விளையாட்டு அரங்கம் மல்டி ஜிம் ஹால் குத்துச் சண்டை மைதானம் | விளையாட்டு விடுதி செயல்பட்டு வருகிறது |
| 17 | கன்னியா குமரி | — | 400 மீ. தடகள ஓடுதளம் ஒரு கால்பந்து ஆடுகளம் (புல் தரையுடன்) 2 கூடைப் பந்து மைதானம் 2 கையுந்துப் பந்து மைதானம் ஸ்குவாஷ் கோர்ட் | 25 மீ. நீச்சல் குளம் | மல்டி ஜிம் ஹால் குத்துச் சண்டை மைதானம் | — |
| 18 | தருமபுரி | — | 400 மீ. தடகள ஓடுதளம் 1 கால்பந்து ஆடுகளம் 1 கூடைப் பந்து மைதானம் 1 கையுந்துப் பந்து மைதானம் | 25 மீ. நீச்சல் குளம் உள் விளையாட்டு அரங்கம் கட்ட திட்டமிடப் பட்டுள்ளது. | மல்டி ஜிம் ஹால் குத்துச் சண்டை மைதானம் | — |

| வ. எண் | மாவட்டம் | நிலை 4 தேசிய அளவில் | நிலை 3 மாநில அளவில் | நிலை 2 மாவட்ட அளவில் | நிலை 1 அடிப்படை வசதிகள் | பிற வசதி கள்/குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 19 | சேலம் | உள் விளையாட்டு அரங்கம் | ஒரு கால்பந்து ஆடுகளம் 1 கூடைப் பந்து திடல் 1 கையுந்துப் பந்து மைதானம் ஸ்குவாஷ் கோர்ட் | 25 மீ. நீச்சல் குளம் | மல்டி ஜிம் ஹால் குத்துச் சண்டை மைதானம் | — |
| 20 | ஈரோடு | — | 400 மீ. தடகள ஓடுதளம் ஒரு கால்பந்து ஆடுகளம் 2 கூடைப் பந்து மைதானம் 2 கையுந்துப் பந்து மைதானம் ஸ்குவாஷ் கோர்ட் | 25 மீ. நீச்சல் குளம் | சிறகுப்பந்து உள் விளையாட்டு அரங்கம் மல்டி ஜிம் ஹால் குத்துச் சண்டை மைதானம் | — |
| 21 | கோயம்–புத்தூர் | — | 2 கூடைப்பந்து மைதானம் 2 கையுந்துப் பந்து மைதானம் 1 கால்பந்து ஆடுகளம் (புல் தரையுடன்) | — | செயற்கை ஹாக்கிப் பயிற்சி ஆடுகளம் 25x30 மீ. மல்டி ஜிம் ஹால் | — |



| வ. எண் | மாவட்டம் | நிலை 4 தேசிய அளவில் | நிலை 3 மாநில அளவில் | நிலை 2 மாவட்ட அளவில் | நிலை 1 அடிப்படை வசதிகள் | பிற வசதி கள்/குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 22 | நீலகிரி | 2 செயற்கை டென்னிஸ் ஆடு களங்கள் | 400 மீ. தடகள ஓடுதளம் ஒரு கால்பந்து ஆடுகளம் (புல்தரை –யுடன்) 1 கூடைப்பந்து மைதானம் 1 கையுந்துப் பந்து மைதானம் 1 பல்நோக்கு உள் விளையாட்டு அரங்கம் | மினி விளையாட்டு அரங்கம், கோத்தகிரி | மல்டி ஜிம் ஹால் குத்துச் சண்டை மைதானம் | — |
| 23 | இராமநாத –புரம் | — | 400 மீ. தடகள ஓடுதளம் ஒரு கால்பந்து ஆடுகளம் 1 கூடைப்பந்து மைதானம் 1 கையுந்துப் பந்து மைதானம் | 25 மீ. நீச்சல் குளம் மினி விளையாட்டு அரங்கம், பரமக்குடி | சிறகுப்பந்து உள் விளையாட்டு அரங்கம் மல்டி ஜிம் ஹால் குத்துச் சண்டை மைதானம் | — |
| 24 | கரூர் | — | மாவட்ட விளையாட்டு வளாகம், 400 மீ. தடகள ஓடுதளம் 1 கால்பந்து ஆடுகளம் 2 கூடைப்பந்து மைதானம் 2 கையுந்துப் பந்து மைதானம் பணி நடைபெற்று வருகிறது. | — | குத்துச் சண்டை மைதானம் | — |

[2007 ஏப்ரல் 28

| வ. எண் | மாவட்டம் | நிலை 4 தேசிய அளவில் | நிலை 3 மாநில அளவில் | நிலை 2 மாவட்ட அளவில் | நிலை 1 அடிப்படை வசதிகள் | பிற வசதிகள்/குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 25 | தேனி | — | மாவட்ட விளையாட்டு வளாகம், 400 மீ. தடகள ஓடுதளம் 1 கால்பந்து ஆடுகளம் 2 கூடைப் பந்து மைதானம் 2 கையுந்துப் பந்து மைதானம் பணி நடைபெற்று வருகிறது. | 25 மீ. நீச்சல் குளம் பணி நடைபெற்று வருகிறது. | குத்துச் சண்டை மைதானம் | — |
| 26 | திருவண்ணாமலை | — | மாவட்ட விளையாட்டு வளாகம், 400 மீ. தடகள ஓடுதளம் 1 கால்பந்து ஆடுகளம் 2 கூடைப் பந்து மைதானம் 2 கையுந்துப் பந்து மைதானம் | — | குத்துச் சண்டை மைதானம் | — |



2007 ஏப்ரல் 28]

| வ. எண் | மாவட்டம் | நிலை 4 தேசிய அளவில் | நிலை 3 மாநில அளவில் | நிலை 2 மாவட்ட அளவில் | நிலை 1 அடிப்படை வசதிகள் | பிற வசதிகள்/குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 27 | திருவாரூர் | — | மாவட்ட விளையாட்டு வளாகம், 400 மீ. தடகள ஓடுதளம் 1 கால்பந்து ஆடுகளம் 2 கூடைப் பந்து மைதானம் 2 கையுந்துப் பந்து மைதானம் | — | — | — |
| 28 | சிவகங்கை | — | மாவட்ட விளையாட்டு வளாகம், 400 மீ. தடகள ஓடுதளம் 1 கால்பந்து ஆடுகளம் 2 கூடைப் பந்து மைதானம் 2 கையுந்துப் பந்து மைதானம் பணி நடைபெற்று வருகிறது. | — | குத்துச் சண்டை மைதானம் | — |

| வ. எண் | மாவட்டம் | நிலை 4 தேசிய அளவில் | நிலை 3 மாநில அளவில் | நிலை 2 மாவட்ட அளவில் | நிலை 1 அடிப்படை வசதிகள் | பிற வசதிகள்/ குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 29 | கிருஷ்ண கிரி | 2 செயற்கை டென்னிஸ் ஆடுகளம் பணி நடைபெற்று வருகிறது. | மாவட்ட விளையாட்டு வளாகம் 400 மீ. தடகள ஓடுதளம் 1 கால்பந்து ஆடுகளம் 2 கூடைப் பந்து மைதானம் 2 கையுந்துப் பந்து மைதானம் | மினி விளையாட்டு அரங்கம் தேன்கனிக் கோட்டை மற்றும் ஊத்தங்கரை உள் விளையாட்டு அரங்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன | குத்துச் சண்டை மைதானம் | — |
| 30 | நாமக்கல் | — | 400 மீ. தடகள ஓடுகளம் ஒரு கால்பந்து ஆடுகளம் மற்றும் 1 கையுந்துப் பந்து மைதானத் துடன் மாவட்ட விளையாட்டு வளாகப் பணி திட்டமிடப் பட்டுள்ளது | — | — | — |

### 3.7 விளையாட்டில் தனியார் பிரிவுகள் பங்கேற்பு / கூட்டாண்மை

கீழ்க்கண்ட விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகள் தனியார் கூட்டாண்மையுடன் மேம்படுத்தப்பட்டுள்ளன:

1. மாவட்ட விளையாட்டு வளாகம், நீலகிரி, (HADP).

2. மாதா அமிர்தானந்தமயி அறக்கட்டளையின் கூட்டாண்மையுடன் கோவையில் நீச்சல் குள வசதி.

3. முகப்பேரில் 25 மீ. நீச்சல் குள வசதி, (Dolphin Club).





## அத்தியாயம்–4

### நிலை–1 திறமை கண்டறிதல் மற்றும் திறமை மேம்படுத்துதல்

மாவட்டங்களில் விளையாட்டுத் திறன் மிக்கவர்களைக் கண்டெடுத்தல் மற்றும் திறமைமிக்கவர்களை மேம்படுத்துதல்

### 4.1 பள்ளிகளில் உடற்திறன் தேர்வுகளைப் பரவலாக நடத்தி அவர்களுக்கு விளையாட்டு அறிக்கை அட்டை வழங்குதல்

தமிழ்நாட்டில் சர்வதேச விளையாட்டு வீரர்களின் திறமையைக் கண்டறியும் திட்டத்தின்கீழ் உடற்திறன் தேர்வுப் போட்டிகளை, மாநிலத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் 6, 7 மற்றும் 8 ஆம் வகுப்புகளில் பயிலும் சிறுவர்/சிறுமியர்களுக்கு நடத்துவதன் அவசியத்தை உணர்ந்து தமிழ்நாட்டில் விளையாட்டினை வளர்ச்சியடையச் செய்ய அரசு இத்திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது. மேலும், அரசு வழிகாட்டுதலின்படி, உடற்திறன் தேர்வு முடிவுகளின் அடிப்படையில் பள்ளி சிறுவர்/சிறுமியர்களுக்கு விளையாட்டு முன்னேற்ற அறிக்கை அட்டை வழங்கப்படுகின்றது. அந்த அறிக்கை அட்டையின் அடிப்படையில் சிறுவர்/சிறுமியர்கள் அவர்களுக்கு ஏதுவான குறிப்பிட்ட விளையாட்டில் கலந்து கொள்ளவும், அவர்களின் திறமைகளை மேம்படுத்திக் கொள்ளவும் உதவுகிறது. இவ்வாறு திறன் மிக்கவர்களின் விவரம் மாநில அளவிலான விவரக் குறிப்பேட்டில் (டேட்டா பேங்க்) பதிவு செய்யப்பட்டு அதன்மூலம் வருங்கால திறன்மிக்கவர்களைக் கண்டறிய வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டம், பள்ளிக் கல்வி இயக்குநர், மெட்ரிகுலேஷன் பள்ளி இயக்குநர், தொடக்கப் பள்ளி இயக்குநர் மற்றும் ஆங்கிலோ-இந்தியன் பள்ளிகளின் ஆய்வாளர்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 4.2 கல்வி மாவட்ட அளவில் விளையாட்டுத் திறன் மிக்கவர்களைக் கண்டெடுத்தல் மற்றும் திறமை மிக்கவர்களை மேம்படுத்துதல்

அரசு வழிகாட்டுதலின்படி, தமிழகத்தில் அனைத்துப் பள்ளிகளிலும், 6, 7 மற்றும் 8 ஆம் வகுப்புகளுக்கும் சிறுவர்/ சிறுமியர்களின் உடற்திறனைக் கண்டறிய, வேகமாக ஓடுதல் (Speed), அதிகமாகத் தாக்குப்பிடிக்கும் திறனைக் கண்டறிதல் (Endurance), உடல் வலிமை கண்டறிதல் (Strength), உந்து திறன் மற்றும் சுறுசுறுப்புத் திறனைக் கண்டறிதல் (Explosive Power and Agility) ஆகிய உடற்திறன் ஆற்றல் போட்டிகள் நடத்தப்பட்டு அந்தத் தேர்வுகளில் ஒரு தேர்வில்

[2007 ஏப்ரல் 28

10-க்கு 10 என்ற மதிப்பெண் அல்லது 2 தேர்வுகளில் 10-க்கு 9 என்ற மதிப்பெண்கள் பெற்றவர்களின் பட்டியல் குறிப்பிட்ட படிவத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படுகிறது. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் 100 மீ., 200 மீ., 400 மீ. ஓட்டம், நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதல் மற்றும் குண்டு எறிதல் ஆகிய தடகளப் பிரிவுகளில் தமிழ்நாட்டில் உள்ள 64 கல்வி மாவட்டங்களில் விளையாட்டுத் திறமை உடையவர்களைக் கண்டறிய போட்டிகளை நடத்தி வருகிறது. அதனைத் தொடர்ந்து, கல்வி மாவட்டங்கள் அனைத்தையும் ஒன்று சேர்த்து 9 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு விளையாட்டுத் திறனைக் கண்டறிய மண்டல அளவில் ஏற்கெனவே மேலே குறிப்பிட்ட 6 தடகளப் பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்படுகின்றன. அப்போட்டிகளில் பங்கேற்க கல்வி மாவட்ட அளவில் முதல் 2 இடங்களில் வெற்றி பெற்ற சிறுவர்/சிறுமியர்களுக்கு வாய்ப்பளிக்கப்படுகிறது. உள்ளூர் அளவில் அதிகத் திறமை வாய்ந்த சிறார்களைக் கண்டறியும்பொருட்டு இம்முயற்சி ஒவ்வோர் ஆண்டும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**4.3 தனியார் கல்லூரிகளில் இணை விளையாட்டு மேம்பாட்டு மையங்கள்**

கல்லூரிகளில் பயிலும் விளையாட்டு வீரர்களின் திறன்களை மேம்படுத்தி அவர்கள் பல்வேறு தேசிய மற்றும் பன்னாட்டுப் போட்டிகளில் வெற்றி வாகை சூடி பெருமை சேர்த்திடும் வகையில் அரசு, வெவ்வெறு மாவட்டங்களில் அமைந்துள்ள கல்லூரிகளில் பல்வேறு விளையாட்டுகளில் உள்ள விளையாட்டுக் கட்டமைப்புக்களை பயன்படுத்த, ஏழு ஆண்கள் கல்லூரிகளிலும் மற்றும் ஐந்து பெண்கள் கல்லூரிகளிலும் இணை விளையாட்டு மேம்பாட்டு மையங்களை அமைக்க அனுமதி வழங்கியது.

மேலும், அரசு குறைந்தபட்சத் தகுதியை நிர்ணயித்தும், கல்லூரி நிர்வாகமே இத்திட்டத்தின்கீழ் இருநூற்றி முப்பது மாணவ, மாணவிகளை சேர்த்துக்கொள்ள அனுமதி வழங்கியது.

மேற்படி கல்லூரிகளைச் சார்ந்த சிறந்த விளையாட்டுத் திறன்படைத்த மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இணை விளையாட்டு மேம்பாட்டு மையங்களில் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.



2007 ஏப்ரல் 28]

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திலிருந்து கீழ்க்காணும் நிதியுதவி வழங்கப்படுகிறது.

| வ. எண் | வகை | தொகை |
|---|---|---|
| 1. | மாதம் ஒன்றுக்கு ஒரு மாணவனுக்கு உணவுப் படி | ரூ.600 |
| 2. | ஆண்டொன்றுக்கு ஒரு மாணவனுக்கு விளையாட்டு உபகரணங்கள் வாங்குவதற்கு | ரூ.500 |

*பயிற்சி:* அந்தந்த கல்லூரி நிர்வாகமே, தனது சொந்தப் பயிற்சியாளர்களைக் கொண்டு மாணவர்களுக்குப் பயிற்சியளிப்பதற்குப் பொறுப்பேற்கிறது.

**4.4 விளையாட்டுத் திறன் மேம்பாட்டு மையம்**

விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகள் அமைந்துள்ள தனியார் நிறுவனங்களுடன் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் இணைந்து விளையாட்டுத் திறன் மேம்பாட்டு மையங்களை நிறுவியுள்ளது. இம்மையங்களில் ஒவ்வொரு விளையாட்டில் திறன்படைத்த வீரர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. தற்பொழுது தமிழ்நாட்டில் 22 விளையாட்டுத் திறன் மேம்பாட்டு மையங்கள் நிறுவப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன.

**நிலை–2 மாவட்டங்களில் விளையாட்டுத் திறன்மிக்கவர்களைக் கண்டெடுத்தல் மற்றும் திறமைமிக்கவர்களை மேம்படுத்துதல்**

**4.5 வேலூர் சத்துவாச்சாரியில் பளுதூக்கும் விளையாட்டிற்கென சிறப்பு மேம்பாட்டு மையம்**

வேலூருக்கு அருகிலுள்ள சத்துவாச்சாரியை இருப்பிடமாகக் கொண்ட பளுதூக்கும் விளையாட்டு வீரர்கள் நாட்டிற்காகவும், மாநிலத்திற்காகவும், பதக்கங்களையும், புகழினையும் பெற்றுத் தந்துள்ளனர். இக்காரணத்தினால் அங்கு பளுதூக்கும் மையம் ஏற்படுத்தப்பட்டது. தகுதி வாய்ந்த பயிற்சியாளர்கள்மூலம் 30 விளையாட்டு வீரர்களுக்கு (மாணவர் மற்றும் மாணவரல்லாதோர்)

பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. 365 நாட்களுக்குப் பயிற்சி பெறுகின்றவர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.10/- வீதம் சிற்றுண்டித் தொகையாகவும், விளையாட்டு உபகரணப் படியாக ஒவ்வொருவருக்கும் ரூ.2,400/- (ஆண்டொன்றுக்கு) வழங்கப்பட்டு வருகிறது. சத்துவாச்சாரி சிறப்பு மேம்பாட்டு மையத்தில் 12 மாணவியர்களும் சேர்க்கப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறார்கள்.

**4.6 கோவையில் கூடைப்பந்து விளையாட்டிற்கென சிறப்பு மேம்பாட்டு மையம்**

கோயம்புத்தூரில் கூடைப்பந்து விளையாட்டு பிரபலமான விளையாட்டாகும். கோவை நகரைச் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து 20 வயதுக்குட்பட்ட மாணவர்கள் திறமையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு 25 மாணவர்களுக்குப் பயிற்சியளிக்க விளையாட்டுச் சிறப்பு மேம்பாட்டு மையம் ஆரம்பிக்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் கோவை நேரு விளையாட்டரங்கத்திற்குத் தினந்தோறும் பயிற்சி பெற வருகின்றார்கள். அவர்களுக்கு விளையாட்டு உபகரணப் படியாக ஆண்டொன்றுக்கு ஒரு மாணவருக்கு ரூ.3,200/-ம், வீட்டிலிருந்து பயிற்சி மையத்திற்கு வந்து செல்ல போக்குவரத்துச் செலவினமாக தினம் ஒன்றுக்கு ரூ.10/-ம், மற்றும் ஒரு மாணவனுக்குச் சிற்றுண்டிச் செலவினமாக நாள் ஒன்றுக்கு ரூ.10/-ம், ஆண்டுதோறும் 300 நாட்களுக்கு வழங்கப்படுகிறது.

**4.7 திருநெல்வேலியில் வளைகோல்பந்து விளையாட்டிற்கென சிறப்பு மேம்பாட்டு மையம்**

திருநெல்வேலி அதிக அளவில் தேசிய மற்றும் சர்வதேச அளவில் வளைகோல்பந்து விளையாட்டு வீரர்களை வழங்கியுள்ளதால், அங்கு வளைகோல்பந்து விளையாட்டிற்கென சிறப்பு மேம்பாட்டு மையம் செயல்பட்டு வருகிறது. தகுதி வாய்ந்த NIS பயிற்றுநர்களால் 30 மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு மாணவனுக்கும் ரூ.3,600/- விளையாட்டு உபகரணப்படியாக வழங்கப்படுகிறது. ஆண்டொன்றிற்கு 300 நாட்களுக்கு வீட்டிலிருந்து பயிற்சி மையத்திற்கு வந்து செல்ல போக்குவரத்துச் செலவினமாக நாளொன்றுக்கு ரூ.10/-ம், மற்றும் சிற்றுண்டிச் செலவினமாக நாளொன்றுக்கு ஒரு விளையாட்டு மாணவனுக்கு ரூ.10/-ம் வழங்கப்பட்டு வருகிறது. இவ்விளையாட்டு வீரர்கள் பாளையங்கோட்டை அண்ணா விளையாட்டரங்கில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள செயற்கை இழை புல் மைதானத்தில் பயிற்சி பெற்று வருகிறார்கள்.



**4.8 நீச்சல் பயிற்றுவித்தல்**

ஒவ்வொரு வருடமும் கோடை விடுமுறையில் நீச்சல் தெரியாதவர்களுக்கு அதனைக் கற்றுத் தருவதற்காக வேளச்சேரியில் அமைந்துள்ள நீச்சல் குள வளாகத்திலும், ஷெனாய் நகர் நீச்சல் குளத்திலும் பல பிரிவுகளாக நீச்சல் பயிற்றுவித்தல் நடத்தப்பட்டு வருகின்றன.

**நிலை–3 மாநில அளவிலான சிறப்பு அகாடமியில்–விளையாட்டுத் திறன் மிக்கவர்களைக் கண்டெடுத்தல் மற்றும் திறமைமிக்கவர்களை மேம்படுத்துதல்**

**4.9 சிறப்பு அகாடமிகள்**

சிறப்பு விளையாட்டு அகாடமிகள் உலகம் முழுவதும் தற்பொழுது பிரபலமாக உள்ளது. இந்தச் சிறப்பு விளையாட்டு அகாடமி பயிற்சி பெறுபவர்களின் திறமையை மேம்படுத்தவும் அவர்கள் வெற்றி வாகை சூடவும் வழிவகுக்கின்றது. ஒருவரின் திறமையைக் குறிப்பிட்ட விளையாட்டில் மேம்படுத்த உளவியல் தேர்வு, மன வலிமை, உடல் வலிமை, சத்துணவு, முறையான பயிற்சி, விளையாட்டு உபகரணங்கள், மருத்துவ வசதி மற்றும் விஞ்ஞான அடிப்படையிலான பயிற்சி மிக அவசியம். இதனைக் கருத்தில்கொண்டு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் பயிற்றுநர்களையும் மற்றும் உயர்ந்த திறன் பெற்றவர்களையும் கொண்டு பயிற்சிகளை அளித்து வருகிறது. இருப்பினும், அவர்களுடைய திறமைகளை வெளிக்கொணரத் தக்கவாறு ஊக்குவித்தல் அவசியமாகிறது.

கீழ்க்காணும் விளையாட்டுகளில் சிறப்பு விளையாட்டு அகாடமிகள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் நிறுவப்பட்டுள்ளன:

- மதுரையில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய அதிவேக ஓட்டம் மற்றும் குதித்தல் அகாடமி.
- சென்னையில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய கால்பந்து அகாடமி.
- சென்னை புதூர் அரசு ஆண்கள் மேனிலைப்பள்ளியில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய கிரிக்கெட் அகாடமி.

[2007 ஏப்ரல் 28

- புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கியில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய கூடைப்பந்து அகாடமி.
- சென்னை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய எறிதல் அகாடமி.
- சென்னை நுங்கம்பாக்கம் மாநகராட்சிப் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய கையுந்துபந்து அகாடமி.
- சென்னை வேளச்சேரி நீச்சல் குள வளாகத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய டைவிங் அகாடமி.
- தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய குறுந்தூர ஓட்டத்திற்கான அகாடமி.
- தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய நீண்ட தூர ஓட்டத்திற்கான அகாடமி.
- திண்டுக்கல்லில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய சிறுமியர் கால்பந்து அகாடமி.
- சென்னையில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய வளைகோல் பந்தாட்ட அகாடமி.

இந்த அகாடமிகளின் வாயிலாக நலிவுற்ற பிரிவைச் சார்ந்த சிறுவர் மற்றும் சிறுமியர்களுக்குக் கூடுதலாகச் சத்துணவு மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படுகின்றன.

இவ்வாறான அகாடமியைச் சார்ந்த விளையாட்டு வீரர்களுக்கு அடிக்கடி பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டு, அவர்களுக்குத் தேவையான விளையாட்டு உபகரணங்கள் மற்றும் அயல்நாட்டு விளையாட்டுக் காலணிகள் ஆகியவை வழங்கப்பட்டு அகாடமிகள் சிறப்புற செயல்பட்டு வருகின்றன.

**4.10 விளையாட்டுப் பள்ளிகள் மற்றும் விளையாட்டு விடுதிகள்**

நம் மாநிலத்தில் மூன்று விளையாட்டுப் பள்ளிகளும், நான்கு விளையாட்டு விடுதிகளும் அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளன.



2007 ஏப்ரல் 28]

| வ. எண் | விளையாட்டுப் பள்ளியின் பெயர் | பயிற்சியளிக்கும் வசதிகள் |
|---|---|---|
| 1. | ஒய்.எம்.சி.ஏ. விளையாட்டுப் பள்ளி, நந்தனம், சென்னை. | தடகளம், குத்துச்சண்டை, கால்பந்து, வளைகோல்பந்து |
| 2. | சுவாமி சிவானந்தா மேல்நிலைப் பள்ளி, பெரியநாயக்கன்பாளையம், கோயம்புத்தூர். | தடகளம், கூடைப்பந்து, கையுந்துபந்து மற்றும் கால்பந்து |
| 3. | நெய்வேலி பழுப்பு நிலக்கரி கழக விளையாட்டுப் பள்ளி, நெய்வேலி. | தடகளம், கூடைப்பந்து மற்றும் கால்பந்து |

| வ. எண் | விளையாட்டு விடுதி அமைந்துள்ள இடம் | பிரிவுகள் |
|---|---|---|
| 1. | திருச்சிராப்பள்ளி | தடகளம், கால்பந்து, கையுந்துபந்து மற்றும் வளைகோல்பந்து |
| 2. | மதுரை | தடகளம், கால்பந்து, கூடைப்பந்து மற்றும் கையுந்துபந்து |
| 3. | திருநெல்வேலி | தடகளம், வளைகோல்பந்து, கையுந்துபந்து |
| 4. | ஈரோடு (மாணவியருக்கு மட்டும்) பாரதி வித்யாபவன், திண்டல், ஈரோடு | தடகளம், கையுந்துபந்து கூடைப்பந்து |
| 5. | திருச்செங்கோடு ஆர்.ஆர்.மெட்ரிகுலேஷன் பள்ளி | கையுந்துபந்து |
| 6. | அரசு மேல்நிலைப் பள்ளி, புதூர், சென்னை | கிரிக்கெட் |

விளையாட்டு விடுதிகள் விளையாட்டுக் காப்பாளர்கள், பயிற்றுநர்கள் மற்றும் சமையற்காரர்கள் ஆகியோர்களைக் கொண்டு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் நேரிடை பார்வையின்கீழ் செயல்பட்டு வருகின்றன.

**தேர்வு முறை:** தேர்வுகள் இரண்டு அடுக்கு முறையில், அதாவது மாவட்ட மற்றும் மாநில அளவில் நடத்தப்பட்டு வருகின்றன.

[2007 ஏப்ரல் 28

| | |
|---|---|
| மாவட்ட அளவிலான தேர்வு | உடற்கூறு திறன் தேர்வுகள் நடத்தப்படும் |
| மாநில அளவிலான தேர்வு | குழு விளையாட்டுகளில் விளையாட்டுத் திறன் மற்றும் நுட்பம் குறித்தும், தனி நபர் விளையாட்டுகளில் திறமை குறித்தும் தேர்வுகள் நடத்தப்படுகின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் 8 ஆம் வகுப்பு, 9 ஆம் வகுப்பு மற்றும் 11-வது வகுப்பில் சேர்க்கப்பட்டு, அவர்களுக்கு தேர்ச்சி பெற்ற பயிற்றுநர்களால் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. |

விளையாட்டுப் பள்ளிகள் மற்றும் விளையாட்டு விடுதிகளில் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையான 710 மாணவர், மாணவியர்களைச் சேர்ப்பதற்கும், தங்கி பயிற்சி பெறவும், ஊட்ட உணவிற்காகவும் மற்றும் இதர செலவிற்காகவும் கீழ்க்கண்டவாறு அரசு மானியம் அளிக்கிறது:

| வ. எண். | வகை | தொகை |
|---|---|---|
| 1. | மாதம் ஒன்றிற்கு ஒரு மாணவனுக்கு வழங்கப்படுகின்ற உணவிற்கான தொகை | ரூ.1,200/- |
| 2. | சீருடை மற்றும் விளையாட்டு உபகரணங்களுக்கான படி ஒரு மாணவனுக்கு | ரூ.1,600/- |
| 3. | ஆண்டுக்கு ஒரு முறை ஒரு மாணவனுக்கு உண்டான விளையாட்டுப் பொருட்கள் வாங்க | ரூ.250/- |
| 4. | ஒரு மாணவனுக்கு ஒரு ஆண்டிற்கு வழங்கப்படுகின்ற பணித் தொகை | |
| | (அ) விளையாட்டுப் பள்ளி | ரூ.400/- |
| | (ஆ) விளையாட்டு விடுதி | ரூ.300/- |
| | (இ) விளையாட்டுப் பள்ளிகளுக்கு மட்டும் மதிப்பூதியம் | ரூ.1,200/- |



2007 ஏப்ரல் 28]

**நிலை–4 தேசிய அளவில் விளையாட்டுத் திறன் மிக்கவர்களை கண்டெடுத்தல் மற்றும் திறமைமிக்கவர்களை மேம்படுத்துதல்**

**4.11 சேம்பியன் மேம்பாட்டுத் திட்டம்**

சேம்பியன் மேம்பாட்டுத் திட்டம் சர்வதேச அளவில் பதக்கங்களை வெல்லக்கூடிய தனித் தன்மையுடைய, திறமையுள்ள விளையாட்டு வீரர்களைக் கண்டறியும் ஓர் ஒப்பற்ற திட்டமாகும். சர்வதேச அளவில் பங்கேற்று பதக்கங்களைப் பெற்று தாயகத்திற்குப் பெருமை சேர்க்கக் கூடிய சேம்பியன்களை உருவாக்க ஒரு தனிப்பட்ட திட்டமும் செயலாக்கமும் தேவைப்படுகின்றது. அதனடிப்படையில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் பல்வேறு விளையாட்டுகளில் தமிழகத்திலிருந்து பதக்கங்களைப் பெற வாய்ப்புள்ள சேம்பியன்களை இனம் கண்டது. அவ்வாறு இனம் கண்டறியப்பட்டவர்களுக்கு அவர்களுடைய திறமைகளை மேலும் வளர்க்க அவர்களது தேவைக்கேற்ப சரியான உதவிகள் வழங்கப்படுகின்றன. தேசிய அளவிலான போட்டிகளில் தங்கப் பதக்கம் பெற்றவர்கள் மேலும் சில குறிப்பிட்ட விளையாட்டுகளில் தங்கம் அல்லது வெள்ளிப் பதக்கம் பெற்றவர்கள்தான் இத்திட்டத்தின்கீழ் பயனடைய முடியும் என்ற தகுதிக் குறிப்புகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்தின்மூலம் இனம் கண்டறியப்பட்ட விளையாட்டு சேம்பியன்களுக்குத் தேவையான உதவிகளும் வழங்கப்படுகின்றன. நிதி உதவிகளைத் தவிர அவர்களுடைய உளவியல் திறன் மற்றும் உடல்ரீதியான வலிமையினை மேம்படுத்தவும், அந்தந்த விளையாட்டிற்குத் தேவையான சத்தான உணவு உட்கொள்ளும் முறையைப் பின்பற்றுதல் மற்றும் போட்டிகளில் வெற்றி வாகை பெற இயக்கும் ஆற்றல் போன்றவற்றில் (Physiological ability, Psychological Strength, Motivational aspects, Nutrition intake) மேம்படுத்த பயிற்சியையும், அதனால் அவர்கள் ஒலிம்பிக் மற்றும் சர்வதேசப் போட்டிகளில் வெற்றி வாகை சூட வேண்டும் என்ற எண்ணத்தையும் ஏற்படுத்த இயலுகிறது.

**4.12 மாநில விளையாட்டுக் கழகங்கள் வாயிலாகத் தமிழ்நாட்டில் தேசிய அளவிலான விளையாட்டுப்போட்டிகளை நடத்துதல்**

அங்கீகரிக்கப்பட்ட தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகள் சம்பந்தப்பட்ட மாநில விளையாட்டுக் கழகங்களின்

வாயிலாக தேசிய விளையாட்டு இணையங்களால் நடத்தப்பட்டு வருகின்றன. தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளை தொடர்ச்சியாக நடத்தி வரும் மாநிலங்கள் இந்திய ஒலிம்பிக் கழகம், தேசிய அளவிலான விளையாட்டு இணையங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தின் அங்கீகாரத்தைப் பெறுகின்றன. இது அணிகளைத் தேர்வு செய்தல், தேசிய அளவிலான பயிற்சி முகாம்கள், பன்னாட்டுத் தர விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்பதற்கான அணியினைத் தேர்வு செய்தல் போன்ற தருணங்களில் மிகவும் உதவியாக அமைகிறது. ஆகவே, தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளை தொடர்ச்சியான முறையில் நடத்தி அதன்மூலம் தேசிய அளவில் தமிழ்நாட்டினை பிற மாநிலங்களைக் காட்டிலும் முதன்மையான மாநிலமாகத் திகழச் செய்வது இன்றியமையாததாகிறது. பிரபலம் வாய்ந்த விளையாட்டுகள் மற்றும் பிரசித்தி பெற்ற ஒலிம்பிக் போட்டிகளைச் சார்ந்த விளையாட்டுகளை மாநில விளையாட்டுக் கழகங்கள் நடத்துவதை ஊக்குவிக்கும் பொருட்டு அவ்விளையாட்டுக் கழகங்களுக்கு அரசால் மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

**4.13 தேசிய போட்டிகளில் பதக்கம் பெறும் விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல்**

தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வெல்லும் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்துதல் மிகவும் அவசியமாகிறது. எனவே 2006-2007 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்குபெற்று தங்கப் பதக்கம், வெள்ளிப் பதக்கம் மற்றும் வெண்கலப் பதக்கம் வெல்லும் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களுக்கு கீழ்க்கண்டவாறு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படுகின்றன:

| வ. எண் | பதக்க விவரம் | விளையாட்டு உபகரணங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | தேசிய அளவு போட்டிகளில் தங்கப் பதக்கம் | டிராக் சூட்<br>டி. சர்ட்<br>அரைக் கால் சட்டை<br>பயிற்சிக் காலணி மற்றும் காலுறை | 1 ஜோடி<br>2 எண்ணிக்கை<br>2 எண்ணிக்கை<br>1 ஜோடி ஒவ்வொன்றும் |
| 2. | தேசிய அளவு போட்டிகளில் வெள்ளிப் பதக்கம் | டிராக் சூட்<br>டி.சர்ட்<br>அரைக் கால் சட்டை<br>பயிற்சிக் காலணி மற்றும் காலுறை | 1 ஜோடி<br>1 எண்ணிக்கை<br>1 எண்ணிக்கை<br>1 ஜோடி ஒவ்வொன்றும் |
| 3. | தேசிய அளவு போட்டிகளில் வெண்கலப் பதக்கம் | டிராக் சூட்<br>பயிற்சிக் காலணி மற்றும் காலுறை | 1 ஜோடி<br>1 ஜோடி ஒவ்வொன்றும் |





**4.14 தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க மாநில விளையாட்டுச் சங்கங்களுக்கு மானியம் வழங்குதல்**

மாநில அளவிலான சேம்பியன்ஷிப் விளையாட்டுப் போட்டிகள் நடத்தவும் மற்றும் தேசிய சேம்பியன்ஷிப் போட்டிகளில் தமிழக அணிகள் பங்கேற்கவும் மாநில விளையாட்டுச் சங்கங்கள் மானிய உதவிக்காக தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தை அணுகி வருகின்றன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமெனில், தமிழக அணி தேசிய சேம்பியன்ஷிப் போட்டிகளில் சிறந்த விளையாட்டு சீருடை மற்றும் விளையாட்டு உபகரணங்கள் இல்லாமல் பங்கேற்பதை நாம் காணலாம். மாநில விளையாட்டுக் கழகங்களுக்கு வழங்கப்பட்டு வரும் மானியத்தை உரிய வழிகாட்டி நெறிமுறைகளைக் கொண்டு உயர்த்தி வழங்கப்பட்டதன் வாயிலாக மேற்கண்ட குறைகள் சரிசெய்யப்பட்டு தமிழ்நாடு அணி தேசிய விளையாட்டுப் போட்டிகளில் முன்னணி மாநிலமாகத் திகழ்வது அதிகப்படுத்தப்பட்டு இருக்கிறது. தமிழ்நாடு அணிகள் தேசிய சேம்பியன்ஷிப் போட்டிகளில் கலந்து கொண்டு தமிழகத்திற்குப் பெருமை சேர்க்கும் பொருட்டு மாநில சங்கங்களுக்கு அளிக்கப்படும் மானியங்கள், இவ்வாண்டு ஒலிம்பிக் சார்ந்த விளையாட்டுப் போட்டிகளுக்கு வழிகாட்டி நெறிமுறைகள் வகுக்கப்பட்டு உயர்த்தப்பட்டுள்ளது.

**4.15 சிறப்பு விளையாட்டு விடுதி**

கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கென ஒரு சிறப்பு விளையாட்டு விடுதி சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் செயல்படுத்திடவும், 50 விளையாட்டு வீரர்கள்

பயிற்சி பெறவும் 1994-1995 ஆம் ஆண்டில் அரசு அனுமதித்துள்ளது. இச்சிறப்பு விளையாட்டு விடுதியில் கீழ்க்கண்ட விளையாட்டுகளில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. (1) தடகளம் (2) கூடைப்பந்து (3) குத்துச்சண்டை (4) நீச்சல் மற்றும் (5) கையுந்துப்பந்து. மேற்கண்ட விளையாட்டுகளில் சிறந்து விளங்கும் விளையாட்டு வீரர்கள் தங்கள் கல்லூரிப் படிப்பினைத் தொடர்வதோடு அவர்களின் விளையாட்டுத் திறனை மேம்படச் செய்வதுமே இவ்விடுதியின் குறிக்கோளாகும். இந்த விடுதி, தேசிய அளவில் பல விளையாட்டு வீரர்களை உருவாக்கியுள்ளது. இவர்களுக்கு வழங்கப்படும் வசதிகளின் விவரம்:

| வ. எண் | வகை | தொகை |
|---|---|---|
| 1. | மாணவர் ஒருவருக்கு ஒரு மாதத்திற்கான உணவிற்கான தொகை | ரூ.1,800/- |
| 2. | சீருடை மற்றும் விளையாட்டு உபகரணங்களுக்கான படி ஒரு மாணவருக்கு ஆண்டு ஒன்றுக்கு | ரூ.3,000/- |
| 3. | ஆண்டொன்றுக்கு ஒரு மாணவருக்கு படிப்புக் கட்டணம் | ரூ.1,500/- |
| 4. | ஆண்டொன்றுக்கு மருத்துவச் செலவினம் | ரூ.10,000/- |
| 5. | விடுதி பராமரிப்புச் செலவினம் | ரூ.10,000/- |
| 6. | போட்டிகளில் பங்கேற்க ஆண்டொன்றுக்கு | ரூ.25,000/- |

## நிலை—5 சர்வதேச அளவில் — விளையாட்டுத் திறன் மிக்கவர்களைக் கண்டறிதல் மற்றும் திறமைமிக்கவர்களை மேம்படுத்துதல்

### 4.16 விளையாட்டில் திறமையுள்ள தலைசிறந்த வீரர்களுக்கு அயல்நாட்டில் நவீன முறையில் பயிற்சியளித்தலும் மற்றும் போட்டிகளில் கலந்து கொள்வதும்

விளையாட்டில் திறமையுள்ள தலைசிறந்த வீரர்களுக்கு அயல்நாட்டில் நவீன முறையில் உயர்தர பயிற்சி அளிக்கும் நிறுவனங்களில் பயிற்சியளிப்பதன் மூலமும், சர்வதேசப் போட்டிகளில் பங்கு பெற வாய்ப்பளித்தல் மூலமும் அவர்கள் சர்வதேச அளவில்





பதக்கம் பெற வாய்ப்பு ஏற்படுகிறது. மேலும், தற்போது சாம்பியன் மேம்பாட்டுத் திட்டம் மூலம் இளையோர் மற்றும் மிகவும் இளையோர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களின் தேவைக்கேற்ப உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. திறமை மிக்க விளையாட்டு வீரர்களுக்கு அயல்நாட்டில் நவீன முறையில் உயர்தர பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள் சர்வதேச அளவில் அயல்நாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள வாய்ப்பளிக்கப்பட்டது.

[2007 ஏப்ரல் 28

## அத்தியாயம்–5

### நிலை–1 பயிற்சி அளித்தல்

#### 5.1 பயிற்சித் திட்டத்திற்கு புத்துயிர் ஊட்டுதல்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் பணிபுரியும் சுமார் 110 விளையாட்டுப் பயிற்சியாளர்கள் அனைத்து மாவட்டங்களிலும் பரவலாகப் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். நிதிப் பற்றாக்குறை காரணமாக, சிறப்புப் பயிற்சி முகாம், கோடைக்கால பயிற்சி முகாம், வார இறுதி நாள் பயிற்சி முகாம் ஆகியவற்றின் மூலம் மட்டுமே பயிற்சி வகுப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால் பயிற்றுநர்களை பல்வேறு மாவட்டங்களில் நியமிக்க இயலாத நிலை உள்ளது. உலகத் திறனாய்வுத் திட்டத்தின் வாயிலாக அதிக திறனாளிகள் கண்டறியப்பட்டு வருகின்றனர். அவர்களின் திறனை மேம்படுத்துவது அவசியமானது மட்டுமல்லாமல் இன்றியமையாததுமாகும். சிறப்புப் பயிற்சி, மற்றும் உயர்ந்த அளவிலான பயிற்சிகளுக்குத் தொடர்ந்து முன்னுரிமை அளிக்கப்படும். என்.ஐ.எஸ். சர்டிபிகேட் கோர்ஸ் பயிற்சி பெற்ற பயிற்சியாளர்கள் மற்றும் என்.ஐ.எஸ். பயிற்சியுடன் அலாதியான முன் அனுபவம் உள்ள பயிற்சியாளர்கள், நிரந்தரப் பணி கிடைக்காமையால் ஒப்பந்த அடிப்படையில் பயிற்சியாளராகப் பணியாற்றிட முன் வந்துள்ளனர். பயிற்சியாளர்கள் இல்லாத சில மாவட்டங்களில் அதிகம் திறனாளிகள் உள்ளனர். திறமை கண்டறிதல், திறமை மேம்படுத்துதல் போன்றவற்றில் தெளிவாக வரையறுக்கப்பட்ட ஒப்பந்த வழிமுறைகள் வகுக்கப்பட்டு, அதன் மூலம் பயிற்றுநர்கள், மாவட்ட அளவில் ஒரு மிகப் பெரிய திறன் கொள்ளிடமாக உருவாக்குவதற்கு உதவி புரிவது தற்போது நடைமுறையில் இருந்து வருகிறது. இதன்படி பல்வேறு விளையாட்டுப் பிரிவுகளில் 69 பயிற்றுநர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டு, அப்பதவிக்குண்டான திறன் சார்ந்த ஊக்கத் தொகை வழங்கப்படுவதற்கான அளவுகோல் போன்ற முக்கியமான நிபந்தனைகள் கொண்ட ஒப்பந்த உடன்படிக்கை தயார் செய்யப்பட்டு, மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.



2007 ஏப்ரல் 28]

#### 5.2 ஒவ்வொரு விளையாட்டிலும், உடற்கல்வி ஆசிரியர்களுக்குத் திறமைகளை வளர்க்கவும், அவர்களின் தகுதிகளை மேம்படுத்தவும் மறுபயிற்சி முகாம் நடத்துதல்

திறமை வாய்ந்தவர்களை கண்டறியவும், அவர்களின் அடிப்படைத் திறமைகளை வளர்க்கவும் உடற்கல்வி ஆசிரியர்கள் தமிழக விளையாட்டின் முதுகெலும்பாக விளங்கி வருகிறார்கள். நுட்பங்கள் மற்றும் திறன்கள் ஆகியவற்றை சரியான முறையில் அடிப்படையிலேயே கற்றுக் கொடுப்பதன் மூலம் சர்வதேச அளவில் திறமைகளை வளர்த்துக் கொள்ள இயலும். சமீபத்திய விதிகள், விளையாட்டு முறைகள் மற்றும் நுட்பங்களை உடற்கல்வி ஆசிரியர்கள் அறியும் வண்ணம், தொழில் நுட்ப மறுபயிற்சித் திட்டம் பயிற்சி வகுப்புகள் நடத்துவது மிகவும் அவசியமாகிறது. இவ்வாறான திட்டத்திற்கு செலவழிக்கப்படுவதன்மூலம், அவர்களை முழுமையாக அனைத்து வழிகளிலும் விளையாட்டில் பயிற்சி அளிப்பதில் சிறந்தவர்களாக விளங்கச் செய்ய இயலும். மாவட்ட அளவில் உடற்பயிற்சி கல்வி ஆசிரியர்களுக்கும் மற்றும் உடற்பயிற்சி கல்வி இயக்குநர்களுக்கும், விளையாட்டுச் சங்கங்கள் மற்றும் விளையாட்டு தொழில்நுட்ப நிபுணர்கள் முதலியோரின் உதவியோடு விளையாட்டு யுக்திகள் பற்றி ஆண்டுதோறும் பயிற்சிகள் நடத்தப்படுகின்றன. மறுபயிற்சித் திட்டம் பயிற்சி வகுப்புகள் முதலியன இந்திய விளையாட்டுக் குழுமம் மற்றும் விளையாட்டுச் சங்கங்கள் முதலியவற்றின்மூலம் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது. எங்கெங்கு அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிகளுக்கு பயிற்றுநர்களை அனுப்பிட முடியுமோ அங்கங்கு ஸ்பான்சர்மூலம் அனுப்புதல் போன்றவற்றை செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது. இதன்படி சிறப்புக் கருத்தரங்குகள், உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் உடற்கல்வி இயக்குநர்களுக்கு பல்வேறு விளையாட்டுகளில் தொழில்நுட்ப நிபுணர்கள் மூலம் நடத்தப்பட்டு வருகின்றன.

### நிலை–2 மாவட்ட அளவில் பயிற்சி முகாம் திட்டம்

#### 5.3 கோடைக் காலப் பயிற்சி முகாம்

ஒவ்வொரு வருடமும் 16 வயதிற்குட்பட்ட மாணவர் மற்றும் மாணவரல்லாதவர்களுக்காக (ஆண், பெண் இரு பாலருக்கும்) தடகளம், கூடைப்பந்து, கால்பந்து, வளைகோல்பந்து, கையுந்துப்பந்து மற்றும் அந்தந்த மாவட்டங்களில் சிறந்து விளங்குகின்ற இதர விளையாட்டுகளில் மாவட்டத் தலைநகரங்களில் கோடைக் காலப் பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

[2007 ஏப்ரல் 28

**5.4 சென்னையிலுள்ள சர்வதேச அளவிலான விளையாட்டு அரங்கங்கள் / மாவட்ட தலைநகரங்களில் உள்ள விளையாட்டு அரங்கம் / சென்னை நேரு பூங்கா விளையாட்டு அரங்கம் ஆகியவற்றிற்கு நிலையான மற்றும் நிலையற்ற விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல்**

சுமார் 110 பயிற்சியாளர்கள், 3 சிறப்பு விளையாட்டு மேம்பாட்டு மையங்கள், 50 விளையாட்டுப் பயிற்சி மையங்களைக் கொண்ட தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், விளையாட்டுப் பயிற்சிக்குத் தேவையான விளையாட்டு உபகரணங்கள் முழுமையாக வழங்கிட இயலாத நிலையில் உள்ளது. அனைத்து விளையாட்டுகளுக்கும் விளையாட்டு உபகரணங்கள் அடிப்படைத் தேவை மட்டுமல்லாமல் சிறப்பாகப் பயிற்சி அளிக்க இன்றியமையாததாகும். எனவே, முக்கியம் வாய்ந்த அனைத்து விளையாட்டுகளுக்கும் தேவையான உலகத் தரம் வாய்ந்த விளையாட்டு உபகரணங்கள், எந்தெந்தப் பிரிவில் பயிற்றுநர்கள் உள்ளனரோ அவர்களுக்குத் தட்டுப்பாடில்லாமல் வாங்கி வழங்கிட உள்ளன.

**5.5 மாவட்ட அளவிலான இருப்பிடப் பயிற்சி முகாம் திட்டம்**

உலகத் திறனாளர்கள் கண்டறியும் திட்டத்தின் மூலம் கண்டறியப்பட்ட மாணவர் மற்றும் மாணவியர்களுக்கென மாவட்ட அளவிலான இருப்பிட பயிற்சி முகாம்கள், மாநிலத்தில் 30 மாவட்டங்களிலும் நடத்தப்பட்டு வருகின்றன. பல்வேறு விளையாட்டுப் பிரிவுகளில் தத்தம் திறமைக்கேற்ப பங்குகொள்ளச் செய்வதற்கென இந்த மாணவ, மாணவியர்களுக்கு விளையாட்டின் அடிப்படைத் திறமைகள் கற்றுக் கொடுக்கப்பட்டன.

**நிலை—3 மாநில அளவில் பயிற்சி முகாம் திட்டம்**

**5.6 மாநில அளவிலான பயிற்சித் திட்டம்**

பல்வேறு விளையாட்டுகளில் திறன்மிக்கவர்களைக் கண்டறிய மாவட்டம், மாநிலம் மற்றும் மண்டல அளவிலான இருப்பிட கோடைக் காலப் பயிற்சி முகாம்கள் நடத்தப்படுகின்றன.

**5.7 அகில இந்திய ஊரக விளையாட்டுப் போட்டிகள் பயிற்சி முகாம்**

பல்வேறு மாநிலங்களில் தேசிய அளவில் நடத்தப்படும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழக அணி பங்கு பெறுவதற்கு முன்னர், தேர்ந்தெடுக்கப்பட்ட பதினாறு வயதுக்குட்பட்ட மாணவ, மாணவிகளுக்கு பல்வேறு விளையாட்டுப் பிரிவுகளில் ஏழு நாட்களுக்கு பயிற்சி முகாம் நடத்தப்பட்டு வருகிறது.



2007 ஏப்ரல் 28]

**5.8 தேசிய பெண்கள் விளையாட்டுப் போட்டிகள்—தேசிய அளவில் பங்கேற்கும் முன் பயிற்சி முகாம்**

பல்வேறு மாநிலங்களில் நடத்தப்படும் தேசிய பெண்கள் விளையாட்டுப் போட்டிகளில் தமிழக அணி பங்கு பெறுவதற்கு முன்னர், தேர்ந்தெடுக்கப்பட்ட மகளிருக்கு பல்வேறு விளையாட்டுப் பிரிவுகளில் ஏழு நாட்களுக்கு பயிற்சி முகாம் நடத்தப்படுகிறது.

**நிலை—4 தேசிய அளவில் பயிற்சி முகாம் திட்டம்**

5.9 அங்கீகரிக்கப்பட்ட தமிழ்நாடு மாநில விளையாட்டுக் கழகங்கள், பன்னாட்டு அளவில் பங்குபெறும் முன்னர், தேசிய அளவில் பயிற்சி முகாம் தமிழ்நாட்டில் நடத்தப்படுமானால் அதற்கு மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

**நிலை—5 சர்வதேச அளவில் பயிற்சி முகாம் திட்டம்**

**5.10 பயிற்றுநர்கள், திறமையுள்ள உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் விளையாட்டு நிர்வாகிகள் ஆகியோர்களுக்கு அவர்களின் திறமையினை மேம்படுத்த வேண்டி பன்னாட்டு அளவிலான பயிற்சியாளர்களைக் கொண்டு கருத்தரங்கம் மற்றும் பயிற்சியளித்தல்**

தமிழகம், விளையாட்டுப் போட்டிகளில் பின்தங்கியுள்ளதற்கான காரணங்களாவன:

(அ) சர்வதேச அளவில் பயிற்சி பெற்ற தகுதி வாய்ந்த பயிற்றுநர்கள் இல்லாமை.

(ஆ) சர்வதேச அளவில் தகுதி வாய்ந்த அலுவலர்கள் இல்லாமை.

எனவே, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திலுள்ள பயிற்றுநர்களுக்கும் மற்றும் தமிழகத்திலுள்ள திறமையுள்ள பிற பயிற்றுநர்களுக்கும் சர்வதேச அளவில் போதிய பயிற்சி மற்றும் அனுபவம் இல்லாமையைப் போக்க, திறமைமிக்க பயிற்றுநர்கள் மற்றும் உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்கள், அயல்நாட்டில் நடத்தப்படுகின்ற சிறிய கால அளவிலான பயிற்சி வகுப்புகள் மற்றும் கருத்தரங்குகளில் பங்குகொள்வதற்கு வாய்ப்பளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதனால், அவர்களுக்கு சர்வதேச அளவில் நடைபெறும் பயிற்சி முறையினைப் பற்றித் தெரிந்துகொள்ள வாய்ப்பு அளிப்பதன் மூலம் சர்வதேச அளவில் அந்தந்த விளையாட்டுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைப் பற்றி புரிந்து கொள்ளவும் வாய்ப்பு ஏற்படுகிறது. தடகளப் பயிற்றுநர்களுக்கான சிறப்புப் பயிற்சி முகாம் மற்றும் நீச்சல் பயிற்றுநர்களுக்கான சிறப்புப் பயிற்சி முகாம் ஆகியவை ஆஸ்திரேலிய நாட்டு பயிற்றுநர்களின் உதவியுடன் நடத்தப்பட்டன.

[2007 ஏப்ரல் 28

## அத்தியாயம்—6

## விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளும் மனப்பாங்கினை மேம்படுத்துதல்

### நிலை—1 மாவட்டத்திற்குள் நடக்கும் விளையாட்டுப் போட்டிகளில் அனைத்துத் தரப்பினரும் பங்கேற்றல்

6.1 உள்ளூர் அளவில் இதுவரை கண்டறியப்படாத திறமைகளை வளர்த்திடவும், உடற்தகுதி மற்றும் விளையாட்டில் ஆர்வத்தினை அடிமட்ட அளவில் ஊக்குவிக்கவும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது.

அனைத்துப் போட்டிகளும் மாவட்ட அளவில் அனைத்து நிலைகளிலும் நடத்தப்படும். அவையாவன:

- ஒரு குறிப்பிட்ட பகுதி (அ) இடத்தில் அமைந்துள்ள பள்ளிகளுக்கிடையே
- ஒரு குறிப்பிட்ட பகுதி (அ) இடத்தில் அமைந்துள்ள குழுக்களுக்கிடையே
- கல்லூரிகளுக்கிடையே
- வட்டாரங்களுக்கிடையே (இரண்டாக இருப்பினும்)
- இரண்டு (அ) மூன்று பிரிவுகளுக்கிடையே
- மாவட்டத்திற்குள் ஏதாவது ஒரு விளையாட்டில் சமுதாய பங்கேற்பினை ஊக்குவிக்கும் வகையில் அனைத்துப் போட்டிகளையும் நடத்துதல்

ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தபட்சம் 200 போட்டியாளர்கள் பங்கேற்கும் வகையிலும், ஓர் உறுதியான அடித்தளம் அமைத்திடும் வகையிலும், போட்டிகள் நடத்தப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்போட்டிகள், விளையாட்டில் ஆர்வமுள்ள நிறுவனங்கள் மற்றும் அறக்கட்டளைகளால் முதன்மையாக ஏற்று நடத்தப்படும். மாவட்ட விளையாட்டு அலுவலர், மாவட்ட அளவிலான நிலை-1 போட்டிகளை நடத்துவதில் முக்கியப் பங்கு வகிப்பார்.



2007 ஏப்ரல் 28]

### நிலை—2 மாவட்ட அளவிலான போட்டிகள்

### 6.2 மாதாந்திர விளையாட்டுப் போட்டிகள்

கண்டறியப்பட்ட திறமை மற்றும் வளர்ந்து வரும் திறமைகளில் தொடர்ச்சியாக போட்டிகள் நடத்துவதன்மூலம், "போட்டிகளில் கலந்து கொள்ளும் மனப்பாங்கினை" வளர்க்க இயலும். சென்னையில், தடகளம் மற்றும் நீச்சல் விளையாட்டுகளில் போட்டிகள் மாதந்தோறும் நடத்தப்பட்டு வருவதால், சிறப்பான பங்கேற்கும் ஆர்வம் அதிகமானதையும், போட்டியாளர்களின் முன்னேற்றத்தையும் அறிய முடிகிறது. அனைத்து வயதினருக்கும் வெவ்வேறு விளையாட்டுப் பிரிவுகளில் அனைத்து மாவட்டங்களிலும் மாதம் ஒரு முறை விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வாறான போட்டிகள் விளையாட்டு வீரர்களின் திறமைகளை வெளிக் கொணரவும், அவர்களின் திறனை அதிகரிக்கச் செய்யவும், மாபெரும் வாய்ப்பாக அமைகிறது. தற்போது அனைத்து மாவட்டங்களிலும், தடகள விளையாட்டு மற்றும் அந்தந்த மாவட்டத்தில் பிரபலமாக விளங்கும் விளையாட்டுகளில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் பங்கேற்க வாய்ப்பளிக்கும்வண்ணம் மாதந்தோறும் மாவட்ட அளவிலான போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்போட்டிகள் முப்பது மாவட்டங்களில் கீழ்க்கண்ட விளையாட்டுகளில் சிறுவர், சிறுமிகளுக்காக நடத்தப்பட்டன:

தடகளம், கூடைப்பந்து, கையுந்துப்பந்து, கால்பந்து, வளைகோல்பந்து, வாள்சண்டை, மேசைப் பந்து, டென்னிஸ், குத்துச்சண்டை, நீச்சல், டேக்வான்டோ மற்றும் ஜிம்னாஸ்டிக்ஸ்.

### 6.3 அண்ணா சைக்கிள் போட்டி

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளை நினைவுகூரும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் 15 ஆம் தேதி அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் 16 வயதிற்குட்பட்ட சிறுவர், சிறுமியர்களுக்கு தனித்தனியாக மாவட்ட அளவிலான அண்ணா சைக்கிள் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. மாநில அளவிலான சைக்கிள் போட்டி ஒவ்வொரு ஆண்டும் சுழற்சி முறையில் ஒரு மாவட்டத்தில் நடத்தப்பட்டு வருகின்றது.

### 6.4 அனைவரும் பங்கேற்கும் வகையிலான போட்டிகள்

ஒன்று அல்லது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை தடகள விளையாட்டு வீரர்கள் மற்றும் நீச்சல் வீரர்களின் திறமைகளை

[2007 ஏப்ரல் 28

அதிகப்படுத்தும் வகையில், அனைவரும் பங்கேற்கும் வகையிலான போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. தடகள விளையாட்டு வீரர்களுக்கு பல்வேறு வயதுப் பிரிவுகளில், சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் அமைக்கப்பட்டுள்ள சர்வதேசத் தரத்திலான செயற்கை ஓடுகள தளத்தில் பல்வேறு வயதுப் பிரிவினருக்கு போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. அதேபோன்று, சென்னை வேளச்சேரியில் அமைந்துள்ள சர்வதேசத் தரம் வாய்ந்த நீச்சல் குள வளாகத்தில் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அனைவரும் பங்கேற்கும் வகையிலான நீச்சல் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

## 6.5 புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள விளையாட்டுகள்

ஏற்கெனவே நடைமுறையில் உள்ள விளையாட்டுப் போட்டிகளுடன், புதியதாக ஸ்குவாஷ், ஜிம்னாஸ்டிக்ஸ், வாள்சண்டை, குத்துச்சண்டை, நீச்சல், டேக்வான்டோ, கைப்பந்து, டென்னிஸ், ஜூடோ, ரோடு சைக்ளிங், கடற்கறை கையுந்துப்பந்து, படகுப் போட்டி மற்றும் செஸ் ஆகிய 13 விளையாட்டுகள் பள்ளிகளுக்கிடையேயான குடியரசு தின விளையாட்டுப் போட்டிகளில் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளன. உடற்கல்வி ஆசிரியர்கள் இவ்விளையாட்டுகள் நடத்துவதற்கான விதிமுறைகளைக் கற்றுக் கொள்ளும் வகையில் மாநிலம் முழுவதும் இவ்விளையாட்டு நுணுக்கங்கள் தெரிந்த வல்லுநர்களால் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. பள்ளிக் கல்வி இயக்குநரகம் மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமும் இணைந்து இப்புதிய விளையாட்டுப் போட்டிகளை நடத்தி வருகின்றன.

## 6.6 உலகத் திறனாளர் கண்டறியும் திட்டத்தின்கீழ் மண்டல அளவிலான விளையாட்டுப் போட்டிகள்

அரசு வழிகாட்டுதலின்படி, தமிழகத்தில் அனைத்துப் பள்ளிகளிலும், 6, 7 மற்றும் 8 ஆம் வகுப்பு சிறுவர்/சிறுமியர்களின் உடற்திறனைக் கண்டறிய, வேகமாக ஓடுதல், (Speed) அதிகமாக தாக்குப்பிடிக்கும் திறனை கண்டறிதல் (Endurance), உடல்வலிமை கண்டறிதல் (Strength), உந்து திறன் மற்றும் சுறுசுறுப்புத் திறனை கண்டறிதல் (Explosive Power and Agility) ஆகிய உடற்திறன் ஆற்றல் போட்டிகள் நடத்தப்பட்டு அந்தத் தேர்வுகளில் ஒரு தேர்வில் 10-க்கு 10 என்ற மதிப்பெண் அல்லது 2 தேர்வுகளில் 10-க்கு 9 என்ற மதிப்பெண்கள் பெற்றவர்களின் பட்டியல் குறிப்பிட்ட படிவத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு



2007 ஏப்ரல் 28]

அனுப்பப்படுகிறது. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் 100 மீ., 200 மீ., 400 மீ. ஓட்டம், நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதல் மற்றும் குண்டு எறிதல் ஆகிய தடகளப் பிரிவுகளில் தமிழ்நாட்டில் உள்ள 64 கல்வி மாவட்டங்களில் விளையாட்டுத் திறமை உடையவர்களைக் கண்டறிய போட்டிகளை நடத்தின. அதனைத் தொடர்ந்து, கல்வி மாவட்டங்கள் அனைத்தையும் ஒன்று சேர்த்து 9 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, முதல் இரண்டு இடத்தில் வெற்றி பெறுபவர்களுக்கு, அவர்களின் திறமைகளைக் கண்டறிய, மண்டல அளவு போட்டிகள் நடத்தப்படுகின்றன. சர்வதேச அளவில் திறமை வாய்ந்த சிறார்களைக் கண்டறியும் பொருட்டு ஒரு விரிவான தேர்ந்தெடுக்கும் முயற்சி நடைமுறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## நிலை–3 மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள்

## 6.7 புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட விளையாட்டுகளில் பள்ளிகளுக்கிடையேயான போட்டிகள்

பள்ளி மாணவ/மாணவியர்களுக்கு ஸ்குவாஷ், ஜிம்னாஸ்டிக்ஸ், வாள்சண்டை, குத்துச்சண்டை, நீச்சல், டென்னிஸ், கைப்பந்து, டேக்வான்டோ, ஜூடோ, ரோடு சைக்ளிங், கடற்கரை கையுந்துப்பந்து, படகுப் போட்டி மற்றும் செஸ் ஆகிய விளையாட்டுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மாநில அளவிலான 21 போட்டிகள் மேலே குறிப்பிடப்பட்ட விளையாட்டுகளில் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

## 6.8 மாநில விளையாட்டுக் கழகங்கள்மூலம் நடத்தப்படும் மாவட்டங்களுக்கிடையேயான மற்றும் மாநில அளவிலான போட்டிகள்

மாவட்டக் கழகங்கள் பங்குபெறும் வகையில், மாவட்டங்களுக்கிடையேயான போட்டிகள் மற்றும் மாநில சேம்பியன்ஷிப் போட்டிகள், மாநில விளையாட்டுக் கழகங்களால் நடத்தப்படுகின்றன.

## 6.9 விளையாட்டுப் பள்ளி / விளையாட்டு விடுதிகள் இதர போட்டிகளில் பங்கேற்றல்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கட்டுப்பாட்டின்கீழ், மூன்று விளையாட்டுப் பள்ளிகள் மற்றும் நான்கு விளையாட்டு விடுதிகள் இயங்கி வருகின்றன. அவ்விளையாட்டுப்

[2007 ஏப்ரல் 28

பள்ளி / விடுதி மாணவ / மாணவியரின் விளையாட்டுத் திறமைகளை மேம்படுத்தும் வகையில், போட்டிகளில் கலந்து கொள்வதை ஊக்குவிக்கவும், மாநில விளையாட்டுச் சங்கங்களால் நடத்தப்படும் போட்டிகளிலும் மற்றும் இதர போட்டிகளிலும் விளையாட்டுப் பள்ளிகள் / விளையாட்டு விடுதிகள் பங்கு பெறுகின்றன.

**6.10 "மாநில விளையாட்டுப் போட்டிகள்" ஊராட்சி ஒன்றிய அளவு, மாவட்ட அளவு மற்றும் மாநில அளவில் நடத்துதல்**

கிராமப்புற இளைஞர்களுக்கு விளையாட்டுகளில் பங்கேற்கும் வாய்ப்பினை அளிப்பது மற்றும் அவர்களிடையே போட்டி மனப்பான்மையை மேம்படுத்துவது மிகவும் அவசியமாகிறது. இந்நோக்கில் "மாநில விளையாட்டுப் போட்டிகள்" 2006-2007 ஆம் ஆண்டு முதல் ஊராட்சி ஒன்றிய அளவில், மாவட்ட அளவில் மற்றும் மாநில அளவில் ஆண்கள் மற்றும் பெண்களுக்காக கீழ்க்கண்ட விளையாட்டுகளில் நடத்தப்படுகின்றன:

| வ. எண் | போட்டி விளையாட்டுக்கள் |
|---|---|
| 1. | தடகளம் |
| 2. | கூடைப்பந்து |
| 3. | கால்பந்து |
| 4. | வளைகோல்பந்து |
| 5. | கபாடி |
| 6. | நீச்சல் |
| 7. | கையுந்துப்பந்து |

போட்டிகள் கீழ்க்கண்ட அட்டவணைப்படி நடைபெறும்:—

| | | |
|---|---|---|
| 1. | மாநில விளையாட்டு-ஊராட்சி ஒன்றிய அளவில் | அக்டோபர் |
| 2. | மாநில விளையாட்டு-மாவட்ட அளவில் | நவம்பர் |
| 3. | மாநில விளையாட்டு-மாநில அளவில் | ஜனவரி |

இப்போட்டிகளில் முதல் மற்றும் இரண்டாவது நிலை வெற்றியாளர்களுக்கு பரிசுப் பொருட்கள் வழங்கப்படும்.



2007 ஏப்ரல் 28]

**நிலை—4 தமிழ்நாட்டில் மாநில விளையாட்டுக் கழகங்கள்மூலம் நடத்தப்படும் தேசிய விளையாட்டுப் போட்டிகள்**

**6.11 தேசிய விளையாட்டுப் போட்டிகளை நடத்துதல்**

சென்னையில் சர்வதேசத் தரத்திலான விளையாட்டு அரங்கங்கள் இருப்பதால், மாநில விளையாட்டுக் கழகங்கள் தேசிய விளையாட்டுப் போட்டிகளையும் மற்றும் இதர முக்கிய விளையாட்டுப் போட்டிகளையும் சென்னையில் நடத்த தமிழக அரசு ஊக்குவித்து வருகிறது. இவ்வாறான சர்வதேசத் தரத்திலான விளையாட்டு அரங்கங்களில் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதன்மூலம் தமிழ்நாட்டின் தலைசிறந்த விளையாட்டு வீரர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்த இயலுவதோடு மட்டுமின்றி, ஏனைய விளையாட்டு வீரர்கள் போட்டிகளில் கலந்து கொள்ளச் செய்யும் மனப் பக்குவத்தினையும் வளர்க்க உதவுகிறது.

**6.12 அகில இந்திய குடிமுறை அரசுப் பணியாளர் விளையாட்டுப் போட்டிகள்**

அரசுத் துறைகளில் பணிபுரியும் விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் வகையில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் தேர்வுப் போட்டிகளை நடத்தி தமிழக அணியினை தேர்வு செய்கிறது. அகில இந்திய அளவில் சுழற்சி முறையில் பல்வேறு மாநிலங்களில் நடத்தப்படுகின்ற அகில இந்திய குடிமுறை அரசுப் பணியாளர் சில விளையாட்டுப் போட்டிகளில் தமிழக அணி பங்கேற்கிறது.

**6.13 அகில இந்திய ஊரக விளையாட்டு போட்டிகளில் பங்கேற்பு**

இந்திய விளையாட்டுக் குழுமம் ஒவ்வோர் ஆண்டும் அகில இந்திய ஊரக விளையாட்டுப் போட்டிகளை ஒன்பது விளையாட்டுகளில், 16 வயதிற்குட்பட்ட சிறுவர், சிறுமியருக்காக நடத்தி வருகிறது. தமிழக அணி இந்திய ஊரக விளையாட்டுப் போட்டிகளில் தொடர்ந்து பங்கேற்று வருகிறது. தேசியப் போட்டிகளில் பங்கேற்புக்கு முன், மாநில அளவிலான தேர்வுப் போட்டிகளும் தெரிந்தெடுக்கப்பட்டவருக்கு பயிற்சி முகாமும் நடத்தப்படுகின்றன.

**6.14 தேசிய மகளிர் விளையாட்டு விழா பங்கேற்பு**

இந்திய விளையாட்டுக் குழுமம் மகளிர் பிரிவினரை விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க ஊக்கம் அளிக்கும் வகையில், வயது வரம்பின்றி 13 விளையாட்டுப் பிரிவுகளில் தேசிய மகளிர்

விளையாட்டுப் போட்டிகளை நடத்தி வருகிறது. தமிழக அணி இப்போட்டிகளில் தொடர்ந்து பங்கேற்று வருகிறது. இப்போட்டிகளில் பங்கு பெறுவதற்கான மாநில அணியினைத் தேர்ந்தெடுப்பதற்காக ஒன்றிய அளவில், மாவட்ட அளவில் மற்றும் மாநில அளவில் தேர்வுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்திய விளையாட்டுக் குழுமம் தேசிய மகளிர் விளையாட்டுப் போட்டிகளை பல்வேறு மாநிலங்களில் நடத்தி வருகிறது. அவ்வாறு நடத்தப்படும் போட்டிகளில் பங்கேற்கும் முன், மாநில அளவில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு பயிற்சி முகாம் நடத்தப்பட்டு வருகிறது.

**6.15 இந்திய பள்ளிகளின் விளையாட்டு இணையம் நடத்தும் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகள்**

இந்திய பள்ளிகள் விளையாட்டு இணையம் ஒவ்வோர் ஆண்டும் (பல்வேறு வயதுப் பிரிவுகளில்) சிறுவர் மற்றும் சிறுமியர்களுக்காக பல்வேறு விளையாட்டுகளில் தேசிய பள்ளிகள் விளையாட்டுப் போட்டிகளை நடத்தி வருகிறது. தமிழ்நாடு மாநில அணிகள் இப்போட்டிகளில் தொடர்ந்து கலந்து கொண்டு வருகின்றன. தேசியப் போட்டிகளில் பங்கேற்புக்கு முன், மாநில அளவிலான தேர்வுப் போட்டிகளும் தெரிந்தெடுக்கப்பட்டவருக்கு பயிற்சி முகாமும் நடத்தப்பட்டு வருகின்றன.

**6.16 சிறப்பு அகாடமியின் விளையாட்டு வீரர்கள் தேசிய அளவுப் போட்டிகளில் பங்குபெறுதல்**

சிறப்பு அகாடமியில் கண்டறியப்பட்ட சிறந்த விளையாட்டு வீரர்களின் தரத்தினை வெளிக்கொணர தேசிய இணையங்கள் மற்றும் கழகங்கள் மூலமாக நடத்தப்படும் தேசிய விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாடு சார்பாக பங்குபெற வழிவகை செய்யப்படுகிறது.

**நிலை–5 சர்வதேச அளவில் விளையாட்டுப் போட்டிகளை நடத்துதல்**

**6.17 சென்னை ஓப்பன்**

டென்னிஸ் விளையாட்டில் இதுகாறும் சென்னையில் "டாடா ஓப்பன்" என்ற பெயரில் டென்னிஸ் போட்டிகள் நடத்தப்பட்டு வந்தன. தற்போது தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமும் மற்றும் ஐ.எம்.சி. (International Merchandising Corporation) நிறுவனமும் இணைந்து



இந்தப் போட்டியை "சென்னை ஓப்பன்" (CHENNAI OPEN) என்ற பெயரில் டென்னிஸ் போட்டிகளை ஒவ்வோர் ஆண்டும் நடத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டு (2007) ஜனவரி 1 முதல் 7 வரை சென்னை ஓப்பன் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன. சென்னை ஓப்பன் டென்னிஸ் போட்டிகள் சர்வதேசத் தரத்தை ஒட்டிய மற்றும் சர்வதேச அளவில் மதிப்புமிக்க விளையாட்டுப் போட்டியாகும். இந்தப் போட்டிகளில் டென்னிஸ் விளையாட்டில் புகழ்பெற்ற சேம்பியன் டென்னிஸ் விளையாட்டு வீரர்களும் மற்றும் அப்போட்டிகளில் வளர்ந்து வருகின்ற விளையாட்டு வீரர்களும் சர்வதேச அளவில் தங்களுக்கென ஒரு நிலையை ஏற்படுத்திக் கொள்ள இயலும்.

நம் நாட்டின் தலைசிறந்த டென்னிஸ் விளையாட்டு வீரர்கள் பங்கேற்பார்கள். இவ்வாறு விளையாட்டு வீரர்கள் பங்கேற்பது சென்னை டென்னிஸ் விளையாட்டு வீரர்களின் ரசிகர்களுக்கு ஒரு அரிய வாய்ப்பாகும். சென்னையில் நடத்தப்படுகின்ற டென்னிஸ் போட்டிகள் உலகம் முழுவதும் தொலைக்காட்சிகளில் நேரிடையாக ஒளிபரப்பப்படுவதால் அதனைப் பார்க்க பார்வையாளர்கள் ஆர்வமாக உள்ளனர். இதனால் உலகத்தின் தலைசிறந்த டென்னிஸ் வீரர்கள் இப்போட்டியில் பங்கேற்க ஆர்வமாய் உள்ளனர். இப்போட்டிகள் சர்வதேச அளவிலான விளையாட்டு சானல் (Channel) மூலம் உலகளாவ ஒளிபரப்பப்பட்டன. அதனால், சென்னை ஓப்பன் என்ற பெயரினை டென்னிஸ் போட்டிகளின் நிலை உயர்த்தப்பட்டுள்ளது.

[2007 ஏப்ரல் 28

## அத்தியாயம்–7

### உதவித் தொகைகள், விருதுகள் மற்றும் ஊக்கத் தொகைகள்

தமிழக அரசு தலைசிறந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு உதவித் தொகைகள், விருதுகள் மற்றும் ஊக்கத் தொகைகள் வழங்கி வருகின்றது.

**நிலை–1**

**7.1 விளையாட்டு உதவித் தொகைத் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ், 17 விளையாட்டுப் போட்டிகளில் தலைசிறந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு (குறைந்தபட்சம் தேசிய அளவில் பதக்கம் பெற்றவர்) உதவித் தொகையாக (ஆண்டுக்கு ஒருமுறை மட்டும்) உயர்நிலை/மேல்நிலைப் பள்ளி மாணவராக இருந்தால் ரூ.5,000/-மும், கல்லூரி/பல்கலைக்கழக மாணவராக இருந்தால் ரூ.6,500/-மும் வழங்கப்பட்டு வருகிறது.

**நிலை–2**

**7.2 நலிந்த நிலையிலுள்ள விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கான ஓய்வூதியத் திட்டம்**

நலிந்த நிலையிலுள்ள, கடந்த காலங்களில் சிறந்து விளங்கிய விளையாட்டு வீரர், வீராங்கனைகள் அவர்களுடைய மாத வருமானம் ரூ.2,000/-க்கு மிகாமலும், 58 வயதைக் கடந்தவராகவும் இருந்தால், அவர்களுக்கு ஓய்வூதியமாக மாதமொன்றுக்கு ரூ.500/- வீதம் அவர்களுடைய வாழ்நாள் முழுவதும் வழங்கப்படுகிறது. அந்த ஓய்வூதியர் இறந்த பிறகும் அவரது மனைவிக்கும் அவர்களுடைய வாழ்நாள் முழுவதும் நிதி உதவி (ஓய்வூதியம்) வழங்கப்படுகிறது.

**நிலை–3**

**7.3 விளையாட்டு வீரர்கள் நல நிதி**

தேசிய மற்றும் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் விளையாட்டு வீரர்கள் காயமடைந்தால் அவர்களுக்கு நிதி உதவி அளிக்கும் பொருட்டு விளையாட்டு வீரர்கள் நல நிதி ஒன்று தோற்று விக்கப்பட்டுள்ளது.



2007 ஏப்ரல் 28]

**7.4 திறமையான விளையாட்டு வீரர்களுக்கென பணி ஒதுக்கீடு செய்து நியமனம் செய்தல்**

தற்போது காவல் துறையில் நடைமுறையில் உள்ள விளையாட்டு வீரர்களுக்கான 10 சதவிகித இட ஒதுக்கீடு முறை, ஏனைய சீருடைப் பணித் துறைகளான சிறைத் துறை மற்றும் வனத் துறைக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. மேலும் இது தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறைக்கும் நீட்டிக்கப்படும்.

**நிலை–4**

**7.5 முதலமைச்சரின் மாநில விளையாட்டு விருது**

முதலமைச்சரின் மாநில விளையாட்டு விருதிற்காகத் தேர்ந்தெடுக்கப்படும் விளையாட்டு வீரர் / வீராங்கனைகளுக்கு தலா ஒரு இலட்சம் புண முடிப்பும் மற்றும் பாராட்டுப் பத்திரம், சம்பந்தப்பட்ட விளையாட்டினை பிரதிபலிக்கும் பட்டயமும் பரிசாக அரசு வழங்கி வருகின்றது. இதுவரை சர்வதேசப் போட்டிகளில் வெற்றிபெற்று தமிழகத்திற்குப் பெருமை சேர்த்த 12 தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கு முதலமைச்சரின் மாநில விளையாட்டு விருது வழங்கப்பட்டுள்ளது.

**7.6 பயிற்றுநர்களுக்கும் உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்களுக்கும் முதலமைச்சர் விருது**

ஒவ்வோர் ஆண்டும் சிறந்த பணியாற்றி தலைசிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கிடும் இரு பயிற்றுநர்கள் மற்றும் இரு உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்களுக்கு முதலமைச்சர் விருது வழங்கப்படும். ஒவ்வொரு நபருக்கும் ரூபாய் ஒரு இலட்சம் பரிசுத் தொகையும் பாராட்டுப் பத்திரமும் வழங்கப்படும்.

**நிலை–5**

**7.7 உயரிய ஊக்கத் தொகை**

தமிழ்நாட்டைச் சார்ந்த விளையாட்டு வீரர்கள் 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் ஒலிம்பிக், ஆசிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் காமன்வெல்த் போட்டிகளில் பதக்கங்கள் பெறும் பட்சத்தில் வீட்டுமனை மற்றும் அடுக்குமாடி வீடு வழங்குவதற்குப் பதிலாக உயரிய ஊக்கத் தொகை வழங்கவும், 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் தெற்காசிய மற்றும் தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள்

[2007 ஏப்ரல் 28

பெறும் பட்சத்தில் அவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கவும், அரசாணை (நிலை) எண் 5, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, நாள்: 24-1-2002-ல் கீழ்க்கண்டவாறு ஆணை வழங்கியுள்ளது:—

போட்டிகள் மற்றும் வழங்கப்படும் ஊக்கத் தொகை

(ரூபாய் இலட்சத்தில்)

| இனம் | விளையாட்டுகளின் வரிசைக் கிரமம் | உயரிய ஊக்கத் தொகையின் அளவு | | |
|---|---|---|---|---|
| | | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
| 1 | ஒலிம்பிக் ஒற்றையர் போட்டி / குழுப் போட்டியில் ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் | 100.00 | 50.00 | 25.00 |
| 2. | ஆசிய விளையாட்டுப் போட்டிகள் (4 ஆண்டுகளுக்கு ஒருமுறை) ஒற்றையர் போட்டி / குழுப் போட்டியில் ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் | 20.00 | 15.00 | 10.00 |
| 3. | காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் (4 ஆண்டுகளுக்கு ஒருமுறை) ஒற்றையர் போட்டி / குழுப் போட்டியில் ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் | 20.00 | 15.00 | 10.00 |

| இனம் | போட்டிகள் | ஒற்றையர் போட்டி | | | குழுப் போட்டி | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | தங்கம் ரூ. | வெள்ளி ரூ. | வெண்கலம் ரூ. | தங்கம் ரூ. | வெள்ளி ரூ. | வெண்கலம் ரூ. |
| 4 | தெற்காசிய / தேசிய விளையாட்டுப் போட்டிகள் | 1.00 இலட்சம் | 50,000 | 25,000 | 20,000 | 15,000 | 10,000 |
| | | | | | ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் | | |



2007 ஏப்ரல் 28]

# அத்தியாயம்–8

## இளைஞர் நலத் திட்டங்கள்

### 8.1 இளைஞர் விடுதிகள்

நமது நாட்டின் பாரம்பரியப் பண்பாட்டைப் பற்றித் தெரிந்துகொள்ளவும், இளைய சமுதாயம் மேற்கொள்ளும் பயணங்களை ஊக்குவிக்கும் பொருட்டும், இளைஞர் விடுதிகள் கட்டப்படுகின்றன. இளைஞர்கள் மேற்கொள்ளும் கல்விச் சுற்றுலா, சாகசச் சுற்றுலா, இன்பச் சுற்றுலா, சரித்திரப் புகழ்பெற்ற மற்றும் பாரம்பரிய கலாச்சார மையங்களுக்குச் செல்லும்போது அவர்களுக்கு குறைந்த செலவிலான தங்கும் வசதிகளை அளிக்கும் நோக்கத்தோடு இளைஞர் விடுதிகள் கட்டப்படுகின்றன.

இது மைய அரசும் மாநில அரசும் இணைந்து செயல்படுத்தும் இளைஞர் விடுதி கட்டுவதற்காக முழு திட்டமாகும். மாநில அரசு நிலத்தை இலவசமாகத் தருகிறது. மைய அளவில் மேம்படுத்தப்பட்ட அரசு கட்டுமானப் பணிகள் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்கிறது.

தற்சமயம் தமிழ்நாட்டில் சென்னை, மதுரை, தஞ்சாவூர் மற்றும் திருச்சி ஆகிய 4 நகரங்களில் இளைஞர் விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. உதகமண்டலத்தில் இளைஞர் விடுதி கட்டும் பணி முடியும் தருவாயில் உள்ளது.

### 8.2 இளைஞர் விழா

மைய அரசு ஒவ்வோர் ஆண்டும் இளைஞர் விழாவினை நடத்தி வருகிறது. தமிழ்நாடு அணி பல போட்டிகளிலும், போட்டிகள் அல்லாத பல கலை நிகழ்ச்சிகளிலும் ஒவ்வோர் ஆண்டும் பங்கேற்கிறது.

### 8.3 இளைஞர் முன்னேற்றத் திட்டங்கள் மற்றும் பயிற்சிக்கு நிதி உதவி அளித்தல்

இளைஞர்களிடையே தலைமைப் பண்புகளை வளர் டவும், வேலையில்லாத இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெற்றிட சிறு தொழில் பயிற்சிகளை மேற்கொள்ளவும், இளைஞர்களின் திறமைகளை ஒருங்கிணைத்து தேசிய ஒருமைப்பாட்டைப் பேணிடவும்:

1. தொழிற்கல்வித் திட்டம்
2. தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டம்
3. கண்காட்சித் திட்டம்

ஆகிய திட்டங்களில் பலவித பயிற்சிகளை மேற்கொள்ள மைய அரசு நிதி உதவி அளித்து வருகிறது. பல்வேறு வணிகங்கள் மற்றும் தொழிற்கல்வி பற்றிய குறுகிய கால அளவிலான பயிற்சிகளை மேற்கொள்ள நிதி உதவி வழங்கப்படுகிறது. 15-35 வயது வரம்பிலுள்ள அனைவரும் இத்திட்டத்தில் பங்கு பெறத் தகுதியுடையவராவர். அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்கள், தொழில்நுட்பப் பயிலகங்கள், பல்கலைக்கழகங்கள், நேரு யுவ கேந்திர சங்கேதன், சங்கங்கள் பதிவுச் சட்டம் மற்றும் பொது பொறுப்பாட்சி நிறுவனங்களின்கீழ் பதிவு செய்யப்பட்ட தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு மைய அரசு நிதி உதவி வழங்குகிறது. அவ்வாறான அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மேற்படி நிதி உதவி பெற்றிட தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் உதவி புரிகிறது.

இளைஞர்களின் பயிற்சி மற்றும் செயல்பாடுகளை ஊக்குவிக்கும் வகையில் அவர்கள் மைய அரசின் நிதி உதவி பெறுவதற்கென மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையுடன் பெறப்படும் கருத்துருக்கள் மைய அரசுக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் பரிந்துரைக்கப்பட்டு, நேரு யுவ கேந்திரா மூலமாகவும் பரிந்துரைக்கப்படும். கருத்துருக்கள் மாநில அளவிலான தேர்வுக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பி வைக்கப்படுகின்றன.



## அத்தியாயம்–9

## நாட்டு நலப் பணித் திட்டம்

நாட்டு நலப் பணித் திட்டம் பல்கலைக்கழகங்களிலும், கல்லூரிகளிலும், தொழில்நுட்பப் பயிலகங்களிலும், தொழிற்பயிற்சி நிறுவனங்களிலும், உயர்கல்வி நிறுவனங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. மைய அரசும், மாநில அரசும் நாட்டு நலப் பணித் திட்டத்திற்கு 7:5 என்ற விகிதாச்சாரத்தில் மானியம் வழங்குகின்றன. 2005-2006 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், தொழில்நுட்பப் பயிலகங்கள் உட்பட உயர்கல்வி நிறுவனங்களில் 2,78,000 தொண்டர்கள் இருந்தனர். 2006-2007 ஆம் ஆண்டில் தொண்டர்களின் எண்ணிக்கை, 3,05,800 ஆக உயர்த்தப்பட்டது. இவர்களில் 1,52,900 தொண்டர்கள் 2006-2007 ஆம் ஆண்டில் சிறப்பு முகாம்களில் பங்கேற்றார்கள். தற்போது பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், தொழில்நுட்பப் பயிலகங்கள், தொழிற்பயிற்சி நிறுவனங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் 3,058 நாட்டு நலப் பணித் திட்ட அலகுகள் செயல்பட்டு வருகின்றன. 2006-2007 ஆம் ஆண்டில் ரூ.660.77 இலட்சம் நாட்டு நலப் பணித் திட்ட மானியமாக வழங்கப்பட்டது. இத்தொகையில் ரூ.385.45 இலட்சம் மைய அரசின் பங்கும், ரூ. 275.32 இலட்சம் மாநில அரசின் பங்கும் ஆகும்.

### செயல்பாடுகள்

#### கிராமப்புறங்களில் கழிப்பறைகள் கட்டுதல்

கல்லூரிகள் மற்றும் பள்ளிகளில் உள்ள தொண்டர்கள் கிராமப்புறங்களில் கழிப்பறைகள் கட்டுவதற்கு மாவட்ட நிர்வாகங்களுக்கு உதவி புரிந்து வருகின்றனர். இந்த சமூக நோக்கத்தை ஏற்றுக்கொள்ள செயல்நோக்கப் பேரணிகள் மற்றும் மனிதச் சங்கிலி போன்றவை ஏற்பாடு செய்யப்படுகின்றன.

#### சமுதாயக் கலவரங்களைத் தடுத்தல்

கல்லூரிகளில் உள்ள நாட்டு நலப் பணித் திட்டத் தொண்டர்கள் சமுதாயக் கலவரங்களைத் தடுப்பதில் மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபடுகின்றனர். சமுதாயக் கலவரங்கள் ஏற்படும் இடங்களில், நாட்டு நலப் பணித் திட்டத் தொண்டர்கள் சமுதாய நல்லிணக்கத்தை

ஏற்படுத்துகின்றனர். சென்னை, பாரதிதாசன், பாரதியார், மதுரை காமராசர், மனோன்மணீயம் சுந்தரனார், பெரியார் மற்றும் அண்ணா பல்கலைக்கழகங்கள் தொழில்நுட்பப் பயிலக இயக்ககத்தில் உள்ள நாட்டு நலப் பணித் திட்டத் தொண்டர்கள், சிறப்பு ஊரக முகாம்களில் குறிப்பிடும்படியான சமூக நல்லிணக்கப் பணியை ஆற்றி வருகின்றனர். கலவரப் பகுதிகளில் சமூக நல்லிணக்கம் மற்றும் தோழமை உணர்ச்சியை ஏற்படுத்துவதில், சிறப்பு முகாம்களில் குறிப்பிடும்படி செயல்படுகின்றனர்.

**குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு**

பணிகளில் சிறார் பங்கு பெறும் பகுதிகள் அறியப்பட்டு, அப்பகுதிகளில் சிறார்களுக்குச் சிறப்புப் பயிற்சி வகுப்புகள் மாவட்ட நிர்வாகத்தின் வாயிலாக நடத்தப்பட்டு, சிறார் பணியைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளன. சாலையோர சிறுவர்கள் தத்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு கல்வி பயிற்றுவிக்கப்பட்டு, நல்வாழ்வு வாழ வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**அனைவருக்கும் கல்வி**

நாட்டு நலப் பணித் திட்டம் தமிழ்நாட்டில் ஏற்கெனவே முழுமையான கல்வி இயக்ககத்தைத் தோற்றுவித்துள்ளது. நாட்டு நலப் பணித் திட்டத் தொண்டர்கள் மற்றும் அலுவலர்கள் தற்போது மாநிலத்தில் நடைபெறும் "அனைவருக்கும் கல்வி" என்ற திட்டத்தில் மிகுந்த ஆர்வத்துடன் பங்கு பெறுகின்றனர். கல்வி அறிவு அற்றவர்களைக் கண்டறிந்து எழுத்தறிவு பயிற்றுவிப்பதில் நாட்டு நலப் பணித் திட்டத் தொண்டர்கள் சிறப்பாக செயல்படுகின்றனர்.

**மகளிர் மேம்பாடு**

மாநிலத்தில் உள்ள அனைத்து பல்கலைக்கழகங்களிலும் கருத்தரங்குகள், பணிப் பட்டறைகள், பேரணிகள் இவற்றின் வாயிலாக கிராம மக்களிடையே மகளிர் மேம்பாடு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. கணினிப் பயிற்சி, தொழில் பயிற்சி, தொழில் முனைவுத் திறன் மேம்பாடு குறித்த நிகழ்வுகள் நம் மாநிலத்தில் உருவாக்கப்பட்டுள்ளன.



**எய்ட்ஸ் / எச்.ஐ.வி. விழிப்புணர்வுச் செய்திகளை மக்களிடையே தெரிவித்து எய்ட்ஸ் இல்லா மாநிலமாக உருவாக்குதல்**

எய்ட்ஸ் விழிப்புணர்வுப் பேரணிகள் அனைத்து வட்ட, மாவட்ட தலைநகரங்களிலும் நடத்தப்படுகின்றன. கிராம மக்களிடையே எய்ட்ஸ் விழிப்புணர்வு ஏற்படுத்த அனைத்து தத்தெடுக்கப்பட்ட கிராமங்களிலும் தெருமுனை நாடகங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

**விருதுகள்**

*2005-2006* ஆம் ஆண்டிற்கு தேசிய அளவிலான நாட்டு நலப் பணித் திட்ட இந்திரா காந்தி விருதுகள் தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளன. விவரம் வருமாறு:—

| | | |
|---|---|---|
| 1. | சிறந்த பல்கலைக்கழகம், இயக்ககம் | தொழில் நுட்பத் துறை, சென்னை. |
| 2. | சிறந்த திட்ட அலுவலர் | பேரா.பி. இராமநாதன், மாநிலக் கல்லூரி, சென்னை. |
| 3. | சிறந்த அலகு | மாநிலக் கல்லூரி, சென்னை |
| 4. | சிறந்த மாணவத் தொண்டர் | திரு. பைசல், வக்ப் போர்டு கல்லூரி, சென்னை. |

[2007 ஏப்ரல் 28

## அத்தியாயம்–10

### தேசிய மாணவர் படை

**1. தொடக்கம்**

தேசிய மாண்வர் படை, நாடாளுமன்றம் இயற்றிய 1948 ஆம் ஆண்டு தேசிய மாணவர் படை சட்டத்தின் (31/1948) கீழ் 16-7-1948 ஆம் நாளிலிருந்து செயல்படத் தொடங்கியது.

**2. நோக்கங்கள்**

**தேசிய மாணவர் படையின் நோக்கங்கள் வருமாறு:**

(அ) நாட்டிலுள்ள இளைஞர்களிடையே பண்பு, நலன், தோழமைப் பண்பு, ஒழுக்கம், தலைமைப் பண்பு, சமயச் சார்பற்ற கண்ணோட்டம், சாகசச் செயலாற்றல் மற்றும் தன்னலமற்ற சேவை மனப்பான்மை ஆகியவற்றை மேம்படுத்துதல்.

(ஆ) ஒழுங்கமைவான மனிதப் பண்புடைய பயிற்சி பெற்ற மற்றும் செயல் திறமிக்க இளைஞர்களை உருவாக்குதல் மற்றும் வாழ்க்கைத் தொழில் அனைத்திலும் தலைமையேற்கும் பண்பினை அவர்களிடையே செறிவுபடுத்தி நாட்டுக்கு சேவை செய்ய எப்போதும் ஆயத்தமாக இருக்கச் செய்தல்.

(இ) ஆயுதப்படையில் சேர்ந்து பணியாற்றுவதற்கு இளைஞர்களை ஊக்குவிப்பதற்கு உகந்த சூழலை உருவாக்குதல்.

**3. நிர்வாகம்**

தேசிய மாணவர் படை பாதுகாப்பு அமைச்சகத்தினால் நிருவகிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் தேசிய மாணவர் படையை, சுமுகமான முறையிலும், செவ்விய முறையிலும் நிருவகிப்பதற்காக, மாநில அரசு, தேசிய மாணவர் படையின் தலைமை துணை இயக்குநருக்கு துறைத் தலைவருக்கான அதிகாரங்களை வழங்கியுள்ளது.

**4. வரவு–செலவுத் திட்ட நிதியொதுக்கம்**

*2007-2008* ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு, தேசிய மாணவர் படைக்காக வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் *19,36,23,000/-* ஒதுக்கீடு செய்துள்ளது.



2007 ஏப்ரல் 28]

**5. ஊக்கத் தொகைகள்**

நம் மாநிலத்தின் தேசிய மாணவர் படைக்கு கீழ்க்காணும் ஊக்கத் தொகைகளை தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது.

(அ) தேசிய மாணவர் படையைச் சேர்ந்த *80* கல்லூரி மாணவர்களுக்கு/மாணவிகளுக்கு நபர் ஒருவருக்கு ஆண்டொன்றுக்கு *1,200* ரூபாயும், தேசிய மாணவர் படையைச் சேர்ந்த *90* பள்ளி மாணவர்களுக்கு/மாணவியருக்கு நபர் ஒருவருக்கு, ஆண்டொன்றுக்கு *600* ரூபாயும் படிப்பு உதவித் தொகை.

(ஆ) குடியரசு தின முகாம் மற்றும் குடியரசு தின விழாவை மையமாகக் கொண்ட முகாம்கள் ஆகியவற்றில் கலந்து கொள்கிற தேசிய மாணவர் படையைச் சேர்ந்த மாணவர்களுக்கு ரொக்க ஊக்கத் தொகை வழங்க ஆண்டொன்றுக்கு ரூபாய் *3.17* இலட்சம் அளவுக்கு தொகை வழங்கப்படுகிறது.

(இ) தமிழ்நாட்டில் பட்டதாரி ஆசிரியர் மற்றும் முதுநிலை பட்டதாரி ஆசிரியர் ஆட்சேர்ப்புக்கான நியமனத்திற்கான வாய்மொழி தேர்வுக்குரிய *12* மதிப்பெண்களில் தேசிய மாணவர் படையில் பங்கேற்று பணியாற்றியதற்காக *1/2* மதிப்பெண் வழங்கப்பட்டுள்ளது.

**6. தேசிய மாணவர் படை மாணவர்களின் எண்ணிக்கை**

தமிழ்நாடு தேசிய மாணவர் படை மாணவர்களின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள் வருமாறு:—

| | |
|---|---|
| தேசிய மாணவர் படையைச் சேர்ந்த மாணவர்கள் (இளநிலை பிரிவு) (பள்ளி மாணவர்கள்) | 61,743 |
| தேசிய மாணவர் படையைச் சேர்ந்த மாணவிகள் (இளநிலை பிரிவு) (பள்ளி மாணவிகள்) | 7,971 |
| தேசிய மாணவர் படையைச் சேர்ந்த மாணவர்கள் (முதுநிலை பிரிவு) (கல்லூரி மாணவர்கள்) | 19,014 |
| தேசிய மாணவர் படையைச் சேர்ந்த மாணவிகள் (முதுநிலை பிரிவு) (கல்லூரி மாணவிகள்) | 7,756 |
| மொத்தம் .. | 96,484 |

[2007 ஏப்ரல் 28

## அத்தியாயம்–11

### புதிய திட்டங்கள்

**2007–2008 ஆம் ஆண்டில் பின்வரும் புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன:**

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மொத்த செலவு | 2007-2008-ல் செலவு |
|---|---|---|---|
| தலைமைச் செயலகம் | | | |
| 1. | ஒரு கணினி மற்றும் ஒரு லேசர் பிரிண்டர் வாங்குதல் | 0.60 | 0.60 |
| தலைமைச் செயலகம் மொத்தம் | | 0.60 | 0.60 |
| தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் | | | |
| 2. | திருவண்ணாமலை மாவட்ட விளையாட்டரங்கில் ஒரு நீச்சல் குளம் கட்டுதல் | 33.00 | 33.00 |
| 3. | திருவாரூர் மாவட்ட விளையாட்டரங்கில் ஒரு நீச்சல் குளம் கட்டுதல் | 33.00 | 33.00 |
| 4. | சென்னை பெரியமேட்டில் உள்ள பல்நோக்கு உள் விளையாட்டு அரங்கத்தின் மேற்கூரையைப் புதுப்பித்தல் | 200.00 | 200.00 |
| 5. | மதுரை குதிரைப் பந்தய விளையாட்டு அரங்கத்தில் தற்போதுள்ள மின்னொளி வசதியைப் புதுப்பித்தல் | 50.00 | 50.00 |
| 6. | திருநெல்வேலி மற்றும் ஈரோட்டில் அனைத்து வசதிகள் கொண்ட விளையாட்டு விடுதிகள் கட்டுதல் | 140.00 | 56.00 |
| தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மொத்தம் | | 456.00 | 372.00 |
| தேசிய மாணவர் படை இயக்ககம் | | | |
| 7. | 57 தேசிய மாணவர் படை அலுவலகங்களுக்கு 57 கணினிகள் வாங்குதல் | 25.65 | 25.65 |
| 8. | தேசிய மாணவர் படையின் தீவிர பயிற்சிக்காக தடை தாண்டும் பயிற்சித் தடங்கள் அமைத்தல் | 20.00 | 20.00 |
| தேசிய மாணவர் படை இயக்ககம் மொத்தம் | | 45.65 | 45.65 |
| | பெரு மொத்தம் | 502.25 | 418.25 |



2007 ஏப்ரல் 28]

## அத்தியாயம்–12

### இளைஞர் திருவிழா

சுவாமி விவேகானந்தரின் பிறந்த நாளைக் கொண்டாடும் வகையிலும் தேசிய ஒற்றுமையை வளர்க்கும் விதத்திலும் 13-வது தேசிய இளைஞர் திருவிழா தமிழ்நாட்டில் சென்னையில், 2008 ஆம் ஆண்டு ஜனவரி 12 முதல் 16 வரை நடத்துவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

### நிறைவுரை

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் நற்பணிகள் தொடர்ந்து விரிவடைந்து வருகின்றன. நாட்டின், விளையாட்டு மற்றும் இளைஞர் நலனில் தமிழ்நாடு உன்னத நிலையினை அடையும் வகையில், இளைஞர்களுக்கான பல திட்டங்களை நிறைவேற்றுவதில் கடுமையாக உழைக்க இத்துறை முயற்சித்து வருகிறது.

[2007 ஏப்ரல் 28

# இணைப்பு—V

*(517 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 15—சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2007–2008

## வனத் துறை

**முன்னுரை**

தமிழகத்திலுள்ள காடுகள் உயர்ந்த தாவர மற்றும் உயிரினச் செல்வங்களின் களஞ்சியமாகத் திகழ்கின்றன. இவை உலகின் அனைத்து பகுதிகளிலுமுள்ள உயிரின பாதுகாப்பாளர்களாலும் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் உள்ள காடுகளில், நாட்டிலுள்ள பூக்கும் தாவர வகைகளில் மூன்றில் ஒரு பங்கு உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. மதிப்பு வாய்ந்த வன உயிரின வகைகளையும், வெவ்வேறு வகைப்பட்ட காடுகளையும் நமது மாநிலம் கொண்டுள்ளது. இது பல நூற்றாண்டுகளாக இயற்கை வனப் பெருக்கம் மற்றும் நிலைத்த மேம்பாடு குறித்த கலாச்சாரத்தில் முழுமையான அக்கறை கொண்டுள்ள தமிழ் மக்களால் பேணிப் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளது. ஆகையினால், தமிழ்நாடு இந்தியாவில் பல்லுயிர் பரவல் வளத்தில் முதன்மையான இடத்தைப் பெற்றிருப்பதில் வியப்பேதுமில்லை.

காடுகள் மக்களுக்கு மிகவும் பயனுள்ளவையாகும். நமது மாநிலத்தில் 32 ஆறுகள், பெரும் எண்ணிக்கையிலான கால்வாய்கள் மற்றும் பல்லாயிரக்கணக்கான ஏரிகள் ஆகிய அனைத்திற்கும் நீர்ப்பிடிப்புப் பகுதிகள் முக்கியமாக வனப் பகுதிகளிலேயே அமைந்துள்ளன. மேற்குத் தொடர்ச்சி மலை மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலையில் காணப்படும் உயர்நிலைக் காடுகள், உயர் நிலப் பகுதிகள் மற்றும் நீர்ப்பிடிப்புப் பகுதிகள் மழை பெய்யும்போது நீரைத் தேக்கி வைத்திருந்து, அதனை அளவுடன் வெளியிடுவதன் மூலம், வெள்ளம் மற்றும் வறட்சியின் தீவிரத்தைக் குறைத்து, தாழ்நில ஆற்றுப் பள்ளத்தாக்குகளைப் பாதுகாப்பதில் முக்கியப் பங்காற்றுகின்றன.



2007 ஏப்ரல் 28]

இதேபோன்று, இவை மண் அரிமானத்தைத் தடுத்து, வேளாண்மையின் வளர்ப்புத் தாயாகவும் விளங்குகின்றன. கடலோர தொடர்த் தடுப்புத் தோட்டங்களும், சதுப்பு நிலக் காடுகளும் பேரலைகளிடமிருந்தும், புயல்களிடமிருந்தும் நம்மைக் காப்பதுடன், சுனாமி போன்ற இயற்கைப் பேரழிவுகளால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைக்கவும் உதவுகின்றன. பசுமைக் காடுகள் மழையைப் பெற்று, தட்பவெப்ப நிலையையும் முறைப்படுத்துகின்றன. நச்சு வாயுக்களின் தாக்கத்தினால் ஏற்படும் விளைவுகள், குறைந்து வரும் வேளாண்மை உற்பத்தித் திறன், தண்ணீர் பற்றாக்குறை மற்றும் அதிகரித்து வரும் மாசுக்கள் போன்ற முக்கிய காரணங்களினால் வனங்களின் முக்கியத்துவம் முன்பைவிட தற்போது பெரிதும் உணரப்படுகின்றது.

### 1.1 வனக் கொள்கை

1988-ல் வகுக்கப்பட்ட தேசிய வனக் கொள்கையில், காடுகளைப் பராமரிக்கவும் அவற்றின் மேலாண்மைக்குப் பின்பற்றப்பட வேண்டிய கோட்பாடுகள் மற்றும் அணுகுமுறைகளைப்பற்றியும் விவரிக்கப்பட்டுள்ளது. வனக் கொள்கையின் முதன்மையான குறிக்கோள் சூழலமைப்பை நிலைப்படுத்துதல், மனித இனம், விலங்கினம் மற்றும் தாவரங்கள் போன்ற அனைத்து உயிரினங்களின் வாழ்விற்கு முக்கியமான சூழல் சமநிலை மற்றும் வளி மண்டல சமன்பாட்டுடன் கூடிய சூழலமைப்பை நிலை நிறுத்திப் பராமரிப்பதாகும். வனங்களிலிருந்து நேரடிப் பயன் பெறுதலை இதற்கு அடுத்த முக்கியமானதாகவே கருத வேண்டும்.

இந்தப் பின்னணியில் தமிழகத்திலுள்ள காடுகள் பின்வரும் நோக்கங்களுடன் மேலாண்மை செய்யப்பட்டு வருகின்றன:

- மாநிலத்தின் சுற்றுச்சூழல் மற்றும் சூழலமைப்பின் நிலைத் தன்மையை உறுதிப்படுத்துதல்,
- பல்லுயிர்ப்பரவல் தன்மை, வன உயிரினம் மற்றும் மரபியல் வளங்களைப் பாதுகாத்தல்,
- தரங்குன்றிய வனங்களை மீட்டு புனர்வாழ்வளித்தல்,
- கடலோரச்சூழல் அமைப்புப் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை,
- வன மேலாண்மை மற்றும் பெருக்கத்திற்கான வனப் பாதுகாப்பு,
- வாழ்வாதாரப் பாதுகாப்பிற்காக, வனங்களுக்கு வெளியே மரங்கள் அடர்ந்த பகுதிகளை விரிவுபடுத்துதல்,

- வனப் பாதுகாப்பு மற்றும் நீர்ப்பிடிப்புப் பகுதி மேலாண்மை மூலம் நீர்வளத்தினைப் பெருக்குதல்,
- பொருளாதாரச் செழுமை மற்றும் சூழல் நிலைத் தன்மையினை உறுதிப்படுத்த பழங்குடியினர் மேம்பாடு,
- விஞ்ஞான ரீதியான வன மேலாண்மைக்கான தொழில்நுட்ப உதவி, ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி,
- மரங்கள் அடர்ந்த பகுதிகளை அதிகரிக்க வன விரிவாக்கம், வன உயிரின மேலாண்மை சார்ந்த பாதுகாப்புக் கல்வி,
- ஊரக எரிசக்திப் பாதுகாப்பிற்கான வனவியல்,
- வனப் பகுதிகளைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் சுற்றுலா ஊக்குவிப்பு,
- வனவியல் மேலாண்மைக்கான மனித வள மேம்பாடு,
- தட்பவெப்ப நிலை மாறுபாட்டினைக் குறைத்தல்.

சுற்றுச்சூழலை நிலைப்படுத்துதல், வனங்களைப் பாதுகாத்தல், வன உயிரினப் பாதுகாப்பு மற்றும் மரபியல் வளங்களைப் பாதுகாத்தல், வன உற்பத்தித் திறனை அதிகரிக்கும் அனைத்து இயற்கைக் காடுகளையும் பராமரித்தல், வனங்களின் நீர்வளங்களைச் செழிப்பாக்குதல் மற்றும் மாநிலத்தின் காடுகள்/மரங்கள் அடர்ந்த பகுதிகளை அதிகரித்தல் ஆகியவை மாநில வனக் கொள்கையின் முக்கிய அம்சங்களாக அமைந்துள்ளன. இந்தக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காகப் பின்பற்றப்படும் பல்வேறு செயல்முறைகள் குறித்து கீழே விவரிக்கப்பட்டுள்ளது:

### 1.1.1 வனங்களுக்கு வெளியே மரங்களடர்ந்த பரப்பினை அதிகரித்தல்

2006 ஆம் ஆண்டில் இம்மாமன்றத்தில் மாநிலத்தின் பசுமைப் பரப்பு நிலை குறித்து அறிவித்தபடி, மாநிலத்தின் மொத்த நிலப் பரப்பில் 17.59 விழுக்காடு வனப் பரப்பாகும். மாநிலத்தின் வனம்சாரா பகுதிகளிலுள்ள மரங்களடர்ந்த பரப்பு மொத்த நிலப்பரப்பில் 3.66 விழுக்காடு ஆகும். இவ்வாறு மாநிலத்திலுள்ள மொத்த வனப் பரப்பு மற்றும் மரங்களடர்ந்த பரப்பு 27,634 ச.கி.மீ. ஆகும். இது மாநில நிலப் பரப்பில் 21.25 விழுக்காடு ஆகும். தேசிய வனக் கொள்கையின்படி 2012 ஆம் ஆண்டிற்குள் 33.33 விழுக்காடாக



அதிகரிக்கப்பட வேண்டும். எனவே, இதனை மேலும் கணிசமான அளவு அதிகரிப்பது அவசியமான ஒன்றாகும். 2006-2007 ஆம் ஆண்டில் வனம் மற்றும் வனம் சாராப் பகுதிகளில் 574.14 லட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டு இப்பணிக்கு சிறப்பு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

இந்த இலக்கினை அடைய காடுகளுக்கு வெளியே மரம் வளர்ப்பை அதிகரிப்பது மிகவும் அவசியமான மற்றும் சிக்கனமான உத்தியாகும். இந்த ஆண்டு தனியார் விவசாய நிலங்களில் பல்வேறு மர இனங்களை வளர்ப்பதற்காக ஒரு திட்டம் தொடங்கப்படுகின்றது. உயர் தரமான விதைகளை வழங்குவது மட்டுமல்லாமல் மர வகைகளை அறுவடைக்குப்பின் பதமிடுதல் சம்பந்தமான தொழில்நுட்பங்களிலும், சந்தை விற்பனை நடவடிக்கைகளிலும் வனத் துறையின் ஈடுபாடு இருக்கும். தனியார் வசம் உள்ள தரிசு நிலங்கள் கண்டறியப்படுவதுடன் திருத்தலங்களுக்குச் சொந்தமான தோப்புகள், சமுதாய நிலங்கள், பள்ளிக்கூட நிலங்கள், கோவில் நிலங்கள், வருவாய் புறம்போக்கு நிலம், இருப்புப் பாதையோர இடங்கள், நிறுவன நிலங்கள் உள்ளிட்ட பல்வேறு நிலங்களின் விரிவான பட்டியல் தயாரிக்கப்பட்டு சாத்தியமுள்ள இடங்களில், மரம் வளர்ப்பு ஊக்குவிக்கப்படும். இப்பணியை மேலும் சிறந்த முறையில் ஆற்றுவதற்காக, அரசு சாரா நிறுவனங்கள், வங்கிகள் மற்றும் பிற பங்களிப்போரும், இம்முயற்சியில் ஈடுபடுத்தப்படுவர். இது வனத் துறையின் முக்கியமான மற்றும் புதுமையான திட்டங்களில் ஒன்றாகும். குறுகிய காலத்தில் பலன் தரும் மற்றும் வறட்சியைத் தாங்கும் மர இன வகைகளை தனியார் வசம் உள்ள தரிசு நிலங்களில் வளர்க்க உதவும் இத்திட்டத்திற்காக நிதிநிலை அறிக்கையில் ரூ.10.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலமாக கிராம மக்களின் வருவாய் அதிகரிப்பதால், கிராமப்புற பொருளாதாரம் மேம்படும். அதே சமயத்தில் பொதுமக்களுக்குத் தேவைப்படும் மரங்களும் கிடைக்க உதவுவதால், காடுகள் பாதுகாக்கப்படுகின்றன.

### 1.1.2 வனங்களுக்கு உள்ளே பசுமைப் பகுதிகளின் பரப்பினை அதிகரித்தல்

இச்செயல் திட்டமானது தரமிழந்த காடுகளை மீட்டல் மற்றும் செழுமையாக்குவதில் தீவிர கவனம் செலுத்துகிறது. பெருகிவரும் சமுதாயத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு, வனப் பாதுகாப்பும், சமுதாயத் பங்களிப்பினை அதிகரிக்க உதவும் அறிவியல் ரீதியான சூழலியல் கொள்கைகளை மேலாண்மை செய்வதும் மற்றும் வனங்களின் உற்பத்தித்திறனைப் பெருக்குவதும் அவசியமாகும். இயற்கை வள

[2007 ஏப்ரல் 28

மற்றும் பொதுச் செல்வ வளமாக விளங்கும் வனங்களை ஒட்டியுள்ள கிராமங்களில் வசித்து வரும் கிராம மக்கள் பெரும்பாலும் வனங்களைச் சார்ந்தே இருப்பதால், வனங்கள் தொடர்ந்து சீர்கெடும் அபாய சூழ்நிலையில் இருந்து வருகின்றன. இந்த எதிர்மறையான போக்கினை மாற்ற, காடு வளர்ப்பிற்கான முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்வதே உரிய வழிமுறையாகும். அவ்வாறே சமுதாயத்திற்கு சூழல் பாதுகாப்பு மற்றும் பொருளாதாரச் செழுமை உறுதி செய்யப்படும்.

வனங்களுக்கு உள்ளே மரங்கள் அடர்ந்த பரப்புகளை அதிகரிப்பதற்கான பெரும்பாலான பணிகள் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம்மூலமாக மேற்கொள்ளப்படுகின்றன. இதற்காக 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.115.22 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**1.1.3 பல்லுயிரினப்பரவல் பாதுகாப்பு:**

தமிழ்நாட்டின் பழமை மற்றும் தமிழ் மக்களின் சுற்றுச்சூழலைச் சார்ந்து வாழக்கூடிய நெறிமுறையினாலும் தமிழ்நாடு ஒரு செழுமையான, பல்லுயிரினப்பரவல் நிறைந்த பகுதியாக தனித் தன்மை பெற்று விளங்குகிறது. மாநிலத்தின் மொத்த வனப் பரப்பில் 3,840 ச.கி.மீ, வன உயிரினங்கள் பாதுகாப்புப் பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் 8 வன உயிரினச் சரணாலயங்களும், 5 தேசியப் பூங்காக்களும், 12 பறவைகள் சரணாலயங்களும் அடங்கும். மாநிலத்தில் நீலகிரி உயிர்ச்சூழல் காப்பகம், மன்னார் வளைகுடா உயிர்ச்சூழல் காப்பகம் மற்றும் அகத்தியமலை உயிர்ச்சூழல் காப்பகம் ஆகிய மூன்று உயிர்ச்சூழல் காப்பகங்களும் உள்ளன. பல்லுயிரினப்பரவல் பாதுகாப்பு, கல்வி, பொழுதுபோக்கு, வரலாற்று முக்கியத்துவம், தனித்துவம் வாய்ந்த நிலம் மற்றும் நீர் அமைப்புகள் போன்றவற்றிற்காக மாநிலத்திலுள்ள பாதுகாப்புப் பகுதிகள் மேலாண்மை செய்யப்பட்டு வருகின்றன. திறமையான செயல்பாடு, நடைமுறையிலுள்ள வனப் பாதுகாப்பு மற்றும் வன விலங்கு பாதுகாப்புக்காக இயற்றப்பட்டுள்ள சட்டங்களை நிறைவேற்றுதல், உரிய புகலிட மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், பாதுகாப்புப் பணியில் முறையான அனைத்து பயனீட்டாளர்களை ஈடுபடுத்துதல் போன்றவற்றின்மூலம் பல்லுயிரினப்பரவல் பாதுகாப்பு நிறைவேற்றப்படும். பயிற்சி அளிக்கப்பட்ட அலுவலர்கள் மற்றும் உள்ளூர் மக்களுடன் இணைந்த கூட்டு முயற்சிகள்மூலமாக வன உயிரின மேலாண்மைப் பணிகள் மேற்கொள்ளப்படும்.



2007 ஏப்ரல் 28]

வனங்களுக்கு அருகில் அல்லது வனங்களுக்குள் வசிக்கும், 1,392 வனவாழ் மக்களைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள வேட்டைத் தடுப்பு முகாம்கள், வன உயிரினப் பாதுகாப்பை முன்னிட்டு எடுக்கப்பட்ட முக்கியமான முயற்சிகளில் ஒன்றாகும்.

**1.1.4 பழங்குடியினர் மேம்பாடு**

பழங்குடியினர் இயற்கை வளங்களை அழிக்காமல், அவற்றை நிலையான முறையில் பயன்படுத்தி இயற்கையோடு இணக்கமாக வாழ்ந்து வருகின்றனர். வன மேலாண்மை மற்றும் வனப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் வனத் துறைக்கு உதவி புரிகின்றனர். வனங்களுக்கு உள்ளே மற்றும் வனங்களை ஒட்டியுள்ள கிராமங்களில் வசிக்கும் பழங்குடியினருக்கு, அவர்தம் பிழைப்பிற்காக வாழ்வாதாரம் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் தேவைப்படுகின்றன. வனங்களுக்கு உள்ளே வாழும் பழங்குடியினரின் வாழ்வாதாரப் பிரச்சினைகள், துப்புரவு, சுகாதாரம், உடல் நலம், கல்வி, மற்றும் பழங்குடியினரின் ஒட்டுமொத்த மேம்பாட்டிற்கான பணிகள்மீது வனத் துறையினரால் கவனம் செலுத்தப்படுகிறது. பழங்குடியினரின் பாரம்பரியத் திறமைகள் மற்றும் அறிவுத்திறம் ஆகியவை வனப் பாதுகாப்பிற்காக அவசியம் பயன்படுத்திக்கொள்ளப்படும். அதே சமயத்தில் அவர்களின் வாழ்க்கைத் தரமும் மேம்படுத்தப்படும்.

பழங்குடியினர் பகுதிகளில் வனத் துறை 19 பள்ளிகளை நடத்தி வருகிறது. இவற்றில் சுமார் 5,000 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். இப்பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு குடிநீர் வசதி, ஆய்வக உபகரணங்கள், பெண்களுக்கான தனி கழிவறை வசதி, விளையாட்டு உபகரணங்கள், வகுப்பறை அறைகலன்கள், கற்பிக்க உதவும் உபகரணங்கள் மற்றும் புத்தகங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. பழங்குடியினர் பகுதிகளில் வனத் துறையினரால் நிருவகிக்கப்படும் பள்ளிகளில் உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட, ஊரக உள் கட்டமைப்பு மேம்பாட்டு நிதி மூலம் ரூ.5.07 கோடி மதிப்பீட்டில் திட்டம் ஏற்பளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி உதவியுடன் 2007-2008 ஆம் ஆண்டு முதல் நிறைவேற்றப்படும்.

**1.1.5 கடலோரப் பகுதி மேலாண்மை**

தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளில் சில சதுப்பு நிலக் காடுகளும், சவுக்குத் தோட்டக் காடுகளும் அங்குமிங்குமாக காணப்படுகின்றன. இந்தத் தாவர அமைப்பினை மேலும் அடர்த்தியாக உருவாக்குவது

[2007 ஏப்ரல் 28

மிகவும் அவசியமாகும். கடந்தகால அனுபவங்கள், குறிப்பாக 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமிமூலமாக, கடலோரப் பகுதிகளில் கடலோர தொடர் தடுப்புத் தோட்டங்கள் மற்றும் சதுப்புநிலக் காடுகளை வளர்ப்பதன் முக்கியத்துவம் உணரப்பட்டுள்ளது. தொடர் தடுப்புத் தோட்டங்கள் ஆற்றல் மிக்க காற்றுத் தடுப்பானாக விளங்குவதுடன், மணற்குன்றுகளின் இடப்பெயர்ச்சியைத் தடுக்கவும் உதவுகிறது. சதுப்புநிலக் காடுகள், பேரலைகள், சுனாமி போன்றவற்றால் சேதம் ஏற்படாது 'பாதுகாப்பு அளித்து வருவதுடன் இவற்றால் ஏற்படும் மனித உயிர்கள் இழப்பு மற்றும் பொதுச் சொத்துக்கள் மற்றும் தனியார் சொத்துகளுக்கு ஏற்படுத்தும் சேதத்தையும் தடுக்கின்றன. எனவே, கடந்த 2006-2007 ஆம் ஆண்டு 2,8.50 ஹெக்டேர் பரப்பில் கடற்கரையோர தொடர் தடுப்புத் தோட்டங்களையும், 1,650 ஹெக்டேர் பரப்பில் சதுப்புநிலக் காடுகளையும் உருவாக்குவதற்காக ரூ.1451.37 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. 2007-2008 ஆம் ஆண்டில் தேசிய புயல் இடர்பாடு தடுப்புத் திட்டத்தின்கீழ் கடற்கரையோர தொடர் தடுப்புத் தோட்டங்களையும் மற்றும் சதுப்புநிலத் தோட்டங்களையும் உருவாக்கும் பணிகள் தொடரப்படவுள்ளன. இராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படும் மன்னார் வளைகுடா உயிர்க்கோள காப்பகத் திட்டத்தின்கீழும், உயிர்ச்சூழல் பாதுகாப்பு மற்றும் கடலோரப் பகுதி மேலாண்மை ஆகிய இரண்டு நோக்கங்களும் ஒன்றிணைத்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### 1.1.6 நீர்ப்பிடிப் பகுதி மேலாண்மை

நீர்ப்பிடிப்புப் பகுதி, ஆறுகள் மற்றும் நீரோடைகளின் வளமானது அவற்றிற்கு மேலே அமைந்துள்ள வனப் பகுதிகளைச் சார்ந்துள்ளன. நீர்ப்பிடிப்பு பகுதிகளில் ஏற்படும் மண் அரிப்பும், தாவரங்கள் இழப்பும் மிகுந்த கவலை தருவதாக உள்ளது. எனவே, நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் காணப்படும் காடுகளைப் பாதுகாக்க, அப்பகுதிகளில் உடனடியாக மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்வது அவசியமாகும். இதில் காடு வளர்ப்புப் பணிகள் மற்றும் வேளாண்மை செயல்பாடுகளில் நவீன தொழில்நுட்பங்களான மண் அரிமானத் தடுப்புப் பயிரிடுதல், இடை நடவு, வரிசை நடவு, சமஉயர அணை, போன்றவற்றை மக்களிடையே பரப்புதல் ஆகியவை அடங்கும். களத் தடுப்புகள், தாவரத் தடுப்புகள் மற்றும் தொடர் தடுப்பணைகள் கட்டுதல் ஆகிய பணிகளும் மேற்கொள்ளப்படும். 2007-2008 ஆம் ஆண்டில் பல்வேறு திட்டங்களின்கீழ் வனத் துறையால் இப்பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.



2007 ஏப்ரல் 28]

### 1.1.7 வனப் பாதுகாப்பு

வனங்களிலிருந்து மரங்களை வெட்டிக் கடத்துதல், வன நிலங்கள் ஆக்கிரமிப்பு, சந்தன மரக் கடத்தல், வனத் தீ, மேய்ச்சல், கஞ்சா வளர்ப்பு, மருத்துவச் செடிகள் திருட்டு போன்ற செயல்பாடுகள், வன வளங்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விளைவிப்பவையாக விளங்குகின்றன. இந்த சட்ட விரோத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்காக வனத் துறை மேற்கொண்ட நடவடிக்கைகள் நல்ல பலனை அளித்துள்ளன. எனவே, இந்த நிதியாண்டிலும் இவை அதிக உத்வேகத்துடன் தொடரப்படும். குற்றத் தடுப்புப் பணி, ரோந்துப் பணி தொடர்பாகவும் மற்றும் குற்றங்களைக் கண்டுபிடிக்கும் முறைகள் குறித்தும் புதுமையான முறையில் வனப் பணியாளர்கட்கு பயிற்சி அளிக்கப்படும். வன நிலங்களை, ஆக்கிரமிப்புகளிலிருந்து தடுப்பதற்காக ரூ.173.50 இலட்சம் செலவில் 21,687 எல்லைக் கற்கள் நடப்படும். வைகை அணையில் உள்ள தமிழ்நாடு வனவியல் கல்லூரி, கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வனக் கல்வி நிலையத்திலும் வனத் துறைப் பணியாளர்களுக்கு ஆயுதப் பயிற்சி அளிப்பதற்காக, ரூ.9.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 1.1.8 ஆராய்ச்சி மற்றும் புவித் தகவல் அமைப்பு

பல்லுயிரினப் பாதுகாப்பும், உயிரி-உற்பத்தித் திறன் பெருக்கமுமே தமிழ்நாடு வன ஆராய்ச்சியின் முக்கிய குறிக்கோளாகும். பிற துறைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் இதர கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றுடன் இணைந்து கூட்டு முயற்சிகள்மூலம், வன ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தனியார் நிலங்களில் மரம் வளர்ப்பை ஊக்குவிக்க விரைவில் மகசூல் கொடுக்ககூடிய மற்றும் வறட்சியை தாங்கக்கூடிய மர வகைகள் வன ஆராய்ச்சியின்மூலம் கண்டறியப்பட்டு 2007-2008 ஆம் ஆண்டில் தனியாருக்குச் சொந்தமான நிலங்களில் பின் வரும் மரவகைகளை பெருமளவில் ஊக்குவிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது:

- ❖ பெருமரம்
- ❖ வாகை
- ❖ மலை வேம்பு
- ❖ இந்தோனேசிய சவுக்கு

[2007 ஏப்ரல் 28

- குறுங்காடி, மலைக்கொன்னை
- நீலகிரித் தைல மரம்
- குமில்
- தடசு அல்லது சடக்கி
- முள்ளில்லா மூங்கில்

புவித் தகவல் அமைப்பு, இயற்கை வள மேலாண்மையில் ஒரு சிறந்த உபகரணமாக வளர்ந்து வருகிறது. இது சிறப்பான வன மேலாண்மைக்கு உதவும். இதில் வன எல்லைகளை வரையறுத்தல், வனத் தீ கண்காணிப்பு, வனப் பரப்பு அளவீடு, வன வரைபடம் தயாரிப்பு மற்றும் பல பணிகள் அடங்கும். இஃது அறிவியல்பூர்வமான முடிவுகளை எடுப்பதிலும், வன வளங்களை மேலாண்மை செய்வதிலும் முக்கியப் பங்காற்றி வருகிறது.

### 1.1.9 மகளிர் மேம்பாடு

வனங்களில் எரிபொருள் மரம் சேகரிப்பு, சிறுவனப்படு பொருட்கள் சேகரம், புல் வெட்டுதல் மற்றும் மேய்ச்சல் போன்ற பணிகளில் மகளிர் அதிக நேரம் செலவிடுகின்றனர். எனவே, வனங்களைப் பாதுகாக்க மகளிரின் பங்கேற்பு அவசியம் தேவைப்படுகிறது. 2006-2007 ஆம் ஆண்டுவரை தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் 1,707 கிராமங்களில் 5,067 மகளிர் சுய உதவிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த சுய உதவிக் குழுக்கள் பால் பண்ணைத் தொழில், சோப்பு தயாரிப்பு, உணவு பதப்படுத்துதல், காய்கறி வளர்ப்பு மற்றும் விற்பனை போன்ற பல்வேறு பணிகளில் ஈடுபட்டு வருகிறது. இடைநில மேம்பாட்டுப் பணிகளுக்கான நிதியிலிருந்து ரூ.5,000/- வரை தனி நபர்களுக்கு நிதியுதவி, கிராமப்புற மேம்பாட்டு நிதியிலிருந்து சுழற்சி முறையில் கடன் உதவி, வங்கிக் கடன் பெறுவதற்கான அரசு சாரா நிறுவனங்கள் உதவி, அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் மகளிர் திட்டம்மூலமாக திறமைகளை வளர்த்துக் கொள்வதற்கான பயிற்சி போன்ற பல்வேறு உதவிகள் வனத் துறைமூலமாக சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்குச் செய்யப்படுகின்றன. வறுமை ஒழிப்பினை மையப்படுத்தி எடுக்கப்பட்டு வரும் இத்தகைய நடவடிக்கைகள், பொதுமக்கள் பொருளாதாரத் தேவைகளுக்காக வனங்களைச் சார்ந்தே வாழ்வதிலிருந்து விலக்கி அவர்களுக்கு மாற்று வேலைவாய்ப்புகளை அளித்து வருகின்றன.



2007 ஏப்ரல் 28]

### 1.1.10 மனித வள மேலாண்மை

வனத் துறையில் அதிக எண்ணிக்கையிலான பணியாளர்கள் உள்ளனர். வனப் பாதுகாப்புப் பணியில், ஏறத்தாழ 5,675 வனத் துறைப் பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இத்துடன் 3,076 சமூக வனத் தோட்டக் காவலர்களும், வேட்டைத் தடுப்புக் குழுக்களில் 1,392 நபர்களும் பணியில் உள்ளனர். வனத் துறையின் குறிக்கோள்களை அடைய, இப்பணியாளர்களுக்குப் பயிற்சியளிப்பதும், அவர்களுடைய திறமை மற்றும் அறிவினை மேம்படுத்துவதும் அவசியமான ஒன்றாகும். இந்த சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்காக கோயம்புத்தூரில் தமிழ்நாடு வனக் கல்வி நிலையமும் வைகை அணையில் தமிழ்நாடு வனவியல் கல்லூரியும் இயங்கி வருகின்றன. கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வனக் கல்வி நிலையத்தில் சரகர்களுக்கும் (ஓராண்டு), வனவர்களுக்கும் (6 மாதங்கள்) பயிற்சியளிக்கப்படுகிறது. வைகை அணையில் உள்ள தமிழ்நாடு வனவியல் கல்லூரியில் வனக் காப்பாளர்களுக்கும் (6 மாதங்கள்) மற்றும் வனக் காவலர்களுக்கும் (3 மாதங்கள்) பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இவற்றைத் தவிர சிறப்பு புத்தாக்கப் பயிற்சிகளும் சில குறிப்பிட்ட திட்டங்களுக்கான பயிற்சிகளும் 3 நாட்கள் முதல் 10 நாட்கள் வரை அளிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம், ஜி.பி.எஸ். உபகரணப் பயன்பாடு, யானைகள் பாதுகாப்பு போன்ற குறிப்பிட்ட திட்டங்களுக்கான பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன. பொதுவாக ஆயுதப் பயிற்சி, தீ தடுப்பு, குற்றங்களைக் கண்டுபிடித்தல் மற்றும் புலனாய்வு, புதிய குற்ற வழக்குகளை நடத்துதல், ஆராய்ச்சித் திட்டங்கள் குறித்து அளிக்கப்படும் வனப் பாதுகாப்புப் பயிற்சிகள், வனத் துறையினர் சிறப்பான முறையில் பணியாற்ற உதவுகின்றன.

### 1.1.11 உள் கட்டமைப்பு வசதி மேம்பாடு

வனத் துறை சிறப்பான முறையில் இயங்குவதற்கு, துறையின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது அவசியமான ஒன்றாகும். இதற்காக கட்டடங்கள் கட்டுதல், கட்டடப் பராமரிப்பு, உபகரணங்கள், தகவல் மையங்கள் மற்றும் ஊழியர் குடியிருப்புகள் போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. அதே சமயத்தில், வனங்கள் அதிகப் பரப்பளவில் காணப்படுவதாலும், அங்கு ஏராளமான மக்கள் வசிப்பதாலும் வனப் பகுதியில் உள்ள உள்கட்டமைப்புகளான சாலைகள், வீட்டுவசதி, பள்ளிகள் மற்றும் மருந்தகங்களை மேம்படுத்துவதும் அவசியமாகும். 2007-2008 ஆம் ஆண்டில், வனப்

பகுதியில் உள்ள பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான ஒரு திட்டத்திற்காக, தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிடம் ஊரக உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ், நிதி உதவி கோரப்பட உள்ளது.

## 1.2 2006–2007 ஆம் ஆண்டு சாதனைகள்

2006-2007 ஆம் ஆண்டில் வனத் துறை மனதில் பதியத்தக்க பல்வேறு சாதனைகளைப் புரிந்து பீடுநடையிட்டது. கீழே பட்டியலிடப்பட்டுள்ளவை முக்கியமான சில சாதனைகளாகும்.

❖ தமிழ்நாடு காடு வளர்ப்பு திட்டம்-II-ன்கீழ் 45,250 ஹெக்டேர் பரப்பில் காடு வளர்ப்புப் பணிகளும், வனங்களை ஒட்டி அமைந்துள்ள 40 பழங்குடியினர் கிராமங்கள் உள்ளிட்ட 205 கிராமங்களில் கிராம மேம்பாட்டுப் பணிகளும் ரூ.101.42 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டது.

❖ உலக வங்கியின் உதவியுடன், அவசர கால சுனாமி மறுசீரமைப்புத் திட்டத்தின்கீழ் 2,850 எக்டேர் பரப்பில் கடலோரத் தொடர் தடுப்புக் காடுகளும், 1,500 எக்டேர் பரப்பில் சதுப்பு நிலக்காடுகளும், ரூ.14.30 கோடி செலவில் உருவாக்கப்பட்டுள்ளன.

❖ 12-வது நிதிக் குழுவின் பரிந்துரையின்படி ரூ.13.275 கோடி செலவில், வனப் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

❖ வனத் துறையின் பராமரிப்பில் உள்ள சாலைகளை மேம்படுத்தவும் செப்பனிடவும் 2006-2007 ஆம் ஆண்டில் ரூ.10.40 கோடி அனுமதிக்கப்பட்டது. வனப் பகுதிகளில் போக்குவரத்து வசதிகள் சீரடைய இஃது பெரிதும் உதவியுள்ளது.

❖ அதிகரித்துவரும் மனித - வன உயிரின மோதலைத் தவிர்க்கவும், வன உயிரினப் பாதுகாப்பில் பொதுமக்களின் ஒத்துழைப்பை பெறவும், வனங்களின் எல்லையோரம் 262.50 கி.மீ. தூரம் சூரிய மின்வேலி அமைப்பதற்காக ரூ.4.24 கோடி அனுமதிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் வன உயிரினங்களால் ஏற்படும் சேதாரத்திற்கான இழப்பீடு வழங்க மொத்தம் ரூ.99.50 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இதில் மாநில





அரசால் அளிக்கப்பட்ட ரூ.50.00 இலட்சம், துறையின் வரலாற்றிலேயே இதுவரை மிகவும் அதிகபட்சமான தொகையாகும். கடந்த மூன்றாண்டுகளாக நிலுவையிலிருந்த இழப்பீட்டு கோரிக்கைகள் இதன்மூலம் தீர்வு செய்யப்பட்டன.

❖ தஞ்சாவூர் கோட்டத்தில், தேக்கு மர விற்பனை மூலம் ரூ.11.84 கோடி வருவாயாக ஈட்டப்பட்டுள்ளது. இதேபோன்று துறையின் வசம் இருந்த 52 மெட்ரிக் டன் சந்தனக் கட்டைகள் விற்பனை செய்ததன்மூலம் ரூ.18.15 கோடி வருவாயை வனத் துறை ஈட்டித் தந்துள்ளது.

❖ 8,044 எக்டேர் பரப்பில் குளக்கரைகளில் எழுப்பப்பட்ட கருவேல் மரத் தோட்டங்கள் விற்பனைமூலம் அரசுக்கும், உள்ளாட்சி அமைப்புகளுக்கும் ரூ.10.26 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

❖ நீலகிரியிலுள்ள முதுமலை வன உயிரினச் சரணாலயம் மற்றும் தேசியப் பூங்காவும், கோவை மாவட்டத்தில் உள்ள இந்திரா காந்தி வன உயிரினச் சரணாலயம் மற்றும் தேசியப் பூங்காவும், புலிகள் காப்பகமாக அறிவிக்கப்பட்டுள்ளன. மாநிலத்தில் புலிகளின் எண்ணிக்கை 89 ஆக உயர்ந்துள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது.

❖ தமிழக வனத் துறையானது ஜெய்ப்பூரில் நடைபெற்ற 15-வது அகில இந்திய வனத் துறைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டியில் பங்கேற்று, 30 தங்கம், 30 வெள்ளி மற்றும் 21 வெண்கலப் பதக்கங்களைப் பெற்று முதலிடத்தைப்பெற்று சாதனை புரிந்துள்ளது.

❖ சமூக வனப் பணியாளர்கள் மற்றும் தோட்டக் காவலர்களுக்கான குறைந்தபட்ச தினசரி ஊதியம், 1-9-2006 முதல் ஒரு நபருக்கு, ஒரு நாளைக்கு ரூ.85.05 ஆக (தோராயமாக மாதத்திற்கு ரூ.2,126.00) உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் 2,441 பணியாளர்கள் பயனடைந்துள்ளனர்.

❖ தமிழ்நாடு வனத் துறை புவித்தகவல் அமைப்பு பயனாளர் வலைதளங்களில் சிறந்ததாக சுற்றுச்சூழல் அறிவியல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தால் மதிப்பிடப்பட்டு, புவித்தகவல் அமைப்பில் சிறப்புச் சாதனை விருது வழங்கப்பட்டுள்ளது.

❖ மாவட்டத்திற்கொரு வன விரிவாக்க மையத்தை உருவாக்கி தமிழகம் நாட்டிலேயே முதன்மை மாநிலமாகத் திகழ்கின்றது.

[2007 ஏப்ரல் 28

## 1.3 வன வருவாய் மற்றும் செலவினம்

### 1.3.1 வருவாய்

காப்புக் காடுகளில் இயற்கை மரங்களை வெட்ட தடை விதித்த முதல் மாநிலம் தமிழ்நாடு ஆகும். 1979ஆம் ஆண்டு முதல், இயற்கை மரங்களை வெட்டுவது நிறுத்தப்பட்ட பின், சந்தன மர விற்பனை, மூலப்பொருட்களைத் தொழிற்சாலைகளுக்கு வழங்குதல் மற்றும் பண்ணை மரத் தோட்டங்கள் விற்பனை போன்றவை, வருவாய்க்கான முக்கிய ஆதாரங்களாக விளங்குகின்றன. பட்டுப்போன சந்தன மரங்கள் மட்டுமே விற்பனைக்காக பிரித்தெடுக்கப்படுகின்றன. முதிர்ந்த தோட்டங்களிலிருந்து மூலப்பொருட்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய குறிப்பிட்ட காகித மற்றும் தோல் பதப்படுத்தும் தொழிற்சாலைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. நீர்ப்பாசன ஏரிகளில் வளர்க்கப்படும் பண்ணை வனவியல் மரத் தோட்டங்கள், ஏலத்தின்மூலம் விற்பனை செய்யப்படுகின்றன. இதனால் அரசுக்கும், உள்ளாட்சி நிறுவனங்களுக்கும் கூடுதல் வருமானம் கிடைக்கின்றது.

2006-2007 (திருத்திய மதிப்பீடு) மற்றும் 2007-2008 (வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு) ஆம் ஆண்டிற்கான வருவாய் விவரங்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளது:

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | வருவாய் ஆதாரம் | 2006–2007 (திருத்திய மதிப்பீடு) | 2007–2008 (வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு) |
|---|---|---|---|
| அ. | சந்தன மரம் | 4286.02 | 7810.66 |
| ஆ. | தடி மரம் | 1027.54 | 1023.57 |
| இ. | தொழிற்சாலைக்கு மூலப்பொருட்கள் வழங்குதல் | 553.29 | 502.96 |
| ஈ. | பிற சிறுவனப் பொருட்கள் | 12.82 | 13.93 |
| உ. | பண்ணைக் காடுகள் | 1050.00 | 1050.00 |
| ஊ. | மூங்கில், முந்திரி, மென்மர முதலிய தோட்டங்கள் விற்பனை | 17.55 | 17.55 |
| எ | இதர வருவாய்கள் | 2000.61 | 1874.94 |
| | மொத்தம் | 8947.83 | 12293.61 |
| | மீள் அளிப்புத் தொகையை கழிக்கவும் (–) | 700.74 | 7.21 |
| | நிகர மொத்தம் | 8247.09 | 12286.40 |



2007 ஏப்ரல் 28]

### 1.3.2 செலவினம் மற்றும் மூலதனம்

வனத் துறைக்கான 2006-2007 ஆம் ஆண்டின் ஒதுக்கீடான ரூ.28,554.52 இலட்சங்களை விட 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.30,632.22 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டை விட ஏழு விழுக்காடு அதிகமாகும். வரவு-செலவுத் திட்டத்தில் கீழ்க்கண்ட இனங்களுக்கு பின்வருமாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | 2006–2007 ஆம் ஆண்டின் செலவினம் (திருத்திய மதிப்பீடு) | 2007–2008 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|
| அ. | மாநில வனத் திட்டங்கள் | 27117.20 | 29334.95 |
| ஆ. | மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் (100%) | 743.80 | 637.13 |
| இ. | மத்திய அரசும் மாநில அரசும் சம அளவில் பொறுப்பேற்கும் திட்டங்கள் | 693.52 | 660.14 |
| | மொத்தம் | 28554.52 | 30632.22 |

## 1.4 2007–2008 ஆம் ஆண்டிற்கான முக்கியத் திட்டப் பணிகள்

2007-2008 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட உள்ள சில முக்கியத் திட்டங்கள் பற்றிய ஒரு சிறு குறிப்புரை கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

### 1.4.1 தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் (2-வது கட்டம்) (சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் வங்கியின் நிதி உதவி பெறும் திட்டம்)

மனிதர்கள் மற்றும் உயிரினத் தலையீடுகளால், வனப் பகுதிகளில் குறிப்பிடத்தக்க அளவு பரப்பு மற்றும் வனக்கூட்டமைவில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. வறுமையின் காரணமாக காடுகள் அழிக்கப்படுவதும், காடுகள் அழிக்கப்படுவதால் வறுமை ஏற்படுவதும் ஒரு கொடுமையான சுழல் வட்டமாகும். 150 பழங்குடியினர் கிராமங்கள் உள்ளிட்ட 800 கிராமங்களையொட்டியுள்ள 1,77,500 ஹெக்டேர் பரப்பு தரம் குன்றிய காடுகளை உடனடியாக

[2007 ஏப்ரல் 28

மேம்படுத்துவதற்கான அவசியத்தை உணர்ந்து, 2012-2013 வரையிலான 8 ஆண்டு கால அளவில், ரூ.567.42 கோடி மதிப்பீட்டில், தமிழ்நாடு காடு வளர்ப்பு திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகள், சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் வங்கியின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்குத் தேவையான அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள் செய்து தரப்படுகின்றன. இயற்கை வளமான சுற்றுச்சூழலை மீட்பதற்கான காடு வளர்ப்புப் பணிகளுடன், ஊரகப் பகுதி மக்களுக்கு மாற்று வேலைவாய்ப்பு வழங்கி, அவர்களின் வருமானத்தை உயர்த்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. காடுகளைச் சார்ந்துள்ளவர்களுக்கும், ஏழை மகளிருக்கும் கடனுதவி வழங்கப்படுகிறது.

2006-2007 ஆம் ஆண்டில், 40 பழங்குடியினர் கிராமங்கள் உள்ளிட்ட 205 வன எல்லையோர கிராமங்களில் உள்ள 45,250 ஹெக்டேர் பரப்பளவில் காணப்படும் தரம் குன்றிய காடுகளில் ரூ. 101.42 கோடி செலவில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 2007-2008 ஆம் ஆண்டில், 40 பழங்குடியினர் கிராமங்கள் உள்ளிட்ட 230 வன எல்லையோர கிராமங்களைச் சேர்ந்த 51,500 ஹெக்டேர் பரப்பில் ரூ.115.22 கோடி செலவில் இத்திட்டம் நிறைவேற்றப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 1.4.2 அவசரகால சுனாமி மறுசீரமைப்புத் திட்டம் (உலக வங்கியின் நிதி உதவி பெறும் திட்டம்)

26-12-2004 அன்று ஏற்பட்ட சுனாமியின்போது பெற்ற அனுபவம், கடலோரத் தொடர்தடுப்புத் தோட்டங்கள் மற்றும் சதுப்பு நிலத் தோட்டங்களின் பயன்பாட்டை உணரச் செய்தது. எனவே, தற்போதுள்ள கடலோரத் தொடர்தடுப்புத் தோட்டங்கள் மற்றும் சதுப்பு நிலத் தோட்டங்களில் செயற்கை மறு உற்பத்தி முறைகள்மூலம் விரிவாக்கப் பணிகளை மேற்கொள்வது அவசியம் என்று கருதப்படுகிறது. 2006-2007 ஆம் ஆண்டில், இத்திட்டம் ரூ.1,430.37 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டு, 2,850 ஹெக்டேர் பரப்பில் கடலோர தொடர்தடுப்புத் தோட்டங்களும், 1,500 ஹெக்டேர் பரப்பில் சதுப்புநிலத் தோட்டங்களும் எழுப்பப்பட்டன. 2007-2008 ஆம் ஆண்டில், முன்பு எழுப்பப்பட்ட கடலோர தொடர்தடுப்புத் தோட்டங்கள் மற்றும் சதுப்பு நிலத் தோட்டங்களைப் பராமரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுவதுடன் கடற்கரை நெடுக தனியாருக்குச்



2007 ஏப்ரல் 28]

சொந்தமான தரிசு நிலங்களில் தொடர்தடுப்புத் தோட்டங்களையும் சதுப்பு நிலத் தோட்டங்களையும் உருவாக்க ஊக்குவிக்கப்படும்.

### 1.4.3 தேசிய காடு வளர்ப்புத் திட்டம்

ஊரகப் பகுதி மக்களுக்கும் மற்ற வனவியலுக்குமிடையே உறுதியான மற்றும் நிலைத்த இணைப்பை ஏற்படுத்துவதன் மூலமே, வனங்களை மீட்டெடுப்பதில் உறுதியான வெற்றியை அடைய இயலும். இதனை உணர்ந்து, மத்திய அரசு, மாநில அரசுகளுக்கு தேசிய காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் தனியே உதவியளிக்கிறது. இத்திட்டம் 100 விழுக்காடு மத்திய அரசின் நிதி உதவியுடன் 32 வன மேம்பாட்டு முகமைகள்மூலமாக கூட்டு வன மேலாண்மை அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2006-2007 ஆம் ஆண்டு இத்திட்டத்திற்காக ரூ.18.66 கோடி செலவிடப்பட்டுள்ளது. 2007-2008 ஆம் ஆண்டிலும் தேசிய காடு வளர்ப்புப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

### 1.4.4 வன உயிரினத் திட்டங்கள்

பொருளாதார வளர்ச்சிக்கு வழங்கப்படும் முக்கியத்துவத்தினாலும் அதன் விளைவாக நிகழும் தொழிற்சாலைகளின் பெருக்கத்தினாலும் வனங்கள் தொடர்ந்து சிதைந்து துண்டாகும் நிலைமை ஏற்பட்டுள்ளது. பல்வேறு விலங்கின வகைகள் தற்போது முற்றிலும் அழியக்கூடிய ஒரு அபாய நிலையை இது உருவாக்கியுள்ளது. வனங்களிலுள்ள தாவர இனங்கள் மற்றும் உயிரினங்களைப் பாதுகாப்பதும், முக்கியமான புகலிடங்களைப் பாதுகாக்கும் முக்கிய நோக்கத்துடன் மாநிலத்தில் பல்வேறு வன உயிரினத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. பாதுகாக்கப்பட்ட பகுதி மேலாண்மை, வன உயிரினப் பாதுகாப்பு, இயற்கைச் சூழல் அமைப்புகளைப் பாதுகாத்தல், பல்வேறு தாவர மற்றும் உயிரினங்களைப் பாதுகாத்தல் மற்றும் பல்வேறு வகைப்பட்ட புகலிடங்களில் ஆரோக்கியமான வன உயிரினங்களை உருவாக்குதல் ஆகியவை மாநிலத்தின் வன உயிரின மேலாண்மையின் புதிய அம்சங்களாகும். தனிப்பட்ட உயிரினங்கள் பாதுகாப்பு மற்றும் அவற்றிற்கான புகலிடப் பாதுகாப்பு மற்றும் பாதுகாக்கப்பட்ட பகுதிகள் மற்றும் உயிரினக்காட்சி சாலைகளில் அழிவுக்கு உள்ளாகி அருகி வரும் வன உயிரினங்களைப் பாதுகாப்பதற்கான சிறப்பு அணுகுமுறைகளை மேற்கொள்ளுதல் போன்றவற்றில் தற்போது முழு அளவில், தீவிர கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. சூரிய மின்வேலிகள் எழுப்புதல், புகலிட மேம்பாடு மற்றும் சரியான

[2007 ஏப்ரல் 28

நேரத்தில் நிவாரணத் தொகையினை வழங்குதல் போன்ற மனிதர்கள்-வன உயிரின மோதல் தொடர்பான விஷயங்களிலும் தற்போது கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. புலிகள் பாதுகாப்புத் திட்டம், மற்றும் யானைகள் பாதுகாப்புத் திட்டம், பறவைகள் சரணாலயத்திற்குமான மேலாண்மை மற்றும் மேம்பாட்டிற்கான தனிப்பட்ட திட்டங்கள் நீலகிரி உயிர்ச்சூழல் காப்பகத்தின் காப்பக பாதுகாப்பிற்கான திட்டம் ஆகியவை வன உயிரின பிரிவில் நடைமுறைப்படுத்தப்படும் சில முக்கியத் திட்டங்களாகும்.

### 1.4.5 மன்னார் வளைகுடா உயிர்க்கோளக் காப்பகத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் பல்வேறு துறைகளின் பங்கேற்புடன் இராமேசுவரம் முதல் தூத்துக்குடி வரையுள்ள கடற்கரையோரப் பகுதிகளையும், செறிவு மிக்க பவளப் பாறைகள் நிறைந்த 21 தீவுகளையும் உள்ளடக்கிய மன்னார் வளைகுடா உயிர்க்கோளக் காப்பகத்தின் மேலாண்மையில் முக்கியக் கவனம் செலுத்தப்படுகிறது. இத்திட்டம் ரூ.140.00 கோடி முதலீட்டில் தமிழ்நாடு அரசு, மத்திய அரசு, உலக சுற்றுச்சூழல் மையம் மற்றும் ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின் நிதியுதவியுடன் 2009 ஆம் ஆண்டு வரை செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தின்கீழ், உள் கட்டமைப்பு வசதியினை மேம்படுத்துதல், பயிற்சியின்மூலம் பயனீட்டாளர்களின் செயல்திறனை மேம்படுத்துதல், விழிப்புணர்வு ஏற்படுத்துதல், வளங்களின் கண்டுபிடிப்புகள் தொடர்பான ஆராய்ச்சி மற்றும் கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ளுதல், உள்ளூர் மக்களின் பங்களிப்பை உறுதி செய்தல் மற்றும் அவர்களுக்கு மாற்று வாழ்வாதாரங்களை அளித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள 222 கிராமங்களில், 10 கி.மீ. உள்பரப்பு வரை இத்திட்டம் தொடர்பான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உலக வங்கியின் உதவியுடன் செயல்படுத்தப்படும் களக்காடு-முண்டந்துறை புலிகள் காப்பகத் திட்டத்தில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டதைப் போல மன்னார் வளைகுடா உயிர்க்கோளக் காப்பகப் பகுதியின் கடல் வாழ் உயிரினப் பாதுகாப்பிலும் உள்ளூர் மக்களின் உதவியினைப் பெறுவதற்கான, சூழல் மேம்பாட்டு அணுகுமுறை, இத்திட்டத்திலும் பின்பற்றப்படுகிறது. 2007-2008 ஆம் ஆண்டில் ஒரு செயல் திட்டம் உருவாக்கப்பட்டு ரூ.10.19 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.



2007 ஏப்ரல் 28]

### 1.4.6 மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

நீலகிரி பகுதியிலுள்ள, சுற்றுச்சூழல் முக்கியத்துவம் வாய்ந்த வனப் பகுதிகளில் பாதிப்புகளை ஏற்படுத்தும் உயிரினத் தலையீடுகளை முறைப்படுத்தி, அங்கே நிலையான பசுமைப் பரப்பை அதிகரித்து, பல்லுயிர் பரவல் தன்மையைப் பேணிப் பாதுகாப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இங்குள்ள மலைப் பிரதேசங்களின் நலன் மற்றும் அவற்றிற்குகீழ் காணப்படும் சமவெளிப் பகுதிகளின் வளமானது, வலுவற்ற சுற்றுச்சூழல் கூட்டமைவான சோலைகள் மற்றும் புல்வெளிகளை சார்ந்துள்ளது. தீ தடுப்பு, வேட்டைத் தடுப்பு முகாம்கள் மற்றும் மண் மற்றும் ஈரப்பத பாதுகாப்பு ஆகிய பணிகள் இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2006-2007 ஆம் ஆண்டில், ரூ.237.40 இலட்சம் செலவில் நீலகிரி மாவட்டத்திலுள்ள 550 ஹெக்டேர் பரப்பில், மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் வனத் துறையால் செயல்படுத்தப்பட்டது. 2007-2008 ஆம் ஆண்டில், இத்திட்டம் ரூ.306.63 இலட்சம் செலவின மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளது.

### 1.4.7 மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்

மேற்கு மலைத்தொடர் பகுதியில் இத்திட்டத்தின்மூலம், சுற்றுச்சூழல் மீட்பு, நிலைநிறுத்தல், மேம்பாடு மற்றும் பாதுகாப்பு ஆகியவை எதிர்நோக்கப்படுகின்றன. மேற்குத் தொடர்ச்சி மலையில் அமைந்துள்ள காடுகள் தனித் தன்மை வாய்ந்த உயிரின மற்றும் தாவர வகைகளின் கூட்டமைப்பை காத்து வருகின்றன. அவற்றின் பழமைக்காகவும், பரவல் தன்மைக்காகவும் மற்றும் பயன்பாட்டு மதிப்பிற்காகவும் இவை பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும். தரம் குன்றிய வனப் பரப்பு மீட்டல், நீர் சேகரிப்பு அமைப்புகளை ஏற்படுத்துதல், மண்வளப் பாதுகாப்பு, வேட்டைத் தடுப்பு நடவடிக்கைகள், தகவல் தொடர்பை மேம்படுத்துதல், மருத்துவ தாவர பாதுகாப்பு, சூரிய மின்வேலி அமைத்தல் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் அடிப்படை உள் கட்டமைப்பு வசதிகளைச் செய்து தருதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2006-2007 ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் ரூ.209.23 இலட்சம் செலவில், 383 ஹெக்டேர் பரப்பளவில், இத்திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட்டன. 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.430.14 இலட்சம் மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

[2007 ஏப்ரல் 28

### 1.4.8 படுகை நிலங்களில் தேக்கு மரத் தோட்டங்கள் வளர்த்தல்

மாநிலத்தின் தடிமர வளத்தைப் பெருக்குதல், சுற்றுச்சூழல் நிலையுயர்த்துதல், காப்பு வனப் பகுதிகளுக்கு வெளியே மரங்களடர்ந்த பரப்பி[illegible] அதிகரித்தல் மற்றும் இதன்மூலமாக ஆற்றுப் படுகைகளில் மண் அரிப்பைத் தடுத்தல் ஆகியவை இத்திட்டத்தின் நோக்கங்களாகும். 2007-2003 வரையிலான ஐந்து ஆண்டு கால அளவில் ரூ.2,139.827 இலட்சம் செலவில் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, ஈரோடு, சேலம் மற்றும் பொள்ளாச்சி கோட்டங்களில், 16,050 ஹெக்டேர் பரப்பு படுகைகளில், தேக்கு மரத் தோட்டங்கள் வளர்க்கும் பணியை மேற்கொள்ள அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. 2006-2007 ஆம் ஆண்டில், ரூ.478.50 இலட்சம் செலவில், 3,280 ஹெக்டேர் பரப்பளவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 2007-2008 ஆம் ஆண்டில், ரூ.573.08 இலட்சம் மதிப்பீட்டில், 3,160 ஹெக்டேர் பரப்பளவில் தேக்கு மரத் தோட்டங்கள் வளர்த்தல் மற்றும் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

### 1.4.9 12–வது நிதிக் குழு பரிந்துரையின்கீழ் வனப் பராமரிப்புப் பணிகள்

12-வது நிதிக் குழுவின் பரிந்துரையின்கீழ், முதல் வனப் பராமரிப்பு மற்றும் புதுப்பிப்புப் பணிகளை 2006-2007 முதல், ஐந்தாண்டு கால அளவில் மேற்கொள்ள அரசு ரூ.30.00 கோடி ஒப்பளித்துள்ளது. 2006-2007 ஆம் ஆண்டில் பின்வரும் வனப் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள ரூ.1,327.50 இலட்சம் அனுமதிக்கப்பட்டது.

- ❖ நீலகிரி மற்றும் பழனி மலைகளில் தரம் குன்றிய காடுகளில் சுற்றுச்சூழல் மீட்பு மற்றும் பாதுகாப்பு
- ❖ தமிழ்நாட்டு வனப் பகுதிகளில் உள்ள சாலைகளின் மேம்பாடு
- ❖ பல்லுயிர் பரவல் தன்மை பாதுகாப்பு
- ❖ வனத் துறைக் கட்டடங்களைப் பராமரித்தல் மற்றும் பழுது பார்த்தல்
- ❖ வனமயமாக்கலுக்காக சோலை மரக் கன்றுகள் வளர்த்தல்

2007-2008 ஆம் ஆண்டில், ரூ.590.75 இலட்சம் செலவில், தரம் குன்றிய 300 ஹெக்டேர் பரப்பு சோலை மரக் காடுகளில் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளவும், மேலும் பல்வேறு பராமரிப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.



2007 ஏப்ரல் 28]

### 1.4.10 ஒருங்கிணைந்த வனப் பாதுகாப்பு

வனத் துறையால் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த வனப் பாதுகாப்புத் திட்டத்தின் செலவானது, மத்திய மற்றும் மாநில அரசுகளால் முறையே 75:25 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. வனப் பகுதிகளில் ஏற்படும் தீ விபத்தைத் தடுப்பதும், பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ளுதலும் இத்திட்டத்தின் நோக்கங்களாகும். ஒருங்கிணைந்த வனப் பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் செய்யப்படும் மற்றொரு முக்கியப் பணி, வன எல்லைகளை நிர்ணயித்து, ஆக்கிரமிப்புகள் ஏற்படாவண்ணம், எல்லைக் கற்களை நிறுவுதல் ஆகும். கூட்டு வன மேலாண்மைக் குழுக்களுக்கு உதவியளித்தல், வனப் பரப்பிற்குள் நீராதாரங்களை உருவாக்குதல், வாகனங்கள், தொலைத் தொடர்பு சாதனங்கள் மற்றும் தீ தடுப்பு சாதனங்கள் வாங்குதல் போன்ற இன்னபிற பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2007-2008 ஆம் ஆண்டில், ரூ.485.00 இலட்சம் செலவின மதிப்பீட்டில் இத்திட்டத்தை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 1.4.11 வன ஆராய்ச்சி

சிறந்த முறையில் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகள் மூலமாகவே நம்பகத் தன்மை வாய்ந்த வன மேலாண்மைத் திட்டங்களையும், செயல்பாடுகளையும் வகுக்க இயலும். பல்லுயிர் பரவல் தன்மைப் பாதுகாப்பு மற்றும் உயிரியல் உற்பத்தித் திறன் மேம்பாடு ஆகியவற்றிற்கு தமிழ்நாட்டு வன ஆராய்ச்சியில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. மக்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் அமைந்துள்ள, எளிதில் பின்பற்றக்கூடிய வன ஆராய்ச்சி முடிவுகள் நடைமுறையில் பின்பற்றப்படுவதற்காக மக்களிடையே பரப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அனைத்து வேளாண் தட்பவெப்ப நிலைப் பகுதிகளையும் கருத்தில் கொண்டு, பல்வேறு முக்கிய ஆராய்ச்சிப் பணிகள், ஆராய்ச்சி மையங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2006-2007 ஆம் ஆண்டில், ரூ.203.00 இலட்சம் செலவில் வன ஆராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 2007-2008 ஆம் ஆண்டில் இத்திட்டத்தை ரூ.205.00 இலட்சம் செலவில் தொடர உத்தேசிக்கப்பட்டுள்ளது. வனங்களுக்கு வெளியே காணப்படும் தடிமரங்களின் உற்பத்தித் திறனை அதிகரித்தல் மற்றும் வளமான காடுகளை வளர்ப்பதற்கான பணிகளும் ஆராய்ச்சிப் பிரிவால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த ஆராய்ச்சி முடிவுகளை செயல்முறைப்படுத்துவதற்காக ஆராய்ச்சிப் பிரிவு, வன விரிவாக்கப் பிரிவுடன் நெருக்கமாக இணைந்து செயல்படுகிறது.

## 1.5 புதிய திட்டங்கள்

### 1.5.1 தேசிய புயல் இடர்ப் பாடு தடுப்புத் திட்டம்

கடலோரப் பகுதிகள் கடும் காற்று, புயல் மற்றும் பிற இயற்கைப் பேரழிவுகளின்போது பாதிக்கப்படுவதற்கான வாய்ப்பு அதிகம் உள்ளது. கடலோர தொடர் தடுப்புத் தோட்டங்கள் மற்றும் சதுப்பு நிலத் தோட்டங்களை கடலோரப் பகுதிகளில் எழுப்புவதன்மூலம் இதுபோன்ற இயற்கைப் பேரழிவுகளை வெற்றிகரமாக தடுக்க இயலும் என்பதை கடந்தகால அனுபவங்கள் உணர்த்துகின்றன. 2007-2008 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ், ரூ.550.27 இலட்சங்கள் செலவில், 500 ஹெக்டேர் பரப்பளவில் கடலோர தொடர் தடுப்புத் தோட்டங்களை எழுப்பவும், 500 ஹெக்டேர் பரப்பளவில் சதுப்பு நிலத் தோட்டங்கள் எழுப்பவும் திட்டமிடப்பட்டுள்ளதுடன் மன்னார் வளைகுடா பகுதியில் பவளப் பாறை அகழ்ந்தெடுப்பவர்கள், கடற்பாசி சேகரிப்பவர்கள் போன்றவர்களின் மறுவாழ்விற்கான பணிகள் மற்றும் பிற உள்கட்டமைப்பு வசதி மேம்பாட்டுப் பணிகளும் மேற்கொள்ளப்பட உள்ளன.

### 1.5.2. வனப் பகுதிகளில் சுற்றுலா

மாநிலத்தில் சூழல் சுற்றுலாவை ஊக்குவிப்பதற்கேற்ற, சுற்றுச்சூழல் செழுமை வாய்ந்த பல்வேறு இடங்கள் உள்ளன. தமிழ்நாட்டில் காணப்படும் வன உயிரினம், தனித்துவம் மிக்க வனவியல் இடங்கள் மற்றும் பல்வேறு வகைப்பட்ட புகலிடங்கள் ஆகியவை சூழல் சுற்றுலாவிற்கு ஏற்ற இடங்களாக உள்ளன. இதன் அடிப்படையில், சுற்றுலாத் தலங்களை கருத்தில் கொண்டு, சூழல் சுற்றுலாவிற்காக ரூ.47 கோடி மதிப்பீட்டிலான திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் நிதி உதவி கோரப்பட்டுள்ளது. சூழல் சுற்றுலாவை ஊக்குவிப்பதன்மூலம், உள்ளூர் கிராமங்களின் பொருளாதாரம் மேம்படுவதுடன், இந்த இடங்களுக்கு வருகை தரும் சுற்றுலா பயணிகளுக்கு சிறப்பான ஓய்வையும், பொழுதுபோக்கு வசதிகளையும் அளிக்கிறது.

### 1.5.3 மூங்கில் செடிகள் விநியோகம்

மூங்கில் பயிரிடுவதை பன்மடங்கு அதிகரிக்கக்கூடிய வாய்ப்புள்ள மாநிலமாகத் தமிழகம் விளங்குகின்றது. மூங்கில் கைவினைப்பொருட்கள் மற்றும் விளைபொருட்கள் ஊரக வேலைவாய்ப்பினை உருவாக்கக்கூடிய மற்றும் மாநிலத்தில் மூங்கில் சார்ந்த



தொழிற்சாலைகளை ஊக்குவிக்கக்கூடிய திறன் படைத்தவையாகும். மாநிலத்தின் தனியார் நிலங்களில், மூங்கில் பயிரிடுதலை ஊக்குவிப்பதற்கான கருத்துரு ஒன்று தமிழ்நாடு வனத் துறையால் தயாரிக்கப்பட்டு, மத்திய அரசின், தேசிய மூங்கில் குழுமத்தின் பரிசீலனையில் உள்ளது.

### 1.5.4 வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் இரவு கானக உலா

சென்னைக்கு அருகே உள்ள வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா அதன் அமைவிடச் சிறப்பினால் இரவுக் கானக உலா அமைப்பதற்குப் பொருத்தமான இடமாக உள்ளது. எனவே, வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் இரவு கானக உலா அமைப்பை ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்ட செயல்பாடுகள் 2007-2008 ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்படும்.

### 1.5.5 வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் வண்ணத்துப் பூச்சிப் பூங்கா

இந்தியாவில் 1500-க்கும் மேற்பட்ட வண்ணத்துப் பூச்சி இனங்கள் உள்ளன. இதில் தமிழ்நாட்டில் மட்டும் ஏறத்தாழ 300 இனங்கள் உள்ளன. வண்ணத்துப் பூச்சிகள் மூலமாகவே பல்வேறு வனத் தாவரங்கள் மற்றும் வீட்டில் வளர்க்கப்படும் தாவரங்களில் மகரந்தச் சேர்க்கை நிகழ்கிறது. இச்சூழ்நிலையில் வண்ணத்துப் பூச்சியின் எண்ணிக்கை குறைந்தால், தாவரங்களில் நிகழும் மகரந்தச் சேர்க்கை பாதிக்கப்பட்டு, தாவரங்களின் பெருக்கம் கடுமையாக பாதிக்கப்படும். சுற்றுச்சூழல் நலனில் தனது பங்களிப்பை அளிப்பதோடு மட்டுமின்றி வண்ணத்துப் பூச்சிகள் சிறந்த அழகுணர்ச்சி மதிப்பீட்டையும் கொண்டுள்ளதால், அவை மிருகக்காட்சி சாலையிலும், அருங்காட்சியகத்திலும் சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

வண்ணத்துப் பூச்சி பூங்கா என்பது, வண்ணத்துப் பூச்சிகளை அவற்றின் இயற்கையான சூழலில் காட்சிக்கு வைப்பதற்காக வண்ணத்துப் பூச்சிகள் வளர்வதற்கேற்ற ஓம்புயிரித் தாவரங்கள் மற்றும் வாழ்விடங்கள் ஆகிய வசதிகளை கொண்ட ஒரு இடம் ஆகும். சுற்றுலாப் பயணிகள் ஒரே இடத்தில் பல்வேறு வகைப்பட்ட வண்ணத்துப் பூச்சிகளை கண்டு களிப்பதற்காக வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் ஒரு வண்ணத்துப் பூச்சி பூங்காவை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**1.5.6 விவசாயிகளுக்கு 22.50 இலட்சம் மரக் கன்றுகள் வழங்குதல்**

தமிழ்நாட்டில் அனைத்து விதமான மண் வகைகள் மற்றும் வேளாண் தட்பவெப்ப நிலைக்கும் பொருந்தக்கூடிய, வறட்சியை தாங்கவல்ல மற்றும் வேகமாக வளரக்கூடிய மரவகைகளை வளர்ப்பதன்மூலமே நிச்சயமற்ற பருவ நிலைகளால் வறட்சிக்கு உள்ளாகும் மானாவாரி விவசாய நிலங்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்க இயலும். விவசாயிகள் தங்களுடைய விளைநிலங்களில் வளர்ப்பதற்காக, வனத் துறையால் 22.50 இலட்சம் மரக் கன்றுகளை வளர்த்து அவற்றை விவசாயிகளுக்கு இலவசமாக வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் ரூ.90.00 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.

**1.6 பகுதி–II திட்டங்கள்**

2007-2008 ஆம் ஆண்டில், ரூ.698.78 இலட்சங்கள் மதிப்பீட்டில் கீழ்வரும் 19 திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:

| வ. எண் | திட்டத்தின் பெயர் | தொகை (இலட்சங்களில்) |
|---|---|---|
| 1. | வன நிர்ணயம்-2007-2008 ஆம் ஆண்டில் 5000 எல்லைக் கற்கள் அமைத்தல் | 40.00 |
| 2. | வனத் துறைப் பணியாளர்களுக்கு ஆயுதப் பயிற்சி அளித்தல் | 9.50 |
| 3. | மதுரை, கோயம்புத்தூர் வட்டங்களில் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்ட பகுதிகளில் காடு வளர்ப்புப் பணிகளை மேற்கொள்ளுதல் | 18.02 |
| 4. | 1,08,330 உயரமான மரக் கன்றுகளை வளர்த்தல் | 32.50 |
| 5. | துவரங்குறிச்சியில் அனைத்து நவீன வசதிகளும் கொண்ட 3 அறைகளுடன் ஓய்வு இல்லம் கட்டுதல் | 20.00 |



| வ. எண் | திட்டத்தின் பெயர் | தொகை (இலட்சங்களில்) |
|---|---|---|
| 6. | முசிறி வனச் சரகத்தில் அனைத்து வசதிகளும் கொண்ட 3 அறைகளுடன் ஓய்வு இல்லம் கட்டுதல் | 20.00 |
| 7. | திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் காவேரிப்பட்டியிலிருந்து கருப்பம்பட்டி வரையிலான 2.60 கி.மீ. நீளமுள்ள சாலையை மேம்படுத்தல் | 36.00 |
| 8. | தேனி மாவட்டத்தில் கடமலைக்குண்டிலிருந்து வெள்ளிமலை வரையிலான 5 கி.மீ. நீளமுள்ள சாலையை மேம்படுத்தல் | 50.00 |
| 9. | திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மலையாடிப்பட்டியிலிருந்து சுப்பிரமணியசாமி கோயில் வரையிலான 1.660 கி.மீ. சாலையை மேம்படுத்தி, தார்ச் சாலையாக மாற்றுதல் | 23.07 |
| 10. | 5 பறவைகள் உய்விடங்களை மேம்படுத்தல் | 10.00 |
| 11. | வனப் பணியாளர்களுக்கு அடிப்படைக் கணினிப் பயிற்சி அளித்தல் | 6.00 |
| 12. | வனப் பாதுகாப்பை வலுப்படுத்தல் - பயனற்றவையென்று ஒதுக்கப்பட்ட வண்டிகளுக்கு பதிலாக 5 வண்டிகள் வாங்குதல் | 21.15 |
| 13. | 181.25 கி.மீ. (100+81.25 கி.மீ.) நீளத்திற்கு சூரிய வெப்ப மின்சக்தி வேலியமைத்தல் | 290.00 |
| 14. | சென்னை மாநகரிலும், சுற்றியுள்ள பகுதிகளிலும் குரங்குகளின் தொல்லையால் ஏற்படும் பிரச்சினையை சமாளிப்பதற்கான திட்டம் | 5.00 |

[2007 ஏப்ரல் 28

| வ. எண் | திட்டத்தின் பெயர் | தொகை (இலட்சங்களில்) |
|---|---|---|
| 15. | வண்டலூர், அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் மான்கள் உய்விடத்தை மேம்படுத்துதல் | 7.00 |
| 16. | பல்வகை உயிரி தாவரத் தொகுதி பற்றிய மதிப்பீடு | 10.54 |
| 17. | பல்வகை உயிரி தாவரத் தொகுதி வரைபடம் தயாரித்தல் மற்றும் பகுப்பாய்வு | 4.00 |
| 18. | பல்வகை உயிரி தாவரத் தொகுதி பற்றிய செயல்முறை / நிர்வாக திட்ட வெளியீடு | 6.00 |
| 19. | விவசாயிகளுக்கு விநியோகிக்க விரைவில் வளரக்கூடிய பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த மரக் கன்றுகள் வளர்த்தல் | 90.00 |
| | மொத்தம் | 698.78 |

## 1.7 பொதுத் துறை நிறுவனங்கள்

பட்டியலிடப்பட்டுள்ள மூன்று பொதுத் துறை நிறுவனங்களின் செயல்பாடுகள் பற்றிய அறிக்கை:

1. தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம், திருச்சிராப்பள்ளி.
2. தமிழ்நாடு தேயிலை தோட்டக் கழகம், குன்னூர்.
3. அரசு இரப்பர் கழகம், நாகர்கோவில்.

### 1.7.1 தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம், திருச்சிராப்பள்ளி

தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம் 13-06-1974 முதல் செயல்பட்டு வருகிறது. இக்கழகமானது 1956 ஆம் ஆண்டு நிறுவனங்களுக்கான சட்ட விதிமுறைகளின்கீழ் நிறுவப்பட்டு, அச்சட்டத்திற்கு உட்பட்டு இயங்கி வருகிறது. இக்கழகம் ரூ.10 கோடி அங்கீகரிக்கப்பட்ட முதலீட்டையும், ரூ.3.76 கோடி செலுத்தப்பட்ட முதலீட்டையும்



2007 ஏப்ரல் 28]

கொண்டுள்ளது. இக்கழகத்தின் மொத்த பங்கு முதலீடும், தமிழ்நாடு அரசுக்கு சொந்தமானதாகும். வனத் துறையால் குத்தகைக்கு அளிக்கப்பட்ட 74,963.23 ஹெக்டேர் வனப்பரப்பு தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தின் பொறுப்பில் உள்ளது. தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் கூழ்மரத் தோட்டங்கள் மற்றும் முந்திரித் தோட்டங்கள் வளர்த்து, பராமரித்து, அறுவடை செய்து அளிப்பதும், பொதுமக்களுக்குத் தேவைப்படும் எரிபொருள் மரங்களை அளிப்பதுமே இக்கழகத்தின் முக்கிய குறிக்கோள்களாகும்.

#### 1.7.1.1 சாதனைகள்

2005-2006 மற்றும் 2006-2007 ஆம் ஆண்டுகளில் இக்கழகத்தால் எழுப்பப்பட்ட தோட்டங்கள் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

(ஹெக்டேரில்)

| பணி விவரம் | 2005–2006 | 2006–2007 |
|---|---|---|
| யூகலிப்டஸ் தோட்டங்கள் | 3509 | 3601 |
| முந்திரித் தோட்டங்கள் | 1039 | 1219 |
| சவுக்குத் தோட்டங்கள் | 30 | 22.5 |
| இதர வகை | 110 | — |

#### 1.7.1.2 கூழ்மர விநியோகம்

2005-2006 மற்றும் 2006-2007 ஆம் ஆண்டுகளில் காகிதத் தொழிற்சாலைகளுக்கு விநியோகம் செய்யப்பட்ட கூழ்மர விவரம் பின்வருமாறு:

| ஆண்டு | விநியோகம் (மெட்ரிக் டன்களில்) | வருவாய் (கோடிகளில்) |
|---|---|---|
| 2005–2006 | 91611.188 | 16.49 |
| 2006–2007 | 120846.200 | 21.75 |

[2007 ஏப்ரல் 28

2007-2008 ஆம் ஆண்டில் அரசால் நிர்ணயிக்கப்பட்ட விலைவிகிதப்படி தொழிற்சாலைகளுக்கு கூழ்மரம் தொடர்ந்து விநியோகம் செய்யப்படும்.

### 1.7.1.3 முந்திரி

2006-2007 ஆம் ஆண்டில், முந்திரிக் கொட்டைகளை சேகரிப்பதற்கான குத்தகை உரிமம் வழங்கப்பட்ட வகையில் ரூ.349.24 இலட்சங்கள் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

### 1.7.1.4 சந்தன எண்ணெய் தொழிற்சாலை

வேலூர் மாவட்டத்திலுள்ள வாணியம்பாடிக்கு அருகில் அமைந்துள்ள தெக்குப்பட்டியில் செயல்பட்டு வரும் இக்கழகத்திற்குச் சொந்தமான சந்தன எண்ணெய் தொழிற்சாலையில் 2006-2007 ஆம் ஆண்டில் 536.00 கிகி. சந்தன எண்ணெய் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

### 1.7.1.5 மேல்செங்கம் பண்ணை

திருவண்ணாமலை மாவட்டத்தில், தமிழ்நாடு வனத் துறையால் குத்தகைக்கு அளிக்கப்பட்டு, மத்திய மாநில பண்ணைக் கழகத்தால் பராமரிக்கப்பட்டு வந்த 3,904 ஹெக்டேர் வன நிலங்கள், ரூ.85.04 இலட்சம் செலுத்தி தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தால் 17-05-2006 அன்று குத்தகைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இங்கு தற்போது வளர்க்கப்பட்டு வரும் தோட்டத் தாவரங்களான தென்னை, மாமரம், கொய்யா, சப்போட்டா மற்றும் பிற மரங்களைத் தொடர்ந்து பராமரிக்கவும், யூகலிப்டஸ், காட்டாமணக்கு மரங்கள் போன்ற பல்வேறு பொருத்தமான தாவர இனங்களை வளர்க்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன்மூலமாக மேல்செங்கம் பண்ணையில் கடந்த பல ஆண்டுகளாக தரிசாகக் கிடந்த 2008.69 ஹெக்டேர் பரப்பளவு நிலங்கள் நல்ல முறையில் பயன்படுத்தப்படுகின்றன. இதனால் பலருக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கிறது.



2007 ஏப்ரல் 28]

### 1.7.1.6 வருவாய் மற்றும் செலவினம்

இக்கழகத்தின் 2005-2006, 2006-2007 மற்றும் 2007-2008 ஆம் ஆண்டுகளுக்கான வருவாய் மற்றும் செலவினம் பின்வருமாறு:

(ரூபாய் இலட்சத்தில்)

| ஆண்டு | வருவாய் | செலவினம் | இலாபம் (+) நட்டம்(–) |
|---|---|---|---|
| 2005–2006 (உள்ளபடி) | 3594.78 | 2858.41 | (+) 736.37 |
| 2006–2007 (திருத்தப்பட்ட மதிப்பீடு) | 5222.93 | 4089.51 | (+) 1133.42 |
| 2007–2008 (எதிர்பார்க்கப்படுவது) | 4105.34 | 3824.51 | (+) 280.83 |

### 1.7.2 தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம், குன்னூர்

சாஸ்திரி - ஸ்ரீமாவோ உடன்படிக்கையின்படி, இந்தியா திரும்பிய இலங்கை அகதிகளின் மறுவாழ்விற்காக, சமூகப் பொருளாதார நோக்கத்துடன், தேயிலைத் தோட்டங்களை உருவாக்க 1968 ஆம் ஆண்டில், தமிழக அரசால் அரசு தேயிலைத் திட்டம் ஏற்படுத்தப்பட்டு, வனத் துறையின்மூலம் செயல்படுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து தற்போது டான்டீ என்று பலராலும் அழைக்கப்படும், தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் ஒரு அரசு நிறுவனமாக 1956 ஆம் வருடத்திய நிறுவனங்களுக்கான சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டது. இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ.10.00 கோடி ஆகும். இதன் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.5.96 கோடியாகும். இக்கழகத்தின் மொத்த பங்கு முதலீடும், தமிழ்நாடு அரசைச் சேர்ந்ததாகும்.

இக்கழகம், 4,431.92 ஹெக்டேர் பரப்பில் தேயிலைத் தோட்டத்தினை உற்பத்தி செய்து, தற்போது சுமார் 6,250 தொழிலாளர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பும், சுமார் 3,000 தொழிலாளர்களுக்குத் தினக்கூலி அடிப்படையில் வேலைவாய்ப்பும் வழங்கப்பட்டு வருகிறது. வீட்டு வசதி மற்றும் இலவசமாக குடிநீர் வழங்குதல் இலவச மருத்துவ வசதிகள் இக்கழகத்தின் நிரந்தரப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இக்கழகம் மூன்று மருத்துவமனைகளையும்,

[2007 ஏப்ரல் 28

ஏழு பள்ளிகளையும் நடத்தி வருகின்றது. 2006-2007 ஆம் ஆண்டு முதல் அதன் மருத்துவமனைகளில் தற்காலிகமாக நியமிக்கப்படும் பணியாளர்களுக்கு மருத்துவ வசதிகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. ஆண்டொன்றிற்கு 120 இலட்சம் கிலோகிராம் பதப்படுத்தப்பட்ட தேயிலை உற்பத்தி செய்யும் திறனுள்ள 8 நவீன தேயிலை 'தொழிற்சாலைகளும் தமிழ்நாடு தேயிலை தோட்டக் கழகத்திடம் உள்ளன.

### 1.7.2.1 வருவாய் மற்றும் செலவினம்

இக்கழகத்தின் 2005-2006, 2006-2007 மற்றும் 2007-2008 ஆம் ஆண்டிற்கான வருவாய் மற்றும் செலவின விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

(ரூபாய் இலட்சத்தில்)

| ஆண்டு | தேயிலை மற்றும் இதர பொருட்கள் விற்பனையில் பெறப்பட்ட வருவாய் | செலவு | இலாபம் (+) நட்டம்(–) |
|---|---|---|---|
| 2005–2006 (உள்ளபடி) | 4248.10 | 5095.10 | (–) 847.00 |
| 2006–2007 (தற்காலிகமானது) | 5006.00 | 5116.00 | (–) 110.00 |
| 2007–2008 (எதிர்பார்க்கப்படுவது) | 6108.00 | 5658.00 | (+) 450.00 |

### 1.7.3 அரசு இரப்பர் கழகம், நாகர்கோயில்

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தமிழ்நாடு வனத் துறைக்குச் சொந்தமான 4,279.78 ஹெக்டேர் வன நிலங்களிலுள்ள இரப்பர் தோட்டங்களை அரசு இரப்பர் கழகம் குத்தகைக்கு எடுத்துள்ளது. தமிழ்நாட்டில், கன்னியாகுமரி மாவட்டத்தில் இரப்பர் பயிரிட ஏற்ற மண்வளம், தட்பவெப்பநிலை மற்றும் இட அமைப்பு ஆகியவை உள்ளன. 1956 ஆம் ஆண்டின் நிறுவனங்களுக்கான சட்டத்தின்கீழ், அரசு இரப்பர் கழகம் 20-8-1984 அன்று பதிவு செய்யப்பட்டது. இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ.4.00 கோடியாகும். இக்கழகத்தின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.2.00 கோடியாகும். இக்கழகத்தின் மொத்த பங்கு முதலீடும், தமிழ்நாடு அரசை



2007 ஏப்ரல் 28]

சேர்ந்ததாகும். இக்கழகத்தில் 386 இலங்கை அகதிகள் உட்பட 1,536 நிரந்தரப் பணியாளர்கள் உள்ளனர். இதைத் தவிர 365 பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிகின்றனர். 2007-2008 ஆம் ஆண்டு முதல் ஒப்பந்த அடிப்படையில் உள்ள பணியாளர்களுக்கும், இலவச மருத்துவ வசதிகள் அரசு இரப்பர் கழகத்தின் மருத்துவமனைகளில் வழங்கப்படும்.

அரசு இரப்பர் கழகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள 70 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட இரப்பர் மரங்கள், 1960 மற்றும் 1970 ஆம் ஆண்டுகளில் நடப்பட்ட மரங்கள் ஆகும். 30 ஆண்டுகளுக்கு மேலாக இருந்து வரும் மரங்கள், குறைந்த அளவு விளைச்சலையே வழங்குவதால், உற்பத்தி இழப்பை ஈடு கட்டவும், உற்பத்தியைப் பெருக்கவும், கழகம் சிறப்பாகச் செயலாற்றவும், தொழிலாளர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பளிக்கவும், இரப்பர் வாரியத்தின் அறிவுரையின்படி, குறைந்த விளைச்சலை அளிக்கும் முதிர்ந்த இரப்பர் மரங்கள் விழுந்தபின், இப்பகுதிகளில் அதிக விளைச்சலைத் தரும் உயர்நுட்பவியல் ஒட்டு மரங்களை மறுநடவு செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது.

### 1.7.3.1 உற்பத்தி மற்றும் விற்பனை (வருவாய் மற்றும் செலவினம்)

இக்கழகத்தின் 2005-2006, 2006-2007 மற்றும் 2007-2008 (எதிர்பார்க்கப்படுவது) ஆம் ஆண்டுகளுக்கான வருவாய் மற்றும் செலவினம் பின்வருமாறு:

(ரூபாய் இலட்சத்தில்)

| வருடம் | இரப்பர் உற்பத்தி (மெட்ரிக் டன்னில்) | இரப்பர் மற்றும் இதர பொருட்கள் விற்பனையில் பெறப்பட்ட வருவாய் | செலவு | நிகர இலாபம் (+) நட்டம் (–) |
|---|---|---|---|---|
| 2005–2006 | 2562.00 | 2015.57 | 1946.16 | (+) 69.41 |
| 2006–2007 | 2115.09 | 2181.00 | 1799.18 | (+) 382.54 |
| 2007–2008 (எதிர்பார்க்கப்படுவது) | 2500.00 | 2023.81 | 1781.15 | (+) 242.66 |

[2007 ஏப்ரல் 28

**தொடரும் பாதை**

வனங்களைப் பாதுகாப்பதும், தனியார் நிலங்களில் மரங்களை வளர்ப்பதன்மூலம் அதிகளவு மரக் கட்டைகள் கிடைக்கச் செய்வதும், இத்துறையின் முக்கியமான நோக்கமாகும். இந்த அணுகுமுறையானது, தமிழ்நாட்டில் பாரம்பரியமாக காணப்படும் செழுமையான மற்றும் பல்வகைப்பட்ட உயிரிச்சூழலைப் பாதுகாக்க உதவுவதுடன், மாநிலத்தின் மற்றும் மாநில குடிமக்களின் சுற்றுச்சூழலை மேம்படுத்தவும் உதவும்.



2007 ஏப்ரல் 28]

## சுற்றுச்சூழல் துறை

**முன்னுரை**

சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது ஒரு நாட்டின் மற்றும் ஒவ்வொரு குடிமகனின் பொறுப்பாகும். பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் தேவைகளுக்கு இடையே, இணக்கமான சமச்சீரான தன்மை, சமுதாயத்தில் காக்கப்பட வேண்டும். பெருகிவரும் மக்கள் தொகை, நகரமயமாக்கல் மற்றும் தொழில்மயமாக்கல் ஆகியவை, நிலம் மற்றும் நீர் உயிர் சூழலமைப்பின் பாதுகாப்புக்குக் கடுமையான சவாலாக அமைந்துள்ளன.

சுற்றுச்சூழலின் பாதிப்பு ஏழை மற்றும் நலிவுற்ற மக்கள்மீது அதிகபட்ச தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. எனவே, சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படுவதன் மூலம் சமுதாயத்தில் ஏழைமக்களின் பொருளாதார நலன்கள் காக்கப்படுகின்றன. நீடித்து நிற்கும் வளர்ச்சியே இன்றைய முக்கியத் தேவையாகும். சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படுவதன் தேவை குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுவதன்மூலமே இதனை அடைய இயலும். உறுதியான நடவடிக்கைகள், இயற்கை வளங்களான காற்று, நீர் மற்றும் நிலம் ஆகியவற்றின் பாதுகாப்பினை இலக்காகக் கொண்டு, தொடங்கப்பட்டுள்ளன. பல்வேறு முயற்சிகளை அரசு மேற்கொண்டு, ஆறுகள் மற்றும் ஏரிகள் மாசுபடுவதைத் தடுத்து, பள்ளிக் குழந்தைகள் மற்றும் பொதுமக்களிடையே விழிப்புணர்வையும் ஏற்படுத்தி வருகின்றது.

**2.1 சுற்றுச்சூழல் இயக்குநரகம்**

சுற்றுச்சூழல் இயக்குநரகம், மாநிலத்தில் சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வினை மேம்படுத்தும் நோக்கத்துடன் ஏற்படுத்தப்பட்டது. இவ்வியக்குநரகத்திற்கு காவிரி, வைகை மற்றும் தாமிரபரணி ஆகிய நதிகள் மற்றும் சென்னை நகரிலுள்ள நீர் வழிகள் மாசுபடுவதை தடுக்கும் பெரும் திட்டங்களை ஒருங்கிணைக்கும் பொறுப்பு அளிக்கப்பட்டுள்ளது. தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டம், கடற்கரைப் பகுதி மேலாண்மை மற்றும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் கையாளப்படாத இதர சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகள் இவ்வியக்குநரகத்தின் பொறுப்பாகும்.

[2007 ஏப்ரல் 28

**2.2 கடற்கரைப் பகுதி மேலாண்மை**

கடற்கரைப் பகுதிகளைப் பாதுகாப்பதற்கும், 1991-ம் வருட கடற்கரை ஒழுங்குமுறை அறிவிக்கையை செயலாக்குவதற்கும், மத்திய அரசு, மாநில கடற்கரை மேலாண்மைக் குழுமத்தை, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அரசுச் செயலாளரை தலைவராகவும், சுற்றுச்சூழல் துறை இயக்குநரை உறுப்பினர் செயலராகவும் கொண்டு அமைத்துள்ளது. சுற்றுச்சூழல் அனுமதிகோரும் பிரேரணைகள், இவ்வறிவிக்கையின்கீழ், இக்குழுமத்தால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு, ஒப்புதல் அல்லது பரிந்துரை செய்யப்படுகிறது.

**2.3 தமிழ்நாடு சுற்றுச்சூழல் மேலாண்மை முகமை (இமேட்)**

2.3.1 மைய அரசு மற்றும் பல்வேறு செயலாக்க முகமைகளுடன் பணிகளை ஒருங்கிணைத்து செயல்படவும், தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டம், தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டம் போன்ற திட்டங்களின்கீழ் நடைபெறும் பணிகளை கூர்ந்தாய்வு செய்யவும், தமிழ்நாடு சுற்றுச்சூழல் மேலாண்மை முகமை என்னும் தன்னாட்சி அமைப்பு, ஏற்படுத்தப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட திட்டங்கள், தமிழ்நாடு சுற்றுச்சூழல் மேலாண்மை முகமையால், ஒருங்கிணைக்கப்படுகின்றன.

**2.3.2 காவிரியாற்றின் கரையில் மாசடைந்துள்ள ஐந்து பகுதிகளில் மாசு தடுப்புப் பணிகள்**

இத்திட்டம், மைய அரசின் நிதி ஆதாரத்துடன், தேசிய நதிநீர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், ரூ.3,627.75 இலட்சங்கள் மொத்த திட்டச் செலவில், 1996-1997 ஆம் ஆண்டுமுதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. ரூ.2,230.90 இலட்சங்கள், செயலாக்க முகமைகளால், 31-3-2007 வரை செலவிடப்பட்டுள்ளது. முக்கியப் பணிகளின்கீழ், கழிவுநீரைத் தடுத்து வழிப்படுத்துதல், கழிவு நீரேற்று நிலையங்கள் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கும் பணிகள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால், ஈரோடு, பவானி, குமாரபாளையம், பள்ளிப்பாளையம் மற்றும் திருச்சிராப்பள்ளி நகரங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அனைத்துப் பணிகளும், திருச்சிராப்பள்ளி, குமாரபாளையம் மற்றும் ஈரோடு ஆகிய நகரங்களில் முடிவடைந்துள்ளன. பணிகள், பவானி நகரத்தில் நடைபெற்று வருகின்றன. விரிவான திருத்திய திட்ட அறிக்கை, பள்ளிப்பாளையம் நகரத்திற்காக, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் தயாரிக்கப்படுகின்றது. சிறுபணிகளின்கீழ், செலவு குறைந்த கழிப்பிடம்



2007 ஏப்ரல் 28]

கட்டுதல், மயான எரியூட்டு மேடை, ஆற்றங்கரை முன்பகுதி அபிவிருத்திப் பணிகள் போன்றவை உள்ளாட்சி அமைப்புகள் மூலம் நிறைவு பெற்றுள்ளன.

**2.3.3 சென்னைப் பெருநகர நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டம்**

மைய அரசு மானியமான ரூ.49,152 இலட்சம் கொண்ட திட்டத்தின்கீழ், சென்னை நகரின் 6 நீர்வழிகளில், மாசுத் தடுப்புப் பணிகளை, 2001 ஆம் ஆண்டுமுதல் சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம், செயல்படுத்திவருகிறது. இத்திட்டப் பணிகளின் முக்கிய அம்சம், சென்னை நகரத்தின் 6 நீர்வழித் தடங்களான கூவம், அடையாறு, பக்கிங்ஹாம் கால்வாய், ஓட்டேரி ஓடை, காப்டன் காட்டன் கால்வாய் மற்றும் மாம்பலம் வடிகால் ஆகியவற்றில் சேரும் கழிவுநீரைத் தடுத்து நிறுத்துவது ஆகும். இதுவரையில் 16 தொகுப்புகளில் பணிகள், ரூ.37,253 இலட்சம் செலவில் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள தொகையைக் கொண்டு, விரிவான திட்ட அறிக்கை, விடுபட்ட பகுதிகளுக்கான கழிவுநீர் தடுப்புத் திட்டம் மற்றும் கழிவுநீர் ஏற்று நிலையங்களின் விரிவாக்கத்திற்கு தயாரிக்கப்பட்டு, தேசிய நதிநீர் பாதுகாப்பு இயக்ககத்தின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. மாநில அரசின் பங்கான ரூ.70,848 இலட்சத்தில், பாரிபாசு அடிப்படையில், ரூ.63,869 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளன. இப்பணிகள் சென்னைக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம், பொதுப் பணித் துறை, சென்னை மாநகராட்சி மற்றும் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் ஆகியவற்றின்மூலம் செயல்படுத்தப்படுகின்றன.

**2.3.4 தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டம்—கூடுதல் ஏழு நகரங்கள்**

மாசுபடுவதைத் தவிர்க்கும் திட்டம், காவிரி, வைகை மற்றும் தாமிரபரணி நதியோரங்களில் உள்ள, திருச்சிராப்பள்ளி-ஸ்ரீரங்கம், தஞ்சாவூர், கும்பகோணம், கரூர்-இனாம்கரூர், மயிலாடுதுறை, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய ஏழு நகரங்களில், ரூ.57,530 இலட்சம் செலவின மதிப்பீட்டில், 2001 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு மைய அரசு ரூ.28,215 இலட்சம் மானியம் அளித்துள்ளது. மீதமுள்ள தொகை பொதுமக்களின் பங்கேற்புடன் தமிழ்நாடு அரசு மற்றும் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளால் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. இத்திட்டத்தின்மூலம், பாதாளச் சாக்கடை அமைத்தல், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல், குறைந்த செலவில் கழிப்பிடங்கள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை

வசதிகள் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு, இந்த நதிகளின் மாசினைக் களைந்திட வழிவகை செய்யப்பட்டு வருகிறது. இந்த முக்கியப் பணிகள், சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் மூலம், மதுரை மற்றும் கும்பகோணம் நகரங்களில், நிறைவேற்றப்பட்டு வருகின்றன. கரூர், தஞ்சாவூர், மயிலாடுதுறை, திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி ஆகிய ஐந்து நகரங்களின் பணிகள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக, செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்கீழ், ரூ.41,125.30 இலட்சம் 31-3-2007 வரையில் செலவிடப்பட்டுள்ளது.

### 2.3.5 தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டம்

சுற்றுச்சூழலை மேம்படுத்திட, நுண்ணுயிரியல் அடிப்படையில், உதகை ஏரியிலும்; பாதாள கழிவுநீர்த் திட்டத்தினை, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்துடன் கொடைக்கானல் ஏரியை பாதிக்கும் பகுதிகளில் செயல்படுத்தவும், தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பணிகள் ரூ.1,218 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டப் பணிகள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பொதுப் பணித் துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் மூலமாக நிறைவேற்றப்படுகின்றன. உதகை ஏரியினைத் தூய்மைப்படுத்தும் திட்டம், ரூ.162.90 இலட்சங்கள் செலவில், நிறைவேற்றப்பட்டது. கொடைக்கானல் ஏரிக்கான திருத்திய விரிவான திட்ட அறிக்கை, ரூ.1,042.52 இலட்சத்திற்கு 19-1-2007 அன்று ஒப்புதல் அளிக்கப்பட்டு, இப்பணிகள் 2007-2008-ல் தொடங்கப்படவுள்ளன.

### 2.4 சுற்றுச்சூழல் விருதுகள்

சுற்றுச்சூழல் பணிகளில் சிறப்பாகப் பங்கேற்ற அரசு சாரா நிறுவனங்கள், வல்லுநர்கள் மற்றும் தனி நபர்கள் ஆகியோரை அங்கீகரித்து, மாநில அரசால் விருதுகள் வழங்கப்படுகின்றன. இவ்விருதுகள், 1999 ஆம் ஆண்டு முதல் ஏற்படுத்தப்பட்டு, உலக சுற்றுச்சூழல் தினமான ஜூன் 5 ஆம் தேதி அன்று, ஆண்டுதோறும் வழங்கப்படுகின்றன. இவ்விருதுகள், சுற்றுச்சூழல் மேலாண்மை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் கல்வி மற்றும் விழிப்புணர்வு என மூன்று பிரிவுகளின்கீழ் வழங்கப்படுகின்றன. சுற்றுச்சூழல் தொடர்பான சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைக்கும் விருது வழங்கப்பட்டு வருகிறது.



## 2.5 பகுதி II திட்டங்கள்

### 2.5.1 சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நடவடிக்கைகள்

1,200 சுற்றுச்சூழல் மன்றங்கள், மாநில அரசு நிதி உதவியுடன், சுற்றுச்சூழல் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக உள்ளன. இந்த சுற்றுச்சூழல் மன்றங்களில் பதிவு செய்து கொண்டுள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கை சுமார் 50,000 ஆகும். ஆண்டொன்றிற்கு ரூ.1,250/- ஒவ்வொரு சுற்றுச்சூழல் மன்றத்திற்கும், சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த அளிக்கப்பட்டு வந்தது. 2007-2008 ஆம் ஆண்டு முதல், சுற்றுச்சூழல் மன்றங்களுக்கு அளிக்கப்படும் மானியம், ரூ.2,500/- ஆக உயர்த்தப்படும். இதைத் தவிர, இம்மன்றங்களுக்கிடையே வினாடி வினா, ஓவியம், வண்ணம் தீட்டுதல் மற்றும் பேச்சுப் போட்டிகள் நடத்துவதற்கான மானியம், ரூ.15.00 இலட்சமாக உயர்த்தப்படும். இதேபோல, சுற்றுச்சூழல் மன்றங்களுக்கு, வன உயிரின உய்விடங்கள் மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்படைய வாய்ப்புள்ள பகுதிகளுக்குச் சென்று சுற்றுச்சூழல் முகாம் நடத்துவதற்காக, ரூ.22.50 இலட்சங்கள் 2007-2008-ல் வழங்கப்படும்.

### 2.5.2 விழிப்புணர்வு தொடரமைப்பு மூலமாக கருத்துப் பட்டறைகள், கருத்தரங்கம் நடத்துதல்

மாணவர்கள் மற்றும் பொதுமக்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்கு, கருத்தரங்கம் மற்றும் கருத்துப் பட்டறைகள், ரூ.2 இலட்சம் செலவில் வருடந்தோறும் நடத்தப்பட்டு வருகின்றன. கல்வி நிறுவனங்கள் மற்றும் தன்னார்வ அமைப்புகளின் மூலம் நடத்தப்படும் இந்தக் கருத்தரங்கங்களிலும், கருத்துப் பட்டறைகளிலும் மாணவர்கள் பெருமளவில் பங்கேற்கின்றனர். பொதுமக்கள் மற்றும் மாணவ சமுதாயத்தினரிடையே சுற்றுச்சூழல் ஒழுக்கத்தை பதிய வைக்க, இவ்வகையான கருத்தரங்கம் மற்றும் கருத்துப் பட்டறைகளில் சுற்றுச்சூழலில் சிறந்து விளங்கும் வல்லுநர்களுடன் மேற்கொள்ளப்படும் கலந்துரையாடல் பயனளிக்கிறது. இத்திட்டம் 2007-2008 ஆம் ஆண்டில், கூடுதலாக ரூ.2 இலட்சம் செலவில் தொடரப்படும்.

### 2.5.3 சுற்றுச்சூழல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு

சுற்றுச்சூழல் ஆய்வுகளை மேம்படுத்த, சுற்றுச்சூழல் குறித்த பல்வேறுபட்ட பரிமாணங்கள் கொண்ட பிரச்சினைகளைத்

தீர்ப்பதற்கு, கல்வி நிறுவனங்களில் பல்வேறு வசதிகளை உருவாக்குவதும், தொழில்நுட்ப வசதிகளை மேம்படுத்துவதும் மிகவும் முக்கியமானதொன்றாகும். குறிப்பிட்ட பிரச்சினைகளுக்கான தீர்வு காணும் ஆய்வுப் பிரேரணைகள், தொழில்நுட்ப வல்லுநர் குழுமூலம், நிதி உதவி அளிப்பதற்கு மதிப்பீடு செய்யப்படும். ஒன்று முதல் இரண்டு ஆண்டுகள் வரையிலான குறுகிய கால ஆராய்ச்சித் திட்டங்கள் மட்டுமே ஊக்குவிக்கப்படும். ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகள், 2007-2008 ஆம் ஆண்டில், ரூ.5.00 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

### 2.5.4 குற்றாலம் நகரத்திற்கு சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்டம் தயாரித்தல்

சூழல் நகர கோட்பாடு, விரிவான முறையில், சுற்றுச்சூழலுக்கு இணக்கமுள்ள நிலப்பயன்பாட்டுக்கு வழிகோலுவதுடன், பொருளாதார துடிப்பு, சமூக சமன்பாடு மற்றும் சுற்றுச்சூழல் வளம் கொண்ட நகரங்களை உருவாக்க உதவுகிறது. இதற்கு முதல்படியாக, மேற்கூறிய விவரங்களை உள்ளடக்கிய சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். இதன்மூலம் வளர்ந்து வரும் நகரங்களை மாநகரங்களாக்க, செயல்பாட்டுக்கு உகந்த திட்டங்களை ஒரு கால வரம்பை நிர்ணயித்து, தயாரிக்க இயலும். சுற்றுலா நகரமான குற்றாலம், சுற்றுலாப் பயணிகளை அதிகம் கவருவதால், சுற்றுச்சூழல் பாதிப்பிற்குள்ளாக்கப்பட்டு, அதன் காரணமாக துப்புரவு மற்றும் சுகாதாரம் சீர்கெடும் நிலைமையில் உள்ளது. 2007-2008 ஆம் ஆண்டில், இச்சுற்றுலா நகரத்திற்காக, ரூ.10.00 இலட்சம் செலவில், நீடித்து நிற்கும் சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்டம் தயாரிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் செயல்பாடு நடவடிக்கைகளுக்காக மைய அரசின் நிதியுதவி கோரப்படும்.

### 2.5.5 சூழலுக்குகந்த நடவடிக்கைகளின் செயல்முறை விளக்கம்

வெளியேற்றப்படும் கழிவுகள் ஏற்றுக் கொள்ளும் அளவினை விஞ்சியதாகவும், நமது வருங்கால வாழ்க்கையின் தரத்தை பாதிக்கக் கூடிய அளவிற்கும், அதிகரித்துள்ளது. இது தொடர்பான விழிப்புணர்வினைப் பொதுமக்களிடையே ஏற்படுத்த, 8,700 கல்வி நிலையங்களில், தேசிய பசுமைப் படை மற்றும் சுற்றுச்சூழல் மன்றங்கள், 30 மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன. இந்த அமைப்புகள் மூலமாக, சூழலுக்குகந்த செயல்முறை விளக்கப் பணிகள், மாசு உருவாகும் இடத்திலேயே அவற்றை கட்டுப்படுத்துவதற்கு, ரூ.3.00 இலட்சம் செலவில், 2007-2008 ஆம் ஆண்டில், மேற்கொள்ளப்பட உள்ளன.





### 2.5.6 நகர்ப்புற நீர் ஆதாரங்களைப் புனரமைத்தல்

தமிழ்நாட்டில் பல நீர்நிலைகள் அனைத்துப் பகுதிகளிலும் அமைந்துள்ளன. இந்நீர்நிலைகள், சுற்றுச்சூழல் செயல்பாடுகளான, நிலவூட்டுச் சத்துக்களின் மறுசுழற்சி, நீர்சுத்திகரிப்பு, நிலத்தடி நீர் சேமிப்பு, பொதுமக்களின் குடிநீர் மற்றும் நீர்ப்பாசனத் தேவைகளை பூர்த்தி செய்தல் போன்ற ஏராளமான மதிப்புமிக்க செயல்களை செய்து வருகின்றன. வேகமாகப் பெருகிவரும் மக்கள்தொகை மற்றும் திட்டமிடாத வளர்ச்சி, வசிப்பிட / வேளாண் / வணிகம் / தொழிற்சாலைக் கழிவுகள் மற்றும் கழிவுநீர் போன்றவை நீர் மாசுபடக் காரணமாகின்றன. இந்த நீர்நிலைகள், மழைநீரை சேகரித்து அது வீணாகிவிடாமல் தேக்கி வைக்கின்றன. நீர்நிலைகள் வெள்ளப் பெருக்கையும் கட்டுப்படுத்துகின்றன. நீர்நிலைகள் பல்வேறு பறவைகளுக்கு உணவு மற்றும் இனப்பெருக்க இடங்களாகவும் பலதரப்பட்ட நீர்வாழ் உயிரினங்கள் மற்றும் தாவரங்களின் புகலிடமாகவும் அமைந்துள்ளன. நீர்நிலைகளின் முக்கியப் பணியான தட்பவெப்ப நிலையை சீராகக் காப்பாற்றுதல் பற்றி வலியுறுத்த அவசியமில்லை. அவை நீரியல், உயிரியல் மற்றும் சுற்றுச்சூழல் ஆகியவற்றில் பெரும்பங்காற்றுவதுடன் அழகுணர்ச்சி அளிப்பவையாகவும் உள்ளன. நீர்நிலைகளைப் புனரமைப்பது அவசியத் தேவையாகிறது. விரிவான திட்ட அறிக்கை, பல்லாவரத்திலுள்ள பால்கேணியை புனரமைப்பதற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தை ரூ.10.00 இலட்சம் செலவில் நடைமுறைப்படுத்த 2007-2008 ஆம் ஆண்டில், உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 2.6 மைய அரசு நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

### 2.6.1 தேசிய பசுமைப் படை

சுற்றுச்சூழல் விழிப்புணர்வினைப் பள்ளி மாணாக்கர்களிடையே வலுப்படுத்த, தேசிய பசுமைப் படை 7,500 பள்ளிகளில், மாவட்டத்திற்கு 250 பள்ளிகள் வீதம் 30 மாவட்டங்களில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. மைய அரசு, ரூ.2,500/- மானியமாக ஒவ்வொரு பள்ளிக்கும் ஆண்டுதோறும் வழங்கிவருகிறது. தலைமை பயிற்றுநர் மற்றும் ஆசிரியர் ஒருங்கிணைப்பாளர்களுக்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டச் செயல்பாட்டை கண்காணிக்க, மாநில அளவிலான வழிநடத்தும் குழுவும், மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழுக்களும்,

அமைக்கப்பட்டுள்ளன. செயலாக்கத்தில் உள்ள இத்திட்டம், நடப்பாண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். சுமார் மூன்று இலட்சம் சிறார்கள் இவ்விழிப்புணர்வு இயக்கத்தில் பங்கேற்கின்றனர்.

### 2.6.2 சூழல் தகவல் மையம்

சுற்றுச்சூழல் தகவல் மையம், மைய அரசின் நிதியுதவியுடன், தமிழக சுற்றுச்சூழல் பற்றிய தகவல்களை வலைதளம் வாயிலாக வழங்க, செயல்பட்டு வருகிறது. செய்திமடல், இணையதளம் வாயிலாக உரையாடல், இணையதளம் வாயிலாக வினாடி வினா மற்றும் பயிற்சிகள் ஆகியவை இம்மையம் மேற்கொண்டுள்ள சில நடவடிக்கைகளாகும்.

### 2.6.3 சுற்றுச்சூழல் நிலை

சுற்றுச்சூழல் நிலை அறிக்கை, ரூ.12.50 இலட்சம் செலவில், மத்திய அரசு நிதியுதவியுடன் தயாரிக்கப்பட்டு, 2006 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. சுற்றுச்சூழல் நிலை வரைபடம், சுற்றுச்சூழல் நிலைகுறித்த புகைப்படம் மற்றும் ஒளிநாடா மற்றும் கலந்தாலோசிக்கக்கூடிய வகையில் வலைதளம் ஆகியவை தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றன.

## 2.7 2007–2008 ஆண்டில் உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்பட உள்ள திட்டங்கள்

### 2.7.1 தமிழக கடலோரத்தின் பாலாறு முகத்துவாரம் முதல் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தேங்காபட்டினம் வரை உயர் அலைமட்டம் குறியிடுதல்

சுற்றுச்சூழல் துறை, பழவேற்காடு ஏரிமுதல் பாலாறு முகத்துவாரம் வரை உள்ள கடற்கரை ஓரங்களில், உயர் அலைமட்டக் குறியீட்டுப் பணிகளை, ஏற்கெனவே முடித்துள்ளது. எஞ்சியுள்ள கடற்கரைப் பகுதி மற்றும் அலைநீர் தாக்கத்திற்கு உட்படும் நீர்நிலைகளின் உயர் அலை மட்டத்தினைக் குறியீடு செய்து, அதற்கான வரைபடத்தில் 1:25,000 என்ற அளவீட்டில் குறிப்பு செய்யும் பணிகளும், இதனையே, கிராம வரைபடங்களில் (நில அளவை புல எண்களுடன்) 1:5,000 என்ற அளவீட்டில் குறிப்பு செய்யும் பணிகளும், ரூ.2.23 கோடி செலவில் மேற்கொள்ளப்பட உள்ளன. இப்பணி அண்ணா பல்கலைக் கழகத்தின் தொலையுணர்வு நிலையம் மூலம் செயல்படுத்தப்படுகின்றது.



### 2.7.2 உயர் அலைமட்டக் குறியீடு செய்யப்பட்ட இடங்களில் கல் தூண் நடுதல்

கடலோரத்தில் வசிக்கும் மக்கள், கரையில் உச்ச அலைக் கோட்டினை அறிந்து கொள்ள ஏதுவாக, கடலோரத்தில் தேவைப்படும் இடங்களில், உச்ச அலை கல் தூண்கள் நடும்பணி, ரூ.1 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

### 2.7.3 ஒருங்கிணைந்த கடற்கரைப் பகுதி மேலாண்மைத் திட்டத் தயாரிப்பு

பல்வேறு மாறுபட்ட, நடவடிக்கைகளுக்கு இடையேயான விருப்ப முரண்பாடுகளைக் குறைப்பதற்காகவும், அனைத்துப் பயனாளிகளின் நடவடிக்கைகளை அறிவார்ந்த முறையில் ஒருங்கிணைக்கவும், ஒரு மேலாண்மைத் திட்டம் அவசியமாகும். சுற்றுச்சூழல் பாதுகாப்பினை இழக்காத வகையில், பொருளாதார மேம்பாட்டினை அடைவதற்கு, தமிழக கடற்கரை ஓரங்களுக்காக, ரூ.2.50 கோடி செலவின மதிப்பீட்டிலான, ஒருங்கிணைந்த கடற்கரைப் பகுதி மேலாண்மைத் திட்டம் தயாரிக்கப்படும்.

### 2.7.4 பாதிப்புக்குள்ளாகக்கூடிய கடற்கரையோரப் பகுதிகளின் வரைபடம் தயாரித்தல்

இயற்கை மற்றும் மனித இடர்ப்பாடுகளால் பாதிப்புக்குள்ளாகும் தன்மையை அடிப்படையாகக் கொண்டு, கடற்கரைப் பகுதிகளில், பாதிப்படையும் பகுதிகள் நிர்ணயம் செய்யப்படும். இந்நோக்கத்திற்கு, கடல்மட்ட உயரம், புவியியல், புவிமாற்றம், கடல்மட்ட மாறுபாடுகள், கரையோர குறுக்குக் கோடு மாறுபடுதல், அலை உயரம், அலை வரம்பு மற்றும் அலை மட்டப்போக்கு ஆகிய ஏழு அளவுகோல்கள் எடுத்துக் கொள்ளப்படும். பாதிப்புக்குள்ளாகும் கடலோரப் பகுதிகளின் வரைபடம் தயாரிக்கும் பணி, ரூ.2 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

### 2.7.5 உயிரியல் முறையில் நீர்நிலைகளைச் சுத்திகரித்தல்

மீன் வளத்தைப் பெருக்கவும், நீரின் தரத்தை உயர்த்தவும், கடலோர நீர்நிலைகளில் ஏற்பட்டுள்ள மாசினை கண்டறியவும், அவ்வாறு கண்டறியப்பட்ட மாசினை நீக்கவும், விரிவான ஆய்வு தேவைப்படுகிறது. இதற்கு உயிரியல் முறையிலான சுத்திகரிப்பு முறை கையாளப்பட வேண்டும். உயிரியல் சுத்திகரிப்பு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நீர்நிலைகளில் இப்பணி மேற்கொள்ளப்படும்.

[2007 ஏப்ரல் 28

### 2.7.6 திறமை மேம்படுத்தல் மற்றும் விழிப்புணர்வு தோற்றுவித்தல்

ஒருங்கிணைந்த கடற்கரை மேலாண்மைத் திட்டம் மற்றும் பாதிப்பிற்குள்ளாகக்கூடிய கடலோரப் பகுதிகள் ஆகியவை புதிய நடைமுறைகளாகும். இவற்றின் முக்கியத்துவம் குறித்து, பலதரப்பட்ட மக்களிடையே, விழிப்புணர்வு ஏற்படுத்துவது அவசியமாகும். எனவே, தேவையான, வடிவமைக்கப்பட்ட பயிற்சித் திட்டங்கள் மூலமாக, பொதுமக்கள் மற்றும் கடலோரம் வாழும் மக்களுக்கு, விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சிகள் நடத்தப்படும். பல்வேறு வகைப்பட்ட மக்களுக்கு பயிற்சிகளும் அளிக்கப்படும். கடலோரவாழ் மக்களும் பிற பயனாளிகளும் இக்கருத்தாக்கத்தை புரிந்துகொள்வதற்கேற்ற விழிப்புணர்வுப் பணிகளும் மேற்கொள்ளப்படும். உள்ளூர் கல்வியாளர்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் கருத்துப் பட்டறைகள், கருத்தரங்கங்கள், தெருமுனை நாடகங்கள், கண்காட்சிகள் ஆகியவை நடத்தப்பட உள்ளன.

### 2.7.7 சென்னையில் ஒரு தொழில்நுட்ப அலகு மற்றும் நாகப்பட்டினம் மற்றும் தூத்துக்குடி ஆகிய இரண்டு இடங்களில், இரண்டு திட்ட ஒருங்கிணைப்பு அலகுகள் தொடங்குதல்

திட்டங்கள் சுமுகமான முறையில் செயல்படுத்த வழிவகுக்கும் வகையிலும், செயல்படுத்தவுள்ள அரசு துறைகள் மற்றும் ஆலோசகர்கள் ஆகியவற்றுக்கு இடையே மேம்பட்ட ஒருங்கிணைப்பை உருவாக்கவும், சென்னையில் ஒரு தொழில்நுட்ப அலகும், நாகப்பட்டினம் மற்றும் தூத்துக்குடியில் திட்ட ஒருங்கிணைப்பு அலகுகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.



2007 ஏப்ரல் 28]

## 3. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

### முன்னுரை

*1974-ம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பயன்படுத்தி குறிப்பிடப்பட்டுள்ள பொறுப்புகளை ஏற்றுச் செயல்படுத்த தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அமைக்கப்பட்டது. மாசினைத் கட்டுப்படுத்தவும், சுற்றுப்புறத்தை பாதுகாக்கவும், வாரியமானது, 1978 மற்றும் 1988-ல் திருத்தப்பட்ட 1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1991-ல் திருத்தப்பட்ட 1977 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) மேல்வரி சட்டம், 1987-ல் திருத்தப்பட்ட 1981 ஆம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் ஆகியவற்றையும், சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986-ன் கீழ் உள்ள விதிகளையும் செயல்படுத்துகிறது.*

### 3.1 நிறுவன அமைப்பு

மாசுக் கட்டுப்பாடு விதிகளைக் கண்காணிக்கவும், தீவிரமாக அமல்படுத்தவும் செயல்படும் இந்த வாரியத்தின் தலைமையிடம் சென்னையில் உள்ளது. மாவட்ட அலுவலகங்கள் 25 இடங்களில் அமைந்துள்ளன.

மாவட்ட அலுவலகங்கள் அமைந்துள்ள இடம் மற்றும் அதன் ஆளுமைக்குட்பட்ட எல்லைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| வ. எண் | இடம் | ஆளுமை பகுதி |
|---|---|---|
| 1. | இணைத் தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர், மதுரை. | சிவகங்கை மற்றும் மதுரை |
| 2. | இணைத் தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர், சேலம். | சேலம் |
| 3. | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், சென்னை. | சென்னை |
| 4. | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், திருவள்ளூர் (அம்பத்தூர்). | திருவள்ளூர் மாவட்டம் |

[2007 ஏப்ரல் 28

| வ. எண் | இடம் | ஆளுமை பகுதி |
|---|---|---|
| 5. | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், காஞ்சிபுரம் (தாம்பரம்) | காஞ்சிபுரம் மாவட்டம் |
| 6. | மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர், விருதுநகர் | விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் |
| 7. | மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர், கரூர் | கரூர் |
| 8. | மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர், நாமக்கல் | நாமக்கல் |
| 9. | மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர், திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி மற்றும் பெரம்பலூர் |
| 10. | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், திருநெல்வேலி | திருநெல்வேலி |
| 11. | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், திருப்பூர் | கோயம்புத்தூர் (அவினாசி, பல்லடம், திருப்பூர் வட்டம்) |
| 12. | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தூத்துக்குடி | தூத்துக்குடி |
| 13. | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், வாணியம்பாடி | வேலூர் (வாணியம்பாடி, திருப்பத்தூர், காட்பாடி வட்டம்) |
| 14. | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், வேலூர் | வேலூர் (ஆற்காடு, வாலாஜா, அரக்கோணம் வட்டம்), திருவண்ணாமலை |



2007 ஏப்ரல் 28]

| வ. எண் | இடம் | ஆளுமை பகுதி |
|---|---|---|
| 15. | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் (மேட்டுப்பாளையம், பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, வால்பாறை வட்டம்) |
| 16. | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், கடலூர் | கடலூர் |
| 17. | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், திண்டுக்கல் | திண்டுக்கல் மற்றும் தேனி |
| 18. | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், ஈரோடு | ஈரோடு |
| 19. | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், ஓசூர் | கிருஷ்ணகிரி மற்றும் தர்மபுரி |
| 20. | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், புதுக்கோட்டை | புதுக்கோட்டை |
| 21. | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர், உதகமண்டலம் | நீலகிரி |
| 22. | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர், தஞ்சாவூர் | தஞ்சாவூர் |
| 23. | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர், விழுப்புரம் | விழுப்புரம் |
| 24. | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர், நாகப்பட்டினம் | நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் |
| 25. | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர், நாகர்கோவில் | கன்னியாகுமரி |

வாரியம் மேலும் 3 மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களையும் 10 மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களையும் மற்றும் 1 நடமாடும் சுற்றுச்சூழல் ஆய்வகத்தையும் அமைத்துள்ளது.

[2007 ஏப்ரல் 28

## 3.2 தொழிற்சாலை மாசு கண்காணிப்பு மற்றும் இசைவாணை வழங்கும் நடைமுறை

தொழிற்சாலை செயல்பாடுகளை காலமுறை ஆய்வு மற்றும் மாதிரி பகுப்பாய்வு செய்வதன்மூலம் மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு பணிகளை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் கண்காணித்து வருகிறது. தொழிற்சாலை அமைப்பதற்கு நீர் மற்றும் காற்று சட்டங்களின்கீழ் முறையே 7,058 மற்றும் 6,986 இசைவாணைகளையும், தொழிற்சாலை இயக்குவதற்கு 26,050 மற்றும் 23,197 இசைவாணைகளையும் வாரியம் வழங்கியுள்ளது.

தொழிற்சாலைகளால் வெளியிடப்படும் மாசு அளவினைப் பொறுத்து அவை சிவப்பு, ஆரஞ்சு மற்றும் பச்சை என மூன்று வகைப்படுத்தப்பட்டுள்ளன. மிக அதிகளவு மாசுப்படுத்தக்கூடிய தொழிற்சாலைகள் சிகப்பு வகையிலும், குறைந்த அளவு மாசுபடுத்தும் தொழிற்சாலைகள் பச்சை வகையிலும் அடங்கும். மாசு தடுப்பு நடவடிக்கைகளை தொழிற்சாலைகள் முறையாகச் செயல்படுத்துமாறு தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது. மாசு தடுப்பு சாதனங்களின் செயல்பாடுகளை சீரிய முறையில் கண்காணித்து, மாசு தடுப்பு முறைகளை முழுமையாக நிறைவேற்றும் தொழிற்சாலைகளுக்கு குறித்த நேரத்தில் தொடர் இசைவாணை வழங்கப்படுகிறது. உரிய நேரத்தில் இசைவாணை புதுப்பித்து வழங்குவதன்மூலம் தொழிற்சாலைகள் இசைவாணையில் குறிப்பிட்டுள்ள மாசு தடுப்பு நிபந்தனைகளை கடைப்பிடிப்பதை வாரியம் ஊக்குவிக்கிறது.

## 3.3 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்

தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களிலுள்ள சிறு முதலீட்டுத் தெழிற்சாலைகள் கூட்டாகச் சேர்ந்து பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க வாரியம் ஒரு முக்கியப் பங்கினை வகிக்கிறது. சிறு முதலீட்டுத் தொழிற்சாலைகளுக்கு பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கத் தேவையான நிதி ஆதாரங்கள் திரட்டவும், திட்டக் கருத்துருக்களை தொழில்நுட்ப நுண்ணாய்வு செய்யவும் வாரியம் உதவி புரிகிறது.



2007 ஏப்ரல் 28]

கீழ்க்கண்ட தொழிற் பிரிவுகளுக்கு பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க திட்டங்கள் உத்தேசிக்கப்பட்டுள்ளன:

| தொழிற் பிரிவு | மொத்த பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய எண்ணிக்கை |
|---|---|
| தோல் பதனிடும் தொழிற்சாலை | 25 திட்டங்கள் |
| சலவை மற்றும் சாயப் பட்டறைகள் | 36 திட்டங்கள் |
| உணவகம் மற்றும் தங்கும் விடுதி | 1 திட்டம் |

இதுவரை உத்தேசிக்கப்பட்டுள்ள 62 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய திட்டங்களில், 15 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்காகவும், 18 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் சாயப் பட்டறைகளுக்காகவும், ஒரு பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் உணவகம் மற்றும் தங்கும் விடுதிகளுக்காகவும் செயல்பட்டு வருகின்றன. மேலும் 10 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்காகவும், 18 பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் சாயப் பட்டறைகளுக்காகவும் பல்வேறு கட்டங்களில் வேலை நடைபெற்று வருகின்றன.

தமிழக அரசு, 48 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு ரூபாய் 26.88 கோடியினை மானியமாக வழங்க அனுமதியளித்துள்ளது. அவற்றில் இதுவரை ரூபாய் 25.82 கோடி வழங்கப்பட்டுள்ளது.

## 3.4 காற்றின் தன்மை கண்காணிப்பு

தொழிற்சாலைகளிலிருந்தும், வாகனங்களிலிருந்தும் வெளியேறும் புகையினால் சுற்றுப்புறக் காற்றின் தன்மை மாசடைகிறது. 1981 ஆம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின்படி தமிழ்நாடு மாநிலம் முழுவதும் காற்று மாசு கட்டுப்பாடு பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### 3.4.1 சுற்றுப்புற காற்றுத் தன்மை கண்காணிப்பு, சென்னை

தேசிய சுற்றுப்புற காற்றுத் தரக் கண்காணிப்புக் திட்டத்தின்கீழ், மூன்று சுற்றுப்புற காற்று தரக் கண்காணிப்பு நிலையங்கள் 24 மணி நேர அடிப்படையில் கத்திவாக்கம், மணலி மற்றும் திருவொற்றியூரில் வாரத்தில் 2 நாட்களுக்கு செயல்படுகின்றன.

[2007 ஏப்ரல் 28

தேசிய காற்றுத் தரக் கண்காணிப்பு திட்ட மையங்களில் இருந்து சேகரிக்கப்படும் காற்று மாதிரிகளில் மொத்த மிதக்கும் நுண்துகள்கள், சுவாசிக்கத்தக்க மிதக்கும் நுண்துகள்கள் (10 மைக்ரான் அளவுக்கு கீழ்) மற்றும் வாயுக் கழிவுகளான கந்தக டை ஆக்ஸைடு, நைட்ரஜன் ஆக்ஸைடுகள் ஆகியவை அளவிடப்படுகின்றன.

சென்னை காற்றுத் தரக் கண்காணிப்புத் திட்டத்தின்கீழ், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் சென்னை நகரில் அடையாறு, அண்ணா நகர், கீழ்ப்பாக்கம், தியாகராய நகர் மற்றும் வள்ளலார் நகர் ஆகிய 5 கண்காணிப்பு மையங்களில் 24 மணி நேர அடிப்படையில் வாரம் இருமுறை காற்று கண்காணிப்பு செய்து வருகின்றது. மேற்கண்ட மையங்களில் கந்தக டை ஆக்ஸைடு, நைட்ரஜன் ஆக்ஸைடுகள், சுவாசிக்கத்தக்க மிதக்கும் நுண்துகள்கள் மற்றும் மொத்த மிதக்கும் நுண்துகள்கள் ஆகியவை அளவிடப்படுகின்றன.

### 3.4.2 சென்னையில் வாகனப் புகை கண்காணிப்பு

சென்னையிலும் புறநகரத்தைச் சுற்றியும் சரக்குப் போக்குவரத்து வாகனங்களிலிருந்து வெளிவரும் புகையின் அளவைக் கண்காணிக்க தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் வாகனப் புகை கண்காணிப்பு செய்து வருகிறது. சென்னையில் மூன்று இடங்களில் இது நடைபெற்று வருகின்றது. 2006-2007 நிதியாண்டில் 31,326 வாகனங்கள் ஆய்வு செய்யப்பட்டன. வெளியேற்றும் புகை தரக் கட்டுப்பாட்டிற்குள் இருந்தால் மட்டுமே அவ்வாகனங்களுக்கு தரச் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மாநகர போக்குவரத்துக் கழகத்துடன் இணைந்து மாநகர போக்குவரத்து கழக தகுதிச் சான்றிதழ் வழங்கும் பணிமனைகளான ஆலந்தூர், அடையார், அண்ணா நகர், வடபழனி, அயனாவரம் மற்றும் தண்டையார்பேட்டையில் மாநகர போக்குவரத்து கழக பேருந்துகளுக்கு மட்டுமே மாசு கட்டுப்பாடு வாரிய சான்றிதழ் வழங்குவதற்காக ஆறு கணினிமயமாக்கப்பட்ட வாகன புகை சோதனை மையங்களை அமைத்துள்ளது. மேலும், சென்னை நகரக் கூட்டுப் பகுதியில் சரக்கு வாகனங்கள் தவிர இரு சக்கரம், மூன்று சக்கரம் மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் வெளியேற்றும் புகையின் அளவினைக் கண்காணிக்க 97 தனியார் அமைப்புகளுக்கு போக்குவரத்துத் துறை அனுமதி வழங்கியுள்ளது.



2007 ஏப்ரல் 28]

### 3.5 நீரின் தன்மை கண்காணிப்பு

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், இரண்டு பெரும் திட்டங்களான இந்திய தேசிய நீர்வள ஆதாரங்கள் கண்காணிப்பு திட்டம் (மினார்ஸ்) மற்றும் புவி சுற்றுப்புறச் சூழல் கண்காணிப்பு திட்டம் (ஜெம்ஸ்) மூலம் உள்நாட்டு நீரின் தன்மையை கண்காணித்து வருகிறது. இந்திய தேசிய நீர்வள ஆதாரங்கள் கண்காணிப்புத் திட்டத்தின்கீழ் (மினார்ஸ்) தாமிரபரணி (7 நிலையங்கள்), பாலாறு (1 நிலையம் ) மற்றும் வைகை (1 நிலையம்) ஆகிய ஆறுகள் மற்றும் உதகமண்டலம், கொடைக்கானல், ஏற்காடு ஏரிகளின் நீரின் தன்மை கண்காணிக்கப்படுகிறது. ஜெம்ஸ் மற்றும் மினார்ஸ் திட்டங்களின்கீழ் காவிரி ஆற்றில் நீரின் தன்மை 20 இடங்களில் கண்காணிக்கப்படுகிறது. இந்தத் திட்டத்திற்கு புது தில்லியிலுள்ள மத்திய மாசு கட்டுப்பாடு வாரியம் நிதியுதவி அளிக்கிறது. சென்னை மாநகர நீர் வழிகளை அண்ணா பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப உதவியுடன் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் கண்காணித்து வருகிறது.

### 3.6 தீங்கு விளைவிக்கும் கழிவுப் பொருட்கள் மற்றும் இரசாயன பொருட்களின் மேலாண்மை

தீங்கு விளைவிக்கக்கூடிய இரசாயனப் பொருட்கள் மற்றும் தீங்கு விளைவிக்கும் கழிவுப் பொருட்களைச் சுற்றுப்புறச் சூழலுக்கு எந்த வித பாதிப்பும் இன்றி பாதுகாப்பாகக் கையாளுவதற்கு தகுந்த மேலாண்மை நடவடிக்கையினை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் எடுத்து வருகிறது. வாரியம் இதுவரை 2,610 தீங்கு விளைவிக்கும் கழிவுப் பொருட்கள் உற்பத்தியாகும் தொழிற்சாலைகளைக் கண்டறிந்து அவற்றிற்கு 1989 ஆம் ஆண்டு அறிவிக்கை செய்யப்பட்டு 2000 மற்றும் 2003 ஆண்டு திருத்தப்பட்ட, தீங்கு விளைவிக்கும் கழிவுப் பொருட்கள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகளின்படி நிபந்தனையுடன் அனுமதி வழங்கியுள்ளது.

தீங்கு விளைவிக்கும் கழிவுப் பொருட்களை சுத்திகரித்து சேமித்து, முடிவு செய்ய பொது அமைப்பு ஒன்றினை நிறுவ கும்மிடிப்பூண்டியிலுள்ள சிப்காட் தொழிற்சாலல வளாகத்தில் ஒரு இடம் தேர்வு செய்யப்பட்டு அதனை அரசு அறிவிக்கை செய்தது. இந்தப் பணிக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு, தடையாணை பெறப்பட்டதால், பணி உடனடியாக தொடங்க முயலவில்லை. இந்தத் தடையாணை விலக்கப்பட்டு அதற்கான வேலைகள் மார்ச்சு 2007 இரண்டாம் வாரத்தில் தொடங்கப்பட்டுவிட்டன.

இதைத் தவிர, தீங்கு விளைவிக்கும் கழிவுப் பொருட்களை சுத்திகரித்து, சேமித்து முடிவு செய்ய பொது அமைப்புகளை நிறுவ, திருப்பூர் மற்றும் கரூர் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய கூட்டமைப்புகள், முறையே கோவை மாவட்டம், திருப்பூர் தாலுகாவில் ஓர் இடத்தினையும், கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தாலுகாவில் ஓர் இடத்தினையும் தேர்வு செய்துள்ளன. இந்த இடங்களில் தீங்கு விளைவிக்கக்கூடிய கழிவுப் பொருட்களை சுத்திகரித்து சேமித்து, சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத வண்ணம் அவற்றைக் கையாண்டு கழிவு செய்ய அமைப்பு ஒன்றை நிறுவ அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது.

## 3.7 மருத்துவக் கழிவுகள் மேலாண்மை

இந்திய அரசு, சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம் 1986-ன்கீழ் மருத்துவக் கழிவு (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள் 1998 (2000 ஆண்டில் திருத்தப்பட்டது) அறிவிக்கை செய்துள்ளது. இவ்வறிவிக்கையின்கீழ் மாநிலத்தில் 317 அரசு மருத்துவமனைகள் மற்றும் 2,479 தனியார் மருத்துவமனைகள் அடங்கும்.

இவ்வறிவிக்கையின்படி, மருத்துவக் கழிவுகளை அங்கீகரிக்கப்பட்ட முறையில் -வகைப்படுத்தி, சுத்திகரித்து முடிவு செய்ய வேண்டும்.

தனியார் மருத்துவமனைகளுக்காக இப்படிப்பட்ட அமைப்புகளை நிறுவ இதுவரை 11 இடங்கள் கண்டறியப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. தென்மேல்பாக்கம் | — | காஞ்சிபுரம் மாவட்டம் |
| 2. சென்னாகுப்பம் | — | காஞ்சிபுரம் மாவட்டம் |
| 3. ஓராட்டுக்குப்பை-1 | — | கோயம்புத்தூர் மாவட்டம் |
| 4. செங்கிபட்டி | — | தஞ்சாவூர் மாவட்டம் |
| 5. கண்டிப்பேடு | — | வேலூர் மாவட்டம் |
| 6. தங்கயூர் | — | சேலம் மாவட்டம் |
| 7. குன்னூர் | — | நீலகிரி மாவட்டம் |
| 8. முத்துவயல் | — | இராமநாதபும் மாவட்டம் |



| | | |
|---|---|---|
| 9. உந்துருமிக்கிடாகுளம் | — | விருதுநகர் மாவட்டம் |
| 10. ஓராட்டுக்குப்பை-2 | — | கோயம்புத்தூர் மாவட்டம் |
| 11. பாப்பன்குளம் | — | திருநெல்வேலி மாவட்டம் |

மேற்கண்ட அனைத்து அமைப்புகளுக்கும் வாரியம் அங்கீகாரம் வழங்கியுள்ளது. இவற்றில் முதல் 9 இடங்களில் இந்த அமைப்புகள் இயக்கத்தில் உள்ளன. எஞ்சியுள்ள 2 அமைப்புகளும் விரைவில் செயல்படவுள்ளன.

இந்தப் பொது அமைப்புகளில் உறுப்பினர்களாக இணைந்துள்ள தனியார் மருத்துவமனைகளுக்கும் வாரியம் அங்கீகாரம் வழங்கி வருகிறது. இதுவரை 1,431 மருத்துவமனைகளுக்கு வாரியத்தின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## 3.8 நகர திடக் கழிவுகள் மேலாண்மை

நகர திடக் கழிவுகளை மேலாண்மை செய்ய, இந்திய அரசு, 2000 ஆம் ஆண்டு நகர திடக் கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகளை அறிவிக்கை செய்துள்ளது. இவ்விதிகளின்படி, நகர திடக் கழிவுகளை சேகரித்து, இடமாற்றம் செய்து, முடிவு செய்யும் பொறுப்பு நகராட்சி நிர்வாகத்தையே சார்ந்தது. இந்த விதிகளை செயல்படுத்தும் பொறுப்பிலுள்ள நகராட்சி நிர்வாகம் மற்றும் மாவட்ட ஆட்சியர்களுக்கு, மக்கக்கூடிய கழிவுகளை மக்க வைப்பதற்கும், நில நிரப்புதல் செய்ய வேண்டிய கழிவுகளை நில நிரப்பு செய்வதற்கும் மக்கள் குடியிருப்புகள் மற்றும் நீர் ஆதாரங்களுக்கு அப்பாற்பட்ட உரிய இடங்களை தெரிவு செய்ய வாரியம் அறிவுரைகள் வழங்கியுள்ளது. உள்ளாட்சி அமைப்புகள் தேர்வு செய்யும் இடங்கள் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் இருப்பின் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தடையின்மை சான்றிதழ் வழங்குகிறது. இதுவரை 93 நகராட்சிகளில் தெரிவு செய்யப்பட்ட இடங்களுக்கு தடையின்மைச் சான்றிதழ் வழங்கியுள்ளது. இவற்றுள் 46 நகராட்சிகளில் இந்த அமைப்புகளை நிறுவ அதிகாரம் வழங்கியுள்ளது. திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாநகராட்சிகளுக்கும் தடையின்மை சான்றிதழ் வழங்கியுள்ளது.

## 3.9 பிளாஸ்டிக் கழிவுகள் மேலாண்மை

வரைமுறையற்று பிளாஸ்டிக் பொருட்களை உபயோகிப்பது பெருகி வருவதால் சுற்றுச்சூழல் சீர்கெடுவது ஆய்வு செய்து கண்டறியப்பட்ட

[2007 ஏப்ரல் 28

ஒன்றாகும். 2003 ஆம் ஆண்டு பிளாஸ்டிக் உற்பத்தி மற்றும் பயன்பாடு (திருத்தப்பட்டது) விதிகளின்படி, புது பிளாஸ்டிக் மற்றும் மறு சுழற்சி பிளாஸ்டிக் ஆகியவற்றிலிருந்து தயாரிக்கப்படும் பிளாஸ்டிக் பைகள் 20 மைக்ரான் அளவிற்கு குறையாமல் இருக்க வேண்டும். இதற்கென வாரியம் தீவிரமாக விழிப்புணர்வு பிரச்சாரத்தை மேற்கொண்டு வருகிறது. இந்த விழிப்புணர்வு இயக்கத்தின் நோக்கம் தூக்கியெறியப்படும் பிளாஸ்டிக் பொருட்களின் உபயோகத்தை தவிர்க்கவும், சுற்றுச்சூழலுக்கு உகந்த பிளாஸ்டிக் அல்லாத மாற்று பொருட்களைப் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதும் ஆகும். 1,732 இசைவாணை வழங்கியுள்ளது.

## 3.10 வாரியத்தின் இதர செயல்பாடுகள்

### 3.10.1 சுற்றுச்சூழல் பயிற்சி நிலையம்

டென்மார்க் நாட்டின் டானிடா நிதி உதவியுடன் கிண்டியிலுள்ள வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் சுற்றுச்சூழல் பயிற்சி மையம் நிறுவப்பட்டது. நிறுவப்பட்ட ஆண்டிலிருந்து 2006-2007 நிதியாண்டு வரை சுற்றுச்சூழல் பயிற்சி நிலையம் 328 பயிற்சித் திட்டங்களின் மூலம் 14,437 நபர்களுக்கு பயிற்சியினை அளித்துள்ளது. சுற்றுச்சூழல் மேலாண்மை, சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு, காற்று மாசு தடுப்பு, நீர் மாசு தடுப்பு, தீங்கு விளைவிக்கும் கழிவுப் பொருட்கள் மேலாண்மை மற்றும் மருத்துவக் கழிவு மேலாண்மை போன்ற தலைப்புகளில் பயிற்சி வழங்கப்படுகிறது. 2007-2008 ஆம் ஆண்டில் தொழிற்சாலை பிரதிநிதிகள், தன்னார்வ அமைப்புகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு 20 பயிற்சித் திட்டங்களை நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 3.10.2 சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மற்றும் பொதுமக்கள் பங்கேற்பு

சுற்றுச்சூழல் விழிப்புணர்வை வளர்க்க, சென்னை கிண்டியிலுள்ள வாரிய தலைமை அலுவலகத்தில் விழிப்புணர்வு பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. முக்கிய சுற்றுச்சூழல் நிகழ்வுகளை விளக்குவதற்கு பல விழிப்புணர்வு இயக்கங்கள், பயிலரங்கங்கள் மற்றும் பேரணிகள் நடத்தப்பட்டு வருகின்றன. ஒலி மற்றும் காற்று மாசுக்கெதிராக, முறையே, தீபாவளி மற்றும் போகி போன்ற பண்டிகைக் காலங்களில் சிறப்பு விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள் நடத்தப்படுகின்றன. தொடர்ந்து நடத்தப்பட்ட விழிப்புணர்வு முகாம்களின் விளைவாக இந்த ஆண்டு போகி மற்றும் தீபாவளி நேரங்களில் சென்ற ஆண்டை



2007 ஏப்ரல் 28]

விட காற்று மற்றும் ஒலி அளவு குறைந்திருப்பது அறியப்பட்டது. நடப்பு ஆண்டில் மொத்தம் 89 விழிப்புணர்வு முகாம்களை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் நடத்தியுள்ளது.

### 3.10.3 தூய்மையான தொழில் நுட்பங்கள்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தொழிற்சாலைகள் வெறும் இறுதிகட்ட சுத்திகரிப்பு பணி செய்வதோடு மட்டுமில்லாமல் சுற்றுச்சூழல் பாதுகாப்பை மேம்படுத்த தூய்மையான தொழில் நுட்பத்திறனை ஏற்றுக்கொள்ளும் அணுகுமுறையை வளர்ப்பதில் ஈடுபட்டுள்ளது. வாரியத்தின் தீவிர ஒத்துழைப்பு மற்றும் ஊக்குவிப்பினாலும், தமிழ்நாட்டில் உள்ள தொழிற்சாலைகள் சுற்றுச்சூழலுக்கு உகந்த தூய்மையான தொழில்நுட்பத்திற்கு படிப்படியாக மாறி வருகின்றன.

### 3.10.4 பசுமைப் போர்வை திட்டம்

மாசினைத் தடுக்கும் வழிமுறையாக, தொழிற்சாலைகள் தங்களது வளாகங்களில் 25 சதவிகிதம் நிலப்பரப்பில் அடர்ந்த கிளைகள் கொண்ட மரங்களை வளர்க்க வாரியம் வலியுறுத்தி வருகிறது. அதன்படி தமது வளாகங்களில், போதிய அளவு எண்ணிக்கையில் மரங்களை வளர்க்க தொழிற்சாலைகள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளன.

### 3.10.5 சுற்றுச்சூழல் வரைபடம்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் புவியியல் தகவல் அமைப்புப் பிரிவுமூலம் மத்திய மாசு கட்டுப்பாடு வாரியத்துடன் இணைந்து, சுற்றுச்சூழல் வரைபடம் தயாரிக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் முதல் கட்டமாக திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களுக்கான சுற்றுச்சூழல் வரைபடம் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. அதனைத் தொடர்ந்து கோயம்புத்தூர், வேலூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களுக்கான சுற்றுச்சூழல் வரைபடம் மற்றும் சென்னை மாநகருக்கான சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்டம் ஆகியவை மேற்கொள்ளப்பட்டது. நடப்பாண்டில், கடலூர், விழுப்புரம், ஈரோடு, சேலம் மற்றும் கரூர் ஆகிய மாவட்டங்களுக்கு சுற்றுச்சூழல் வரைபடம் தயாரிக்கும் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

# இணைப்பு–VI

(567 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்

## புதிய அறிவிப்புகள், 2007–2008

தமிழ்நாட்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் விளையாட்டில் பிரபலமான ஒரு கிராமம் தேர்ந்தெடுக்கப்பட்டு அங்கு கிராம விளையாட்டு வளர்ச்சி மையங்களை ஏற்படுத்திட இந்த அரசு திட்டமிட்டுள்ளது. ஒவ்வொரு கிராம விளையாட்டு வளர்ச்சி மையத்திற்கும் எந்த விளையாட்டிற்காக அந்தக் கிராமம் தேர்ந்தெடுக்கப்படுகிறதோ அந்த விளையாட்டிற்கான உபகரணங்கள் மற்றும் பயிற்சி உபகரணங்கள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னையில் அமைந்துள்ள நீச்சல் குளங்களில் "நீச்சல் கற்றுக்கொள்" என்ற திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினைத் தமிழ்நாட்டில் அமைந்துள்ள அனைத்து நீச்சல் குளங்களிலும் செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், அனைத்து விளையாட்டு அரங்கங்களிலும் "விளையாடக் கற்றுக்கொள்" என்ற திட்டமும் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தில், டென்னிஸ், சிறகுப் பந்து, மேசைப் பந்து, தடகளம், கூடைப் பந்து, கால்பந்து, கையுந்துப் பந்து, கைப் பந்து, பளுதூக்குதல், குத்துச்சண்டை, டேக்வாண்டோ போன்ற விளையாட்டுகள் சேர்க்கப்படவுள்ளன. இத்திட்டம், தமிழகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள விளையாட்டு கட்டுமான வசதிகள் அனைத்தும் நல்ல முறையில் உபயோகப்படுத்தப்பட்டு விளையாட்டில் பெருவாரியான மக்கள் ஈடுபட வழிவகுக்கும்.

தமிழ்நாட்டில் உள்ள மாவட்ட விளையாட்டு அரங்கங்களில் யோகா கலையினை அனைத்துத் தரப்பினரும் கற்றுப் பயன்பெறும் வகையில் யோகா பயிற்சியளிப்பவரைத் தேவைக்கேற்ப நியமிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுகளாகத் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சர்வதேச ரோட்டரி சங்கத்துடன் இணைந்து சென்னை மாரத்தான் ஓட்டப் பந்தயத்தினை நடத்தியது. தற்போது, டில்லி

[2007 ஏப்ரல் 28

மற்றும் மும்பை மாரத்தான் ஓட்டங்களைப் போன்று சென்னையில் ஒவ்வொரு ஆண்டும் சர்வதேசத் தர சென்னை மாரத்தான் போட்டியினைத் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமே வல்லுநர்கள் உதவியுடன் 2007 ஆம் ஆண்டு முதல் நடத்தத் திட்டமிட்டுள்ளது.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் விளையாட்டுப் போட்டிகளை ஊக்குவிக்கும் வகையில் ஆணையத்திற்காகவும், பல்வேறு விளையாட்டுக் கழகங்களுக்காகவும், விளையாட்டுப் போட்டிகள் தொடர்பான தகவல்களை "குறுகிய தகவல் தொடர்பு சேவை" (எஸ்.எம்.எஸ்.) முலம் உடனுக்குடன் அனுப்பி, அதிக எண்ணிக்கையில் விளையாட்டுப் பார்வையாளர்களை ஈர்த்திட உத்தேசித்துள்ளது. இத்திட்டத்தின்மூலம், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் பல்வேறு விளையாட்டுக் கழகங்கள் நடத்தும் விளையாட்டுப் போட்டிகள் மற்றும் விளையாட்டு நிகழ்ச்சிகளைக் "குறுகிய தகவல் தொடர்பு சேவை" மூலம் மாண்புமிகு அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பல்வேறு விளையாட்டுக் கழகங்கள், விளையாட்டு மேம்பாட்டுப் புரவலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர்களுக்கும் மற்றும் முக்கிய கைபேசி உபயோகிப்பாளர்களுக்கும் அனுப்புவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. சென்னையில் மற்றும் பிற மாவட்டங்களில் நடத்தப்படும் சிறப்பு நிகழ்ச்சிகளை விளம்பரப்படுத்த, பத்திரிகை—தொலைக்காட்சி வாயிலாக மட்டுமின்றி நவீன முறையில் எஸ்.எம்.எஸ். முலமாகவும் விளம்பரப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

கடந்த 2001 முதல் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புவதற்கான அரசின் தடை இருந்ததால், காலியாக இருந்த பயிற்றுநர் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருந்தன. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் மொத்தமாக 139 பயிற்றுநர் பணியிடங்கள் உள்ளன. இதில் 64 பயிற்றுநர்கள் தற்போது பணியாற்றி வருகின்றனர். மீதமுள்ள 75 பணியிடங்கள் காலியாக உள்ளன. இவ்வாறு, காலியாக உள்ள பயிற்றுநர் பணியிடங்களில் விதிப்படியான நடைமுறைகளை பின்பற்றி பணி நியமனம் செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது.

சென்னை நேரு பூங்கா விளையாட்டு வளாகத்தில் அமைந்துள்ள செயற்கை இழை டென்னிஸ் விளையாட்டு மைதானத்தை சிறந்த



2007 ஏப்ரல் 28]

முறையில் பயன்படுத்திட தமிழ்நாடு டென்னிஸ் கழகம்மூலமாக டென்னிஸ் பயிற்றுநர்களை நியமனம் செய்து டென்னிஸ் பயிற்சி அளிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த டென்னிஸ் மைதானத்தில் அரசுப் பள்ளிகள் மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு இலவசமாக டென்னிஸ் பயிற்சியினை அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

கேரம் விளையாட்டு, நகர மற்றும் கிராமப்புறங்களில் மிகவும் பிரபலமான விளையாட்டாக உள்ளதால், இந்த விளையாட்டினை மேம்படுத்த சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கில் தற்சமயம் அமைக்கப்பட்டுள்ள சதுரங்கம் மற்றும் மேசைப்பந்து விளையாட்டுப் பயிற்சி வளாகங்களைப் போன்று கேரம் விளையாட்டுப் பயிற்சி வளாகம் ஒன்று நேரு விளையாட்டு அரங்கில் அமைக்கப்படவுள்ளது. இந்த பயிற்சிக் கூடம் தமிழ்நாடு கேரம் கழகத்துடன் இணைந்து செயல்படுத்தப்படும்.

தமிழ்நாட்டில் பாரம்பரியமிக்க கழைக்கூத்தாடிகள் மற்றும் மீனவர்கள் ஆகியோர்களுக்கு உடற்திறன் போட்டிகள் நடத்தி திறமையானவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு ஜிம்னாஸ்டிக்ஸ் மற்றும் படகு ஓட்டுதல் போன்ற விளையாட்டுகளில் பயிற்சி அளித்து எதிர்கால விளையாட்டுச் சேம்பியன்களாக இந்திய விளையாட்டுக் குழுமத்தின் ஒத்துழைப்புடன் உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் இயங்கிவரும் இந்திய விளையாட்டுக் குழுமத்தின் பயிற்சி மையங்கள் மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் விளையாட்டுப் பள்ளி/விடுதி ஆகியவற்றில் பயிலும் விளையாட்டு வீரர்களுக்கிடையே போட்டி மனப்பான்மையினை வளர்த்திடவும், அவர்களுடைய திறமையை மேலும் முன்னேற்றுவதற்காகவும் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய மதுரை பிரிவில் மாணவர் விளையாட்டு விடுதி ஒன்று நடத்தப்பட்டு வருகிறது. இதில், 30 கூடைப் பந்து விளையாட்டு வீரர்கள் அன்றாடப் பயிற்சி பெற்று வருகிறார்கள். இவ்விளையாட்டு வளாகத்தில் உள்ள இரு கான்கிரீட் கூடைப் பந்து விளையாட்டு மைதானங்களையும் சிந்தடிக் கூடைப் பந்து மைதானங்களாக மாற்றும் பணி விரைவில் முடிக்கப்பட்டு அவை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு அனுமதிக்கப்படவுள்ளன.

[2007 ஏப்ரல் 28

தமிழ்நாட்டில் 19 மாவட்டங்களில் நீச்சல் குளங்களும், 10 மாவட்டங்களில் ஸ்குவாஷ் ஆடுகளங்களும், மேலும், நான்கு மாவட்டங்களில் உள்விளையாட்டு அரங்கமும் அமைந்துள்ளன. இந்த நீச்சல் குளங்கள், ஸ்குவாஷ் ஆடுகளங்கள் மற்றும் உள்விளையாட்டு அரங்கங்களில் நாள்தோறும் சிறந்த முறையில் பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலம் இவ்விளையாட்டு வசதிகள் செம்மையாகப் பயன்படுத்தப்படும்.

தமிழ்நாடு நீச்சல் விளையாட்டில் அதிக வீரர்களை உருவாக்கி வருகிறது. கத்திச் சண்டை விளையாட்டில் படிப்படியாக முன்னேறி வருகிறது. மேலும், துப்பாக்கி சுடுதல் விளையாட்டிற்காக ஒரு சர்வதேச அளவிலான துப்பாக்கிச் சுடும் கூடம் அமைக்கப்பட்டு வருகிறது. இதனைக் கருத்தில் கொண்டு, மாவட்ட மற்றும் மாநில அணிகளுக்குப் பயிற்சி அளிக்க, அனுபவமிக்க பயிற்றுநர்களை நியமித்து தமிழநாட்டு வீரர்களை தேசிய மற்றும் பன்னாட்டு அளவிலான போட்டிகளில் பதக்கம் பெறும் நிலையை அடையச் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

**நாட்டு நலப்பணித் திட்டம்**

2007-2008 ஆம் ஆண்டில் நாட்டு நலப்பணித் திட்ட மாணவர் தொண்டர்களின் எண்ணிக்கை 3,05,800-லிருந்து 3,36,380 ஆக உயர்த்தப்படும்.

**தேசிய மாணவர் படை**

2007-2008 ஆம் ஆண்டில் தேசிய மாணவர் படையில் கூடுதலாக 500 மாணவர்கள் சேர்க்கப்படுவர்.

ஒலைலைல

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227663
சென்னை-600 008